Vol. IX 1931—1932

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

ஒன்பதாம் சிலம்பு

இதழாசிரிய கூட்டத் தலைவர்:

கா. சுப்பிரமணியபிள்ளை

எம்.ஏ.,எம்.எல்., அட்வகேட்.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
லிமிடெட்

பிரமோதூத௵ - பிரசோற்பத்தி௵

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
Tinnevelly & Madras

 [Price Rs. 3-8

Progressive Printers, 2/17, Coral Merchant St., Madras.

உள்ளுறை

[* இக்குறியிடப்பட்டவைகள் இத்தொகுதியில் முடிவு பெறுத தொடர்வன.]

படங்கள்

அறிவிப்பு

செந்தமிழ்ச் செல்வி

பைண்டுத் தொகுதிகள்

இதுகாறும் வெளிவந்த ஒன்பது ஆண்டு செல்வித் தொகுதிகள் அழகியனவாய்க் கட்டிடஞ் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன்கண் அரும்பெருந் தமிழ்ப்புலவர்களால் எழுதப்பட்ட தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழியாராய்ச்சி, சைவசமயம், திருமுறை, பிறசமயங்கள், புராணம், இதிகாசம், நுண்ணூல் (Science) களின் சாரம், வியப்பு மொழிகள் (Wits & Humours) உவகை மொழிகள், சீர்திருத்த அறிவுரைகள், அறவுரைகள் முதலியன வெளிவந்திருக்கின்றன. தமிழ்க் கல்வி விரும்புவோர் இத்தொகுதிகளை ஒரு முறை கற்பின் சிறந்த புலமை எய்துவர் என்பது திண்ணம்.

நூல் நிலயங்கட்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகும்

1 முதல் 4 & 9 தொகுதிகள்				
	தனித்தனி விலை ரூ.	3	8	0
5 முதல் 8	,,	4	8	0
9 தொகுதிகளும்		30	8	0
கையொப்ப நண்பர்களுக்கு		28	0	0

தகுந்த கழிவு கொடுக்கப்படும்



நக்கீரனைக் கரையேற்றியது.

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ	மெய்கண்டான்யாண்டு-எ௱அ தைத்திங்கள் 1931ஆு ஜனவரிமீ—பிப்ரவரிமீ	பரல் க

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருக்குறுந்தொகை

துறக்கப் படாத வுடலைத் துறந்து வெந்தூதுவரோ
டிறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோவென் றென்னுள்ளங் கிடந்து மறுகிடுமே.

துறக்கப்படாத=என்னால் நீக்கத் தகாத
உடலை=இந்த உடலை விட்டு
வெந்தூதுவரோடு=கொடிய நமன் தூதுவரால்
துறந்து=(நான் என் உயிர்) நீங்கி
இறப்பன்=இறந்து விடுவன்
இறந்தால்=அப்படி இறந்தால்
இருவிசும்பு ஏறுவன்=நிரயம் துறக்கம் என்னும் இரண்டு உலகங்களினும் செல்வன்
ஏறிவந்து பிறப்பன்=அவ்வாறு நிரய துறக்கங்களில் சென்றபின் நில உலகத்திற்கு வந்து மறுபடியும் பிறவியை எடுப்பன்
பிறந்தால்=அவ்வாறு நிலவுலகத்திற் பிறந்த பொழுது

பிறை அணிவார்சடைப் பிஞ்ஞகன் பேர்=மூன்றாம் பிறை இளந்திங்களை நீண்ட சடையிற் றரித்த சிவபெருமானுடைய பேரை

மறப்பன் கொலோ என்று=நான் மறந்து விடுவனோ என்று ஐயப்பட்டு நினைந்து

என் உள்ளப்=எனது உள்ளம் (மனது)

கிடந்து மறுகிடும்=அறியாது சுழன்று கலங்கும்; ஆதலின் இறப்பினுக்கு நான் அஞ்சுகின்றேன் என்பது குறிப்பெச்சம்

துறக்கப்படாத பருஉடல் சிவபெருமானால் அளிக்கப் பட்டதாதலின் அதனை விட்டு ஒருவன் தன் உயிரை நீக்குதலுக்கு அவனுடைய கருத்துக்கு மாறானவை தகாத மறச் செயல் (பகைச் செயல்) என்பது குறிப்பிடப்பட்டது.

வெந்துயரோடு என்பது வேற்றுமை மயக்கம்; இரண்டாம் வேற்றுமை உருபு ஐ ஒடு என மாறியது.

இரு விசும்பு என்பதனால் நுண்ணிய நிரய உலகமும் துறக்க உலகமும் குறிப்பிடப்பட்டன. உயிர் பருஉடலை விட்டு நீங்கின பின் முதலாவது நிரய உலகத்திற் சென்று அது நில உலகிற் செய்த மறச்செயல்களுக்குத் தக்கவாறு துன்பம் நுகர்ந்து தான் நுகர்ந்த துன்பங்களுக்கும் மறச்செயல்களுக்கும் உள்ள தொடர்பை நினைந்து அறிந்து பின் துறக்க உலகிற் சென்று அது பயன்குறித்து நில உலகிற்செய்த அறச் செயல்களுக்குத் தக்கவாறு இன்பம் நுகர்ந்து இன்பத்துக்கும் அறச் செயல்களுக்கு முள்ள தொடர்பை நினைந்து அறிந்து அவ்வறச் செயல்களை இன்னும் மிகத் திறனோடு செய்யுந்தகுதி பெற்று நில உலகில் வந்து பிறக்கின்றது, என்று நூல்களிற் கூறப்பட்ட உண்மை குறிப்பிடப்பட்டது.

எறுவன் என்பது பருஉலகத்தைவிட நிரய உலகம் நுண்ணிதாயும் நிரய உலகத்தைவிட துறக்க உலகம் நுண்ணிதாயும் இருத்தலைக் குறிப்பிடுகின்றது. உண்மை உலகங்கள் கீழு மேலுமாயில்லை

மறப்பன் கொலோ=மறத்தலாவது பரு உடலில் வந்ததினால் உண்டான மிக்க மல மறைப்பால் உண்டாகின்றது. கொல் ஐயப் பொருளை உணர்த்துகின்றது. ஓ அசை நிலை

கிடந்து=என்பது அறியாமையைக் குறிக்கின்றது.

மறுகிடும்=மறுகுதல். அங்கும் இங்கும் சுழலுதல். உள்ளம் சிவபெரு

மான் பேரை நினைக்குமோ அல்லது மறக்குமோ என்று ஐயப்பட்டுச் சுழலுதல்.

இத்தேவாரப்பாட்டு உயிரானது மலவலி நீங்கும் வரை நில உலகிற் பிறந்து இறந்தும் இறந்த பின் நிரய துறக்கங்களிற் சென்று துன்ப இன்பங்களை நுகர்ந்தும், பின் நில உலகிலே வந்து பிறந்தும் இவ்வாறு பிறப்பு இறப்பு வட்டத்திற் சுழலுகின்ற தன்மையைக் குறிக்கின்றது. இப்பாட்டில் சுவாமிகள் மக்கள் உயிருடைய நிலையைத் தன்மேல் ஏற்றிக் கூறுகின்றார். இதனால் பகுத்தறிவுடைய மக்களுயிர்கள் உலக வாழ்க்கையிலிருக்கும்பொழுது கடவுளைத் தங்கள் உள்ளத்தில் மறவாது நினைந்து கொண்டே யிருந்து அறச் செயல்களைச் செய்வார்களானால், அப்புண்ணியம் அவர்களை இறைவனை மறவாதிருக்கச் செய்யும் என்பது குறிப்பிடப்பட்டது.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திரு. C. M. இராமசந்திரஞ் செட்டியாரவர்கள் B. A., B. L.]

II அப்பர் சுவாமிகள்

[எட்டாஞ் சிலம்பு எகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அப்பர் சுவாமிகள் காலத்தில் வெகு உன்னத நிலையில் இருந்த பல்லவர்கள் இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் செல்வாக்குக் குறைந்து அழிந்து விட்டார்கள். அதன் பிறகு சோழர்கள் உன்னத நிலைக்கு வந்தார்கள். இவர்கள் தமிழையும் சைவத்தையும் மிகவும் போற்றி வந்தார்கள். தமிழர் நாகரீகத்தை வெளி நாடுகளுக்குக் கொண்டு சென்றார்கள். அக்காலத்தில் எவரும் பிரமித்து ஆச்சரியப்படும்படியான பெரிய ஆலயங்களை நாடு முழுதும் எழுப்பி வந்தார்கள். சிற்ப வேலை வெகு முதிர்ச்சி அடைந்தது. பல்லவர்கள் மலைகளைக் குடைந்து அறைகள் உண்டாக்கி அவைகளில் சித்திரங்களும் தங்கள் விருத்தாந்தங்களையும் எழுதி வைத்தார்கள். ஏனெனில், அவர்கள் காலத்திலும் அவர்களுக்கு முந்தியும் பௌத்தர்களும் ஜைனர்

களும் பிரபலமாயிருந்து தங்கள் மடங்களையும் ஆலயங்களையும் கற்பாறைகளில் செதுக்கிக் கட்டியிருந்த முறையைத் தாங்களும் தழுவினதே காரணம் ஆகும். பல்லவர்கள் பிற்காலத்திலே குகைகள் மாத்திரமே யன்றி சமவெளிகளிலும் கற் கோயில்கள் கட்ட ஆரம்பித்தனர். அதை அநுசரித்துப் பின் வந்த சோழர்கள் அரிய சிற்பங்கள் வாய்ந்ததும் மகோன்னதமானதும் ஆன ஆலயங்களை எழுப்பினர்.

அப்பர் காலத்து ஆலயங்கள் முக்கியமாய்க் கற்குகை ஆலயங்கள் என்று முன் குறித்த திருச்சி, வல்லம் போன்ற உதாரணங்களால் தெரியவரும். அப்பர் காலத்திலேயே அவருடைய முயற்சியினாலே சம வெளிகளில் கோயில் ஏற்பட்டதை குணதரேச்சுரத்தினால் தெரிகிறோம். ஆகவே ஜைனர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆலய நிர்மாணமானது சைவாசிரியர்களால் பெரிதும் விருத்தி செய்யப்பட்டு சோழர் காலத்தில் உன்னத நிலை அடைந்தது எனலாம்.

அப்பர் ஜீவிய காலத்தில் ஏற்பட்ட கல்வெட்டுகளுக்குப் பின் அவரைப் பற்றிய சாசனம் சோழன் ராஜ ராஜர் காலத்தில் தான் காண்கிறோம். மத்தியில் சற்றேறக் குறைய நான்கு நூற்றாண்டுகள் அவரைப்பற்றிய சாசனங்களே இல்லை. அவரைப்பற்றிய பிரபாவமானது நிலை யூன்றுவதற்கு அத்தனை காலம் ஏற்பட்டதோ அல்லது இராஜரீகப் புரட்சி தான் காரணமோ என்பது அறியக்கூடவில்லை. பொதுவாக மூன்று ஆசிரியர்களான அப்பர், சம்பந்தர் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த சுந்தரர் இவர்களைக் குறித்துத் தெய்வத்தன்மையும் ஆசாரியப் பிரபாவமும் ஏற்பட்டதற்கே சில நூற்றாண்டுகள் பிடித்தன போலும்.

மூவர்களும் இருந்த காலத்திலேயே அவர்கள் உலகப் பிரசித்தம் பெற்றிருக்க வேண்டும். அவர்களுடைய திவ்வியப் பாசுரங்கள் எங்கும் பரவி இருக்கவேண்டும். ஆயினும் அவர்களுக்குப் பிந்தி அப்பாசுரங்களைச் சேகரித்து வைக்காததினால் பொது மக்கள் அவர்களைப்பற்றி சிறிது மறந்திருக்கலாம். பிந்தி மூன்று

நூற்றுண்டுகளுக்குப் பின் நம்பியாண்டார் நம்பி என்ற பெரியார் அவைகளைத் தேடி சேகரித்துச் செல்லரித்துப் போனது போக மீதியைத் திருமுறைகளாக வகுத்து வெளியிட்டார்கள். அன்னருடைய அருந் தொண்டினுல்தான் இன்றைக்கும் நமக்குத் தேவாரப் பதிகங்கள் கிடைத்திருக்கின்றன. அக்காலத்தில் சம்பந்தர் பதிகம் ஒன்று திருவிடை வாயிலில் பொறித்திருந்தது. இக்காலத்தில் கிடைத்தது. ஆனல் அதைப் போல் அப்பர் பதிகம் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே அப்பரைப் பொருத்தமட்டில் இராச ராசச் சோழர் காலம் மட்டும் கல்வெட்டு கிடைக்காதது நம் துர்ப்பாக்கியம் எனல் வேண்டும். விவிலிய சரிதத்தில் கிறிஸ்து நாதரின் பிரபாவத்தை எவ்விதம் பால் என்பவர் உலகத்திற்கு அறிவித்தாரோ அவ்விதமே மூவர் ஆசாரியர்களின் மகிமையை நம்பியாண்டார் சைவ உலகத்திற்குத் தோற்றுவித்தார் என்று ஒப்புவமையினல் சொல்லக் கூடும். முன்னமே கூறியபடி இராஜ ராஜச் சோழர் 1 உலகப் பிரசித்தியாய் மன்னர் மன்னனுய் ஆண்ட காலத்தில் தஞ்சையில் தன் பெயரினல் இராஜ ராஜேச்சுரம் என்ற பெரிய கற்றளி எழுப்பினர். அதில் சைவ சமயாச்சாரியர்களின் திருவுருவங்களை நிலை நிறுத்தி அவைகளுக்கு அளவிடக் கூடாததான தருமங்களை ஏற்படுத்தினர். தான் செய்த தானங்களைப் பார்த்துப் பின் வருவோர் செய்யட்டும் என்ற நல்லெண்ணத்தினுலும் தான் செய்யும் தானம் பிறர் கவர்ந்து கொள்ளாமல் நிரந்தரமாக ஆலயத்திற்கு இருக்கவேண்டும் என்ற முன் ஜாக்கிரதையினுலும் அவ்வாலயங்களில் அவைகளைத் தெளிவாக வரைந்து விட்டார். அவரது எண்ணம் நிறைவேறிற்று என்றே கூறல்வேண்டும். ஏனெனில் அவருக்குப் பின் வந்த சோழ மன்னர்கள் அவர் செய்ததைப் பார்த்துத் தாங்களும் தானங்களில் ஈடு பட்டார்கள் அல்லவா?

நாம் முன்னமே சம்பந்தர் வரலாற்றைக் கூறின பகுதியிற் கண்டபடி இராஜராஜர் கடைசி ஆண்டு அதாவது 1913-14ம் ஆண்டில் இராஜராஜேஸ்வர ஆலயத்துக் காணியாளரான ஆதித்த சூரியன் என்ற தென்னவன் மூவேந்த வேளான் என்ற

பிரபு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர், நம்பி ஆரூரனர், நங்கை பரவைப்பார் முதலான மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்த சங்கதி அக்கோயிலில் அடியிற்கண்டபடி செதுக்கப்பட்டிருக்கிறது. (S. I. I. Vol. II No. 38.)

"ஸ்வஸ்திஸ்ரீ உடையார்
ஸ்ரீராஜ ராஜீசுரம்
உடையார்க்கு ஸ்ரீகார்யம்
செய்கின்ற பொய்கை நாடு
கிழவன் ஆதித்தன் சூர்யனன
தென்னவன் மூவேந்த வேளான் ஸ்ரீராஜ
ராஜீசுரம் உடையார் கோயிலில்
யாண்டு இருபத் தொன்பதாவது வரை
எழுந்தருளிவித்த செப்பு பிரதிமங்கள்"

உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும் ரத்னங்கள் சரடு நீக்கி தக்ஷிணமேரு விடங்கள் என்னும் கல்லால் நிறை எடுத்தும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறையெடுத்தும் கல்லில் வெட்டினபடி—

... ...
... ...
... ...

பாதாதிகேசம் இருபத்து இரு விரலே இரண்டு தொரை உசரத்து இரண்டு திருக்கை உடையராகக்கனமாக எழுந்தருளிவித்த திருநாவுக்கரையர் ப்ரதிமம் ஒன்று—இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே ஆறு தொரை உசாத்து பத்மம் ஒன்று, இதனேடுங் கூடச்செய்த எண்விரலே ஆறு தொரைச் சமசதுரத்து நால்விரல் உசரத்து ஒன்று.

விகுதி

....
... .
... ...

இவனே திருநாவுக்கரையனுக்குக் கொடுத்தன உருத்ராக்ஷச் சரி பொன்னின் நூலிற் கோத்த உருத்ராக்ஷம் ஒன்றுட்

பட நிறைஆறு மஞ்சாடியும் இரண்டு மாவுக்கு விலைகாசு ஒன்று உருத்ராக்ஷச் சரிபொன்னின் நூலிற்கோத்த உருத்ராக்ஷம் 3-ன் உட்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டு மாவுக்கு விலை காசு ஒன்று, கண்டிகை உருத்ராக்ஷம் ஒன்றும் சரி ஒன்றும் உட்பட நிறை ஐங்க................மஞ்சாடியும் குன்றிக்கு விலை காசு எட்டு, திருப் பொற்பூ ஒன்று, பொன் முக்காலேநாலு மஞ்சாடியுங் குன்றி திருக்கைக் காரை ஒன்று, பொன் இருகழஞ் திருக்கைக் காரை ஒன்று, பொன் முக்காலே நாலு மஞ்சாடி

...　　...　　...
...　　...　　...
....　　...　　...

இவன் எழுந்தருளிவித்த திருநாவுக்கரையார்க்குக் குடுத்தன. உருத்ராக்ஷம் பொன்னின் சரிகட்டிற்று ஒன்றும், நாண் படுகண்ணும் கொக்குவாயும் உட்பட நிறைகழஞ்சே எழு மஞ்சாடிக்கு விலை காசு மூன்று.

...　　...　　...
....　　...　　...

மேலும், அவ்வாதித்த சூரியன் என்பான் 1014-ம் ஆண்டில் சமயாசிரியர் மூவர்க்கும் பெரிய பெருமாளுக்கும் பல தானங்களைச் செய்தது (vol II No. 41-ல்) அடியிற்கண்ட கல்வெட்டில் கண்டிருக்கிறது.

"ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீராஜ ராஜீஸ்வர முடையார்க்கு ஸ்ரீகார்யம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் ஸூர்யனான தென்னவன் மூவேந்த வேளான் தான் எழுந்தருளிவித்த நம்பியாரூரானார்க்கும் திருஞானசம்பந்தடிகளுக்கும் திருநாவுக்கரைய தேவர்க்கும் உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்ருவது வரை குடுத்த தாரநிலை விளக்கு ஒன்று, இருப்பு நாராசம் உட்பட நிறை நாற்பத்தொரு வரை இவனே தான் எழுந்தருளிவித்த பெரிய பெருமாளுக்குக் குடுத்த தாரநிலை விளக்கு ஒன்று, இருப்பு நாராசம் உட்பட நிறை நூற்றிருபதின் பலம் வெண்கல மடல் ஒன்று நிறை நாற்பலம்."

இக்கல் வெட்டில் பெரியபெருமாள் என்றது இராஜ ராஜ

னையே குறிக்கிறது. உரோமானிய சக்கிரவர்த்திகளைப் போலவே சோழ மன்னர்களும் தங்கள் பிரதிபிம்பங்களை ஆலயங்களில் வைத்துப் பூஜைசெய்ய ஏற்பாடு செய்தனராம். மேலும், இராஜ ராஜேசுவர் ஆலயத்தில் மூவர் திருப்பதிகங்களும் ஓதுதற்கு 48 பேர்களை ஏற்படுத்தி அவர்களுக்கு ஊதியங்களைத் திட்டம் செய் திருந்ததை முன்னமே சம்பந்தர் வரலாற்றில் கூறியுள்ளோம். (S. I. I. Vol. II. No. 65)

இவை யெல்லாம் இராஜராஜர் அவர் மகன் இராஜேந்திரர் இவர்கள் காலங்களில் நடந்தேறின. அதாவது, 10-ம் நூற்றாண்டின் இறுதியிலும் 11-ம் நூற்றாண்டின் முதலிலும் அப்பரின் பெருமையும் மகிமையும் எதுகாறும் பரவி இருந்தன என்பது இக் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது.

III

நாம் முன்னமே கூறியபடி இராஜராஜர் இராஜேந்திரச சோழர் இவர்கள் பின்பற்றி வந்த கொள்கைகளையும் செய்கைகளையும் அவர்களுக்குப் பின் ஆண்ட சோழர்கள் கடைப் பிடித்து வந்தார்கள். அவர்கள் 11-வது நூற்றாண்டு முதல் 13-வது நூற்றாண்டு வரை மிகுந்த செல்வாக்கோடு ஆட்சி புரிந்த காலத்தில் அநேக கோயில்களைக் கட்டி அவைகளில் பல தானதர்மம் முதலான திருப்பணிகளை இயற்றியுள்ளார்கள்.

அரசர்களைப் பின்பற்றி செல்வவான்களும் பல திருப்பணிகளைச் செய்துள்ளார்கள். சம்பந்தரைப் பற்றி முன் எழுதியது போலவே அப்பரைப்பற்றி அக்கல்வெட்டுக்களில் கிடைத்துள்ள சங்கதிகளைப் பாகுபடுத்தி இங்கே கூறுவோம்.

(a) நாயனார் பேயர்கள்.

(1) திருநாவுடைய பிள்ளையார்—தஞ்சை ஜில்லா—சூலமங்கலம்—294/1911.

(2) திருநாவுக்கரையன்—தஞ்சை—திரு மெய்ஞ்ஞானம்—330/10.

(3) திருநாவுக்கரசர்—தஞ்சை—திருவீழிமிழலை—402/08.

(4) திருநாவுக்கரசு தேவர்

(i) தென் ஆற்காடு—தீர்த்த நகரி—121/04.
(ii) செங்கல்பட்டு—திருக்கச்சூர்—316/09.
(iii) சித்தூர்—அகஸ்திய கொண்டா—556/06
(iv) ராமநாதபுரம்—திருப்பத்தூர்—117/08.

(5) திருநாவுக்கரசு நாயனர்—தஞ்சை—கோவிலூர்—186/08-இந்தக் கல்வெட்டில் சப்பந்தரை "பிள்ளையார் நாயனர்" என்று குறிக்கட்பட்டுள்ளது. (முந்திய கட்டுரையில் குறிக்காமல் விட்டிருக்கிறது.)

(6) வாகீசர்

(i) மதுரை—கீரனூர்—586/93.
(ii) தென் ஆற்காடு—திரு அதிகை—49/03

7. வாகீசுரதேவர்—செங்கல்பட்டு—திருவொற்றியூர்—207/12
8. எம்பெருமக்கள்—சேலம்—ஆறகளூர்—418/13.

இப்பெயர் மூவருக்கும் பொதுவாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே மூவருக்கும் கொள்ளவேண்டும்.

இப்பெயர்களைக் கவனித்தால் அப்பருடைய பிள்ளைத் திருநாமமாகிய மருணீக்கியார் என்பதும், இக்காலத்தில் சாதாரணமாய் வழங்கும் அப்பர் என்ற பெயரும், சோழர் காலத்தில் வழக்கத்தில் இருக்கவில்லை எனப் புலப்படும். திருநாவுக்கரசு, வாகீசர் என்பவைதான் பெரும்பாலும் வழங்கி வந்தன எனலாம்.

(b) நாயனர் கோயில்கள் அவைகளுக்கு ஏற்பட்ட தானங்களும் காலமும்.

1. 1014 கி. பி.—ராஜராஜன் I 29-ம் ஆண்டு—தஞ்சை இராஜராஜேசுவரும் உடையார் கோயில். அப்பர் முதலிய எழுவர்—பிரதிமைகளைக் கோயிலில் தாபித்ததும் தானம் தந்ததும் (முன் பாராவில் எழுதப்பட்டது.) 98/1838.

2. 1017—இராஜேந்திரன் I 3-ம் ஆண்டு ஷை கோயில் அப்பர் முதலிய 4 பிரதிமைகளுக்கு இரண்டு திருவிளக்குகளும் வெண்கல மடல் ஒன்றும் தானம் செய்தது (முன் குறித்தது.)

3. 1158 மார்ச்சுமீ 26உ புதன்கிழமை இராஜராஜ

தேவ II 12-வது ஆண்டு தஞ்சை ஜில்லா திருவலஞ்சுழி, கபர்திசுவரர் ஆலயம். திருநாவுக்கரசு தேவர், திருவாதவூர் அடிகள், திருக் கண்ணப்ப தேவர் இப்பிரதிமைகளுக்குப் பூதானம் செய்தது—528/02.

4. 1178—1216. குலோத்துங்கச் சோழன் III ஆண்டு அழிந்து போயிற்று. செங்கல்பட்டு திருக்கச்சூர் ஆலயத்து அஞ்சனாக்ஷியம்மன் ஆலயம். திருநாவுக்கரசு தேவர் பிரதிமை தாபித்ததைக் குறிக்கிறது. 316/1909

5. 1192. திரிபுவன சக்கரவர்த்தி வீரராஜேந்திர சோழர் 14-ம் ஆண்டு சித்தூர் அகஸ்தியர் கொண்டா அதில் இராணியான உத்தம சோழ கங்கை என்ற செல்வ கங்கை என்பவள் திருநாவுக்கரசு தேவரைத் தாபித்து, பிரதிஷ்டை செய்தது. இராணியின் பெயரைக் கொண்டு அரசனது சரியான பெயர் குலோத்துங்கன் III என்று சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். மேலும் வீரராஜேந்திரன் சரியான பெயராக இருந்தால் அவன் காலம் 1062 ஆகும். ஆனால் அவன் 12ஆடு ஆளவில்லை. 559/1906.

6. 1255 இராஜேந்திர III 10-ஆண்டு தஞ்சை கோவிலூர் மந்திரபுரீசுவரர் கோயில் பிள்ளையார் நாயனர் (சம்பந்தர்) திருநாவுக்கரசு நாயனர் இவர்கள் கோயில்களுக்குப் பூதானம். அரசன் பெயர் இராஜேந்திர சோழ தேவன் என்று மாத்திரம் குறித்திருக்கிறது. ஆனால் அதற்கு மேலும் கீழும் உள்ள சாசனங்களைப் பார்த்ததில் இராஜேந்திரன் III-வது இருக்கவேண்டும் என்று உத்தேசம் ஏற்படுகிறது. இராஜேந்திரன் I ஆக இருக்கும் பட்சத்தில் ஆண்டு 1023 ஆகும். 186/1908.

7. 1267—ஜடாவர்மன் வீரபாண்டியன்—14-ம் ஆண்டு திருநெல்வேலி ஜில்லா, சேரமாதேவி அப்பர் ஆலயத்து சுவர்: இவ்வாலயத்துச் சுவரில் மேல் சொன்ன வீரபாண்டியன் சாசனத்தைத் தவிர 1463 சகம் இட்டதொன்றும், விஜய நகரத்து ஸ்ரீரங்க தேவ மகா ராயனுடைய தொன்றும் இருக்கின்றன. இவ்வாலயம் அப்பர் பெயராலே இருப்பது நோக்கத்தக்கது. 185, 186, 187/1895.

8. 1271—மாறவர்மன் வீரபாண்டியன் 9-ம் ஆண்டு—தென் ஆற்காடு தீர்த்த நகரி—சிவாங்குரேஸ்வரர் கோயில். இதில் திருநாவுக்கரசுதேவர் திருவிழா முதல் 12 திருவிழாக்களுக்காக வரிகளைத் தானம் செய்தது. இக்கோயிலில் அப்பர் முதல் நால்வர்களுடைய உருவங்களும் சிறப்பிக்கப் பெற்றுள்ளன. 121/04.

9. 1295—விக்கிரம பாண்டியன் 12-ம் ஆண்டு இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர் ஆலயம் கைலாசமுடையார் கோயிலில் திருநாவுக்கரசு தேவர் பிரதமையை ஒரு தேவரடியாள் தாபித்துப் பணம் தானம் செய்தது. 117/08.

10. 1396—ஜடாவர்மன் பராக்கிரமன் 12-ம் ஆண்டு தஞ்சை சூலமங்கலம் - கிருத்திவாகேசுவரர் ஆலயம். தான விநோத நல்லூர் திருநாவுடையான் என்பவன் கரியுதிர்த்த நாயனார் ஆலயத்தில் திருநாவுடைய பிள்ளையார் பிரதிமை தாபித்தது. 294/11.

மேலே காட்டிய கல்வெட்டுகளிலிருந்து நாம் அறியக்கூடியவைகளை இங்கு எடுத்துரைப்போம். முதல் இரண்டு சாசனங்கள் இராஜராஜர் I இராஜேந்திரர் I என்பவர்களுடையவை. அவர்களுக்குப்பின் கி. பி. 1158 முதல் 1396 வரை எட்டு சாசனங்கள் கிடைத்திருக்கின்றன. சம்பந்தரைப் போன்று அதிகமான சாசனங்கள் இதுவரை கிடைக்கவில்லை. அதிலும் சைவ சமயத்தில் ஈடுபட்டும் சேக்கிழாரால் போற்றப் பெற்றவருமான குலோத்துங்கன் I என்பவர் காலத்தில் அப்பர் சுவாமிகளைப்பற்றி ஏன் சாசனங்கள் ஏற்படவில்லையோ அறிகிலோம். 1017 முதல் 1158 வரை ஏறக்குறைய 140 வருட காலம் யாதொரு ஆலய சாசனமும் கிடையாதது வியப்பாக இருக்கின்றது. அப்பர் சிலைகளை நாட்டினதில் முயற்சி எடுத்த அரசர்களின் விவரம் காலக்கிரமமாக இங்கே குறிப்போம்.—

அரசர் :	காலம் :	சாசனம் :
இராஜ ராஜர் I	985—1013	1
இராஜேந்திரர்	1013—1045	1
இராஜராஜ II	1146—1178	1

குலோத்துங்கன் III	1178—1216	2
இராஜேந்திரன் III	1245—1267	1
ஜடாவர்மன் வீர பாண்டியன்	1253—	1
மாறவர்மன் வீர பாண்டியன்	1262—	1
விக்கிரம பாண்டியன்	1283—	1
ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன்	1184—	1

ஆகவே சோழ வம்சத்தினர் ஐவரும் பாண்டியர்களில் நால்வரும் அப்பர் சிலைகளை ஸ்தாபனம் செய்து தானங்கள் புரிந்திருக்கிறார்கள். சோழர்களைக் காட்டிலும் பொதுவாக சைவ சமயத் திருப்பணிகளில் பாண்டியர்கள் குறைந்த ஊக்கம் கொண்டவர்கள் என்று கல்வெட்டுக்களினால் தெரியவரும். ஆயினும் அப்பர் விஷயத்தில் மத்தியகாலப் பாண்டியரில் மூவரும் மகம்மதிய படையெடுப்பிற்குப் பின் வந்த பாண்டியரில் ஒருவரும் திருப்பணிகள் செய்ததை இங்குக் குறிப்பிடத்தக்கதே.

மேலும் அப்பர் சுவாமிகள் அவதார ஸ்தலம் ஆகிய திருவாமூர் என்ற இடத்தில் அவரைப் பற்றிய யாதொரு கல்வெட்டும் கிடைக்கவில்லை. இப்பொழுதும் கூட அந்த ஸ்தலத்தை எவரும் கவனிப்பது கிடையாது. அது திரு அதிகைக்கு 4 மைல் தூரத்தில் உள்ளது. ஆலயம் மிகச் சிறிது. அதைக் கவனிப்பவர் இன்றி சிக்கிரத்தில் அழியும் நிலைமையில் இருக்கிறது. அப்பர் சுவாமிகள் அந்த தலத்தில் நெடுங்காலம் இராமையினாலே அது பிரசித்தி பெறவில்லை போலும். இனி அப்பர் அருள் பெற்று நீண்ட காலம் வாழ்ந்த தலமாகிய திருவதிகை விரட்டானத்தைப் பற்றிக் கூறும் போது இந்த தலத்திலும் இனி அடுத்த குறிப்பில் குறிப்பிடப்போகும் ஒரு கல்வெட்டைத் தவிர இதர கல்வெட்டுகள் கிடையா. அக்கல்வெட்டானது குலோத்துங்கன் என்ற மன்னன் காலத்தில் அங்கு இருந்த வாகீசர் மடத்தைக் குறிக்கிறது. இந்த தலம் வெகு பழமையானது. ஏனெனில் இந்த ஆலயத்தில் பல்லவ மன்னர்

நந்தி போத்தரையன், பரமேசுவர போத்தரையன், இராஷ்ட்ர கூட அரசன், கன்னர தேவன் முதலானவர்கள் கல் வெட்டு களும் பல சோழ பாண்டியர்கள் கல் வெட்டுகளும் இருக்கின் றன. மேலும் ஆலயத்தின் பிரகாரத்தில் ஒரு புத்தக் கல்சிலை வைக்கப்பட்டிருக்கிறது. இச்சிலை எவ்விதம் வந்தது, எக்காலத் தில் வந்தது என்பதைப்பற்றித் தெரிவிப்பார் இல்லை. அர்ச்சகர் கள் அப்பரை இம்சைப் படுத்திய சமணராஜன் என்று அத னைச் சொல்லுகிறார்கள். இது தப்பு என்று உருவத்தைக் கண்ட மாத்திரத்தில் கூறமுடியும். அப்பர் சுவாமிகள் முற்றும் துறந்த துறவியாய் இருந்ததினால் அவரைப்பற்றி அக்காலத்தார் சாசனங்களின் வாயிலாக அதிகமாகப் பிரசித்தி செய்யவில்லை போலும். ஆனால் அப்பர் இளமைப் பருவத்தில் வசித்த தென் ஆறுகாடு ஜில்லாவில் மற்றொரு தலமாகிய தீர்த்தகிரியில் அப்பர் சிலை நாட்டப் பெற்றதுமன்றி 13 வது நூற்றாண்டில் அப்பரு டைய திருவிழாவும் நடந்து அதற்காகத் தானமும் செய்யப்பட் டிருந்தது ஆராயத்தக்கது. இனி அப்பருடைய முத்தித் தல மாகிய திருப்புகலூரிலும் அவர் நெடுங்காலம் மடம் கட்டி வாழ்ந்த திருப்பூந்துருத்தியிலும் யாதொரு கல் வெட்டுகளும் இல்லாதது வியப்பாக இருக்கிறது.

அரசர்களே யன்றி அரச உத்தியோகஸ்தர்களும், செல்வ வந்தர்களும், தேவரடியார்களும் சிவ கைங்கரியத்தில் ஈடு பட்டு அப்பர் சுவாமிகளின் பிரதிமைகளைத் தாபித்துத் தானங்களை வழங்கினதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சோழ பாண்டிய மன்னர்களுக்குப் பின்னிட்டு இத்தமிழ் நாட்டை ஆண்ட விஜய நகர மன்னர்களும் அவர்கள் பிரதி நிதி களான நாயக்கன் மார்களும் சமயாசாரியர்கள் விஷயத்தில் யாதொரு சிரத்தையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அரசர்கள் போற்றுதல் கிடையாததினாலே பொது மக்களும் அவர்கள் காலத்தில் இத்திருப்பணிகளில் ஈடுபட்டதாகத் தெரிய வில்லை. (தொடரும்)

பெண்ணரசு

[திரு. அ. சிதம்பரநாதன் அவர்கள் பீ. ஏ.]

சிவானந்த விளைவு என்னுமோரூரிலே பவானந்தமென்ெருருவனிருந்தான். அவன் மனையாளின் கண்கள் மைகண்டறிந்தில; அவள் அடிகள் செம்பஞ்சறிந்தில; இருகைகளோ வரிவளை யறிந்தில; கூந்தலோ மொய்ம்மலர் அறிந்திலது. அவள் மார்போ பாலொடு வறந்து பசியொடு வெதும்பித் தோலொடு திரங்கிச் சுருங்கியதொன்று. பாலுமின்றி, ஊணுமின்றி, உறக்கமுமின்றித் துடிதுடித்தேங்கி, நோக்கான் மழை பொழிந்து கிடக்கும் அவர் மக்களுக்கோ அளவில்லை. நரம்பு மெலும்பும் எண்ணத்தகும்படி மெய்ந்நிறைந்து, ஈயாவன்கணர் என்னுந் தோளாற் கொட்டப்பட்டு, 'நெடும்பசி யென்னுங் கொடும்புலி யிரைகொள' நின்ற அம்மக்கள் 'ஆயே ஆயே ஈயாய் கூழென' நின்ற காலை, அவள் கவற்சி கொண்டு கதறுவதன்றி என்செயக்கூடும்? கல்லாவறிவுடைப் பொல்லா மூர்க்கர் தாங் கொடாவிடினும் தடுப்பதை நினைத்து அழுகுவள்கொல்லோ? "வறியவர்க் காணின் மொறு மொறுத்திகழ்ந்து பகைத்தவரென்னத் திகைத்தெதிர் நோக்கி, இஞ்சிநின்ற வெஞ்சினக்குரங்கென அகங்கெட வாளா முகங் கடுகடுத்துக் கல்லெறிந்தென்ன வல்லுரை கூறி, நாய்போல் குரைத்துப் பேய்போல் குனித்துத் தள்ளெனத் தள்ளித் தலைக்கடை யடைக்கும்" புல்லறிவு செறிந்த சோறு நிறைத் துருத்தியைக் குறித்து வருந்துவள் கொல்லோ? அன்றன்று. "வாழ்ந்தார்க்குறவு வழியினுமுண்டு, தாழ்ந்தார்க்குறவு தமரினுமின்று" என்றும், "அன்றிடார்க்கு இன்றில்லை" யென்றுமே நினைப்பதுண்டு. பவானந்தமோ மடியென்னும் பேயாற் பிடிபட்டவன்; உழைத்துப் பிழைக்க முயலாதவன். அவற்கு நாழிகை யென்பது நாள் போற்றோன்றும்; நாளென்பது ஒரு மாதம்; மாதமென்பது ஓராண்டு. நாட் செல நாட் செல தாட்சியே மிகுந்தது; பலமெனும் பெயருடையொன்றும் பஞ்சியாய்க் கழிந்தது.

ஒரு நாள் அவன் தன் மனைவிமுக நோக்கிக் கூறினன்:—

பெண்ணரசே! "பொருளல்லாரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லதில்லை பொருள்." ஆனால், அப்பொருள் தானும் என்னால் தேடக்கூடிய தொன்றல்ல. நீயோ பாக்கியவதி; கற்பரசி; அருந்ததி. என்னையன்றித் தெய்வத்தையுந் தொழுது நீ வருவதால் நீ வேண்டுமென்று நினைக்குமுன் எப்பொருளுங் கிடைத்து விடுமே. ஆ! உன்னன்பே அன்பு. படிமிசைக் காசு கொடுத்த அவ்வள்ளலாஞ் சிவனை வழிபடு முனக்கு எதுவும் அரிதல்லவே. உன்னைப்பெற்ற நான் பெருந்தவம் புரிந்திருக்க வேண்டும். என்னைப்பெற்ற நீ என் குறிப்பறிந் தொழுக வேண்டாமா? குறிப்பைக் குறிப்பாற் கூறுது விளங்கக் கூறி விடுகிறேன். வழக்கம்போற் கோயிலுக்குப் போவதற்கு முன்னரே இன்று போய் நீ வழிபடுந் தெய்வத்தை வேண்டி வருக."

"நாதா! அவ்வாறே செய்கிறேன்" என்று சொல்லிப் பெண்ணரசெழ, அவளைப்பற்றி யிழுத்துச் சொன்னான் பவானந்தம்:—"இன்று நீ வேண்டுவது என்றும் போலிருத்தலாகாது. நாலாறும் ஆறாய் நனி சிறிதாய் மேலாறு மேலுறை சோரும் இக் குடியில் வாழ்வதை விட அவிவது மேல். இன்று நீ அக் கடவுளை நமக்கு ஒரு நல்ல குச்சு வீடும் அவ்வீட்டிற் கேற்ற பல வகைப் பண்டமுந் தருமாறு மன்றாடிக் கேட்டு வாங்கிவர வேண்டும்."

'நாதா! வேண்டுவார்க்கு வேண்டியாங்கு ஈவார் கடவுள் ஆயினும் வேண்டுந் தகுதியுடையோமா நாம்? அன்றியும், வேண்டத் தகுவதை யறிவோமா நாம்? என்றாள் பெண்ணரசு.

"என் சொற்படி நடக்க நீ மறுப்பது நீதியோ? கேட்டதைக் கொடாவிடிற் கடவுளும் பெரிதோ? என்ற பவானந்தத்தின் சொற்கள் பெண்ணரசின் மனத்தைத் தைத்தன.

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ இரு நிதியம். அவரவர் திறமறிந்து அவரவர் வினைக்கேற்ப அருளும் அருட்பெருங் கடலைக் குறை கூறவேண்டாம். நாதா" என்ற பெண்ணரசின் பேச்சைக் கேட்டு, "நீ சிறந்த உத்தமி; உன்னன்புக்கோரளவில்லை. அன்புடையார்க்கருளும்

அவனை நீ வேண்டின் அருளாது விடான். போய்ப்பெற்றுவா'' எனக் கூறினன் அவள் கணவன்.

ஏதோ கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்துப் போந்த பெண்ணரசு கோவில் புக்கு வணங்கி, "பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்தருளும் பரம் பொருளே! எளியேன் கொழுநன் வேண்டுவ தொன்றுண்டாம். அருளத்தகுமேல் அருள்வாய். நல்ல குச்சு வீடும் பல பண்டங்களும் வேண்டுமாம். நான் என் செய்வேன்? எங்குறுவேன்? கருணாநிதி! சரணம்'' என்று விழ, 'அங்ஙனமே' என ஒரு வாக்குப் பிறந்தது.

அவ்வாக்கைக் கேட்டுச் சென்ற பெண்ணரசு இல்லம் நோக்கிச் சென்றுழி இல்லமில்லாததைக் கண்டு அச்சமுற்றுத் தயங்கி நின்ற வேளையில், உள்ளிருந்து வெளிவந்த தன் மக்களைக்கண்டு அதுதான் புத்தில்லமோ என நினைத்துச் சென்று பார்க்க, உள்ளே பண்டங்கள் நிறைந்திருப்பதையும் கணவன் மகிழ்வுடன் உண்டிருப்பதையுங் கண்டாள்.

"நீயே வல்லவள்; நீயே சத்தி எனப் புகழ்ந்து கொண்டாடி அவளோடு கூடி யிருந்து சின்னாட் கழிந்தபின் அவளை நோக்கிக் கூறினன் பவானந்தம் :—கடவுள் நல்லவர்தான். நீயும் நல்லவள். உனக்கு அவர் அருளாது விடுவாரோ? இக் குச்சு வீடு அவ்வளவு இன்பந்தரவில்லை. ஒரு மச்சு வீடா யிருந்தால் மேல் மச்சு வீடு வேண்டுமென நீ வேண்டின் வாரா திருக்குமோ! போய் வா?

"நாதா! நாம் முன்னிருந்த நிலைமை யென்ன? இது போதுள்ள நிலைமை யென்ன? இப்போதுள்ள நிலைமை யென்ன? என்பதைப் பார்த்தால் இதுவே போதுமென என் மனம் புகலுகிறது,'' என்று சொல்லவும் யொருஅனைப் கூறினன் பவானந்தம்:—"போதுமென்ற மனம் பொன் செய்யாது. என் மனம் வேறு உன் மனம் வேறாக இருத்தல் தகுதியோ? இன்னே போய் முன்னே சொன்னதைக் கேட்டுக் கொன்னே வாராது கொண்டுவா.''

என் செய்வாள் பெண்ணரசு! சென்றாள் கோவிலுக்கு; இறைஞ்சினாட் கோவிலை. 'அத்தனே யண்டரண்டமாய் நின்ற ஆதியே! யாது மீறில்லாச் சித்தனே! பத்தர் சிக்கெனப்பிடித்த செல்வமே! சிவபெருமானே! பித்தனே போன்று பிதற்றி நின்றிடும் புழுத்தலைப் புலையேன் தலைவன் வேண்டுவதொன்றுண்டாம். அதுதான் ஒரு மச்சு வீடு. அருளுவையோ" எனக் கூறி முடிக்குமுன் 'அருளினோம்' என்ற உருவின்றித் தோன்றிய வாக்கைக் கேட்டு வியந்து குச்சுவீட்டை நோக்கிச் சென்ற அவள் மச்சு வீட்டைக் கண்டாள்.

அம்மச்சு வீட்டில் வாழ்ந்துவரும் நாளில் ஒருநாள், அவள் கணவன் அவளை நோக்கிப் "பெண்ணமுதே இன்று காலை இவ் வீட்டு மாடத்தின் மீதேறி நின்றபொழுது என் மனத்தொன்றுதித்தது. சுற்றுப்பட்ட பல வீடுகளையும் அங்குள்ளாரையும் கண்ட ஞான்று அங்குள்ளார் யாவர்க்கும் அரசாக வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. அவ்வெண்ணத்தை நிறைவேற்றி வைக்க வேண்டிய துன்கடன். நீ நல்ல அடியாள் அல்லவா? அடியார்க்கருளும் ஆண்டவன் உனக்கு அருளாது விடான். கடிதிற் போய் வேண்டி நொடிதிற் திருப்பிவா" என்றான். கேட்ட பெண்ணரசு திகைத்து, "நாதா! அத்துன்பம் நமக்கெதற்கு? வேண்டுவது எல்லாம் வந்தும் விடுமோ? அன்றியும், அடியவரென்றால் ஆண்டவனிடம் ஒன்று வேண்டுதல் தகுமோ? இன்னது செய்ய வேண்டுமென்று ஆண்டவனைக் கேட்க அடிமைக் கென்ன உரிமையுண்டு? அவ்வாறு கேட்பின் 'அடிமை சால அழகுடைத்தே!' நீங்கள் ஏனிவ்வாறு பேரவா கொள்கிறீர்கள்? வேண்டாம், நாதா, வேண்டாம், நாதா; உள்ளது போதும்; கொள்ளை வேண்டாம்" என்று சொல்லுமளவில், இடையிற் கூறினான் பவானந்தம், "கணவன் வேண்டுவதற்கு மாறாக நடத்தல்தான் பெண்டிர்க் கழகோ! பெண்டிர்க்கழகு கணவன் சொற்றிறம்பாமை யன்றோ! காரெனப் போய் யாருக்கும் அரசெனும் வரம் வாங்கி வா."

'இருதலைக்கொள்ளி யெறும்புபோல் ஏங்கிய மனத்துடன்

பெண்ணரசு சென்று பண்ணொடு பாடிக் *"கண்காட்டும் நுதலானே, கனல் காட்டுங் கையானே, பெண் காட்டும் உருவானே, பிறை காட்டுஞ் சடையானே, பண்காட்டும் இசையானே, பயிர் காட்டும் புயலானே, வெண்காட்டில் உறைவானே விடை காட்டுங் கொடியானே! மண்ணினில் மன்னனுக விழையும் என் கொழுநன் வேண்டுகோள் குறித்து ஈண்டு நின்றனன். திருவுளமெப்படியோ,, என்று சொல்லுங்கால், "அவன் அஃதானுன் என்றதோ ரொலி யெழுந்தது.

குச்சு வீடு போய் மச்சு வீடு வந்தது. மச்சு வீடுபோய் மாளிகை வந்தது. மாளிகையில் மன்னனென சிங்காதனத்துச் சிறப்புடன் வீற்றிருந்த பவானந்தத்தின் மகிழ்ச்சியையும் அவன் பெண்ணரசைப் புகழ்ந்ததையும் எழுத இடமில்லை. அவன் புகழ்ந்ததுவும் வெற்றுக்கன்று. புகழ்வதெல்லாம் ஒன்று வேண்டியன்றே! மன்னனாய் விளங்கிய அவன் வேண்டக்கூடியது முண்டோ? இவ்வினவுக்கு விடை அவன் ஒருநாள் பெண்ணரசிடம் சொல்லியதைக் கூறினல் அறியக்கூடும். அவன் கூறியதியாதெனின், "நாம் மன்னனயிருந்தாலும் எம்அடி எல்லாரும் பணிகின்றாரில்லை. நாம் இந்நாட்டிற்குக் குருவாக ஆகப்பெறின், பணியாரு மிருப்பரோ! விரைவினிற் சென்று வேண்டியதைப் பெற்று வா" என்பதாகும். "நாதா! இது தங்கள் நன்மைக்குமன்று; என்னன்மைக்குமன்று; நம் மக்கள் நன்மைக்குமன்று. முன்னிருந்த நிலையை யுன்னிப் பாருங்கள். பல்லை யிளித்துக் கையைக் கட்டி வாயைப் பொத்தி நின்ற நாம் இப்பொழுது அடைந்துள்ள நிலைமையை எண்ணினல் வியப்பாகவே யிருக்கிறது. கொண்டதைக் காத்துச் சிறந்ததைச் செய்து போகும் வழிக்கு நல்வழி தேடுவதை விட்டு யாவரும் நம்மடிமையாக வேண்டும் என்று நினைப்பது நன்றன்று, நன்றன்று. நன்றல்லதை நினைத்தலே பிழை. விட்டுவிடுங்கள்" எனப் பெண்ணரசு வேண்டி நின்றாள்.

எனினும், கணவனலுந்தப்பட்டுச் சென்று கோவிலை நண்

---

* திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

ணிப் "போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன், போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை, தேற்று வாய் வந்துதானே தெளிந்திடா எளியனேனை, ஆற்றுவாய் குருவதாக அடியனேன் கணவன்றன்னை" என்று கதறியபெண் ணரசு அங்ஙனமே என்ற குரலைக் கேட்டு மீண்டனள்.

பின்னொருநாள், பவாநந்தம் உறங்கிக்கொண்டிருந்த தன் மனைவியைத் தட்டி யெழுப்பிக் கூறினன்:—"எனக்குப் பின் றூங்கி முன்னெழாது நீ உன் மனம் போனபடி உறங்குவ தழகல்ல. இரவெல்லாம் நான் கண்ணிமைக்கவில்லை. என்ன முயன்றும் பயனில்லை. யான் பெற்றுள்ள இத்துன்பத்தைப் போக்காது நீ யுறக்கங் கொள்ளலாகாது. உலகமெல்லாம் நான் ஒரு தனி கோலோச்சி, உள்ள மன்னர் முடியெல்லாம் என்னடி பட்டுத் தேடிய நாள் எந்நாளோ அந்நாள்தான் எனக்கு உறக்கம் வரும். மன்னர் பதவி பெரிதல்ல; சமயகுரு பதவி பெரிதல்ல; உலக மன்னர் மன்னனுவதே என் விழைவு. கோவில் நுழைந்து என் விழைவைக் கூறிப் பதவியைப் பெற்றுவா."

கேட்ட பெண்ணரசு நகைத்துத் திகைத்து, "என்ன! சனியன் பிடித்ததோ? ஒன்றுக்குமேல் ஒன்றை வேண்டித் தாவி எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடுவதென்னை? கடவுளருளால் ஏதோ வேண்டுகோட்படி சிலவற்றை யடைந்த மாத்திரத்தால் எதையும் அவரை வேண்டுவது அழகல்ல. வேண்டினும் பெறுவது திண்ணமோ? உள்ளது போது மென்பதே என்னெண்ணம். மன்னர் மன்னனுவதால் என்ன பயன்? இன்பம் எவ்வழியிற் பெருகப் போகிறது? சிறிது பெருகு மென்று வைத்துக் கொண்டாலும் துன்பப் பெருக்குக்கோ அளவில்லை. நாம் இனி மேலே வேண்டுவது நமது கேட்டுக்கே யாம்" என்று கூறினள். "நான் விழைந்ததை யழைத்து வாராது என்ன நீ பிதற்றுகிறுய்? நாயகன் ஒன்று கூற நாயகி பிறிது மொழிதல் நன்றன்றே. போகாது என் முன்னின்றால் உன்னுடல் உனதன்று" என்று கூறி நையப் புடைத்தனுப் பினன் பவானந்தம்.

கோயிலுக்குச் சென்ற பெண்ணரசு இம்முறை இவ் வேண்டுகோளைக் கேட்கும் எண்ணத்தோடு சென்றிலளாயினும் அங்குச் சென்றதும்,

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் தன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே''

என்றுபாடி, "நீயே கதி. நீயே என் கணவன் வேண்டுவதைத் தரல் வேண்டும்" என்று சொல்லுமளவில், "முன்னிலையே தான் போ" என்ற வாக்கு எழுந்தது. மன்னர் மன்னன் பதவி பெறாது மன்னன் பதவியோடே தன்னுயக னிருப்பா னென்ற நினைத்து அரண்மனை நோக்கிச் சென்ற பெண்ணரசு கண்ட தென்ன ! முன்னாட் குடிசியில் பன்னாட் கழித்ததுபோல் "ஆயே ஆயே ஈயாய் கூழெனக் கதறி நின்ற மக்களையும், "பேயோ பிறிதில்லை நானே பேயன்" என்று கூறிக் கண்ணீருங் கம்பலையுமாய் நின்ற பவானந்தத்தையுமே கண்டாள். கண்டவள் மனங் கருதிய தென்னவோ ; விண்டதைச் சொல்ல அறிபவனுளனோ?

"ஒருகால், ஆசை யெனும் பேய் பிடித்தாட்டிற்றே, 'பேராசை பெரு நட்டம்' என்ற முது மொழிகளை நினைவு கூறிக் கொண்டிருப்பள் கொல்லோ ? அன்றி,

"உத்தி வாளரா முடித்தபால் வண்ணனே உனது
பத்தி வேண்டுவ தன்றியே நரகிடைப் படினும்
முத்தி வேண்டிலேன் துறக்கமும் வேண்டிலேன் முனிவர்
சித்தி வேண்டிலேன் வேண்டிலேன் திசாதிபர் சிறப்பே''

என்று சொல்லத் தெரியாமற் போனதைக் குறித்து வருந்தியிருப்பள் கொல்லோ? பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் நினை மறவாமை வேண்டும்" என்று வேண்டாது போனதற்கு வருந்தியிருப்பள் கொல்லோ ?

"வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண் [டாய்
வேண்டி நீயா தருள்செய்தா யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன் [றே."

என்ற மணிவாசகப் பெருமானின் மணிவாசகத்தை மனதிற் பதித்துக்கொண்டிருப்பள் கொல்லோ?

"ஒன்றும் போதா நாயேனை யுய்யக் கொண்ட நின்கருணை
இன்றே யின்றிப் போய்த்தோ தா னேழை பங்கா எங்கோவே
குன்றே யனைய குற்றங்கள் குணமா மென்றே நீகொண்டால்
என்றான் கெட்டது இரங்கிடா யெண்டோள்முக்க ணெம்மானே"

என்று அப் பெம்மானை நோக்கிக் கூறியிருப்பள் கொல்லோ? அன்றி,

"எழுதியவா றேகா ணிரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை"

என்ற மூதுரையை நினைத்திருப்பாள் கொல்லோ? இனி,

"வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்மண்ணும் [விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை யிறை [தாள்
பூண்டேன்புறம் போகேனினிப் புறம்போகலொட் டேனே"

என்றாங்குச் செய்ய நினைவுண்டாயிருக்குங் கொல்லோ? அன்றி

"உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்று சிவானந்த முதிர்வால் துறவரசு புலம்பியாங்குப் புலம்பி யிருப்பள் கொல்லோ? யாதெனக் கூறுவது?

நூற்கல்வி

[காழி. சிவ. கண்ணுசாமி அவர்கள், B. A.,]

பள்ளியிற் பயில்வதே கல்வி யென்று இக்காலே கொள்ளப் படுகிறது. ஆனல் உண்மையாகவோ அறியாமையகற்றி யறிவை வளர்க்கும் எவ்வொன்றும் கல்வியே யாகும். பன்றிகட்கும் ஆடுகட்கும் கல்வி பயிற்றுவது என்பது பிரெஞ்சுக்காரர் தம் வழக்காற்றில் காணப்படுவதொன்ருகும். எனவே கல்வியெனப் படுவது பள்ளியிற் கற்பிக்கப்படுவதினும் நூல்களிற் காணப்படு வதினுமே அடங்குவதாகாது. என்னே? பயன்றருங் கல்வியாக நூல்களிலிருந்து பெறற்பாலது சாலச் சிறியதாகலின்.

ஏதோ குறிப்பிட்ட சிலப் பல கோடுகளே யிழுக்கவும் புள்ளிகளே வைக்கவுந் தெரியாததனலேயோ, அன்றிப் பிறர் அவ்வாறு இழுத்தோ வைத்தோ எழுதிய ஒன்று எதைக் குறிக் கின்றது என்று அறிய முடியாததனலேயோ ஒருவனே அறி விலாதவன் என்று கூறவொண்ணுது, ஏரைப் பிடித்துச் சீரைத் தேடிக் கண் கூடாகப் பெற்ற வொருவன் ஏ, ர், என்னும் இரண்டு எழுத்துக்களேச் சேர்த்தெழுதிய ஒரு சொல் எதைக் குறிக்கின்றது என்று படித்து அறிந்துகொள்ள முடியாதவனு யிருத்தல் கூடும். மகனெனப் பிறந்த ஒவ்வொருவனும் முதற் கண் அறியற்பாலது அவன்றன் வாழ்க்கைத் தொழில் யாதென் பதேயாம். அரசன் முதல் ஆண்டி ஈருகவுள்ள ஒவ்வொருவ னும் இதை முதலிற் குறிக்கொண்டு அறிந்து வரையறுத்துக் கோடல் வேண்டும். புதியதோர் வீட்டைக் கட்டியாளுெருவன் அவ்விடு இடிந்து விழக் காணுங்கால், வீட்டைக் கட்டிய கொத்தன் தேர்ந்ததோர் வான நூலறிஞன் என்று பிறன் சொல் லக் கேட்டு நெஞ்சடங்குவதும் கருதற்பாலதோ? அது ஒரு நாடு எய்தும் இன்னல்களெல்லாம் அந்நாட்டின் சிரிய சொல்லாளர் களும் வீரப் பணியாளர்களும் இயற்றிய நாட்டுத் தொண்டின் பயன்தான் என்று கருதி யமைதியடைய வேண்டுமென்பதை யன்ருே ஒக்கும்? ஈண்டு நூலறிவு பயன்பட்டவாற்றைக் காண் கிலம்.

இதனுனே நூற்கல்வி முற்றும் இகழ்ந்து ஒதுக்கப்படுவ தொன்றென்று கருதல் வேண்டாம். அறிவை வளர்க்க வல்லது நூற்கல்வி யொன்றேதான் என்று கருதல் தவறு என்பதே ஈண்டு எடுத்துக் கூறப்பட்டதாகும்.

வாழ்க்கை நிலையின் பல படிகளிலுமுள்ள ஒவ்வொருவரும் பெரிதும் முயன்று நூற்களைக் கற்றல் நேரிதே. கைத் தொழிற் கும் வாணிகத்திற்கும் நூற்கல்வி இன்றியமையாது வேண்டப்படு வதாகும். நடுத்தரமான வாழ்க்கை நிலையைப் பெற்றவர்களோ கல்வி யறிவற்றிருப்ப தென்பது பெரும் வெட்கக் கேடாகும். இவண் யாவருங் குறிக்கொண்டு காத்து விலக்க வேண்டிய பகுதி யொன்றுண்டு. அஃதென்னெனின் தன்னுற்றலும் கல்வியறி வின் பெருக்கமும் மிகுந்து விட்டமையான் வயிற்றுப் பிழைப்புக் கான வாழ்க்கைத் தொழிலைப் பின்னும் மேற்கொண்டு நடத்தி வருதல் இகழ்ச்சிக்குரியதாகும் என்று கருதி அதை யொதுக்கி விடாமையே யாகும்.

இஃதொன்றைத் தவிர்ந்து மற்றெவ் வழியிலும் நூற்கல்வி பெரிதும் போற்றத் தக்கதும் ஒவ்வொரு தொழிலுக்கும் பெரி தும் இன்றியமையாது வேண்டப்படுவதுமாகும். பிழையறப் படித்தலும், தெளிவாகவும் மணி மணியாகவும் எழுதலும், கணக் குப் போடுதலும் எத்தொழிற்கும் எஞ்ஞான்றும் யாவர்க்கும் உரிய கல்விப் பொருள்களாம். அவற்றிற் படித்தலும் எழுத லும் சிறு மகாரும் எளிதிற் கற்கக் கூடியன. கணக்கோ அத் துணை யெளிதிற் கைவரப்பாலதொன்றன்று; ஆயினும் அது கருதி ஒதுக்கற்பாலது மன்று. கற்கும் மொழியின் இலக் கணத்தை யறிதற்குக் கூடக் கணக்கியலறிவு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். முறையுறக் கற்பின் கணக்கு விரைவிற் கற்றுக் கொள்ளக் கூடிய தொன்றே. அதைக் கற்கப் பேரறிவு வேண்டியதில்லை. கற்றதனுல் அது அறிவைக் கலக்குவதென் பதுமில்லை. நாளும் பயன்படுவது; எனவே யாரும் பரிந்து கற் கற்பாலது அது.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

நக்கன் (கஉ)

பண்டைத் தமிழர்களால் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்ட தமிழ்ச் சொற்களில் நக்கன் என்ற சொல் ஒன்று. அச் சொல் லில் அடங்கியுள்ள கருத்துக்களை இக் கட்டுரையில் கருதுவாம்.

2. நக்கன் என்ற சொல் நகு என்னும் பகுதி (root) யாலும் அன் என்னும் உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதி யாலும் ஆக்கப்பட்டது. நகு அன் என்ற உருபோடு ஒன்று சேரும்பொழுது நகு இரட்டித்து நக்கு என்றாய் அன் என்பதி லுள்ள அகர உயிர் முன் உகரம் கெட்டு நக்கன் என வந்தது. நகு+அன் நக்கன் என இரட்டித்தது; மிகு+அது மிக்கது தொகு+ அது தொக்கது என்பது போல்வன.

3. நகு என்னும் அடிச்சொல் முதற் பொருளில் 'விளங்கு' அல்லது ஒளி செய் (shine) என்று பொருள்படும். திருநாவுக்கரசு சுவாமிகளுடைய பழனம் தேவாரப்பதிகம் க-வது பாட்டில் முன்மாலை நகு திங்கள் முகிழ் விளங்கு முடிச் சென்னி என்பதிலும், திருநாவுக்கரசு சுவாமிகளுடைய சிவ னெனு மோசை என்ற தேவாரப்பதிகம் எ-வது பாட்டில் நகு வெண்டலையர் என்பதிலும் நகு என்ற சொல் விளங்கு (Shine) என்ற பொருளில் வந்திருத்தல் காண்க. 'நகு' ம் 'ஐம்' சேர்ந்து வந்த நகை என்ற சொல்லானது முல்லைப்பாட்டு எஅ-வது வரி யில் "நகைதாழ் கண்ணி" என்பதிலும் திருமுருகாற்றுப்படை, அசு-வது வரியில் "நகை தாழ்பு துயல்வரூஉம் வகையாமை பொலங்குழை" என்பதிலும், சிலப்பதிகாரம் புகார் காண்டம் கானல்வரி கூஅ-வது வரியில் "வாரித் தரளம நகை செய்து" என் பதிலும் திருநாவுக்கரசு சுவாமிகளுடைய சிவனெனுமோசை என்ற தேவாரப்பதிகம் எ-வது பாட்டு "நகைவளர் கொன்றை" என்பதிலும் விளக்கம் அல்லது ஒளிஎன்ற பொருளில் வந்திருத்

தல் காண்க. ஒளி அல்லது விளக்கம் என்ற பொருளில் நக்கன் என்பது ஒளி செய்வோன் என்று பொருள்படும். ஒளி என்ற கருத்தானது மக்களுக்கு ஞாயிறு திங்கள் தீ என்ற பொருள்களால் பெறப்படுவது. முதன்மையாய் ஞாயிறினாலேயே ஒளி என்ற கருத்துப் பெறப்படுவது, ஞாயிறு தனது ஒளியில் எவ்வாறு உலகிலுள்ள புற இருளை நீக்குகின்றானோ அவ்வாறு கடவுள் தனது அருள் ஒளியாகிய அறிவினால் உயிர்களிடத்துள்ள அக இருளை நீக்குகின்றனர். ஆகவே நக்கன் என்ற சொல் உயிர்களுக்கு அருளாகிய அறிவு ஒளியால் மலமாகிய இருளை நீக்குகின்றவன் என்று பொருள்படும். ஒளி என்ற சொல்லே கடவுளைக் குறிக்கும் சொற்களில் ஒன்று. அதைப்பற்றி தனியே ஒரு கட்டுரையில் பின்னாலே விளக்குதல் செய்யப்படும்.

இனி நகு என்னும் அடிச்சொல் மகிழ் என்ற பொருளிலும் வருகின்றது. நகை என்பது மகிழ்ச்சி என்று பொருள்படும் "இருளின்றேற் றுன்பேன்" என்று உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் திரு அருட்பயனின் கூறியவாறு உயிர்களுக்குத் துன்பமானது மலத்தினாலுண்டாகும் இருள் அதாவது அறியாமையாலுண்டாகின்றது. அத்துன்பம் அருளாலுண்டாகும் அறிவினால் நீங்குகின்றது. துன்பம் நீங்கும்பொழுது உலக இன்பம் உண்டாகி மக்கள் அவ்வின்பத்தினால் மகிழ்ச்சி அடைகின்றார்கள். ஆதலினால் நகை என்ற சொல்லைப் பண்டைத் தமிழர்கள் மகிழ்ச்சி என்ற பொருளில் வழங்கி வந்தார்கள். ஒன்பது சுவை உணர்வுகளில் (நவரசம்) நகையை ஒரு சுவை உணர்வாக தமிழ் முன்னோர்கள் எடுத்திருக்கிறார்கள் (தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் ௨௫௧-வது சூத்திரம்) இப்படி உள்ளத்தினுள்ளே உண்டாகின்ற மகிழ்ச்சியானது மெய்யிலே சிரிப்பாக வெளிப்படுகின்றது. அதனால் நகை என்னும் சொல் சிரிப்பு என்னும் பொருளிலும் வருகின்றது. சிரிப்பு சிலவேளை இகழ்ச்சியைக் குறிக்கவும் செய்யப்படுகின்றதாதலின் நகை இகழ்ச்சி என்ற பொருளிலும் வருகின்றது. நகையானது மெல் நகையாகிய புன் சிரிப்பாயிருக்கும்பொழுது உள் மகிழ்ச்சியை

யும் பெருஞ்சிரிப்பாய் ஓசையுடன் வெளிப்படும்பொழுது இகழ்ச்சியையுங் குறிக்கும் என்று நாம் பொதுவாகக் கூறலாம். அருள் ஒளி விளங்கும் அன்புடைப்பெரியார் புன்சிரிப்பே செய்வார்கள். புன்சிரிப்பாயாவது, பெருஞ் சிரிப்பாயாவது நகை உண்டாகும்பொழுது ஒருவருடைய பல் வெளியே தெரிதலால் நகை என்னும் சொல் பல் என்ற பொருளினும் வழங்கப்படுகின்றது. பண்டைத் தமிழ் நூல்களில் மேலே கூறிய பொருள்களில் நகு நகை என்ற சொற்கள் வழங்கப்படுதலைப் பார்க்க நாம் காணலாம். நகை என்ற சொல் சிறுபாணாற்றுப்படை உஉ௰-வது வரியில் "இன்னகைபாய் மொடு" என்பதிலும் சிலப்பதிகாரம் புகார் காண்டம் கனாத்திற முரைத்த காதை எஉ-வது வரி "நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டி" என்பதிலும் மகிழ்ச்சி என்ற பொருளிலும் திருநாவுக்கரசு சுவாமிகள் தனித் திரு நேரிசைப் பதிகம் கூ-வது பாட்டு "கலந்துதானோக்கி நக்கு வெள்ளரோ மென்று நின்றார்" என்பதில் புன்சிரிப்பு என்ற பொருளினும் வந்திருத்தல் காண்க.

5. இனி நக்கன் என்ற சொல் உடையில்லாதவன் (நிருவாணி) என்ற பொருளினும் வழங்கப்படுகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகள் திருவெண்டுறைப் பதிகம் ௰-வது பாட்டு "நக்குருவாய் வருந்து வாரடை நயந்துடையாம்" என்பதில் "நக்குருவாயவர்" என்று சமணரைக் குறித்திருத்தல் காண்க. இந்தப் பொருளில் நக்கன் என்றசொல் சிவபெருமானைக் குறிக்கின்றது. திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பழனம் தேவாரப் பதிகம் க-வது பாட்டில் "நாதா வெனவும் நக்கா எனவும் நம்பா என நின்று" என்பதிலும் திருநாகைக் காரோணப் பதிகம் எ-வது பாட்டு "எழில் நக்கரெம்மாற்கிடம்" என்பதிலும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சிவபுரம் திருத்தாண்டகம் உ-வது பாட்டில் "நக்கன்காண்" என்பதிலும், நக்கன் என்ற சொல்லால் சிவபெருமானைக் குறித்திருத்தல் காண்க. இந்தப் பொருளில் சமணர்கள் நக்கன் என்ற சொல்லைத் தங்கள் கடவுளாகிய அருகனுக்கும் உடையில்லாமல் (நிருவாணியாய்) இருக்கின்ற சமணத் துறவியையும் குறிக்க வழங்கி வந்தார்கள். சமணர்

கள் வட மொழியை நன்கு பயின்றவர்களாதலின் நக்கன் என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக வட மொழியில் 'திகம்பான்' (திசையை ஆடையாக உடையவன்) என்ற சொல்லேயும் தங்கள் கடவுளாகிய அருகனுக்கு வழங்கி வந்தார்கள். திகம்பரன் என்ற வடமொழிச் சொல் சிவபெருமானைக் குறிக்க தமிழ் மொழியில் வழங்கப்பட்டு வருகின்றது.

6. இனி ஒளி விளங்குகிறவன் அல்லது ஒளியன் என்று பொருள் படுகின்ற நக்கன் என்ற சொல் உடையில்லாதவன் (நிருவாணி) என்ற பொருளில் வருகின்ற காரணம் கருதுவாம். எத்தகைய வறுமையுடைய மக்களுக்கும் இன்றி அமையாத உடையை ஒருவனில்லாதவனுயிருந்தால் அவன் வெளித்தோற்றத்தில் (வேடத்தில்) யாதொருபற்றும் இல்லாதவன் என்பது பெறப்படுகின்றது. உலகப் பொருள்களில் அவாவும், அது பற்றி அவைகளில் பற்றும் இல்லாதவன் என்ற பொருளே நக்கன் என்ற சொல் உருவகமாய் (metaphorically) குறிக்கின்றது. உலகப் பொருள்களில் பற்று இல்லாதவன் என்பதனேடு இனம்பற்றி உயிர்ப் பொருள்களிலும் பற்றில்லாதவன் என்பதுவும் நக்கன் என்னும் சொல் குறிக்கின்றது. ஆகவே நக்கன் என்பது பொருட் பற்று உயிர்ப் பற்றுக்களாகிய புறப் பற்று அகப்பற்றுக்கள் ஒன்றும் இல்லாதவன் என்ற பொருளில் வருகின்றது. இந்த வழக்குப் பற்றி இக்காலத்திலுள்ள சில இந்து சமயத் துறவிகளும் உடை யில்லாதவர்களா யிருக்கிருர்கள். கடவுள் உலகப் பொருளிலாவது உயிர்ப் பொருளிலாவது யாதொரு பற்றுமல்லாதவனுய் அவைகளில் விருப்பும் வெறுப்பும் இல்லாதவன் (வேண்டுதல் வேண்டாமையிலான்) ஆதலின் பண்டைத் தமிழ் மக்கள் தாங்கள் வணங்கி வந்த சிவ பெருமானுக்கு நக்கன் என்ற பெயரை இட்டு வழங்கி வந்தனர். "பற்றலாவதோர்நிலே, யிலாப்பரம் பொருள்" என்று மாணிக்க வாசகசுவாமிகள் திருவாசகத்தில் குறித்திருத்தல் காண்க. அவ்வாறு அவன் விருப்பு வெறுப்புகளில்லாமைக்குக் காரணம் நிறைவு அறிவு (வியாபக அறிவு) உடையனுகவும் நிறைந்தபேரின்பனுகவும் விளங்குதலேயாகும். உயிர்களேப் போல வேருெரு

பொருளினுலும் விளங்காது தானாகவே விளங்குகிற ஒளியினால் விளங்குகிற தன்னொளியனா (சுயஞ்சோதியன்) யிருப்பதினாலே தான் அவன் எப்பொருள்களினும் பற்றுவையாதவனாயிருக்கின்றான். உயிர்கள் கடவுள் அறிவிக்க அறிகின்றவைகளாயும், கடவுளைச் சார்ந்து உலக இன்பமும் பேரின்பமும் அடைகிற பிற சார்பு உடையவைகளாய் (பரதந்திரர்களாய்) இருக்கின்றன. ஆதலின் ஒளியன் என்ற பொருளில் வந்த நக்கன் என்ற சொல் யாதொரு பற்றும் இல்லாத நிருவாணி என்ற பொருளில் பண்டைத் தமிழர்களால் வழங்கப்பட்டு வந்தது.

ஆய்ச்சியர் குரவை

[திரு. அ. நடராஜ பிள்ளை அவர்கள்.]

நன்னானிலத்துள் முல்லை நிலமானது காடுங் காடு சார்ந்த வூர்களு மென்பதும், அதன் கண் வாழு மக்கள் ஆயர் ஆய்ச்சியரெனப் பெயர் பெறுவரென்பதுஞ் செந்தமிழன்பர்கள் தெரிந்தனவாம். இன்னும், அம்முல்லை மக்களுக்குப் பொதுவர் பொதுவியர்; இடையர், இடைச்சியர் எனவும் பெயர்களுண்டு. இவர்கள் தொழில் ஆவின முதலிய மூவினங்களைப் பாதுகாத்தலும், அவற்றின் பயன் கொண்டு வாழ்தலுமாம். எனவே, 'ஆய்ச்சியர்,' என்பது முல்லை நிலப் பெண்களைக் குறிக்கும் பெயராம். இப்பெயர் இக்காலத்து, காடு சார்ந்த வூர்களையுடைய செட்டிநாட்டில் வாழும் நாட்டுக் கோட்டைச் செட்டிப் பெண்களுக்கு 'ஆச்சி,' என்று வழங்குவதும் ஆராயத் தக்கதாம். இனி 'ஆய்ச்சியர்,' எனுமொழி, 'ஆ,' என்னு முதனிலை கொண்டெழுந்த, 'ஆய்,' என்ற பெயரின் வளர்ச்சியாகல் வேண்டும். 'ஆ', என்னு முதனிலை யெல்லா முதனிலைகட்கு முன்னுண்டாயதென்பது, எழுத்துக்களின் பிறப்பு முறையில் அது முன்னிற்றலானும், விலங்குகளினொலிக் குறிப்பின் போக்கானும் செவ்வனே விளங்கும். பசு முதலிய விலங்குகட்கு, 'ஆ,' அல்லது, 'மா,' எனப் பெயர் வந்தது மேற்கூறியதனை வலியுறுத்

தும். ஆகவே, மக்கண், முதன் முதலில், இயல்பில்வந்த முதனிலையாகிய, 'ஆ,' என்பதனடியாக வந்த, 'ஆய்,' என்பதனையே, 'தாய்,' என்ற பொருளில் வழங்கலானார்கள் என்பது வெளிப்படை. பின்னர், அது அவ்வாயினை யொத்துப் பாற்பயனை யுலகிற்குக் கொடுத்து வாழும் முல்லை நில மக்களுக்கு, 'ஆயர், ஆய்ச்சியர்,' என்று வழங்கலாயிற்றெனக் கொள்ளக் கிடக்கின்றது.

'குரவை,' என்பது, 'குர்,' என்ற வொலிக் குறிப்பினைப் பொருளாய்க் கொண்ட முதனிலையடியாய்ப் பிறந்த பெயர். இது முதலிற் பெண்கள் தம் நாவினையும் இதழ்களையும் குவித் தொலிக்குஞ் செயலொன்றிற்குப் பெயரா யிருந்தது. அப்பெயர் இப்பொழுதும் தென்னாட்டில் 'குலவை,' என வழங்கி வருகின்றது. பின்பு, குரல்களாகிய பாட்டினைப் பாடிப் பலர் கூடியாடுங் கூத்தினுக்குப் பெயராய் மாறியது. ஆகலான், ஆய்ச்சியர் குரவை,' என்பது முல்லை நிறப் பெண்கள் பலர், கூடிப் பாட்டுக்கள் பாடியாடுங் கூத்தாம். இக் கூத்து, பெரும்பாலும் ஆயர்கள், கொல்லேறு தழுவிக்கொண்ட வெற்றியைத் தம் பெண்டிர்களோடு கொண்டாடுங் கொண்டாட்டமாக முற்காலத்தில் வட நாட்டிலும், தமிழ் நாட்டிலுங் கொண்டாடப் பட்டு வந்தது. கொல்லேறு தழுவலாவது, ஆயர்கள் தம் பசு மந்தைகளில், தமக்குப் பெண் குழந்தைகள் பிறந்த காலத்தில் தோன்றிய சேங்கன்றுகளைக் கொழுக்கவளர்த்து தம் பெண் மக்கள் மணப் பருவ முற்றவுடன், நாடெங்கும் பறைசாற்றி, அம் மழ விளங்கன்றுகளைத் தழுவுவார், தம் பெண் மக்களின் மணமக்களாவரென விளம்ப, குறித்த நாளில், இளங்காளையர் பலர், பரண்களில் வீற்றிருக்கும் பெண் மக்கள் காணும்படி, தொழுவில் நிறுத்தியுள்ள மழவிடைகளைத் தழுவியடக்க முயல்வதாம். இக் கொல்லேறு தழுவுதலை, அக்காலத்தில் வடநாட்டில் கண்ணபிரான் ஏழு மழ விடைகளைத் தழுவிப் பின்னைப் பிராட்டி முதலிய வேழு கன்னியரை மணந்த செய்தியும், கலித்தொகை முதலிய பண்டைத் தமிழ் நூல்களும் நன்கு விளக்கும். இக்காலத்திலும் தென்னாட்டில் மதுரையைச் சார்ந்த பல விடங்களில், இக்

கொல்லேறு தழுவுதலை, 'மஞ்சிகட்டு' என வழங்கி யாண்டுக டோறும் தை மாசி பங்குனித் திங்கள்களிற் கொண்டாடுவதும், கொல்லேறு தழுவி வெற்றி கொண்டார்க்கு, அவர் தம் மனைவியர் வீட்டாரின் போற்றுதல் புகழ்தலேற்படுதலுங் காணப் படுகின்றன.


மேலும், இவ்வாய்ச்சியர் குரவை, கொல் லேறு தழுவிய பின்னன்றிச் சிறு பான்மையாக, ஆய்ச்சியர் தம் கன்று காலிகட்கு நேர்ந்த நோய் நொடிகள் விலகும் பொருட்டுக் கொண்டாடுவது முண்டு. அங்ஙனங் கொண்டாடிய கொண்டாட்டமொன்று, ஐம் பெருங்காப்பியங்களுளொன்றாகிய சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் தென் படுகின்றது. அதனையிங்கு முடிந்த வளவில், ஆய்வதே இக்கட்டுரையின் முதற் கருத்தாம்.

கவுந்தியடிகளால் மதுரையில் மாதரிபால் அடைக்கலம் புகுந்த கண்ணகியுங் கோவலனும் மாதரி வீட்டில் அன்றிரவு தங்கி மறுநாட் காலை யுணவாக்கி யுண்டு மகிழ்ந்தனர். பிற்பகலிற் கோவலன் சிலம்பினை விற்கச் சென்று கொல்லன் பொய்க்கரியாற் கொலை யுண்டனன். கண்ணகி யதனை யறியாதவளாய்க் காதலன் வருகையை யெதிர்பார்த்துக் கலங்கியவளாய் மாதரி வீட்டில் அன்றிரவைக் கழித்தாள். புலரிக் காலத்தே புகுந்த கோயின் முரசொலி கேட்ட மாதரி துயிலொழிந் தெழுந்து, அரண்மனைக்கு நெய்யளக்க வேண்டிய முறையை நினைந்து தனது மகளாகிய ஐயை யோடு தயிர் கடைய வேண்டித் தயிர்த் தாழி யிருக்குமிடஞ் சார்ந்தாள். அங்கு, முதனாள், பிரையிட்ட பால் தோயாது அப்படியே இருந்தது. பக்கத்திலுள்ள தொழுவத்திற் கட்டப்பட்டுள்ள. திரண்ட திமிலை யுடைய காளைகள் கண்ணிரைச் சோர விட்டுக் கொண்டிருந்தன. அவற்றைக் கண்ட மாதரி பெரிதுந் திடுக்கிட்டாள். திடுக்கிட்டும் நெய்ம்முறை நினைவி லெழுந்தமையால், அவள் முன்னாட் கடைந்தெடுத்த வெண்ணெயை யெடுத்து அடுப்பில் வைத்து உருக வைத்தாள். அதுவும் உருகவில்லை. அதனால் அவள் மிகவும் நெஞ்சங் கலங்கி வெளியே வர, முன்றிலில் நின்ற

ஆட்டு மறிகள் துள்ளி யாடாமற் குழைந்து கிடந்தன. கொட்டிலிலுள்ள பசுக்கள் மெய் நடுக்கங் கொண்டு அரற்றின. அவற்றின் கழுத்திற் கட்டப்பட்ட பெரிய மணிகள் பலவு மறுந்து வீழ்ந்தன.

இவற்றை யெல்லாங் கண்ட மாதரியும், ஐயையும் தங்கட்கு வரக் கடவதோர் துன்ப முண்டென மயங்கினர். பின்பு, மாதரி தெளிந்து தன் மகளை நோக்கி, "குழந்தாய்! மயங்காதே! அம் மதுரையைச் சார்ந்த ஆயர் பாடியில், ஒரு மன்றத்திற் கண்ணபிரான் தன் முன்னவனாகிய பலராமனொடு விளையாடிய நாடகங்கள் பலவுள. அவற்றுள், வேனெடுங்கண் பிஞ்ஞையோடாடிய குரவைக் கூத்தினை, இக்கறவை கன்றுகளின் பிணி நீங்கும்படி யாட்டுவிப்போம்," என்றாள் ஐயை அதனை யேற்றுக் கொண்டு பக்க மனைகளிலுள்ள விடைக்குலக் கன்னிய ரெழுவரினை யிட்டு வந்தாள். மாதரி அவ்வெழுவரையும், "இக்காரி யெருத்தினது சீற்றத்தைப் பொருட் படுத்தாது சென்று பாய்ந்து தழுவுவானை யிவ்வேரி மலர்க்கோதையாள் விரும்பும்," எனவும், "இந் நெற்றிச் சுட்டியைக் கொண்ட வெற்றி யேற்றின் வலி தொலைத்தானுக் குரியன இப் பொற்றொடி மாதராள் தோள்கள்," எனவும், இக் கொழுத்த விளங்காளையைத் தழுவி யேறிச் செலுத்தினாற்கே அப்பொற் கொடி மணமாலை சூட்டுவள்," எனவும், "இம் மரை யெருத்தின் மிடுக்கினைக் கெடுத்தவனையே அப் பூங்கொடி பொருந்துவள்," எனவும், "இக் கொன்றையம் பூங்குழலாள் அவ்வென்றி மழவிடை யூர்ந்தார்க் குரியள்," எனவும், "இப் பூவைப் புது மலராள் அந்தப் பால் வெள்ளை யேற்றைப் படிவித்தாற்கே பாங்கியாவள்," எனவும், "இம் மயிலை யேற்றை மடக்கியதன் வலி தொலைத்தானையே யிப் பெண் கொடி பெரிதும் விரும்பும்," எனவும் புகழ்ந்து அவர்களோடு தன் வீட்டு முற்றத்திற்கு வந்து சேர்ந்தாள். தூக்கமின்றித் துயரங் கொண்டிருந்த கண்ணகியும் அவ்வரவங் கேட்டு அங்கு வந்து சேர்ந்தாள். மாதரி அவளைத் தழுவிப் போற்றி யங்கு நிகழ்ந்த கெடு குறிகளை யெடுத்துக் கூறியதற்குக் கழுவாயாகச் செய்யும் குரவைக் கூத்தினையுங் குறிப்பிட்டாள். கண்

ணகியும் அவர்கள் செயலை யொருபாலமர்ந்து காணத் தொடங்கினள். மாதரி முற்றத்தில், 'வட்ட பாலை,' என்னும் குரவையாடுகளனைப் பின் வருமாறு வகுத்து முடித்தாள் :—



வட்டப்பாலை மண்டலமாவது, சாணுக்குச் சாண (இரு சாண்குறுக்களவா)க வொருவட்டங் கிறி, அவ்வட்டத்தின் பெருந்திசைகள் நான்கன்மீதும் இவ்விரண்டு கோடுகளோட்டி, கோணத்திசைகள் நான்கின்மேலும் ஒவ்வொரு கோட்டினைப் போக்கியக் கோடுகளின் மேற்பாகங்களைச் சேர்த்து மண்டலஞ் செய்து பன்னிரண்டு வீடுகள் அமைப்பதாம். அப்பன்னிரண்டனுள், பன்னிரிராசிகளிலும் மேடமுதற் கன்னி வரையுள்ள ஆறு இராசிகளையும் வலது புறமிருந்து இடது புறம் வரையுள்ள ஆறு வீடுகளிலும், துலா முதல் மீனம் வரையுள்ள ஆறு இராசிகளையும் இடது புறமிருந்து வலது புறம் வரையுள்ள ஆறு வீடுகளிலும் அமைத்தல் வேண்டும். இங்ஙனமமைந்த பன்னிரண்டு இராசிகளுள், இடபம், கர்கடகம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம், மீனம் என்னு மேழு இராசிகள் மட்டும் யாழ் நரம்புகள் ஏழுடன் இயங்குவனவாம். அங்ஙனமவைகள் இயங்குமிடத்து, குரல் நரம்புடன் துலாமும், துத்த நரம்புடன் தனுசும், கைக்கிளை நரம்புடன் கும்பமும், உழை நரம்புடன் மீனமும், இளி நரம்புடன் இடபமும், விளரி நரம்புடன் கர்கடகமும், தார நரம்புடன் சிங்கமுஞ் சாரும். (தொடரும்)

அம்பலவாணர் திருக்கூத்து*

"எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயல்உண்மை அறிவுஇன்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாம் சிவமொன்றே என்றறிந்தேன் உனக்கும்
விளம்புகின்றேன் மடவாய்நீ கிளம்புகின்றாய் மீட்டும்
இப்பொருள் அப்பொரு ளென்றே இசைப்ப தென்னே பொதுவில்
இறைவர்செயும் அதிசய இன்பநடந் தனைநீ
மைப்பறவே காணுதியே அத்தருணத் தெல்லாம்
பட்டபகற் பகல்போல வெட்ட வெளி யாமே"

என்று இராமலிங்க அடிகள் அருளிச் செய்த திருவருட் பாவைக் கருவியாகக் கொண்டு அம்பலவாணர் உண்மை விளக்கப்பட்டது. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் அறிவு இல்லாதன அறிவு உள்ளன என இரு வகையில் அடங்கும். அறிவில்லாதன மண் முதலாக ஐவகைப்படும். இற்றைய மேல் நாட்டு ஆராய்ச்சியில் அறிவில்லாத பொருள்கள் எழுபத்தைந் துக்கு மேல் எழுபத் தொன்பது வகையாக வகுத்துக் காட்டப் படுமாயினும், பருப் பொருளாகப் பார்க்குங்கால் அவை ஐந்தி லேயே அடங்குகின்றன. டாக்டர் பாஸ்டியன் (Dr. Bastian) என்னும் மேற்புல ஆசிரியர் அறிவில்லாப் பொருள்களிலிருந்தே அறிவுடைய பொருள்கள் தோன்றுகின்றன என்று காட்டினர். ஆசிரியர் டிண்டால் (Prof. Tyndall) என்னும் ஆசிரியர் பின் னால் நன்காராய்ந்து அறிவிலாப் பொருள்களிலிருந்து அறிவு டைய பொருள்கள் தோன்ற. அறிவிலாப் பொருள்கள் வேறு அறிவுடைய பொருள்கள்வேறு என்று முடிபுகட்டி மொழிந்து மேல் ஆசிரியர் கருத்தை மறுத்து நிறுவினர். இவ்விரு பெரும் பகுப்பைத்தான் இராமலிங்க அடிகள் "எப் பொருட்கும் எவ் வுயிர்க்கும்" என்று வகுத்து விளக்கினர்.

இனி, இவ்விரண்டு பொருள்களின் வேறாக இவற்றையெல் லாம் இயக்கவல்ல பேரறிவுப் பொருள் வேறொன்று உள்ளது.

---

* பல்லாவரம் பொதுநிலைக் கழக விழாப் பேரவையில், மறைத் திருவாளர் மறைமலையடிகள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.

அது எங்கே உள்ளது என்றால் மேலே காட்டிய அறிவிலாப் பொருள், அறிவுள்ள பொருள் என்னும் இருவகைப் பொருள்களின் உள்ளேயும் இருக்கின்றது வெளியேயும் இருக்கின்றது என்று கூறுதல் வேண்டும். இதனையே 'ஈசா வாசியோபநிடதம்' நன்கு வலியுறுத்துவதாயிற்று. மேற் பாட்டில் இராமலிங்க அடிகள் "உள்ளகத்தும் புறத்தும்" என்று விளக்கி யருளினர்.

இறைவன் உண்மைப் பொருள்

இனி, அத்தகைய பேரறிவுப் பொருள் எப்படிப் பட்டது என்பதையும் நாம் அறிய விழைகுவோம் அல்லவோ? முதலில் அப் பொருள் உண்மையானது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நம் கண்ணெதிரே காணப்படுகின்ற அறிவில்லாப் பொருள்கள் உண்மையானவையா என்று பார்த்தால், அவை உண்மை யல்லாதவை என்றே நமக்குப் புலனாகும். எத்தனையோ பெரும் பட்டினங்களெல்லாம் நில அதிர்ச்சியினால் மாறி உண்மை யில்லாதனவாய் நிலை குலைந்தன. எத்தனையோ நில உருண்டைகள் நில்லாமல் அழிந்துபோயின. நாம் வாழும் இந் நில உருண்டையும் இன்னும் சில ஆயிர ஆண்டுகளிற் குளிரால் இறுக இறுக இல்லையாய்ப் போகும் என்று ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து கூறுகின்றனர். ஆகையால் அறிவில்லாப் பொருள்கள் உண்மையானவை யல்ல. இனி அறிவுள்ள உயிர்களாவது உண்மையானவையோ என்றால் அவையும் அங்ஙனமில்லை என்க. நினைவு ஒன்று, சொல் ஒன்று, செயல் ஒன்று என்னும்படி நம்மிற் பலர் உண்மை யில்லாதவர்களாய்க் காணப்படுகின்றனர். நமக்கு மனமொத்த நண்பர் ஒருவரைக் காண்பது அரிது. சாக்ரட்டீஸ் (Socrates) என்னும் பெரியார் தமது வீட்டில் தாம் வழக்கமாய் அமரும் இருக்கைக்குப் பக்கத்தில் ஒரு வெற்று நாற்காலி இட்டு வைத்திருந்தனர். அவர்பால் வழக்கமாய்ப் போகும் நண்பரொருவர் என்றும் அது வெற்று நாற்காலியாகவே இருக்கக் கண்டார். கண்டு அவரை என்னென்று கேட்க அவர் எமக்கு மனமொத்த நண்பரை இங்கு அமர்விக்கும் பொருட்டு இந் நாற்காலியை இட்டு வைத்தேன். வைத்து இத்தனை நாளாகியும் அங்ஙனமொரு நண்பர்

காணப்படாமையால் இது வெறுமனுகவே இருக்கின்றது என்று கூறினராம். அன்பர்களே! அறிவுள்ள உயிர்ப் பொருள் களுங்கூட எவ்வளவு உண்மை யில்லாதனவா யிருக்கின்றன பாருங்கள்! ஆகையால் இவற்றின் வேருன பேரறிவுக் கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை உணர்மின்கள்!

கடவுள் பேரறிவுப் பொருள்

இனிக் கடவுள் பேரறிவுப் பொருள் என்பதை ஆராய் வோம். இதன்கண் அறிவில்லாப் பொருள்களைப் பற்றிப் பேச வேண்டியதில்லை. இனி அறிவுள்ள உயிர்களுக்கோ எந்நேரமும் அறிவு விளங்குவதில்லை. நூருண்டு உயிர்வாழும் ஒருவனுக்கு அரைவாசி தூக்கத்தில் ஒழியப் பதினுருண்டுகள் இளமையி லொழியப் பொருள் முயற்சி பசி நோய் முதலான பல வகை களில் மிஞ்சிய ஆண்டுகளும் கழிந்துபோக எஞ்சிய நாலைந்து ஆண்டுகளே அறிவு நிகழும் நேரமாயிருக்கின்றன. இது நூரு ண்டு உயிர்வாழ்வானுக்கு உரியதாகும். ஆனல் ருஷியர்கள் அறு பத்தாருண்டும், அமெரிக்கர்கள் ஐம்பத்தைந் தாண்டும், ஆங்கி லேயர்கள் முப்பத்து நான்கு ஆண்டும் சராசரியில் உயிர் வாழ, ஐயகோ, நம் இந்திய நன்மக்கள் இருபத்திரண்டு இருபத்தி நான்கு ஆண்டுகளே உயிர் வாழ்கின்றனர். இந்த மிகச் சிறிய வாழ்க்கையில் நம்மவர்க்கு அறிவு நிகழும் நேரம் ஏறக்குறைய ஓராண்டுதான் ஆகும். நம்மறிவு எவ்வளவு சிறியதாயிருக்கின் றது பாருங்கள்! நமக்குள்ள இச்சிறுமையை நியூட்டன் என்னும் அறிஞர் ‘நான் இப்போது அறிவாகிய கடலின் கரையில் நின்று அங்குள்ள கூழாங் கற்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் நிலை யிலிருக்கின்றேன்’ என்று மிக அழகாக ஒரு நூலில் எடுத்துக் காட்டினர். இந்நிலையிலுள்ள நாம் எப்போது அவ்வறிவுக் கட லைக் கடப்பது? ஆனல் ஆண்டவன் என்றும் முழுப் பேரறி வாகவே விளங்குகின்ருன். அவன் நமக்குச் செய்தளித்த இவ் வெண்ணில்லாத உலகங்களையும் அவற்றின் எண்ணில்லாப் பொருள்களையும் இவ் எண்ணில்லா உடம்புகளையும் இவற்றின் எண்ணற்கரிய உறுப்புக்களையும் செய்தமைப்பதற்கு எவ்வளவு உயர்ந்த அறிவு வேண்டும். குண்டிக்காய் பழுதுபட்ட ஒரு

வற்கு மருத்துவர் ஒருவர் அதனை வெள்ளியினுற் செய்தமைத்து உயிர் பிழைக்கச் செய்தார். ஆயினும் அந்நோயாளி நீண்டநாள் உயிர் வாழ்வது அரிது. அம்மருத்துவர் அறிவை என்னிடம் ஒருவர் வியந்து பேசியபொழுது யாமும் அது கண்டு வியந்தேம். ஆனல் எமக்கு அப்போது ஒன்று தோன்றியது. பழுதுபட்ட குண்டிக்காயை வெள்ளியினுலமைத்து உயிர் பிழைப்பித்த மருத்துவற்கு அதனை முன்னுள்ளதுபோற் சதையினுலேயே செய்தமைக்க இயலவில்லை யல்லவா? அதனை அங்ஙனம் சதையினுற் செய்தமைத்த இறைவனுடைய அறிவு எவ்வளவு உயர்ந்ததாயிருக்கவேண்டும்! அதனை நாம் எவ்வளவு வியந்து பேசவேண்டும் என்று எண்ணினேம்! ஆதலால் எல்லாம் வல்ல முழுமுதலிறைவனே பேரறிவுப் பொருளாவன் என்பது தெரியப்படும். இன்னும் பாருங்கள்! உயிர்களாகிய நமக்குள்ள இச் சிற்றறிவு தானும் தெளிவாய் உள்ளதோ வென்றால் இல்லையே அன்பர்களே! இதனை நம் மெய்கண்ட தேவ நாயனர் "மயக்க மதுற்றும் மருந்திற் றெளிந்தும்" என்னும் அருளுரையினுல் தெளிவித் தருளினர். இங்ஙனம் உயிர்களின் அறிவு, அறிவு நிலையிலும் சேர்க்கப்படாமல் அறியாமை நிலையிலும் சேர்க்கப்படாமல் அவற்றிற்கு இடைப்பட்டதா யிருத்தலினுலேதான் அதனைச் சைவ சித்தாந்த நூல்களிற் 'சத சத்து' என்று கூறியிருக்கின்றனர்.

இறைவன் இன்பப் பொருள்

இனி இறைவன் இன்பப் பொருளாவன் என்பதும் அறிதல் வேண்டும். சிற்றுயிர்கட்கு இன்பமாய்த் தோன்றுவன எல்லாம் முன்னுல் இன்பமாய்த் தோன்றிப் பின்னுல் துன்பத்தையே விளைப்பனவா யிருக்கின்றன. இறைவனது இன்பம் என்றும் ஒரு படித்தாகவே எப்போதுமிருக்கும். இதனை மணிவாசகப் பெருமான்,

> "தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணுதே
> நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
> அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன் சொரியுங்
> குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்னும் திருவாசகத்தால் இனிது விளக்கினர்.

இனி இவ் இயல்பினனான கடவுள் என்றும் அம்மையப்ப ராய் விளங்குகின்றார். பண்டைக் காலத்திற் கடவுளை அம்மை யப்பராகவே எல்லாரும் வழிபட்டனர். அம்மை வணக்கம் பிற்காலத்தில் திருமால் வணக்கமாக மாறியது. பழைய தமிழ் நூலான பரிபாடலில் திருமாலுக்குப் பத்து அவதாரங்கள் கூறப்படவில்லை. பின் வந்தோர் கூறினர். திருமால் வேறு சிவம் வேறு என்றனர். பின் மும்மூர்த்திகள் என்று மூவர் கொண் டனர். அன்பர்களே, படைத்தல் தெரிந்த கடவுளுக்குக் காத் தலும் அழித்தலும் தெரியாதா? இயலாதா? ஆகவே முழு முதல் ஒருவனே முத்தொழில்களையும் புரிகின்றனன் என்ப துவே உண்மையாகும். ஆகவே, அம்மையப்பராய் பண்டைக் காலத்தில் வழிபட்ட முழுமுதல் ஒரு கடவுள் வணக்கமே சாலச் சிறந்ததாகும். இவ்வுண்மைகளையே இராமலிங்க வள்ள லார் மேற் பாட்டில்,

"இயல்உண்மை அறிவு இன்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாம் சிவமொன்றே என்றறிந்தேன்"

என்று விளக்கிக் காட்டினர். இத்தகைய முழுமுதற் கடவுள் எங்கும் பொருந்தி எல்லாவற்றையும் இயக்குதலால் அவர் அம் பலவாணர் (நடராசர்) எனப்படுவர். இனி அம்பலவாணரைக் காணவுங் கருதவும் நம்உள்ளம் விழையுமன்றோ? எதனாற் காண லாம். ஞானயோகம் ஒன்றால் மட்டுமே காணலாம். உலகமா னது அண்டம் எனப்படும். அதன்கண் உலவும் இவ்வுடல் பிண்டம் எனப்படும். அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் ஒற் றுமையுண்டு. அண்டத்தில் விளங்கி அம்பலவாணர் திரு நடம் புரிதல் போலவே பிண்டத்திலும் நடம் புரிகின்றனர். அதனை மூச்சு ஓட்டத்தால் தெரிந்துகொள்ளலாம். மூச்சு ஓட் டமே நம் உயிர் வாழ்விற்குக் காரணமாகும். அதனை மிகுதி யாகச் செலவிட்டால் ஆயுள் குறையும். மூச்சு இயங்கும் திட் டத்தைக் கண்டே மேற்புல அறிஞர்கள் இவர் இவ்வளவு காலம் உயிர் வாழ்வார் என்று ஆயுளை உறுதி செய்கின்றனர். இதன் விரிவு திருமந்திரத்தில் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்

றது. நம்முடைய உயிர் மூச்சு இயங்கும் நாடியிலேயே நிலைத்திருக்கின்றது. முன்னெல்லாம் உயிர் மூளையைப் பற்றி நிற்கின்றது என்று ஆராய்ந்து கண்டனர். ஆனால் இப்பொழுது அதனை நன்காராய்ந்து மூளையை எடுத்துவிட்டாலும் உடம்பில் உயிர் நிலைத்திருப்பது கண்டு உயிரின் இருப்பிடம் சுழுமுனை நாடியே யாகும் என்று தெளிந்திருக்கின்றனர். இந்நாடியை (Spinal Chord) என்று கூறுவர். இவ்வுண்மைகளை யெல்லாம் ஞானசிரியர்வழி உணர்ந்து யோகம் பயின்று அன்பர்கள் கடவுளின் திருவருளைப் பெறுவார்களாக.

நையாண்டி

(கபசம் எழுதியது.)

'யதார்த்தவாதி லோகவிரோதி' என்பது ஒரு கிழமொழி; அதாவது கிழவர்கள் சொல்லுகின்ற மொழி. இதையே பழமொழி என்றுஞ் சொல்லுவார்கள். பழமொழி என்றால் பழுத்த மொழி என்றாவது பழைய காலத்து மொழி என்றாவது பொருள் செய்து கொள்ளலாம். பழைய காலம் என்று சொல்லும்போது நெடுநாட்களுக்கு முந்திய காலம் என்று நினைக்க வேண்டியதில்லை. ஒருநாள் ஆக்கிய சோற்றைத் தண்ணீரில் போட்டு மறுநாள் உண்ணும்போது அது, 'பழையது' ஆகிவிடுகிறது. ஆகையால், "நான் பழையது சாப்பிட்டேன்" என்று சொல்லும் வழக்கம் நிறுத்திவிட்டுப் பெரும்பாலோர் புதியது சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள். இது நிற்க,

"யதார்த்தவாதி லோகவிரோதி" என்று சொல்லிக் கொண்டு நான் ஒரு தெருவழியே போய்க்கொண்டிருந்தேன். அங்கே சுமார் நாற்பது வயதுடைய ஒரு அம்மாள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னம்பல் இரண்டு மிக நீண்டு, சிவந்த கீழ் உதட்டில் பதிந்து இருந்தன. பல் வெள்ளையாகவும், உதடு சிவப்பாகவு மிருந்ததைப் பார்த்து

வுடன் எனக்கு ஒரு எண்ணம் உண்டானது. செவ்வாய்க்கும் வெள்ளிக்கும் இடையில் புதனும் வியாழனும் வரவேண்டியிருக்க அது தவறிச் செவ்வாயும் வெள்ளியும் இந்த அம்மாளுடைய முகத்தில் ஒன்ருகக் கூடியிருக்கிற விந்தையைச் சொன்னுல் ஒருவரும் நம்பமாட்டார்கள் என்று என் மனத்தில் எண்ணம் உண்டாயிற்று. நான் ஒரு புலவனுயிருந்தால் இதைப்பற்றி இனிய கவி ஒன்று பாடி, அதைச் செல்வமுடையவர்களிடத்தில் சொல்லிக் கொஞ்சம் பொருள் சம்பாதித்துக் கொள்வேன். கவிபாடுந்திறமை எனக்கில்லாததை நினைத்து நினைத்து மிக வருந்தினேன். அப்போது எனக்கு அழுகை வந்து விட்டது. சீ, நாம் அழக்கூடாது என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு, "யதார்த்தவாதி லோக விரோதி" என்று உரத்த குரலில் கத்தினேன். இஃது அந்த அம்மாளுடைய செவியில்பட அவர்கள்: "யதார்த்தத்தைப் பேசுவதால் ஒருவர் ஏன் லோக விரோதியாக வேண்டும்? இதெல்லாம் வெறும் பேச்சு" என்று சொன்னுர்கள். அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து, "அம்மா உங்கள் பல்லைப் பழனியாண்டிக்கு விட்டிருக்கிறீர்களா? அல்லது ஏழுமலையானுக்கு விட்டிருக்கிறீர்களா?" என்று வினவினேன். அப்போது அந்த அம்மாளுடைய முகஞ் சுருங்கி, பல் முன்னினும் அதிகமாய் நீண்டது. "நீ என்ன சொல்கிருய்?" என்று அவர்கள் சினந்து சீறிவிழுந்து கேட்டார்கள். நான் மிகுந்த சாந்தத்துடன், "இல்லை, பழனிக்கு அல்லது திருப்பதிக்கு வளர்த்த மயிரைப்போல் உங்கள் பல் வளர்ந்திருக்கிறதே, அது ஏன்" என்றேன். உடனே அந்த அம்மை, என்னைக் கட்டையில் வைப்பதைப்பற்றியும், பாடையில் கொண்டு போவதைப் பற்றியும் பல வகையில் பாடத் தொடங்கினுர்கள். "யதார்த்த வாதி லோகவிரோதி" என்பது சரியாய்ப் போயிற்று என்று நான் வெகு அமைதியுடன் சொன்னேன். ஆனல் அந்த அம்மையாருடைய பாட்டு முன்னினும்பன்மடங்கு அதிகமாயிற்று. இந்த வேளையில் என்ன செய்வதென்று தெரியாமல் நான் மயங்கி நிற்கையில், எனக்கு எதிரே வீதியில் வந்த ஒருவர், "இந்த அம்மாள் ஏன் உன்னை இப்படி

திட்டுகிறார்கள்?" என்று விசாரித்தார். பல் நீண்டிருக்கிறது என்று நான் சொன்னேன். அதன் பேரில் அவர்கள் ஒரு பல்லவி பாடுகிறார்கள், வேறொன்றுமில்லை" என்று சமாதானமாய்ப் பதிலுரைத்தேன். இதைக் கேட்டு விட்டு வந்தவர் தம் வழியே போகாமல் "இந்த அம்மாள் யார்?" என்று கேள்வி போட்டார். "இவர்கள் யாரோ தெரியாது; ஆனால் அவர்கள் பெயர் மாத்திரம் எனக்குத் தெரியும்" என்றேன்.

"இவர்களுடைய பெயர் என்ன?"

நான்:—"கௌளி அம்மாள்"

"கௌரி அம்மாளா?"

நான் "இல்லை கௌளி அம்மாள் தான்"

"கௌளி அம்மாள் என்று கூடவா பெயர் இருக்கும்?

நான் "ஏன் இருக்கக் கூடாது? அதில் என்ன பிசகு?"

"இல்லை, சாதாரணமாய் அப்படி பெயர் இருப்பதில்லை"

நான் "கௌளி என்றால் என்ன?

"கௌளி என்றால் பல்லி"

"நான் இந்த அம்மாளுடைய பல்லைப் பார்த்த பின் இவர் பல்லியம்மாள் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?"

மேலே கூறியதில் கடைசி வார்த்தை என் வாயை விட்டு வெளியே வருமுன் வாசலில் நின்று வசைபாடிய அம்மணி திடு, திடு வென்று வீட்டிற்குள் ஓடினார்கள். ஓகோ நம்மை வாழ்த்தியது போதாதென்று ஏதோ வெகுமானங் கொடுப்பதற்காக அம்மையார் வீட்டிற்குள் போகிறார்களென்று நான் அறிந்து கொண்டு மின்னல் மின்னி மறைவதுபோல் அவ்விடத்திலிருந்து மறைந்தேன்.

"ஐயோ திருவுளமே என் பல் ஒரு முழமே"

—தமிழ் நாடு.

அன்பின் அகநிலே அல்லது தர்ம சிந்தை

(A free translation of St. Paul on charity.*)

[மனோன்மணீய நாடக ஆசிரியர் P. சுந்தரம் பிள்ளையவர்கள்]

கலித்துறை.

1. பிறங்கும் பிறர்குறை பேணுது நற்குணம் பேணலுறும்
அறந்திகழ் நெஞ்சி னரன்றே லவர்வின் ணமர்தினையும்
மறந்திடும் வண்ணம் வடித்துப் படிக்கின்ற வார்த்தையெல்லாம்
வெறுங்கல கல்லெனும் வெங்கல வோசையின் வேறலவே.

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

2. வருபொரு ளுரைக்கும் வல்லபம் பெறிலென்
மண்ணிடை விண்ணிடை மறைந்த
பெருரக சியங்கள் யாவையு முணரும்
பெருமையும் ஞானமும் பெறிலென்
பருவத மெடுத்துப் பந்தென வாடும்
பத்தியுஞ் சித்தியும் பெறிலென் !
பரவனு கூல திருட்டி[1]யென் றுரைக்கும்
பண்புறு மன்பிலே யெனிலே.

3. இல்லவர் யாரு முண்டிடத் தன்கை
யிரும்பொரு ளனைத்தையு மீய்ந்தென்!
நல்லமெய் தனையுந் ததீசி [2]போற்
பிறர்பா னலிவற நல்கியு மென்னே !
அல்லவர் தமையு நல்லவ ரெனவே
யனுதின மதித்துகந் திடுமோர்
சொல்லரு முண்மை யன்புமற் றிலேயேற்
சுகமிலே யென்பது துணிபே.

---

* The first Epistle to Corinthians, Chapter XIII. Stanzas 1—8 Correspond to verses 1—8; Stanza 9 to verses 9, 10 and 11 to verses 12 and 13. Stanza 12 concludes with a prayer.

1. பரவனுகூலதிருட்டி=பிறருடைய நற்குணமே காணும் காட்சி.
2. ததீசி=இந்திரனுக்கு வச்சிராயுதம் புதுக்க முதுகெலும்பு கொடுத்த முனிவர்.

4. பிறர்க்கெலா மின்பம் பெருக்குவ தன்பே
பிறர்செயுந் தீங்கனைத் தினையும்
பொறுத்துமேன் மேலு மகழ்வது மன்பே
போற்றிய பிறர்வயி னுற்ற
சிறப்பது கண்டு மழுக்கற [1] விடுத்துச்
சித்தத்துள் களிப்பது மன்பே
அறச்சிறி தேனுந் தன்பெருந் தன்மை
அறிந்துமேம் படாதது மன்பே.

5. அன்னியர் குணத்தை [2] யாய்ந்திடு மன்பி
னழகினைப் பின்னருங் கேண்மோ
தன்னிய னடக்கை தக்கவா றன்றித்
தவறுறுந் தன்மையாய்த் தனது
மன்னிய வுரிமைப் பொருளுக்கா மறந்தும்
வழக்கிட வறிகில தாகி
என்னன செயினு மிழிவுறு கோப
மில்லதாய்க் கெடுநினை விலதாய்.

கலிவிருத்தம்.

6. கொடுமை யென் றெவர் கூறினுங் கேட்டுளம்
நடுநடுங்கிடு நற்குணஞ் சேர்ந்ததாய்க்
கெடல ரும்புகழ் மெய்மை கிளத்தல்கேட்
டுடல மெங்கும் புளகித் துவப்பதாய்.

7. வந்த வெல்லாம் பொறுத்து மகிழ்வதாய்
நந்தல் [3] செய்யினும் நம்புத லுள்ளதாய்
எந்த வேளையு மேல்வரு மின்பமே
சிந்தை செய்வதாய்த் தீங்கு சகிப்பதாய்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

8. இப்படி யாவரா லு மெய்துதற் குரித்தா நின்ற
செப்பிய பரா னு கூல தெரிசன சித்த மொன்றே
மெய்ப்பட நிற்கு மல்லான் மேல்வினை வுணர்வு [4] மோர்கால்
பொய்ப்படும், நாவு மோயும், புலமையும் போகுந் தானே.

9. பற்றிய பாச்சி சோச்சி[5] யென்றமும் பாவி யத்தில்
உற்றசிற் றுணர்வு போத முதிர்ச்சியி லொழியு மாபோல்

1. அழுக்கு=பொறாமை. 2. குணம்=நற்குணம். 3. நந்தல்=கேடு.
4. மேல்வினைவுணர்வு=பின் வருபவை யறிதல்=தீர்க்க தெரிசனம்.
5. பால்சோறு என்பவற்றின் மருவு.

சிற்றறிவுடைய ஜீவர் சிற்சில தெளிந்த தேற்றம்
முற்றுணர் வெறிக்குங் காலை முன்னில்லா தொழியுமன்றே.

10. பேசுமித் திசையின் ஜீவர் பேதைமைப் போதப் பெற்றி
மாசுறை யாடி [1]யூடே வருபொருள் காணல் மானும் [2].
நேசமா ரருள்வந் தெய்தின் னேரினே ரையம் நீங்கி
ஆசற நம்மை நாமே அறிதல்போ லறிகுவோமே.

11. கற்றுணர் கல்வி கேள்வி கருதிய பிறவும் பாழா
உற்றிடும் பக்குவத்தில் ஒழிவிலா துறைவதோர்கில்
முற்றிய பக்தி யூக்கம் முன்சொன அன்புமாமே
மற்றவை மூன்றில் மேலா மன்னுவதன்பே அம்ம!

12. இத்தன்மைத் தாயஅன்பிற் கிருப்பிட மாய நின்பாற்
பத்திசெய் திதுகா றுன்றன் பணிவிடை பயின்றேன் மேலுன்
சித்தமெப் படியென் றேரேன் சிறியனேன் செய்யுங் குற்றம்
எத்தனை யெனினு மற்றெம் மிறைவநீ பொறுத்தல் வேண்டும்.

சிவஞான போதக் கருத்து

(2 வது சூத்திரம் 2 வது அதிகரணம்)

(திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.)

(முன் 8-ம்சிலம்பு எசுங-ம் பக்கத் தொடர்ச்சி)

65. வினையின் மற்றொருவகைப் பாகுபாடு. மேலே 61 வது பத்தியில் வினையானது அது பருமையாய் உண்டாகி நுண்மையாயும் மிக்க நுண்மையாயும் மாறுபட்டுப் பயன்படுகிற வகையில், வருவினை, தொகுவினை, நுகர்வினை எனமூன்று வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டது. இனி வினையானது அது செய்யப்படுகிற இடங்களின் வகையில் உலகவினை வைதிகவினை அத்தியான்மிக வினை அதிமார்க்க வினை மாந்திரவினை என ஐந்து வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றது. வினைகளெல்லாம் ஆறு அத்துவாக்களிடமாகச் செய்யப்படுகின்றன. கலையில் ஏனைய ஐந்து அத்துவாக்களும் அடங்கும் உலக வினை நிவிர்த்தி

---

1. கண்ணடி. 2. ஒக்கும்.

கலையினிடமாகச் செய்யப்படுவது. அது கூவல் குளம் தண்ணீர்ப் பந்தல் முதலியன அமைத்தல் ஆகும். வைதிகவினை பிரதிட்டா கலையினிடமாகச் செய்யப்படுவது. அது தேவர்களைக் குறித்து வேள்வி முதலியன செய்தல் ஆகும். அத்தியான்மிகவினை வித்தியாகலையினிடமாகச் செய்யப்படுவது. அது சிவவழிபாடு முதலியன செய்தல் ஆகும். அதிமார்க்கவினை சாந்தியா கலையினிடமாகச் செய்யப்படுவது. அது யோகஞ் செய்தல் ஆகும். மாந்திரவினை சாந்தியாதித கலையினிடமாகச் செய்யப்படுவது. அது மந்திரம் செபித்தல் அறிவுநூல் ஓதல் முதலியன செய்தல் ஆகும். உலகவினை, வைதிக வினை இரண்டும் நிவிர்த்தி கலை பிரதிட்டாகலைகளிலடங்கிய அசுத்த மாயா புவன போகங்களைப் பயக்கும். அத்தியான்மிக வினை வித்தியா கலையில் அடங்கிய சுத்தமும் அசுத்தமுங் கலந்த மாயா புவன போகங்களைப் பயக்கும். அதிமார்க்க வினை மாந்திர வினை இரண்டும் சுத்த மாயா புவனபோகங்களைப் பயக்கும். இவ்வாறு ஐந்துவகையான வினைகளும் ஒன்றற் கொன்று ஏற்றமுடையதான போகத்தை (நுகர்ச்சியை) உயிருக்குப் பயந்து முடிவில் சிவபோகத்தை அடையச் செய்கின்றன. முதல்வன் மக்களுக்கு முதலாவது நிவிர்த்திகலையி லடங்கிய அசுத்த மாயா புவன போகங்களை அவர்கள் அவைகளாற் கவர்ச்சி செய்யப்பட்டுச் செய்த முயற்சியின் பயனைக் கொடுத்து அவைகளில் அவர்களுக்கு உவர்ப்பு வந்த பொழுது பிரதிட்டாகலையிலடங்கிய அசுத்த மாயா புவன போகங்களைக் கொடுத்து அவைகளிலும் அவர்களுக்கு உவர்ப்பு வந்த பொழுது அவைகளுக்கு மேலான வித்தியாகலையிலடங்கிய சுத்தாசுத்த மாயா புவன போகங்களைக் கொடுத்து இவ்வாறே அவர்களை ஈர்த்து ஈர்த்துச் சென்று சாந்திகலை சாந்தியாதிதகலைகளி லடங்கிய சுத்த மாயா புவன போகங்களையும் நுகரும்படி செய்து முடிவில் சிவபோக மாகிய பேரின்பத்தை அடையச் செய்கின்றான். இவ்வாறு அவன் உயிர்களுக்குச் செய்கின்ற பேரருள்தான் என்னே! என்னே!!

66. முதல்வன் தனது ஆணையை உயிர்களுடைய இருவினையின்மேல் வைத்து நடத்துதலினாலேயே அவனுடைய

முழு உரிமைக்கு (பூரண சுதந்திரத்துக்கு) இழுக்கு உண்டாகாது. உலகில் அரசன் ஒருவன் பாடிகாவற்றுறையில் (Magisterial Department) ஒறுத்தற் பணியாளர்களை (Magistrates) அமைத்து அவர்கள் வழியாய் நெறியினின்று வழுவி ஒழுகுகிற தனது குடிகளை ஒறுத்தல் செய்து அவர்களை நல்வழிப் படுத்துகின்றான்; அதுபோல முதல்வன் தனது ஆணையை இருவினை மேல் வைத்து உயிர்களைக் காக்குந் தொழிலை நடத்துகின்றான். முதல்வன் உயிர்களை இருவினைப் பயனை நுகரும்படி செய்தல் எதற்காக? அவ்வுயிர்களைத் தீய நெறியினின்றும் விலக்கி நன்னெறியிற் புகச் செய்யும் பொருட்டன்றோ? அப்படிச் செய்தற்கு எந்த எந்த உயிர் எந்த எந்த வினையைச் செய்ததோ அந்த அந்த வினையின் பயனை முன்பிறழாது அந்த அந்த உயிர் நுகரும்படி செய்தலே எற்ற வழியாம். முதல்வன் உயிர்கள்மேல் வைத்த பேரருளினால் இவ்வாறு செய்கின்றான். ஆதலின் இவ்வாறு செய்தலினால் அவன் முழு உரிமைக்கு (பூரண சுதந்தரத்துக்கு)ச் சிறிதும் இழுக்கில்லை என அறிக.

67. இருவினைப் பயன் உயிர்களுக்கு எவ்வாறு வந்து கூடும்? உயிர்கள் தம்மை முதல்வன் அறிவித்தாலன்றித் தாமே அறியும் உரிமைஅறிவு உடையவர்களில்லை. ஆதலின் அவைகள் தாமே தாம் செய்த வினைப்பயனை அறிந்து எடுத்துக் கொள்ளமாட்டா. இருவினை உயிரில்லாப் பொருள் ஆதலின் உயிரை வந்து அடைய மாட்டாது. ஆதலின் முதல்வனே உயிர்களுக்கு அந்தந்த உயிர் செய்த வினையின் பயனை அந்த அந்த உயிரே நுகருமாறு கூட்டுவிப்பன்.

68. அத்துவித உண்மைக்கும் வினைச் சட்டத்துக்கும் உள்ள இயைபு.

முதல்வன் உயிர்கள் தனது பேரின்ப நிலையை அடைதற்கு அவைகளைப் பண்படுத்த அவைகளுடைய உயிர் வளர்ச்சி (Soul evolution) யைக் கருதி ஐந்தொழில் செய்யுங்கால் மேலே கூறியபடி உயிர்களுடன் மூவகை நிலைகளையும் உடையவனுகின்றான். முதல்வன் எல்லா உயிர்களுடைய உயிர் வளர்ச்

சியையும் தனது உள்ளக் கருத்தில் உடையவனுயிருக்கின்ருன். அக்கருத்துக்கு இணக்கமாயுள்ள முறைமையே வினைச் சட்டமாகும் (Law of Karma). வினைச் சட்டமானது இயற்கையில் அமைந்துள்ள இயற்கைச் சட்டம் (Natural law). இயற்கை நிகழ்ச்சிகளிலெல்லாம் முதல்வனுடைய கருத்தை வெளிப்படுத்துகின்றன. ஆதலின் வினைச்சட்டத்தின்படி ஒழுகல் முதல்வன் உள்ளக் கருத்துக்கு இணங்க இயற்கை வழியில் ஒழுகுதலாகும். வினைச் சட்டத்தின்படி ஒழுகும் ஒழுக்கமே நல்வினையாகும். அச்சட்டத்துக்கு மாருக ஒழுகும் ஒழுக்கம் தீவினையாகும். வினைச் சட்டமானது ஒருவன் தனது உயிர் வளர்ச்சி கருதி ஒழுகுதல் அல்லாமல் பிற உயிர்களுடைய உயிர் நலம் கருதி அவைகளுடைய உயிர் வளர்ச்சிக்கும் இணங்க ஒழுகும்படி கூறுகின்றது. ஒருவன் பிற உயிர்களுடைய உயிர் வளர்ச்சிக்கு மாருக ஒழுகிக் கொண்டு முதல்வனுக்குச் செய்யும் சிறப்பு வழிபாடு யாதொரு பயனையும் பயவாது. ஆதலின் வினைச் சட்டமானது அத்துவிதம் என்னும் தாய் உண்மையிலிருந்து பெறப்படும் வழி உண்மைகளில் முதன்மையான உண்மை என அறிக.

69. மேலே கூறிய கருத்துக்களெல்லாம் மக்களில் ஒருவருக்கு உரித்தான தனி வினையைப் (Individual Karma) பற்றியன. மக்கள் பலர் சேர்ந்த கூட்டத்திற்கு உரித்தான கூட்ட வினையும் (Collective Karma) உள்ளது. சில மக்கள் சேர்ந்துள்ள ஒரு குடும்பத்துக்கும் பலர் சேர்ந்துள்ள ஒரு குலத்துக்கும் இன்னும் மிகப் பலர் சேர்ந்துள்ள ஒரு நாட்டுக்கும் கூட்ட வினையுண்டு. ஒரு கூட்டத்திற் சேர்ந்த மக்களில் ஒவ்வொருவரும் செய்த வினை சேர்ந்து திரண்டு அக்கூட்டத்திற்கு மொத்தமாக உரியதாகின்றது. எடுத்துக்காட்டாக இந்தியா நாடு ஆகிய நமது பெரிய நாட்டில் வாழும் மக்களில் ஒவ்வொருவரும் செய்த நல்வினை தீவினைகள் சேர்ந்து திரண்டு அந்த நாட்டினுடைய மொத்த நலந் தீங்குகளுக்குக் காரணமா யிருக்கின்றன. ஒரு நாட்டினுள்ளவர்கள் செய்த தீவினையின் பயனாக நில அதிர்ச்சி எரிமலை நீர்வெள்ளம் முதலியவற்ருல் கேடுகள் உண்டாகின்

றன. தனி வினைக்குக் கூறப்பட்ட கருத்துக்களைக் கூட்ட வினைக்கும் ஏற்றபடி பொருத்தி அறிந்து கொள்க.

70. ஒன்றுக் கொன்று முரணுதலா யுள்ள நல்வினை தீவினை என்னும் இரு வினைகள் உலக நுகர்வு வாழ்வில் உள வாதற்குக் காரணம் ஒன்றுக் கொன்று முரணுதலாயுள்ள அருளும் ஆணவ மலமும் ஒளியும் இருளும் போல மாயா காரியங்களாகிய உடல் உட்கரணம் உலகம் நுகர் பொருள்களைச் (தனு கரண புவன போகங்களை) சேர்ந்திருத்தலேயாகும். அருளுடன் மலஞ் சேர்ந்திருத்தலினாலன்றோ உலக நுகர்வு வாழ்வில் அறிவுடன் அறியாமையும் இன்பத்துடன் துன்பமும் உண்டாகி அறிவும் இன்பமுந் தூய்மையில்லாதனவாயிருக்கின்றன. அதே காரணத்தினால் இந்த அருளால் விளங்குகிற ஒளி விளக்கமும் இருளிரவில் விளக்கொளி போல ஒரு புடை விளக்க முடையதாய் உயிர்களுக்கு மயக்கத்தைச் செய்கின்றது. ஆயினும் இருளிரவு விடியுமளவும் இந்த ஒரு புடை விளக்கமான ஒளியினாலேதான் உயிர்கள் பண்பட்டுத் திருந்தி இரவு விடிந்தபின் தோன்றுகிற ஞாயிற்றின் ஒளி போலப் பேரொளியாயிருக்கிற தனி அருளை அடைகிறதற்குத் தகுதி யுடையவர்களாகின்றன. இதனாலே நெறிக்கு உட்பட்ட இருவினை உலக நுகர்வு வாழ்வும் மக்களது உயிர் வளர்ச்சிக்கு எத்துணை இன்றியமையாது வேண்டப்படுவது என்பது நன்கு புலனாகும். இதனாலே தான் அன்பும் அறனுமுடைய இல்லற வாழ்வு பண்பும் பயனுமுள்ள சிறந்த வாழ்வு என்று தமிழ் மூதறிவாளர் உரைத்தனர்.

70. மேலே கூறியவாறு வினை இருபகுதிப் பட்டிருத்தலினாலேதான் மக்களது உலக நுகர்வு வாழ்வினுள்ளன வெல்லாம் ஒன்றுக் கொன்று முரணுதலா யுள்ளனவாய் இருபகுதிப் பட்டுள்ளன. எங்கு பார்க்கினும் தீமை கலவாத நன்மையில்லை; பொய் கலவாத மெய் இல்லை; இழவு (நட்டம்) கலவாத பேறு (இலாபம்) இல்லை; இகழ்ச்சி கலவாத புகழ்ச்சியில்லை; வெறுப்புக் கலவாத விருப்பு இல்லை; துன்பங் கலவாத இன்பமில்லை; அறியாமை கலவாத அறிவு இல்லை. உலகினுள்

ளன வெல்லாம் நன்மைப் பகுதியும் தீமைப் பகுதியும் சேர்ந்து கலந்த முரண் இரட்டைகளாகவே (Pairs of opposites) இருக்கின்றன. இந்த முரணிரட்டைகளாலேயே உலக நுகர்வு வாழ்வு நடை பெறுகின்றது. தேவர்கள் ஒரு புறத்திலும் அசுரர்கள் மற்றொரு புறத்திலும் எதிரிடையாக நின்று பாற்கடலைக் கடைந்து அமிர்தமும் நஞ்சும் பெற்ற புராண வரலாறு இந்த உண்மையை விளக்குகின்றது. இந்த முரணிரட்டைகள் வடமொழியில் துவந்துவம் (த்வந்த்வ) என்று கூறப்படும். இத்தகைய இருவினை உலக நுகர்வு வாழ்வில் மக்கள் செல்லும்பொழுது இரண்டு கவர் வழிகள் அவர்கள் முன்னே தோன்றுகின்றன. ஒன்று அருள் சேர்ந்த நன்னெறி; மற்றொன்று மலம் சேர்ந்த தீ நெறி. இந்த இரு நெறிகளில் மக்கள் தங்களுடைய மனதை அது சென்ற விடத்தில் செல்லவிடாது தீ நெறியை விட்டு நன்னெறியிற் செல்லும்படி செய்து பழகுதலினாலே அவர்களுக்கு வாழ்வு முற்போக்கும் (Progress in life) உயிர் வளர்ச்சியும் (Soul evolution) உண்டாகின்றன. தீ நெறியை விட்டு நன்னெறியிற் செல்லுதற்கு மக்களுடைய மனமானது மலத்தை எதிர்த்துப் போராடுதலும் அருளைத் தேர்ந்து கைபாடலும் செய்தல் வேண்டும். இந்தப் போராட்டமும் (struggle) தேர்தலும் (choice) செய்துதான் மக்கள் மனம் பண்பட்டுத் தூய்மை அடைதல் வேண்டும். இவ்வாறு தூய்மை அடைந்த மனமுடைய மக்கள் தான் முரணிரட்டைகளிலிருந்து விடுதலை பெற்று வீட்டு நெறியை அடைதற்குத் தகுதி உடையவர்களாகின்றார்கள். இதனைப் பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில்

> 'என்புள்ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
> துன்பங்களைந்து துவந்துவங்க டேய்மைசெய்து
> முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
> அன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே'

என்று கூறியிருத்தல் காண்க. உலக நுகர்ச்சி வாழ்வில் தீமையை விட்டு நலத்தை நாடிச் செல்லுதல் மேலானதாகக் கைக்கொண்டு

நடத்தல் முறைமை என்றும் வீட்டு நெறி வாழ்வில் தீமையும் நன்மையும் ஒப்பக் கட்டினை (பந்தத்தை)க் கொடுக்குந் தன்மை உடையன் என்று அவ்விரண்டினையும் விடுதல் முறைமையாகின்றது. அம் முறைமை உண்மை அதிகாரத்திற் கூறப்படும்.

71. முதல்வனுடைய ஆணையாய் விளங்குகின்ற வினைச் சட்டமானது மக்களுடைய உயிர் வளர்ச்சிக்கு இன்றி அமையாது வேண்டப்படுவதாயுள்ளது. வினைச் சட்டமே மக்களைத் தீய நெறியினின்று விலக்கி நன்னெறியில் ஒழுகி உய்யும்படி செய்வது. வினைச்சட்டமே மக்களில் அவரவர்க்கு உரித்தான உரிமையை (rights) அவரவரே அடையும்படி செய்வது. வினைச் சட்டமே நடுவு நிலைமையினின்று வழுவி ஒழுகுகிற மக்களைத் துன்புறுத்தி அவர்களை மறுபடியும் நடுவு நிலைமையை உடையவர்களாகச் செய்வது. வினைச்சட்டமே மக்களை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களையும் அடையச் செய்து வீட்டு நெறியிற் கொண்டு போய் விடுவது. வினைச் சட்டமின்றி உலகில் மக்கள் சேர்ந்து வாழ்தல் முடியாது. வினைச்சட்டப்படி ஒழுகும் ஒழுக்கமே மக்களுக்கு உலக இன்பத்தைப் பயப்பது. வினைச் சட்டத்தைப் பற்றிய அறிவானது மக்களுக்கு இன்ன செய்தால் இன்ன பலன் உண்டாகும் என்னும் உண்மையை அறிவித்து அவர்களை அதனை உறுதியாய்க் கடைப்பிடித்து ஒழுகும்படி செய்து அதனால் மலத்தினின்றும் சிறிது சிறிதாய் நீங்கும்படி செய்கிறது. மக்கள் நலத்துக்காகச் செய்யப்பட்ட உலகிலுள்ள அரசியலார்களுடைய (Governments) சட்டங்களெல்லாம் வினைச் சட்டத்திற்கு ஒரு புடை ஒத்துள்ள படிச்சட்டங்களாகும் (copies). இத்தகைய வினைச் சட்டத்திற்குத் துணையாய்ப் பல பிறவிகள் வேண்டப்படுவன. ஒரு பிறவியிலுள்ள சிறிய கால எல்லையில் மக்கள் மலவலியினின்று நீங்கி உயிர் வளர்ச்சி (சீவவிகாசம்) அடைந்து முடிவில் வீட்டின்பம் அடைதல் முடியாது. ஆதலின் உயிர் வளர்ச்சி (Soul evolution)யும் அதற்கு வேண்டிய வினைச் சட்டமும் பல பிறப்புகளும் சமயத்துக்கு முதன்மையான இலக்கணமாக அமைந்துள்ளன. இந்த மூன்று உண்மைகளும் கொள்ளாத சமயங்கள் சமய இலக்கணமில்லாத சிறு நெறிகளாகும். உயிர் வளர்ச்சி வினைச் சட்டம் பல பிறப்புகள் ஆகிய உண்மைகளானவை அத்துவித உண்மையைப் போல சைவ சமயத்தினது சிறப்பைப் புலப்படுத்துகின்றன. இதனுடன் இச் சூத்திரம் இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

(தொடரும்.)

பல்லாவரம், பொது நிலைக் கழகப் பெருவிழா

முதல் நாட் சிறப்பு.

எல்லாம் வல்ல முழுமுதற் சிவபெருமான் திருவருளால் இக் கழகப் பெருவிழா 2-2-31 திங்கள் காலை 9-மணிக்குத் துவங்கப்பட்டது. கழக குரு மறைத்திரு. மறைமலையடிகள் அவர்கள் தேவார திருவாசக மாபெருந் தமிழ் மறைகள் ஓதி அம்பலவாணர் திருக்கோயில் திருக்குட முழுக்கு விழாவையும் அதனையடுத்து மணிவாசக நூல நிலையத் திறப்பு விழாவையும் இனிதே நிகழ்த்தி யருளினர். வந்திருந்த மெய்யன்பர்களெல்லாரும் அம்பலவாணரையும் அம்மையையும், நால்வரையும் பூச் சொரிந்து இருகண்களாலும் நீளப்பருகி வழுத்தி வணங்கியும் அடிகள் மலரடிகளைத் தொழுதும் பேரின்பத்தில் தேக்கினர்.

மாலை $3\frac{1}{2}$-மணிக்குப் பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு நிறைவு விழா துவங்கப்பட்டது. விழாவுக்கு வந்த விரிவுரையாளர்களெல்லாரும் மிக்க சிறப்பாக ஊர்வலமாய் அவைக்கு வரவேற்கப்பட்டனர். அப்போது பல்லாவரம் கிராம அதிகாரி (கி. மு.) திருவாளர் தெய்வரத்தின முதலியாரவர்கள் விரிவுரையாளர்களையும் வெளியூர்களிலிருந்து அவைக்கு வந்த பெருமக்களையும் ஊரார் சார்பாக வரவேற்றுச் சிறப்புச் செய்தனர். தமிழ் வழங்கும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மெய்யன்பர்கள் மிகுதியாக வந்திருந்தார்கள். தேவார திருவாசகங்கள் இன்னிசைக் கருவிகளுடன் ஓதப்பட்டன. அன்பர்கள் மகிழ்ச்சியினிடையே ஆசிரியர் மறைமலையடிகள் அவைத்தலைமை பூண்டு மேற்கொண்டருளினர். அப்போது திருவாவடுதுறைத் திருமடத்தலைவர் அவர்கள் அடிகட்கு அனுப்பிய சிறப்புக்களான பொற் பட்டாடைகளும் பொற் சரிகை பின்னிய பொற்போர்வையும் அவிநாசியில் எழுந்தருளியிருக்கும் மறைத்திரு. கருணாலய அடிகள் சிறப்பித்துக் கொடுக்க அடிகள் அவற்றைத் தாங்கியருளினர். திருவாவடுதுறை திருமடத் தலைவர் அவர்களின் திருவுள்ள உயர்வு அடிகளாலும் அவையோராலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

பின், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் பொது நிலைக் கழக அமைப்பும் நோக்கமும்பற்றி மிக விளக்கமாக விரித்துரைத்தனர். வரவேர்புத் தாள்கள் வழங்கிப் படிக்கப்பட்டன. திருவாளர் இளவழகனர் விரிவுரையாளர்க்கு வரவேற்பும், பொருளுதவி செய்தார்க்கு நன்றியுங் கூறினர். அதன்பின் மறைமலை யடிகள் ' அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞான யோகமும்' என்னும் அரிய பொருள் பற்றித் தமது இனிய குரல் கொண்டு முன்னுரை கூறி யருளினர்கள். அதனை முன் 33-ம் பக்கத்திற் காண்க.



திருவருட்பா ஸ்ரீஇராமலிங்க சுவாமிகள் மாணாக்கரும்
இராசதானிக் கலாசாலையில் தமிழாசிரியராயிருந்தவரும்,
'வேளாண்மரபியல்' 'திருவெண்காட்டடிகள் சரித்திரம்'
'பெரியபுராணவசனம்' முதலிய நூல்களை இயற்றியவருமான
தொழுவூர்—வேலாயுத முதலியார்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௯	மெய்கண்டான்யாண்டு-௭௱௮ மாசித்திங்கள் 1931ஆ பிப்ரவரிமீ—மார்ச்சுமீ	பரல் ௨

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருக்குறுந்தொகை

"பந்தித்த பாவங்க ளம்மையிற் செய்தன இம்மை வந்து
சந்தித்த பின்னைச் சமழ்ப்ப தென் னேவந் தமரர் முன்னாள்
முந்திச் செழுமல ரிட்டு முடிதாழ்த் தடிவணங்கும்
நந்திக்கு முந்துற ஆட்செய்கி லாவிட்ட நன்னேஞ்சமே".

அமரர்=தேவர்கள்

முன்னாள்=முற்காலத்தில்

செழுமலரிட்டு=வளம் பொருந்திய பூக்களைச் சாத்தி

முடிதாழ்த்து=தங்கள் முடியோடு கூடிய தலைகளைக் கீழே வளைத்து நின்று

அடி வணங்கும்=இரண்டு அடிகளையும் வணங்குகின்ற

நந்திக்கு=சிவபெருமானுக்கு

முந்துற=(வினை வந்து சந்தித்தற்கு) முன்பு

ஆட்செய்கிலாவிட்ட=அடிமை செய்யாது வாளா இருந்த

நல் நெஞ்சமே=தீய நெஞ்சே

அம்மையிற் செய்தன=முற்பிறப்பிற் செய்தவைகளான

பந்தித்த பாவங்கள்=உன்னைக் கட்டிநின்ற பாவங்கள்

இம்மை வந்து சந்தித்த பின்பு=இந்தப் பிறப்பிலே வந்து சேர்ந்த பிற்பாடு

சமழ்ப்பது=வருந்துதலினால்

என்ன=என்ன பயன் உண்டாகும்? (அதாவது யாதொரு பயனுமில்லை)

முடி என்பது தலையில் அணிந்திருக்கிற கிரீடம்; அஃது இங்கே முடி அணிந்திருக்கிற தலையைக் குறித்து நிற்கிறது.

தாழ்த்து—செய்து என வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

நல் நெஞ்சம்=இகழ்ச்சியாகத் தீய நெஞ்சம் நல்ல நெஞ்சம் எனக் கூறப்பட்டது. இது வஞ்சப் புகழ்ச்சி.

சமழ்ப்பது=தொழிற் பெயர்.

து—தொழிற் பெயர் விகுதி

இத் தேவாரப் பாட்டில் முற்பிறவிகளிற் செய்த தீவினைகள், புத்தி தத்துவம் பற்றுக் கோடாய்க் கிடந்து பாவங்களாய் மாறி இப்பிறப்பிலே அத்தீவினைகள் செய்தவரைத் துன்பமாய் வந்து பொருந்துதல் தவறாதென்பதும், அத்தீவினைகள் துன்பமாய் வருதலைத் தவிர்க்க வேண்டுமானால் அவைகள் வந்து சேரும் காலத்துக்கு முன்பே சிவபெருமானை அவனுடைய அடிகளில் மலர்கள் சாத்தித் துதித்தல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன. ஒருவன் வினைக்கு அடிமையாதலைத் தவிர்க்க விரும்பினால் தன்முனைப்பு நீங்கிச் சிவபெருமானுக்கு அடிமையாதல் வேண்டும் என்பது இப்பாட்டின் கருத்து. இதே கருத்து அடிகள் வேறொரு தேவாரப் பாவில்

அல்ல லென்செய்யும் அருவினை யென்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லையில்ல தோரடிமை பூண்டேனுக்கே

எனக் கூறியிருத்தல் காண்க.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

இராமாயணம்

[திரு. தி. த. கனககசுந்தரம் பிள்ளை B. A. அவர்கள்.]

இராமாயணம் என்னும் இவ்விதிகாசம் வான்மீகியாரால் இயற்றப்பட்டது. இதன் உத்தர காண்டத்தில் ஐம்பத்தேழாவது சருக்கத்திற் கூறியபடி வான்மீகியாருடைய ஆச்சிரமம் கங்கையின் தென்கரைக்கண்ணதாகலானும், முதற்காண்டமாகிய பாலகாண்டத்து ஐந்தாஞ் சருக்கத்திற் கூறியபடி இது கோசல நாட்டை அரசுசெய்த இக்ஷ்வாகு குலத்தார் சரித்திரமாகலானும் இது பிறந்த இடம் கோசலநா டென்பது பெறப்படும். கோசலநாட்டில் வாழ்ந்த சூதர்களிடத்தில் இக்ஷ்வாகு குலத் தரசருட் சிறந்த இராமனுடைய வலியையும் கொற்றத்தையுங் கூறுஞ் சிற்றிதிகாசங்கள் பல எழுதாக்கேள்வியாய் வழங்கி வந்தனவாக, அவைகளை ஆதாரமாகக்கொண்டே வான்மீகியார் இதனைச் செய்தார் என்று கொள்ளப் படுகின்றது. கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதம் செய்ததுபோலச் சிற்றிதிகாசங்கள் பலவற்றை ஒன்று சேர்த்து ஒரு பெரு நூலாக யாக்காது வால்மீகியார் அக்காலத்து வழங்கிவந்த சில சிற்றிதிகாசங்களிலுள்ள கதையை மாத்திர மெடுத்துக்கொண்டு அதை யமைத்துத் தாமொரு நூலியற்றின ரென்க. மகாபாரதத்தைப்போலவே இராமாயணமும் முதலில் எழுதாக்கேள்வியாய்ப் பயின்று வந்தது. நூல்களை நெட்டுருப்பண்ணி அவைக்களங்களிற் பாடுவதே தந்தொழிலாகவுடைய குசிலவர்கள் அதனைக் கற்றுக்கொண்டு தாஞ் செல்லுந் தேசங்கடோறுமுள்ள ராஜ சபைகளிலும் மற்று மிடங்களிலும் எடுத்தோதி வந்தார்கள். இந்தக் குசிலவர்களையே பிற்காலத்தார் இராமன் புத்திரர்களாகிய குசலவர்களாக்கிவிட்டார்கள். காவிய இலக்கணங்களுக்கியைய முதன் முதற் செய்யப்பட்டமையின் இராமாயணம் ஆதிகாவியமெனப் பெயர் பெறும்.

இது வான்மீகனாராற் செய்யப் பட்டபோது ஐந்து காண்டங்களையே உடைத்தாயிருந்தது. ஏழாவதாகிய உத்தரகாண்டம்

வெகு காலத்திற்குப் பின் இயற்றிச் சேர்க்கப்பட்ட தென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆறுங்காண்டத்தின் முடிவே முன்னர்க் காலத்தில் நூன் முழுமைக்கும் முடிவாயிருந்த தென்பது மிகத் தெளிவாய்த் தெரிகின்றது. முதலாவதாகிய பாலகாண்டத்துள்ள பல பாகங்கள் பின்வருங் காண்டங்களிலுள்ளவைகளோடு முரணுகின்றன. அதுவுமின்றி அதனிடத்து இரண்டு அநுக்கிரமணிகைகள் காணப்படுகின்றன. அவை முதற்சருக்கமும் மூன்றும் சருக்கமும். இவைகளிரண்டும் ஒரே காலத்தில் செய்யப்பட்டன வல்ல. முதற்சருக்கம் பாலகாண்டக் கதையையும் உத்தரகாண்டக் கதையையும் சங்கிரகித்துக் கூறுமையின், அஃது அவ்விரண்டு காண்டமும் வான்மீகர் இயற்றிய நூலோடு சேர்க்கப்படு முன்னர்ச் செய்யப்பட்ட தென்பது தேற்றம். அயோத்தியா காண்டத்தில் முதலில் நூலிற்குத் தொடக்கமாயிருந்த பாகம் அதினின்றும் பிரிக்கப்பட்டு இப்போது பாலகாண்டத்தில் முதலில் நூலிற்குத் தொடக்கமாயிருந்த பாகம் அதனினின்றும் பிரிக்கப்பட்டு; இப்போது பால காண்டத்தில் ஐந்தாஞ் சருக்கத்திற்குத் தொடக்கமா யிருக்கின்றது. இவைகளே அன்றி வான்மீகனாராற் செய்யப்பட்ட நடுவணைந்து காண்டங்களிலும் சில சருக்கங்களும் சுலோகங்களும் புதிதாகச் செய்து சேர்க்கப்பட்டுள்ளன. இவைகள் முன்னும் பின்னுமுள்ள சருக்கங்களோடும் ஒட்டப் பொருந்தாமையின் யாவரும் கண்டுணரற் கெளியவைகளாயிருக்கின்றன. இவைகளையெல்லாம் மேலைத் தேசத்துப் புலவராகிய * ஆசிரியர் ஜாக்கோபியார் மிக நுண்ணிதாக வாராய்ந்து நிரூபித்துள்ளார்.

இராமயணத்தில் இப்போதுள்ள சுலோகத்தொகை இருபத்து நாலாயிரம். உத்தரகாண்டத்தில் நூலினளவு கூறுமிடத்து இராமாயணம் ஆறு காண்டத்தோடு ஒருத்தர காண்டமுமுடைத்தென்பதும் ஐஞ்ஞூறு சருக்கமும் இருபத்துநாலாயிரஞ் சுலோகமுங் கொண்ட தென்பதும் சொல்லப்பட்டுள. இதனால் உத்தரகாண்டம் சேர்க்கப்பட்டது இராமாயணம் பலவாறு வளர்ந்து இப்போதுள்ள அளவினதாயபோதென்பது

* Prof Jacobi.

செவ்வனே புலப்படும். மகாபாரதத்திற்குரைத்தது போலவே இராமாயணம் ஆதியில் இத்தனை சுலோகங்கள் கொண்டதாயிருந்ததென்று கூறமுடியாது. அக்கணக்கு நூலின் எவ்விடத்தும் சொல்லி இல்லை. மகாபாரதத்தைப்போலவே இராமாயணமும் காலஞ் செல்லச் செல்ல வளர்ந்து கொண்டு வந்தது. புதிய உபாக்கியானங்களும் கதைகளும் வேண்டிய வேண்டியாங்குச் சேர்க்கப்பட்டு மகாபாரதம் வளர்ந்தது ; இராமாயணம் அங்ஙனமின்றி ஓரிடத்திற்கூறிய கதைகளையும் காட்சிகளையுமே பெயர்த்தும் பெயர்த்தும் இரண்டு மூன்றிடத்திற் கூறுவதனாலும் வருணிப்பதனாலும் வளர்ச்சியடைந்தது. இராமனுடைய குணங்களின் மேன்மையையும் சீதையினுடைய கற்பின் மிகுதியையும் மீட்டும் மீட்டும் புகழ்வதற்காகப் பல சுலோகங்களும் சருக்கங்களும் புதிதாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன. இராமனைக் காட்டிற் கனுப்பிவிட்டுத் தசரதனடைந்த துன்பமும், அவனைப் பிரிந்து தாயாகிய கோசலை பட்ட வருத்தமும் பிற்காலத்தில் தோன்றிய புலவர்களால் அனேக புதுச் சுலோகங்களில் வருணிக்கப்பட் டுள்ளன. அவ்வாறே இராமனுடைய தம்பிமார்களது அன்பும் ஆண்மையும், முனிவர்களது தவத்தின் பெருமையும், அவர்கள் வாசஞ்செய்த இடத்தின் சிறப்பும் எத்தனையோ முறை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இராமாயணஞ் செய்துள்ளது சுலோகத்தால். அதுவே சம்ஸ்கிருதப் பாக்களி லெல்லாம் செய்ய எளிதானது. அதனால் அது புலவர்களுக்கு வேண்டியபடி புதுச்சுலோகங்களையுஞ் சருக்கங்களையும் செய்து சேர்க்க இடங்கொடுத்தது. அதனாலேயே ஒரு சருக்கத்தில் நன்றாக விரித்துரைத்துள்ள சம்பவங்கள் அதனையடுத்துத் தொடர்ந்து வரும் இரண்டு மூன்று சருக்கங்களில் மீட்டும் மீட்டும் கூறப்பட்டுள்ளன. இச் சொருகுகவிகளால் நூல் அழகு கெட்டதொன்றன்றி ஒருமுறை கூறியதனையே மறித்தும் கூறுவதனாற் கதையினிமையும் பாழ்பட்டுக் கிடக்கின்றது.

இனி இராமாயணம் தோன்றிய காலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். மகாபாரதத்தின்கணுள்ள உண்மையான இதிகா

சப் பாகங்கள் ஒன்று சேர்த்து ஒரு வழிப்படுத்தப் படுமுன்னம் இராமாயணத்தில் வான்மீகனுரால் இயற்றப்பட்ட பாகங்கள் தோன்றியிருக்க வேண்டுமென்பது புலப்படுகின்றது. இராமாயணத்திற் பாரத வீரர்களின் கதைகள் சொல்லப்படாதிருக்க, மகாபாரதத்திற் பலவிடங்களில் இராமனுடைய சரித்திரம் குறிக்கப்பட்டுளது. அன்றியும் மகாபாரதத்திற் கர்ண பருவத்தில் இராமாயணத்து யுத்தகாண்டத்திலிருந்து ஒரு சுலோகம் எடுத்தாளப்பட்டுளது. இவைகளினுல் வான்மீகியாரியற்றிய ஆதிகாவியம் மகாபாரதம் யாக்கப்படுகின்ற காலத்தில் ஒரு பழ நூலாக வழங்கிவந்திருக்க வேண்டுமென்பது தேற்றம். மகாபாரதத்தில் வனபருவத்திற் கூறப்பட்டுள்ள ராமோபாக்கியானத்திற்கு முதனூல் வான்மீகி ராமாயணமே போலும். அதன் சுலோகங்கள் சில வான்மீகியின் சுலோகங்களோ டொத்திருக்கின்றன. அதனை இயற்றினவரும் அதனைக் கேட்பவர்கள் இராமாயண மறிந்தவர்களா யிருப்பார்கள் என்ற எண்ணத்தோடேயே இயற்றினவராய்த் தோன்றுகின்றனர்.

புத்த சமயநூல்களுள் ஒன்ருகிய புத்த ஜாதகக்கதையில் தசரத ஜாதகத்தில் இராமனுடைய கதை கூறப்பட்டுளது. இதிற் கூறப்பட்ட கதை இராமனுடைய வனவாசத்தோடு முடிகின்றமையின் தசரத ஜாதகம் இராமாயணத்திற்கு முற்பட்டதென்பது தோன்றும். ஆயினும் தசரத ஜாதகத்தில் அதை யியற்றினவருக்கு இராமன் இலங்கைக்குச் சென்றதும் தெரிந்திருக்க வேண்டு மென்பதற்குச் சிலகுறிகள் காணப்படுகின்றமையானும் இராமாயணத்து யுத்தகாண்டத்தில் உள்ள சுலோகம் ஒன்று அதில் உரை நடையிற்சேர்த்து எழுதப்பட்டுண்மையானும் இராமாயணம் தசரத ஜாதகத்திற்கு முற்பட்டதென்று இப்போது கொள்ளப்படுகின்றது. புத்தனைப்பற்றி இராமாயணத்தில் ஓரிடத்திலேயே குறிக்கப் பட்டுளது. அது பிற்காலத்திற் புதிதாய் இயற்றிச் சேர்க்கப்பட்ட பாகத்திலாதலின் மேற்கூறிய கொள்கைக்குச் சிறிதும் முரணுகாது.

இராமாயண நூலுடையார்க்குக் கிறிஸ்து பிறக்க முன்னூறு வருஷங்களுக்குமுன் இந்தியாவிற்குவந்த கிரேக்கர்களைத்

தெரியுமோ வென்பதும் இராமாயணத்தின் கால நிர்ணயத்திற்கு ஒருதவியாகும். கிரேக்கர்களாகிய யவனர்களைப்பற்றி இராமாயணத்தில் இரண்டிடத்திலேயே கூறப்பட்டிருக்கின்றது. அது பாலகாண்டத்திலும் கிஷ்கிந்தா காண்டத்திலுமாம். இவையிரண்டும் பிற்காலத்திற் புதியனவாய் இயற்றிச் சேர்க்கப்பட்ட பாகங்கள் என்று மேற்கூறிய ஆசிரியர் ஜாக்கோபியார் காட்டியிருக்கின்றனர். ஆகவே இது வான்மீகியார் இயற்றிய இராமாயணத்தில் இப்பாகங்கள் சேர்க்கப்பட்டது இந்தியாவிற்குக் கிரேக்கர்கள் வந்ததன் பின் என்பதையே காட்டும்.

இராமாயணத்தில் இந்தியாவின் கீழ்பாகத்தில் இருந்தனவாகக் கூறப்படும் இராச்சியங்களும் அதன் கால நிர்ணயத்திற் கோராதாரமாகும். இராமாயணத்திற் பாடலிபுத்திர நகரத்தைப் பற்றிச் சொல்லப்படவே இல்லை. அது கிறிஸ்து பிறக்க முந்நூற்றெண்பது வருஷங்களுக்குமுன் வைசாலி நகரத்தில் இரண்டாம் புத்த சங்கம் இரீஇய காலாசோக அரசனால் உண்டாக்கப்பட்டது. கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வந்தபோது அஃது இந்தியாவிற்குத் தலைநகரமாயிருந்தது. பாலகாண்டத்தில் முப்பத்தைந்தாஞ் சருக்கத்திற் பாடலிபுத்திர நகரம் இருந்த இடத்தின் வழியாக இராமர் போனதாகக் கூறப்பட்டுளது. முப்பத்திரண்டாம் முப்பத்து மூன்றாம் சருக்கங்களிற் பாலகாண்டத்தை இயற்றினவர் இராமாயணத்தின் பெயர் எவ்வளவு தூரம் பரவியிருந்த தென்பதைக் காட்டுதற்குப்போலும், இந்தியாவின் கீழ்பாகத்திருந்த கௌசாம்பி, கன்யா குப்ஜம், காம்பிலி ஆதியாம் பல நகரகங்களின் தோற்ற வரலாறுகளை எடுத்துக் கூறியிருக்கின்றனர். அந்தக்காலத்திற் பாடலிபுத்திரம் இருந்திருக்குமாயின் அது தோன்றிய வரலாற்றையும் அவர் கூறாது விடார்.

இராமாயணத்தில் வான்மீகியார் இயற்றிய பாகத்தில் வருமிடங்கடோறும் கோசலநாட்டிற்குத் தலைநகரம் 'அயோத்தியா' வென்றே கூறப்பட்டுளது. அதனைப் பௌத்தர்களும், சமணர்களும், கிரேக்கர்களும் பதஞ்சலியாரும் எவ்விடத்தும் சாகேதமென்றே கூறுகின்றனர். உத்தரகாண்டத்தில் இராமன் குமார

ஞகிய லவன் சிராவஸ்தி என்னும் நகரத்தைத் தனக்கு ராஜதானியாக்கிக் கொண்டான் என்று சொல்லப்பட்டுளது. புத்தனுடைய காலத்திற் கோசலநாட்டை அரசாண்ட பிரசேனஜித்து என்னும் அரசனும் சிராவஸ்தியிலிருந் தரசாண்டதாகவே தெரிகின்றது. இவைகளெல்லாம் பழைய அயோத்திநகரம் குடிஎழும்பாத முன்னும், அதுவே கோசலநாட்டிற்குத் தலை நகரமாய் இருந்தபோதும், அதற்குப் புதிதாய் வந்த சாகேதம் என்னும் பெயர் வழங்காததற்கு முன்னும் சிராவஸ்தி என்னும் நகரம் ராஜதானி ஆக்கப் படாததற்கு முன்னும் இராமாயணத்தின் பழம்பாகம் இயற்றப் பட்டதென்பதை நன்கு புலப்படுத்துகின்றன. அன்றியும் பாலகாண்டத்தில் மிதிலையும் விசாலையும் இரண்டு நகரங்களாகவும் வெவ்வேறரசர்களால் ஆளப்பட்டனவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளிரண்டும் புத்தர் காலத்தில் வைசாலி என்று பேர்பெற்ற ஒரு நகரமாகி ஓரரசின் கிழாகிவிட்டது.

இதுகாறும் கூறியவாற்ருல் இந்தியாவிற் புத்த சமயம் தோன்றுவதற்கு முன்னரேயே வான்மீகியாரால் இராமாயணம் இயற்றப்பட்ட தென்பதும் புதிதாய்ச்செய்து சேர்க்கப்பட்டனவாகிய பாலகாண்டம் முதலிய சிலபாகங்களும் அக்காலத்திலேயே சேர்க்கப்பட்டு விட்டன வென்பதும் தெரிய வருகின்றன. இதனினும் வரையறவாக இதைப்பற்றிச் சொல்லுதல் கூடாது.

சில மாதங்களுக்குமுன் வான்மீக ராமாயணத்தைத் தமிழ் வசன நடையில் மொழிபெயர்த்து வெளியிட்ட பண்டிதர் நடேச சாஸ்திரியார் தமது முகவுரையில் "மகா பாரதம் உண்டாவதற்கு வெகு காலங்களுக்கு முன் இராமாயணம் தோன்றி எழுத்தில் ஏற்படுத்தப்படாமல் வேதம்போல் ஜனங்களுக்குள் அத்தியயன ரூபமாய் விளங்கி வந்ததென்றும், இராமாயணத்திற் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் மகாபாரதத்தி லிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் பழமையான விஷயங்கள் என்றும் தெரிகிறது" என்று கூறித் தமது கொள்கைக்கு எழுகாரணங்களும் எடுத்துக் காட்டியிருக்கிருர். இங்ஙனம் பண்டிதர் கொண்ட

கொள்கை நாம் மகாபாரத ராமாயணங்களைப்பற்றி எழுதியவற்றில் எடுத்துக்கூறிய கொள்கையோடு ஒற்றுமையுடைத்துப் போற்றேன்றினும் அஃது உண்மையில் அங்ஙன மன்றென்பதை இங்குச் சிறிதெடுத்துக் கூறுவாம்.

பண்டிதர் மகாபாரதத்திற்கு இராமாயணம் முந்தியதென்றும் முன்னையதிற்கூறும் விஷயங்களினும் பின்னதிற்கூறும் விஷயங்கள் பழமையானவையென்றும் கொண்டிருக்கிறார். பாண்டவர்களுடைய காலம் இராமனுடைய காலத்திற்குப் பிந்தியதென்பது அவர் கொள்கைபோலும். எமது கொள்கை அதுவன்று; பாண்டவர்களுடைய காலம் முன் என்றும் இராமனுடைய காலம் பின் என்றும் நாம் கொள்கின்றோம். இந்தியாவிலுள்ள ஆரியர்கள் இமயமலைக்கு அப்புறத்திலிருந்து வெகுகாலத்திற்கு முன் இங்கேவந்து முதலிற் பஞ்சநதி தீரங்களிற் குடியேறிப் பின்னர்க் கிழக்கிலும் தெற்கிலும் மற்றையிடங்களிலும் பரவினர்கள் என்பது இப்போது வழக்காற்றிலுள்ள கொள்கை. இஃதுண்மையாயின் உத்தரத்திலுள்ள அஸ்தினபுரத்தில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலம் அந்நகரத்திற்குத் தென்கிழக்கிலிருந்த அயோத்தியில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலத்திற்கு முற்பட்டதென்பது பெறப்படும். பாரதயுத்தம் நடந்த காலத்தில் ஆரியர்கள் பஞ்சநதி தீரங்களைக் கடந்து கிழக்கிலும் தெற்கிலும் பரவி இராச்சியங்கள் ஏற்படுத்தினதாகக் காணப்படவில்லை. ஒருபெண் நாயகர்கள் பலரை மணத்தலாகிய அநேகபதி விவாகம் முதலிய மிகப்பழைய வழக்காறுகள் பாண்டவர் காலத்திருந்தமையின் பாரதயுத்தம் நடந்தகாலம் மிகவும் முற்பட்டதென்பது தேற்றம். இராமனுடைய காலத்தில் இவ்வகை வழக்காறுகள் இருந்தனவாகத் தெரியவில்லை. மகாபாரதத்தில் அனேக ராச்சியங்கள தக்ஷிணத்தில் இருந்தனவென்றும் யவனர் முதலிய ஜாதியார் அனேகர் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுளதே என்னின், இவைகளெல்லாம் பிற்காலத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களிற் காணப்படுகின்றனவே அன்றி ஆதியில் தோன்றிய பாகங்களில் அல்ல என்பது. மகாபாரதம் முதலில் எழுதாக்கேள்வியாயே பயின்று வந்ததென்

றும் அதில் விநாயகர் அதனைக் கொம்பினால் மேருமலையில் எழுதினர் என்றுங் கூறும் பாகம் பிற்காலத்துச் செய்து சேர்க்கப்பட்ட தென்றும், அஃது எல்லாப் பிரதிகளிலும் காணப்படவில்லையென்றும் முன்னரே கூறியுள்ளோம். இவைகளினாற் பண்டிதர் தமது கொள்கைக் காதாரங்களாகக் காட்டும் காரணங்கள் ஏழும் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க.

பண்டைத்தமிழ்ச் சொற்கள்

ஒளி (கூ)

[திரு. M. V. நெல்லையப்பபிள்ளை அவர்கள், B. A.]

கடவுளைக் குறிக்கப் பண்டைத் தமிழர் வழங்கிவந்த சொற்களில் ஒளி என்னும் சொல் ஒன்று. ஒளி என்ற கருத்து மாந்தர்களுக்கு முதன்மையாய் ஞாயிற்றினுடைய ஒளியின் பழக்க அறிவாலுண்டாகின்றது. பண்டைத் தமிழர்கள் கடவுளை ஒளி என்று கூறக் காரணம் என்ன என்பதைப்பற்றி இக்கட்டுரையில் ஆராய்வாம்.

2. ஒளி என்ற சொல் ஒண்மை + இ என இரண்டு சொல்லா லாகியது. ஒண்மை என்னும் பண்புப்பெயரின் ஈற்றிலுள்ள "மை" விகுதி கெட்டு ஒண் என நின்று பின் முன்னின்ற மெய் ளகரமாய்த் திரிய, அதனுடன் வினை முதற்பொருள் விகுதி "இ" சேர்ந்து ஒளி என்று ஆகியது. ஒண்மை என்ற சொல்லின் முதற்பொருள் (primary meaning) விளக்கம் (brightness) ஆகும். வடமொழியில் அது பிரகாசம் என்றும் சோதி என்றும் கூறப்படும். சுடர், விளக்கு, ஒளி என்பன ஒரு பொருட்சொற்கள். ஒளி என்ற சொல் வழிப்பொருள்களில் (derived meaning) அறிவு, புகழ்,வெயில், மின்னல் முதலியவற்றைக் குறிக்கவும் தமிழ்நூலில் வழங்கப் படுகின்றது. இந்த முதற்பொருளாகிய விளக்கம் என்ற பொருளிலே ஒளி என்ற சொல் கடவுளுக்கு வழங்கப்படுதலைப் பற்றியே இங்கு

பேசப்படும். இந்தக்கருத்தில் எந்தப்பொருள் ஒளியைச்செய்யுமோ அந்தப்பொருள் ஒளியாகும். ஒருபொருள் தான் ஒளியாயிருந்தாலொழிய பிற பொருள்களை ஒளிசெய்தல் முடியாது. வேறொரு பொருளினது சார்பின்றித் தனி ஒளியாய் (சுயம்பிரகாசமாய்) விளங்குகிற பொருளும் பிற பொருள்களை ஒளிசெய்கிற பொருளும் கடவுளே யாகும்.

3. கடவுள் ஒளியைச்செய்கிற பொருள் என்றால் யாருக்கு அல்லது எதனுக்கு ஒளி செய்கிறான் என்ற கேள்வி பிறக்கும். கடவுள், உயிர், உயிரில் உலகம் என்ற மூன்று பொருள்களில் கடவுள் ஏனைய உயிர்களுக்கும் உயிரில் பொருள்களுக்கும் ஒளியைச் செய்கின்றான் என்பதே அக்கேள்விக்கு விடையாகும்.

4. கடவுள் உயிர்களுக்கும் உயிரில் பொருள்களுக்கும் ஒளியைச் செய்கின்றான் என்றால் ஒளி என்பது என்ன? அவன் உயிர்களுக்கு ஒளி செய்தற்குக் காரணம் என்ன ? உயிர்களிடத்தில் ஒளி இல்லையா ? ஒளியில்லையானால் அவைகளிடம் என்ன இருந்தது? இந்தக்கேள்விகள் கேட்கிறவர்களுடைய மனதிலுண்டாகும். நாம் அந்தக்கேள்விகளுக்கு விடை அளித்தாலொழியக் கடவுளை ஏன் பண்டைத் தமிழர்கள் ஒளி என்று கூறினர்கள் என்பது நமக்கு நன்கு விளங்காது.

5. ஒளி என்னும் கருத்து நான் முன்னேகூறியபடி நமக்கு ஞாயிற்றின் ஒளிப்பழக்கத்தால் உண்டாகின்றது. ஞாயிற்றின் ஒளி மாந்தர்களாகிய நமக்குப் புறமே உள்ள ஒளி. அது பகற்காலத்தில் வானில் (ஆகாயத்தில்) எங்கும் விளங்குகின்றது. இரவுக்காலத்தில் அவ்வொளி ஞாயிற்றில் ஒடுங்குகிறது. ஞாயிறு காலையில் கிழக்கே தோன்றியதும் இரவிலுள்ள வெளி இருள் நீங்குகின்றது. இருள் நீங்கின பகற்காலங்களில் மாந்தர் தங்களுடைய பல கருமங்களையும் உலகிலே செய்கிறார்கள். அந்த ஞாயிற்றின் ஒளியின் துணையில்லாமல் அவர்கள் உலகில் ஒரு கருமத்தையும் செய்ய முடியாது. ஞாயிற்றினொளி நீங்கின இரவில் அவர்கள் யாதாவதொரு கருமஞ் செய்ய வேண்டுமானால் திங்களினொளியை அல்லது விண்மீன்களினொளியை அல்லது

பலவகை விளக்குகளினொளிகளில் ஒன்றைத் துணையாகக் கொண்டுசெய்கிறார்கள். கடவுளுடைய அருள் ஒளியாலே ஞாயிறு திங்கள் முதலியவை விளங்குகின்றன. ஆகவே எந்த ஒளியாயிருந்தாலும் இருள் நீக்கத்துக்கு ஒளி இன்றியமையாது வேண்டப்படுவதாகின்றது.

6. மேலே கூறிய ஞாயிற்றினொளி முதலிய ஒளிகள் எல்லாம் புற ஒளிகள். கடவுள் உயிர்களுக்கு ஒளியைச் செய்கின்றான் என்ற வசனத்தில் அடங்கியுள்ள ஒளி இந்தப்புற ஒளிகளில் ஒன்றல்ல. நாம் அந்த ஒளி எத்தன்மையதென்று நமது அனுபவத்தை ஒட்டி அறிந்து கொள்ளுதற்கு, அதற்கு ஞாயிற்றொளியை உவமையாக நாம் கூறுகிறோம். கடவுளினது ஒளி அக ஒளி. ஒளியே அவனுடைய உருவம். இந்த ஒளி கடவுளுக்கு ஞாயிற்றின் ஒளிபோல அவனைவிட்டு நீங்காதது. அவனினின்றும் வேறாகாதது. இதுவே தத்துவங்களுக் கெல்லாம் மேலே அறிவு வெளியில் (ஞான ஆகாசத்தில்) விளங்கும் அருள் ஒளியாகும். எத்தனைகோடி ஞாயிறுகளின் ஒளிகள் ஒன்று சேர்ந்து விளங்கினாலும் கடவுளின் அருளொளிக்கு ஈடாகாது. ஞாயிற்றினொளியானது உலகிலுள்ள புற இருளை நீக்குதல்போல கடவுளுடைய அருள் ஒளியானது உயிர்களிடத்தில் அநாதியே சேர்ந்துள்ள ஆணவமலத்தை நீக்கி அறிவை விளங்கச் செய்கிறது. உயிர்களிடத்தில் ஆணவமல மிருத்தலினாலேயே கடவுளுடைய அருள் ஒளி அவர்களிடத்தில் விளங்கி ஒளி செய்தற்குக் காரணம் உண்டாயிற்று. இந்த அருள் ஒளியானது எங்கும் நிறைந்துள்ள பேரொளியா யிருத்தலினால் ஆணவமல இருளில் மூழ்கியுள்ள உயிர்கள் தொடக்கத்திலே அந்தப் பேரொளியை அடைதல் முடியாது. ஆதலின் அந்தப் பேரொளி மாயா காரியங்களாகிய பலவகை நுண்மை பருமைகளையுடைய தத்துவங்களின் வழியாய்க் குறைந்து குறைந்து உயிரில்உலகில் விளங்குகிறது. ஆகவே உயிர்களுக்காகக் கடவுளது அருள் ஒளி உயிரில்லாத உலகத்திலும் விளங்குகின்றது. இந்தப் பேரொளி பலவகை மாயா தத்துவங்களோடு கூடிய உலகில் குறைந்து விளங்கும் பொழுது உயிர்கள் தொடர்புபட்டமட்டும் (சம்பந்தப்பட்

டமட்டும்) ஆணவமலமும் அதனுடன் விளங்குகின்றது. கடவுளது அருள் ஒளிக்கும் ஆணவமல இருளுக்கும் ஒன்றே இடமாயிருத்தலால் உலகமானது அறிவு அறியாமை, துன்பம் இன்பம், பேறு இழவு, நன்மை தீமை முதலிய பல முரணிரட்டைகளாய் (pairs of opposites) அமைந்திருக்கின்றன. உயிர்கள் இந்த முரணிரட்டைகளாகிய வாலாமை (அசுத்தம்) யிலிருந்து நீங்கித் தூய்மை அடைந்து தனிப்பேரொளியை நேரே அடைதற்குத் தகுதியுடையவைகளாய் வீடுபேறு அடைகின்றன. சுருக்கத்தில், சார்ந்தவண்ணம் ஆகும் இயற்கை உடைய உயிர்கள் கடவுளது அருளொளியைச் சார்ந்தாலன்றி, புலனறிவு ஆராய்ச்சி அறிவுகளாக மாந்தர்களிடம் விளங்குகிற ஒருபுடை விளக்க அறிவாவது தனி அருள் அறிவு ஆகிய மெய்யுணர்வாவது அடைதல் முடியாது. இக்கருத்துக்களே ஒளியைப் பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள்.

7. மேலே கூறிய வண்ணம் கடவுள் உயிர்களுடைய ஆணவமல நீக்கத்தின்பொருட்டு அவைகளுக்கு முதலாவது உலகிலுள்ள தத்துவங்களின் வழியாய்த் தன்னினின்றும் நீங்காதஅருட்பேரொளியைக் குறைத்து விளங்கச் செய்தும் உயிர்கள் பக்குவமடைந்தபின் அவைகளிடத்தில் நேராய் அவ்வொளியை முற்றிலும் விளங்கச் செய்தும் வீடு பேறு அடைவிக்கின்றான். இவ்வாறு கடவுளது அருட்பேரொளி முற்றிலும் விளங்கப் பெற்றவர்களே சைவசமய குரவர்களாகிய நான்கு பெரியோர்களும். அவர்கள் தன்முனைப்புச் சிறிது மின்றிச் சிவபெருமானாகிய கடவுள் அருட்பே ரொளியில் விளங்குகிறவர்கள். அவர்கள் தங்கள் உள்ளத்தில் சிவனாய் நிற்கிற அருட்பேரொளி உருவினைக் கண்டு உணர்ந்தவர்கள். "நன்றானம் மனம் வைத்திடுஞானமாம் - ஒன்றனைக்கண்டு கொண்ட தென்னுள்ளமே" என்றும் "சிந்தையுட் சிவனாய் நின்ற—உருவனைக்கண்டு கொண்ட தென்னுள்ளமே" என்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியிருத்தல் காண்க. கடவுளினது அருட்பேரொளியில் உண்மை அறிவு விளங்கப்பெற்ற இத்தகைய பெரியார்கள் தங்கள் வாயினாற் கடவுளைத் துதிக்கும் கருத்துக்கள் அவர்களது உள்ளத்திலிருந்து

இயல்பாகவே பொங்கித் ததும்பி எழுகின்ற அனுபவ உண்மைக் கருத்துக்களாகவே யிருக்கும். ஆதலின் அவர்கள் தங்களுடைய உள்ளத்தில் அருள் ஒளியாகிய பேரறிவு முற்றிலும் விளங்கச் செய்த கடவுளை ' ஒளி ' என்று கூறினர்கள்.

8. மூவரும் தங்கள் பாடல்களில் பல இடங்களில் கடவுளை ஒளி என்றும் அதே பொருளைத்தரும் 'சுடர்' 'விளக்கு' 'சோதி' என்றும் கூறியிருக்கிறார்கள். இவ்விரண்டு இடங்கள் மாத்திரம் இங்கே காட்டப்படும் திருஞான சம்பந்தசுவாமிகள் திருப்பிரமபுரம் 6-வது பாட்டில் " ஒளி திகழுருவஞ் சேரொருவர் " என்றும், திருப்புள்ளமங்கைப்பதிகம் 6-வது பாட்டில் " இளநாயிறின் சோதியன்றான் " என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தூங்கானைமாடப்பதிகம் முதலாவது பாட்டில், " திருத்தூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தே " என்றும் திருமழபாடித் திருத்தாண்டகம் 10-வது பாட்டில் " ஒருசுடரா யுலகேழுமா முளகண்டாய் " என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்காளத்திப் பதிகம் 1-வது பாட்டில் "செழுஞ் சுடரே" என்றும், 9-வது பாட்டில் " திருக்காளத்தியுள் ளிருந்த ஒளியே " என்றும் பாடியிருக்கின்றார்கள்.

9. மாணிக்கவாசக சுவாமிகள் " சுடரே, " "சுடரொளி விளக்கே, " " உள்ளத்து ளொளிர்கின்ற ஒளியே; " " கொழுஞ் சுடர்க் குன்றே, " " என்னுளெழுபரஞ்சோதியே, " " காண்பரிய பேரொளியே, " "மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே," " மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே," " தேசனே " " கேழிப்பரஞ்சோதி " முதலிய சொற்களாலும் சொற்றொடர்களாலும் பலபாட்டுகளில் கடவுளைத் துதித்துக் கூறியிருக்கின்றார்.

10. இன்னும் திருக்கோவையார், திருவிசைப்பா, பதினோராந் திருமுறை நூல்கள், பெரிய புராணம் முதலிய அருட்டிருமறை நூல்களிலும் பின்னே தோன்றியுள்ள தாயுமானசுவாமிகள், குமரகுருபர சுவாமிகள் முதலிய அருளாளர்கள் நூல்களிலும் கடவுள் ' ஒளி ' ' சுடர் ' ' சோதி ' 'விளக்கு' என்ற சொற்

களாற் பல இடங்களிற் துதிக்கப்பட்டிருத்தலை நாம் காணலாம். ஆனால், அருளாளர்களல்லாத் தமிழ்ப்புலவர்கள் பாட்டில் அத் தன்மையவான சொற்களையும் சொற்றொடர்களையும் நாம் காணு தல் அரிதாகும்.

11. கடவுள் அறிவாகிய ஒளிவடிவினன் என்பது அவ னுடைய உண்மை இலக்கணம் (சொரூப இலக்கணம்) ஆகும். அவனை உமை ஒரு பாகன் ஆகவும் நான்கு முகம் மூன்று கண் கள் முதலிய உறுப்புக்களையும் சூலம் மழு முதலிய படைகளை யும் உடையவனாகவும் கூறுதல் அவனுடைய பொது இலக்கணம் (தடத்த இலக்கணம்) ஆகும். “அருவு முருவும் அறிஞர்க் கறிவாமுருவு முடையானுளன்” என்பது திருவருட்பயன்.

12. ஒளி, சுடர், விளக்கு முதலிய தமிழ்ச்சொற்களையும் சோதி தேசு என்ற வடமொழிச் சொற்களையும் பண்டைத்தமி ழ்ப் பெரியோர்கள் கடவுளைக்குறிக்க வழங்கி வந்தமையால் அவர்கள் அல்லாமல் அவர்கள் தமிழ்த்திருமறைகளைப் பாடின காலத்தில் இருந்த தமிழ்நாட்டு மக்களும் சைவசித்தாந்த உண் மைகளை அறிந்த சைவசமயிகள் என்று நாம் ஊகித்து அறிய லாம். கடவுள் தன்னினின்றும் வேறாகாத அருளால் உலகத்தை உயிர்களுடைய மலநோய்த்தீர்வுக்காகப் படைத்துக் காத்து அழித்தும் உயிர்களை மறைத்தும் நேரே அருள் செய்தும் வரு கின்றான் என்னும் உண்மையானது சைவசமயத்திற்குச் சிறப் பாக உரியது. ஐக்கியவாத சைவர் நீங்கலாகப்பலவகைச் சைவர் கள் தவிர உலகிலுள்ள ஏனைச்சமயத்தவர்கள் ஆணவமல உண் மையைக் கூறுவதில்லை. ஆணவமலம் இருள்போல்வது என் றும் அருள் ஒளிபோல்வதென்றும் ஒளியும் இருளும் எதிரி டைப் பொருள்கள்போல அருளும் ஆணவமலமும் எதிரிடைப் பொருள்கள் என்றுங் கூறுவது சைவசமயமே. வேதாந்திகள் என்று கூறப்படுகின்ற ஏகான்மவாதிகள் இருள் என்று தனியே ஒரு பொருளில்லை என்றும், ஒளியின்மையே இருள் ஆதல்போல அறிவு இன்மையே அறியாமை என்று கூறுகிறார்கள். அக் கூற்று இக்காலத்து மேற்கு நாட்டு இயற்கை ஆராய்ச்சி உண் மைக்குப் பொருந்தாததாகும்.

நால்வர்களும் கல்வெட்டுகளும்

II. அப்பர் சுவாமிகள்

[திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் இயற்றியது.]

(கதூ-ம் பக்கத் தொடர்ச்சி)

(C) நாயனுர் மடங்கள் : அவைகள் ஏற்பட்ட காலமும் தானம் முதலியவைகளும்.

1. திருச்சி ஜில்லா திருப்பராய்த்துறை ஆதிமூலேசுவரர் ஆலயத்து முன்மண்டபத்துச் சுவர். கி. பி. 1007 - இராஜகேசரிவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவன் I—22-ம் ஆண்டு. அந்த ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பெற்ற திருநாவுக்கரைசு தேவன் மடத்தில் மாகேசுரர்களுக்கு அன்ன தானம் செய்ய நிலதானம் செய்தது. (திருச்சி 644.)

2. தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலூக்கா திருவீழிமிழலை-வீழிநாதஸ்வாமி ஆலயம் முதல் பிரகாரத்து வடச்சுவர். கி. பி. 1017-திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜேந்திர சோழதேவன்-2-ம் ஆண்டு. இப்பெயருள்ள அரசர்கள் மூவர் இருந்தார்கள். இதர பிரிதுகள் சொல்லப்படாமையினுல் முதல் இராஜேந்திரனுக எடுத்துக்கொள்ளப்பட்டது. இச்சாசனத்தில் திருவீழிமிழலையில் திருநாவுக்கரசு மடத்துக்குச் சொந்தமான நிலங்களின் அட்டவணை குறிக்கப்பட்டிருக்கிறது. (தஞ். 843.)

3. தென் ஆறுகாடு, கூடலூர் தாலூக்கா திரு அதிகை வீரட்டானேசுரர் ஆலயத்து முதல் பிரகாரத்து தென்சுவர். கி. பி. 1114 - இராஜகேசரிவர்மன், திரிபுவனச் சக்கிரவர்த்தி, குலோத்துங்கச் சோழன் I-44-ம் ஆண்டு. வாச்கர் மடத்திற்கு நிலதானம் செய்தது. (தென்ஆறு 311.)

4. செங்கல்பட்டு ஜில்லா, சைதாப்பேட்டை தாலூக்கா வேளச்சேரி, தண்டீசுர சுவாமி ஆலயத்து கர்ப்பக் கிரகத்தின் வடச்சுவர். கி. பி. 1203 - திரிபுவனச் சக்கிரவர்த்தி குலோத்

துங்கச் சோழ தேவன் III ஜயங்கொண்டசோழ மண்டலத்து உட்பிரிவான குலோத்துங்கச்சோழ வளநாட்டுத் திருவான்மி யூரில் திருநாவுக்கரசு மடத்திற்குச் சேதிராய தேவனால் பூதானம் செய்தது. அவ்விதம் செய்த நிலமானது வேளச்சேரி என்னும் ஜினசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் இருந்ததா கக் கண்டிருக்கிறது. (செங். 1131.)

5. தஞ்சை ஜில்லா மாயவரம் தாலூக்கா, குறுக்கைவீரட் டானேசுவரர் ஆலயத்து முன்மண்டபத்துத் தென் சுவர். கி. பி. 1207. திரிபுவனச் சக்கிரவர்த்தி குலோத்துங்கன் III-29 ம் ஆண்டு. விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டில் குறுக்கை என்ற விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலத்தில் திருப் பள்ளியறை வேலையாட்களுக்கு ஊதியத்திற்கும் திருநாவுக்கரசு திருக்குகை கட்டுவதற்கும் அக்குகைக்கு வரும் அபூர்விகளுக்கு உணவளிக்கவும், திருவைகாசித் திருநாள் உற்சவத்திற்கு வரும் மாகேசுரர்களுக்கு உணவளிக்கவும், நெல் தானம் செய்தது. மேலும், இவ்வாலயத்தில் திருத்தாண்டகம் ஓதும் செய்தியை யும் குறிக்கிறது. (தஞ். 219/17)

6. மதுரை ஜில்லா மேலூர் தாலூக்கா பூதக்குடி. தேதி யும் அரசன் பெயரும் கிடைக்கவில்லை. இது அப்பர் சத்திரத் தில் இருக்கும் ஒரு தாமிரசாசனம். இவ்வூரில் ஒரு மடம் இருந் ததை இது தெரிவிக்கிறது. (மதுரை. 1413)

மேலே சொன்ன கல்வெட்டு முதலியவைகளிலிருந்து கி.பி. 1007-ம் (இராஜராஜன் காலம்) ஆண்டிலிருந்தே அப்பர் மடங் கள் தாபிக்கப்பெற்று வந்தனவென்று தெரிகிறது. அம்மடங் களுக்கு அரசர்களும் பிரபுக்களும் நிலதானங்கள் செய்து வந்த னர் என்றும் அங்கே சிவனடியார்களுக்கு உணவு அளிக்கப்பட் டது என்றும் அறியக் கிடக்கின்றன.

மேலும் அப்பர் மடங்கள்.

1. திருப்பராய்த்துறை
2. திருவீழிமிழலை

3. திரு அதிகை
4. திருவான்மியூர்
5. திருக்குறுக்கை
6. பூதக்குடி

என்ற ஆறு இடங்களில் இருந்தன. அவைகளில் முதல் ஐந்தும் 11, 12 நூற்றுண்டுகளிலேயே ஏற்பட்டன. ஆகவே அவைகள் மிகப் பழமையானவைகள். தற்போது அவைகள் எந்த நிலைமையில் இருக்கின்றனவோ தெரியக்கூடவில்லை. மடத்திற்குத் திருக்குகை என்றபெயர் இருந்ததாகத் தெரிகிறது. 12-ம் நூற்றுண்டிற்குப் பின்னர் திருமடங்கள் ஏன் குறிக்கப்பெறவில்லை என்பதன் காரணம் விளங்கவில்லை. அப்பர் சரிதத்தில் சொல்லப்பட்டிருக்கும் அப்பூதியடிகளின் திங்களூர் மடம் என்ன ஆயிற்றே, ஏன் குறிக்கப்படவில்லையோ தெரியக்கூடவில்லை. பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள்

''நம்பித் திருத்தொண்டு செய்வார் தம்பிரானுர் அருள் பெற்றுத்
திங்களும் ஞாயிறுந்தோயும் திருமடமாங் கொன்று செய்தார்''

என்று அப்பர் சுவாமிகள் கட்டியருளின திருமடம் ஒன்றைக் குறிக்கிறார்கள். அம்மடத்தின் ஒரு பகுதி இப்போதும் உள்ளது. இதைப்போல பல மடங்களின் பெயர்கள் குறிக்கப்படாமல் இருந்திருக்கலாம். தான விஷயங்களைப்பற்றி கற்களில் எழுதி வைக்காவிட்டால் நமக்கு எவ்விதம் தெரியும்?

மேலே 4-வதாகச் சொல்லியிருக்கும் வேளச்சேரியானது முற்காலத்தில் ஜினசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயருடன் விளங்கிற்று. அதனாலே அந்த ஊரில் முற்காலத்தில் சமணர்கள் பிரபலம் அடைந்திருக்க வேண்டும். அந்த ஊர் நிலத்தை அப்பர் திருமடத்திற்குத் தானம் செய்யப் பெற்றதால் அக்காலத்திற்கு முந்தியே சமணம் அழிந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

(d) நாயனர் பெயர்களை இட்டுக்கொள்வது

1. திருநாவுக்கரசு தேவன் : கி. பி. 1025—திரிபுவன சக்

கிரவர்த்தி இராஜேந்திர சோழதேவன் - 12-ம் ஆண்டு. திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூக்கா காமரசவல்லி கிராமம் கார்க்கோடக ஈசுவரர் ஆலயத்தில் சண்டிகேசுரர் சந்நிதானத்தின் சுவர்களில் உள்ள கல்வெட்டு. அந்த ஆலயம் வழிபடுவோனுன ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்துக் குடியான குன்றங்கிழான் திருநாவுக்கரசு தேவன் என்போன் திருஞானசம்பந்தன் திருமடத்திற்குப் பூதானம் செய்தது. (திருச்சி. 854)

2. வாகீசுர பண்டிதர் : கி. பி. 1181. இராஜகேசரிவர்மன் திரிபுவன சக்கிரவர்த்திகள் இராஜராஜதேவர் II—9-ம் ஆண்டு. செங்கல்பட்டு ஜில்லா சைதாப்பேட்டை தாலூக்கா திருவொற்றியூர் ஆதிபுரீசுவர் ஆலயத்து 2-ம் பிரகாரம் கீழ்ச் சுவர். படம்பக்கநாயக தேவர் ஆலயத்தில் பங்குனி உற்சவத்தின்போது அரசன் முன்னிலையில் ஆளுடைய நம்பியின் புராணம் வாசிக்கப் பெற்றதும் அப்போது அவ்வாலயத்தில் ஒரு மடம் வைத்திருந்த சந்திரானன பண்டிதரும், சோம சித்தாந்தத்தை (காபாலிக சைவர்கள் சித்தாந்தம்) வியாக்கியானஞ் செய்துவரும் வாகீசுவர பண்டிதரும், கோயில் நாயகரும், ஸ்ரீகார்யம் செய்வோரும் மற்றும் பலரும் இருந்து கேட்டதாகவும் கண்டிருக்கிறது. (செங். 965)

3. திருநாவுக்கரையன் : சோழன் இராஜகேசரிவர்மன்-15-வது ஆண்டு. இவ்வரசன் சிறப்புப்பெயரும் தேதியும் தெரியவில்லை. 12, 13-ம் நூற்றாண்டாக இருக்கும். தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலூக்கா திருமெய்ஞ்ஞானம் ஞானபரமேசுவராலயத்து வடசுவர். திருமயானத்துப் பரமேசுவரர் ஆலயத்தில் 12 தீபங்களுக்காக 12 ஈயக் காசுகளை நல்லூர் வியாபாரியான நாராயணன் சோழடிகள் என்ற திருநாவுக்கரையன் தானம் செய்தது. (தஞ்சை. 128)

4. வாகீசுரதேவ முதலியார்:—13-ம் நூற்றாண்டு. சகல லோக சக்கிரவர்த்தி இராஜ நாராயண சம்புவராயன்-12-ஆண்டு புரட்டாசித் திங்கள் முதல் தேதி. செங்கல்பட்டு ஜில்லா சைதாப்

பேட்டை தாலூக்கா திருவொற்றியூரில் ஆதிபுரீசுவரர் ஆலயம். திக்கம நாயக்கனுல் வரியிலியாகச் செய்த காடுவன் கோட்டத்து நிலத்தைக் கிழை மடத்து வாகீசுர தேவமுதலியாரால் அவர் இறக்கும் தருவாயில் நித்திய நைமித்தியங்களுக்காகத் தானம் செய்தது. இந்த நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கின விவரம் புழல் கிராமத்தில் உள்ள திருமூலத்தானமுடைய நாயனர் ஆலயத்துக் கற்சுவரில் செதுக்கப்பட் டிருப்பதாகவும் கண்டிருக்கிறது. மேலும் இந்த வாகிசுரருக்குப் பின்பட்டத்திற்கு நியமித்த அழகிய சிற்றம்பல முடையார் என்ற மடத்தலைவருக்கு அந்நிலத்தின் ஓர்பாகமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (செங். 1076)

5. வாகீசுர தேவர்:— 13-ம் நூற்றாண்டு-இராஜநாராயண சம்புராயன்-8-ம் ஆண்டு. செங்கல்பட்டு ஜில்லா புழல் திருமூல ஸ்தான ஈசுவரமுடையார். பெரும்பற்றப் புலியூரில் வசிக்கும் செல்லத் திருவாரூரின் கிழைமட சந்தானத்திற்குச் சேர்ந்த வாகீசுவர தேவர்க்குப் புழல் கிராமத்துக் குடிதானம் செய்தது கூறுகிறது. (செங். 483 / 1920)

(மேலே 4-ல் கண்ட பெயர் இவரே யாக இருக்கலாம்.)

6. திருநாவுடையார்:—கி. பி. 1396. ஜடாவர்மன் திரிபுவன சக்கிரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவன்—12-ம் ஆண்டு. தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூக்கா சூலமங்கலம் கிருத்திவாசேசுரர் ஆலயத்து முன்மண்டபத்து வட சுவர். நித்தவினேதவளநாட்டுக் கிழார் கூற்றம் பிரமதேயமான சூலமங்கலத்தில் கரியுரித்த நாயனர் ஆலயத்தில் திருநாவுடைய பிள்ளையார் விக்கிரகத்தைப் பாண்டி மண்டலம் தயதணர்க்குடி நாட்டுத் திருவாலவாயுடையர் ஆலயத்து அம்மனது தேவதானக் கிராமமான தானவினேதநல்லூர் திருநாவுடையார் என்பவர் தாபித்து நில தானம் செய்தது. (தஞ்சை. 1040)

7. திருநாவுக்கரசன் திருவீதி : தென் ஆறுகாடு திருவதிகை ஆலயம் திருவிரட்டானேசுரர் கோயில் நிலங்களில் பிடாரி கோயிலுக்கு வடக்கே காடழித்து ஊருண்டாக்கித் திருநாவுக்கர

சன் திருவீதி என்று பெயரிட்டு அதில் குடியேறிய நெய்வோர், வாணியர், அங்காடியார் இவர்களுக்கு வரி விதித்தது. தேதி இல்லை—எழுத்து தற்கால எழுத்து. (403/21)

8. வாகீசுரர் கோயில் : 11-ம் நூற்றாண்டு—சோழர் வீர ராஜேந்திரர் முதலிய அரசர்கள். சாசனங்கள் 29 இக்கோயி லில் உண்டு. இவ்வாலயத்து ஈசுவரன் பெயர் வாகீசுவரர்—மதுரை ஜில்லா பழனி தாலூக்கா கீரனூர்.

(மதுரை243—265 F.)

மேற் காட்டிய விவரங்களால் நாயனார் பெயர்களை மக்கள் இட்டுக்கொண்டது மாத்திரமன்றி ஈசுவரனுக்கும் ஒரு வீதிக் கும் இடப்பட்டது காண்க. அப்பூதியடிகள் சரிதத்தை முன் னிட்டு நமது நாட்டில் இவ்வழக்கம் ஏற்பட்டது ஆராயத்தக் கது.

(e) நாயனார் சரித்திர பாகங்கள் :

1. அப்பரைக் கண்டித்துப் பின் சீடனான மகேந்திரவர் மன்—இவன் சரித்திர பாகத்தைக் கூறும் கல்வெட்டுகள் செங் கல்பட்டு வல்லம் குகையிலும் (185/92) திருச்சி மலைக்குகை மண்டபத்திலும் (S. II vol III. 278) இருக்கின்றன. அவை அப்பர் சரிதத்தை நிச்சயிக்கக் கூடியவைகளே. இதைப்பற்றி முன்னமே கூறியுள்ளோம்.

2. திருத்தாண்டகம் ஓதுதல் : குறுக்கை வீரட்டானே சுரர் ஆலயத்தில் 1207-ம் ஆண்டுக் கல்வெட்டினால் திருநாவுக் கரசர் திருக்குகை கட்டுவதற்குத் தானம் செய்ததை முன்பே குறித்துள்ளோம். அங்கே திருத்தாண்டகம் ஓதும் செய்தியைக் குறித்திருப்பது ஆராயத்தக்கது. பொதுவாகத் திருப்பதிகங் களை (திருப்பதியம்) ஓதுதற்குத் தானம் செய்த விஷயம் சம்பந் தரைப்பற்றிச் சொன்னதிலிருந்து அறிந்துகொள்ள முடியும். அத்திருப்பதிகங்களில் அப்பருடையதும் உண்டு. ஆனால் அவை களில் ஒரு பிரிவான திருத்தாண்டகங்களைத் தனியாக ஓதுவிக்க

ஏற்பாடு செய்தது கவனிக்கத் தக்கது. அப்பர் சுவாமிகளுக்குத் தாண்டக வேந்து என்ற பெயர் உண்டன்றோ?

3. அப்பர் உற்சவம் :—மாறவர்மன் வீரபாண்டியன் காலத்தில் கி. பி. 1271-ல் திருநாவுக்கரசு திருவிழா முதற்கொண்டு 12 திருவிழாக்கள் நடத்துதற் பொருட்டுத் தானம் செய்ததை முன்னமே சொன்னோம். அதனாலே நாயனார் சரித்திரத்தை நடத்தி அதை ஒரு விழாவாகக் கொண்டாடினார்கள் என்று தெரிகின்றது.

இவ்விதமாகக் கல்வெட்டுகளின் மூலமாக அப்பர் சுவாமிகளின் சரித்திரம் தெரிவதுமே யன்றி அவரை நடுக்கடலில் கல்லைக் கட்டி வீழ்த்தின பிறகு அக்கல்லே தெப்பமாகக் கரை சேர்ந்த இடத்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு "ஏறவிட்ட குப்பம்" என்ற பெயர் வழங்கி வருவது போன்ற பல அடையாளங்களாலேயும் அறியக்கூடும்.

மேலே குறித்த கல்வெட்டுகளிலிருந்து அப்பர் சுவாமிகளைப்பற்றி பல விவரங்கள் தெரிந்து கொண்டோம். இன்னும் நாளிதுவரை எடுத்து ஆராயப்படாத பல கல்வெட்டுகள் கிடைக்குங் காலத்து இவ்விவரங்கள் பெரிதும் விரிக்கக்கூடும் என்று அறியலாம். அதற்காகக் கல்விமான்கள் ஊக்கமுடன்வேலை செய்யவேண்டுவது அவர்கள் கடமை. ஆகவே 10-முதல் 14-ம் நூற்றாண்டுகள் வரையில் சோழர்கள், பாண்டியர்கள், சாம்பவராயர் இவர்களால் அப்பர் சுவாமிகள் பூஜிக்கப்பெற்று, அன்புடன் போற்றப் பெற்றார் எனவும், அவர் பெயரை மக்கள் மாத்திரமே யன்றி ஈசனுக்கும் பொருள்களுக்கும் இட்டுப் போற்றி வந்தார்கள் எனவும், அவர் பெயரால் மடங்கள் நிர்மாணித்து அன்னதானம் செய்தார்கள் எனவும், அவரருளிய பதிகங்கள் தாண்டகங்கள் ஆலயங்களிற் பாடப் பெற்றனவெனவும் அறிந்தோம். மேலும் அவர் சரிதத்தின் சில உண்மைகளையும் அறிந்தோம்.

முற்றும்.

கொலைப்பட்ட கோவலனும் வலைப்பட்ட காவல்னும்

[திரு. S. கணபதி, சீனியர் B. A. மாணவர், இந்துகலாசாலை, திருநேல்வேலி.]

நலங்கள் பலவும் கெழுமித்துலங்கும் காவிரிப்பூம்பட்டின மானது வடுவஞ்சி வாய்மொழிந்து தமவும் பிறவும் ஒப்பநாடிக் கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது நடுவின்றி நன்பொருள் வெஃகாது, மறநெறி கடிந்து அறநெறி புக்கு ஒழுகும் பெருந்திருவனப்புடைய அருந்திரு வணிக மாக்கள் பலரது விழுப்பெருங் குடியால் கவின்செயப்பெற்று நின்றது. இன்னனம் பொருளீட்டும் புலமையில் தலைமை சான்ற இவ்வருந்திறல் மரபில் தோன்றிய கோவலனென்னும் இருநிதிக் காவலனுக்குக் கற்பிற் கணியாய கண்ணகி யென்னும் பொற்புடைச் செல்வியைக் குன்று நலனும் பொன்றுப் புகழு முடைய பெருங்குடி வணிகர்கள் மணம் புரிவித்தனர். மணமகனும் மணமகளும் இரதியும் மதனும் போன்றும், அன்றிலும் அகன்றிலும் போன்றும் ஒன்றி வாழ்ந்து, 'ஆவிற் கிருகோடு' தோன்றினாற் போலும்,

> " காகத்திரு கண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ
> ராகத்துளோ ருயிர் கண்டனம் யாம் "

எனக் கண்டாரேத்த இல்லறமாகிய நல்லறநெறியில் நவைபட ஒழுகாது இன்பச் சுவைபட ஒழுகி, அறவோர்க்களித்தலும், அந்தணரோம்பலும், விருந்தெதிர் கோடலும், துறவோர்க் கெதிர்தலுமாகிய தொல்லறத்தைப் பல்லாற்றானும் புரிந்து வருவாராயினர். இங்ஙனம் ஒழுகும் எல்லையில் கோவலன் ஆடலினும், பாடலினும், அழகினும் ஒப்பாரு மிக்காருமில்லா மாதவிபால் நேசம் என்னும் இன்பப் பாசத்தால் பிணிக்கப் பட்டு, இல்லக்கிழத்தியின்பால் ஊடினானெனக் காமக்கிழத்தியி னுழைச்சென்று கூடி, இருநிதியென்ன பெறலரும் தன் பெரு நிதிக் குவைகளை யெல்லாம் வெறுக்கையென அன்னாள்பால்

வெறுத்து வீசி, பிற்றை ஞான்று அவள் முன் நிற்றற்குக் கூசிக் கண்ணகியைக் குறுகி,

" சலம்புணர் கொள்கைச் சலதி யொடாடிக்
குலக்தருவான் பொருட் குன்றந் தொலைந்த
விலம்பாடு நாணுத்தரு மெனக் கென்ன "

அப்பொற்றொடி நங்கையும் சிலம்புள கொள்ளுமெனக் கல னேடுலந்த பொருளீட்டுவான் கவுந்தியடிகளுடன் அமிழ்தினு மினிய தமிழ் நலம் கமழும் ஆடல்சான்ற கூடல்மா நகரத்தைக் கூடினன்.

கூடினவன் மாதரி என்னும் ஆய்மகளைக் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகிக்கு ஆயமும், காவலும், தாயுமாக அமர்த்தித் தான் பிரிந்துழி கண்ணகியாம் பெண்ணுபகி மயங்குதல் ஒரோவழிக் கூடுமென்று நனி உன்னி,

" நாணமு மடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந் துணையாக
வென்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னொன்று கொண்டியான் போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென "

இழுமென் மொழியால் விழுமிய சொற்கள் பல சொல்லிச் செல்லாச் செல்வன் (தொலையாத செல்வத்தையுடைய கோவலன்) செல்வானாயினன்.

பின்னர் ஈண்டிய வளனுடைப் பாண்டிய நாட்டில் தன் நங்கையின் சிலம்பை அங்கையில் தாங்கி விலை பகர்தற்குச் சென்ற அவ் இல்லோர் செம்மல் (வறியவர்க்குத் தலைவன்; இல்லறத்தார்க்குத் தலைவனென்று கோடலும் சாலும்) கூற்றுவனென்னத் தன்னெதிர் வந்த பொற்கொல்லனால் "கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்" என நெறி திறம்பா மன்னன் நெறி திறம்புதற் பொருட்டும், வழுவுறாத வழுதி வழுவுறுதற் பொருட்டும், வளை

யாத செங்கோல் வளைதற் பொருட்டும் பாண்டியன் முன்பு குற்றஞ் சாட்டப் பெற்றான். பாண்டியனும் அஞ்ஞான்று தன்னிடத்தில் ஊடிச் சென்ற தேவியைக் கூவிச் செல்கின்றவனாகலானும், வினைவிளை காலமாகலானும் உண்மையினை ஆய்ந்தோய்ந்து பாராது,

"சிலம்பு
கன்றியகள் வன்கைய தாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்"

கல்லாக் களிமகனொருவன் பொல்லா வுள்ளமொடு கோவலன் மீது வெள்வாளோச்ச அவனும் வஞ்சகன் வாளுக்குத் துஞ்சா திருத்தல் நேரிதன்று என்று நன்று நெஞ்சகம் கொள்வான் போல்,

"காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்".

இதனைத் தக்கார்வாய் கேட்டறிந்த கண்ணகி விண்மாரியெனக் கண்மாரி உகுத்து,

"காய்கதிர் செல்வனே கள்வனோ வென்கணவன்"

எனக் கூஉய்க் கலக்க முற்றும் அஞ்சா நெஞ்சம் படைத்தவளாய்ப் பாண்டியன் அவையை அண்மி 'என் கணவன் கள்வனென்று சொல்லப்படுவானுமல்லன்; கொல்லப்படுவானுமல்லன்,' எனத் தனது மற்றொரு காற்சிலம்பு கொண்டு வலியுறுத்தினாள். முடியுடை வேந்தனும் தான் எண்ணித் துணியாது செய்த தன் கருமத்தை எண்ணி நெஞ்சகம் நைந்து நைந்துருகி,

"தாழ்ந்த குடையன் றளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன்றன் சொல்கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென்னாயுளென"த்

தன் மெய்யினின்ற உயிரை விடுத்து வெற்றுடம்பாயினான்.

நிற்க, முத்தமிழிலங்கும் பண்டைத் தண்டமிழ் நாட்டில் செங்கோலோச்சிய முடியுடை வேந்தர் மூவருள்ளும் ஈண்டிய வளனுடைய பாண்டிய மன்னர்கள் குடிதழீஇக் கோலோச்சும் பெற்றி வாய்ந்தவர்கள். அவர்களது வெண்கொற்றக் கொடை

கூடினார்க்கு நிழற் செயும்; கூடாதார்க்கு அழற் செயும். அவர்கள் தம்மில் மாறுபட்டார்க்கு ஞாயிறு போன்றும், மாறு படாதார்க்குத் திங்கள் போன்றும் விளங்குவார்கள். அவர்கள்,

"அறநெறி முதற்றே யரசின் கொற்ற
மதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற்றன்ன வெந்திற லாண்மையுந்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும்
வானத்தன்ன வண்மையு மூன்றும்" (புறநானூறு.)

உடையராகி வயங்குதல் வேண்டுமென்பதைத் தெள்ளிதின் உணர்ந்து வள்ளியராக வழங்கும் சீர்மையை யுடையவர்கள். அதனாற்றான் குடிகளும்,

"நிவந்தோங்கு வெண்குடை மண்ணக நிழற்செய
வேலுங்கோலு மருட்கண் விழிக்க
நீநின் றருள்கநீ யேந்திய திகிரி
நினக்கென வரைந்த வாண்டுக ளெல்லா
மனக்கினி தாக வாழிய வேந்தே" (மணிமேகலை.)

என்று வழுத்தி அவர்களுடைய அடிதழீஇ நிற்கலாயினர். மாத வர் நோன்பும், மடவார் கற்பும் ஏதமுறா வண்ணம் அரண் செய்து நிற்பது அவர்களுடைய செங்கோலாகும். அவர்களு டைய ஒண்குடையின் ஒருசார் அத்தனானந்த னமுதனென்றள் ளூறித் தித்திக்கப்பேசும் சிவநேசச் செல்வர் பலர் வாழ்வர். மற்றொரு சார் சீதப்புனலாடி, சிற்றம்பலம் பாடி, வேதப் பொருள் பாடி, முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானைப் பழச்சுவை யென்றும், அமு தென்றும் மாந்திக்களிக்கும் தவநேசச் செல்வர் பலர் விளங்கா நிற்பர். இன்னொரு மருங்கில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடும் கவிவல்லவர்கள் கூடி ஆடியும் பாடியும் நிற்பர்.

இன்னணம் சிறப்புடை மரபிற்றோன்றிய பாண்டிய மன்னன் கோவலன்பால் நெறி தவறியது யாங்ஙனமெனின், அது பண்டை வினைவாகி வந்த வினையினால் என்ப. பாண்டியன் கூடல் நாடக மகளிருடைய ஆடல் பாடலில் மயக்குற்று

இருந்ததினால் அவன் தேவி ஊடிச்சென்றாள். ஊடிச் சென்றாளைக் கூடி இன்புறுவான் புக்க மாறனை, செவ்வி பார்த்திருந்த பொற்கொல்லன் கண்டான்; கண்டவன் கோயிற் சிலம்பு கொண்ட கள்வன் கோவலனென்றான்; பாண்டியனும் தன் பெருந்தேவியின் ஊடலைத் தணிப்பதற்கு அச்சிலம்பு கருவியாயிருக்கு மென்பதைக் கண்டான்; கன்றிய கள்வன் கையகத்தாயின் அவனைக்கொல்ல அச்சிலம்பொடு ஈங்குக் கொணர்கவெனக் கூறக்கருதியவன் வினைவிளைகின்ற காலமாகலான் ஒன்றும் தேரானாகிக் கொன்றச்சிலம்பு கொணர்கவென்றான்; கோவலனும் கொல்லப்பட்டான்; காவலனும் வினை வலைப்பட்டான். வினை வலைப்பட்ட அவ்வழுதி கண்ணகியைக் கண்டஞான்று தன் அற நெறியைத் தோற்றான். அவள் வழக்குரைத்த ஞான்று தன் உயிரையும் தோற்றான். இவ்வுண்மை,

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலுங்
கையிற்றனிச் சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றனக் காரிகைதன் சொற்செவியி
லுண்டளவே தோற்ற னுயிர்"

"காவியுகு நீருங் கையிற்றனிச் சிலம்பு
மாவி குடிபோன வவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னன்"

என்ற இளங்கோவடிகளது கரும்புந் தேனு மமுதும் பாலுங் கலந்த செஞ்சொல் வாக்கால் உணரற்பாற்று.

இங்ஙனம் தன் குற்றம் கண்டுழி "யானோ வரசன் யானே கள்வன்.........கெடுகவென்னாயுள்" என ஆவிநீத்த பாண்டியனது அருஞ்செயல் என்ஞான்றும் போற்றற்குரிய தொன்றாம். கண்ணகிதன் கேள்வனது காரணத்தால் அவனது வளையாத செங்கோல் வளைந்ததாயினும் அவன் தன்னுடைய பெறலரும் அரிய உயிரை ஈந்து அறநெறியை ஓம்பினான்; செங்கோல் வளைய உயிர் வாழார் பாண்டியர் என்ற தங்களது அரிய பெரிய சீரிய குறிக்கோளை உலகம் தெள்ளிதின் அறியுமாறு எடுத்துக் காட்டினான். பாண்டியன் தன் உயிரைப் பெரிதாகக் கருதினு

னில்லை; அறநெறியையே உயிரினும் சிறந்ததாகக் கருதினன். எனவே அவன் தன்னுடைய பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பை எய்தப் பெற்ருன். இவ்வரலாறு,

“ எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையி னிகந்த சொற்செவிப் புலம்படாமு
னுயிர்பதிப் பெயர்த்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது.”

என்ற சேரன்செங்குட்டுவனது வாய் மொழியினுனும் வைத்து உரைப்படும்.

கோவலன் கொல்லப்பட்டதும் காவலன் ஊழ்வலைப் பட்டதும் பண்டை வினைவாகிவந்த வினையினுற்ருன் என்பது சிலப்பதிகாரம் படித்த எல்லவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மை என்பது வெள்ளிடை மலை.

“ கொடும்பரவர் கழியுழக்கக் குதித் தெழுமீன்
ஆய்ச்சியர் பாற்குடத்துள் வீழ்ந்தங்
கடும்பயத்தோ டலமரு மற்றவர் கடையுந்
தயிரோதைக் கலமந் தோடி
ஒடுங்குமுயல் கைதையினு ளடங்கி யங்கட்
கடலொலி கேட்டுள்ள மாழ்கும்
கடுங்கருமத் தோட ரந்தோ யாங் குறினும்
விடாதென்னக் காட்டு மோர்பால்.”
(காஞ்சிப்புராணம்—திணை மயக்கம்.)

சென்னைக் கடற்கரை

[திரு. அ. சிதம்பரநாதன் அவர்கள், பீ. ஏ.]

உலகு மீக்கூறும் கடற்கரைகளுள் சென்னைக் கடற்கரை இரண்டாவதாகும். முதலாவதி யாதெனின், அமெரிக்கா தேசத்தில் பிரேசில் (Brazil) என்னும் நாட்டின் கண்ணுள்ள “இரையோடி சினிரோ” (Rio De Janeiro) எனக்கூறுப.

அஃதொன்றன்றி, நமது சென்னைக்கடற்கரையை அழகிலும் நிகளத்திலும் ஒப்பதுமிக்கதுமில்லை யென்று சொல்லலாம். இக்கடற்கரை யோரமாக வாழக் கொடுத்துவைத்தவர் பலருண்டு. அல்லும் பகலும் அறுபதுநாழிகையும் அங்ஙனே வாழ்ந்துவருவோர் பரதவர் ஆவர். இவரே யன்றிப் பகலிலொன்றே, அதனினும் பத்து நாழிகை முதல் இருபத்தைந்து நாழிகை வரையே, கடற்கரை யோரமாகக் கட்டப்பட்டுள்ள கண்ணைக் கவரும் மாளிகைகளில் தங்கி யிருப்போர் சிலருண்டு. அவர்தாம், வடபால் கப்பல் இலாகா அதிகாரிகள் முதலாகவும், அரசாங்கக் காரியாலய அதிகாரிகள் இடையாகவும், தென்பால் மாகாண ஊர்க்காவலரின் அதிகாரிகள் கடையாகவும் உள்ளோராவர். அவரைப்பற்றிக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கம் அன்றெனவறிக. அன்றி, இளமைப்பருவத்தில் தேகப்பயிற்சி யின்னதென்றறியாதிருந்து மனப்பயிற்சி யொன்றையே கைக்கொண்டு துன்பத்துக்காளாகி, இஞ்ஞான்று அத்துன்பந் துடைப்பான் வேண்டிப் பேரார்வத்துடன் கடற்கரை யோரமாக வைகறைப் பொழுதில் ஓடுபவரைக் குறித்து எழுத எழுந்ததுமன்று இஃதென்க. சில மனிதர் தள்ள, சில மனிதர் முட்ட, சில மனிதர் இழுக்க, பார்ப்போர்.

> "அச்செல்லா மொன்று வதிலே யிருவகையா
> வைச்சதென்ன சோணகிரி வள்ளலே—யிச்சையே
> வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
> தாழ்ந்துசில பேரிருக்கத் தான்"

என்ற குகை நமசிவாய தேவரின் திருவாக்கையும்,

> "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்ற பொய்யா மொழியையும் நினைத்துக் கொள்ளச் செய்து போகும் கட்டை வண்டிகளையும் அவற்றை ஈர்த்துச் செல்லும் இருகால் எருதுகளையும் பற்றிக்கூற எழுந்ததோ இஃதெனின், அஃதுமன்று. பின்னர் அல்லினிடையே இக்கடற்கரையோரமாக நிகழுமவற்றைக் கூற எழுந்ததோவெனின், அஃதுமன்றே.

மற்று, மாலைப் பொழுதில் அங்குக் காணப்படுமவற்றுட்

சிலவே இங்குக் கூறப்படுகின்றன. கடற்கரைப் பக்கம் மாலை நேரத்திற் போவோர் யாரும் முதலிற் காண்பது சீறிக்கொண்டும், உறுமிக்கொண்டும், புகைந்துகொண்டுஞ் செல்லும் மோட்டார் வண்டிகளே. அவ்வண்டிகள் பற்பல வகையானவை பற்பல பெயருடன் கடற்கரை யோரமாகக் கீழ்பால் ஒரு பெருந் தொடர்போல் நிறுத்தப்பட்டிருக்கும். தலையிலிருந்து பார்ப்போர் சில விடங்களில், இவை யென்ன பிணைக்கப்படா மோட்டார் சங்கிலியோ என நினைக்கக் கூடும். அவ்வண்டிகளினுள்ளே உட்கார்ந்திருப்பவருட் சிலரைக் காணின், இவர் காலென்ன நிலத்திற் றேயாதோ இவர் முகமென்ன சூரியனொளிபடின் கூம்பி விடுமோ என்றதுபோன்ற ஐயங்கள் நிகழும். இவ்வண்டிகளுட் சில பெண்டிராற் செலுத்தப்பட்டுச் செல்வதைக் காணும் உள்நாட்டு வாசிகளுட் சிலர் மூக்கின்மேற் கை வைத்து "இவரென்ன ஆடவரினுங் கடிது செலுத்திப் போகின்றனரே! நன்று, நன்று!! ஆடவரை வெல்லப் பார்க்கின்றனர் இவர். உலகக் கேட்டின் அறிகுறியோ இது"! எனக் கூறிச் செல்வார். "சம்பராசுர யுத்தத்தில் கைகேசி தேரைச் செலுத்தித் தயரதனைக் காத்தது போல், துன்பம் நேர்ந்துழி இவருங் காரைச் செலுத்திப் போய்த் தங் கணவர் கிளைஞரையுங் காக்கக்கூடும். ஆனல், கைகேசி இரண்டு வரம் பெற்று மண்ணைத் தன் மகனுக்குக் கொண்டு, தன் கணவனின் உண்ணோராவியைப் போக்க ஏதுவாகி, வள்ளலை வனம் புகச் செய்து, சீதையைச் சிறைப்படச் செய்ததுபோல், காரூர்ந்து செல்லும் இக் கேகயங்கள் செய்வதாயின், கேடே கேடே" என்று நினைத்துப் போவாருமுண்டு. இவ்வண்டிகளுட் போவோரை யறியாத பலரும், அவரால் அறிந்து கொள்ளப்படாத பலரும், அறிமுகஞ் செய்து வைக்கப்படாத பலரும் "கும்பிடு போட்டுக் கும்பிடு வாங்கலாம்" என நினைத்தும், "காரிற்போகு மவரும் கும்பிடு போட்டாரல்லவா?" என்ற வீண் பிதற்றலால் மகிழக் கருதியும், கும்பிடு போட்டுக் கும்பிடுவாங்குவதையும், சிற்சில வமயங்களில் மறு கும்பிடின்றித் தலைகுனிந்து செல்வதையுங் காணலாம்.

மோட்டாரிற் போவோர்க்கே யன்றிக் கடற்கரை யோர மாக அமைக்கப்பட்டுள்ள கற்றரையின்மீது கடவுள் கொடுத் துள்ள இருகால் மோட்டாராற் செல்லுஞ் சிலருக்கு வேறு சிலர் கைம்மாறு கருதாது கும்பிடு போடுவதையும், கரக்கம்பஞ் செய்து சிரக்கம்பம் பெறுவதையும், அஞ்சலி செய்து அரைக் கும்பிடு பெறுவதையும், அரைக் கும்பிடு கொடுத்துத் தரைக் கும்பிடு வாங்குவதையும், கைக்கும்பிடு கொடுத்துக் கண் கும்பிடு வாங்குவதையும், கரக்கும்பிடு கொண்டு மூரற் கும்பிடு வாங்கு வதையுங் கண்டு "எத்தனை விதக் கும்பிடு? ஐயா!" என்று சொல்லா விட்டாலும் நினைப்பார் பலர். இவரே யன்றிக் கும் பிடு போட்டுக் கும்பிடு பெறுவழி, "என்ன அகந்தை இவ னுக்கு!" என்று குறை கூறுவோர் சிலர்; "கொடுத்த கும்பி டைத் திருப்பிக் கொடுக்க மதியா அறியா முடியா இவன் வேறெதைக் கொடுப்பினும் திருப்பிக் கொடுப்பனோ? கொடான், கொடான்" எனக் கூறிப் போவார் சிலர். முன்னொரு நாள் கும்பிடு மறந்து சென்ற வொருவன் பின்னொரு நாள் தன் னண்பனைக் கண்டு அஞ்சலி செய்யுங்கால், அந்நண்பன் "இப்பொழுதென்ன? ஏதேனும் என்னிடம் ஆகவேண்டிய துண்டோ? அன்று நான் செய்த அஞ்சலிக்கு மாற்றஞ்சலி யின்றி வெட்கிப் போகும்படி செய்தாயே! அஃதென்ன?" எனக்கேட்டு நிற்பதையும் அதற்குச் சமாதானம் பெறுவதை யுங் காணலாம். அவ்வாறு கூறப்படுஞ் சமாதானங்களுள் "நீ போட்டதை நான் பார்க்கவேயில்லை; உன்னை யான் பார்க்கவே யில்லை" என்றவை பெரும்பாலும் கேட்கப்படும். பின்னும் விடாது, "ஆனால் மெய்ம் மறந்து சென்றனையோ? கண்ணொரு பக்கம் மனமொரு பக்கமோ?" என்று சிலர் கேட்கும் வினாக் களுங் காதில் விழும்.

தந்தையுந் தநயனுமாகிய விருவர் ஒருநாள் அக்கற்றரை மீது நடந்து போகுங்கால், எட்டுப் பேராகச் சென்ற வொரு சிறு கூட்டத்தாருள் மூன்று பேரே தன் தந்தைக்கு அரைக்கும் பிடு இட்டுச் சென்றதைக் கண்ட தநயன் "ஏன் அப்பா, மற்ற வர் போடவில்லை?" என்று வினவி நின்றது கண்ணுற்கண்டு செவியாற் கேட்ட தொன்றாகும். (இன்னும் வரும்)

கருமை

[திரு. கபசம் எழுதியது]

(சிலம்பு அ, எஉகு-ம் பக்கத்தொடர்ச்சி)

புறவொளி நல்கு ஞாயிறுபோல் அகவொளியளிக்கு மொரு முதற்பொருளுண்டென்ற வுணர்ச்சி மிகப்பண்டை நாளிலேயே பற்பல நாடுகளிற் றோன்றிற்று. தேவர்களென்போர், ஒளிவீசு முருவினராகவே எல்லா நாட்டாராலுங் கருதப் பட்டனர். விண்ணவரைத் தீட்டு மோவியங்களில், அவர்களைச்சுற்றி யொளி வீசுவதைக் காண்கின்றோம். இறைவன் வந்து வெளிப்பட்ட தாகப் பண்டைக்கால நூல்கள் கூறுமிடங்களிலெல்லாம், அழற் பிழம்பு அல்லது ஒளி தோன்றியதென்று பெரும்பாலுங் குறிக் கப் பட்டிருக்கிறது. வானிற்றோன்றும் இடியு மின்னலும் விண் ணவர் தலைவராகிய ஸீயூஸ் (Zeus) கையில் வைத்திருக்கும் பெரும்படை யென்று கிரேக்கர்கள் (The Greeks) எண்ணி னர். மின்னலுக்குப்பின் கேட்குங் குமுறலை தேவர்கள் செலுத் துந் தேரினோசை யென்று சொல்வா ரின்னுமுளர். ஞாயிறுந் திங்களும் எந்நாட்டிலும் தேவர்களாகவே கருதப்பட்டனர். தேவர்கட்கு மவுணர்கட்கு நடந்ததாகச் சொல்லப்படும் போர்க ளெல்லாம், ஒளிக்கு மிருளுக்குமுள்ள பகைமையைக் காட்டு மன்றிக் கட்டுரையின் முற்பகுதியிற்சொன்னதை ஈண்டு நினை விற்குக் கொணர்தல் வேண்டும். இங்ஙனம், ஒளியுங் கடவுட்டன் மையு மொன்று பட்டு நின்றதன் பயனாக, பெரும் பொருள்கள் (பஞ்சபூதம்) ஐந்தனுள், நெருப்பிற்கு மிறைவனுக்கு மிக நெருங் கிய கேண்மை எழுந்தது. இதுகொண்டே இறைவனுக்கிடும் பலியைத் தீயின் வாயிலாகச் செலுத்துவது வழக்கமாயிற் றென்று கொள்ளக் கிடக்கிறது.

நாகரிக மென்பதே மக்கள் நெருப்பைக் கையாளத்தொடங் கிய பிறகுண்டாயிற் றென்பது மிகைபட மொழிதலாகாது. முத லில் உலகில் நெருப்பென்பதே கிடையாதென்றும், அது விண் ணில் தேவர்கள் பாலிருந்த தென்றும், அதை யொருவன் திரு

டிக் கொணர்ந்து மக்களுக்குக் கொடுத்தவர்களை யுயர்த்திணு னென்றும், இதுகண்ட தேவர்கள் தங்கள் மறைபொருளாகிய நெருப்பைக் கவர்ந்துசென்று மன்பதைக்களித்த மகனாகிய பிராமித்தியஸ் (Prometheus) என்பவனை விண்ணளாவிய மலை முடிகளிடையே விலங்கிட்டுக் கிடத்திக் கழுகுகள் வந்து அவனது ஈரலைப் பிடுங்கித்தின்னு மாறு செய்தனரென்றும், கிரேக் கப்பழங்கதைகளிற் (Greek Mythology) சொல்லியிருக்கிறது. இதன்பொருளென்னவெனின், நெருப்பினுதவி கொண்டே மக்களுயர்வெய்தின ரென்பது தான். கல்லாலமைத்த கலங்களையும் படைகளையுங் கொண்டு முரட்டு வாழ்க்கை நடாத்திய முதன்மாக்கள் நெருப்பைக் கண்டு பிடித்தபின் செம்பு, இரும்பு முதலியவற்றை யுருக்கிவடித்து முன்னினுஞ்சிறந்த படைகளையு மணிகலன்களையும் வகுத்துக்கொண்டு நாவிற்கினிய நல்லுணவுகளை யாக்கும் வகையறிந்து நாகரிகத்திலுயர்ந்தன ரென்பதை வரலாற்றுவாயிலா யறிகின்றோம். ஆகலின், தொடக்கத்தில் நெருப்பு விண்ணவரன்றி வேறெவரு மறியாத மறைபொருளாயிருந்த தென்று கிரேக்க புராணங்கள் கூறுவது வியப்பன்று; இறைவனுடன் நெருப்பை யுலகெங்கும் புணர்த்திக் கருதியதும் வியப்பன்று.

வழிபாடு நிகழுங்கால் இரவாயினும் பகலாயினும் விளக்கேற்றி வைப்பது பெருவழக்காயுளது. கிறித்தவரிற் பெரும் பகுதியினராகிய உரோமநெறியர் (Roman Catholics) இன்று மவ்வழியைப் பின்பற்றுகின்றனர். மெழுகு வர்த்திகளின்றி அவர்களது வணக்கம் பெரும்பாலு நடைபெறுவதில்லை. இவர்களினின்று விலகிநிற்கும் புரோட்டஸ்ட்டென்ட் (Protestant) நெறியாருட் சிலரு மங்ஙனமே செய்கின்றனர். இந்தியாவிலுள்ள பெருங்கோவில்களில் இருளுட்டோன்று மொளியிலிறைவனை வழிபடுகின்றனர். விளக்கென்பது புறவிருளையோட்டுவது. அகவிருள் நீக்கம் விளக்க மெனப்படும். ஆதலின், புறப்பொருளாகிய விளக்கு, அகநிகழ்ச்சியாகிய விளக்கத்திற் கறி குறியாயிற்று. விளக்கில்லா வீட்டில் மக்கள் வதியார்; விலங்குகள் வாழும். விளக்கமில்லா மனத்திலு மிறைவ னுறை

யான். மாலையில் விளக்கேற்றி மலர்தூவிக் கும்பிடும் வழக்கந் தமிழ்ப் பெண்கள் சாலத் தொன்னளிலேயே பயின்று வந்த தொன்றாகும்.

"இரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது"

(நெடுநல்வாடை 42-43)

ஒளிதரு நெருப்பே கடவுளென்ற கொள்கையினர் பல்லாயிர மாண்டுகட்கு முன்னரே தோன்றினர். அவர்களின்று முளர். பம்பாயில் வணிகத் தோன்றல்களாய்த் திகழ்வோரிற் பலர் இச்சமயத்தவர்களே யாவர். பார்ஸிகள் (The Parsees) என்றிவர்கட்குப் பெயர். முதலி லிவர்கள் பெர்ஷியா (Persia) நாட்டி லிருந்தனராதலி னிப்பெயர் பெற்றனர். அந்நாட்டிற்றான் அவர்களுடைய சமய குரவராகிய சொரேஸ்ட்டர் (Zoroaster) தோன்றினர். பெர்ஷியா பழைய ஆரிய நாடென்பது உணரத்தக்கது. ஆரியமொழியின் தொன்மை நிலையைக் காட்டும் நூல்க ளிரண்டு. இவை வேதங்களென்று நாமறிந்தவையும், பழைய பெர்ஷிய மொழியிலெழுதப்பட்ட ஸெண்ட்அவெஸ்டா (Zend Avesta) என்பதுமாம். பின்னர்க் கூறப்பட்ட விந்நூலே பார்ஸிகளின் கொள்கைக் கடிப்படையாய் நிற்பது. இந்நூலில், சுரர், அசுரர் என்ற சொற்களுக்கு, வேதங்களிற்காணப் படும் பொருளுக்கு நேர்மாறான பொருள் வெளிப்படுகின்றது. அசுரர் என்பவர் தேவர்களாகவும், சுரர் என்பவர் அரக்கர்களாகவும் காணப்படுகின்றனர். இஃதெங்ஙனமாயினும், பழைய ஆரியர் நெருப்பையே கடவுளென வணங்கின ரென்பதி லையமின்று. இந்தியாவிற் கவர்கள் வந்தபின் அவர்களுடைய வணக்கமுறை சிறிது சிறிதாக மாறி வேறாயிற்று. ஆரியர் வருவதற்குச் சில்லாயிர மாண்டுகட்கு முன்னரே, அறிவிற்சிறந்து நல்வாழ்க்கை நடாத்திய உயர்மக்கள் இந்தியாவிலிருந்தன ரென்பதற்கு மறுத்தற்கரிய சான்றுக ளிப்போது கிடைத்திருக்கின்றன. இவர்களுடன் ஆரியர் பழகத் தொடங்கியபின்தான் உபநிடதங்களெழுதப்பட்டன வென்று மறைமலையடிகள் முதலிய தமிழறிஞர்

கூறுகின்றனர். நெருப்பைக் கடவுளென்று வணங்கும் ஆரிய முறை இந்தியாவிற் பிறந்த தன்று.

தமிழருக்குள் தொலகாப்பிய மெழுதப்படுவதற்கு முன்பே முத்தீ வணக்கமென்று கூறப்படு மொருவகை வழிபாடிருந்தது. முத்தீயாவன:—கொடிநிலே, கந்தழி, வள்ளி. இவ்வழிபாடு இந்தியாவின் தெற்கிலுள்ள பொதியமுதல் இமயம்வரை பரவியிருந்த தென் றெண்ணத் தமிழ்நூல்க ளிடந்தருகின்றன. சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறப்பாட்டில்,

> " சிறுதலே நவ்விப் பெருங்கண் மாப்பிணே
> யந்தியந்தண ரருங்கட னிறுக்கு
> முத்தீ விளக்கிற் றுஞ்சும்
> பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே "

(புறம். 2-வது செய்யுள். வரி. 21-24)

என்று நவின்றமையால் முத்தீவணக்கம் இந்தியாவெங்கும் பரவியிருந்தமை பெறப்படும். ஒளிக்கு முதலாக இறைவனைக் கருதி வணங்குவதே முத்தீ வழிபாட்டின் உட்பொருள். ஆரியர்க்கும் முத்தீவணக்க முண்டு. அஃதெங்ஙன முண்டாயிற்றென்ருராய்க. இதுகாறுங் கூறியவற்ருல் நெருப்பிற்கு மிறைவனுக்கும் பண்டை முதலிருந்த ஒற்றுமை நன்குணரப்படும்.

ஒளியும் வெப்பமும் ஒன்றையொன்று பற்றி நிற்குமாறு இயக்கமும் வெப்பமு மியைந்து தோன்றுகின்றன. இவை மூன்றுமொன்றே என்பது அறிஞர் துணிபு. ஒரு கட்டையின் மேல் மற்ருெரு கட்டையைத் தேய்ப்பதாற் பிறக்குஞ் சூட்டை அறியார் யார்? இம்முறையிற்ருன் முதலில் நெருப்புண்டாக்கின ரென்பது நமக்குத் தெரியும். கட்டையைக் கடைவதாற் பிறந்த தீயே வணக்கத்திற்குரிய தென்று முன்னேர் கொண்டனர். இயக்கத்தால் வெப்பமும் நெருப்பு முண்டாவதுபோல், நெருப்பால் இயக்கமுண்டாம். வெப்பம்பெற்ற நீர் கொதித்து மேலுங் கீழுஞ் செல்வதே இதற்குப்போதிய சான்ரும். ஆதலின், இயக்கத்தலேவனுக முன்னேர் கண்ட சிவன், இயல்பு பற்

றியு மியைபு பற்றியு நெருப்புடன் சேர்த்தெண்ணப் படுகிறான். " ஆரழலேந்தியாடு மாவடுதுறையுளானே " எனவரு முறைகளை நோக்க, இது நன்கறியப்படும்.

ஒருகால் மாலுமயனுந் தம்முள் பெரியாரியாரென்று வழக்கிட்டு நிற்ப, கண்ணினுங் கையினுந் தீயுடைய வரன், சேண் நிவந்தொளிரு மொரு அழலுருவாகி நின்று, ' இத னடிமுடி தேடுமின் ' என, மாவலிமுன் விண்ணோக்கி வளர்ந்த மால், கீழ் நோக்கி நிலத்திற்புகுந்தும், தொடங்கற்கட்டோன்றிய முதியவன் மேனோக்கி விண்ணிலெழுந்தும், அழற்பிழம்பின் முதலீறு காண்பா னோடின ரென்று புராணமியம்பும். இதனானுஞ் சிவனுந்தியு மியைந்து நிற்றலறியப் படும்.

(தொடரும்)

ஆணும் பெண்ணும்

[திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை யவர்கள்]

இம்மண்ணுலகில் உடம்பெடுத்துள்ள உயிர்களெல்லாம் ஆணென்றும் பெண்ணென்றும் இருவகுப்பாகப் பிரித்துணரப் படுகின்றன. இருப்பன, ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகிய அனைத்துயிரும் ஆணும் பெண்ணுமாகவே வாழ்கின்றன. எல்லா உயிர்களும் ஆணாக இருந்தாலும் பயனில்லை, பெண்ணாக இருந்தாலும் பயனில்லை. ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து சேர்ந்து வாழும் வாழ்க்கையிலேயே இன்பமும் பயனும் விளைவனவாகும். பிள்ளையைத் தருவதும் பிள்ளையைப் பெறுவதும் ஆகிய இவ்வொரு வேறுபாடு மாத்திரமே ஆணிடையும் பெண்ணிடையும் அமைந்துள்ளது. இவ்வேறுபாடு இல்லையானால் உலகவளர்ச்சி இல்லாமற்போவதோடு மிக விரைவில் உயிர்களின் தோற்றமே அழிந்துபடும். இதுபற்றியே மணிமொழிப் பெருந்தகையாரும்,

" தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ

பெண்பா லுகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ ''

என மொழிந்தருளினர்.

உலகவளர்ச்சியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒத்த பொறுப்பே; ஆனாலும் ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கே பெருகிய துன்பம். பிள்ளையைக் கருவில் ஏற்றுப் பத்து மாதங்கள் சுமந்திருப்பது பெண்ணே யன்றோ? பின் அளவிடமுடியா அல்லலை யடைந்து பிள்ளையைப் பெற்றுப்பேணி வளர்ப்பதும் பெண்ணே யல்லவோ? கருவுயிர்க்க மாட்டாமல் காலன் வாய்ப் படும் கனங்குழைக் காரிகையார்க்குக் கணக்குமுண்டோ? இதனாலல்லவா இப்பிள்ளைப்பேறு பெண்களுக்கு மறுபிறப்பு என்று கூறப்பெறுகின்றது? “பெண்ணைப் பேணி வளர்த்தல் வேண்டும்'' என்னும் பழமொழி எழுந்ததும் இதனாலன்றோ? உலக வாழ்க்கையில் ஆணைக்காட்டிலும் பெண்ணுக்கே அதிகமான பொறுப்புளதென்ற உண்மை இதனால் விளங்குகிற தல்லவா?

பொறுப்பு மிகுதியுடைய பெண்ணே குடும்பவாழ்க்கையில் ஆணைக்காட்டிலும் உரிமை மிகுதி பெறுவதற்கு உரியது என்பது நேர்மையான மதியுடையார் முடிபாம். இங்ஙனமாக, இக் காலத்தில் எல்லாப் பிறப்புக்களிலும் தலைசிறந்ததாகக் கருதப் பெறும் மக்கள் வாழ்க்கையில் நேர்மை காணப்பெறுகிறதா என ஆராய்ந்தால் ஒரு சிறிதும் இல்லை என்பதே வெளிப்படும் உண்மையாம். மிகுதியுரிமை இல்லை யென்றாலும் ஒத்த உரிமை யாவது பெண் ஆணைப்போல உடையதா? இல்லையே. ஆண், தனது உடல்வலிமையால், பல மறுபிறப்புக்களெடுத்து மெலிந்து தளரும் பெண்ணை அடக்கியாள்கின்றது. பொருளுரிமை முதலிய பலவகை உரிமைகளும் பெண்கள் பெறுவதில்லை. ஆணாவது பெண்ணாவது பிறக்கும்போது ஏதேனும் கொண்டுவந்ததுண்டா? அன்றி இறக்கும்போதாவது சுமந்து போவதுண்டா? பின் ஏன் ஆண்மட்டும் முன்னோர் தேடிய முதலைப்பெறவும் பெண் ஆணின் கைபார்த்து அலமரவும் வேண்டும்?

ஆண்மகனொருவன் தன் மனைவியொருத்தி இருக்கவும்

வேறு பல பெண்களை மணந்து அவர்களைத் துன்புறச் செய்வது நேர்மையாகுமா? தன் மனைவி வேறொரு ஆண்மகனை ஏறெடுத்துப் பார்க்கவும் பேசவும் இசையாத ஆண்மகன் பல மகளிரை மணத்தல் அறிவுடைமையா? உணர்ச்சி ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுத்தானே? மேலும் கிழவனொருவன் இளம் பெண்ணொருத்தியை மணக்கத் துணியும்போது அவள் மனம் தன்னிடத்துப் பொருந்துமா என்று ஆராயாதிருப்பது மதியிழந்த தன்மையே யல்லவா? "நினைத்துக் கொண்டாளாம் கிழவி வயது மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட" என்பது முதுமொழி. அவ்வாறு விரும்பும் கிழவியை மணக்கும் குமரன் எவனேனும் உளனோ? பச்சிளங்குழவியைப் படுகிழவன் மணப்பதும், கட்டழகியாகிய தனது மனைவியிருக்கவும் வேறு பெண்களை மணப்பதும், மனைவியிழந்தபின் வேறொருத்தியை மணக்கத்தேடுறும் ஆண் கணவனையிழந்த காரிகையை மறுமணம்புகுத்தாது தடைபுரிவதுமாகிய தீய பழக்கங்கள் ஒழிதல் வேண்டும். ஓங்கிய அறிவுடையார் நேரிய ஒழுக்கமுறையை நிலைபெறுத்த முன்வரல் வேண்டும்.

ஆண்மக்கள் பெண்மக்களை அமுக்கி நசுக்கி அழிக்கும் அறக்கொடுஞ் செயலை ஒழிப்பதற்கு ஏற்ற மருந்தொன்றிருக்கிறது. அது காதல் மணவினையே. தமிழ்மக்களிடைக் காதல் மணவினையாகிய கருந்தனம் சிறந்தோங்கியிருந்த பண்டைக் காலத்திலே கணவனும் மனைவியும் ஒருயிரும் ஈருடலும்போல உளமொருப்பட்ட வாழ்க்கையுடையவராக இருந்தனர். ஒருவன் பல பெண்களை மணப்பதும் கிழவன் சிறுமியைக் கைப்பற்றுவதுமாகிய சிறுமைகள் தமிழ்மக்கள் மனத்திற் புகுந்ததேகிடையா. உணர்ச்சி ஒன்றுபட்ட இடத்தில் பிளவென்பது எங்ஙனம் தோன்றும்?

கணவன் தன் மனைவியைத் தன் உயிர்போல எண்ணிப் பேணுவான். மனைவி தன்கணவனை தான் தொழும் தெய்வமாக நினைந்து வழிபடுவாள். ஆண் பெண் என்ற இருபாலாரும் கற்புடையவரா யிருந்தனர். "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை". மனைவி சொல்லைக் கணவன் தட்டமாட்டான்; கண

வன் ஆணையை மனைவி மறுக்கமாட்டாள். கணவன் தான் கொண்டொழுகும் சமயத்தில் தன்மனைவியும் புகுதல் இன்றியமையாததென எண்ணாமல் அப்பெண்மணி தன் அறிவிற்கேற்றதெனக் கொள்ளும் சமயத்திலேயே இருக்கவும் இடந்தந்தானென்றால் வேறு விளம்புவதென்? இதற்குச் சான்றாக ஓர் மெய்வரலாற்றை ஈண்டு எடுத்துக் காட்டுவோம்.

"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்" எனச் சேக்கிழாரடிகள் போற்றிப் புகழும் பாண்டிமாதேவியார் தமது கணவராகிய கூன்பாண்டியர் சமண சமயம் புகுந்த பின்னரும் தாம் சைவராகவே இருந்தார். அவ்வாறு அவ்வம்மையார் சைவராக இருப்பதற்கும் மதுரைச் சொக்க நாதரை நாடோறும் சென்று வழிபடுவதற்கும் பாண்டிய மன்னர் இடம் தந்தார். அம்மையாரோடு அமைச்சராகிய குலச்சிறையாரும் சைவராகவே வாழ்ந்தார். இந்த இடத்தில் சேக்கிழாரடிகள்,

"ஆங்கவர் தாங்களங்க ணரும்பெறற் றமிழ்நாடுற்ற
தீங்கினுக் களவுதேற்றாச் சிந்தையிற் பிரிவுகொண்டே
ஓங்கிய சைவவாய்மை ஒழுக்கத்தி னின்றதன்மை
பூங்கழற் செழியன்முன்பு புலப்படா வகைகொண்டுய்த்தார்"

என அருளிச் செய்கின்றனர். இதனால் மாதேவியாரும் அமைச்சரும் மன்னவருக்குத் தெரியாமல் கள்ளத்தனமாகச் சைவ சமயத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது கருத்தன்று. சைவசமய ஒழுக்கத்தினின்ற தன்மையைப் புலப்படுத்தும் குறிகளாகிய திருநீற்றையும் கண்மணியையும் அரசன் முன்பு அவர்கள் அணியாதிருந்தனர் என்பதே இதன் பொருளாம். ஏனென்றால் சமணர்கள் புறச்சமயத்தாரைக் காண்டலும் முட்டு, அவர் வரவைக் கேட்டலும் முட்டு என எண்ணும் கொடுந்தன்மையராயிருந்தனர். அதனால் சமண சமயம் புகுந்த வேந்தருக்குச் சைவசமயக் குறிகளைக் காண்பது வெறுப்பைத் தந்து உளத்தைப் புண்படுத்தும். உள்ளே மெய்யன்பும் உண்மையொழுக்கமுந்தான் வீடுபேற்றுக்கு வேண்டப்படுவனவே யொழிய புறத்தே காணப்பெறும் குறிகள் அல்ல என்பதை யுணர்ந்த மெய்யடியவராகிய பாண்டிமாதேவியார் தமது

கணவர் முன்பு அடையாளங்களை அணியாதவரா யிருந்த தொடு கோவிலுக்குப் போய் அழகமர் கடவுளை வழிபடும் போதெல்லாம் அவருடைய ஆணை பெற்றே சென்றாரென்பது தெரியவருகிறது. திருஞானசம்பந்தரது வருகையை யறிந்து எதிர்கொள்ள அம்மையார் சென்றனர் என்று கூறுமிடத்துச் சேக்கிழா ரடிகள்,

"அம்புய மலராள்போல்வார் ஆலவா யமர்ந்தார்தம்மைக்
கும்பிட வேண்டுமென்று கொற்றவன் றனக்குங்கூறி
தம்பரி சனங்கள்சூழத் தனித்தடை யோடுஞ்சென்று
நம்பரை வணங்கித்தாமும் நல்வர வேற்றுநின்றார்."

என மொழிந்தருளுகிறார். அம்மையார் திருஞானசம்பந்தர் வருகையைக் கணவரிடம் கூறவில்லை. ஏனெனில் அவர் தமது கணவனாருக்குக் கேட்டு முட்டுத் துன்பம் வராமை கருதி யிருத்தல் வேண்டும்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்." (திருக்குறள்)

உலகெங்கும் ஆணும் பெண்ணும் ஒத்த உரிமையுடன் வாழும் காலம் விரைவில் வருவதாக.

நையாண்டி

[திரு. கபசம் எழுதியது]

ஆண்டிகளிற் பஞ்சத்து ஆண்டியுமுண்டு, பரம்பரை ஆண்டியுமுண்டு; பொய்யாண்டியுமுண்டு, மெய்யாண்டியுமுண்டு. ஆனல் நானே நையாண்டி. வயிற்றுப் பிழைப்புக்காக வேஷம் போட்டுக் கையேந்திப் பல்லைக் காட்டுவது என்னுடைய வழக்கமன்று. கைப்பொருளில்லாததினல் இரந்துண்டு பிழைக்கிறவர்களை ஆண்டிகளென்று அழைக்கிறார்கள். மெய்ப்பொருளை நான் அறியாதவனுகையால் நானும் ஆண்டிதான். இதன் பொருட்டு நானும் ஒரு ஆண்டியாகத் திரிந்துவருகிறேன். இந்த

உண்மையை அறியாத பலர் என்னை ஒரு பிச்சைக்காரனாகவே நினைத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் எனக்கு ஒரு நஷ்டமுமில்லை.

ஒருநாள் சென்னைக் கடற்கரையில் நாலைந்துபேர் ஒன்றாக உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் “நான் நாளைக்குப் பூனாவிற்குப் போகிறேன்” என்றார். உடனே மற்றொருவர், ‘பூனாவைப்பற்றிப் பல தடவைகளில் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது எங்கிருக்கிறதென்று எனக்குத் தெரியாது’ என்று சொன்னார். இந்த சந்தர்ப்பத்தில் நான் அவர்களை அணுகி, “பூனா எங்கேயிருக்கிறதென்பதை முதல் வகுப்பில் படிக்கிற சிறு பிள்ளைகளும் அறிவார்கள்; உமக்கு இது தெரியாமல் போனதென்ன?” என்றேன். அவர்களெல்லோரும் சிறிது கோபத்துடன் என்னை உற்று நோக்கினார்கள். சிறிது நேரம் கழித்து அவர்களிலொருவன், “இவர் ரொம்ப படிச்சவர்போலிருக்கிறது” என்று இகழ்ச்சியுடன் சொன்னான். அப்போது நான் “படிச்சவர் என்பதும் நீங்கள் குட்டிச்சுவர் என்பதும் இப்போது வெளியாகப் போகிறது” என்றேன். அவர்கள் மிகவும் சினமடைந்து “இவன் கர்வத்தை என்னவென்று சொல்வது?” என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டனர். அவர்களுடைய பேச்சை நான் கொஞ்சமும் கவனியாமல் “இந்துஸ்தானியில் சுவர் என்றால் பன்றி என்று அர்த்தம். குட்டிச்சுவர் என்றால் பன்றிக்குட்டி என்று பொருள்” என்று கூறினேன். அவர்கள் என்னைப் பார்த்து “கஷ்டப்பட்டு சம்பாதிச்சித் தின்னுகிறவனானால் அவனோடு பேசலாம். சம்பாதிச்சித் தின்ன சாமர்த்தியம் இல்லாதவனோடு என்னத்தைச் சொல்வது?” என்று தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொண்டார்கள். உடனே நான், “நான் சம்பா அரிசிதான் சாப்பிடுகிறேன். நீங்கள் என்ன அரிசி சாப்பிடுகிறீர்கள்?” என்று கேட்டேன். “இது என்னடா தொல்லையாய்ப் போச்சுது! அப்பா நீ ஒழிஞ்சிப் போ, உனக்கு ஒரு சலாம்” என்று அவர்களிலொருவன் என்னை வேண்டிக்கொண்டான். இந்த வேளையில் நான் சிறிது உள்ளே

நகைத்துக்கொண்டு "அப்பா, சலாம்; இன்னும் கொஞ்சம் பேசலாம்" என்று சிரித்தேன். அவர்களும் என்னோடு சேர்ந்து சிரித்துவிட்டார்கள். இதற்குமேல் நான் அவர்களைப் பார்த்து "நண்பர்களே உங்களில் ஒருவருக்குப் பூனை எங்கிருக்கிற தென்று தெரியவில்லை. அதைச் சொல்லிவிட்டுப் போகிறேன். உங்களில் யாருக்காவது பானை, பாவன்னை, பீனை, சொல்லத்தெரியுமா?" என்று வினவினேன். அப்போது ஒருவர் "அது கூடவா தெரியாது, பானை, பாவன்னை, பீனை, பீயன்னை, பூனை, பூவன்னை" என்று மேலே சொல்லப்போகும்போது, "போதும், போதும், நிறுத்தும்" என்று நான் தடுத்தேன். அவர் அப்பபடியே நிறுத்திவிட்டார்.

"பீயன்னைவுக்குப் பக்கத்தில் பூனை இருக்கிறது உங்களுக்குத் தெரியாமல் போனதென்ன?" என்று நான் கேட்டபோது, அவர்களெல்லாம் விழுந்து விழுந்து சிரித்து என்னைத் தங்களருகில் உட்கார்ந்து பேசும்படிக் கேட்டுக் கொண்டார்கள். இதற்கிடையே ஒருவன் "சுடச் சுடக் காராமணி, ஐயையோ சுடுதே, அப்பப்பா சுடுதே, காராமணி, கடலை பட்டாணி" என்று கூவிக்கொண்டு வந்தான். நான் என்முன் இருந்தவர்களைப் பார்த்து, "எனக்குக் கொஞ்சம் கடலை வாங்கிக் கொடுப்பீர்களானால், சிறிது நேரம் உங்களோடே பேசுவேன்" என்றேன். "போயும் போயும் கடலைதானா உமக்கு வேண்டும்?" என்றார்கள்.

"கடலை என்ன அற்பமானதா? அகஸ்திய ரிஷி முதலியவர்களெல்லாம் கடலை சாப்பிட்டிருக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரியுமா?" என்று பதில் கேள்வி கேட்டேன்.

"அகஸ்தியர் கடலை சாப்பிட்டதாக நாங்கள் கேட்டதுமில்லை, படித்ததுமில்லை" என்று அவர்கள் விளம்பினார்கள்.

"அப்படியானால் நான் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று நான் பேசத் தொடங்கினேன். "எலிமீது ஏறிய யானைக்கும் மயில்மேல் குந்திய காளைக்கும் தந்தையாகி" என்று நான் சொல்லிக்கொண்டு போகையில், "எலியின் பேரில் யானை எப்படி ஏறும்?" என்று ஒருவர் கேட்டார்.

"எலியில் பெருஞ்சாதி பெருச்சாளி; அந்த பெருச்சாளி மீது ஏறிய யானை, விநாயகர், மயிலின்மேல் குந்திய காளை, முருகன்" என்று விடையளித்தேன்.

"ஓஹோ அப்படியா? சரிதான் அப்புறம் சொல்லுங்கள்" என்று அவர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

நான் மறுபடியுந் தொடங்கினேன்:—

"எலிமீது ஏறிய யானைக்கும், மயில்மேல் அமர்ந்த காளைக்குந் தந்தையாகி, எருமைக் கடாவின்பேரில் ஏறி மார்க்கண்டன் உயிரைக் கவர்ந்த யமனை, எருதின்மேல் சவாரி செய்து போய்த் தாக்கிய பரமசிவன், பருவத ராஜன் பெற்றெடுத்த புத்திரியாகிய பார்வதியைக் கலியாணம் செய்துகொண்ட காலத்திலே தேவரும் மற்றை யாவரும், கைலையங்கிரியிலே அவருடைய மணக்கோலத்தைக் காண வந்ததனால், பாரந்தாங்கமாட்டாமல், வடதிசை தாழ்ந்து தென் திசை உயர்ந்துபோக, எல்லோரும் அதைக்கண்டு திடுக்கிட்டுப் போனார்கள்" என்று ஆனந்த பைரவி ராகத்திலே சொல்லிக்கொண்டு வந்தபொழுது, காராமணி கடலை பட்டாணி விற்றவன் தன் தலையிலிருந்த கூடையை இறக்கிக் கீழே வைத்து அதிக ஆவலுடன் நான் கூறியதைக் கேட்டுக்கொண்டு நின்றான்.

அவனை நான் பார்த்து, "அப்பா, கடலை விற்கும் கடலையாண்டி, அகஸ்தியர் கடலையைச் சாப்பிட்ட கதையைச்சொல்ல போகிறேன், நீயும் உட்கார்ந்து கேள்" என்று சொல்லி மறுபடியும் ஆரம்பித்தேன். "வண்டி குடை கவிழ்ந்ததுபோல் உலகம் ஒரு புறம் சாய்ந்து கிடந்ததைக் கண்டு எல்லோரும் நடுங்கி நிற்கும்போது, நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணின் உஷ்ணம் அதிகரிக்காதபடி தலையிலுள்ள சடையிலே கங்கை நீரைக் கட்டிவைத்திருக்கும் சாம்பசிவன் அதன் அருகிலுள்ள குள்ளமுனியாகிய அகஸ்தியரைப் பார்த்து "நீ போய் உலகத்தை முன்போல சமநிலைப்படுத்து" என்று ஆக்ஞாபித்தார். அவ்வாறே இந்த அகஸ்தியமுனி தென்றிசைச் சென்று உலகத்தைச் செப்பனிட்டார். இவ்வாறு மகத்துவம் மிகுந்த அகஸ்

தியரிடத்தில் ஒரு நாள் ஆயிரங்கண்ணனாகிய தேவேந்திரன் வந்து தேவர்க ளெல்லாரையும் விருத்திராசுரன் என்ற ஒரு அரக்கன் வருத்துவதாயும், அவ்வரக்கன் சமுத்திரத்தில் ஒளித்துக்கொண் டிருப்பதாயும் முறையிட்டான். உடனே குறுமுனியாகிய அகஸ்தியர் சமுத்திரத்தைச் சாப்பிட்டு அந்த அசுரனை வெளிப்படுத்தினர். கேட்டீர்களா, ஓ ஜனங்களே" என்று நான் பேசி முடித்தேன்.

இதைக் கேட்டவர்கள் சிறிது நேரம் யோசனை செய்து "அகஸ்தியர் கடலை சாப்பிட்டதாகச் சொன்னீர்களே, அதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் வேறு என்னமோ பேசிவிட்டீர்களே" என்றார்கள்.

"அதைப்பற்றித்தான் இப்போது நான் பேசி முடித்தேன்" என்று சொன்னேன்.

"இல்லையே" என்றார்கள்.

"ஆம்" என்றேன்.

"இல்லவே இல்லை" என்றனர்.

"சமுத்திரம் என்றால் என்ன ?" என்று கேட்டேன்.

"சமுத்திரம் என்றால் கடல்" என்றார்கள்.

"கடலை அகஸ்தியர் சாப்பிட்டார் என்று நான் சொன்னேன். அவர் கடலையுண்டதை நான் சொல்லவில்லையென்று எப்படி நீங்கள் சொல்லலாம்" என்று நான் கேட்டபோது அவர்கள் வாயைத்திறந்து மூக்கில் விரல் வைத்துக் கொண்டனர்.

இதற்குப்பின் நாங்கள் இரண்டணாவிற்குக் கடலை வாங்கி உண்டோம். என்முன் இருந்தவர்கள் கையில் கடலையை வாங்கி உண்ணும்போது அஜாக்கிரதையாகப் பல கடலைகளைக் கீழே சிந்தினர்கள். நான் அதிக கவனத்துடன், ஒன்றுவிடாமல் பொறுக்கலானேன். உடனே அவர்கள் என்னைப்பார்த்து, "வேண்டுமானல் இன்னும் கொஞ்சம் கடலை வாங்கிக் கொள்ளலாம்; மணலில் விழுந்ததை என் பொறுக்குகிறீர்கள்?" என்றார்கள்.

“அப்படிச் சொல்லவேண்டாம், நண்பர்களே, நான் பெரியவன், நீங்கள் கொஞ்சம் சிறியவர்கள், “சிறியோர் சிந்திய சிறு கடலே எல்லாம், பெரியோராயிற் பொறுக்குவது கடனே” என்று நூல்களிற் சொல்லியிருப்பதை நீங்கள் வாசித்ததில்லேயோ?” என்று கேட்டேன். அவர்களுக்கு அடக்கமுடியாத நகைப்பு வந்தது. இதற்குள் நேரமாய் விட்டதால் நாங்கள் அவ்விடத்தை விட்டு எழுந்து அவரவர் இடம் போய்ச் சேர்ந்தோம்.

—தமிழ் நாடு.

ஆய்ச்சியர் குரவை

[திரு. அ. நடராஜ பிள்ளே அவர்கள்]

(ஒன்பதாஞ் சிலம்பு கூஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வேழு நரம்புகளும் நிற்குமிடங்களில், கண்ணன் முதலியோர் அக்காலத்தில் நின்று குரவையாடிய முறைப்படியே மாதரி அவ்வெழு கன்னியரையும் குடதிசை முதல் இடமுறையாகக் குரல் முதலிய நரம்புகளின் இடங்களில் நிறுத்தினள். குரல் நரம்பிடத்து நின்றவட்கு ‘மாயவன்’ எனவும், துத்த நரம்பிடத்து நின்றவட்கு ‘பிஞ்ஞை’ எனவும், கைக்கிளே நரம்பிடத்து நின்றவட்கு ‘ருக்மணி’ எனவும், உழை நரம்பிடத்து நின்றவட்கு ‘வாருணி’ எனவும், இளி நரம்பிடத்து நின்றவட்கு ‘வெள்ளேய (பலராம)ன்’ எனவும், விளரி நரம்பிடத்து நின்றவட்கு ‘இரேவதி’ எனவும், தார நரம்பிடத்து நின்றவட்கு ‘அசோதை’ எனவும் அவள் பெயரிட்டாள்.

பின்னர், மாதரி மாயவன் பெயர் கொண்ட மங்கையின் கழுத்தில் துழாய் மாலேயை யிட்டு, மாயவன் தன் திருவினேயும் மறக்கும்படி செவ்வி வாய்ந்த பிஞ்ஞையின் மேன்மையைப் பெரிதும் வியந்து நின்ருள். அவ்வெழு கன்னியரும் அவ்வட்டப் பாலேயில் முன்னர்க் கூறிய முறைப்படியே சமநிலேயாக நின்று, தம்முள் கற்கடகக்கை (நடுவிரலினேயும் அணிவிரலினேயும் முடக்கி மற்றை யிருவிரல்களாகிய சுட்டு விரலினேயும் சிறுவிரலினேயும்) கோத்து மண்டலித்துச் சூழ்ந்தனர். அர்வ

களுள், குரல் நரம்பிடத்து நின்ற மாயவனாகிய கன்னி தன் கிளையாகிய துத்த நரம்பிடத்திலுள்ள பிஞ்ஞையை நோக்கி, "கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தானாகிய கண்ணனை முல்லைத் தீம்பண்ணால் பாடியாடக் கடவோம்," என்றாள். எனவே மற்றவர்கள் அதற்கிசைந்தனர். உடனே, குரல் நரம்பாய 'மாயவன்' என்பாள் மந்த சுரமாகவும், இளி நரம்பாய 'வெள்ளையன்' என்பாள் சமசுரமாகவும், துத்த நரம்பாய 'பிஞ்ஞை' என்பாள் வலிசுரமாகவும், விளரி நரம்பாய 'இரேவதி' என்பாள் வலிமை யில்லாத மந்த சுரமாகவும், துத்த நரம்பாய பிஞ்ஞைக்குப் பற்றாகப் பின்வரும் பாட்டுக்களைப் பாடி எழுவரும் அடிபெயர்த்திட் டாடினார்கள் :—

ஒரு பொருண்மேல் மூன்றடுக்கிவந்த அகவற்றாழிசை.

௧. "கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!"

௨. "பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!"

௩. "கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!"

பின்பு, குரவையாடு கோதையர், "தொழுனைத் துறைவனாகிய கண்ணபிரானோடு பிஞ்ஞைப் பிராட்டியார் யமுனை யாற்றில் ஆடுங்கால் நிகழ்ந்த காட்சியினை யெடுத்து நாம் பாடுவோம்," என்று கூறிக் கொண்டு பின்வருமாறு பாடியாடத் தொடங்கினார்கள் :—

கலித்தாழிசைகள்.

௧. "இறுமென் சாய னுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்!
அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம்!"

௨. "வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம்!
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்!"

௬. "தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாண் முகமென் கோயாம்!
கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்!"

இவ்வாடல் பாடல்களைக் கண்டு களித்த மாதரி, "பகற் கதிரைத் தன் கையாழியான் மறைத்த கடல்வண்ணனாகிய கண்ணனுக்கு இடது புறத்திலும், மதியை யொத்த மாமேனி கொண்ட வெள்ளையனுக்கு வலது புறத்திலும் ஆக, நின்று சிறு புறமாகிய வெருத்தத்தைக் கோட்டிக் குரவையாடும் பிஞ்ஞைப் பிராட்டியின் தாள வொற்றறுப்பைத் தாங்கி யாழ் நரம்பினை யுருவி நாரதனார் வாசிக்க, மாயவன் தன் முன்னவனாகிய வெள்ளையனோடும், பிஞ்ஞை முதலிய பெண்களோடும் துவாராபதியில், எருமன்றத்தே அன்றாடிய குரவைக் கூத்தினைக் கண் கூடாக்கும் இக்கூத்து, எத்தகைச் திறப்புடையதாய்த் திகழ்கின்றது!" என வியந்தாள். மேலுமவள் அக்கன்னியரை நோக்கி, "தோழிகாள்! நாமெல்லோருஞ் சேர்ந்து கருடப் புள்ளை யூர்கின்ற கடல்வண்ணனை யுள்வரிப் பாட்டினா லுள மகிழ்ந் தேத்துவோம்," என்று கூறி அவர்களோடு தானுந் தன் மகளாகிய ஐயையும் கலந்து பாடத் தொடங்கினார்கள் :—

கலித்தாழிசைகள்.

பூவை நிலை.

க. "கோவா மலையாரங் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்."

உ. "பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்."

௩. "முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிரோ ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்."

முன்னிலைப்பரவல்.

க. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி
கடல்வண்ணன்! பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே

கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய்! மாயமோ! மருட்கைத்தே!''

௨. "அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே!
உண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய்! மாயமோ! மருட்கைத்தே!''

௩. "திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே!
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய்! மாயமோ! மருட்கைத்தே!

படர்க்கைப் பரவல்

௧. "மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!''

௨. "பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே!''

௩. "மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே!
நாராய ணாவென்னா நாவென்ன நாவே!'' (தொடரும்)

பெரியார் பிரிவு

திருவனந்தபுரத்தில் செந்தமிழ்க் கல்லூரி நடாத்துபவரும் பரோபகார சிந்தையுடையவருமான உண்டியல் கடை சு. கணபதியப்பபிள்ளையவர்கள் 12-2-31-ல் திடுமென உயிர் துறந்தமை கேட்டு பெரிதும் உளம் வருந்துகின்றோம். அவர்கள் குடும்பத்தவர்க்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார்.



தருமிக்கிப் பொற்கிழி யளித்தது.

ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௬	மெய்கண்டான்யாண்டு-௭௱அ பங்குனித்திங்கள் 1931ஞு மார்ச்சுமூ—ஏப்பிரல்மூ	பரல் ௩

திருச்சிற்றம்பலம்

சுந்தர மூர்த்தி தேவாரம்.

குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்சூழ்ந்த களவெலாம்
செற்றொருவரைச் செய்ததீமைக ளிம்மையேவருந் திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேன்மற வாதெழுமட நெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றமேறி புறம்பயந்தொழப் போதுமே.

ஒருவரை=பிறர் ஒருவரை
குற்று=இடித்து
கூறைகொண்டு=(அவர் உடுத்திருந்த) சீலையைப் பிடுங்கிக்கொண்டு
சூழ்ந்த=எண்ணிச் செய்த
கொலைகள் களவெல்லாம்=கொலை களவுகளின் பயனும்
ஒருவரை=அவ்வொருவரை
செற்று=துன்புறுத்தி
செய்த தீமைகள்=செய்த பிற தீய வினைகளின் பயனும்
இம்மையே திண்ணம் வரும்=இப்பிறப்பிலேயே உறுதியாக (நிச்சயமாக) அவனை வந்து சேரும்;
மடநெஞ்சமே=பேதைமையுடைய நெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றமேறி=புற்றினுள்ள பாம்பை அணிந்தவனும் எற்றினை (இடபத்தை) ஊர்தியாகக் கொண்டவனுமாகிய சிவபிரானை அல்லால்

மற்றொருவரைப் பற்றிலேன்=வேறு யாரையும் சாரமாட்டேன் (பற்று வான் அவனே என்றபடி)
மறவாதெழு=ஆதலின் அவனை மறவாது எழுந்து என்னுடன் வா
புறம்பயம் தொழப்போதுமே=அச்சிவபிரான் திருமேனி கொண்டருளிய புறம்பயம் என்னும் தலத்துக்குச் சென்று துதிப்போம்.

இந்தத் தேவாரப்பாட்டு இப்பிறப்பிலே ஒருவன் கொடுந்தீவினை செய்தால் அத்தீவினையின் பலன் இன்னொரு பிறப்பு வரையும் காத்திராமல் இப்பிறப்பிலே அவனை வந்து சேரும் என்னும் உண்மையைக் கூறுகிறது. அத்தகைய தீவினையை ஒருவன் தன் மனதில் சூழ்ந்து செய்யாதிருத்தல் வேண்டுமானால், சிவபிரானே பற்றுவான் என்று நினைந்து அவனைத் துதித்தல் வேண்டும் என்றும் கூறுகின்றது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

கன்னிக் குமரி.

[திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ., அவர்கள்,]
(பாளையங்கோட்டை ரிஜிஸ்ட்ரார்)

"இந்நாள் எனக்குப் பயப்பட்ட திப்பிறவி"—எனப் பெரியார் கூறியவாறு 'இசையாற் றிசைபோய' தாய *கன்னியா குமரி எனப்படும் கடற்கரைத் தலத்தைக் கண்டு மகிழ்ந்த ஞான்று கடற்காட்சியிற் புலப்பட்டனவாய சில உண்மைகளையும், கன்னிக்குமரியின் காட்சியின் இன்பத்தையும் காட்டுவன கீழ்க் குறித்துள்ள பாடல்கள் :

I. கடற் காட்சி

கன்னிக் குமரித் தலக்கரையிற் கடலின் பரப்பைக் காண்டலுமே
வன்னிக் கரத்துச் சிவன் கழுத்தின் வடிவார் நீலம், திருச்செந்தூர்

---

* இத்தலம் திருநெல்வேலியிலிருந்து சேரக்கூடியது. தெற்கே 50-மைல் தூரத்திற் கடற்கரையில் உள்ளது. கீழ்க்கடலும் தெற்குக் கடலும் சந்திக்கும் முனையில் அமர்ந்துள்ளது. திருவாங்கூர் அரசைச் சேர்ந்தது. கடற்காட்சியும், கன்னிக்குமரியின் காட்சியும் மிக வனப்பு வாய்ந்தன.

மன்னிப் பொலியும் வடிவேலன் மயிலின் கழுத்தின் ஒருநீலம்
என்னத் திகழும் இக்கடலின் எழிலார் நீலம் எனத்தொழுதேன். (1)

இன்னும் ஒருசார் அக்கடலின் எழிலார் பச்சை நிறந்தோன்றக்
கன்னி குமரி நிறம்பச்சை, கந்தர் மயிலின் நிறம்பச்சை,
பொன்னி கணவன் நிறம்பச்சை, பொற்பார் குறத்தி நிறம்பச்சை,
என்ன நினைந்து சென்றேனே, இறும்பூ தெய்தி நின்றேனே. (2)

பின்னும் நோக்க அக்கடலின் பெரிய கரையிற் றிகழ்கின்ற
கன்னி கோயில் அருகிலலை கவிழ்ந்து புரளல் தாயேநின் [னென்
பொன்னி னருமைத் திருவடியிற் பொருந்தத் தொழுதேன் தொழுதே
றின்ன சொல்லி இறைஞ்சுதல்போல் இருக்குந் தன்மை யதுகண்டேன்.

பச்சைக் கடலின் நடுவணொரு பாறை யொன்று விளங்கக்கண்
டிச்சை யென்னும் ஆசையலை எல்லாப் புறமும் மோதிடினும்
பச்சைக் குறத்தி மணவாளன் பாத மலரிற் பதிந்தவுளம்
அச்சமின்றிப் பாறையைப்போல் அசைவற் றிருக்கும் எனஅறிந்தேன்.

II. குமரிக் காட்சி

கன்னிக் குமரீ குமரீயுன் கருணை பொழியுந் திருமுகமும்
மின்னிப் பொலியுந் திருவடியில் விளங்கு நகையின் பேரொளியும்
சந்நி தானத் திருமருங்குஞ் சாரும் விளக்கின் ஒளியழகும்
என்னை அறியா ஆநந்த இன்ப நிலையிற் சேர்த்தனவே. (5)

வரைவில் லாகக் கொண்டவனை மணத்தல் வேண்டித் தவஞ் செய்யத்
திரைவி லாசக் கடற்கரையிற் சேர்ந்த குமரீ! பெருமாட்டீ!
* விரைவில் விழைந்த பொருளையருள் விமலை யமலை உனைத்தொழுதேன்
புரைவி லக்கிப் புனிதவுளம் பொருத்தி யென்னைத் திருத்தாயோ! (6)

தாயே! கன்னிக் குமரீ! யுன் தரிச னத்தைப் பெறுவதற்கு
நாயேன் என்ன தவஞ் செய்தேன்! நல்ல நல்ல கனியிருக்கக்
காயே கவருங் கள்வனைப்போற் காலங் கழித்தே திரிதருவேன்!
தீயேன் தீய நெறிவிலக்கிச் சிறந்த பூதி தருவாயே. (7)

III. காட்சிக் குறிப்பு

கரிய கடல்தான் நம்முடைய வாழ்க்கைக் கடலைக் காட்டுமெதிற்
பெரிய அலைகள் துக்கசுக பேதப் பிறழ்ச்சி யதைக்காட்டும்

---

* வடமொழியில் "சீக்ரசித்திப் பிரதாயநி"—என்பது அம்மை திருநாமம்.

உரிய பிறவி எண்ணிலதென் றன்மை காட்டும் மணற்குவியல்
அரிய அறிவின் ஒளிகாட்டும் அம்மை குமரி மூக்குத்தி. (8)

கன்னிக் குமரி நீயுமுன்றன் காதற் புதல்வன் திருச்செந்தூர்
தன்னிற் பொலியும் முருகனுமே சகத்தோர்க் குண்மை காட்டுபவர்
அன்ன வகையெங் ஙனமென்னில் ஆசைக் கடலின் அலையொடுங்கும்
தன்னே ரில்லாக் கரையருகே சந்தைக் காண்பீர் எனத்தெரிப்பீர். (9)

பாசக் கடல்தான் படஎழும்பி பரம னருளாங் கடல்கலக்க
நேசத் திரைகள் மிகவீசி நெருங்கு முனையில் உறுஞ்சக்தி
தேசத்தோரே அறிமினெனத் தெரிக்குங் கடல்கள் சந்திப்புப்
பூசைத் தலமாங் குமரிநகர் போற்றிப் பணிமின் பணிமினே. (10)

ஷெ பாடல்களின் கருத்துரை.

1. கன்னிக் குமரித் தலத்திற் கடலின் நீலநிறத்தைக் காண்டலும், சிவபிரானது நீலகண்டத்தின் நீலமும், முருகர் மயிலின்கழுத்தின் நீலமும் நினைவுக்கு வர அவைதமை நினைந்து தொழுதேன்.

2. கடலின் ஒருபாங்கர் அதன் பச்சை நிறந் தெரிய, கன்னிக் குமரி, மயில், திருமால், வள்ளியம்மை இவர்கள் நிறமெலாம் பச்சை யென்னும் நினைவு வரப்பெற்று மகிழ்ந்தேன்.

3. கன்னி கோயில் அருகில் கடலின் அலைகள் கவிழ்ந்து புரளல் அத் தேவியை வருணதேவன் வணங்கி வணங்கி எழுதல் போலத் தோற் றிற்று.

4. கடலின் நடுவில் ஒரு பாறை, அலைமோதினும் அசைவற்றிருத் தலைக் கண்ணுற்றபோது, வாழ்க்கைக் கடலிற் பாசங்கள் தாக்கினும் பத்திநிலை பூண்டப் பெற்றோர் மனம் இறைவன் திருவடியையே சிந்தித்து அப்பாறையைப் போலக் கலங்காதிருக்கும் என்னும் உண்மை தெரிந் தது.

5. தேவியின் கருணை முகமும், திருவடிவில் உள்ள நகைகளின் ஒளியும், சந்நிதானத்துள்ள விளக்குகளின் ஒளியழகும் என் மனத்தைக் கவர்ந்து பேரின்பந் தந்தன.

6. சிவபிரானை மணத்தல் வேண்டிக் கடற்கரையிற் றவஞ் செய் யும் தேவீ! வேண்டுவோர்க்கு விரைவில் வரம் அளிக்கும் பெருமாட்டீ! என் குற்றங்களை நீக்கி எனக்கு மனத்தூய்மை தந்தருள்; இதுவே எனக்கு வேண்டும் வரம் எனத் தொழுதேன்.

7. கனியிருக்கக் காய் கவருங் கள்வனைப்போலத் திரியும் நான் தாயே! உன் தரிசனம்பெற என்ன புண்ணியஞ் செய்தனன். எனக்கு நல்வழியில் இருக்கும் வரத்தைத் தந்தருள்.

8. நமது வாழ்க்கை (சமுசாரம்) நிலையாதது என்பதை இந்த நிலையாத *சமுத்திரம் காட்டுகின்றது. இந்தச் சமுத்திரத்தின் அலைகள் துக்க சுக அனுபவங்கள் மாறிமாறி வருதலைக் காட்டுகின்றன. பிறவி எண்ணிலது என்பதைக் காட்டும் கடற்கரையிலுள்ள மணலின் எண். அறிவின் நிஷ்கள (மாசற்ற) ஒளியைக் காட்டும் குமரியின் பேரொளி வீசும் மூக்குத்தி.

9. கன்னிக் குமரியும் செந்தூர் முருகனுமே உண்மை நிலையைக் காட்டுபவர். ஏனெனில், எங்கு ஆசை அலை ஒடுங்குகின்றதோ அங்குத் தான் அறிவு எழுந்தருளும் என்னும் உண்மையை அலைவீசியொடுங்கும் கரையில் வீற்றிருந்தருளிக் காட்டுகின்றனர் இருவரும்.

10. கீழ்க்கடலே பாசம். தெற்கேயுறும் பெருங்கடலே இறைவன் அருள். இறைவன் அருளாகிய பெருங்கடல் பாசமாகிய கீழ்க்கடல் புடைபட்டொடுங்க மேல் எழும்பி அதனைக் கலந்து அன்பாகிய அலைகளைக் கிளப்ப, அந்நிலையில்தான் (பரா) சத்தியின் காட்சி விலாசம் கிடைக்கும் என்னும் உண்மையைக் கடல்களின் சந்திப்பு நிலையிற் காட்டும் புனிதபூமியாகிய குமரிநகரைப் போற்றிப் பணிவோம்-வம்மின் ஜகத்தீரே!

'மணிவாசகரும் கண்ணப்பரும்'

[தமிழ்ப்புலவர் திரு. அ. மு. சரவணமுதலியாரவர்கள்]

(சிலம்பு அ: ௭௨க-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, மேலைநாட்டறிஞராகிய ஜி. யூ. போப் என்னுந் துரைமகனூர் திருவாசகப் பெருமையை எங்ஙனம் அறிந்து வைத்தா ரென்பதை நோக்குழி, தமிழ்மக்களென்று தம்மை நினைத்துக்கொண்டு அவிழ்ச் சுவையே யன்றித் தமிழ்ச் சுவையைச் சிறிதேனும் அறியாத தம்பங்கள் பலவும் வெட்கித்

---

* "நிலையாத சமுத்திரமான சமுசாரம்" (திருப்புகழ்)

தலைகுனிய வேண்டாவோ! அப்புலவர் பெருமகன் என்ன சொன்னர்? தம் உயிர் உடலினின்று பிரியுஞான்று தம் அருகி லிருந்த நண்பர் பலரையும் நோக்கி 'நண்பர்காள்! யான் இறந்த பின் நீவிர் எனக்குப் பெரியதொரு கல்லறை கட்டவேண்டு மென்பதில்லை; சிறிதாகக் கட்டினுற் போதும். ஆனல் அதனை ஆக்குதற்குரிய பொருள் மாணிக்கவாசகர் பிறந்த தமிழ் நாட் டுப் பொருளாயிருத்தல் வேண்டும்; அது கொண்டு கட்டி அதன் கண் தமிழ் மாணவன் என்று எனது பெயரைக் குறித்து விடுங்கள்; அந் நாட்டுக்கு எனது கருத்தைத் தெரிவித்து அங் கிருந்துவரும் பொருள் எத்துணைச் சிறிதாயிருப்பினும் அது கொண்டு கட்டி விடுங்கள்' என்று வேண்டினர்; அவ்வாறே அறிக்கை ஒன்றுவர அதுகாலை சென்னையிற் கல்லூரியிற் படித்த மாணவர்களிற் பலர் பொருளுதவி செய்ததாகவும், தாம் சிறிது உதவி செய்ததாகவும் திருவாளர். திரு. வி. கல்யாண சுந்தர முதலியாரவர்கள் 'நவசக்தி' ஆசிரியர் காரையிற் சொற் பொழி வாற்றிய ஞான்று கூறினர். மேற்காட்டிய செய்தி அவர் கூறியதுதான்.

இங்ஙனம் பல அறிஞராலும் போற்றப்பட்டு வரும் பேரன் பாகிய மணிவாசகனர் தமக்கு ஒரு சிறிதும் இறைவன் மாட்டு அன்பில்லை எனப் புடைபடக் கவன்று "கண்ணப்பர் அன் புண்மையிற் றலைசிறந்தவர்; அதுபோலவே யான் அன்பின்மை யிற் றலைசிறந்தவன்" எனக் கூறியதோடமையாது,

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை"
"அலவா நிற்குமன்பிலேன்"
"நெகுமன்பில்லை நினைக்காண"
"இல்லை நின்கழற்கன்பதென்கணே"

" நான்றனக்கன்பின்மை நானுந்தானு மறிவோந் தானென்னை யாட்கொண்ட தெல்லாருந்தாமறிவர்" எனத் தமக்கு இறை வன் திருவடியின் கண் ஒருசிறிதும் அன்பின்மையைத் தெரி வித்தருளுகின்றனர்.

இங்ஙனம் தமது அன்பின்மையைப் பலபடப் பாரித்துக்

கூறிய அடிகள் அந்த அன்பினை அருளுமாறு ஆண்டவனை நோக்கிக் குறையிரத்தல்,

"நின்றன் வார்கழற் கன்பெனக்கு, நிரந்தரமாயருளாய்"
"இடையறுவன் புனக்கென், னுடகத்தே நின்றுருகத் தந்தருள்"
"அன்புநின் கழற்கணே, புணர்ப்பதாக"
"மெய்கலந்தவன்பரன் பெனக்குமாக வேண்டுமே"
"வேண்டு நின்கழற்கணன்பு"
"மெய்யன்பையுடையாய் பெறநான் வேண்டுமே"
"தொண்டனேற்கு முண்டாங்கொல், மிக்க அன்பே மேவுதலே'
"பெறவே வேண்டு மெய்யன்பு"
"அடியாருனக்குள்ள அன்புந்தாராய்"

எனவரூஉந் திருவாசகங்களால் அறியக் கிடக்கின்றது.

பேரன்பராகிய நமது பெரியார் இங்ஙனம் கூறியவற்றைக் கொண்டுதான் கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாச அடிகள், "அருங்கவிவாத வூரனேமுதலோ ரன்பிலேமென்றது வேண்டி, இரங்குதல் பொய்ம்மை அன்பிலேனெனயா னிரங்கலே மெய்யெனக் கருளாய்" எனத் தாமியற்றிய 'சோணசைல மாலை'யிற் கூறிவைத்ததூஉ மென்க.

இனி, 'அடிகள் ஒரு பேரன்பராக இருந்துகொண்டு தமக்கு அன்பில்லை எனக் கூறினவாற்றால், அச் சிவப்பிரகாச னார் கூறியவாறே ஏன் அவரை ஒரு பொய்யர் என்று கூறுதலாகாது' என்னின், அறுநூற்றைம்பத்தெட்டுப் பாடல்களடங்கிய திருவாசக மென்னும் ஒரு சிறுநூலின்கண் சற்றேறக் குறைய முப்பத்திரண்டு இடங்களில் பொய்யைக் கடிந்து கடிந்து கூறும் நமது 'போய்யடிமையில்லாத புலவர் பெருமான்' "பொய்யிருள் கடிந்த மெய்ச் சுடரே", எனத் தம்மாலழைக்கப் பட்ட சிவபெருமான் திருமுன் நின்று பொய் கூறினாரெனல் எங்ஙனம் பொருந்தும்? பொருந்தாது; பொருந்தாது.

அச் சிவப்பிரகாசனார் கருத்தும் அது அன்று என்பது,

"பனிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெருரினமுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே

பேயேன் பெறாத பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே"

என 'நால்வர்நான்மணிமாலை'யில் அவரே மணிவாசகனார் திரு முன் நின்று கூறுமாற்றால் நன்கு அறியலாம். இதில் அவர் கருத்து அது அல்லவாதல் தெரிவதோடு மணிவாசகர் அன்பில்லை யெனக் கூறியதற்குக் காரணமும் விளங்குதல் காண்க.

(தொடரும்)

உள்ளப்பயிற்சி

[திரு. ச. கி. சுந்தராசாரியனவர்கள்]

I நூலறிவு

தற்காலங்களிற் புத்தகங்களின் மூலமாய்க் கல்வி யறிவு பெரும்பாலும் புகட்டப்படுகின்றது அறிவுக்குப் புத்தகங்கள் நிச்சயமாகவே மிக்க பயன்படத்தக்க வுதவிகள். கைத்தொழிற் பயிற்சிக்கும் நாகரிகத் தேற்றத்துக்குங்கூட அவை சிறிதளவு பயன்படும். ஆனாலவை யனைத்து மொருபோதும் மனோபி விருத்திக்கேற்ற முதன்மையான வியற்கை யூற்றுக்களாகா. இவைகளின்றி அமையாதனவாகிய கலைப்பிரிவுகளினும் இவை களினாற்றல் மிகவும் பாரித்துரைக்கத் தகாதென்பது எமது கருத்து. எவ்வாறாயினு மவைகள் புதுவது படைக்கு மாற்றலுடை யனவல்ல. அவை யனைத்துங் கல்வி யறிவின் தேர்ச்சிக்குற்ற துணைக்கருவியாமே யன்றி வேறாகா. தூரதிருஷ்டிக் கருவியும் அணுதரிசனியும் நமதாராய்ச்சிகளிற் புதிய புதிய நினைத்து மிராத ஆச்சரியங்களைப் புலப்படுத்துகின்றன. ஆனாலிவை களை யடிக்கடிப் பயன் படுத்துவதனால் மருண்டு நாம் நமது கண்களை உபயோகிப்பதனா லெய்தும் பயனை நன்குமதித்துப் பாராட்டாமலிருக்கக் கூடாது. இவ்விரண்டையும்போலவே புத்தகங்களும் நமக்கு இயற்கையின் கூர்மையான முன்னறிவினா லுதவிகளாகக் கிடைத்திருப்பனவற்றோடு சேர்ந்த செயற்கைக்

கருவிகளேயாம். உயிர் வாழ்க்கை, அனுபவம், தாமே சிந்தித்தல் உணர்தல், அறிந்து கொண்டபடி நடத்தல், இவைகளே அறிவுக்கு முதன்மையுந் தகுதியுமுள்ள மூலங்களாகுமே யன்றி நூல்கள் அன்னண மாகாவாம். இவற்றைக் கைக்கொண் டொருவன் மேற்புகுவானாயின் புத்தகங்கள் அப்பொழுதே அவனது மனத்திற் பல வெள்ளிடைகளை நிரப்பித் தவறான வெண்ணங்களுட் பலவற்றைத் திருத்திக் குறைவாயின பற்பல வற்றையும் பூரணமாக்கும். ஆனாலொருவன் தான் மேற்புகுதற்கு வாழ்க்கையி லனுபவமில்லா திருப்பானாயின் அவனுக்குப் புத்தகங்கள் உழுது நெகிழாத கட்டாந்தரையில் வீழு மாரியும் வெயிலும்போற் பயனற்றனவாம்.

சாலறி வூற்றினிற் றதும்பி மேலெழூஉம்
நூலைத்தூ நதியென நுவலு கோவதன்
மேலொரு வாய்ப்புன னீரின் வேட்கையை
யேலநன் கென்றென்று மினிதிற் றீர்க்குமால்
அத்தகை யறிவுடை யவனொ ருத்தனே
மெத்தவுந் தூண்டிமேன் மேலு மோங்குறு
முத்தமச் சாத்திரத் துற்ற வன்மையை
நித்தமு முணர்தா னேரு மேயன்றே ?

இஃது ஒருவாறு செய்யுணடையி லமைக்கப்பட்டிருப்பினும் பொதுவான தொரு சிறந்த வுண்மையை அடக்கிக்கொண் டுளது. தாதுக்களொன்றையேனும் பார்த்திராத மனிதனொருவனுக்குத் தாது பரீக்ஷண சாஸ்திரம் நுட்பப்பொருளை வெளிப்படுத்திக் காட்டாமையாற் பயன்படாதவாறுபோல, கவி சரிதமுஞ் செய்யுட்களும் வாழ்க்கை யென்பதின்ன தென்றறியாத கேவல வித்தியார்த்திகளுக்குப் பயன்படாவாம். இனிய வோசையிற் பழக்க மில்லாதானுக்குச் சங்கீதப் பிரசங்கமும் பயன்படுவதன்று, ஆத்தும பக்தியாதல், வாழ்க்கைத் தூய்மையாதல் இல்லாதவனுக்கு வேதப் பிரசங்கங்களும் பயன் படாவாம். நூலறிவெல்லாம் பிரதிபலித்து எதிரொலி போன்று புறவழித்தாய் வருகின்றது. மெய்யறிவு நினைத்தலாற்றலை யுடைய ஆன்மாவினின்றும் உலராத வேரூன்றி வளர்கின்றது.

புறப்பொருள்களு, ளெதனைத்தான் கொள்ள வேண்டினுங் கேவலங் கடன்கோடல் போலாது, உயிருள்ள வோரவயவி யானது தன்மயமாக்கிக் கொள்ளுமாறு உட்கொள்ளுகின்றது.

II ஊன்றிய நோக்கம்.

ஆதலான் வாலிபர்கள் கற்கத் தொடங்கும்போது நூற் கூற்றினுணர்ச்சியையே யெப்பொழுதும் மேற்கொண்டு புகாமல், தங்களாலியன்றமட்டும் விஷயங்களைப்பற்றிய நேர்மையான வூன்றிய நோக்கத்தோடு படிக்க வேண்டுமென்று யாம் அறிவுறுத்துகின்றோம் "உற்று நோக்குதல் எவ்வாறு?" என்று தலைக் குறியிட்ட சிறந்த நூலொன்று வரையப்பட்டுளது; இம் மும்மொழிகளும் நம்முடைய கல்வித் தொடக்கத்திற் சிறந்த பகுதியில் நம்மை வழி நடத்துங் கட்டுரை யாகலாம். அற்றேல் இப்பகுதி அந்தோ! மிகப் பரிதபிக்கப்படத் தக்கவாறு கவனிக்கப்படா தொழிகின்றது! மனத்தின் கண்ணே பல்வகைப்பட்ட உயர்ந்த வழகிய பொருள்களை மிகுதியாய் நிரப்புதன் மாத்திரையிலே யன்றி யெல்லாத் தொழில்களினு மிகப் பயன்படத் தக்க கண்களை யுபயோகப்படுத்துவது யாங்ஙனென்பதையும் போதிப்பதனால் இயற்கைகளெல்லாம் விசேஷ மதிப்புடையனவாய் வழங்குகின்றன. நமது கண்களை நன்றாகத் திறந்து கொண்டு போகும்போதே ஒன்றையேனுங் கவனித்துக் காண்கின்றே மல்லேமென்பது மிகவு மதிசயமே. இஃதெவ்வாறென்றாலோ, கட்பொறியும் மற்றையன போலப் பயிற்சியடைய வேண்டும். பழக்கக் குறைவாலும், அடிமைத் தனமாய்ப் புத்தகங்களையே சார்ந்திருத்தலாலும் இப்பொறி மழுங்கி, மந்தமாகி இறுதியில் தனதியற்கைத் தொழிலையுஞ் செய்தற்கு இயலாததாய் விடுகின்றது. தாங்கள் காண்பன இன்னவென்றறியவும், கவனியா விடத்துக் காணாத்தவறக் கூடியனவற்றைக் காணவுமே கற்பிக்கப்படும் பாடங்களனைத்தும் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் முதன்மை யுள்ளனவாகக் கருதப்படட்டும். நிலைத்திணைப் பொருணூல், விலங்கியனூல், தாதுபரீக்ஷண சாஸ்திரம், பௌமிய சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம்,

சிற்ப நூல், ஓவிய நூல், நற்கலை, இவையனைத்தும் மிகப்பயன் படற்பாலனவாம். காட்சியறிவு புகட்டு மிந்நூல்களின் இன்றியமையாத வுணர்ச்சி சிறிதேனு மில்லாமையால் மிக்க நூற் பயிற்சி வாய்ந்த சிறுவர்களுக்கு எத்துணையோ பல தேசங்களின் காட்சியும் ஒத்து நோக்குமிடத்துப் பயனிலவாயின!

III. பாகுபாடு.

ஊன்றிய நோக்கம் நன்றே; அதனினும் நன்று நேரிய வூன்றிய நோக்கம். ஆயினும் இப்பிரபஞ்சத்தின் கண்ணே பல்வேறு வகைப்பட்ட பொருள்களிருத்தலால் அப்பொருட்டொகுதிகளை மனத்தினதிகாரத்தினுள் வைத்தடக்கிச் சீர்ப்படுத்துவதற்கு ஏற்றதோ ருறுதியான வழியிலதாயின் உற்று நோக்குந் திறமை அமிழ்ந்து கலக்கமுறு மென்ப தொருதலை. நாம் பாகுபாடு என்றுரைப்ப தெல்லாம் இவ்வொழுங்கு படுத்தும் முறையையேயாம். கடவுள் பேரறிவின் தோற்ற மாகிய உலகெங்கணும் அது தெளிவாய் விளங்குதலின் மனிதன் பகுத்தறிவினாற் கண்டுரைக்கக் கூடியதேயாம். இப் பாகுபாடு இறைவன் தன் பேரறிவினாற் பொருள்கள் யாவற்றினிடத்துஞ் சார்த்தியிருக்கின்ற முதன்மையான வகுப்பொருமையைப் பற்றியதாம். வெளித் தோற்றத்திற்கெல்லாம் மிகவும் வேறுபடுவன போலும் பொருள்களுட் பொதுத்தன்மை படைத்துக் காட்டலில் இவ்வொருமை தானே விளங்கும். நுட்பமாய் உற்றறிகிற கண்களினாற் பற்றப்பட்டுழி, இப்பொதுத் தன்மைகள் தாமே இவ்வுலகினிற் காணப்படும் மிகப் பலவகைய வேற்றுமையுள்ள பொருள்களையும் பெரிதுஞ் சிறிதுமாகிய அளவுள்ள பொதுவினம் சிறப்பின மென்றுரைக்கப் படுகிற சில ஈட்டங்களாகப் பகிர்வதற்கு உற்ற துணைகளாகும். பொருள்களைத் தேர்ந்து சீர்தூக்கி ஒவ்வொன்றின் நலமிஃதென்றும் அலதிஃதென்றும் பகுத்தறியும் மனமுடையானுக்கு இவ்வினங்கள் தம்மியல்பிலேயே விளங்குவனவாம். ஆதலின், மாணாக்கனது முதற்கடமை தான் காணுமனைத் தினுமுள்ள பொதுத் தன்மைகளைக் கவலையுடன் உற்று நோக்குதலே யன்றி மிகவும் வெளிப்

படையாய்த் தோற்றும் வேறுபாடுகளையும் குறிக்க வேண்டு வதே. ஏனெனில், விடயங்களின் வேற்றுமை நயங்கள், சாயல் ஒளியுடன் செல்லுதல் போலப் பொதுத் தன்மைகளோடும் ஒருதலையாய் உடனியலுகின்றன. அவைகள் தாமே ஒருண் மைப் பொருளாகாவிடினும் ஒரு பொதுவினத்தை மற்றொன்றி னின்றும், ஒரே பொதுவினத்தின்கணடங்கிய சிறப்பினத்தை மற்றையவற்றினின்றும் பிரிக்கின்றன. எல்லாப் பொருள் களின்கண்ணும் நாடவேண்டிய பாகுபா டல்லது முறை, இயற்கை ஒழுங்கு எனப்படும். மொழி யகராதியின்கணுள வார்த்தைகளின் ஒழுங்கு போலாதல், லின்னீயன் என்பவரது முறைமையின்படி நிலத்திணைப் பொருணூலிலுள மலர்களின் நிரை போலாதல், செயற்கை முறைப்பாடுகளெல்லாங் கற்கப் புகுபவர்களுக்குத் தொடக்கத்திற் பயப்படத் தக்க உதவிகளாக லாம். ஆயினும், தனித்து அவையிற்றையே சார்ந்து உப யோகித்தா லவைகள் மெய்யறிவுக்கு இடையூறுகளாயினுமாகும். இயற்கைப் பொருத்தத்தினியைபுகளின்படி பொருள்களைச் சேர்க்கும் பயிற்சி யடைதலை ஒவ்வொரு சிறுவனும் குறிக் கொளல்வேண்டும். சிறப்பியல்புகளைப் பற்றிய நேரிய ஊன் றிய நோக்கத்தோடு பொது விளைவுகளைப்பற்றி நுனிப்புன் மேய்ச்சல்போன்ற நோக்கமும் கலந்திருந்தாலொழிய அப் பழக்க மடைத லியலாது. நீர்க்குமுதம் தனது பெயரினாற் குமுதவினத்தோடு உண்மையாகவே யாதோரியைபு மில்லா திருப்பினும் அதன்கண் ஒருவகையாமென்பது தோற்று வித்தல் போலச் சாமானிய சனங்கள் இட்ட மலர்களின் பெயர்களும் புறத்தியலும் ஒற்றுமை பற்றியேயன்றி ஆராய்ச்சி முதிர்வின்கண் ஏற்பட்டனவல்ல. செடி கொடிகளின் குணத் தையும், உறுப்புகளையும் நுட்பமாய் உற்று நோக்கிய நிலத் திணைப் பொருணூல்வல்லனோ, அவ்வாறன்றி நீர்க்குமுதத்தைக் கசகசாவினத்தி னுட்படுத்தித் தானவ்வாறு செய்தற்குத் தக்க காரணங்களையும் நமக்கு எடுத்துக் காட்டுவான். தேச சஞ் சாரம் மிகவும் எளிதாகிய இக்காலத்தில், உற்று நோக்குதற் பயிற்சி அடைதற்கு உதவியாக வாலிபர்கள் சமயம் நேரிடும்

போதெல்லாம் தத்தம் நாட்டின்கணுள்ள பொருட் காட்சிச் சாலைகளைப் போய்க்காண ஒருபொழுதும் தவறக் கூடாதென்றும், ஆங்குச் சென்றுழி, அவ்விடத்திற் குரித்தாகிய சிறப்புடைப் பொருளினிடத்திலேயே பொதுவாய்த் தங்கள் சிந்தையைச் செலுத்தவேண்டுமென்றும், யாம் அறிவுறுத்தவேண்டும்.

பொருந்திய வனைத்தையும் பொதுவினோக்கினுற் றிருந்திய மனத்தினிற் சிறிது மில்லையாம்.

ஞானபோதினி.

ஆய்ச்சியர் குரவை.

[திரு. அ. நடராஜ பிள்ளை அவர்கள்]

(ஒன்பதாஞ் சிலம்பு கூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதரி கொண்டாடிய விக் கொண்டாட்டம், பொது மக்களிடையே அக்காலத்திற் பரவியுள்ள தெய்வ வன்பும், கடவுணம்பிக்கையும் எத்திறத்தன வெனப் புலனுக்குகின்றது. நற்குறிகள் தீக்குறிகளாகிய சகுனம் பார்க்கும் முறையில், அக்காலத்தவர் கொண்ட நம்பிக்கையும், அந்நம்புதலுக் கேற்ற பயனுறுதலு மிங்குத் தெளிவாகின்றன. இக்குரவை யடி பெயர்த்தாடுங் கூத்தெனினும் சிலப்பதிகார வாசிரியராகிய இளங்கோவடிகளும் அதன் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரும் இதனை நாடகமெனக் கூறுகின்றனர். அங்ஙன மவர்கள் கூறுதற்கு, ஆயர்பாடியில், கண்ணன் ஆடிய கூத்தினை யாய்ச்சியர் கைக்கொண்டு நடித்தலும், கூத்தாடுங் கன்னியர்க்கு மாயவன் முதலிய பெயர்கள் வகுத்தலும், யாழின் முறைகளைக் கைக்கொள்ளுதலுங் காரணங்களாம் போலும். குரவை நாடகம் எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடுங் கொள்கைத்தாம்.

இக்குரவை யெழுவர் கைகோத்தாடுங் கூத்தாம். இது, யாழ் நரம்புகளின் முறைகளைப் பற்றிப் பாடி யாடப் படுதலின்

மற்றையதினுஞ் சாலச் சிறப்புடைத்தாம். மாதரி, குரவையாட வந்த வெழு கன்னியரையும்,

க. "காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள்,"

உ. "நெற்றிச் செகில யடர்த்தாற் குரியவிப்
பொற்றொடி மாதரா டோள்,"

௩. "மல்லன் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் பூங்குழ லூன்,"

௪. "நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிப்
பெண்கொடி மாதர்தன் தோள்,"

௫. "பொற்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிந்
நற்கொடி மென்முலை தான்,"

௬. "வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள்,"

எ. "தூநிற வெள்ளையடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமல ராள்."

என வெடுத்துக் காட்டி, "முல்லைக் கோதையையுடைய இவ் விளங்கன்னிய ரெழுவருந் தொழுவிடத்து ஏழிளங் காளைகளை வளர்த்து வருகின்றனர்." என்று புகழ்ந்தது, குரவைக்கூத்துப் பெரும்பாலுங் கொல்லேறு தழுவுதலோடு நெருங்கிய வுறவுடைத் தென்பதை வலியுறுத்துகின்றது. மேலும், ஆயர் ஆய்ச்சியர்க்குக் கொல்லேறு தழுவிய பின்னரே குரவையாடுதற் கண் பேருக்கமுண்டா மாதலின், மாதரி குரவை மகளிரை யிங்ஙனங் கொண்டாடலானு ளெனவுங் கொள்ளக் கிடக்கின்றது.

பின்னர், அவள், பாலைப் பண்கள் நான்கனுள் ஒன்றாகிய வட்டப்பாலைப் பண்ணைப் பாட வேண்டி முன்னர்க் காட்டியாங்கு ஆர்கள் நிறைந்த வாழி யொன்று வரைந்து பன்னிரண்டிராசிகளையும் பொருத்தி யிடப முதலிய வேழு இராசிகளினுங் குரல் முதலிய யாழ் நரம்புக ளேழின் பெயர்களை யவ்வேழு கன்னியர்க்கு மிட்டு நிறுத்தினள். இக்கூத்து, கண்ணன் ஆயர்

பாடியி லாடிய வால சரிதை நாடகங்களு ளொன்று மாகலின், குரல் முதலிய பெயர் கொண்ட கன்னிய ரெழுவர்க்கும்,

"மாயவ னென்றாள் குரலை விறல்வெள்ளை
யாயவ னென்றா ளிளிதன்னை, ஆய்மகள்
பின்னையா மென்றாளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையா மென்றாண் முறை";

எனப் படைத்துக் கோட் பெயரிட்டாள். மேற்கண்ட இளங் கோவடிகள் வாய் மொழிக்கு அடியார்க்கு நல்லாருரை கிட்டா மையின், "மற்றையார் முன்னையா மென்றாண்முறை," என்ப தற்கு "மற்றை நால்வரும் பிஞ்ஞைக்கு முறைமையினில் மூத்த வர்களாகிய அசோதை, ருக்மணி, வாருணி, இரேவதிகளாவர்," எனப் பொருள் கொள்ளப் பட்டது. இக்கொள்கையைப் பின் னர் வரும், "முந்தையாகிய 'அசோதை,' என்னும் தார நரம் பிற்கு வலப் பக்கத்தே, 'விளரி,' நின்றது," என்ற அடியார்க்கு நல்லாருரை சிறிது வலியுறுத்துகின்றது. இங்ஙனம் இன்றி யமையாத வாய் மொழியின் பொருள் மறைந்தது மிகவும் வருந் தத் தக்கதாம். பிஞ்ஞைக்கு அசோதை மாமியும், ருக்மணி மூத்தாளும், வாருணி இரேவதி யிருவரும் முதிய மைத்துனன் (வெள்ளையன்) மனைவியரு மாகின்றமை யிங்குக் கருதவேண்டிய தாம்.

இனி, மாயவனுக்கும் வெள்ளையனுக்கும் இரு புறங்களினு முள்ள விராசிகள் வறியனவாக, பிஞ்ஞை அசோதை இரேவதி வாருணியாகிய நால்வரும் முறையே மாயவன்பாலும் வெள்ளை யன்பாலும் வெட்கி விலகி நிற்றலும், ருக்மணி தனது வலது புறமுள்ள மகவிராசி வறிதாகும்படி தனதிளையாளாகிய பிஞ் ஞையை வெறுத்து விலகி நிற்றலும், அவற்றிற் கியைய அவ் விராசிகள் நரம்புடனியங்கா நலமுங் கண்டு களிக்கற்பாலன. அங்ஙனம் பொருந்திய கன்னியரில் மாயவன் பெயர் கொண்ட மங்கைக்கு மாதரி துழாய் மாலையிட்டுப் பெருமைப் படுத்தியது, கண்ணன் பால் அவள் கொண்ட கழிபேரன்பை யெடுத்துக் காட்டுகின்றது. அப்பெண்கள் செங்(சம) நிலையில் நின்று தம்

முள் நண்டுக்கை கோத்துக் கொண்ட முறையானது கை கோத்தாடுவார்க்கு எவ்விதமான விடையூறு மின்றி நெடுநேர மாடுதற் கண்ணும் கைந்நோய் தோன்றாக் கற்புடை வழியாம். இதனை யாவருந் தம்மில் நிகழ்த்திக் காணலாம்.

பாலை யென்னும் பண்ணானது ஆயப்பாலை, சதுரப்பாலை, திரிகோணப்பாலை, வட்டப்பாலை யென நான்கு வகைப்படும். இவற்றுள், வட்டப்பாலை யென்னும் பண்ணே யிக்குரவையுட் கொள்ளப்பட்டதாம். வட்டப்பாலை யென்பது முன்னர் வட்டப்பாலை மண்டலத்திற் குறிப்பிட்டாங்கு நரம்புகளை யாழில் அமைத்து ஒலிக்கச் செய்து பண்ணை யுண்டாக்குவதுபோலும். இக்கால வீணை முதலிய விசைக்கருவிகளிற் காணப்படும், 'ச, ரி, க, ம, ப, த, நி,' என்னு மேழொலிகளும் அக்கால யாழில், 'தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை,' எனப் பெயர் கொண்டு வழங்கின. இவற்றினையே யாழின் நரம்புகளே ழெனவுங் கூறுப. இவ் வட்டப்பாலையில் தாரவொலி யடுத்து உழையொலி தோன்றின் பாலையாழ்ப் பண்ணும், உழை யொலி யடுத்துக் குரலொலி தோன்றின் குறிஞ்சி யாழ்ப்பண்ணும், குரலொலி யடுத்து இளியொலி தோன்றின் மருத யாழ்ப்பணணும், இளியொலி யடுத்துத் துத்தவொலி தோன்றின் நெய்தல் யாழ்ப்பண்ணு முண்டாம். குரல் நரம்பும் துத்த நரம்பும் இளி நரம்பும் தனித்தனி நான்கு மாத்திரையும், கைக்கிளை நரம்பும் விளரி நரம்பும் தனித்தனி மூன்று மாத்திரையும், உழை நரம்பும் தாரநரம்பும் தனித்தனி யிரண்டு மாத்திரையு மொலிக்கும்.

மேற்குறித்த பாலையாழ்ப்பண் முதலிய நான்கனுள்ளே ஏழு பாலை யிசைகள் தோன்றும். அவை படுமலைப் பாலை, செம்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்பனவாம். அவற்றுள், படுமலைப் பாலையாவது, துத்தங் குரலா (முதன்மை யொலியா)ப் பொருந்தி வருவதாம்; அதாவது, குரல் நரம்பின் மாத்திரை நான்கிற் பகுதியாகிய விரண்டினை யெடுத்து விளரி நரம்பிற்

கொன்றும் கைக்கிளை நரம்பிற் கொன்றுமாகச் சேர்த்தும், இளி நரம்பின் மாத்திரை நான்கிற் பாதியாகிய விரண்டினை யெடுத்துத் தார நரம்பிற் கொன்றும் உழை நரம்பிற் கொன்று மாகச் சேர்த்தும், துத்த நரம்பின் ஒலியை முதன்மையாக்குவ தாம். முதன்மையாவது வேற்றொலி விரவாதும் தன்னொலி குறையாதும் வருதலாம். செம்பாலை குரல் நரம் பொழிந்த மற் றைய நரம்புகள் முன்கண்ட வண்ணம் வேற்றொலி விரவியும் தம்மொலி குறைந்தும் குரல் நரம்பொலி முதன்மைகொண்டு வருவதாம். செவ்வழிப்பாலை கைக்கிளை நரம்புமட்டும் முதன்மை யொலி பெற்று வழங்குவதாம். அரும்பாலை உழை நரம்புமட் டும் முதன்மை யொலி கொண்டு ஊர்வதாம். கோடிப்பாலை இளி நரம்புமட்டும் முதன்மை யொலி கொண்டியல்வதாம். விளரி நரம்புமட்டும் முதன்மை யொலிகொண்டு விளங்குவது விளரிப்பாலையாம். தார நரம்புமட்டும் முதன்மை யொலி கொண்டு வருவது மேற்செம்பாலையாம். இவையே வட்டப் பாலைப் பண்ணை யாழின்கண் பாடும்பொழுது மனக்கொள வேண்டியனவாகும்.

மாதரி, இக்குரவைக் கூத்தினுள் அப்பண்ணைப் பாட வேண்டி முற்குறித்தாங்கு வட்டப்பாலை மண்டலம் வகுத்து, எழு கன்னியரையும் நரம்புகளாக நிறுத்தி யவர்கட்கு மாயவன் முதலிய பெயர்களிட்டவுடனே, குரல் நரம்பு (மாயவன்) மந் தமா (பகுதி மாத்திரையா)க வொலிக்க, அதனை யடுத்து இளி நரம்பு (வெள்ளையன்) சமனு (முதன்மை யொலியா)க வொலிக்க, அதனை யடுத்துத் துத்த நரம்பு (பிஞ்ஞை வலி) (வேற்றொலி விரவிய) சுரமாக வொலிக்க, அதனையடுத்து விளரிநரம்பு (இரே வதி) வலிமையில்லாத மந்த (வேற்றொலி விரவலும் தன்னொலி சிறிது குறைதலுமான) சுரமாக வொலிக்கும்படி முல்லைத் தீம் பாணி பாடப்பட்டது. இதன்கண், குரல் நரம்பினை யடுத்து இளி நரம் பொலித்தலின் மருத யாழ்ப்பண்ணும், இளி நரம் பினை யடுத்துத் துத்த நரம் பொலித்தலின் நெய்தல் யாழ்ப் பண்ணும், துத்த நரம்பினை யடுத்து விளரி நரம்பொலித்தலின் முல்லை யாழ்ப்பண்ணும் வந்தன. வட்டப்பாலையில், இறுதி

யிற் கூறிய முல்லை யாழ்ப்பண் வரக்கூடாவேனும், இக்குரவை யாய்ச்சியர் பாடுங்குரவை யாதலாலும் பாடும்பாட்டு முல்லைத் திம்பாணியாகலாலும் பாலை யாழ்ப்பண்ணினையும் குறிஞ்சி யாழ்ப்பண்ணினையும் விலக்கி முல்லை யாழ்ப்பண்ணினைக் கொண் டனர். இங்கு, இளி நரம்பு வேற்றொலி விரவாதும் தன்னொலி குறையாதும் வர, மற்றைய நரம்புகள் வேற்றொலி விரவியும் தம்மொலி குறைந்தும் வருவதால் இளி குரலாய (முதன்மை யொலி கொண்ட) கோடிப்பாலை யிசையாம்.

(தொடரும்)

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[திரு. M. V. நெல்லையப்பபிள்ளை அவர்கள் B. A.]

அறவன் (௧௪)

கடவுளைக் குறிக்கப் பண்டைத் தமிழர் வழங்கி வந்த சொற்களில் அறவன் என்ற சொல்லும் ஒன்று. அறவன் என்ற சொல் அறம் என்னும் பகுதியும் அன் என்னும் உயர் திணை ஆண்பாற் படர்க்கை விகுதியும் சேர்ந்து ஆகிய சொல். இது "மவ்வீ றொற்றொழிந் துயிர் றொப்பவும்" என்ற நன்னூற் சூத்திர விதிப்படி அறம் என்ற சொல்லின் ஈற்றிலுள்ள மகர ஒற்றுக் கெட்டு அற என நிற்க அதனுடன் அன் சேருங்கால் வகர உடம்படுமெய் தோன்றப் பெற்று அறவன் என்றாயது. அறவன் என்ற சொல்லினால் பண்டைத் தமிழ் மக்கள் கொண்ட கருத்துக்களைப்பற்றி இக்கட்டுரையில் கருதுவாம்.

2. அறம் என்ற சொல்லுக்கு அடிச்சொல் (root) அறு என்பது. அறு + அம் அறம் என்றாகியது; வரை யறுக்கப்பட் டது என்பது அதன் பொருள். செயற்பாலதோறும் அறனே என்று திருவள்ளுவ நாயனார் கூறிய வண்ணம் எச்செயல் செயற்பாலது என்று கடவுளால் அல்லது கடவுளினது அருள் விளங்கப்பெற்ற பெரியோர்களால் வரை யறுக்கப்பட்டுள்ளதோ

அச்செயல் அறம் ஆகும். உள்ளம், நா, உடல்களால் (மனம் வாக்குக் காயங்களால்) உயிருக்கு உறுதி பயக்கும்படிச் செய்யப் படும் செயலெல்லாம் அவ்வாறு வரை யறுக்கப்பட்ட அறமா கும். உயிர்க்கு உறுதி பயவாத செயலெல்லாம் செயற்பால தன்றென மறுக்கப்பட்ட மறம் ஆகும். இற்றை ஞான்றும் மேற்கு நாட்டுப் பலவகைத் தத்துவ நூலார்கள் (Intuitiona-lists, Experientialists, Evolutionists, Utilitarians,) நன்மையாவது யாது (what is goodness) என்பதை வரை யறுத்துக் கட்டுரைக்க வழி அறியாமல் ஒருவர்க்கொருவர் பிணங்கி மறுத்துக்கொண்டிருக்க, பண்டைத் தமிழ் மக்கள், ஒருவரும் மருதவண்ணம் "இகல் மனம் வாக்குக் காயத்தி தமுயிர்க்குறுதி செய்தல்" என்று அறம் (இதம்) என்பதனைக் கட்டுரை செய்தது அவர்கள் நுண்ணறிவைப் புலப்படுத்து கின்றது. அவர்கள் அறம் பொருள் இன்பம், வீடு என்ற நாற் பொருள்களும் மாந்தர்களால் உலக வாழ்வில் அடையப் பெறும் உறுதிப் பொருள்கள் என்றும் அவற்றுள் அறம் ஒன்றே இடையில் இம்மை மறுமை இன்பங்களையும் முடிவில் வீட்டின்பத்தையும் அடையச் செய்யும் முதன்மைப்பொருள் என்றும் அறிந்திருந்தார்கள் என்பது திருக்குறள் முதலிய பண் டைத் தமிழ் நூல்களால் நன்கு விளங்கும். இந்த நாற்பொருள் களையும் வடமொழியாளர்கள் தருமார்த்த காம மோக்ஷம் என் பர். இடைக்காலத்தில் இம்மை மறுமை யின்பங்களை உயிர் களுக்கு அடைவிக்கும் அறமானது உள்ளம், நா, உடல்களால் பயன் குறித்துச் செய்யப்படும் செயல்கள் என்றும் முடிவில் வீட்டின்பத்தை அடையச் செய்யும் அறமானது உள்ளம், நா, உடல்களாற் பயன் குறியாது தன்முனைப்பின்றி இறைபணி யாகச் செய்யப்படும் செயல் என்றும் பண்டைத் தமிழ் மக்கள் அறிந்திருந்தார்கள். வாழ்க்கையினது குறிக்கோள் இன்னது என அறியாது உடல் வாழ்க்கையே (Material life) பொருள் என மதிமயங்கி ஒழுகும் மேனாட்டு மாந்தர்களுக்கு அவர்கள் தங்கள் பொது வாழ்க்கையையும் (Public life) தனி வாழ்க்கை யையும் (individual life) சீர்செய்து செம்மைப் படுத்துதற்கு

அறமுதலிய நான்கு உறுதிப் பொருள்களேயும் உணர்த்தும் திருக்குறள் நூல் வழிகாட்டியாயுள்ளது என்பது தெற்றென (எவருக்கும்) புலனுகும். அறமானது பயன் குறியாது தன் முனைப்பின்றிச் செய்யப்படுங்கால் கடவுளினது செயலே அவ னேடொன்றுபட்டு நின்று செய்யப்படுவதாகின்றது. அத் தகைய அறம் உள்ளத் தூய்மையையும் (சித்த சுத்தியையும்) அத்தூய உள்ளத்தில் ஒளியாய் விளங்கும் மெய்யுணர்வையும் பயக்கின்றது. ஆதலின் அறம் என்ற சொல் மெய்யுணர்வு (மெய்ஞ்ஞானம் அல்லது திருவடி ஞானம்) என்னும் பொருளே யும் குறிக்கின்றது.

"நூலடைந்த கொள்கையாலே நன்னடி கூடுதற்கு
மாலடைந்த நாவலர் கேட்க நல்கிய நல்லறத்தை."

என்று திருஞானசம்பந்த அடிகள் அருளிய திருச்சேய்ஞ் ஞூர்த் தேவாரப் பாட்டில் நல்லறம் என்பது மெய்யுணர்வை (திருவடிஞானம்) உணர்த்துதல் காண்க.

3. மேலே கூறப்பட்ட அழியும் தன்மைத்தவாகிய இம்மை மறுமை யின்பங்களேயும் அழியாத நிலே பெற்றுள்ள தாகிய விட்டின்பத்தையும் அறம் வாயிலாக உயிர்கள் அடை யச் செய்கின்றவன் கடவுள் என்று பண்டைத் தமிழ் மக்கள் அறிந்திருந்தார்க ளாதலின் அவனே அவர்கள் அறவன் என்று கூறினர்கள்.

"இன்பதனை யெய்து வார்க்கியு மவர்க்குருவம்
இன்பகன மாதவனு லில்"

என்று திருவருட் பயனில் கூறி யிருத்தல் காண்க. திருவள் ளுவ நாயனுர் கடவுளே அறக்கடல் அல்லது அறச் சக்கரம் என்று பொருள் படுகின்ற 'அறஆழி' என்று கூறினர். சிவ பிரானுடைய ஊர்தியாகிய பெற்றமானது (இடபமானது) அற வடிவமாகும். அவனுடைய கொடியானது பெற்றக் கொடி (இட பக் கொடி)யாகும். மன்னன் ஒருவன் தனது அரசின் கீழ் வாழும் குடிகளே மறங்கடிந்து அறம் வழாமல் ஒழுகி வாழும் படி செய்து இன்பம் அடைவிக்கும் தன்னுடைய ஆட்சி வெற் றியைக் குறிக்கக் கொடி நாட்டுதல்போல, சிவபிரானுடைய

பெற்றக் கொடியானது அவன் படைத்தல் முதலிய ஐந்தொழில் களையுஞ் செய்து உயிர்களைக் கட்டுக் காலமாகிய உலக நெறியில் இம்மை மறுமை இன்பங்களையும் கட்டு விடுதிக் காலமாகிய வீட்டு நெறியில் வீட்டின்பத்தையும் அறம்வாயிலாக அடையச் செய்து ஆண்டருளுகின்றான் என்ற உண்மையைக் குறிக்கின் றது. அறவன் அருள் வடிவமாகிய உமையம்மையாரும் எண் ணான் கறங்களையும் வளர்த்து உயிர்கட்கு இன்பந் தழைக்கச் செய்தலின் 'அறம் வளர்த்தாள்' என்று அழைக்கப்படுதலுங் காண்க.

4. இங்ஙனம் கூறியவாற்றால் இக்காலத்து நியாயவாதிகள் (Rationlists) போன்ற கொள்கையாளர்கள் கடவுளுண்மை யையும் இலக்கணத்தையும் கூறும் சமயம்சாராமல் நல்லொழுக் கம் உலகில் நிலைபெறும் (There can be good Character among human beings independent of religion) என்று கூறுதல் போலப் பண்டைத் தமிழ் மக்கள் கூறவில்லை. கடவு ளைப்பற்றி யன்றி நல்லொழுக்கம் நிலைபேறு அடையாது என் னும் உண்மையையும் அறத்தின் வழியாயல்லது கடவுளைச் சார முடியாது என்னும் உண்மையையும் அவர்கள் ஐயம் திரி பற நன்கு அறிந்திருந்தார்கள். திருமூலர் திருமந்திரத்தில் "அற மறியாரண்ணல் பாதமறியுந் திறமறியார்" என அறம் இன்னது என்று அறிந்து ஒழுகுகிறவர்கள்தாம் இறைவன் அடியை அடைந்து இன்பம் பெறுவார்கள் என்று கூறுகின்றார். திரு நாவுக்கரசு அடிகள் "அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச் செற்றக் குரோதம் நீக்கியுன் திறத்தனா யொழிந்தேன்" என்று திருவாரூர்ப் பதிகத்தில் கூறியருளியதும் அக்கருத்தையே சைவ நெறியிற் கூறப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் என் னும் நான்கு சமய வாழ்க்கை (practical course of religious life) நடைமுறை நிலைகளில் யோகத்துக்குக் கூறப்பட்ட எட்டு உறுப்புகளில் (அங்கங்களில்) அறத்தின் (good character) பாற் பட்ட இயம நியமங்கள்முதல் இரண்டு உறுப்புகளாக அடிப்படையில் வைக்கப்பட்டிருத்தலும் இக்கருத்தை நன்கு விளக்கும்.

5. இனி அறவன் என்ற சொல்லானது அறத்தைச் சொல்கிறவன் என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது. சிவபிரான் சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கும் கல்லால் நீழலின் கண்ணே அமர்ந்து அற முதலிய நான்கு உறுதிப்பொருள்களையும் சொன்னார் என்ற கருத்தில் கடவுளைப் பண்டைத் தமிழர்கள் அறவன் என்று கூறினார்கள் என்று கொள்ளுதலும் பொருந்தும்.

6. தேவாரங்கள் முதலிய தமிழ் மறைகள் கடவுளை அறவன் எனச் சில இடங்களிற் கூறுகின்றன. அவைகளிற் சில அடியிலே குறிக்கப்பட்டுள்ளன.

1. "அறவனூர் தொழுதுய்யலாம் மையல் கொண்டஞ்ச னெஞ்சே"

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாரூர்த் தேவாரம் ௫-வது பாட்டு.

2. "அறவனெம்பிரா னன்பிலாலந்துறை"

திருநாவுக்கரசு சுவாமிகள் திரு அன்பிலாலந்துறைக் குறுந்தொகை எ-வது பாட்டு.

3. "அறங்காட்டி யந்தணர்க் கன்றால நீழலற
மருளிச்செய்த அரனூர்"

திருநாவுக்கரசு சுவாமிகள் கோயிற்புக்க திருத்தாண்டகம் ௩ வது பாட்டு.

4. "அறவனாரவ தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே"

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூப்பதுமில்லை பதிகம் ௬ வது பாட்டு.

5. "அறவா வங்கணனே யடியேனையு மஞ்சலென்றருளே"

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கற்குடிப்பதிகம் உ-வதுபாட்டு.

7. அறம் என்ற சொல்லினது கருத்துக்குத் தொடர்புபட்டுள்ள 'நெறி', 'குறி' என்ற சொற்களும் தேவார திருவாசகங்களில் பல இடங்களில் கடவுளைக் குறிக்க வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படுதல் கடவுள் மக்களது உலக வாழ்க்கைக்குக் குறி (aim) யாயும் அக்குறிக்கு நெறி (path) யாயும் இருக்கின்றான் என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றது.

திருவள்ளுவர்

[திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள், பீ. ஏ.]

திருவள்ளுவர் தமிழர். இவர் தமிழில் இயற்றிய நூல் திருக்குறள். இத்திருக்குறளைப்பற்றி ஆங்கிலங் கற்ற தமிழர் ஒருவர் பின் வருமாறு கூறுவர்:—

"தமிழ் எனும் மாது உச்சியிற் றரிக்கும் சூடாமணி யெனச் சொல்லக் கூடியதும், தமிழின் பெருமையை எங்கும் பரவச் செய்ததும், சாதிபேதம் மதபேத மின்றி யாரும் எக்காலத்துங் கைக்கொள்ளக் கூடியதும், தமிழர்க்குப் பெருஞ் செல்வ மாயதும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளே. இந்நூல் இலத்தீன் பாஷையில் ஒருவராலும், பிராஞ்சில் ஒருவராலும், ஜர்மேனிய பாஷையில் ஒருவராலும், ஆங்கிலேய பாஷையில் மூவராலும் மொழி பெயர்க்கப்பட்டுளதாயின், இதன் பெருமையை யானோ எடுத்துரைக்க வல்லேன்! தமிழ் வேதம் என்னும் பெயரும் இதற்குத் தகுந்ததே. இவ்வித நூல் வேறொரு பாஷையிலு மில்லையாயின், இதனால் தமிழுடையும் பெருமை இவ்வளவிற் றென எடுத்துரைக்கற் பாற்றோ! இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையுமே 1330 குறளாற் கூறுவது, வீட்டைப் பற்றி ஏன் கூறவில்லையோ தெரிதலரிது. வள்ளுவர் நான்கையும் பற்றி எழுதியிருப்பார், வீட்டுப் பாகம் இறந்து போயிருக்க வேண்டும் என்பர் சிலர். அறம், பொருள் இன்பம் மூன்றையும் பாடி, வீட்டைப்பற்றிப் பாடுமுன் வள்ளுவர் இறந்திருப்பார் என்பர் சிலர். அனுபவத்தைக் கொண்டு, அறம், பொருள் இன்பம் என்னும் மூன்றையும் பற்றி உறுதியாய்ச் சொல்லியவர், வீட்டைப் பற்றி உறுதியாய்ச் சொல்ல முடியாமையின் எழுதாது விட்டனர் என்பர் சிலர். இந்நூல் சகல சாதிகளிடத்திலும், சகல மதத்தரிடத்திலும் பரம்ப வேண்டும் என்னும் விருப்புடையோராய், சகலர்க்கும் பொதுவான அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும்

சொல்லி, வீடு சகலர்க்கும் பொதுவாகாமையின் கூறுது விட்டனர் என்பர் ஒரு சாரார். அஃதெவ்வாறாயினு மாகுக. அஃது இற்றைக்கு ஆயிர வருடங்கட்கு முன், குறள் போன்ற ஒரு நூல் இயற்றிய தமிழர் மிகவுஞ் சீர்திருந்தி யிருந்தனர் என்பதற்கு ஆன்ற அத்தாட்சியாகும். ஆயின் இவ் வள்ளுவர் எங்கிருந்தனரோ? எம்மதத்தரோ? எக்காலத்திருந்தனரோ? இவை யாருமறியா மறைபொருளா யிருக்கின்றன. மயிலாப்பூரில் இருந்தனர் என்றும், நெய்தற் றொழில் செய்தன ரென்றும் பெரும்பான்மையும் சொல்வர். சைவர்கள் இவரைச் சைவரென்பர். வைணவர் வைணவரென்பர். போப் (Dr. Pope) துரை கிறிஸ்தவரென்பர் போலும். சமணர் இவரைச் சமணரென்றே கூறுவர்."

மேலே கூறியபடி, தமிழிலக்கியங்களுள் மிகச் சிறந்தது மாத்திரமன்று மிகப் பழையதும் திருக்குறளே. சங்கச் செய்யுள் என்று சொல்லப்படும் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு (முப்பால் என்னும் குறள் ஒழிய) ஆகிய இவை எல்லாம் குறளுக்குப் பிற்பட்டவையாம். எட்டுத் தொகை முதலியவற்றுட் கோக்கப்பட்டுள்ள பாடல்கள் சில குறளுக்கு முந்தியவையாயிருக்கலாம் ஆனல்; அவை இவை யென்று இப்போது நிச்சயிப்பது கூடாத காரியம். எட்டுத் தொகைகள் யாவும் அல்லது அவற்றுட் பல, தொகுக்கப்பட்டது குறளியற்றி வெகு காலத்துக்குப்பின். திருவள்ளுவரோடு ஒரு காலத்தவராக எண்ணப்படும் சீத்தலைச் சாத்தனர், அவ்வையார், இடைக்காடனர் முதலியோர் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் தொகை நூல்களில் காணப்படுவதால் இது தெளிவாகும். மணிமேகலை பாடினவர் சீத்தலைச்சாத்தனராயின், இந்தத் தொகை நூல்கள் தொகுக்கப்பட்டது மணிமேகலையும் சிலப்பதிகாரமும் தோன்றிய பின்பே யாகும்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்னும் திருக்குறள் சிலப்பதிகாரத்தில் கட்டுரை காதையில்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணமாய்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து"

என்னும் முடிவுரை வெண்பாவினும், மணிமேகலையில் சிறை செய்காதையில்

"தெய்வந்தொழா அள்கொழு நற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை கேளாய்"

என்னும் அடிகளினும் எடுத்தாளப்பட்டிருத்தலால், இவ்விரண்டு காவியங்களும் தோற்றுதற்குப் பல நூருண்டுகளுக்கு முன் குறள் இயற்றப்பட்டதாதல் வேண்டும். குறளின் பெருமையை யாவரு முணர்ந்து, அது பாடிய புலவரைப் "பொய்யில் புலவன்" என்று மேம்படுத்துக் கூறுவதற்கு வெகு காலம் செல்ல வேண்டு மென்பது திண்ணம். இதுகாறும் கூறியவாற்ருல் குறளுக்கு வெகு காலத்துக்குப் பிற்பட்டன சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்பதும், இவ்விரண்டும் இயற்றப்பட்டதன் பின்பே நற்றிணை, குறுந்தொகை முதலிய தொகைநூல்கள் தொகுக்கப்பட்டன வென்பதும் தெளிவாகின்றன.

இப்போதுள்ள தமிழ் இலக்கியங்களுள் திருக்குறள் முற்பட்டதென்பது சாலும்; ஆயினும், அதற்கு முற்பட்ட தமிழ் நூல் வேருென்று மில்லையோ என்னில், கூறுதும். தொல்காப்பிய மென்னுந் தமிழிலுள்ள பேரிலக்கணம் திருக்குறளுக்கு முற்பட்டது. ஆராயுமிடத்துத் தொல்காப்பியர் கூறிய விதியின்படியே திருவள்ளுவர் தமது குறளை இயற்றி உள்ளாரென்பது விளங்கும். அதுவுமன்றித் தொல்காப்பியருடைய சொற்களையும் பொருளையும் திருவள்ளுவர் தமது குறளில் எடுத்தாண்டிருப்பதும் புலப்படும்.

பிற்கூறிய விஷயம் யாவருக்கும் எளிதில் விளங்குமாதலால் அதனை முதலிற் கூறுதும். தொல்காப்பியர் செய்யுளியலில் மந்திரச் செய்யுள் இத்தன்மைத்தென உணர்த்துவார்,

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப":

என்ருர். இதனையே சிறிது மாற்றித் திருவள்ளுவர் நீத்தார் பெருமை கூறுமிடத்து

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்"

என்ருர். இதற்கு உரை எழுதிய பரிமேலழகரும், "நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின் கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும்" என்று கூறி மந்திர மென்பது தொல்காப்பியர் சொன்னபடி நிறைமொழி மாந்தராணை என்பதனை விளக்கினர். தொல்காப்பியரது சொற்களைத் தமது உரைநடையி லமைத்துக் கூறினமையால் பரிமேலழகருக்கும் கருத்துத் திருவள்ளுவரிதனைத் தொல்காப்பியத்திலிருந் தெடுத்தாரென்பதே யாகும்.

இனி, தொல்காப்பியர் மேற்கூறிய செய்யுளியலில் தமிழ்ப்பா ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலியென நான்காகு மென்று கூறி, பின்னர் அவற்ருல் இன்னபொருள் உணர்த்தப் படுமென்பார்

"அந்நிலை மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப"

என்று அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருளுமே உணர்த்தப்படு மென்ருர். இதனல், தொல்காப்பியத்தின்படி, நூல்களால் உணர்த்தப்படுவன அறமும் பொருளும் இன்பமு மென்ருயிற்று. இதற்கிணங்கவே திருவள்ளுவரும் தமது குறளால் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருளையுமே கூறினர். இதனை நச்சினர்க்கினியர் தமது எழுத்ததிகாரத்துச் சிறப்புப் பாயிர வுரையில் எடுத்து விளக்கியுளர். அது வருமாறு:—

"வீடு கூருரோவெனின், அகத்தியனரும் தொல்காப்பியனரும் வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூரு ரென்றுணர்க. அஃது 'அந்நிலை மருங்கின றமுதலாகிய மும்முதற் பொருட்கு முரிய வென்ப' என்பதனன் உணர்க. இக்கருத்தானே வள்ளுவரும் முப்பாலாகக்

கூறி மெய்யுணர்தலான் வீடு பேற்றிற்கு நிமித்தம் கூறினர்'' இதனால் வள்ளுவர் தமது திருக்குறளில் வீடு கூறாததற்குக் காரணம் இது வென்பது தெள்ளிதிற் பெறப்படுதல் காண்க.

இனித் திருவள்ளுவர் என்னும் பெயரைப் பற்றிச் சிறிதாராய்வாம். இது திருவும் வள்ளுவருமாகிய இரண்டு மொழியாலாயது; அடையடுத்த பெயரெனப்படும். திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்க மென்பர் பேராசிரியர். அஃது இங்குப் பொருந்தாது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்பவற்றில் போலத் திரு வென்பது இங்கே பெருமை, பெருமிதம், மகிமை என்பவற்றைக் குறிக்கும். ஆகவே திருவள்ளுவர் என்பது பெருமையுடைய வள்ளுவர் என்று பொருள்படும். வள்ளுவர் என்பதை இயற் பெயராகக் கொள்ளாது இக்காலத்துப் பெரும்பாலார் காரணப் பெயராகக் கொள்வர். அவருள் ஒரு சாரார் வள்ளுவரென்பது வண்மையுடையவர் என்னும் பொருளது என்றும் மற்றொரு சாரார் சாதிப் பெயரென்றும் கூறுவர். இவ்விரு கூற்றுள் ஒன்றுவது பொருந்துவதாகக் காணவில்லை. வள்ளுவன் என்பது வண்மையுடையவன் என்னும் பொருளில் எங்கும் வந்திலது; சாதிப் பெயராகவும் வரவில்லை. வள்ளுவன் என்பது பிங்கலத்திலும் திவாகரத்திலும்,

> வள்ளுவன் சாக்கை யெனும் பெயர் மன்னர்க்
> குள்படு கருமத்தலைவற் கொன்றும்''

என அரசனுக்குட்பட்ட கருமத்தலைவன் பெயராய் வந்துளது. சூடாமணி நிகண்டில்

> ''வருநிமித்திகன் பேர் சாக்கை வள்ளுவ
> னென்று மாகும்''

என நிமித்திகன் பெயராய் வந்துளது. நிமித்திகன் என்னும் பதத்திற்கு ''வருங் காரியம் சொல்வோன்'' என்று பொருள் கூறுவர். அது தமிழ் வழக்குப் போலும். நிமித்திகன் என்னும் பதம் நிமித்தம் என்னுமடியாற் பிறந்ததாயினும் வடமொழியன்று. அஃதாவது நிமித்திகன் என்னும் பதம் வடமொழியிலில்லை. நிமித்தக்ஞன், என்பது வடமொழியில் வருங் காரியஞ்

சொல்வோன் என்று பொருள்படும். காரணவன் என்பது போல நிமித்திகன் என்பதும் தென்மொழியாளரால் புதிதாக அமைத்துக் கொள்ளப்பட்ட பதம். காரணவன் என்பது போலவே இதுவும் கருமத்தலைவன் என்று பொருள்படும். மன்னர்க்குட்பட்ட கருமத் தலைவனுயின், வள்ளுவன் இழி குலத்தவனுயிரான். வள்ளுவரை இழிகுலத்தார் என்போர் அவர் யானைமேல் முரசு கடிப்பிட்டு அரசனாணை சாற்றுவார் என்பர். கம்பராமாயணம் முதலிய நூல்களில் முரசறைவோனை வள்ளுவன் என்று கூறியிருப்பினும், மணிமேகலை முதலிய பழைய காவியங்களில் அவ்வாறு கூறப்படவில்லை. ஆதலால் வள்ளுவனென்பது தொன்று தொட்டு முரசறைவோன் பெயராயிருந்ததென்று கொள்ளற் கிடமில்லை. வள்ளுவரை இழி குலத்தார் என்று சொல்வதற் காதாரமாயுள்ளது திருவள்ளுவ மாலையில் மாமூலனார் பாட்டாகக் காணப்படும்

"அறம்பொரு ளின்பம் வீடென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவனென் பானோர்பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்"

என்னும் செய்யுள். இதனைப் பின்பற்றிச் சிவஞான முனிவரும் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில்,

"மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலம்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்று ரனைத்திலர் பாடு.

எனத் திருவள்ளுவரை இழிகுலத்தாரென்பர். திருவள்ளுவ மாலை இதற்கோராதாரமாகக் கொள்ளக்கூடிய நூலன்றுயின் அதனையே பின்பற்றிய இம்முதுமொழி வெண்பாவின் கூற்றும் கொள்ளக்கூடிய தன்றாகும். திருவள்ளுவ மாலை செய்தது குறள் அரங்கேற்றிய காலத்தென்றுவது, அதில் நாமகள், இறையனார் முதலியவர்கள் பாடியனவாகக் காணப்படும் செய்யுள்கள், மெய்ம்மையாக அவர்களாற் பாடப்பட்டன வென்றுவது கொள்ளற் கிடமின்மையால், மேற்கூறிய மாமூலனார் பாட்

டென்பது வள்ளுவரை இழிகுலத்தானென்பதற்குத் தக்க ஆதாரமாகாது. திருவள்ளுவமாலை செய்தது குறள் அரங்கேற்றிய காலத் தன்றென்பதற்குக் காரணம் என்னை என்பீராயின், அசரீரியும், நாமகள், இறையனர் முதலிய தெய்வங்களும் பாட்டுப் பாடுவது அநுபவ விரோதமும் அசம்பாவிதமுமாதலேயாம். மற்றையோர்களாற் பாடப்பட்டனவாகக் காணப்படும் பாட்டுக்களுள் பெரும்பாலன மெய்யாக அவர்களாற் பாடப்பட்டனவல்ல. எங்ஙனமெனின், ஒரு நூலுக்குப் பாயிரஞ் சொல்லவோ, அன்றி அதனை எடுத்துப் புகழவோ புக்கவர் அந் நூன் முழுவதையும் பற்றிப் பேசுவரேயன்றி அதன் ஒரு பாகத்தை மாத்திரம்பற்றிப் பேசார். திருவள்ளுவமாலையிலோ அறத்துப் பாலைப்பற்றி,

> "பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
> தூய துறவறமொன் றூழாக—ஆய
> அறத்துப்பால் நால்வகையாவாய்ந் துரைத்தார் நூலின்
> திறத்துப்பால் வள்ளுவனர் தேர்ந்து"

என்று எறிச்சலூர் மலாடனரும், பொருட்பாலைப்பற்றி

> "அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
> தருவல் லரணிரண்டொன் றொண்கூழ்—இருவியல்
> திண்படை நட்புப் பதினேழ்குடி பதின்மூன்
> றென்பொரு ளேழா மிவை"

என்று போக்கியாரும், காமத்துப் பாலைப்பற்றி

> "ஆண்பா லேழா றிரண்டு பெண்பா லடுத்தன்பு
> பூண்பா லிருபாலோ ராறாக—மாண்பாய
> காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
> நாமத்தின் வள்ளுவனர் நன்கு"

என்று மோசிகீரனரும் கூறினதாக வருகின்றது. இம்மூன்று பாடலும் குறளிலுள்ள ஒவ்வோரியலின் தொகையையும் அதிகாரத்தின் தொகையையும் கூறுகின்றனவன்றிக் குறளின் சிறப்பை அல்லது அதன் அருமை பெருமைகளை எடுத்துரைக்கவில்லை; அன்றிச் செய்யுளழகு வாய்ந்தன வாயுமில்லை. இவைகளை இயற்றுவதற்கு மூன்று சங்கப்புலவர்கள் வேண்டியதில்லை;

காரிகை கற்றுக் கவிபாடும் ஒருவர் போதும். அங்ஙனமே இவை மூன்றும் குறளின் இயலும் அதிகாரமும் இத்தனை யென்றும் கணக்கிட விரும்பிய ஒருவராலேயே இயற்றப்பட்டனவாதல் வேண்டும்.

திருவள்ளுவமாலை குறள் அரங்கேற்றப்பட்ட காலத்துச் செய்யப்படவில்லை என்பதற்கு மற்றொரு நியாயமும் கூறுதும். அம்மாலையில் உக்கிரப் பெருவழுதியார் பாடினதாக வரும் செய்யுளில் "நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த— நூல்" என்றும், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பெயர் கொண்ட செய்யுளில் "ஐயாறு நூறு மதிகார மூன்றுமா, மெய்யாய வேதப்பொருள் விளங்கப் பொய்யாது, தந்தானுல கிற்குத்தான் வள்ளுவனாகி, அந்தாமரை மேலயன்" என்றும் வள்ளுவனாரைப் பிரமதேவனி னவதாரமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு வள்ளுவரைப் பிரமதேவனி னவதாரமாகக் கூற வந்தது அவர் உயிரோடிருந்தபோதன்று. உயிரோடிருக்கும்போதே ஒருவரைக் கடவுளின் அவதாரமாகக் கொண்டாடுவது எங்குமில்லை. ஒருவர் இறந்தபின் பல வருடங்கள் சென்று காலம் நீடிக்க நீடிக்கத் தான் அவருடைய பெருமை வளர்ச்சியுற்றுத் தெய்வத்தன்மை யடையும். அப்போதுதான் அவர் கடவுளின் அவதாரமாகக் கருதப்படுவார். அங்ஙனமே வள்ளுவரின் அறிவின் பெருமையைக் கண்டு அவரை ஒரு கடவுளின் அவதாரமாகக் கொண்டாட வந்தது அவர் குறளியற்றிப் பல வருடங்கள் சென்ற பின்பேயாம். அப்படிச் சிறிது காலம் சென்று வள்ளுவர் பிரமதேவனுடைய அவதாரமென்ற கொள்கை வேரூன்றியதன் பின்னரே இந்தப் பாட்டுக்கள் பாடப்பட்டிருத்தல் வேண்டும். இங்ஙனம் இப்பாட்டுக்கள் பாடப்பட்டது குறள் இயற்றி வெகு காலத்துக்குப் பின்பானால், அவற்றை யடக்கியுள்ள திருவள்ளுவமாலை குறளரங்கேற்றப்பட்ட காலத்து இயற்றப்பட்டதாகாது.

இனி, இறையனார் களவியலுரையில் கடைச்சங்கப் புலவர்

எண்மர் பெயர் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வெண்மருள் திருவள்ளுவ மாலையில் மூவர் பெயர் மாத்திரம் காணப்படுகின்றன; ஐவர் பெயரில்லை. அன்றியும் சிலப்பதிகாரத்தில் மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயரவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட பழைய அகவலொன்று கடைச் சங்கப் புலவரில் இருபத்தெழுவர் பெயர் கூறுகின்றது. அவற்றில் பதினேழு பெயர் திருவள்ளுவ மாலையிலில்லை. இதனால் திருவள்ளுவ மாலை பாடினவர் கடைச்சங்கப் புலவர்கள் என்று சொல்வதற் கிடமின்றாகின்றது.

மேற் கூறியவற்றால் திருவள்ளுவமாலை கடைச் சங்க காலத்து நூலன்றென்பதும் அதிலுள்ள பாட்டொன்றேனும் அங்கே கூறப்பட்ட புலவராலேயே இயற்றப்பட்ட தென்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை என்பதும் நன்கு போதரும். ஆயின் திருவள்ளுவமாலை எக்காலத்து யாரால் இயற்றப்பட்ட தெனின், காலந்தோறும் திருக்குறளைப்பற்றிப் பல பாட்டுக்கள் பலபுலவராலியற்றப்பட்டனவாக, பிற்காலத்து வந்த புலவரொருவர் அவற்றையெல்லாம், அன்றேல், அவற்றுட் சிறந்தனவற்றை* மாத்திரம், ஒருங்கு சேர்த்து ஒழுங்குபடுத்தி ஒரு நூலாக்கியிருத்தல் வேண்டும். அவர் தாமும் சில பாட்டுக்கள் பாடிச் சேர்த்திருக்கலாம். அல்லது நூன் முற்றையும் ஒரு புலவரேயே செய்து மிருக்கலாம். வள்ளுவ மாலையில் வரும் பாட்டுக்கள் ஏறக்குறைய ஒரே விதமான நேரிசை வெண்பாவாக விருத்தலும், அசரீரி சொன்னதாக வரும் பாட்டு அசரீரியே நேரே சொன்னதாக இல்லாமல்,

“ திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—இருக்க
உருத்திர சன்ம ரெனவுரைத்து வானில்
ஒருக்கவோ வென்றதோர் சொல்.”

என அசரீரி சொன்னதாக மற்றொருவரால் பாடப்பட்டிருத்தலும் இந்தக் கொள்கைக்குத் தகுந்த துணையாகும்.

---

* திருவள்ளுவரைப் புகழ்ந்து பாடிய பாட்டுக்கள் திருவள்ளுவ மாலையில் வாராதன சில செந்தமிழ் முதற்றொகுதியில் வந்துள 54-ம், 294-ம் பக்கம் பார்க்க.

இன்னும் இந்தப் பாட்டு மதுரையில் தெய்வத்தன்மை பொருந்திய சங்கப் பலகை ஒன்றிருந்ததென்பதைக் குறித்தலி னாலும், அந்தப் பலகையில் திருவள்ளுவரோ டொக்க விருத் தற்கு உருத்திரசன்மரே ஏற்றவரென்பதனால், குறளரங்கேற் றிய காலத்தில் சங்கத்துப்புலவர் நாற்பத்தெண்மரும் திருவள் ளுவரோ டொக்க விருக்கத் தகுதியற்றவராய்ப் பொற்றாமரை வாவியுள் வீழ்ந்து முழுகினரென்னுங் கதைக்குத் தோற்று மிடமாயிருத்தலினாலும் இது குறள் தோன்றி வெகு காலத்திற் குப் பின் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது தேற்றம். சங்கப் பலகையிலேற்றிய இந்தக்கதை கட்டுக்கதை. இது போன்றதொரு கதை சடகோபரியற்றிய திருவாய் மொழியைப் பற்றியும் வழங்குகின்றது.

இனி வள்ளுவர் இழி குலத்தினரல்லர் என்பதற்கு மற்று மொரு காரணம் கூறுதும். குறள் படிப்பவர் யாவருக்கும் அதனை இயற்றிய ஆசிரியர் அக்காலத்திருந்த தமிழ் நூல்கள் மாத்திரமன்றிச் சமஸ்கிருத நூலினும் வல்லராதல் நன்கு விளங் கும். குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர் பலரும் இக்கருத் தினராதல் அவ்வுரைகளை வாசிப்பவர் அனைவரும் கண்டு கொள்ளலாம். அவ்வாசிரியர்களுள் பரிமேலழகர் கூறுவன சில வற்றை இங்கு எடுத்துக் காட்டுவாம்.

424-ம் குறளுரையில்

“ இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமையின் இவையே பகையாவன வென்னும் வடநூலார் மதம்பற்றிக் குற்றமே அற்றந்தரூஉம் பகை என்றும் இவற்றதின்மையே குணங்களதுன்மையாகக் கொண்டென்பார் பொருளாக என் றும் கூறினர்” எனவும்,

“அறம் பொருளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந் தேறப்படும்.”

என்னும் 501 ம் குறளுரையில் அறவுபதை முதலிய இன்ன வென்று விளக்கிய பின்

“இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவரோதிய

தறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடந் திரித்துத் தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்" எனவும்,

(இவ்வுபதைகள் சாணக்கிய ரியற்றிய அர்த்த சாஸ்திரத் திற் கூறப்பட்டுள்ளன. புத்தகம், 1. அதிகாரம், 9.)

662-ம் குறளுரையில்

"தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நாலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினர்" எனவும்,

(இங்கே குறித்த நீதி நூல்கள் காமந்தகம் சாணக்கியம் முதலியன).

காமத்துப்பால் முகவுரையில்

"இது (காமவின்பம்) புணர்ச்சி பிரிவென இருவகைப் படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோவெனின், இவர் (திருவள்ளுவர்) பொருட்பாகு பாட்டினை அறம் பொருள் இன்பமென வடநூல் வழக்குப்பற்றி ஒதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின் கண் அடக்கினரென்க" எனவும்

1330-ம் குறளுரையில்

ஈண்டுப் பிரிவினை வடநூன் மதம் பற்றிச் செலவு ஆற்றுமை விதுப்புப்புலவியென நால்வகைத் தாக்கிக் கூறினர்." எனவும் கூறுவர் பரிமேலழகர்.

இவ்வாறு அவர் கூறுவன இன்னும் பலவுள. இவற்றால் திருவள்ளுவர் வடமொழியிலுள்ள ஸ்மிருதிகளும், அர்த்த சாஸ்திரங்களும்; காம சாஸ்திரங்களும் நன்கு கற்றவரென் பது விளங்குகின்றது. திருவள்ளுவர் குலத்தாற் பறையனு யிருந்தால் வடமொழியிலுள்ள ஸ்மிருதிகளும், அர்த்த சாஸ்தி ரங்களும் கற்றல் முடியாது. சாஸ்திரங்களைக் கற்றலென், வடமொழிப் பயிற்சி அடைவதே கூடாதென்னலாம். ஸ்மிருதி களும் அர்த்த சாஸ்திரங்களும் கற்பவர் அரசரும் அரசர்க்கு அமைச்சுத் தொழில் பூணும் பிராமணர் முதலாயினருமே யாதலின், திருவள்ளுவர் நல்ல உயர் குலத்தினராதல் வேண்டும்.

"தேவர் குறளும் திருநான் மறை முடிவும்" என்ற செய்யுளிலும், பிறவிடத்திலும், திருவள்ளுவரைத் தேவர் என்று கூறுவதும், நாயனர் என்று கூறுவதும், அவர் உயர் குலத்தாராதலைக் காட்டும். நேமிநாத விருத்தி திருவள்ளுவரைத் திருவள்ளுவ தேவரென்னும் (நேமி. சொல் 5). தேவர் என்பது பெரும்பான்மையும் அரச குலத்தினரையே குறித்து வருகின்றது. திருத்தக்க தேவர், திரிபுவன தேவர், ராஜ ராஜ தேவர் என்பன காண்க.

இனி வள்ளுவர் என்னும் பெயர் சாதிப்பெயரும் காரணப் பெயருமன்றாயின், வேறு யாது என்றால், அஃது இயற்பெயராதல் வேண்டும். திருவள்ளுவ மாலை முதலிய நூல்களில் வள்ளுவரென்னும் பெயரே பயின்று வருதல், அஃது இயற்பெயராதலைக் குறிக்கும். தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் வரும்

"சிறப்பினாகிய பெயர் நிலைக்கிளவிக்கும்
இயற் பெயர்க்கிளவி முற்படக் கிளவார்"

என்னும் சூத்திரவுரையில், வினைக்கொருங்கியலுங் காலைச் சிறப்புப் பெயருக்குப் பின்பே இயற்பெயர் வருமென்பதற்குதாரணமாகச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "தெய்வப் புலவன் திருவள்ளுவன்" என்பதைக் காட்டியுளர். இதனால் அவர்களிருவரும் திருவள்ளுவனென்பதை இயற் பெயராகக் கொண்டமை தேற்றம்.

வள்ளுவன் என்னும் பெயர் திருக்குறளாசிரியர்க்கன்றி வேறு பிறர்க்கும் இயற் பெயராய் வந்துளதோ வெனின், பலர்க்கு வந்துளது. புறநானூற்றில் நாஞ்சில் வள்ளுவன் என்னும் பெயர் வந்துளது. இங்கு நாஞ்சில் என்பது ஒரு மலையின் பெயர். (இவ்வாறு கூறுவர் புறநானூற்றுரையாசிரியர். நாஞ்சில் என்பது ஒரு நாட்டின் பெயர்போலும். நாஞ்சில் நாடென்றொரு நாடு இப்போதும் மலையாளத்துளது.) வள்ளுவனென்பதும் அம்மலைக்குத் தலைவன் பெயர். இவனை ஒரு சிறைப் பெரியனார், மருதன் இளநாகனார், கருவூர்க் கதப்பிள்ளை முதலி

யோர் பாடியுளர். தாமிர சாசனங்களிலும் வள்ளுவன் என்னும் பெயர் வந்துளது. சிறீவள்ளுவன் கோதை என்னும் சேர ராசனால் வழங்கப்பட்ட வட்டெழுத்துத் தாமிர சாசனங்கள் சிலவுள. (See page 127 of Tamil Studies by Mr. Srinivasa Aiyangar) இப்போதும் மலையாளத்தில் வள்ளுவ நாடொன்றொரு நாடுளது. இது வள்ளுவனுடைய நாடென்று பொருள்படும். இங்கே வள்ளுவனென்பது இயற் பெயரே. இவற்றால் வள்ளுவனென்னும் பெயர் மலையாள தேசத்தில் இயற்பெயராய் வழங்கி வந்தது செவ்வனே நாட்டப்படும். இவை திருவள்ளுவரென்னும் பெயரை இயற்பெயராகக் கொள்வதற்குப் போதிய சான்றாகும்.

மலையாள தேசத்தைப்பற்றிப் பேசவே, திருவள்ளுவர் பிறந்து வளர்ந்த நாடு யாதென்னும் கேள்வி ஞாபகத்துக்கு வருகின்றது. திருவள்ளுவர் பிறந்து வளர்ந்தது மயிலாப்பூரிலென்பர் பலர். அவர் கூற்றுற்குக் கபிலரகவலைத் தவிர வேறு ஆதாரம் உளதாகக் காணவில்லை. கபிலரகவல் ஒரு கட்டு நூல்; பிற்காலத்துச் செய்யப்பட்டது. கடைச் சங்கத்தில் விளங்கிய கபிலர் பிறந்தது வாதவூர்; கபிலரகவலிற் சொல்லுமாறு திருவாரூரன்று. திருவள்ளுவ மாலையில்,

> "உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
> உத்தர மாமதுரைக்கச் சென்ப—இப்பக்கம்
> மாதாநுபங்கி மறுவில் புலச்செந்நாப்
> போதார் புனற்கூடற் கச்சு."

என வரும் பாட்டுத் திருவள்ளுவரை மதுரையைச் சார்ந்தவராகக் கூறும். வள்ளுவர் என்னும் பெயர் வழக்கு இவரைச் சேரநாட்டைச் சேர்ந்தவராகக் காட்டும்போலும். பண்டைக் காலத்தில் தமிழ் மிகுதியும் வளர்ச்சி யடைந்தது சேரநாட்டிலாதலும், இப்போது நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்கள் பல சேரநாட்டைச் சார்ந்தவையாதலும், வள்ளுவரைச் சேரநாட்டாரென்று கொள்ளுவதற்கு ஒருவாறு துணையாகுமன்றே ?

இளஞ்சேய்க் கொல்லி

சிறுமலை நாட்டில் நிகழ்ந்தவை.

[திருக் கபசம் எழுதியது]

சிறுமலை நாட்டிற்கு வேந்தனாகிய வரம்பன் என்பவன் ஒரு நாட் காலையில் வேட்டையாடச் சென்று, விலங்குகளைப் பின் பற்றியோடித்திரிந்து களைத்து, வேட்டையாடத் தன்னுடன் வந்தவர்களோடு காட்டிலுள்ள சிறு வெளி ஒன்றில் இளைப் பாறிக் கொண்டிருக்கும் போது, நீண்ட பிரயாணஞ் செய்து இளைத்துப்போனவனும், அழுக்குப் படிந்த ஆடைகளை அணிந்தவனுமாகிய ஒருவன் குதிரையின் மேலமர்ந்தவனாய் அங் குத் தோன்றினன். அவனது உடை அழுக்குப் படிந்திருந்த தோடு, கிழிந்து கந்தல் கந்தலாய்த் தொங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய இடையில் வாளுறை யொன்று தொங்கிக் கொண் டிருந்தது; அஃது ஒடிந்து போயிருந்தது. அதில் வாளுமில்லை; அவனேறியிருந்த கரிய குதிரை வேர்வை நிறைந்து மார்பில் நுரையுடன் நின்று துடித்தது. இங்ஙனம் வந்தவனுடைய முகத்திற் பெருந்துன்பங் குடிகொண்டிருந்ததாயினும், அவ னுடைய உருவமும் பார்வையும் உயர்குடிப் பிறப்பினனென்று அவனை யறிவித்தன. இவனை உற்று நோக்கிய சிறுமலைநாட்டு வேந்தன், பொறுக்கவொண்ணாத ஒரு வருத்தத்தாற் குதிரைமே லேறிய இம்மகன் தனது நாட்டையும் வீட்டையும் விட்டோடி வந்திருக்க வேண்டுமென்று நினைத்தான். அரசனின் வேட்டை நாய்கள் புதிதாய் வந்தவனைக் கண்டு வெகுண்டெழுந்து பாய, அரசனோடிருந்தவர்கள் நாய்களை யதட்டி அடக்கி, மாவின்மே லிருந்தோனைக் கூவியழைத்து, "இந்தக் காட்டிற்குள் நுழைந்த நீ யார்? எதற்காக நீ இங்கு வந்தாய்?" என்று இத்தகைய பல கேள்விகளைக் கேட்டார்கள். உடனே அவன் குதிரையை விட் டிறங்கி, "என்னுடைய வரலாற்றைச் சொல்லி முடிக்குமளவும் எனதுயிர் நிற்குமோ இல்லையோ? அறியேன். உங்களரசன் முன் என்னைக் கொண்டுபோய் விடுங்கள்" என்று விடையிறுத்-

தான். இவனுடைய பரிதாபமான உள நிலைமையையுங் களைப்பையும் மன்னன் கண்டு, "அன்பனே, நீ உணவருந்தி இளைப்பாறியபின், உன்னுடைய வரலாற்றை எனக்குச் சொல்லலாம். இப்பொழுது நீ அதைச் சொல்லவேண்டியதில்லை. உனது பெரிய வருத்தத்தையுந் திகைப்பையும் பார்த்து என் மனமிரங்குகின்றது" என்று உருக்கத்துடன் கூறி, அவனை உணவருந்த அழைத்தான். வந்தவனும் இதற்குடன்பட்டு உணவருந்துவதை அரசன் கூர்ந்து பார்த்து, "இவனுடைய வரலாறு எத்தன்மையதாயிருக்குமோ? என்று கருதிக் கொண்டிருந்தான். ஒருவாறு தன் பசியைத்தீர்த்துக் கொண்ட பின், புதிதாய் வந்தவன் பின்வருமாறு பேசலானான் :—

"எனதுயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு நான் எனது நாட்டையு நகரையும் விட்டோடி வந்தேன். ஆனால் இப்பொழுதிந்த உயிரை வைத்திருக்க வேண்டுமென்ற விருப்பஞ் சற்று மெனக்கில்லை. இப்பொழுதே எனதுயிரை யானிழந்திட நேரிடுமாயின், அதற்காக ஒரு சிறிதும் நான் வருந்தேன். நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். நேற்றுவரையில் யான் எனது தந்தையின் தலைநகராகிய திருவுறை நகரத்தில் யாதொரு கவலையுமின்றி வாழ்ந்து வந்தேன். இளஞ்சேய் என்ற பெயருடையவனும், என்னிடத்தில் மிக்க நேயமுடையவனுமாகிய தம்பியொருவன் எனக்கிருந்தான். நாங்களிருவருஞ் சிறுபிள்ளைகளாக இருந்தகாலத்தில் ஒன்று கூடி விளையாடியிருந்தோம். பிள்ளைப்பருவ நீங்கி வாலிபப்பிராயம் வந்தபோது இருவரு மொன்றாக வெளிநாடுகளுக்குச் சென்று, அரிய வீரச் செயல்கள் நிகழ்த்திப் புகழ்பெற வேண்டு மென்றொரு முடிவு நாங்கள் செய்து கொண்டோம். ஆனால், இனி என் தம்பியாகிய இளஞ்சேயின் முகத்தை நான் பார்க்கப் போவதில்லை; அவன் பெயர் மறைந்து போகும். எல்லோரும் என்பெயரை நிந்தித்துரைப்பார்கள்; நானொரு பழிகாரனானேன்.

"நடந்ததைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அடுத்தடுத்து மூன்று நாட்களாய் நானொரு கொடிய சொப்பனங் கண்டேன். சொப்பனத்தில், உயர்ந்து வளர்ந்ததும் சாம்பல் நிறமுள்ளது

மான ஒருருவம் தூக்கத்தினின்றும் என்னைத் தட்டி எழுப்பி, எனது தம்பி இளஞ்சேய் கண்வளர்ந்த அறைக்குள்ளே கூட்டிக் கொண்டு போயிற்று. அங்கே இவ்வுருவம் சிறிய ஒரு அம்பை என் கையிற் கொடுத்தது. இவ்வம்பில் வெள்ளிப் பூண்களிருந் தன; அம்பினிற்கு, ஒரு பகுதி சிகப்பும் மற்றொரு பகுதி பச் சையுமாயிருந்தது. இந்த வாளி என் கையில் வந்தவுடன் அதை யார்மீதாயினுஞ் செலுத்தவேண்டுமென்ற ஒருணர்ச்சி எனக்குண்டாயிற்று, நானெவ்வளவு முயன்று பார்த்தும் அவ் வுணர்ச்சியை என்னை விட்டகற்ற முடியவில்லை. இறுதியில் நானொரு உன்மத்தன்போற் கையிலிருந்த அம்பை எனது தம்பி இளஞ்சேயின்மேற் போகவிட்டேன்.

"இச்சொப்பனத்தினால் யான் கலக்கமுற்று நித்திரை செய்கையில், மற்றொரு கனவு கண்டேன். ஒரு மலைச்சாரலில் நான் அலைந்து திரிந்து, கடற்கரை யோரத்திற் கட்டப்பட்ட பெரியதொரு நகரத்தை நானடைந்ததாகக் கனாக் கண்டேன். கடற்கரை மணலில் மக்கள் பெருந் திரளாகக் கூடி இறந்து போன தங்களரசனுக்குச் செய்யவேண்டிய கிரியைகளை நடத்தி னார்கள். இறந்துபோன அரசனது பெயரை அவர்கள் ஒருவருக் கொருவர் சொல்லிக் கொண்டபோது அது யான் கேட்டிராத ஒருபுதிய பெயராய்த் தோன்றிற்று. ஆனால், துஞ்சிய மன்ன னது முகத்தை யான் பார்த்தபோது, அஃது என்னுடைய முகமே என்று கண்டேன்.

"ஒருமுறையன்று, இருமுறையன்று, மும்முறை இக்கன வையே நான் கண்டதால், தாங்கொணாத பெரும் பாரம் என் மனத்தை வந்தழுத்திற்று. என் மனக் கவலையை என் தம்பிக் குக் கூறி ஆறுதல் பெற வழியில்லை. சொப்பனத்தை யவனுக் குக் கூறுவதாற் பயனொன்றுமில்லை. அவனுக்கு விரோதமாக என் மனத்திலுள்ள சூழ்ச்சியைச் சொப்பனமாக நானவனுக் குக் கூற நினைத்தேனென்று, அவனென்மீது ஐயமுறுவா னென்று நானஞ்சினேன். என்மீது அவனுக்கெவ்வகையான சந்தேகமுமுண்டாகக்கூடாதென்று; நான்று உறுதி செய்து கொண்டேன். ஆயினும், நான் கண்ட கனவை யாருக்காயி

னுஞ் சொல்லி, அதனு லென்ன விளையுமென்று ஆராயாமற் சும்மாவிருக்க முடியவில்லை.

"எனக்கும் என் தம்பிக்கும் இளமையிற் கல்வி பயிற்று வித்த பெரியவரொருவர் நகரத்திற்கு வெளியே தனியே ஓரிடத் தில் வசித்து வந்தார். அவரிடம் இக்கனவைக் கூறி, அவர் சொல்வதன்படி நடந்து கொள்ளத் தீர்மானித்தேன். மேலே நவின்ற சொப்பனத்தை மூன்றும் முறை கண்டபின், அதி காலையிலெழுந்து பெரியவரிடம்போகப் புறப்பட்டேன். அரண் மனையின் முற்பகுதியைக் கடந்து நான் வெளியே செல்லுங்கால், அங்கு நின்ற கம்பமொன்றில், சொப்பனத்தில் நான் கண்ட அம்பு வைக்கப்பட்டிருந்ததை நான் பார்த்தேன். இதைக் கண்டு நான் வியப்புற்று நின்றேன். எனது உளத்தை வருத் திய சொப்பனத்தின் உண்மையை உபாத்தியாயருக்கு விளக்கு வதற்கு, இவ்வம்பு துணையாயிருக்குமென்று நினைத்து, அதைக் கையோடு கொண்டு சென்றேன்.

"ஆசிரியரைக் காண வேண்டுமென்று நானெடுத்துக் கொண்ட முயற்சி பயன்படவில்லை. அவரில்லத்திற் சென்று யான் வினவியபோது, அங்குள்ளவர்கள், முன்னுளிரவே யவர் திருவுறை நகரத்திற்குச் சென்றாரென்று அறிவித்தனர்; மற்றும் யாதோ ஒன்று குறித்தவர் பெருங்கவலை யடைந்தனரென்றும், அது யாது பற்றி என்பது தங்களுக்குத் தெரியாதென் றும், வீட்டிலுள்ளவர்களெனக்குத் தெரிவித்தனர். இது கேட்டு நான் மிகவுமஞ்சி நின்றேன். எதைப்பற்றி நானவரைக் கேட்க வந்தேனோ, அதுபற்றியே கவலை யடைந்தவராய், கனவில் நான் கண்ட அபாயத்தை எனக்கு அறிவிக்குமாறு, ஆசிரியர் எங்களரண்மனைக்குச் சென்றிருக்க வேண்டு மென்றெனக்குத் தோன்றிற்று.

"பலவற்றையும் நினைந்து வாடும் மனத்தனாய் யான் வந்த வழியே திரும்பினேன். நான் புறப்பட்டுப் பாதிதூரம் வந்த வுடன் ஓரோசை என் காதிற்பட்டது. நானேறியிருந்த குதி ரையை நிறுத்தி யவ்வோசை கிளம்பிய திசைக்கு நேரே செவி

சாய்த்தேன். சிறிது நேரத்திற்கு முன் தூரத்திற் கேட்ட வவ்வொலி யருகிற்கேட்டது. எனக்கெதிரிலிருந்த புதரில் யாதோ ஒன்று நகர்ந்து பதுங்குவதுபோல் தெரிந்ததால், காட்டிலுள்ள பல விலங்குகளில் யாதாயிருக்கக் கூடுமென்று சிந்திக்கத் தொடங்கினேன். இங்ஙிலையிற் புதருக்குள்ளிருந்து சாம்பல் நிறமுடைய ஒரு பெரிய உருவம் என் முன்னே வந்தது. இஃதொரு பெரிய கோநாயென்றெண்ணி, என் கையிலிருந்த அம்பை யதன்மேற் செலுத்தும் பொருட்டுச சிறிது எழுந்து வெள்ளிப்பூண் கட்டிய அம்பை நேராய் அதன் மார்பிற் பாய்ச்சினேன். அது போய் ஆழமாயிறங்கிற்று. சில விநாடிகளுக்குப் பின் யான் கண்ட காட்சியை ஐயோ! நானென்னவென்று சொல்வேன்! அம்புருவி மாண்ட கோநாய்க்குப் பதிலாய் என் தம்பியாகிய இளஞ்சேய் குத்துண்டு கிடக்கக் கண்டேன். இதனால் யானடைந்த திகிலையுந் திகைப்பையும் எங்ஙனமெடுத்துரைப்பேன்?

"எனது நடுக்கமென்னை விட்டு விலகுமுன் அண்மையில் ஆட்கள் வருஞ் சத்தங் கேட்டது. அதிகாலையில் நான் தேடிச் சென்ற வெனதாசிரியர் படைபேந்திய பலருடன் ஓடி வந்தார். என்னுடன் பிறந்த தம்பி கொலையுண்டு கீழே கிடப்பதைக் கண்டு, நானே யவனை மாய்த்தவனென்று என்னை யவர்கள் பிடிக்க வந்தனர். உருவிய வாட்களுடன் வந்த இம்மனிதர் கைக்கு நான் தப்பியோடினேன். அவர்களால் தாக்குண்டு மாள்வதற்கஞ்சி நான் ஏன் ஓடி வந்தேனென்று எனக்கே தெரியவில்லை. இன்றவர்கள் என்முன் வருவாராயின், அவர்களாற் கொலையுண்பதற்கு எள்ளளவு மஞ்சாது, முழுமனதுடன் அவர்கள் முன் தலை வணங்கி நிற்பேன். நிற்க, என்னைத் துரத்தியவர்களில் ஒருவன் என்னைப் பின் தொடர்ந்து வந்தென்னுடன் சண்டை தொடங்கினான். இச் சண்டையில் நானென் எதிரியைக் குதிரையினின்றும் கீழே வீழ்த்தினேன்; எனது வாளும் பொடிப்பொடியா யுதிர்ந்தது. இதற்குப்பின்னெவரு மென்னைத் தொடரவில்லை. எனது தம்பியாகிய இளஞ்சேய் இறந்தபின் நானுமிறப்பதை யவர்கள் விரும்பாமலென்னை விட்டுவிட்

டனர் போலும். அங்கிருந் தோடிவந்த கோலத்துடன் நானுங்கள் முன் நிற்கிறேன். இதுவே எனது வரலாறு.”

இவை யாவற்றையும் உற்றுக்கேட்ட மன்னனாகிய வரம்பன் மிகுதியும் வருந்தி, திகைத்து நின்ற அரசகுமாரனுக்குத் தன்னுலியன்றவரை யாறுதலுண்டாக்கும் நன்மொழிகள் கூறி, அறியாது அவன் செய்த கொலையினால் வந்த பழியை நீக்குவதற்கேற்ற சடங்குகளைச் செய்ய சமய முதல்வருடன் ஒழுங்கு செய்வதாக மொழிந்தான். மேலுமவன் திருவுறைநகரத்திளங்கோவை நோக்கி, “நீ கண்டகனவி னிருபகுதிகளில் முற்பகுதி மாத்திரம் நிறைவேறிற்றென்று இதுகாறும் நீ கூறியவற்றாற் காணக்கிடக்கின்றது; இதனால், கனவின் பிற்பகுதியும் நிறைவேறுமென்று உனக்குத் தெரியவில்லையா? நல்ல, புதிய, பெரிய செழித்த நாட்டிற்கு நீ வேந்தனாவாய். கழிவிரக்கப்படுவதை விட்டு என்னுடனரண்மனைக்கு வந்து இனிது வாழ்வாயாக” என்று கூறினான். மன்னனுக்கு இவ்வரசிளங்குமரன்மேல் ஒரு பற்றுண்டாயிற்று; ஆதலின் அவனை எங்ஙனமேனுந் தன்னுடனழைத்துப்போக வேண்டுமென்று முயன்றான். வாடிக் கலங்கி நின்ற இளங்குமரன், தன்னைச் சுற்றி நடந்துகொண்டிருந்தவற்றைக் கவலையில்லாதவனாய், தான் செய்ததின்னதென்று அறியாமலே, அரசனுடனும் மற்றவருடனுஞ் சேர்ந்து சிறுமலை நாட்டின் தலைநகருக்குச் சென்றான்.

அன்றிரவு கழிந்து கதிரவனுதயமானபோது, தன்னுடன் வந்த அரசகுமாரனை வேந்தன் தனதரண்மனைக் குருக்களிடம் அழைத்துச்சென்றான். புதிதாய்த் தங்கள் நகரத்திற்கு வந்த கோமகன் இயற்றிய பெரும்பழி யவனைவிட்டு நீங்குமாறு குருக்கள் பல சடங்குகளைத் தொடங்கினார்கள். கோமகனுந் தன் பெருங்குற்றத்தை நினைந்து வருந்தியழுதான். சடங்குகளெல்லாம் நிறைவேறினபின் அரசிளங்குமரனின் கொலைப்பழி அவனை விட்டகன்றதென்று குருக்கள் விளம்பினர். மற்றும், அவர்களவனை நோக்கி, “மன்னன் மகனே, ஈண்டு நாங்களியற்றிய கிரிகைகளால் நீ குற்றம் நீங்கினவனா யிவ்விடத்தை விட்டுப் பெயர்த்து போகின்றாய். ஆயினும் நீ செய்யவேண்டியது மற்றொன்

றுண்டு. எங்கள் முன் நீ வந்து, நீ செய்த கொடிய செயலைக் கூறிக் கழுவாய் வேண்டியதற்கறிகுறியாக, உன் பெயர் மாற்றப்படவேண்டும். உனது தம்பியாகிய இளஞ்சேயைக்கொன்றவனென்று எல்லோராலும் இனி நீ அழைக்கப்படுவாய். இதுமுதல் உன்பெயர் 'இளஞ்சேய்க்கொல்லி, என்றிருப்பதாக", என்றனர். இதனால் ஒருவாறு மனந்தேறி அவ்விளமகன் வேந்தனுடன் அரண்மனைக்குச் சென்றான். என்றாலும் அவன் முகத்திற்குடிகொண்ட சஞ்சலம் அவனைவிட்டு நீங்கவில்லை.

திருவுறை நகரத்துச் செம்மலை வேந்தன் தன்னுடன் கூட்டிக்கொண்டுபோய் விரைந்து பாய்கின்ற தனது பரிகள் கட்டியிருக்குமிடங்களையும், போருக்குரிய ஆயுதங்கள் தொகுத்து வைக்கப்பட்டிருந்த சாலைகளையும், பொன்னுமணியுங் குவித்து வைத்திருந்த பொக்கிஷ சாலைகளையும் இன்னும் பலவற்றையுங் காட்டினன். இவையொன்றின்மேலாயினும் அச்செம்மலின் உளஞ் செல்லவில்லை. இதைக்கண்ட அரசன் சிறிது வருத்தமுற்றான். அரண்மனையிலுள்ள ;வரியவை பலவற்றையெல்லாம் பார்த்து முடிந்தபின், நல்ல வேலைப்பாடு நிறைந்ததாய், வெள்ளித் தகடுகள் வேய்ந்த ஒரு கதவருகே வேந்தன் வந்துநின்று தனதருகில் வாய்திறவாது நின்ற தோன்றலைப் பார்த்து, இளஞ்சேய்க்கொல்லி, உனது மனக்கவலையை மாற்றுவதற்கு என்னாலியன்றதை யெல்லாஞ் செய்து பார்த்தேன். அஃதென்னாலாகாதென்பது இப்பொழுது தெளிவாதலின், என்னைக் காட்டிலும் நட்பமாயுன்னுடைய கவலையை யறிந்து நீக்கத் தகுந்த வேறொருவரிடம் உன்னை நான் கொண்டு போகின்றேன்," என்றனன்.

அரசனிங்ஙனங் கூறிக் கதவைத் திறந்தபொழுது மெல்லிய இளங்குரலுடன் பெண்கள் பேசுஞ் சத்தங் கேட்டது. கதவைத் திறந்து இருவரு முட்சென்று, அரசி யுறைகின்ற அந்தப்புரஞ் சேர்ந்தார்கள். சலவைக்கல் தளத்தையுடைய அவ்விடம் பொங்கி மேலெழுகின்ற நீரூற்றுக்களுடையதாய், மிகக் குளிர்ந்திருந்தது. அங்குள்ள சாளரங்களின் வழியாய்த் தரைமீதில் அலை வீசி விளையாடுங் கடற்கரைக் காட்சி இனிது தோன்றிற்று. அரசிக்குப் பணிவிடைசெய்பவர்கள் பலவித வேலைகளிலீடுபட்டு

அமர்ந்திருந்தனர். வரம்பன் மனைவியோ தனியாக ஓரிருக்கையில் வீற்றிருந்தாள். இளஞ்சேய்க்கொல்லி யவனுடைய அழகை மிகவும் வியந்து நோக்கினன். அந்த வேளையிற் பணிவிடைப் பெண்களிலொருத்தி யாதோ சிறு தவறு செய்தது கண்டு மன்னன் தேவி யவளைக் கடிந்து நோக்கினள். அப்பார்வை மிகக் கொடியதுங் கன்மனத்தைக் காட்டுங் குறியாகவுமிருந்தது. வியக்கத் தகுந்த வெளியழகு வாய்ந்த இவ்வரசியின் மனங் கல்லாயிருத்தல் கூடுமோ? என்று இளஞ்சேய்க்கொல்லி எண்ணியிரங்கினன். (தொடரும்)

சிவஞான போதக் கருத்து

இரண்டாவது சூத்திரம்

மூன்றவது அதிகாரணம்

[திரு. M. V. நெல்லையப்பபிள்ளை அவர்கள் B. A.]

(௪௯ - வது பக்கத் தொடர்ச்சி)

72. சூத்திரத்திலுள்ளபடி "போக்கு வரவு புரிய:" என்பது மூன்றுவது அதிகரணம். போக்கு என்பது இறப்பு; வரவு என்பது பிறப்பு; புரிய என்பது செய்ய. முதலாவது சூத்திரத்தில் ஒடுங்கி மலத்து உளதாம் என்று சொன்னதற்கேற்ப ஆசிரியர் இரண்டாவது சூத்திரத்தில் 'போக்கு வரவு' என்றார். உலகில் வாழும் மக்களுக்குச் சூத்திரம் சொல்லப்படுகின்றது. அவர்களுக்கு முதலில் கண்கூடாக நிகழ்வது இறப்பேயாதலால் இறப்பு முதலாவது கூறப்பட்டது என்று கூறுதலுமாம். சூத்திரத்தில் நான்கு அதிகரணங்களையும் சேர்த்துச் சொல்லுங்கால் 'போக்கு வரவு புரிய' என்ற வினையெச்சத் தொடராக எழுவாயின்றிக் கூறிய ஆசிரியர் மூன்றுவது அதிகரணத்தைத் தனியே கூறுங்கால் எழுவாயை வருவித்தும் வினையெச்சத் தொடரை முற்றுக்கியும் "இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவரும்" என்று மூன்றுவது அதிகரணத்

தின் மேற்கோளாகக் கூறினர். இந்த மேற்கோளில் மாறுதல் என்பது முன்னிருந்த பரு உடலைவிட்டு உயிர் மாறுதல் அதாவது இறத்தல் ஆகும். பிறக்கும் என்பது பிறிதொரு பரு உடலில் மீளப்பிறக்கும். ஆன்மாக்கள் - உயிர்கள்.

73. மேலே இரண்டாவது அதிகரணத்தில் ஆசிரியர் முதல்வன் தனது அருள் வலியால் (சிற்சத்தியால்) உயிருக்கு அது செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப துன்ப இன்பங்களை நுகரும்படி செய்வன் எனக்கூறி இந்த அதிகரணத்தில் அவ்வுயிர் உலகில் வினைப்படியுள்ள வாழ்நாள் எல்லை முடிந்த பொழுது இறந்து நிரய துறக்கங்களில் துன்ப இன்பங்கள் நுகர்ந்து மீளவும் உலகில் வந்து பிறக்கும் என்று கூறுகின்றார். உயிர்கள் இறந்து மீளப்பிறத்தல். மீளவும் எஞ்சிய இருவினைப் பயன்களை நுகர்ந்தும் இருவினைகளைச் செய்தும் பக்குவப்படுதற்பொருட்டாம். இதனல் அதிகரண இயைபு விளங்கும்.

74. இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை எனக் கூறும் கிரீடாப்பிரமவாதிகளை மறுத்தற்பொருட்டு இவ்வதிகரணம் எழுந்தது. கிரீடாப்பிரம வாதம் என்பது ஏகான்ம வாதத்துக்குச் சேர்ந்த 1 "மாயாவாதம், 2 பாற்கரியவாதம், 3 பிரமவாதம், 4 சத்தப்பிரமவாதம் என்னும் நான்குவகை வாதங்களுள் ஒன்று. கிரீடா என்ற வடமொழிச் சொல் விளையாட்டு என்றும், பிரமம் என்பது பிரமப்பொருள் அல்லது கடவுள் என்றும், வாதம் என்பது கூறுதல் அல்லது பேசுதல் என்றும் பொருள்படும். கிரீடாப்பிரமவாதம் என்பது " பிரமப்பொருளே நான், நான் ஒருபடியாக அல்லாமல் பல்வேறு வகைப்பட்ட விகாரப் பொருள்களோடு கூடிப் பலவாற்றல் விளையாடுகிறேன் என அறிதலே வீடு " என்று பேசுதலாகும். கிரீடாப்பிரமவாதிகள் ஆகமங்களிற்கூறிய குடாகாயம் மகாகாய உவமையை உயிர் பரு உடலைவிட்டு நீங்குதற்குக் கூறி மயங்குவர். குடமுடைந்தபொழுது அதனுள்ளிருந்த ஆகாயம் பொது ஆகாயத்தோடு கூடுமாறுபோல உயிர் பரு உடலைவிட்டு நீங்கிய பொழுது பிரமப்பொருளோடு கூடுமேயன்றி மீள உலகில்

வேறொரு பருஉடலிற் பிறப்பதில்லை என அவர் கூறுவர். குடாகாயம், மகாகாய உவமை உயிரானது தனது உலக வாழ்நாள் முடிந்து முடிவில் வீட்டினை அடையுங்கால் அக்காலம் வரை நிலைத்திருக்கிற நுண் உடலைவிட்டுப் பிரிந்து போதலை விளக்க ஆகமங்களிற் கூறப்பட்டது என்றும், ஒவ்வொரு பிறவியிலும் உயிரானது பரு உடலைவிட்டுப் பிரிந்து போதலுக்கு அவ்வுவமை பொருந்தாதென்றும் ஆசிரியர் கூறி கிரீடாப்பிரமவாதியை மறுத்து பரு உடலைவிட்டு இறந்த உயிர் மீள உலகில் வேறொரு பரு உடலிற் பிறக்கும் என்று தமது மேற்கோளை வற்புறுத்தி உரைக்கின்றார்.

75 இனி இவ்வாறன்றி குடாகாய மகாகாய உவமைப் பற்றி மீளப்பிறத்தல் உயிரின்பொருட்டுச் சிவத்துக்கேயாமெனக் கூறும் சிவாத்துவித சைவரையும், மீளப்பிறத்தல் மூலப் பகுதியிற்றோன்றும் புத்தி தத்துவத்துக்கே அன்றி உயிருக்கு இல்லை எனக்கூறும் சாங்கியரையும் மறுத்தற்கு ஆசிரியர் இவ் வதிகரணத்தில் மேற்கோளை உரைக்கினறார் எனக் கூறுதலும் பொருந்தும்.

76. இறப்பு என்பது யாது 2. உயிரானது பருஉடல் (தூலதேகம்) நுண் உடல் (புரியட்ட தேகம் அல்லது சூக்குமதேகம்) குண உடல், கஞ்சுக உடல் காரண உடல் என்னும் அஞ்சு உடல்களையும் உடையது. இந்த உடல்களெல்லாம் பலவகைப்பருமை நுண்மைகளை உடைய பூத அணுக்களாலாகியன. அந்த அணுக்களெல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்து கலந்தேயுள்ளன. உலகில் வாழுங்கால் மாந்தர்கள் இந்த ஐவகை உடல்களுடனிருக்கிறார்கள். பரு உடலானது ஏனைய காரண உடல் கஞ்சுக உடல் குண உடல்களுடன் கூடிய நுண் உடலை விட்டு நீங்குதலே இறப்பு ஆகும். இறப்பு என்ற சொல் முதற் பொருளாக கடத்தல் அல்லது போக்கு என்று பொருள்படும். போக்காவது இந்தப்பரு உலகிற்குரிய பருஉடலை விட்டுப் போதலாகும். அவ்வாறு உயிர் பருஉடலை விட்டு நீங்குதல் பாம்பு ஒன்று தனது மேற் சட்டைபோன்ற தோலைக் கழற்றிப்

பிறிதொரு புதிய தோல் போர்த்தல் போலவும், உயிர் நாடோறும் இரவில் நனவு நிலையினின்று நீங்கிக் கனவு நிலையை அடைதல் போலவும், யோகி ஒருவர் தமது பருஉடலை விட்டுப் பிறிதொரு பருஉடலிற் புகுதல் போலவும் உள்ளது. இவ்வாறு இறப்பு உண்டாகுங்கால் உயிர்பரு உடலை விட்டு நுண் உடலை அடைதலாகிய உடல் வேறுபடுதலும், பருஉலகம் விட்டு நுண் உலகம் சேர்தலாகிய இடம் வேறுபடுதலும் நனவு நிலை நீங்கிக் கனவு நிலையடைதலாகிய அறிவு வேறுபடுதலும் நிகழ்கின்றன. இறப்புக்குப் பின் நிகழும் கனவுலகைப்பற்றி நமக்கு உலகிற் பழக்க நிகழ்ச்சியாயுள்ளது. நாம் துயிலும்பொழுது அடையும் கனவு உலகமாகும். நாம் துயிலும் பொழுது பரு உடலுக்கும் நுண் உடலுக்கும் உள்ள தொடர்பு (link) விட்டுப் போகவில்லை; இறக்கும்பொழுது இத்தொடர்பு விட்டுப் போகின்றது. இதுவே இருவகைக் கனவு நிலைகளுக்குமுள்ள வேறுபாடாகும். இதுபற்றித் திருவள்ளுவர் "உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்றார்.

> "துன்னிய உயிர்கள்தூல உடல்விட்டு வானினூடு
> மன்னிடும் நனவுமாறி கனவினை மருவுமாபோல்"

என்று சிவஞான சித்தியாரிற் கூறியிருத்தலுங் காண்க. ஒருவனுயிரிறக்குங் காலத்தில் அப்பொழுது முடிகிற வாழ்நாளின் வரலாறுகளெல்லாம் அதற்கு முன்னே ஒரு படம் போலத் தோன்றி அது அவைகளை நினைத்துக் கொண்டிருக்கின்றது. அப்பொழுது அந்த உயிர் இறக்குமிடத்தில் அமைதியைக் கெடுக்கக்கூடிய அழுகை இரைச்சல் முதலியவைகளை எவரும் செய்யாதிருத்தலே அதற்கு நலமாயிருக்கும். அந்நேரத்தில் அவ்வுயிருக்குக் கடவுளைப்பற்றி நினைப்பூட்டத் தகுந்த மறைமொழித் துதிப்பாக்கள் ஓதப்படல் வேண்டும்.

77. இறப்பைப்பற்றி உலகில் பெரும்பான்மையான மக்களுக்குச் சரியான கருத்துகளில்லை. அவர்கள் உலக வாழ்வின் குறிக்கோளும் பயனும் இன்ன என்று அறியாதிருத்தலால் தங்க

ளுக்கும் பிறர்க்கும் பயன் படும்படியாய் உலகில் வாழவேண்டு மென்று அறியாதிருக்கிறார்கள். வாழ்வைப்பற்றி அவர்கள் அறியாதிருத்தல் போலவே இறப்பைப்பற்றியும் அவர்கள் அறியாதிருக்கிறார்கள். இறப்பானது தங்களுடைய உயிர் வளர்ச்சி (Soul-evolution)க்காக கடவுளது ஆணையால் நிகழ் கிற ஒரு இயற்கை நிகழ்ச்சி என்னும் உண்மையை அறியாமல் அவர்கள் தங்களுக்காவது தங்களைச் சேர்ந்தவர்களுக்காவது இறப்பு வந்தால் மிக்க துயரடைகிறார்கள். அவர்கள் தாங்கள் உயிரோடு உலகில் வாழ்ந்த காலத்தில் கடவுளுக்கும் தங்களைச் சேர்ந்த மக்களுக்கும் பொது மக்களுக்கும் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்து வந்திருந்தார்களானால் இறப்பு வந்த பொழுது அதனுக்கு அஞ்சாமல் மகிழ்வுடன் ஏற்றுக் கொள் வார்கள்.

78. உயிர்களுக்கு இறப்பு வருதற்கு உடலைப்பற்றிய காரணமானது அது பிறந்த பருஉடலில் கண் செவி முதலிய உறுப்புகளெல்லாம் தளர்ந்து வலியிழந்து தொடர்ந்த வாழ்வு வாழ முடியாதிருத்தலும் இளைப்பாறுதலும் ஆகும். மக்கள் பலர் கிழப்பருவம் அடைதற்குமுன் இளமையிலும் ஏனைய இடைக்காலங்களிலும் இறத்தலானது அவர்கள் முன் செய்த தீவினையாலும் அவர்களுக்கும் அவர்களைப் பெற்ற தாய் தந்தை யர்களுக்குமுள்ள தொடர்பு வினையினாலும் (personal karma) உண்டாகின்றது.


79. உயிருக்கு உடலின் தொடர்பால் இளைப்பாறுதல் இன்றி அமையாது வேண்டப்படுவது என்பது நாம் நமது வாழ்க்கையிலுள்ள பழக்கத்தினால் அறியலாம். பொதுவாக, பகல் வேலை செய்யவும் இரவு இளைப்பாறவும் அமைந்த காலங்களாயுள்ளன. பகலிலும் நாம் ஒரு யாமம் அல்லது பத்து நாழிகைக்கு மேலாகத் தொடர்ந்து வேலை செய்தல் முடி யாது. பலவகைத் தொழில் நிலையங்களிலும் கல்லூரிகள் பள் ளிக்கூடங்கள் முதலிய கல்வி கற்பிக்கும் நிலையங்களிலும் ஒவ் வொரு நாளிலும் தொடர்ந்து வேலை செய்யும் நேரம் ஏறக்

குறைய ஒரு யாமம் நேரமாகவும், வாரம் ஒன்றுக்கு ஒருநாள் விடுமுறை நாளாகவும், ஆண்டு ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு திங்கள் விடுமுறைத் திங்களாகவும் அமைக்கப்பட்டிருத்தல் உடலோடு உலகில் வாழ்மக்களுக்கு இளைப்பாறுதல் இன்றி அமையாது வேண்டப்படுவது என்னும் உண்மையை உணர்த்துகின்றது. பல ஆண்டுகள் சேர்ந்த ஒரு பிறப்பு வாழ்நாளில் வேலை செய்துவந்த மக்களுக்கு இளைப்பாறுதல் வேண்டப்படும் என்பது தெளிவு.

80. இறப்புக்கு உயிரைப்பற்றிய காரணம் மக்கள் உயிரினது வினைநலம் பக்குவம் அடைதலாகும். அஃது அடுத்துக் கூறப்படுகிற இறப்புப்பின் வாழ்நிலைக்குப்பின் கூறப்படும்.

81. இறப்புப் பின் வாழ்வுநிலை (Life after death) மக்களது உயிர் இறந்தபின் கனவுலகத்தின் (புவர்லோகத்தின்) ஒரு பிரிவாகிய நிரய உலகத்தை அடைந்து துன்பம் நுகருகின்றது. நிலஉலகமும் (பூலோகமும்) கனவுலகமும் ஒன்று கீழேயுள்ளதென்றும் மற்றொன்று அதற்குமேல் அடுக்காக உள்ளது என்றும் கருதுதல் கூடாது. அவ்வுலகங்கள் மாயா தத்துவங்களின் பருமை நுண்மைகளால் (State of matter) வேறுபாடு உடையனவே அன்றி இடத்தால் வேறுபாடு உடையன அல்ல. மக்களது உயிர் பருஉடலை விட்டுப் பிரிந்து ஏனைய உடல்களோடு சேர்ந்த நுண்ணுடலோடு நிரய உலகத்தில் தங்குகின்றது. இந்த நுண்உடல் உயிர் வீடுபேறு அடையுங் காலம் வரை அல்லது அழிப்புக்காலம் (சங்கார காலம்) வரை கெடாமலிருத்தலினாலே அதனைத் தொடர்பாசப் பற்றிக்கொண்டு நுண்பூத அணுக்களாலாகிய அவ்வுடலிலிருந்து பிறவிதோறும் பழம்பூத அணுக்களாலாகிய வேறு வேறு பரு உடல் உண்டாகின்றது. இறந்த உடனே இந்த நுண் உடலானது உயிர் உலக வாழ்விற் செய்த மறச்செயல்களுக்கு (பாவச் செயல்களுக்கு) ஏற்ற துன்பம் நுகர்தற்குத் தக்கவாறு தனது நுண்பூத அணுக்களது சேர்க்கையில் மாறுதல் அடைகின்றது. இப்படி மாறுதல்

(தொடரும்)



9/4 சோமசுந்தரர் சங்கப்பலகை தந்தது.

ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ	மெய்கண்டான்யாண்டு-எாஅ சித்திரைத் திங்கள் 1931ஞு ஏப்பிரல்மூ—மேமூ	பரல் ச

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

விளக்கின்ற வினையை நோக்கி வெண்மயிர் விரவிமேலும்
முளைக்கின்ற வினையைப்போக முயல்கிலேனியல வெள்ளம்
திளைக்கின்ற முடியினுன்றன் திருவடி பரவமாட்டா
திளைக்கின்றே னிருமியூன்றி யென்செய்வான் தோன்றினேனே.

விளக்கின்ற வினையை நோக்கி=முற்பிறவிகளில் நான் செய்து இப் பிறவியில் பயனாய் வந்து எனக்குத் துன்பத்தை உண்டாக்குகின்ற நுகர் வினையின் (பிராரத்த வினையின்) பயனை உள்ளத்தில் நினைந்து பார்த்து

வெண் மயிர் விரவி=அச்சத்தாலும் கவலையாலும் என் உடலிலுள்ள மயிர் நரைத்து வெண்ணிறமாகிப் பழைய கருமயிருடன் கலந்திருத்தலை உடையவனாகின்றேனே அல்லாமல்

மேலும்=இனிவரும் பிறவிகளில்

முளைக்கின்ற வினையை=இப்பிறவியில் பலனாக உண்டாகி நான் செய்கின்ற வருவினையில் (ஆகாமிய வினையில்) இனிவரும் பிறவியில் துன்பம் நுகர்தற்குக் காரணமாயுள்ள தீவினையை

இயல=இயன்றவாறு

போக முயல்கிலேன்=செய்யாமலிருக்க முயற்சி செய்கின்றேனில்லை

வெள்ளந் திளைக்கின்ற முடியினுன்=கங்கை ஆற்றின் வெள்ளம் தங்கு தலையுடைய சடை முடியை உடைய சிவபெருமானுடைய

திருவடி பரவமாட்டாது=அருளாகிய இரண்டு அடிகளையும் துதியாமல்

ஊன்றி இருமி இளைக்கின்றேன்=(இருமுதலுக்கும் வலியின்றி) ஒன்றனைச் சார்ந்து இருமிக்கொண்டு உடல் மெலிந்து போகின்றேன்

என் செய்வான்=(அப்பேர்ப்பட்ட நிலைமையை உடைய நான்) உலகில் என்ன கருமம் செய்யும் பொருட்டு

தோன்றினேன்=பிறந்துள்ளேன் (நான் எடுத்துள்ள பிறவியினுல் யாதொரு பயனுமில்லை என்றபடி)

தன், ஏ இரண்டும் அசை நிலைகள்.

வினை என்பது இங்கே ஆகுபெயராய் வினையின் பயனைக் குறிக்கின்றது.

விளைக்கின்ற வினை=இப்பிறவியிற் பயனை உண்டாக்குகின்ற நுகர்வினை (பிராரத்தவினை)யின் பயன்

முளைக்கின்ற வினை=இனிப்பயன் தருதற்கு இப்பிறவியில் உண்டாகின்ற வருவினை (ஆகாமிய வினை)

ஒரு மரத்தின் விதையானது பின் மரமாயுண்டாதற்குக் காரணமாயிருத்தல்போல முன் செய்த நுகர்வினையானது (பிராரத்த வினையானது) இப்பிறவியில் நுகரும் துன்பத்துக்குக் காரணமாய் உண்டாகின்றது என்னும் கருத்தை முளைக்கின்ற என்றசொல் உணர்த்துகின்றது.

வெண்மயிர் விரவுதல்=அச்சத்தாலும் கவலையாலும் கருமயிரானது நரைமயிராதலைக் குறிக்கின்றது. விரவுதல் - கலத்தல். மயிர் பல நரைத்துச் சில பழைய கருமயிருடன் கலந்திருத்தல்.

உன்றன் திருவடி பரவமாட்டா திளைக்கின்றேன்=என்பது அருளைச் சார்ந்து தான் தீவினையை விலக்கி நல்வினையைச் செய்யமுடியும் என்பதைக் குறிக்கிறது. அடிகள் "திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்ருரே" என்று கூறியிருத்தல் காண்க.

பொதுவாக உலகிலுள்ள பெரும்பான்மை மக்கள் செயலை நாம் பார்க்குங்கால் அவர்கள் இப்பிறவியில் ஒருபுறம் நுகர்வினையின் (பிராரத்த வினையின்) பயனாகத் துன்பம் நுகர்ந்து கொண்டும் முற்பிறவியின் பயன் இப்பிறவியில் நுகர்தல்போல இப்பிறவியில் செய்யப்படும் வருவினையின் (ஆகாமிய வினையின்) பயன் இனிவரும் பிறவியில் நுகர்தல் வேண்டும் என்னும் உண்மையை அறிந்து உணராது மற்றொரு புறத்தில் தீவினையைச் செய்துகொண்டும் வருகிறார்கள். "இருமலுஞ் சோகையு மீளையும் வெப்பும்—தருமஞ் செய்யாதவர் தம்பாலதாகும்" என்று திருமூலர் கூறியபடி, மக்களிற் சிலர் இருமல் முதலிய நோய்களினாலும் வருந்துகின்றார்கள். இருமல் நோயுள்ள சிலர் இருமுதற்குக்கூட உடல்வலியின்றி இளைத்திருக்கிறார்கள். அவ்வாறு வருந்திக் கொண்டிருக்குங் காலையிலும் அவர்கள் இறைவனது திருவருளை நினைந்து தீவினையை விலக்கி நல்வினையைச் செய்து இவ்வுலக வாழ்வின் பயனை அடைய முயல்கிறார்களில்லை. அப்பேர்ப்பட்ட பிறவி வாழ்க்கையினாற் பயன் ஒன்றும் இல்லாமற் போகிறதே என்று அவர்கள் நிலையை நோக்கி வருந்தியும் இரக்கமுற்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் அதனைத் தமது நிலையாகக் கருதி இத்தேவாரப் பாட்டைப்பாடி அருளினார்கள். இத்தேவாரப்பாவின் கருத்தை அறிந்து சைவமக்களும் பிறமக்களும் திருவருளை நினைந்து உலகில் எவ்வாற்றானுந் துன்பம் தருகின்ற தீவினையை நீக்கி எவ்வாற்றானும் இன்பம் தருகின்ற நல்வினையைச் செய்து உய்வார்களாக.

மா. வே. நெல்லையப்பிள்ளை.

மணிவாசகரும் கண்ணப்பரும்

[திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்]

(சிலம்பு-க, பரல்-௩. ௱௯-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, பெரியோர்கள் இயற்றியருளிய சாத்திரமும் தோத்திரமுமாகிய நூல்களை ஆராய்ந்துபார்க்கின் அவற்றின்கண் பெரும்பாலும் அவர்களின் வாழ்க்கையினது தோல்வி காணப்படுவதன்றி வெற்றி குறித்த செய்தி காணப்படுவது அரிதினும் அரிதாகும். அங்ஙனம் அருகிக் காணப்படுவதும் அவர்களை யறியாது போந்ததோ ருண்மையாகும். தோல்விச் செய்தி

நிறைந்து காணப்படுதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, தம் தோல்வி அணுவாயினும் அதனை மலையினும் மாணப்பெரிதாக மதித்து வருந்தி ஆண்டவன் திருமுன்னர்க் கூறி முறையிடுதல்; மற்றொன்று, ஏனைய மக்களிடத்துக் காணப்படும் தீயசெயல் களைக் கண்டு வருந்தி அவற்றைத் தம்பாலேற்றிக் கூறி முறை யிடுதல். எனவே, எவ்வகையானும் தங்கள் சிறுமையையும் தோல்வியையுமே அவர்கள் கூறுவார்களேயன்றி, பெருமையை யும் வெற்றியையும் கூறார்கள். பின்னுள்ளவை அவர்கட்குத் தெரிவதுமில்லை. ஒரோவழித் தெரியினும் தாங்கள் கோலி வரையறுத்த எல்லைக்கு அவை அணுவினும் அணுவாகத் தோன் றும். தோன்றவே, அவைகளை அவர்கள் பொருளாகக் கொள்வ தில்லை. ஆனால், பிறருக்கு அவை பெரியவற்றினும் பெரியவையே யாகும். ஆதலினாற்றான் அங்ஙனங் கருதிய பிறர், தம்மைப் புகழும்போது "இல்ல புகழ்தலின் வைதலே நன்று" என்னுங் கருத்துடையராய் அப்புகழ்ச்சியை நஞ்சினுங் கொடியதாக அவர் நினைப்பதூஉ மென்க. என்னை? அப்பெருமையும் வெற்றியும் தம்மிடத்து இல்லையென்பது அவர் கருத் தாகலின்.

இனி, அணுவினும் சிறிதாகிய தீமையை மலையினும் பெரி தாகக் கருதலால் பிறர் இகழும் இகழ்ச்சியை அவர் பெரிதும் விரும்புகின்றனர். என்னை? தமக்குச் செருக்கு அரும்பாதிருத் தற்கும் தம் தீமையைப் போக்குதற்கும் அஃது துணையாகும் என்பதூஉம் அவர் கருத்தாகலின் என்க.

"நாணது வொழிந்து நாடவர் பழித்துரை,
பூணதுவாகக் கோணுத லின்றி"

"உத்தமனத் தனுடையா னடியே நினைந்துருகி
மத்தமனத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தனவொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்
தத்தமனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே"

என்னும் அடிகள் திருவாக்கு, அவர் பிறரிகழ்ச்சியை எத்துணை விருப்புடன் வரவேற்று நின்றாரென்பதை நனகு விளக்குதல் காண்க.

இவ்வேண்டுகோள் கைவரப்பெற்ற நமது அடிகள், தம்மை நாட்டிலுள்ள பலரும் "அமைச்சியற் பதவியை யிழந்து ஓர் கோவணாண்டியாகத் திரிகின்றா னிப்பித்தன்" என்று எள்ளி நகையாடுதலையும், அவர்களைத் தாம் "உலக வின்பத்தை நிலை பேறுடையதெனக் கருதிக் களியாட்டயர்கின்ற பித்தர் இவர்" என அங்ஙனம் செய்தலையும், "நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப நாமுமவர்தம்மை யார்ப்ப வார்ப்ப" என்பதனாற் குறிப் பித்தருளினர். பின், அந்நிலை கடந்து மக்கள் பலர், தம்மைப் "பித்தன்" என்று அஞ்சுதலைக்கண்ட நமது அடிகள் உயிர் கள் மாட்டுச் சிறிது அஞ்சுதலையும் செய்யாக் கழிபேரிரக்க முடையவராதலின் இறைவனை நோக்கி,

> "மருளார் மனத்தோ ருன்மத்தன்
> வருமாலென்றிங் கெனைக்கண்டார்
> வெருளா வண்ணம் மெய்யன்பை
> உடையாய் பெறநான் வேண்டுமே"

எனக் குறையிரந்து வேண்டினமையுங் காண்க.

மேற்காட்டியவைகள் இஞ்ஞான்றுள்ள திருவாசகப் பதிப் புக்களில் முறையாகக் காணப்படுதலும் கருதத் தக்கது.

பெரியோரின் இலக்கணங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந் தது, தான் "எவ்வித நலனும் உடையவனல்லன்" என்றும், "எல்லாவுயிரினும் கடைப்பட்டவ" னென்றும் கருதுவதாகும். இக்கருத்து இறப்பு, நிகழ்வு, எதிர் வென்னும் கால மூன்றினும் முறையே இருந்த, இருக்கின்ற, இருக்கும் பெரியாரனைவர்க் கும் ஒத்ததாகும்.

உலகத்தின்கண் பெரும் பகுதியாராற் போற்றப்படுகின்ற நிகழ்காலப் பெரியாராகிய மகாத்மா காந்தி யடிகள் "தாங்கள் மெய்யாகவே மகாத்மாவா? அப்படியானல் மகாத்மா என்ற சொல்லை விளக்குக', எனச் சிலர் கேட்ட வினவுக்கு விடை யாகக் கூறியதாவது:—

"அத்தகைய ஒருவனாயிருக்கச் சிந்திப்பதில்லை; ஆனல் கடவுள் படைப்புக்கு உட்பட்ட உயிர்களுள் மிகத் தாழ்ந்தவன்

யான் என்பது எனக்குத் தெரியும். அச்சேர்க்கை பெருத யான் அச்சொல்லை விளக்கவல்லே னல்லன்" என்பது.

இன்னும் அப்பெரியார் "சத்திய சோதனை"யின் முன்னுரையில் அருளிய பொன்மொழிகளுட் சில:—

"சத்தியப் பயிற்சியில் அருமை, எளிமை என்னும் இரண்டும் உண்டு. அப்பயிற்சி செருக்கில் ஆழ்ந்து கிடக்கும் ஒருவற்கு அரியது. ஒன்று மறியா இளங்குழந்தைக்கு அஃது எளியது. சத்தியநெறியிற் புகுவோன் தூசியினும் தாழ்மை பெறவேண்டும். உலகோர் தூசியைத் தம் அடிக்கீழ் மிதிக்கின்ருர்; சத்தியத்தை நாடுவோன் அத்தூசியால் மிதியுண்ண வேண்டும். அதன் பின்னர்—முன்னரன்று—அவன் உண்மையொளி சிறிது காணக்கூடும்."

"என்னை யானே அளந்து ஆராயும்போது சுருதாஸ் என்னும் அன்பர் பாடியவாறு, 'என்னைப்போன்ற கொடும்பாவி, வெறுக்கத்தக்கவன் யார்? என்னைப் படைத்த ஆண்டவனைக் கைவிட்டு விட்டேன். அவ்வளவு நன்றி கெட்டவனுனேன்,' என்று ஓலமிடவேண்டும்" என்பன.

இன்னும் அவர் "சத்திய சோதனை"யின் முடிவுரையில் "நான் என்னைத் திரணத்தினும் தாழ்மையுள்ளவனுக்கிக் கொள்ளவேண்டும். ஒருவன் தன்னுடைய சொந்த விருப்பத்தினுல் தன்னைத் தன் சகோதர உயிர்ப்பிராணிகளுக்கெல்லாம் கடையானவனுகக் கருதாத வரையில் அவனுக்கு மோக்ஷம் கிடையாது," எனப் புகன்றருளுகின்ருர்.

இவ்வறமொழிகளை நினைவிற் பதித்துக்கொண்டு கீழ் வரூஉம் திருவாசகங்களை அன்பர்கள் கூர்ந்து நோக்குவாராக. அவை,

"யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை."

"ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்தியான் யாவரினுங் கடையனாய
நாயினே னாதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்பனென்பேன்"

"யாரினுங் கடையனாயினேன் போற்றி"
"கடையேனடிமை கண்டாய் போற்றி"
"நான் யாதுமொன்றல்லாப் பொல்லா நாயான, நீசனேன்"
"பாவியேனைப் பணிகொண்டாய்"
"நான் பாவியனானாலுனை நல்கா யெனலாமே"
"நாயிற்கடையாம் நாயேன்"

என்பன.

இன்னும் திருவாசகத்தை வடித்து வடித்துப் பார்ப்பினும் பெரும் பகுதி அடிகள் தமது தாழ்மையைப்பற்றியும் இறைவனது மேன்மையைப்பற்றியும் கூறியனவாகவே காணப்படும். இத்தாழ்வுதான் சைவ சமயத்தின் உயிர் நாடி என்பதை, "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித், தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சாரும், ஊழ் பெறலரிது" என்னும் சித்தியாரால் அறிக. "வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பி"யதை,

"செல்வமென்னு மல்லலிற் பிழைத்தும்
நல்குரவென்னுந் தொல்விடம் பிழைத்தும்"

என்பதனாலும், "தாழ்வு" என்பதற்கு எல்லாவுயிரினும் தன்னை ஓர் கடையவனாகக் கருதல் (முனைப்பின்றியிருத்தல்) என்னும் பொருளை மேற்காட்டிய தொடர்களாலும் அடிகள் விளக்கி யருளினமை காண்க.

அங்ஙனம் அவர் கூறினும் பிறருக்குத் தாம் 'அடிமை' என்பது கருத்தன்று; அஃது தமக்கு முனைப்பு அரும்பாமலிருத்தற்கு மேற்கொண்டொழுகும் நெறிகளில் ஒன்றாகும். தாம் எஞ்ஞான்றும் "தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கர"னுக்கே மீளா அடிமை யென்பதும் பிறருக்கு அடிமையன்று என்பதும் அவர் கருத்தென்க. அக்கருத்தில் உறைத்து நிற்பது பெரியார்கள் இயல்பாதலின் அவர்கள் அவ்வாண்டவ

னுக்கு அஞ்சுவார்களே யன்றிப் பிறருக்கு அஞ்சுமியல்பு எஞ்ஞான்றும் யாண்டுமில்லை; இவ்வுண்மையை,

"யாவர்கோ னென்னையும் வந்தாண்டு கொண்டான்
யாமார்க்குக் குடியல்லோம் யாதுமஞ்சோம்"

என்னும் திருவாசகமும் வலியுறுத்தல் காண்க. இதனோடு,

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்னுந் திருநாவுக்கரசுகளின் செம்மொழியையும், "உலகத்தில் எவர்க்கும் அஞ்சேன்; கடவுள் ஒருவருக்கே அஞ்சுவேன். கடவுளுக்கு அஞ்சி நடப்போமாக; மனிதனுக்கு அஞ்சி நடப்பதை ஒழிப்போமாக; நமது உள்ளத்திற் கடவுளிருப்பதையும், அவர் நாம் நினைத்தல் நிகழ்த்தலைக் கண்டுவருவதையும், அவர் நம்மை நேர்மையான வழியில் நடத்துவதையும் உணர்வோமானால், நாம் கடவுள் ஒருவர்க்கன்றி வேறு எதற்கும் அஞ்சுவதை ஒழிப்போம்" என்னும் மகாத்மாவின் மணிமொழிகளையும் ஒப்பிட்டு நோக்குக.

இன்னும் அப்பெரியாரது, "கடவுள் கணிதத்தில் நமது செயல்கள் குறிக்கப்படுகின்றன" என்னும் உண்மை மொழி,

"தொழுது தூமலர் தூவித் துதித்து நின்(று)
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே"

என்னும் ஆளுடைய அரசினது அருண்மொழியுடனும், "கடவுளிடத்திலும் அவரது வல்லமையிடத்திலும் அவரது அன்பினிடத்திலும் எனக்குள்ள உறுதி அசைக்க முடியாதது" என்னும் வீரமொழி,

"இறக்கினுமின்றே யிறக்குக வென்று மிருக்கினு
மிருக்குக வேந்தன்
ஒறுக்கினு மொறுக்கவு வகையு முடனே யூட்டி
னூட்டுக வானிற்
சிறக்கினுஞ் சிறக்க கொடிய நீரகிற்சேரி
னுஞ் சேருக சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தால் மாற்
றுவார் யாரென மறுத்தார்"

என மணிவாசகனார் கூற்றாக வைத்துப் பரஞ்சோதியார் பகரும் மொழியும்,

"ஆராரெனக் கென்னபோதித்து மென்ன வென்னறி வினைமயக்க வசமோ" என்னும் தாயுமானப் பெருந்தகையாரின் தனிமொழியுமாகிய இவற்றுடனும் ஒத்து நிற்றல் நோக்கி உண்மை காண்க.

மேற்காட்டியவற்றாலும், காட்டப்படாது இவைபோலுள்ள பலவாலும் நாடு, மொழி, சமய முதலியவற்றால் வேறுபடாது பெரியார் பலரின் கருத்து ஒற்றுமைப்பட்டே நிற்குமென்பதை உய்த்துணர்க.

"ஆயின் ஒவ்வொரு பெரியாரினது வரலாறுகளையும் நோக்குங்கால் அவ்வவர் வாழ்க்கை நெறிகள் மாறுபட்டுக் காணப்படுகின்றனவே" எனின், அஃது அவ்வப்போதுள்ள காலம், இடம், நிகழ்ச்சிகளைப் பொறுத்ததொன்றென்க. என்னை? மக்கள் பாவைகள்போல அசைவற்றிருப்பவரல்லர்; ஆகலின் அவர்கள் காலந்தோறும் மாறுபாடுடையராதல் இயல்பு. அதற்கு மேற்காட்டிய காலமுதலியனவே காரணமாகும் என்க. எடுத்துக்காட்டாக, சில நூற்றாண்டுகட்கு முன்னர் நமது நாடு இருந்த நிலையும் இற்றை நாள் அஃது இருக்கின்ற நிலையும் அகக்கண்ணும் புறக்கண்ணும் கொண்டு நோக்குவோமானால் பெரிதும் வேற்றுமை தோன்றும்: முன்னர் ஒரு சிற்றூரிலிருந்து வாழ்க்கை நடத்துவோன் நகரவாழ்க்கையின் நன்மையையோ தீமையையோ அறியான். அஞ்ஞான்று கடல், காடு, மலை முதலியன ஒவ்வொரு நாட்டையும் பிரித்து ஒரு நாட்டார் பிறநாட்டாருடன் பழகாவாறு தடை செய்து நின்றன. இற்றை நாளிலோ நீராவி மரக்கலங்கள், வானவூர்திகள், புகைவண்டிகள் முதலியவற்றால் அவ்விடையூறு முற்றுந் தகர்க்கப்பட்டு உலக முழுதும் ஒன்றாக்கப்பட்டு விட்டது. அதனால் எல்லா நாட்டு மக்களுங் கலந்து பழகிவருகின்றனர். எனவே அந்நாளிலுள்ள மக்களின் அறிவியக்கத்திற்கும், பொருளாதார நிலைக்கும், பிறவற்றிற்கும் இற்றை நாளிலுள்ள அவற்றிற்கும் இடையீடு சாலவும் பெரிதாகுமன்றே! அவ்வாறாகவே,

உயிர்களிடத்து வைத்த இரக்கமே உருவாகக்கொண்டு தமக்கென வாழாத் தன்மையாளராகிய பெரியார் பலரும் தாம் வாழ்ந்த காலத்து மக்களிடம் என்ன குறைபாடு காணப்படுகிறதோ அதை நீக்குதற்குரிய நெறியையே மேற்கொண்டு அதற்கு ஆவனவற்றையே அவர்க்கு அறிவுறுத்தி வாழ்க்கை நடாத்தியிருப்பார் எனக் கோடலே முறையாகும்.

உறுபசியும் ஓவாப்பிணியுமின்றி, நாடு செழித்துக் குடிகொழுத்துள்ள அஞ்ஞான்று, "நெருநல் அவ்வின்பத்தை நுகர்ந்தோம்; இன்று இந்நலனைத் துய்க்கின்றேம்; நாளை அதனை நுகர்ந்து மகிழ்ச்சியடைவோம்" என மக்கள் வாழ்க்கையின்பத்தையே எண்ணிக் கடவுள் நினைவு அரும்பாதிருந்திருப்பர்; அது காலை,

"இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே!

என ஆளுடைய பிள்ளையார் அறிவுறுத்தருளினர். இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவுமின்றிப் பல கோடி மக்கள் பரிதவிக்கும் இஞ்ஞான்று ஒரு பெரியார் அது போன்ற நன்மொழிகளை மக்களுக்குக் கூறின் அவை, 'செவிடன் காதிற் சங்கூதுவ'தை ஒக்குமன்றிப் பயன் தரா; ஆகலின் இற்றை நாட்டுபெரியார் மக்களின் வறுமை நோயைக் களைவதிலேயே முன்னணியாக நின்று தொண்டாற்றுவரென்க. எனினும் அப்பெரியாரனைவரின் குறிக்கோள்மட்டும் ஒன்றேதான் என்பதை அறிஞரனைவரும் மறக்கார்.

(தொடரும்)

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

ஒருவன்—(௧௫)

கடவுளைக் குறிக்கப் பண்டைத் தமிழர்கள் வழங்கி வந்த சொற்களில் ஒருவன் என்ற சொல் ஒன்று. ஒருத்தன் என்ற சொல்லும், ஒன்று என்ற எண்ணுப் பெயரும் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டு வந்த சொற்களாகும். ஒருவன் என்றாலும் ஒருத்தன் என்றாலும் ஒன்று என்றாலும் அவைகளாற் குறிக்கப்படும் கருத்துக்களில் வேறுபாடு ஒன்றுமில்லை. இச் சொற்களால் குறிக்கப்படும் கருத்துக்களை இக் கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. ஒருவன் என்ற சொல்லானது ஒன்று என்ற எண்ணுப் பெயரும் அன் என்ற ஆண்பாற் படர்க்கை விகுதியும் சேர்ந்து ஆகியது. ஒன்று என்பது அதிலுள்ள ஈற்று உயிர்மெய் கெட்டும் னகர ஒற்று ரகர ஒற்றாக மாறியும் அந்த ரகர ஒற்றுடன் உகரம் சேர்ந்தும் ஒரு என்றாகியது. (நன்னூல் சூத்திரம் ௮௮,௧௮௬). அப்படி வந்த ஒரு என்பதனுடன் அன் சேர்ந்த பொழுது, வகர உடம்படுமெய் தோன்றி ஒருவன் என வந்தது.

3. 'ஒன்றே பதி' என மெய்கண்டதேவர் சிவஞான போதத்திலும், "ஒன்று கண்டீருலகுக் கொரு தெய்வமும்" என்று திருமூலர் திருமந்திரத்திலும் (2962) "தெய்வமொருவனே யென்று உணர வல்லிரேல்'' என்று ஔவையாரும் கூறியபடிப் பண்டைத் தமிழ் மக்கள் கடவுள் ஒருவனே என்னும் உண்மையை ஐயந்திரிபற உணர்ந்திருந்தார்கள். ஆதலின் அவர்கள் ஒருவன் என்ற சொல்லைக் கடவுளுக்குச் சமய நூல்களில் வழங்கி வந்தார்கள். கடவுளுக்கு அவர்கள் ஒருவன் என்ற சொல்லை வழங்கி வந்ததினால் கடவுள் "தனக்குவமையில்லாதான்'' ஆதலின் அச்செயல் ஒப்பற்றவன் என்ற பொருளினும் வழங்கப்பட்டு வந்தது.

4. கடவுள் ஒருவனே என்று உணர்ந்த அவர்கள் அவனை

"முன்னெலா முழுமுதலென்று வானோர் மூர்த்தியாகிய முதல்வன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தினைநகர்த் தேவாரம் ௭-வது பாட்டிற் கூறிய வண்ணம் முழுமுதற் கடவுள் என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் 'பிறப்போடிறப்பென்று மில்லாதான் காண்' என்று திருஆரூர் திருத்தாண்டகம் 5-வது பாட்டிற் கூறியபடிப் பிறப்பும் இறப்பும் இல்லாதவன் என்றும், "கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் றாளை வணங்காத் தலை" என்று திருவள்ளுவ நாயனர் கூறியபடி மாயையின் தொடர்பில்லாத எல்லாம் அறியும் அறிவுடைமை முதலிய எண்குணங்களை உடையவன் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

5. மேற்கூறிய கருத்துக்களை எல்லாம் அடக்கியுள்ள ஒருவன் என்ற சொல் கடவுளைக் குறிக்கத் தமிழ் மறைகளிற் பல இடங்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. அதே கருத்துக்களைக் கொண்டுள்ள ஒருத்தன் என்ற சொல்லும் ஒன்று என்ற சொல்லும் அவைகளில் வழங்கப்பட்டு வந்துள்ளன. அச்சொற்கள் வழங்கப்பட்டு வந்த சில இடங்களை இங்கே குறிப்பிடுவாம்.

1. "ஒதி நன்குணர்வார்க்குணர்வுடை ஒருவன் ஒளி திகழுருவஞ் சேரொருவர்"

   திருஞான சம்பந்த சுவாமிகள் திருப்பரம்புரத் தேவாரம் ௬-வது பாட்டு.

2. "ஒளியார் விடமுண்ட ஒருவன்"

   திருஞான சம்பந்த சுவாமிகள் சீகாழித் தேவாரம் ௪-வது பாட்டு.

3. "உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி"

   திருநாவுக்கரசு சுவாமிகள் திருஆரூர் போற்றித் திருத்தாண்டகம் ௪-வது பாட்டு.

4. ஒதியே கழிக்கின்றீர்க ளுலகத்தீர் ஒருவன் றன்னை நீதியால் நினைய மாட்டீர்"

   திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சோற்றுத்துறை திருநேரிசை ௧-வது பாட்டு.

4. "ஒருத்தனை உணரமாட்டார்"
திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கடவூர் திருநேரிசை ௩-வது பாட்டு.

6- "நாற்றானத்து ஒருவனை நானுயபரனை"
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் திருவதிகைத் திருவீரட்டானம் ௪-வது பாட்டு.

7. "ஒருவனென்னும் ஒருவன் காண்க"
திருவாசகம் கீர்த்தித் திருவகவல் ௪௩-வது வரி.

8. "உரை யுணர் விறந்த ஒருவ போற்றி"
திருவாசகம் போற்றித் திருவகவல் ௧௪௨-வது வரி.

9. "என் சிந்தை மேய ஒருத்தன் பெருக்கு மொளி"
திருவாசகம் திருவெண்பா ௭-வது பாட்டு.

10. "ஒப்புனக்கில்லா ஒருவனே"
திருவாசகம் பிடித்தபத்து ௬-வது பாட்டு.

11. "ஊன்பழித் தென்னுள்ளம் புகுந்தென்னுணர்வதுவாகிய ஒருத்தன்"
திருவாசகம் குயிற்பத்து ௪-வது பாட்டு.

12. "ஒருத்தனே யுன்னை ஓலமிட்டலறி யுலகெலாந் தேடியுங் காணேன்"
திருவாசகம் அருட்பத்து ௨-வது பாட்டு.

13. "யாவையுமாம் ஏகத்தொருவனிரும் பொழிலம்பலவன்"
திருக்கோவையார் ௭௧-வது பாட்டு.

14. "ஒளிவளர் விளக்கே வுலப்பிலா ஒன்றே"
திருவிசைப்பா: கோயில் ௧-வது பாட்டு.

15. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
திருமந்திரம் 2104-வது பாட்டு.

16. "ஒன்றென்றிரு தெய்வம்"
பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.

17. "ஒன்றே காணூழி முதலாகிப் பல்லுயிர்க்கும் ஒன்றாகி நிற்கும் சிவம்"
ஔவையார் குறள்.

18. "எள்ளுக்கு ளெண்ணெய் போலெங்கும் வியாபக மாயுள்ள வொன்றை"

தாயுமான சுவாமிகள் பாடல்: பொருளியலபு ௫-வது பாட்டு.

19. "ஒன்றலா வொன்றுவுள தாகி நின்றவா றொன்றலா வொன்றிலவை யிருதல்"

சிவஞான போதம் ௧-வது சூத்திரவெண்பா.

6. சைவ சமயத்தைப் போல கடவுட் கொள்கையுடைய ஏனைய சமயங்களும் கடவுள் ஒருவனே என்று கூறினும் ஒருவனு யிருக்கிற கடவுள் ஓரிடத்தில் மாத்திரமில்லாமல் எவ்விடங்களிலும் எவ்வாறு நிறைந்திருத்தல் கூடும் என்னும் உண்மையை சைவ சமயம் ஒன்றே விளக்கிக் காட்டுகின்றது. கதிரோன் தன்னின் வேறல்லாததும் தன்னை விட்டுப் பிரியாததுமான கதிரொளியினல் உலகெங்கும் பகற் காலத்தில் நிறைந்திருத்தல் போல கடவுளும் தன்னின் வேறல்லாததும் தன்னை விட்டுப் பிரியாததுமான அருட் சத்தியினல் உலகெங்கும் நிறைந்திருக்கின்ருன். அவன் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்கும் நிலையிற் சிவம் எனவும் புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையிற் சத்தி எனவும் தாரதன்மியத்தால் இருதிறப் பட்டியைந்து நிற்பன். அவன் தனது அருட் சத்தியால் உயிருலகத்திலும் நிறைந்திருக்கின்ருன். அவன் அவ்வாறு எல்லாப் பொருள்களிலும் நிறைந்திராவிடின் அவைக ளியங்கா; அதுவன்றி அவனது முழுமுதற்றன்மைக்கு இழுக்கு உண்டாகும். இவ்வாறு கடவுள் தான் செய்யும் ஐந்தொழிலின் பொருட்டு உயிர்ப்பொருளிலும் உயிரில் பொருளிலும் நிறைந்திருக்கும் தன்மை அவனுடைய பொதுவியல் (தடத்த இலக்கணம்) என்று கூறப்படும். அவன் உயிருக்கு உயிராய் அணுவுக்கு அணுவாய் எங்கும் நிறைந்திருக்கும் பொதுஇயற்றன்மையில் அநேகன் என்று கூறப்படுவான். அதுபற்றி மாணிக்கவாசக அடிகளும் திருவாசகத்தில் "ஏகன் அநேகனிறைவனடி வாழ்க" என்று கூறியருளினர். இவ்வுண்மையை அறியாது மேற்குநாட்டுக் கிறிஸ்தவர்கள் இவ்வாறு கடவுள்

எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கின்றான் என்னும் கொள்கையைப் பலகடவுட் கொள்கை (Polytheism) என்று இழித்துக் கூறுகிறார்கள்.

7. மூவுருவினர்கள் (திரிமூர்த்திகள்) சைவ சமயத்திற் கூறப்பட்டிருக்கின்றதே என்று ஒருவர் கேட்பின் அவர்கள் மாயா உருவங்களையும் குணங்களையுமுடையவராகக் கூறப்பட்டிருத்தலன்றி முழுமுதற் கடவுளர்களாகக் கூறப்படவில்லை. மூவுருவினர்களுமாகிய அயன், மால், உருத்திரன் என்னும் மூவர்களும் தாங்கள் செய்கின்ற படைத்தல், காத்தல், அழித்தற் றொழில்களைத் தங்களிடத்தில் விளங்கப் பெறுகின்ற அருட் சத்தியைக் கொண்டு செய்கின்றார்கள் என்றும், அவர்கள் தாங்களாக ஒரு தொழிலும் செய்யவல்ல ரல்லரென்றும், அவர்கள் சகலவர்க்க உயிர்கள் என்றும் சைவ சமயம் கூறுகின்றது. இம் மூவுருவினர்களைப் பற்றித் திருஞான சம்பந்த சுவாமிகள் "ஒருருவாயினை மானாங்காரத், திரியல்பா யொருவிண்-முதல் பூதல, மொன்றிய விருசுடரும்பர்கள் பிறவும், படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள், "கண்ணவனை யுலகெலாங் காக்கின்றானே" "வேதனைய் வேதம் விரித்திட்டானே" என்றும் "உருமூன்றா யுணர்வின் கண்ணொன்றானை" என்றும் மாணிக்கவாசக சுவாமிகள்,

"சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு மண்மேற்
றேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரிதவரே."

என்றும் கூறியிருத்தல் காண்க.

8. பண்டைக் காலத்தில் தமிழர்கள் ஒரே முழுமுதற் கடவுளைச் சிவனுருவிலும் சத்தியுருவிலும் திருமாலுருவிலும் விநாயகருருவிலும் முருகனுருவிலும் கதிரோனுருவிலும் ஆக அறுவகை நெறியில் வழிபட்டு வந்தார்கள். இப்படி அறுவகையுருவங்களில் முழுமுதற் கடவுளை அவர்கள் வழிபட்டு வந்த சமயம் அறுவகைச் சமயம் எனப்பட்டது. பிற்காலத்தில்

இராமாநுஜாச்சாரியார் காலத்திற்குப்பின் சைவம் வைணவம் என இருவேறு கடவுளுடனும் குறிகளுடனும் இருவேறு சமயங்கள் பாகுபாடு செய்யப்பட்டன. இற்றை ஞான்றும் இப்பாகுபாடுகள் பார்ப்பன குலத்தார்களுக்குள் அல்லாமல் ஏனைய சைவ வேளாளர் முதலிய தமிழர்களுக்குள் பொதுவாக உடனுண்ணலுக்கும் உடன் மணத்தலுக்கும் தடையில்லாம லிருத்தலை நாம் காணலாம். சைவர்கள் சாதாரணமாகத் திருமால் பெயரைத்தங்களுக்கு இட்டு வழங்கி வருதலையும் திருமால் கோயிலுக்குப் போய் வழிபட்டு வருதலையும் தங்கள் சிவ பூசையில் அவனை வழிபடுதலையும் நாம் காணலாம். சிவன் கோயில்களில் திருமால் உருவம் அமைத்து வழிபடப்படுதலையும் நாம் காணலாம். ஆனல், வைணவர்கள் பொதுவாகச் சிவன் பெயரை இட்டு வழங்குதலையும் சிவன் கோயிலுக்குப் போய் வழிபடுதலையும் காணுதலரிது.

9. பண்டைத் தமிழ் மக்கள் வழிபட்டு வந்த முழுமுதற் கடவுளாகிய சிவன் தத்துவங்களைக் கடந்தவன். அவனைப் பலதர அறிவுடைய மக்கள் தங்கள் அறிவுக்கு எட்டும் வண்ணம் உருவில் வைத்து வழிபடும் பொழுது தங்கள் தங்கள் அறிவுக்குப் பொருந்தியவாறு பலவகை உருவங்களில் வைத்து வழிபட்டு வந்தார்கள். இவ்வாறு பலவகை உருவங்களில் வைத்து மக்கள் வழிபடும் வழிபாடு ஒரு முழுமுதற் கடவுளையே அடைகின்றது. அம்முழுமுதற் கடவுளே வழிபடுவார் வழிபடும் பல உருவங்களில் நின்று அருள் செய்கின்றான். சதாசிவன் மகேசன் அநந்தேஸ்வரர், ஸ்ரீகண்டதேவர், உருத்திரன், திருமால், அயன் முதலிய வடிவங்களில் வைத்து மக்கள் வழிபடும் வழிபாடுகளெல்லாம் மாயா வடிவங்களுக்கு எட்டாத முழுமுதற் கடவுளையே அடைகின்றன. பலவகை உருவ வழிபாடுகளால் முழுமுதற் கடவுள் என்னும் உண்மை மறுக்கப்படமாட்டாது. திருஞானசம்பந்த சுவாமிகள் "நானுவித உருவாய் நமை ஆள்வான்" என்றும், "இராமேச்சுரத் தொருவனுமே பலவாகி நின்ற தொருவண்ணமே" என்றும் "ஏறூர்தரு மோருவன் பல உருவன்" என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள்" ஆரொரு

வருள்குவாருள்ளத்துள்ளே யவ்வுருவாய் நிற்கின்றவருளுந் தோன்றும்" என்றும் தேவாரங்களில் கூறியிருத்தல் காண்க. காரைக்காலம்மை அற்புதத் திருவந்தாதியில் "நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக நீலமணி மிடற்றுனீர்மையே—மேலுலந்த தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும் அக்கோலத் தவ்வுருவேயாம்" என இவ்வுண்மையைப் பற்றிக் கூறியிருக்கின்றார். நலந்தரு பேத மேகநாதே நடிப்பன் என்று சிவஞான சித்தியார் நூலில் அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் கூறியதும் இவ்வுண்மையே. தாயுமான சுவாமிகளும் "ஏகமான உருவான் நீ அருளினுல் அனேக உருவாகியே" எனச் சிற்சுகோதய விலாசத்தில் கூறியருளினர். ஆனல் கடவுள் ஒருவனே காரணமின்றி ஒரு விளையாட்டினுல் உயிர்கள் பலவும் உயிரில் பொருள்கள் பலவும் ஆயினுன் என்று ஏகான்மவாதிகள் மயங்கி அறிதல் போலப் பண்டைத் தமிழ் மக்கள் அறியவில்லை. உயிர்கள் தங்களை அநாதியே சேர்ந்துள்ள ஆணவ மலத்தினின்று நீங்கித் தன்னை அறிந்து உய்யும் பொருட்டுக் கடவுள் தனது அருட்சத்தியால் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நின்று அவற்றினையுங் கடந்து நிற்கின்றுன் (விசுவாதீதன்) என்ற உண்மையை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

10. ஒன்று என்ற சொல்லாற் குறிக்கப்பட்ட கடவுள் எல்லாப் பொருள்களினுஞ் சேர்ந்திருத்தலின் அஃது ஒற்றுமை என்ற பொருளிலும், வீடுபேற்றிற்குக் காரணனுயிருத்தலின் வீடுபேறு என்ற பொருளிலும், உண்மைக்குக் காரணனுயிருத்தலின், ஓரோவழி உண்மை என்ற பொருளிலும் வழங்கப்பட்டு வந்தது. கடவுள் எல்லாப் பொருள்களினுஞ் சேர்ந்திருத்தலின் ஒன்று என்ற சொல்லிலிருந்து சேர்தல் என்னும் பொருள்பட ஒன்றுதல் வந்தது. அக்காரணம்பற்றியே அதிலிருந்து ஒருமை, ஒருப்பாடு, ஒருங்கு, ஒற்றுமை என்ற சொற்களும் வந்தன. ஒண்டுதல், ஒட்டுதல் என்ற சொற்களும் ஒன்றுதல் என்பதன் விகாரங்களாம். கடவுள் எல்லா உயிர்ப்பொருள்களினுங் கலந்து வேறற (அத்துவிதமாய்) நிற்கின்றுன் என்ற

உண்மையே இச்சொற்களின் பொருள்களுக்கு அடிப்படையான காரணமாயுள்ளது.

11. கடவுள் அருட் சத்தியாகிய உமாதேவியோடு ஒரு முதற்பொருள் என்ருவது இருமுதற் பொருள்கள் என்ருவது சொல்லக்கூடாத வண்ணம் கலந்திருக்கின்ருன் என்ற சைவ சமய உண்மைபற்றி பண்டைத் தமிழ் மக்கள் கடவுளின் அம்சமாகிய ஆண் உயிரையும் உமாதேவியின் அம்சமாகிய பெண் உயிரையும் சேர்த்து ஒருமுதற் பொருள் என்ருவது இருமுதற் பொருள்கள் என்ருவது குறியாமல் ஒன்று என்ற பகுதியால் ஒருமையையும் அர் என்ற விகுதியால் பன்மையையும் குறிக்கிற ஒருவர் என்ற சொல்லால் வழங்கி வந்தார்கள். இப்பேச்சு வழக்குப்பற்றித் தொல்காப்பிய நூலார் "ஒருவர் என்னும் பெயர்நிலைக்கிளவி—யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை" என்று சூத்திரம் செய்தனர். பிற்காலத்து வந்த நன்னூல் இலக்கண நூலாரும் "ஒருவரென்ப துயரிருபாற்ருப் பன்மை வினை கொளும் பாங்கிறென்ப" எனக் கூறினர். இந்தப் பேச்சு வழக்கும் நூல் வழக்கும் தமிழ் மொழியினில் அன்றி வேறு எம்மொழியினுமிருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

12. மேலே கூறியபடி ஒருவன் என்ற சொற்பொருள் ஆராய்ச்சியால் பண்டைத் தமிழ் மக்கள் உலகிற்கு முழுமுதற் கடவுள் ஒருவனே என்ற உண்மையையும் அவன் எல்லாப் பொருள்களினும் நிறைந்து அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்ருன் என்ற உண்மையையும் அறிந்திருந்தார்கள் என்பது நன்கு புலனுகும்.

கொங்கு நாடும் உரோமானிய நாணயங்களும்

[திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள்.]

கொங்கு நாட்டில் கோயமுத்தூருக்கு அடுத்த போத்தனூர் ஜங்க்ஷனுக்குக் கிழக்கு 3 மைல் அளவில் வெள்ளலூர் என்ற பழமையான ஓர் ஊர் இருக்கிறது. நாளது 1931-ம் ஆண்டு ஜனவரிமீ 16-ம் தேதியன்று அவ்வூரில் கூத்தாண்டி மேடை என்ற இடத்திற்கு அருகில் ஒரு சிறுவன் விளையாட்டிற்காகப் புழுதி மண்ணில் குழி தோண்டுகையில் ஒரு சிறு மண் குடத்தைக் கண்டெடுத்தான். அது பழைய காலத்துக் குடமாக இருந்தது. அதை உடைத்துப் பார்க்கையில் 121 வெள்ளி நாணயங்கள் அதற்குள் இருந்தன. உடனே கிராமாதிகாரிகளுக்குத் தெரிந்து அந்நாணயங்களையும் உடைந்த குடத்துண்டுகளையும் கலெக்டர் ஆபீசுக்கு அனுப்பிவிட்டார்கள். கலெக்டர் உத்தரவின் பேரில் அந்நாணயங்களை நான் பார்வையிட்டேன். அவைகள் 35 ரூபாய் எடை கொண்ட 121 உரோமானிய நாணயங்களாக இருந்தன. அவைகளில் 10 நாணயங்கள் வெகு அழகாகவும் நன்றாகவும் இருந்தன. மற்றவை மண் ஒட்டிக் கொண்டிருந்தன. சுத்தமாகக் கழுவினால் அவைகளையும் பரீட்சித்துக் காண முடியும். வெள்ளியோ சொக்கமாகவும் பளபள வென்றும் இருக்கின்றது. நாணயங்களில் உள்ள உருவங்கள் செதுக்கின உருவங்களைப்போல வெகு நன்றாகவும் அவைகளின் குணத்தையும் சொல்லக்கூடிய அவ்வளவு நுணுக்கங்களைக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன. நாணயங்கள் சுத்தமாகவும் தேயாமலும் இருக்கின்றமையால் அவைகள் வெகுநாள் பழக்கத்தில் இருந்திருக்க மாட்டா என்று துணிவாகக் கூறலாம். அவைகள் ஒருவேளை தேசிய அல்லது இராஜரீகப் புரட்சியின் காரணமாக வெகு காலத்திற்கு முந்தியே புதைக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க முடியும்.

அந்நாணயங்களிற் சிலவற்றின் விவரங்களை இனிக் குறிக்

கிறேன். ஒரு நாணயத்தில் ஒரு புறத்தில் கி. மு. 44 முதல் கி. மு. 14 வரை ஆண்ட அகஸ்தஸ் சக்கரவர்த்தியின் உருவமும் அதனைச் சுற்றி, Caesar Augustus என்ற எழுத்துக்களும், மற்றொரு பக்கத்தில் ஒரு மானிட உருவம் ஒரு கையில் ஈட்டியும் மற்றொரு கையில் பூவேலை செய்த செங்கோலும் கொண்டிருக்கவும், அதனைச்சுற்றி Maxim Pontif என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. மற்றொரு நாணயத்தில் ஒரு புறம் ஒரு சக்கரவர்த்தியின் உருவமும் அதனைச் சுற்றி Caesar என்றும், மற்றொரு பக்கத்தில் எட்டு மூலைகள் காட்டும் கோடுகளும் அதனைச்சுற்றி Divus Julius என்றும் வரையப்பட்டிருக்கின்றது. மற்றொரு நாணயத்தில் ஓர் அரசன் தலையும் அதனைச்சுற்றி Davius Pater Patrias என்றும் கண்டிருக்கிறது. மற்றொன்றில் 4 குதிரைகள் ஒரு இரதத்திற்குக் கட்டப்பட்ட உருவமும் அதனைச்சுற்றி Imp Vii. என்றும் எழுதப்பட்டுள்ளது. மற்றொன்றில் ஓர் அரசன் உருவமும் அதனைச் சுற்றி Augustus என்றும் மற்றொரு புறத்தில் ஓர் காளை தன் வாலைத் தூக்கிக்கொண்டு பாய்கிற நிலையில் உள்ள உருவமும் அதனைச்சுற்றி Imp x என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொன்றில் ஓர் உட்கார்ந்த உருவமும் அதனைச்சுற்றி Constantine என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வரசன் கி. பி. 323 முதல் கி. பி. 337 வரை ஆண்டவன். இன்னமும் பல இருக்கின்றன. ஆகவே இந்நாணயங்கள் கி. மு. 44 முதல் கி. பி. 337 வரை ஆண்ட அரசர்களின் நாணயங்களாக இருக்கின்றன.

இதே வெள்ளலூரில் 1842-ம் ஆண்டில் ஒரு புதையல் கிடைத்தது; அதில்,

அகஸ்டஸ்	(கி. மு. 44—கி. பி. 14)	(Augustus)
ட்ருசஸ்	(8 கி. மு.—)	(Drusus)
ஜெர்மேனிகஸ்		(Germanicus)
டைபீரியஸ்	(14 — 37)	(Tiberius)
கலிகுலா	(37 — 41)	(Caligula)
க்லாடியஸ்	(41 — 54)	(Claudius)

முதலான அரசர்களின் நாணயங்கள் இருந்தன. மேலும் வெள்ளலூரிலன்றிக் கொங்கு நாட்டில் பொள்ளாச்சி, கரூர், கலயமுத்தூர் முதலான இடங்களிலும் அநேக புதையல்கள் கிடைத்திருக்கின்றன. இந்நாணயங்களின் உருவம், அழகு, முதலியவைகளைக் கவனித்தால் கொங்கு நாட்டில் அக்காலத்தில் உரோமானியர்கள் அதிகமான வியாபாரம் செய்து கொண்டிருக்க வேண்டும், அதற்காக ஒரு குடியேறின இடமும் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது.

மேலும் இவ்வெள்ளலூர் மிகுந்த பழமையான ஊர் என்பதற்கு வேறு சில அறிகுறிகள் உண்டு. இவ்வூர் முந்தி நொய்யலாற்றங் கரையில் இப்போதிருக்கும் ஊருக்குச் சிறிது தூரத்தில் கட்டப்பெற்றிருந்து பின்னால் அஃது அழிந்து போயிருக்கும் குறிகள் அங்கே காணப்படுகின்றன. அங்கே ஒரு புழுதி மேட்டில் பாண்டவர் குழிகள் என்று சொல்லும் மாண்டவர் குழிகள் இருந்தன. அவ்விதம் இறந்தவர்களை முற்காலத்தில் அடக்கம் செய்து வந்த வழக்கத்தை * மணிமேகலையில் கூறியிருப்பது காணலாம். பாண்டவர் குழிகள் அருகில் இருக்கும் பேரூரிலும் இருந்தன. இவைகளைப்பற்றி விவரமாக பேரூர்ப் புராணம் இரண்டாம் பதிப்பில் காணலாம். இக்குழிகள் இருப்பதைக்கொண்டு இவ்வூர் பல ஆயிர ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஐயமின்றிக் கூறலாம்.

இவ்வெள்ளலூரில் பழமையான ஆலயங்கள் மூன்று உள்ளன. இவை மூன்றும் இப்போதிருக்கும் ஊருக்குச் சிறிது தூரத்தில் உள்ளன. அவைகளில் சிவாலயம் பெரியது. சுவாமிக்குத் தேனீச்சுரமுடையார் என்று பெயர். கல்வெட்டுகள் உண்டு. அவைகளில் "தென்னூருடையார்" என்ற பெயர் காணப்படுகிறது. ஊருக்கு 'அன்னதான சிவபுரி' என்றும் 'வள்ளலூர்' என்றும் 'தென்னூர்ப்பாடி' என்றும் பெயர்கள் காணப்படுகின்றன. கி. பி. 1004 முதல் 1041 வரை ஆண்ட விக்கிரம சோழன் என்ற கொங்கு சோழனுடைய

* தாழியிற் கவிப்போர் தாழ்வயின் அடைப்போர்.

சாசனங்கள் இருக்கின்றன. மேலும் சேர அரசர்கள் "சந்திராதித்திய குல" திலகனான "கோக்கண்டன் வீரநாராயணன்", "கோக்கண்டன் ரவி" என்ற அரசர்களின் இரண்டு சாசனங்கள் இருக்கின்றன. அவ்வெழுத்துக்கள் மிகப் பழையவை. 9-வது நூற்றாண்டின் எழுத்துக்களைப்போல் இருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் இவைகள் சோழ அரசன் ஆதித்திய சோழன் காலத்தவை என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வாலயத்தில் மிகப் பழமையான பல கல்வெட்டுகள் இருந்தாலும் அவைகள் மிகவும் மழுங்கிக் கிடக்கின்றமையால் அவைகளை வாசித்து அறியக் கூடவில்லை.

இவ்வூரில் உள்ள மற்றொரு பண்டைய ஆலயம் வரதராஜப் பெருமாள் ஆலயம். இவ்வாலயத்திலும் பல கல்வெட்டுகள் உள. ஒன்றைத்தான் அரசாங்கத்தார் எடுத்துள்ளார்கள். ஏனையவை மழுங்கிப் போய்விட்டன. கிடைத்த கல்வெட்டு ஹொய்சள அரசன் வீர வல்லாள தேவன்—ா-வது அரசன் காலத்தது. ஆகவே அது 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

நொய்யலாற்றுக்கு அடுத்து அழகு நாச்சியம்மன் ஆலயம் ஒன்று இருக்கின்றது. இதிலும் கல்வெட்டுகள் இருக்கின்றன; ஆனால் அரசாங்கத்தார் இதைக் கவனிக்க வில்லை. இதில் கற்களை மாற்றிப் பிற்காலத்தார் கட்டிடம் புதிப்பித்திருக்கிறதினால் சாசனத்தைப் பூர்த்தியாக வாசிக்க முடிகிறதில்லை.

இத்தன்மையான பழமை வாய்ந்த இந்த வெள்ளலூரில் உரோமானிய நாணயங்கள் காணப்பட்டவை ஆச்சரியமல்ல. நம் நாட்டு மக்கள் தங்கள் பூர்விக மேன்மையை அறிய வேண்டும் என்ற ஆசை இல்லாததினால்தான் இவ்வித ஆராய்ச்சிகள் அதிகமாகத் தென்படுகிறதில்லை. இனிமேலாவது கல்விமான்கள் இவ்வூரில் உள்ள பண்டை இடங்களைச் சோதித்து அங்கே மூழ்கிக் கிடக்கும் அருமையான பொருள்களையும் அவற்றின் சரித்திரங்களையும் வெளிப்படுத்தி நாட்டுக்கு உழைப்பார்களாக.

ஆய்தம்.

[இராம சுப்பிரமணிய நாவலர்.]

ஆய்தம் திருந்திய சுவையுடை யருந்தமிழ் மொழிக்குச் சிறப்பாயதோர் எழுத்து. அஃது தமிழ் நெடுங்கணக்கின்க ணடுவண் வைத்து எண்ணப்படும். ஈண்டு நடுவண் என்றது உயி ரெழுத்தின் முன்னரும் மெய்யெழுத்தின் பின்னருமாய நிலை மையாம். சிலர்க்கு எழுத்துக் கற்பிக்கப்படும்போழ்து, தொல் லாசிரியர் மரபின் வந்த தமிழறிஞரும் ஆய்தத்தினை இடை வைத்தே கற்பிக்கின்றனர். சிலர், அதனை ஈற்றிற் கொண்டு கற் பிக்கினும் அது முறையன் றென்பது,

"ஆவி யகரமுத லாறிரண்டா மாய்தமிடை
மேவுங் ககரமுதன் மெய்களா—மூவாறுங்
கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று
நண்ணுமுதல் வைப்பாகு நன்கு." —நேமிநாதம்

என்பதனால் தெள்ளிதின் உணரப்படும். இதனுள், 'முறைமை யால்' என்பது கூர்ந்து கருதற்பாற்று; எனவே, ஆய்த மிடை வைத் தெண்ணப்படும் என்பது வலியுறும்.

இனி அவ்வாய்தம் நந்தமிழிற்கு எவ்வாற்றான் பயன்படும் என்பது ஆராயற்பாற்று.

" அக்கேன மாய்தந் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால வைந்து மிதற்கே'.

என்பதனால், அக்கேனம், ஆய்தம் தனிநிலை, புள்ளி, ஒற்று என் னும் ஐந்தனையும் ஆய்தம் பெயராகப் பெறும் என்பது உணரப் படும். ஆய்தத்தை 'அக்' எனக் கூறிப் பயிற்றுவிக்கும் முறைமை யுளது. அதனோடு 'ஏனம்' என்னும் சாரியையைச் சார்த்த 'அக் கேனம்' என ஒலி பெறும். ஆயுத வடிவாயிருத்தலின் ஆய் தம் எனப் பெயராயிற்று என்ப ஒரு சாரார். முற்றிலும் ஆய் தம் போன்றே வடிவுடைத்தாகிய ஓராயுதம் இன்மையானும், ஆயுதம் என்னும் வடமொழி தமிழ்ச் சிறப்பெழுத்து ஒன்றற்

குப் பெயராதல் சாலாமையானும் அது கருத்தன்றென்பது. 'ஆய்' என்பது மென்மை, நலிவு என்னும் பொருட்பெறுதி உடைத்தாகலின், ஆய்தம் என்பது நலிவுடைத்தாகிய இசை பெறச் சொல்லப்படுவது என்னும் பொருட்டாம் என்பது வலியுறும். அன்றியும், "நலிபுவண்ண மாய்தம் பயிலும்' என்பவாகலின் ஆய்தம் பயின்று வருவதே நலிபுவண்ணம் எனப் பெயர் பெறுதலானும் அஃதொக்கு மென்பது. உயிர் போலவும் ஓரோவிடத்து ஒற்றுப்போலவும் ஒலித்து உயிர் மெய்கட்கிடை நிற்றலான் தனிநிலை எனப் பெயர் பெறும்.

"அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்"

என்பதனுள், முதலடியினும் இரண்டாமடியினும் ஆய்தம் ஒற்றுப்போல் ஒலித்தலும்,

"அற்று வளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு"

என்பதன்கண் உயிர்போல் ஒலித்தலும் உணர்க. மூன்று புள்ளி வடிவாயிருத்தலானும் மெய் யெழுத்துப்போன்று பயன்பெறுதலானும் புள்ளியென்னும் பெயராயிற்று. ஒற்றுப்போன்று செய்யுட்கண் பயன்பெறலானும்,

"விலஃகி வீங்கிரு ளோட்டுமே மாத
ரிலஃகு முத்தி னினம்"

என்றாற்போலச் சில்லிடத்து ஒற்றில்வழி ஒற்றாய் நிறுவப் பெறலானும் ஒற்று என்பதும் அதற்கோர் காரணக்குறி.

அவ்வாய்தம் குறியதன் முன்னரும் உயிரேறிய வல்லெழுத்தின் மேலுமாகிய அவ்விரண்டின் நடுவண் வரும் என்ப.

"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே."
—தொல்காப்பியம்.

"ஆய்தந்தானே குறியதன் கீழ்த்தாய்
வலியதன் மேல்வக் தியலுமென்ப"

என்பனவற்றை நோக்குக. ஆய்தப் புள்ளி எனவும் ஆய்தவெழுத்து வழங்கப்படும்.

வலியதன் முன்னர்ப் பிற எழுத்துக்கள் தொடரவும் பெறும். அவை நெடிலாகவும் பெறும். குறியதன் பின்னரும் பல வெழுத்துத் தழுவி நிற்கப்பெறும். ஆயினும், பெரும் பாலும் அங்ஙனம் தழுவுவது அடையாமிடத்தே யாம்.

எஃகு, கஃசு ஈண்டு ஆய்தம் குறியதன் முன்னர் வலியதன் மேற்றாயிற்று.

வெஃகா, அஃதான்று—ஆய்தத்தின் முன்னர் ஒன்றும் பலவும் எழுத்துக்கள் தொடர்ந்தன. ஆய்தத்தைச் சார்ந்த எழுத்துக்கள் நெடிலுமாயின.

ஒருபஃது இருபஃது குறியதன் பின்னர் எழுத்துக்கள் தொடர்ந்தன. ஆயினும், அவை அடையாய் நிற்ப, பஃது என் பதே ஒரு சொல்லாய் நின்றது.

ஆய்தம் தமிழிற் சில்லிடத்து உயிராகவும் சொல்லப்பெறு மாகலின், பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழியில் எழுது தலின்கண், நலிந்து நிகழு மோசைக்கு மிகப் பயன்பெற்று நிற் கும். உயிர்க்கு மெய்க்கும் ஒரு சிறப்பாய் இன்றியமையாது அமைந்தமை சுட்டற்கே அஃது அவற்றின் இடைக்கண் நிறு வப் பெற்றது போலும்!

கருமை

[திருக் கபசம் எழுதியது]

(முன் அ௬-ம் பக்கத் தொடர்ச்சி)

ந, ம, சி, வ, ய என்ற ஐந்தெழுத்துக்களில் முதன் மூன்றை யும் **ரு. ந; ய. ம; ஙி. சி;** என இருவரிசைகளாக நிறுத்திக் கால் தொடங்கித் தோள் வரையில், முதுகெலும்பு நடுவாக இடம், வலமென்று பிரிந்து நிற்கும் உறுப்புக்களைக் குறிக்குமாறு வகுக்கு மொருமுறை தமிழுலகி லிருந்ததென்பது, சிதைந்து கிடக்குஞ் சித்தர் நூல்களால் நமக்குத் தெரிகின்றது.

" நவ்விரண்டு காலதாய் நவின்றமவ்வு வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய், சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய் எழுந்துநின்ற நேர்மையிற்
செவ்வையொத்து நின்றதே சிவாயவைந் தெழுத்துமே "
(சிவவாக்கியர்)

என்று கூறியதிலிருந்து மேற்குறித்த முறை வெளிப்படுகின்றது. வகாரமும் யகாரமும் வாயையுங் கண்களையுஞ் சுட்டுமென்று பகரப்பட்டது. நகரம், வயிற்றிற்குக் கீழுள்ள உடற்பகுதியை யையுங் கால்களிரண்டையுங் குறியாநின்றது. உடலை ஆறு வீடுகளாக (ஆதாரம்) வகுக்குமுறையில் வயிற்றின் கீழிருக்கு முட்பகுதி அயன் வீற்றிருக்கு மிடமென்று கூறப்படுகிறது. அன்றியும், நிலம், புனல், அனல், வளி, வெளி என்ற ஐந்தனுள் நிலத்தைச் சுட்டும் உடற்பகுதி நகரத்திலடங்கிய தென்று மொழிப. ஒரு மகன் உட்கார்ந்திருக்கு நிலையில் மண்ணொடு பொருந்தும் உடற்பகுதிகள் நகரத்தாற் குறிப்பிடப்படுவனவே யாதலின், நகரத்திற்கும் நிலத்திற்குமுள்ள பொருத்தம் தெளிவாக வெளிப்படுகின்றது. நகரத்தின் வலதுபக்கத்திலுள்ளவளைவு தொடைக்குமேலுள்ள சதையின் வடிவத்தை யொத்திருப்பது காணுதற்கெளிது. இட முறையாக நகரத்தை எழுதினல், இடது பக்கத்திலுள்ள உடலின் கீழ்ப்பகுதிக்கு அஃதறிகுறியாகின்றது. ஆயின், நகரமுந் தகரத்தைப் போல் நீண்ட காலுடன் எழுதப்பட வேண்டுமென்பதை யறிகின்ரேம். நகரமும், அயனும், நிலமும் ஒன்றிய தன்மை உற்று நோக்கத்தக்கது. படைத்தற் கடவுளென்று பழைய நூல்களெல்லாம் அயனைப் பரவுகின்றன. படைத்தலென்பது ஆண், பெண் கூட்டமே யொழிய வேறன்று. முப்புரமெரிசெய்த முன்னேன் தவத்திலிருந்த காலை படைப்புத் தொழில் நிகழாது உலகம் வருந்திய தென்றும், இஃதறிந்த நான்முகன் முக்கணன்மீது காமவேளை எவினனென்றும் புராணம் அறைகின்றது. படைப்பென்பது புணர்ச்சி யன்றெனின், மலர்வாளி தொடுப்பவன் துணையை மலரவன் நாடிய தெற்றிற்கு? இஃதென்னயினுமாக; நமதளவிற் படைத்தலென்பது புணர்ச்சியினற் கருவுரு வாக்குதலே யாம்.

புணர்ச்சியின்மேல் வேட்கை எழுப்புதற்கு நறுமணமுள்ள புதுமலர்கள் செய்யுந்துணை இத்துணை யத்துணை யன்று. பூங்கணை யெய்யும் மதவேள் துணையை அயன் தேடியது வியப்பன்று. நிற்க; அயன் படைப்புக் கடவுளாயின், அவன் வீற்றிருக்குமிடம் அத்தொழில் நிகழ்தற்கேற்றதா யிருக்க வேண்டுமன்றோ? இது கருதி நகரத்திற்குள் நான்முகனுக்கிடம் வகுக்கப்பட்டது. புணர்ச்சிக் கருவிகள் நகரத்தாற் சுட்டப்படு முடற்பகுதியுளமைந்திருத்தல் காண்க. மண்ணென்பது ஐந்தனுள் மிகத்திண்ணியதென்பது பற்றியும், படைப்பு, பிறப்பு என்பன சித்தர்களால் மிகுதியும் வெறுக்கப்பட்டமை பற்றியும், ஐந்தெழுத்தில் நகரங் கீழ் நிற்கின்றது. இக்கருத்தை இன்னும் பெருக்கிக்கொண்டு போகாது இத்துடன் நிறுத்துதும்.

இனி, மகரம் வயிற்றைக் குறிக்கும் :—

நவ்வெழுத்தே பிரமனு ராகு மதில்
நாரணன் மவ்வெழுத் தானானே
சிவ்வெழுத்தே தெய்வ ருத்திரனும் இன்னுஞ்
செப்புவேன் கேளடி ஞானப் பெண்ணே.

(ஞானக்கும்மி)

மகரத்திற்கும் வயிற்றிற்குமுள்ள உருவ ஒற்றுமை இத்தகைத்தென நமக்கு விளங்கவில்லை. உடற்கூறு அறிவு கொண்டு துருவிப் பார்க்கின் ஒற்றுமை விளங்கலாம். வயிறு மாலுக்கிருப்பிடமாகக் கொள்ளப்படுகின்றது. உடலைப் பேணி வளர்ப்பது வயிறாதலால், அது மாலுடன் பொருந்தியதே யாகும். காத்தற் கடவுளென்று மால் சிறப்பித்துப் பேசப்படுகின்றான். காத்தலென்பது வளர்த்தலே. அன்றியும், யாக்கையில் நீர் மிகுந்த விடங் கும்பியாகும். நீருக்கு மாலுக்குமுள்ள பற்று உலகறிந்தது. நீரில் துயில் கொள்வோனாகத் திருமால் தீட்டப்படுவதை முன்கண்ட விடத்து, தூக்கத்திற்கு மிருளுக்குமுள்ள தொடர்பைக் காட்டித் திருமாலின் கருமைக்கொரு வகையிற் காரணங் கூறினேம். ஈண்டதை நினைவிற் கொணர்தல் நன்று. புனல் பெருகி உலகழியுங்கால் (பிரளய காலத்தில்) யாவற்றையுந் திருமால் தன் வயிற்றுளடக்கி, ஏற்ற காலத்தில் முன்போல்

யாவற்றையும் வெளிப்படுத்து கின்றானென்று கூறுப. உலகந் திருமாலின் வயிற்றுளொடுங்கிப் பின் தோன்றி விரிதல், வளர்ந்து முதிர்ந்த மகன் மறுபடியுங் கருப்பையுட் புகுந்து வெளிப் படுதலை யொக்கும். ஆனாலித்தகைய செய்தி நிகழ்வதில்லை. நிகழ்வது யாதெனின், ஒவ்வொரு உயிரும் தான் மாள்வதற்கு முன் தன்னைப்போல் வளரத்தக்க ஒரு கருவை உண்டாக்கு வதே. ஆலமரம் ஆலவிதையி லொடுங்குவதே இதற்குப் போதிய சான்றாகும்? ஆலமரம் ஆலவிதையிற் கருவாயிருக்கின்றது. ஆண்டினிருட் பகுதியையு மொளிப் பகுதியையும் விரித்துரைத்த விடத்து அது விளக்கப்பட்டது. அயன் அமர்ந்திருக்கும் நக ரத்தில் தோன்றிய உயிர் மாலின் இருப்பிடமாகிய மகரத்தில் கருவாய்த் தங்குகின்றது. நகரம் நிலத்தைக் குறிக்கு மெழுத் தென்று சொன்னேம். மகரம் நீரைக் குறிக்கு மெழுத்தென் பதை யறிந்து கொள்க.

வயிறென்பதுங் கருப்பை என்பது மொருபொருளில் வருஞ் சொற்கள். 'பெற்ற வயிறு' என்று சொல்லும் வழக் குளது. இது கொண்டுந் திருமாலுக்கு வயிற்றை இடமாக வகுத்ததன் முறை யறியப்படும். கருவில் உடல் மேல் உயிர் வந்தோன்றும் வகை அறிதற்கரிது. ஆயினும், கருப்பையிற் புகும்பொழுதே உயிரைக் கருமை (ஆணவம்) பற்றுகின்ற தென்று கூறலாம். "காரிட்ட வாணவக் கருவறை" என்று தாயுமானார் நவின்றது காண்க. கருவுங் கருமையு மீண்டியைந் தன. இவற்றிற்குள்ள பொருளொற்றுமையும் எழுத்தொற்று மையு மூன்றி நோக்கற்பாலன. அழிவில்லாத உயிரின் வரலாற் றைக் குறித்துத் தமிழருக்கிருந்த கருத்தொன்று இதிலடங்கி யிருக்கிறதென்று நினைக்க ஏவப்படுகின்றனன். யாவற்றையுங் கருவில் தாங்குந் திருமால் கரிய நிறத்தினனாய்க் கருதப்படுதல் ஒக்குமன்றோ?

கருவில் முதலிற் குழவி தோன்றும்போது அதன் உருவம், மீன், ஆமை, பன்றி முதலியவற்றின் கருவுருவை யொத்திருக்கின் றது. கரு முதிர்ந்து வளர வளர வேற்றுமைகள் புலப்படுகின்

றன. மக்கட் கருவையும் பிற கருக்களையும் வெவ்வேறு நிலைகளில் ஒப்பிட்டுப் பார்த்திதை அறிஞர்கள் வெளியிட்டிருக்கின்றனர். பொதுவாக, இயங்குதிணை யுயிர்களெல்லாம் நீரிற் பிறக்கின்றன. 'அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகி யொரு வாகமாகி' என்பது உண்மை. முட்டையில் நீரிருத்தல் வெளிப்படை. நீரோடு சேர்த்தெண்ணப்படு முயிர் மீன். ஆதலின், மீன் கருவிலிருந்து பிறப்பென்பது தொடங்குவதாகக் கொண்டு, கருப்பையிற் கழியும் பத்துத் திங்களிலுந் தோன்றும் வேற்றுமைநோக்கி, பத்துப் பிறப்புகள் (அவதாரங்கள்) எழுந்தன வென்று நினைக்க விடமுண்டாகின்றது. திருமாலின் மீன், ஆமை, பன்றி என்ற பிறப்புக்களை இவ்வாறு பொருள் செய்து, அவன் உலகத்தைக் கருவில் தாங்குகின்றானென்பதன் நுட்பத்தை யோர்க. நீரிலன்றி மீன் உயிர் தாங்காது. ஆமை நீரிலும் நிலத்திலும் வதியும். பன்றி நிலத்தின்கண் வாழ்வதாயினும், நீருநிலமுங் கலந்த விடங்களை விரும்பும். இம்முறையில் திருமாலின் வேறு பிறப்புக்களையு மமைத்துக் கொள்க. உயிர் என்பது முதன்முதல் நீரிற்றோன்றிப் படிப்படியாக நிலத்தில் வதிவதற்கேற்ற வமைப்புப் பெற்றதென்று சொல்லுவாருளர். ஈண்டுக் காட்டப்பட்டவற்றால் மகரமாகிய வயிறு மாலுக்கிட மாவதன் இயைபு நன்கு விளங்கும்.

பிறந்தபின் மக்கட்குழவி விலங்கை யொத்திருக்கின்றது. ஏனெனின், அது காலுங் கையுங்கொண்டு தவழ்ந்து திரிகின்றது. எழுந்து நிற்குமளவும், நகரத்தின்மேல் மகரம் வரவேண்டிய முறை குழவியிற் காணப்படவில்லை. ந, ம, சி, வ, ய என்ற எழுத்துக்களை ஒன்றின்மே லொன்றாய் அடுக்கிப் பார்க்கும் பொழுது, நிலத்தைக் காட்டுங்கால் (ந) கீழாகவும், எண் கடந்த வெளியைக் குறிக்குந் தலை (ய) மேலாகவும், திண்ணிய மண்ணிலிருந்து நுண்ணிய விண்ணுக்குப் படிப்படியாகச் செல்லும் ஓர் ஒழுங்கு காட்சிக் கெட்டுகின்றது. இங்ஙனம் தாழ்ந்தது கீழாகவும், உயர்ந்தது மேலாகவும் மக்களுடம்பு இயற்றப்பட்டிருப்பதால், பிற உயிர்களினு மக்கள் சிறப்புடைய ரென்பதறியப்படுகின்றது. தவழ்ந்து செல்கின்ற குழந்தையில், நகரங்

கீழ், யகரம் மேல் என்ற முறைக்கு மாருக, நகரம் (கால்) பின்ஞகவும், யகரம் (தலை) முன்ஞகவும் அமைகின்றன. மக்கள் நீங்கிய பிற இயங்குதிணை யுயிர்களும் இவ்வாறே அமைப்புப் பெற்றிருக்கின்றன. இவ்வமைப்பு மக்களமைப்பினின்றும் விலகி யிருப்பதால், பண்டைத் தமிழர் விலங்கு என்ற பெயரை அவ்வமைப் புடையவற்றிற் கிட்டனர். விலங்கு என்ற பெயர் மிக நுட்பமான ஆராய்ச்சியாற் பிறந்த தென்பதை நாமறிதல் வேண்டும். விலங்கு என்ற கிளவி மலை என்ற பொருளில் வழங்கப்படும் பொழுதும் 'குறுக்கே கிடப்பது' என்ற பொருளதி னுளது. விலங்கு போல் வாழ்ந்திடாது மேனேக்கி வாழவேண்டு மென்பதை யறிவிக்கவே ந, ம, சி, வ, ய என்ற ஐந்தெழுத்துக்கள் வகுக்கப்பட்டன.

(தொடரும்)

இலக்கண நூற் பயிற்சி

(காழி. சிவ. கண்ணுசாமி B. A.)

இலக்கணப் பயிற்சி யில்லான் வாணிபமும் வேளாண்மையு மொழிந்த ஏனைய தெதற்கு முதவான். அற்றன்று; எட்டைப் பிடித்து இரண்டெழுத்தேனும் பிழையற வெழுத வறியார் பலர் படைப்புப் பல படைத்தும் பட்டம் பற்பல வெய்தியும் உயர்ந்த நிலையில் இருக்கக் காண்கின்றேமா லெனின் அவை தாமும் அவர் தம் அறிவாற்றலான் நல்லாற்றி லெய்தியதல்ல என்பது துணிபு. மற்றெவ்வாறே வெனின், ஆள்வோர் கைக் கருவியாய் அனுவற் பல புரிந்ததனுனும், ஆளும் வகையறியாப் புல்லியர் மாட்டு நாட்டாண்மையைப் பறிகொடுத்து அல்லற் பலவுழக்கும் ஒரு நாட்டாரின் அவலப் பெற்றியினுலேயும் எய்தியவேயாம். இனி, இத்தகையதொரு குருட்டுப் பேறு தானும் யார்க்கும் எய்தற்பால தொன்றன்று. நாட்டார் தம் அறியாமை யேதுவாக ஒருவன் நன்மை பெற நினைத்தல் அறிஞரால் இகழ்ந்தொதுக்கற்படுவதோடன்றி அவன்றன் பிற்காலத்தவராலும் மானக்கேடென மதிக்கப்படுவதொன்ருகும்.

அறிவே அற்றங் காக்குங் கருவியாதலின் அதனையே யாரும் விடாது கைக்கோடல் வேண்டும். இலக்கண வறிவின்றேல் பிழையற எழுதுவதின்று என்பது உறுதி; பிழையறப்பேசுதல் என்பதும் அரிதே. ஒருவனதறி வாற்றலை ஆராயப்புகும் அறிவோர் அவன்றன் பேச்சையும் எழுத்தையுமே உரைகல்லாக் கொள்வர் என்று கூறவும் வேண்டுமோ ?

இலக்கண நூற் பயிற்சியோ எளிதிற் கைவருதலில்லை. கணக்கு நூலைப்போன்று இலக்கண நூற் பிரிவில் ஒரு பகுதியை யொதுக்கி யொன்றை மட்டும் பயிறல் என்பது கூடாது; நூற்பிரிவு முழுவதையுமே பயின்று முடித்தல் வேண்டும். மேலும் இலக்கணம் தொகுப்பு நூலாதலின் இயல்பாய் விளங்கக்கூடிய தொன்று மன்று. அதன் உள்ளுறை பொருள் ஒவ்வொன்றும் ஆர அமர உட்கார்ந்து தேர்ந்து உணர்ந்து தெளிதற் பாலது. ஒரு முறை இவ்வாறு உழைத்து அந்நூலைக் கற்றுவிட்டாலோ அந்நூல் வாணாள் முழுதும் உடனிருந்து உதவும் பெற்றியது. உற்றவிடத்து உதவி இன்பத்தையோ பயனையோ வன்றி யிரண்டையுமோ அஃது எளிதில் அளித்தற் காணலாம். இலக்கண அறிவே ஏனைய நூலறிவிற்கு அடிப்படை. அதுவே ஒருவன் சொல்வன்மையையும் கல்வித் திறமையும் எளிதிற் பிறர்க்கு எடுத்துக்காட்ட வல்லதாகும்.

இனி, விடாமுயற்சி என்பது தானும் எத்துறையிலும் இயல்பாக வேண்டப்படுவதாயினும் இலக்கணத்துறையில் மட்டும் அஃது இன்றியமையாது வேண்டப்படுவதாகும். "இளமையிற்கல்" என்று தமிழன்னை பணித்ததும் இலக்கண நூற்பயிற்சியைக் கருதியே போலும். இளமையிற் கற்ற விலக்கணம் என்ஞான்றும் பயனுடைத்து. அஃதொக்கும்; ஆயின் நூற்பயிற்சியிற் பலர் கடைத்தேறுமற் போவதைக் கண்கூடாகக் காண்கின்றோமே எனிற் கூறுதும். கல்விப் பயிற்சியிற் கடைத்தேறு தொழிதல் பெரும்பாலும் விடாமுயற்சி யின்மையினாலேயேயன்றி மற்று அறிவாற்றலும், கற்கை அவாவும் இன்மையினாலன்று. இலக்கணப்பகுதியோ வருந்தி வருந்திக் கற்றற்பாற்று.

கற்போ சுவையற்றது; பொருளோ சிக்கலானது. கற்கக் கற்க இலக்கணநூல் உணர்ச்சியை யொழித்து அறிவைக் கலக்கு வது; எனினும் எய்தற்பாலதாய ஈடற்ற பெரும் பயன் கருதி இடைவிடாது பயிறற்பாற்று. இன்றேல் கருத்தொழிந்து களை மிகுந்து வெறுப்பும் கையறவும் மீதூர இலக்கண நூல்தானும் மூடிக் கைவிடப்படும். இத்தகையதோர் நிலை யெய்தாதிருக்க வேண்டின் அந்நூற் பயிற்சியில் விரைவை மட்டுப்படுத்தி முறை யாக நாடோறும் பயின்றுவரல் வேண்டும். இடையிடையே இயல்பிற் களையுணர்வு களைத்தெழுந்தோறும் அதுகாறும் உழைத்தது பயனற்றதாய்விடுமே என்பதையுன்னி விழிப்புடன் விடாது முயன்று பயிறல் வேண்டும். இலக்கண நூற் பயிலப் புகுந்த பதின்மரில் ஒன்பதின்மர் விழுக்காடு இக்களை யுணர்ச் சிக்கு இலக்காகி அந்நூற் பயிற்சியைக் கைநெகிழ விட்டிருக் கின்றனர். நாடோறும் குறிப்பிட்ட ஓரளவு நேரம் இலக்கண நூற்படித்தல் என்று வரையறுத்துக் கோடல்வேண்டும். மூளை தானும் என்ஞான்றும் ஒரே படித்தாய் இருக்கும் தன்மைய தன்று. கற்கை யவாவூட்டிக் கற்றதை யேற்கும் நெகிழ்ச்சி யுடையதாய் அஃது எப்பொழுதும் இருத்தலில்லை. ஒருகாலை கிளர்ச்சி மிகுந்து சுறுசுறுப்புடன் தோன்றும்; மற்றொருகாலை மடிமிகுந்து மாழ்கித் தோற்றும். ஆனல் மடிமிகுந்த அந்நிலை யில் அறிவு இடைமறித்து அம்மடியை யொழித்து பயிற்சிக் கண்செலுத்தினல் கிளர்ச்சியான நிலையை யெதிர் நோக்கி நிற்றல் வேண்டா. நாடோறும் அறிவு துணையாக மடியை மடக்கிப் பயிற்சிக்கண் முறையாக செல்லுமொருவற்குக் கிளர்ச்சிநிலை தானே யெய்தா நிற்கும். ஐந்தாறு முறைகளில் இவ்வாறு களையுணர்வைப் புறங்காணின் வெற்றியின் முதற் படி கைவந்ததெனக் கொள்ளலாம். அதுவே விடாமுயற்சிப் பழக்கத்திற் கொண்டுய்க்கும் ஏதுவுமாகும்.

இத்துணையும் இலக்கண நூற் பயிற்சியைக் குறித்து எடுத் துக் கூறியது என்னையோ வெனின் அது பஃறலைய நூற் கல்வி யில் விழுமியது என்பது கருதியே தான். இலக்கணம் பயின்றா னொருவன் எளிதில் தான் பலரினும் மேம்பட்டவன் என்பதை

யுணர்ந்து கொள்வான். அவ்வுணர்ச்சி தானும் அவன் மாட்டுத் தன்மதிப்பைப் பெருக்கித் தன்னம்பிக்கை யென்னும் ஒப்பற்ற உறுதுணையை நல்கி, பொய்படு பொருட் சிறப்பாளர் தம் புல்லிய ஆதரவை யிகழ்ந்தொதுக்கும் வன்மையை யளிக்க வல்லதாகும்.

இளஞ்சேய்க் கொல்லி

சிறுமலை நாட்டில் நிகழ்ந்தவை.

[திருக் கபசம் எழுதியது]

(௧௬௪-வது பக்கத் தொடர்ச்சி)

இதற்குள் அரசன் இளஞ்சேய்க் கொல்லியைப் பிறருக்குந் தன் மனைவிக்கும் அறிமுகப்படுத்தி வைத்து, அவனைப்பற்றிப் பலவாறு புகழ்ந்து பேச வாரம்பித்தான். வேந்தன் கூறிய தரசியின் காதி லேறவில்லை; இளஞ்சேய்க் கொல்லியின்மே லவள் கண்ணுங் கருத்து மூன்றின. இளங்கோமகன், அரசியுட னுரையாடி முகமன் கூறாது அமைதியாய் நின்றான். இதை யவள் விரும்பவில்லை யாயினும், இளஞ்சேய்க் கொல்லியைப்பற்றி வெறுப்படையாது, அவனைக் குறித்து நினைவி லாழ்ந்தாள்.

அரசனு மிளஞ்சேய்க் கொல்லியு மந்தப்புரத்தை விட்டு நீங்குமுன், வேந்தன் மனைவிக்கு அவ்விளமகன்மேற் பெருங் காதல் பிறந்தது. நாட்கள் பல கடந்தன; இளஞ்சேய்க் கொல்லியுடன் பேசி மகிழ அரசிக்கு வேட்கை மிகுந்ததாயினும், அரசனுடன் நெருங்கிப் பழகியதுபோல், இளஞ்சேய்க் கொல்லி அரசியுடன் அளவளாவியிருக்க விரும்பவில்லை. இளங் கோமகனின் நன்மையைக் கருதி யரசி யிடைவிடாது தன்னா லியன்றவற்றை யெல்லாஞ் செய்து வந்தாள். அரசனுமவ்வாறே செய்தான். தனக்காக அவர்க ளெடுத்துக்கொண்ட கவலையை நினைந்து இளஞ்சேய்க் கொல்லி மிக நன்றி யறிதலோடு நடந்து கொண்டான்.

தன்னந்தனியனாய்த் தப்பியோடி வந்த தோன்றல், இப்

பொழுது பழைய செய்திகளையு மவற்றைப்பற்றிய நினைவுகளையு மறந்து, ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கினான். துணையி லியாயவன் சிறுமலை நாட்டிற்கு வந்த அஞ்ஞான்று நன்மொழிகள் கூறித் தன்னை வரவேற்றுத் தனது நலங்கருதிப் பல செய்த வரம்பனின் பொருட்டு, இளஞ்சேய்க் கொல்லி பல வேலைகளி லிறங்கினான். சிறுமலை நாட்டின் வளம் பெருகவும், பசி, பிணி, பகையால் வருந் துன்பங்கள் குறையவும், அவன் பாடுபட்டுழைத் தான். அவனெடுத்த கருமங்களெல்லாம் எளிதில் நிறைவேறின. கருமங்களைச் செய்து முடிப்பதி லவன் சாலத் திறமையுடன் நடந்து கொண்டதாலும், இனிமையுடன் பேசுகின்றவனாகவும் அன்பு நிறைந்தவனாகவும் விளங்கியதாலும் அந்நாட்டில் தலைமை பெற்றவர்களிற் பலர் அவனுக்கு நெருங்கிய நண்பரானார்கள். இதன் பயனாக, போர்புரிவதிலும் சமாதானஞ் செய்வதிலும் இவையொத்த வின்னும் பல காரியங்களிலும், அடிக்கடி வேந்தன் இளஞ்சேய்க் கொல்லியி னுதவியை வேண்டிநின்றான். இவனும், பல காவதங்களுக் கப்பாலுள்ள வேறு நாடுகளுக்கு அவ்வப்போது விரைந்து சென்று, அரசு முறையிற் சிக்கலான பல காரியங்களைச் செய்து முடித்தான். இவ்வாறு நகரத்தை விட்டு வெளியே சென்று வேலையி லாழ்ந்திருப்பதே அவனுடைய வழக்கமாயிற்று. எதற்கெனின், அரண்மனையி லவனிருக்கும் போதெல்லாம் வரம்பன் மனைவி அவனை நாடி வந்து, நனி யினிய மொழிபகர்ந்து, அவனைத் தன் வலையிலகப்படுத்த முயன்றாள். அரசி விரும்பிய வகையில் தான் நடந்து கொள்ள முடியாதென்று எவ்வளவு தெளிவா யவன் காட்ட முயன்றானோ, அவ்வளவுக் கதிகமா யவ ளவனுக்குக் காதலூட்ட முயன்றாள். ஒரு நாள் அரசியுட னவன் தனியாயிருக்க நேர்ந்தபோது, அவளவனை யணுகி, "உன்னை என்பாலிழுப்பதற்கு நானெவ்வளவு முயன்றும், நீ சிறிதும் என்மே லிரங்கவில்லை. என்னையொரு பொருளாக மதியாது, என் காதலையு மிகழ்கின்றாய். இதனால் வரும் பயனை நீ யறியாய்," என்று மிக வெகுண்டு உரை பகர்ந்தாள். இப்பேச்சைக் கேட்ட இளஞ்சேய்க் கொல்லி, மிகவு நாணி வெளியே வந்து, அவளுடைய தகாத நடக்கையை

எண்ணி நெஞ்சு புண்ணாகி, மறுநாள் தான் நகரத்தினின்றும் புறப்பட்டு நெடுந்தூரஞ் சென்று போர் செய்யப்போவதை யுன்னி யொருவாறு மனத்தை யாற்றிக்கொண்டான். தான் செய்யப்போகும் போர் முடிவதற்குக் குறைந்தது நாலைந்து திங்களாகு மாதலால், அதுவரை யரசியின் சூழ்ச்சிகளிலிருந்து விடுதலை பெற்றிருக்கலாமென்று அவன் மகிழ்ந்தான்.

மறுநாளே யவன் போர் முனைக்குப் புறப்பட்டுச் சென்றான். தனது கூரிய அறிவினாற்றலாலு மாண்மையினாலு மிளஞ்சேய்க் கொல்லி எளிதில் தனது எதிரிகளை முதுகுகாட்டியோடச் செய்து, சின்னாளில் மீண்டுந் தலைநகரந் திரும்பினான். வெற்றியுடன் திரும்பிய வீரமகனின் வரவுகேட்டு, நகரத்து மக்களெல்லா மொன்று திரண்டு வெளிக்கிளம்பி, அதிக ஆர்ப்பரிப்புடனு மலங்காரத்துடனு மவனை நகரத்திற் கழைத்து வந்தார்கள். அரசனு மெதிர்கொண்டு சென்று, அன்பு ததும்புகின்ற உளத்துட னிளஞ்சேய்க் கொல்லியை மார்போடணைத்து வாழ்த்தி, யாவருமறிய அவனைத் தன் மகனென்றுந் தனக்குப்பின் னரசு செய்ய வுரிமை யுடையவனென்றுங் கொண்டாடினான். இங்ஙன மன்னனருகில் வர, நகர மக்கள் புடைசூழ, இளஞ்சேய்க் கொல்லி நகரத்துட் புகுந்து, அரண்மனையை யணுகினான். அப்பொழுது அவன் வேந்தனை நோக்கி "மன்னர் பெரும, தங்கள் தேவியுந் தங்களைப் போன்றே, உடல் நலமும் உளவமைதியும் பெற்று வாழ்கின்றனரோ?" என வினவினான். இதற்கு விடைகூறப் புகுந்த மன்னன், அரசியைப் போல் சுகத்தை யனுபவிப்பவ ரெவருமில்லை என்றும், கவலை என்பது அரசியின் மனத்திற் புகுவதில்லை என்றும், இளஞ்சேய்க் கொல்லியுந் தானும் அரசியைப்போல் வருத்தமின்றி நாட் கழித்தால் நன்றா யிருக்குமென்றும் மொழிந்தான்.

இளஞ்சேய்க் கொல்லியுந் தானும் இன்னலின்றி வாழ்க்கை நடத்தவேண்டு மென்று வேந்தன் கொண்ட விருப்பம், அவன் எதிர்பாராத வகையில், வீணாய்ப் போயிற்று. வேற்று நாட்டிலிருந்து திரும்பிவந்த இளஞ்சேய்க் கொல்லி, அமைதியுட

னிளைப்பாறி இன்பத்துடன் வாழ்க்கை நடத்த வேண்டியதிருக்க அவ னரசியி னடங்காத கோபத்திற் கிலக்காகி, மிகவு மின்ன லுற்றுத் தவிக்கவேண்டியதாயிற்று. பற்றி எரிகின்ற சினத்தை உள்ளடக்கி வைத்திருந்த கோமகள், தன்மீது இளஞ்சேய்க் கொல்லிக்குக் காதலுண்டாகும்படி இறுதியாக ஒரு பெரு முயற்சி செய்வேனென்று துணிந்தாள். அங்ஙனமே அவள் சென்று, அவன் தன்னெண்ணத்திற் கிசையுமாறு எவ்வளவோ தூண்டிப் பார்த்தும் அவ னிணங்காதவனாய் நிற்க, அணைகடந்த வெள்ளம்போற் பொங்கி யெழுகின்ற வெகுளியுடன் வெளியே வந்து, எந்தவகையி லவன்மீ தொரு பெரும் குற்றஞ் சுமத்திப் பழி வாங்கலாமென்று வகைதேடினள்.

இளந்தென்றல் வீசுமொரு மாலைப்பொழுதில் அவள் வேந் தனிடம் வந்து, இளஞ்சேய்க் கொல்லி மிகக் கொடிய பாதக னென்றும், படிற்றொழுக்கத்தால் வேந்தனுக்கு நண்பனாய் நடிப் பவனென்றும், தனது கற்பை யழிக்க வழி பார்த்தானென்றும், இத்தகைய இழிதன்மையுடையவனை வேந்தன் நண்பனாக வைத் திருப்பது அடாததென்றும் கோபித்துக் கூறினாள். அவள் சொன்னதி லணுவளவு முண்மையில்லை யெனினும், இளஞ்சேய்க் கொல்லியின்மீ தவள் கோபங் கொள்வதற்குக் காரண முண் டென்பதை யறியாத வேந்தன், அவளுடைய அழுகையையுஞ் சினத்தையுங் கண்டு மயங்கி, அவள் கூறியவெல்லாஞ் சத்திய மென் றெளிதில் நம்பினன்.

இவ்வாறு கூறிய வரசி தன்னைவிட்டுப் போனபின், இளஞ் சேய்க் கொல்லியின்மே லவள் சாட்டிய குற்றத்தைப்பற்றி மன் னன் யோசிக்கத் தொடங்கி என்ன செய்வதென்றறியாத நிலை மையிலிருந்தான். அவனுக்குக் கூரிய அறிவும், ஐயங் கொண்டு ஆராயப் புகுந்து தெளிவடையுந் தன்மையு மிருந்திருக்கு மாயின், அரசி கூறியத னுண்மையை யறிவதற்கு வேண்டிய வழி களை யவன் தேடியிருப்பான். அத்தன்மை யவனுக்கில்லை யாத லின், உண்மை யின்னதென்றறிய யாதொரு முயற்சியுமவ னெடுத்துக் கொள்ளவில்லை. இராணி பொய் சொல்லக் கூடியவ

ளென்பதையும் மன்னன் மறந்தான். எப்படி இளஞ்சேய்க் கொல்லியைத் தண்டிப்பது என்ற நினைவு அரசனை மிகவும் வருத்திற்று. தனது நாட்டை விட்டு இளஞ்சேய்க் கொல்லியை அப்புறப் படுத்தினால், அவனுதவியின்றித் தானென்ன செய்யக் கூடு மென்ற திகைப்பு மன்னனுக் குண்டாயிற்று. இங்ஙனமாயினும், இளஞ்சேய்க் கொல்லியின் முகத்தில் தான் விழிப்பதில்லை யென் றும், சிறுமலைநாட்டி னெல்லைக்குள் அவனைக் கொலை செய்வ தில்லை என்று மரச னுறுதி செய்து கொண்டான். ஆனால் தனக் குப் பேருதவி செய்த இளஞ்சேய்க் கொல்லியின்மேல் எங் ஙனந் தண்டனை விதிப்பது? அவனை எங்கு அனுப்புவது? என்ற கேள்விகளுக் கொரு விடைதேடி மன்னன் கடைசியி லொரு முடிபிற்கு வந்தான். தனது மனைவியின் தாய்நாடா கிய ஈழ நாட்டில் அவளது தந்தையாகிய ஒப்பிலான் அரசு புரிந்து வந்தான். இளஞ்சேய்க் கொல்லி செய்த பெரிய பாவத் திற்காக அவ னந்த ஒப்பிலான் நாட்டிற் சென்று மாள்வதே தகுதி யென்று வேந்தனுக்குத் தோன்றிற்று. சிறுமலை நாட் டின் துறைமுகத்திலொரு நாவாய் அன்று வந்து தங்கிற்று. அன்று காலையில்தான் வரம்பன் அக் கப்பலுக்குச் சென்று, மாலுமிகளின் தலைவனைப் பார்த்து, கப்பலோட்டிகளுக்குத் தான் கொடுக்கவேண்டிய பணத்தையும் அதற்குமேல் நடக்க வேண்டியவற்றைப் பற்றிய தனது உத்தரவையும், ஒரு ஆள் மூலமாக வனுப்புவதாகச் சொல்லி யிருந்தான். இச் செய்தி கள் தனது ஞாபகத்திற்கு வர, துறைமுகத்திலுள்ள கப்பலி லேயே இளஞ்சேய்க் கொல்லியை ஏற்றி, ஈழத்திற்போய் அவன் சாகும்படி யனுப்புவது நன்றென்று அரசன் நிச்சயித்துப் பின் வருமாறு எழுதலானான் :—

"எனது மகனென்று நான் பன்முறை பாராட்டிய விளஞ் சேய்க் கொல்லிக் கெழுதுவது :—

"பொழுது விடிவதற்குமுன் நீ ஈழநாட்டிற்குப் புறப் படவேண்டும். இஃதுடனனுப்பும் மோதிரத்தையும் இரண்டு பைகள் நிறையக் கட்டியிருக்கும் பொன்னையும் நமது துறை

முகத்திலிருந்தின்று புறப்பட விருக்குங் கப்பலின் தலைவனிடம் நீ கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். நீயுங் கப்பலேறி ஈழத்திற்குச் சென்று அந்நாட்டிற் செங்கோற் செலுத்தும் ஒப்பிலானைக் கண்டு, இக்கடிதத்துட னனுப்புஞ் சித்திரப் பெட்டியை யவனிடங் கொடுக்கவேண்டும். இஃதன்றி, இப்பெட்டியைத் திறக்கக்கூடிய சாவிக ளிரண்டில், ஒன்று அவரிடமும், மற்றொன்று என்னிடமு மிருக்கிற தென்பதை நீ அவருக்கு ஞாபக மூட்டுவாயாக. பெட்டிக்குள் மிக முக்கியமான கடிதமொன்றிருக்கிறது.

" இளஞ்சேய்க் கொல்லி, நீ, போய் வருக. புறப்படுமுன் நீ என்னை வந்து பார்த்து வழியனுப்பிக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. இதற்குப் பின் ஒருவரை யொருவர் நாம் காண்போமென் றெனக்குத் தோன்றவில்லை. உலகில் நீ உயிருடனிருக்கும் நாள் கொஞ்சமா யிருக்கலாம். என்ன நேரிட்டாலும், நீயும் ஊழைப் பகைத்து அறிவற்ற தன்மையில் நடந்து கொள்ளமாட்டா யென்றும், உனை நேசித்து உனக்காகக் கவலைப்பட்டவென்மீது பகைமை பாராட்டமாட்டா யென்றும் நம்புகிறேன். போய்வருவாயாக.

வரம்பன்."

இஃதுட னரசன் மற்றொரு கடிதமுமெழுதி, அதை முன் குறித்த சித்திரப் பெட்டியுள் வைத்துப் பூட்டி, நம்பத்தகுந்த ஒருவனிடங் கடிதத்தையுஞ் சித்திரப் பெட்டியையும் மோதிரத்தையு மிரண்டு பைநிறைந்த பொன்னையுங் கொடுத்து, இவற்றை இளஞ்சேய்க் கொல்லிபா லுடனே சேர்க்குமாறு கட்டளையிட்டான். இக்கட்டளையைப் பெற்றவன் தூங்காது விழித்திருந்த இளஞ்சேய்க் கொல்லியிடம் விரைந்து சென்று வேந்தனிடமிருந்து தான் பெற்றுக்கொண்டவற்றை யவனிடங் கொடுத்தான். மன்னன் விடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்த இளஞ்சேய்க் கொல்லி, அதன் பொருளின்ன தென்றறியாமல் மயங்கிநின்று, இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்ப வாசித்தான். அதன்பின் அவனுக்குச் சிறிது தெளிவு பிறந்தது.

எங்ஙனமாகவோ அரசனுக்குத் தன்மீது எரிவு தோன்றியிக் கடிதமெழுதப்பட்டிருக்கவேண்டு மென்று அவனுக்கு நன்கு தெரிந்தது. அரசனது மனைவி, தன்மீது பொல்லாத பொய்க் கதைகளைக் கூறியதன் காரணமாக இக்கடிதம் வரையப்பட்ட தென்பதை யவனறியவில்லை. ஆதலின், தன்னை மகனென்று கொண்டாடிக் களித்த வேந்தன் திடீரென்று தன்னை நாட்டை விட்டேகும்படி ஏவியது யாதுபற்றி என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். குற்றமொன்று மறியாத தன்னை இவ்வாறு நடத்துவது நெறியற்ற செய்கையாகு மென்று நேரே யவனிடஞ் சென்று விளக்கிக்காட்டவேண்டுமென்று முதலில் இளஞ்சேய்க்கொல்லி கருதினன். இவ் விஷயத்தைப் பற்றி அமைதியாய்ச் சற்று ஆலோசித்தபின் இதுவுந் தனது நன் மைக்கென்றே நடந்திருக்கவேண்டுமென் றவனுக்குத் தோன் றிற்று. தானறியாத ஓராபத்தினின்றுந் தன்னை தப்புவிக்கும் பொருட்டு ஒருவேளை மன்ன னித்தகைய கடிதத்தைத் தனக்கு வரைந்திருக்கலாம். அங்ஙனமாயின், கடிதத்திற் றனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றுவதே நலமாகும். அவ்வாறன்றி, தன் மீது பிறந்த வெறுப்பின் காரணமாக வேந்த னிவ்வாறு செய் திருப்பானுயின், அவன் முன் சென்று வழக்காடுவதாற் பிறக் கக் கூடிய பயனொன்றுமில்லை. தனது குற்றமின்மையை யாவரு மறிய வெடுத்துக்காட்டுதற் கிப்பொழுது முடியா விட்டாலும், எப்பொழுதாகிலு மொருநாள் உண்மை வெளிப்படுதல் உறுதி என்று கருதி, வேந்தன் கட்டளையை நிறைவேற்றத் தீர்மானஞ் செய்த இளஞ்சேய்க் கொல்லி உடனே கடற்கரைக்குப் புறப் பட்டான்.

துறைமுகத்திலுள்ள கப்பலை நண்ணி, வேந்தன் கொடுத்த பொன்னையும்மோதிரத்தையும் மாலுமிகளின் தலைவனுக் களித்து விட்டு, அமைதியாகக் கப்பலி னொருபுறத்தி லிளஞ்சேய்க் கொல்லி யமர்ந்தான். சிறிது பொழுதிற் கப்பல் புறப்பட்டுப் பாய்மரங்களில் வந்து மோதிய காற்றால் தள்ளுண்டு விரிகடலிற் பாய்ந்தோடிற்று. சிறுமலை நாட்டின் தலைநகரத்தில் வேந்த னொருவனே இளஞ்சேய்க் கொல்லிக்குப் பகைஞனானன். சிறு

மலை நாட்டிற்குத் தான் தனியனாய் வந்து சேர்ந்ததையும், வரம்பன் தனக்குச் செய்த நன்றியையும், அவனோடு பலநாள் தானினிது வாழ்ந்ததையு நினைத்து இளஞ்சேய்க் கொல்லி இரங்கினான்.

சிறுமலை நாட்டு வேந்தன், தனக்கினிய நண்பனைப் பல நாளிருந்து அரிய ஊழியங்கள் செய்த கோமகனை வேறொரு நாட்டிற் கனுப்பிவிட நேர்ந்ததைச் சில வேளைகளில் நினைந்து மிகவும் வருத்தமுற்றான். இளஞ்சேய்க் கொல்லியைப் போல் உண்மையாய் உழைப்பவனும் நம்பிக்கை வைக்கத் தகுந்தவனுமான தோழனெவனு மகப்படானென்பது நாள் செல்லச் செல்ல, வேந்தனுக்கு மிகத் தெளிவாய் விளங்கிற்று. அரசனது நிலை இவ்வாறாக, அரசியின் ஸ்திதி எத்தகைய தென்று பார்ப்போம். உண்மையாகவே இளஞ்சேய்க் கொல்லி பெரிய குற்றத்திற் காளானானென்று அரசன் நம்பியதால், அவனதிகமாய் வருந்தவில்லை. அரசி யவ்விதந் தன்மனத்தை யாற்றிக் கொள்ளவிடவில்லை. ஒரு குற்றமுமறியாத இளஞ்சேய்க் கொல்லியின்மீது பெரும்பழி சுமத்தி, அவன் கடல் கடந்து சென்று வேறு நாடடைந்து தூரதேசத்திற் போய்த் துன்புற வைத்ததை எண்ணுந்தோறும் ஊசியிறங்குவதுபோ லோருணர்ச்சி அவளுள்ளத்திற் றோன்றிற்று. உயிரை வைத்துக் கொண்டிருப்பதே யவளுக்குத் தாங்க முடியாச் சுமையாயிற்று. இளஞ்சேய்க் கொல்லி சிறுமலை நாட்டைவிட்டுச் சென்ற சின்னாட் கழித்து அரசி யொருநா ளரண்மனையிலிருந்து திடீரென்று காணமற் போனாள். அவளுடைய சேடியரும் பிறரும், அவள் சின்னாளாய் ஏக்கத்திலாழ்ந்து ஒருவருடனு முரையாடாது நடந்து திரிந்த தோட்டங்களிலும் வேறிடங்களிலு மெங்கணுந் தேடிப்பார்த்தனர். ஆனை யிம்முறை யவள் தோட்டத்தையு மரண்மனையையுங் கடந்தப்பாற் சென்றனள். ஓரிடத்திலுள்ள முட் செடியில் அரசி யணிந்திருந்த பட்டாடையிலுள்ள சில நூல்கள் தொங்குவதுகொண்டு, அச்செடியைக் கடந்து கோமகள் வெளியே போயிருக்க வேண்டுமென்று எளிதிலெவருங் காணக்கிடந்ததாயினும், அவ்விடத்தை விட்டவ ளெங்கு சென்றாளென்பது விளங்கவில்லை. அரசனை

லனுப்பப்பட்ட மனிதர் நாடெங்குஞ் சென்று, அரசியைப்பற்றியசெய்தி யாதாயினுங் கிடைக்குமா வென்று பார்த்தார்கள். எங்ஙன மரசி மறைந்து போனளென்று ஒருவராலுஞ் சொல்லக்கூடவில்லை. தங்களரசி யினித் திரும்பிவாராளென்று சிறுமலை நாட்டு மக்களுணர்ந்தனர். அவர்களிதற்காக வருந்தவில்லை; அவளை யிழந்து விட்டதற்காக வரசனுந் தாங்கொணுத் துயரிலாழ்ந்து போகவில்லை.

வரம்பன் மனைவி எங்ஙனம்மறைந்தாளென்ற செய்தி, அந்நாட்டிலுள்ள மக்க ளிருவருக்கே யன்றி வேறெவர்க்குந் தெரியாது. இவர்கள் பாரெனில், ஒரு வலைஞனு மவன் மனைவியுமே. அரசி மறைந்துபோன மறுநாள் வலைஞன் தன் மனைவியிடம் வந்து, தான் கண்ட ஒரு செய்தியைக் கூறத் தொடங்கினன்:—

" மனைவியே, நேற்றிரவு யான் கண்ட காட்சி யொன்றை யுனக்குச் சொல்லுகிறேன். நேற்றிரவு நான் கடலிற் சென்று வலைவீசிப் பிடித்த மீனைச் சுமந்து கொண்டு நமது தலைநகருக்குக் கடலோரமாகவே நடந்து சென்றேன். வழியில் நமது ஊருக்கு அடுத்திருக்குங் குன்றின் சாரலிலுள்ள காட்டிற் பாதி தூரங்கடந்து நான் போகையில் வியக்கத்தகுந்த ஒரு நிகழ்ச்சியைக் கண்டேன். குன்றின் செங்குத்தான பாகத்தில் நின்று கொண்டு கீழேயிருக்கின்ற கடலை யுற்று நோக்கிய ஒருருவமெனக்குத் தெரிந்தது. அப்பொழு திருட்டாயிருந்தாலும் அவ்வுருவமொரு பெண்ணுய்த்தா னிருக்கவேண்டுமென்றெனக்குத்தோன்றிற்று. ஆயினும், அப்பெண் தனது நிலைமையை நினைந்து வருந்தி வாய்விட்டுப் புலம்பாதிருந்தால், அது யாரென்று நானறிந்துகொள்ள முடியாது போயிருக்கும். அவ்வுருவம் புலம்பிய புலம்பலிலிருந்து அது நமது வேந்தனது மனைவியாய்த்தானிருக்கவேண்டு மென்று நன்குறிந்து கொண்டேன். மக்களாய்ப் பிறந்தவரில் தன்னைப்போல் அல்லல்பட்டவ ரெவருமில்லை யென்றும், ஒரு பாவமுமறியாத ஒருவனுக்குத் தானிழைத்த பெருந்தீங்கினல் தனக்கு மதிமயக்கமுண்டாயிற்றென்றும், அரசி சொல்வ தென்காதில் விழுந்தது. தூக்குப் போட்டுக்கொள்ளும் பொருட்டு, அரசி தன் அரையிலிருந்த

கச்சையை யவிழ்த்து, அதை யொரு மரத்திற் கட்டித் தொங்க விட்டிருப்பதை நான் பார்த்தேன். அவள் செய்ய நினைத்த செய்தியை நான் விரைந்து சென்று தடுப்பதற்குமுன் இராணியின் முடிவு வேறொரு வகையில் நிகழ்ந்து விட்டது. மனத்தைத் துடிக்கச் செய்யுமொரு பெருங்கூச்சலுடன் அரசன் மனைவி சரேலென்று கீழே கடலிற் குதித்தாள். இதைக் கண்டு நானயர்ந்து நின்றுவிட்டேன். வேந்தன் மனைவிக் கித்தகைய பயங்கர முடிவு வரவேண்டிய காரணமென்னவென் றெனக்கு விளங்கவில்லை.

"இதன் பின் என்ன செய்வதென்று நான் யோசிக்கலானேன். ஒரு வழியுமெனக்குத் தோன்றவில்லை.. உன்னுடைய யோசனை என்ன? இதோ பார், மரத்திலிருந்து தொங்கிய கச்சையை நான் கையோடு கொண்டு வந்திருக்கிறேன். இதை மன்னனிடங்கொண்டு போய்க் கொடுத்து நான் கண்டவற்றை யெல்லா மவனிட மெடுத்துரைக்கச் சொல்லுகிறுயா? அல்லது ஒன்றும் பேசாது இக்கச்சையை யாருக்காகிலும் விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாமா? என்ன செய்யச் சொல்லுகிறுய்?" என்று செம்படவன் கேட்க,

"வேண்டாம், வேண்டாம். அரசனிட மிதைக்கொண்டு போகவும் வேண்டாம், இதை விற்கவும் வேண்டாம். சொல்லொணுத் துன்பத்தில் மூழ்கியிருந்த வரசியின் கச்சையை விற்றுக் கொஞ்சம் பணந்தேடிக்கொள்வதால் நமக்குத் தீமை வந்து நேருமேயன்றி நன்மை வராது. இன்னவகையி லரசி யிறந்தாளென்று வேந்தனுக் குரைப்பதால் பிரயோஜனமொன்றுமில்லை. குன்றில் நின்றுகொண்டிருந்த வரசியைக் கடலில் விழாதபடி தடுக்காமற்போனது உன் குற்றமாகு மென்று அரசன் தண்டித்தாலுந் தண்டிக்கலாம். ஆதலின் நீ படகிலேறிக் கடலிற் சென்று ஒரு கல்லைக் கட்டி இந்தக்கச்சையை ஆழத்திலெறிந்து விடு. அரசி மாண்ட விதத்தைக் குறித்து நீயுநானு மினி யொரு வார்த்தையும் பேசலாகாது," என்று அவன் மனைவி பதிலிறுத்தாள்.

மக்களுக்குப் பல நலத்தைச் செய்வாளென்று யாவரு

மெதிர்பார்க்கக்கூடிய வழகிய விளம்பெண்ணுய், ஈழ நாட்டி விருந்து பலவாண்டுகளுக்கு மூன் சிறுமலை நாட்டிற்குவந்த வரம் பன் மனைவியின் தற்கொலை மேற்குறித்த செம்படவர்க்கன்றி வேறெவர்க்கும் வெளியாகவில்லை. இது நிற்க, அரசியால் தீங் கிழைக்கப்பெற்ற இளங்கோமகனுக்கு ஈழ நாட்டில் யாது நேர்ந்ததென்று பார்ப்போம்.

திருவாசக வாக்கியங்கள்

[திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் எம். ஏ.]

(சிலம்பு ௫, சசகூ-ம் பக்கத்தொடர்ச்சி.)

38. திருவேசறவு

1. இரும்புதரு மனத்தேனை.
2. பொற்றவிசு நாய்க்கிடுமாறு.
3. நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்.

39. திருப்புலம்பல்

1. உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
2. கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

40. குலாப்பத்து.

ஓடுங் கவந்தியுமே உறவு.

41. அற்புதப் பத்து.

1. மண்ணிடை வாழ்வெனும் ஆழி.
2. அடித்தடித்து வக்காரமுன் றீற்றிய
3. ஊசலாட்டு மிவ்வுட லுயிராயின
4. உணர்வார்க் குணர்வரியவன்
5. பொச்சையான இப்பிறவி.
6. புழுத்தலை நாய்

42. சென்னிப் பத்து.

1. மூவராலு மறியொணாத முதலாய ஆனந்தமூர்த்தி.
2. அன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்.
3. காயத்துள்ளமு தூறவூற நீ கண்டுகொள்.

43. திருவார்த்தை

சேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த
இடப்பறிவார் எம்பிரானுவாரே.

44. எண்ணப் பதிகம்.

1. முத்தனையானே மணியனையானே.
2. காணவு நாணுவனே.
3. பாற்றிரு நீறு.

45. யாத்திரைப் பத்து.

1. மிக்க எல்லாம் வேண்டா.
2. யாம்ஆர் எமதுஆர் பாசம்ஆர் என்னமாயம்.
3. விடுமின் வெகுளி.
4. பிற்பாலினின்று பேழ்கணித்தாற் பெறுதற்கரியன் பெருமான்.

46. திருப்படை யெழுச்சி.

ஞானவாள் ஏந்தும் ஐயர்.

47. திருவெண்பா.

1. செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதேன்.
2. வருந் துயரந் தீர்க்கு மருந்து.
3. யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான்.

48. பண்டாய நான்மறை.

1. காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்.
2. நாட்டிற் பரிப் பாகன்.

49. திருப்படையாட்சி.

1. கன்றை நினைந்தெழு தாயெனவந்த கணக்கு.
2 இந்திர ஞால இடர்ப் பிறவி.

50. ஆனந்தமாலை.

1. இருந்தேன் நோய்க்கு விருந்தாயே.
2. தோலின் பாவைக் கூத்தாட்டு.

51. அச்சோப் பதிகம்.

1. முத்தி நெறி யறியாத மூர்க்கர்
2. சித்த மல மறுவித்துச் சிவமாக்கி
3. குறியொன்று மில்லாத கூத்தன்
4. நம்மையுமோர் பொருளாக்கி நாய்ச்சிவிகை யேற்றுவித்த.

சிவஞான போதக் கருத்து

இரண்டாவது சூத்திரம்

மூன்றாவது அதிகாரம்

[திரு. M. V. நெல்லையப்பபிள்ளை அவர்கள் B. A.]

(௨௫௬ - வது பக்கத் தொடர்ச்சி)

அடைந்த நுண்உடல் துன்ப உடல் (யாதனா சரீரம்) என்று கூறப்படும். இந்தத் துன்ப உடலினது பூத அணுக்கள் பரு உடற் பூத அணுக்களை விட்டுப் பிரிந்திருத்தலினால் மிக விரைவாய் அசைகின்றன (vibrate). துன்ப உடற் பூத அணுக்கள் மிக விரைவாய் அசைதலினாலும் நில உலகத்தைப்போல நிரய உலகில் வேட்ட நுகர்வுப் பொருள்கள் கிடைக்கப் பெறுமை யினாலும் நிரய உலக வாழ்வில் உயிர் கழிபெருந் துன்பம் அடைகின்றது. உயிரானது நில உலக வாழ்வில் எத்துணை வேட்கை மிகுதி உடையதா யிருந்ததோ அத்துணை நிரய உலகில் துன்பம் நுகரும். அக்கருத்துப் பற்றியே ஒளவையார் "கிட்டாதாயின் வெட்டெனமற" எனக் கூறி யருளினார். உயிர் இவ்வாறு நிரய உலகில் துன்பம் நுகருங்கால் அத்துன்பத்திற் கும், அதற்குக் காரணமான தீவினைக்குமுள்ள தொடர்பை நினைந்து இனிவரும் உலக வாழ்வில் அத்தகைய தீவினையைச் செய்யக் கூடாதென்று தனது உள்ளத்தில் முடிவு (resolution) செய்கிறது. இந்த முடிவின் பலனாக உயிரினது மனதில் தீவினையைச் செய்யாமல் அதனை விலக்கும் திறன் (power of avoiding the evil which is a negative virtue) முன்னை யிருந்ததைப் பார்க்கினும் வலுவாய் வளர்ந்து பெருகு கிறது. உயிர் நிரய உலகிலிருக்கிற காலம் அது நில உலக வாழ் விற் செய்த தீவினையின் அளவையும் கொடுமையையும் பொறுத் திருக்கிறது. உயிர் நிரய உலகிற் றுன்பம் நுகர்ந்தபின் மன உலகினது(சுவர்லோகம்) ஒரு பிரிவாகிய துறக்க உலகை (சுவர்க்க லோகத்தை) அடைகிறது. துறக்க உலகை உயிர் அடையும்

பொழுது அவ்வுலகில்தான் நில உலக வாழ்வில் பயன் குறித்துச் செய்த அறச்செயல் (புண்ணியச் செயல்)களுக்கு ஏற்ற இன்பம் நுகர்தற்கு பூதசார உடலைப் பெறுகின்றது. இந்தப் பூதசார உடலும் நுண் உடலினது நுண்பூத அணுக்களின் சேர்க்கை மாறுதலினாலே உண்டாகின்றது. துறக்க உலக வாழ்விலுள்ள மக்கள் உயிர்களெல்லாம் ஒரே வகையான இன்பம் நுகருதலில்லை. நில உலக வாழ்வில் உயிர் பயன் குறித்து அறவினை செய்யுங்கால் அதனுடைய மனவிரிவு (mental breadth) அல்லது மனக்குறுக்கம் (mental narrowness) எந்த அளவினதாயிருந்ததோ அந்த அளவில் அது துறக்க உலகில் இன்பம் நுகரும். துறக்க உலகம் மன உலகத்தைச் சேர்ந்ததாதலின் அவ்வுலகில் உயிர் நுகருமின்பமும் அதன் மனத்தினது விரிவையும் நலத்தினையும் பொறுத்தே யிருத்தல் இயல்பாகும். நிலஉலக வாழ்விலேயே மக்கள் உயிர் அடையும் உலக இன்பம் நாம் கண்கூடாக அறிகிறபடி அதன் மனப் பண்பைப் பொறுத்திருக்குமானால் நுண் மனஉலக வாழ்வில் அடையும் தனி இன்பம் எத்தனை மடங்கு மனப்பண்பைப் பொறுத்திருத்தல் வேண்டும்?

இவ்வாறு மக்களுயிர் துறக்க உலகில் தனது நுண்உடலில் இன்பம் நுகரும்பொழுது தான் நுகரும் இன்பத்திற்கும் அதற்குக் காரணமாயிருந்த நில உலக வாழ்வு நல்வினைக்குமுள்ள காரண காரியத் தொடர்பினை, தடிப்புத் தன்மை (material density) நீங்கிய காரணம்பற்றி எளிதாய் நினைந்து அறிதலினால், அவ்வுயிரினது மனதில் இனி நில உலக வாழ்வில் நல்வினையைச் செய்தல் வேண்டும் என்னும் கருத்து முன்னிருந்ததைப் பார்க்கிலும் வலுவடைந்து நல்வினையை நினைந்து செய்கின்ற மன அறநினைவுத்திறனும் (power of thinking what is good which is a mental faculty) நல்வினையை உணர்ந்து செய்கின்ற மன அற உணர்வுத் திறனும் (moral faculty) வளர்ந்து பெருகுகின்றன. ஆதலின் மக்கள் உயிருக்குத் துறக்க உலக வாழ்வு மேலே கூறியபடி இன்பம் நுகருகிற காலமாயிருத்தலோடு நிலஉலக வாழ்வில்

சேர்த்து வைத்துக்கொண்டு வந்திருக்கிற நுகர்வுக் கருத்துப் பொருள்களுக்குத் (gathered materials of worldly experience) தக்க அளவு மனஅற நினைவுத்திறனும் (mental faculty) மனஅற உணர்வுத்திறனும் (moral faculty) வளர்ந்து பெருக்கம் (development) அடையும் காலமாயு மிருக்கிறது. இந்த மனஅறநினைவுத்திறனும் மனஅற உணர்வுத்திறனுமே பின்வரும் நிலவுலக வாழ்வு ஒழுக்கத்துக்கு அடி முதலாய் (basic source) நுண்மன உடலில் அமைகின்றன. மக்கள் உயிர் துறக்க உலகிலிருக்கிற காலம் அது பயன் குறித்து நிலஉலக வாழ்விற் செய்த அறச்செயல்களின் அளவையும் தன்மையையும் (quantity and quality) பொறுத்திருக்கிறது. மேலே கூறிய வாற்ருல் உலக இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் அடைய விரும்பும் மக்கள் உயிர் நிலஉலகில் வாழுங் காலத்தில் தீவினையை (பாவத்தை) விலக்கி நல்வினையை (புண்ணியத்தை)ச் செய்யும் மன நலமுடையதாயிருத்தல் எத்துணை வேண்டப்படுவது என்பது நன்கு புலனுகும்.

82. மேலே கூறியவாறு நிரய உலக வாழ்விலும் துறக்க உலக வாழ்விலும் செல்லுதற்குரிய காலங் கழிந்தபின் மக்கள் உயிர், முதல்வன் ஆணையின்வழித் தான் நுகருதற்குப் பக்குவமான நுகர்வினை (பிரார்த்த வினை)க்கு ஏற்றபடி ஒரு நாட்டில் ஒரு குலத்திலுள்ள ஒரு தாயினது கருப்பப்பைப் பரு உடலிலே தனது நுண்உடலுடன் புகுந்து வளர்ந்து உலகிலே பிறக்கின்றது. அவ்வுயிர் நிலஉலகில் நுகரும் இன்ப துன்பங்களும் அவற்றிற்குக் காரணமாய செல்வ வறுமைகளும் உயர்வு இழிவுகளும் நுகர்வினைக்குத் தக்கவாறு வரையறுக்கப்படுகின்றன. அது முன்னைப் பருஉடலை விட்டு நீங்கி இறக்கும்போது தனது மனதில் எந்த வேட்கை (இச்சை) முதன்மையாய் நிலைபெற்றிருந்ததோ அந்த வேட்கையினுற் செலுத்தப்பட்டு எஞ்சி நின்ற அறவினை மறவினைகளுக்குத் தக்கதொரு பிறப்பை அடைகின்றது.

83. மக்களுயிரினது வினைமலம் பிறப்பினுல் எவ்வாறு பரிபாகம் அடைகின்றது என்பது கருதுவாம். பரிபாகம்

(परिपाकः) என்ற வடமொழிச்சொல் நன்றாய்ச் சமைத்தல் **(पच्-to cook)** என்ற முதற்பொருளிலிருந்து முதிர்தல் (maturing) என்ற பொருளையும் பின் முதிர்தலினாலுண்டாகிற தக்க பருவம் (attainment of perfection or fit state by maturing) என்ற பொருளையும் குறிக்கின்றது. உயிரானது தீவினை நல்வினைகளை மாயா தத்துவங்களாகிய உடல் உட்கருவிகளால் (தனுகரணங்களால்) கட்டினைக் கொடுக்கிற மறைப்புவலி (திரோதான சத்தி)யின் வயப்பட்டுச் செய்கின்றது. முன்னே கூறியபடி மறைப்பு வலியாவது உயிரை அநாதியாய்ச் சேர்ந்துள்ள ஆணவமலத்தின் வழியாய்த் தொழிற்படும் அருளாகும். ஆகவே உயிரானது மறைப்பு வலியின் வயப்பட்டு ஒழுகுகிற உலக நெறியில் மலத்தாற் செலுத்தப்பட்டுத் தீவினையையும் அருளால் தூண்டப்பட்டு நல்வினையையும் செய்கின்றது. தீவினை செய்தற்குக் காரணம் அறியாமை என்று சொல்லப்படுகின்ற மயக்கமுள்ள உலக அறிவு. நல்வினை செய்தற்குக் காரணம், நேரே அருளாலுண்டாகும் உண்மை அறிவை நோக்க அறியாமையாயிருப்பினும் மேற் சொன்ன மயக்க உலக அறிவை நோக்கத் தெளிவான உலக அறிவு ஆகும். மேலே இறப்புப்பின் வாழ்வுநிலையிற் கூறியபடி நிலஉலக வாழ்விற் செய்யப்பட்ட தீவினை நிரய உலக வாழ்வில் துன்பம் பயத்தலை உயிர் அறிந்து உணர்தலினால் அதற்குத் தீவினையை விலக்கும் அறத்திறனாகிய எதிர்மறை அறம் (negative virtue) உண்டாகிறது. அவ்வாறே நிலஉலக வாழ்விற் பயன் குறித்துச் செய்யப்பட்ட நல்வினை துறக்க உலக வாழ்வில் இன்பம் பயத்தலை உயிர் அறிந்து உணர்தலினால் அதற்கு நல்வினையை மேற்கொள்ளும் அறத்திறனாகிய உடன்பாட்டு அறம் (positive virtue) உண்டாகிறது. இவ்வாறே உயிருக்கு ஒவ்வொரு நில உலக வாழ்விற்குப் பின் நிரய உலக வாழ்விலும் துறக்க உலக வாழ்விலும் துன்ப இன்பங்களின் உணர்ச்சியால் தீமையை விலக்குந் திறனும் நன்மையை மேற்கொள்ளுந் திறனும் வலுத்து வளர்ந்து தீவினை செய்தல் குறைந்தும் நல்வினை செய்தல் ஏறி

(தொடரும்)



மின்சார வல்லுநராகிய
எடிசன் தாம் இயற்றிய புதுப்புனைவுகளின்
நடுவண் இருத்தல்

9/5

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ	மெய்கண்டான்யாண்டு-எாஅ வைகாசித் திங்கள் 1931ஆு மேமூ—ஜூன்மூ	பரல் ரு

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

(பதவுரை.)

மண்ணில்—(இந்த) நில உலகத்தில்

வைகலும்—நாள் தோறும்

நல்ல வண்ணம் வாழலாம்—நல்ல வகையாக வாழலாம்

எண்ணில்—நினைத்துப்பார்த்தால்

நல்லகதிக்கு—நன்மையான வீடுபேற்றினை அடைதற்கும்

யாதுமோர் குறைவிலை—யாதொரு குறைவும் இல்லை.

(ஏனென்றால்)

கண்ணில் நல்லஃது—கண்ணினாற் பார்க்க அழகாயிருப்பவைக ளெல்லாம்

உறும்—சேர்ந்திருக்கின்ற

கழுமல வளநகர்—கழுமலம் என்னும் செழிப்பான சீகாழி நகரின் கண்

பெருந்தகை—மிக்க பெருமையுடையோனாகிய சிவபிரான்

பெண்ணினல்லாளோடு=உயிர்களுக்கு இன்பம் தழைக்கச் செய்கின்ற அருள் ஆற்றலாகிய உமாதேவியோடு

இருந்தது—இருக்கின்றான்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தலாவது முதலாவது ஒருவன் உலகில் கட்டு நிலையில் (பெத்த நிலையில்) மலத்தின் வழி நின்று உதவி செய்யும் மறைப்பு வலி (திரோதான சத்தி) யின் வயப்பட்டு அந்தத் திருவருளை நினைந்து உலகில் பயன் கருதிச் செய்கின்ற அறவழியில் வழாது நின்று அதனால் அடையத்தக்க உலக இன்பம் நுகர்ந்து வாழ்தலாகும. இந்தக் கட்டு நிலையில் ஒருவன் இவ்வாறு உலகில் வாழ்தல் அவன்பின் கட்டு விடுதிபெற்ற வீட்டு நிலையில் சிவபிரானுடைய திருவருளை நேரே பெற்றுச் சிவகதியாகிய வீடு பேற்றினை அடைதற்குத் தகுதியினைப் பெறுவிக்கும் வழியாகும்.

நல்ல வகையாக வாழ்தலாவது கட்டு நிலையில் உலக இன்பத்தை நெறிக்குட்பட்டு நுகர்ந்து வாழ்தலாகும். அவ்வாழ்வு பின் வீடு பேற்றினைப் பயத்தலால் நல்லது ஆகின்றது.

நல்லது என்பது நல்லஃது என ஆயுத அளபெடை பெற்றது.

கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்-கண்ணாற்பார்ப்பதற்குக் கண் கவரும் இனிய பொருள்களெல்லாம் காணப்படும் கழுமலநகர். சிவபிரானது அருள் பார்க்கப்படும் பருப்பொருள்களிலும் விளங்கப் பெற்ற நகர் என்பது கருத்து. இது நகரச்சிறப்பு.

பெருந்தகை அன்மொழித் தொகை.

இப்பாட்டினால் சிவபிரான் தன்னின் வேறல்லாததும், தன்னை விட்டுப் பிரியாததுமாகிய அருளாற்றலாகிய உமாதேவியோடு திருக்கோயிலில் திருமேனி கொண்டருளி யிருத்தலானது மக்களுக்கு உலகவாழ்வில் முதலாவது உலக இன்பத்தைக் கொடுத்துப் பருவ முதிரச்செய்து முதிர் பருவம் வந்தபின் நேரே அருள்செய்து வீட்டின்பத்தைக் கொடுத்து உய்விக்கும் பொருட்டேயாம் என்பது பெறப்பட்டது. மக்களாகிய நாம் இறைவனது அருளைப் பற்றி நின்று அதன்வழி ஒழுகுவோமானால் நமது அறிவுக்குத்தகுந்த இன்பத்தை அடைதல் திண்ணம்.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

நால்வரும் கல்வெட்டுகளும்

திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், B.A., B.L.

III. சுந்தர மூர்த்திகள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சரித்திரம் பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட சருக்கத்திலும், ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணத்திலும், கழறிற்றறிவார் புராணத்திலும், வெள்ளானைச் சருக்கத்திலும் கூறப்பெற்றிருக்கின்றது. மேலும் சிலர் கூறுகிறதைப் போல் பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணமே சுந்தரமூர்த்திகளுடைய புராணமாகவும் அதன் கிளைப் புராணங்களாக ஏனைய நாயன்மார்களுடைய சரிதங்கள் வந்தன ஆகவும் கொள்ள இடமுமுண்டு. அவரது சரித்திரத்தின் சில கூறுகள் கொடுமுடிப் புராணம், திருமுருகன்பூண்டிப் புராணம், அவிநாசிப் புராணம், திருத்துடிசைப் புராணம், பேரூர்ப் புராணம் முதலான நூல்களிலும் சுந்தரர் வேடுபறி முதலான சிறு நூல்களிலும் காணலாம். கர்ண பரம்பரைக் கதைகளும் ஆங்காங்குச் சொல்லுவார்கள். அவருடைய பெருமையை நால்வர் நான்மணி மாலையில் காணலாம். அவர் அருளிய தேவாரப் பதிகங்களிலிருந்து சரித்திரப் பகுதிகளை உட்சான்றுகளாகக் கொள்ளலாம்.

சுந்தரமூர்த்திகள், அப்பர் சம்பந்தர் என்ற இரு பெரியார்களுக்குப் பின்னர் இருநூறு ஆண்டுகள் கழித்து அவதரித்தனர் என்று கருதப்படுகின்றூர். அப்பர் சம்பந்தர் காலத்தில் ஜைனமேம்பாடு அதிகமாக இருந்து அதனோடு அப்பெரியார்கள் வாதாடி வெல்ல வேண்டி யிருந்தது. அவர்கள் காலத்திலேயே அம்மதம் தலையெடுக்க முடியாதபடி அமிழ்ந்து விட்டது. ஆகவே அவர்களுக்குப் பின்னர் இருநூறு ஆண்டுகட்குப் பின் அவதரித்த சுந்தரர் காலத்தில் சமண ஆதிக்கம் இருக்கவில்லை. ஏதோ ஒன்றிரண்டு இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் அம்மதத்தைப்பற்றிச் சுந்தரர் கூறவும் இல்லை. சுந்தரர் அவதரித்த போது பிற மதங்களைக் கண்டிக்க வேண்டிய அவசியம் இன்றிப்

பல அற்புதங்களை இயற்றிச் சிவபெருமான் அருளை வியந்து சைவ சமயத்தைப் பரவச் செய்வதே அவர்தம் ஜீவிய காரியமாகக் கொண்டனர்.

சுந்தரமூர்த்திகள் தமிழ் நாட்டிலே நடுநாடென்னும் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்ற தலத்தில் அவதரித்தவர். இத்திருநாவலூர் அப்பர் சுவாமிகள் அவதரித்த திருவாமூருக்குச் சமீபத்தில் தற்காலத்தில் திருநாமநல்லூர் என்ற திரிபுப் பெயரோடு விளங்குகிற ஓர் ஊர். அவ் ஊரில் அவர் ஆதிசைவ குலத்தில் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் பிறந்தவர். நம்பி ஆரூரர் என்ற பிள்ளைத் திருநாமம் பூண்டு ஒரு நாள் தெருவில் விளையாடிக்கொண் டிருக்கையில் அவ்வழிச் சென்ற அந்நாட்டரசன் நரசிங்கமுனையர் அவர்மீது ஆசையுற்று அவர் தாய்தந்தையர் அனுமதி பெற்று அவரை அபிமான புத்திரராக வளர்த்து வந்தார். ஆரூரருக்கு வயது வந்த காலத்தில் அடுத்த ஊரான புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியரின் புதல்வியை மணம் பேசி மணப் பந்தரில் மணச் சடங்குகள் நடத்தத் தொடங்கினர்கள். அப்போது ஒரு முதியவர் தோன்றி இம் மணமகன் தன் அடிமை என்றும் தன் அனுமதியின்றி மணம் செய்துகொள்ளக் கூடாது என்றும் தடுத்தனர். அதைக் கேட்டுப் பரிகசித்து நம்பி ஆரூரர் "அந்தணருக்கு அந்தணர் அடிமையாதல் உண்டோ? இவன் பித்தனே?" என்று மறுத்தனர். என்றாலும் முதியவர் ஓர் ஓலையைக் காட்டித் தன் வாதத்தை நிரூபித்தார். ஆரூரர் அவ் ஓலையைக் கிழித்தெறிந்தும் முதியவர் விடாதவராய் வாதாட, அவர் சொன்ன ஊராகிய வெண்ணெய் நல்லூருக்குச் சென்று அவ்வூர்ச் சபையோரிடம் முறை சொல்ல, அவர்களும் எல்லாம் ஆராய்ந்து முதியார் வாதத்தை ஏற்றுக் கொண்டார்கள். உடனே ஆரூரர் முதியவரை "உமது வீடு எது?" என்று கேட்க, அவர் அவ்வூர்ச் சிவாலயத்திற்கு இட்டுச் சென்று அருட்டுறை என்ற அவ்வாலயத்துள் மறைந்தருளினர். உடனே நம்பி ஆரூரர் அச்செய்தியெல்லாம் ஈசன் தன்னை தடுத்தாட்கொள்ளச் செய்ததே என்று வியந்து பித்தனைப் போல் திருவிளையாடல் செய்ததினால் அப்

பெயர் கொண்டே "பித்தா பிறை சூடி" என்று பாடினர். இத் தேவாரத்தில் அருட்டுறை என்ற ஆலயத்தின் பெயர் வருதல் காண்க. அதுவரையில் ஈசன் ஞாபகமின்றி அப்போது வேறு யாரும் பெறலாகா அருள் தாம் பெற்றதை,

> "நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னை
> பேயாய்ப் பிறந்தெய்த்தேன் பெறலாகா அருள் பெற்றேன்."

என்று கூறி வியந்துள்ளார். ஈசனுக்கு அடியனாகி மணம் நின்று விடவே அப்படியே ஈசனன்பு இழுக்க ஆலயங்கள் தோறும் சென்று திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு ஈசனை வழி பட்டுச் சென்றார்.

அவ்விதம் பல தலங்களைத் தரிசித்துச் செல்லுகையில் சித்த வட மடத்தில் அவர் நித்திரை செய்யும்போது ஈசனுடைய திருவடி தீட்சை கிடைத்தது. அதனை வியந்து

> "எம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல் வைத்திடும் என்னும்
> ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்."

என்று பாடியுள்ளார். பிறகு சிதம்பரத்தில் சபாநாதரைத் தரி சிக்கையில் திருவாரூருக்கு வரச் சொல்லி அருளுண்டாகப் பல தலங்களையும் தரிசித்து விட்டு அங்குச் சென்றனர். சுந்தரர் தாம் வெளிப்போந்த கோலமான மணங்கொண்ட கோலத் துடனே இருந்தார். உலகத்தோரும் அவரைத் தம்பிரான் தோழர் என்று அழைத்தனர். திருவாரூரில் வான்மீகநாதரைத் தரிசித்து வருகையில் அவ்வாலயத்தே நாடோறும் தரிசித்து வந்த பரவை யார் என்ற நங்கையைக் காண, இருவரும் காதல் கொண்டார் கள். அன்று முதல் ஈசன் அருள்பெற்று ஊரார் சம்மதிக்க மணம் பூண்டு இருவரும் ஒருமிக்க வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார்கள் வீற்றிருந்த தைக்கண்டு அவர்களுக்குத் தான் அடியன் என்று காட்டத் "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என்ற திருத் தொண்டத்தொகை பாடினர். இப்பதிகத்தினல் அவருக்கு முன் னல் அவதரித்த சகல சிவனடியார்கள் பெயர்களும் நிலை நிறுத் தப் பெற்று அழியாது நின்றன. இப்பதிகத்தை ஆதாரமாக்கிக்

கொண்டுதான் நம்பியாண்டாரும் சேக்கிழாரும் நாயன்மார்கள் சரிதங்களை வரைய ஆரம்பித்தார்கள்.

ஒருகால் நாட்டில் பஞ்சம் உண்டாக, அடிகளுக்கு உணவுக்கு அளித்து வந்த குண்டையூர்க்கிழார் என்பவர் வருத்தமுற, ஈச னருளால் நென்மலையைப் பெற்றார். அதனைத் தம் தேவாரத் தில் "குண்டையூர்ச் சில நெல்லும் பெற்றேன்" எனக் குறித் துள்ளார். பிறகு கோட்புலி நாயனார் என்ற வேளாளர் தம் இருமக்கள் சிங்கடியார், வனப்பகையார் என்ற பெண்மணிகளை ஏற்றுக்கொள்ளக் கேட்க அவர்களை தம் மக்களாகப் பாவித்துத் தம் தேவாரத்தில் அவர்களைச் "சிங்கடியப்பன்" "வனப்பகையப் பன்" என்ற சொற்களால் பாடிவைத்துள்ளார். அவர்க்கு மக்கள் மீதுள்ள அன்பை இஃது எடுத்துக் காட்டுகிறது. அடிக்கடி ஈச னைப் பாடிப் பொன் பெற்றுப் பரவையாருக்குக் கொடுத்து வந் தனர்.

பிறகு பல தலங்களையும் தரிசித்துத் தொண்டை நாடு சென்று திரு ஒற்றியூரை அடைந்தனர். அங்கே கன்னிமாடத் திருந்த சங்கிலியாரை ஆலயத்தில் கண்டு ஆசையுற்று மகிழடி யில் சபதம் செய்து மணம் செய்துகொண்டனர். இவ்வுற்சவம் திருவொற்றியூரில் இன்னும் நடைபெறுகின்றது. பிறகு திருவா ரூரை நினைந்து தெற்கே சென்றனர். சபதம் தவறினதால் கண்ணை இழந்து ஈசனைத் துதித்தலாய் மறுபடியும் அதைப் பெற் றனர். பின்னர் திருவாரூர் அடைந்து பரவையாரிடம் செல்ல, அவர் மறுத்ததினால் ஈசனைத் துதிக்க, அவனருளால் ஊடல் தவிர்ந்து இருவரும் இன்புற்றனர். அப்போது ஏயர்கோன் கலிக்காமர் இச்செய்தியைக் கேட்டு சினமுற்றிருக்க அவர்க்குச் சூலைநோய் வந்த காரணத்தைக் கொண்டு இருவரும் நட்புற் றனர்.

அப்போது சேரநாட்டில் கொடுங்கோளூரில் அரசாண் டிருந்த சேரமான் பெருமாள் நம்பி ஆரூரரைக்கண்டு நட்பு பூண் டனர். இருவரும் பல தலங்களைத் தரிசித்துச் சேரநாடடைந்து சிலகாலம் வசித்த பிறகு ஆரூரர் திருவாரூர் அடைந்தனர். மறுபடியும் அவர் கொங்கு நாடடைந்து அவிநாசியில் முதலை

வாய்ப் பிள்ளை உமிழச் செய்தனர். அதனைத் தம் தேவாரத்தில் "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்று குறித்திருக்கிறார். பின்னர் சேரநாடு சென்று சேரமானிடம் பெற்ற பொருளைத் திருமுருகன்பூண்டியில் பறிகொடுத்து "எல்லைகாப்ப தொன்றில்லை யாகில் நீர் எத்துக்கிருந்தீர் எம்பிரானீரே" என்று பாடிப் பொருள் மீண்டும் பெற்றார். பிறகு சேரநாடு சென்று சேரமானோடு சிலகாலம் இருந்து ஈசனைப் பாடி இருவரும் கைலாயம் அடைந்தனர். இச்சரித்திரத்தில் இயற்கைக்கு மாறாகத் தோன்றும் பல அற்புதச் செயல்கள் காணப்படுகின்றன. அவைகளை எவ்விதம் நம்புவது என்று சந்தேக மிருப்பினும் அச்செயல்களைக் குறிக்கும் பாடல்களிலுள்ள வாசகங்களைக் கண்ட பிறகு அவைகளை மறுக்காத நிலையில் இருக்கிறோம். இவ்வற்புதச் செயல்கள் ஒரு புறமிருக்க, இவர் பாடல்களில் அக்காலத்து நடவடிக்கைகளைக் குறிக்கும் வாசகங்கள் அதிகம் இல்லாவிடினும் சிலவாவது கிடைக்கின்றன. அவைகளை இனி ஆராய்வோம்.

1. நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினும் குணமாக் கருதும்
கொள்கை கண்டுநின் குறைகழ லடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே.

—திருப்புன்கூர்.

நாவின் மிசை யரையன் ஞேடு தமிழ் ஞான சம்பந்தன்
யாவர் சிவனடியார்களுக் கடியான் அடித்தொண்டன்.

—திருக்கேதாரம்.

இவைகளிலும் திருத்தொண்டத் தொகையிலும் திருநாவுக்கரசர், ஞான சம்பந்தர்: இவர்களைப் பாடியுள்ளதால் அவர்களுக்குப் பின் சுந்தரர் தோன்றியுளல் வேண்டும்.

2. கார்கொண்ட கொடைக்
கழறிற்றறி வார்க்கு மடியேன்"

—திருத்தொண்டத் தொகை

என்றதில் கழறிற்றறிவார் என்றது சேரமான் பெருமாள் நாயனருடைய பெயர். "கடலங்கரைமேல் மகோதை அணியார் பொழில் அஞ்சைக் களத்தில்" சுந்தரரும் சேரமானும் பல காலம் வசித்தவர்கள். அங்கே இருவரும் கைலாயம் சென்ற போது சுந்தரருக்கு வெள்ளையானை வர, அதைக்குறித்து அவர்,

"மண்ணுலகிற் பிறந்து நம்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுத தொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை யுத்தமனே."

என்று பாடியிருக்கிறுர். அக்காலத்தில் சேரமான் பாடிய கைலாய நாதர் ஆதியுலாவும் நமக்குக் கிடைத்திருக்கிறது. அச் சேரமான் கோடை வள்ளலாதலால் மதுரை இறையனுர் திரு முகப்பாசுரம் கொடுக்கப் பாணபத்திரருக்குச் சேரமான் பொரு ளுதவி புரிந்தார். அக்காலத்து மதுரை மன்னன் பெயர் வரகு ணன். சிலாசாசனங்களின்படி இரண்டு வரகுணர்கள் பாட்டனும் பேரனுமாக இருந்திருக்கிறுர்கள். ஒருவன் 840க்கு முந்தியும் மற்றவன் 862-லும் இருந்தவர்கள். இரண்டாம் வரகுணன் திருப்புறம்பியம் என்ற இடத்தில் அபராஜிதனேடு போர் புரிந்து திருவிடை மருதூரில் தங்கிச் சிவபிரானிடம் அளவிறந்த பக்தி செலுத்தியவன். இவன் பக்தியின் மேன்மையை வாதவூரடி கள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி இவர்கள் வியந்திருக் கின்றனர். அப்பரம பக்தனைப் பற்றிச் சுந்தரர் பாடாததினுல் அவனுக்கு முந்தி சுந்தரர் இருந்திருக்க வேண்டும். ஆகவே சுந்தரர் முதல் வரகுணன் காலத்தவராக இருத்தல் வேண்டும்.

3. மேலும் சேர வம்சத்தில் உதித்தவர்களில் கடைசி மன் னன் சேரமான் பெருமாள் நாயனுர். இவர் மகம்மதிய மதத் தைத் தழுவிக் கடல்மீது மெக்காவிற்குச் சென்றதாக ஒரு கதை வழங்குகிறது. பர்கூர் என்ற இடத்தில் ஒரு பள்ளிவாசலும் இவர் கட்டினதாக கர்ண பரம்பரை உண்டு. ஆனல் பெரிய புராணத்தின்படி ஞானஉலா முதலியவை பாடிச் சுந்தரரோடு இவர் கைலாயம் சென்றதாகத் தெரிகிறது. சுந்தரரும் கைலா யத்தில் பாடிய திரு நொடித்தான் மலைப் பதிகத்தை

"ஆழி சூழ் அரையா
அஞ்சையப்பர்க் கறிவிப்பதே"

என்று சொல்லிக் கடலரசனிடம் அனுப்பியதாக அவர் வாக்காலே தெரிகிறோம். ஆகையால் கடல் மார்க்கமாகச் சென்றதை மெக்காவிற்குச் சென்றதாகப் பாவித்தல் கூடும் அல்லவா? சேரமான் ஆட்சி விட்டுச் சென்றது 825 கி. பி. என்பர். இது கொல்லம் ஆண்டின் ஆரம்பமாகும்.

கொல்லமாண்டிற்கு வேறு காரணம் கூறப்படினும் சேரமான் கைலாயம் சென்றது ஒரு முக்கிய காரணம் ஆகும். ஆகவே சுந்தரரும் 825-க்குச் சமீப காலத்தில் கைலாயம் அடைந்திருக்கலாம்.

4. "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கு மடியேன்"

என்று சுந்தரர் நிகழ்காலத்தில் பாடியுள்ளதால் காடவன் அல்லது பல்லவ அரசன் கழற்சிங்கர் என்பவர் அவர் காலத்தில் இருந்திருக்க வேண்டும். பல்லவர்களில் கோப்பெருஞ் சிங்கன் முதலாக "சிங்கன்" இறுதி பெற்ற பெயர்கள் உண்டு. அவன் பிற்காலத்தில் ஆண்டவன். 8, 9 நூற்றாண்டுகளில் இவ்வித சிங்கப்பெயரும் கழல் என்ற சுத்தத் தமிழ்ப் பெயரும் கொண்ட பல்லவ நாமங்கள் கிடையா. ஆகவே இப்பெயர் ஒரு காரணப்பெயராக இருத்தல் வேண்டும். அக்காலத்தில் அரசு புரிந்த பல்லவன் பெயர் நந்திவர்மன். தொண்டைநாடு, நடுநாடு அவன் ஆட்சியில் இருந்தன. அதை ஒட்டித்தான் கச்சி மேற்றளிப் பதிகத்தில் சுந்தரர் "பாரூர் பல்லவனூர் மதிற் காஞ்சிமாநகர்வாய்" என்று பல்லவரைப் பெருமைப்படுத்திப் பாடி யிருக்கின்றார். அந்நந்திவர்மனைக் கி. பி. 804-ல் ராஷ்டிர அரசன் கோவிந்தன் III என்பவன் படையெடுத்து வெற்றி பெற்றுக் கப்பம் வாங்கி வந்தான். அப்போது நந்திவர்மன் செல்வாக்கு குறைய, அவன்கீழ் இருந்த சிற்றரசர்கள் அவனுக்குத் திறை கொடுக்க மறுத்திருப்பார்கள். இதனைச் சுந்தரர் கோயிற்றிருப் பதிகத்தில்,

"மண்ணுலகங் காவல்பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலம்"

என்றதில் குறித்திருக்கின்றார். ஆகவே சுந்தரர் அவ்வரசன் காலத்தினர் என்று கூற இடம் இருக்கிறது. இவ்வரசன் சிவ பக்தி கொண்டவன். இவனே ஆலம்பாக்கம் கைலாசநாதர் ஆல யத்தில் ஒரு இலிங்கம் தாபித்து அந்த இலிங்கத்திற்கு நந்தி இலிங்கம் எனப்பெயர் தந்தவன். (723/109) இதைக்கொண்டு சுந்தரர் இவ்வரசனை அடியார்களில் ஒருவனுகச் சேர்த்துப் பாடியிருக்கக் கூடும். ஆனால் கழற்சிங்கன் இலிங்கம் தாபித்த தாகப் பெரிய புராணத்தில் சொல்லக்காணேம்.

5. மேலும் கழற்சிங்கன் இந்த நந்திவர்மன் அல்லன் என் றும் இரண்டாம் நரசிம்மன் என்ற ராஜசிங்கன் என்றும் கூறு வர். இவ்வரசன் காஞ்சி கைலாசநாதர் கோயிலையும், ஐராவதேசு வரர் ஆலயத்தையும், மாமல்லபுரம் ஆலயங்களையும் கட்டினவன். ஆகவே, இத்தனைச் சைவத்தொண்டு செய்தவனே கழற்சிங்கரா யிருக்கலாம் என்பர். ஆனல் பெரிய புராணம் அக்கழற்சிங்கர் ஆலயம் எழுப்பினதாகக் கூறவில்லை யாதலாலும், இராஜசிங் கன் "திறைகொடா மன்னர்" தன்கீழ் இருக்கத்தக்க நிலையில் இல்லாது மிருந்த பராக்கிரமசாலி ஆதலாலும், அவனுட்சியில் குழப்ப மில்லாதிருந்ததினுலும் சுந்தரர் காலத்து அரசன் இந்த இராஜசிங்கனுயிருத்தல் ஆகாது என்று எண்ண இடம் ஏற் படுகிறது.

6. சேரமான் பெருமானும் சுந்தரமூர்த்திகளும் மதுரை சென்றபோது அங்கு மாமனர் அகத்திற்கு வந்திருந்த சோழனை யும் அவன் மாமனரான பாண்டியனையும் சந்தித்ததாகச் சேக்கி ழார் "தென்னவர் கோன் மகளாரைத் திருவேட்டு தொன் மதுரை நகரின்கண் ணினிதிருந்த சோழனர் முன்னரே அன்ன வர்க ளுடன்கூட அணையவருங்கூடி மன்னுதிரு ஆலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார்" என்று கூறுகிருர். ஆகவே, சோழ ரும் பாண்டியரும் அக்காலத்தில் நட்போடு வாழ்ந்தார்கள்

எனத் தெரிகிறது. அக்காலத்திற்கு முந்தி பல்லவ ஆட்சி சிறப்புற் றிருந்தது. சோழ பாண்டியர் பலவீன முற்றிருந்தார்கள். ஆகவே பல்லவரை வெல்லும் பொருட்டு உறவும் நட்பும் சோழ பாண்டியர்கள் கொண்டிருக்கலாம். அவ்விதம் கொண்டுதான் சிறிது காலத்திற்குள்ளாக பல்லவ சார்வபௌமத்தைத் தொலைத்தார்கள். உதயேந்திரச் சாசனங்களில் சோழபாண்டியர்கள் பல்லவர்கள்மீது நிம்பவனம், சூதவனம், அழுந்தூர், மண்ணை, வேம்பில் முதலான இடங்களில் பொருதார்கள் என்று கண்டிருக்கிறது. அக்காலம் 850 கி. பி. என்று ஊகிக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தை ஒட்டியும் சுந்தரனார் "பல்லவர்க்குத் திறைகொடா மன்னரை" என்ற அடி கூறியிருக்கலாம்.

7. இளவயதில் சுந்தரரை ஆதரித்த அரசன் நரசிங்க முனையரையர். அவர் நாடான திருமுனைப்பாடி நாட்டுஅரசர்கள் முனையரையர்கள் அல்லது முனையதரையர்கள் எனப் பட்டம் பெறுவார். அவ்வம்சத்தில் நரசிம்மன், இராமன் என்ற பெயர்கள் முறையே இடுவது வழக்கம். திருநாவலூர்ச் சாசனப்படி (356/02·சாசனம்) 954 கி. பி. யில் குலமாணிக்கன் இராமன் என்பவன் முனையதரையனாக இருந்தான். அவன் தகப்பன் நரசிம்மனாகவும், பாட்டன் இராமனாகவும், முப்பாட்டன் நரசிம்மனாகவும், இருந்திருக்கவேண்டும். அந்த நரசிங்க முனையதரையன் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னிருத்தல் வேண்டும். அதாவது கி. பி. 850க்கு முந்தி இருந்த நரசிம்ம முனையதரையனே சுந்தரரை ஆதரித்தவர் எனக் கொள்ளலாம். இக்கொள்கைக்கு ஆதாரமாக திருநாவலூர்ச் சாசனங்களில் 338/02, 356/02, 362/02, 369/02 இவைகளை எடுத்துக் காட்டலாம்.

II

முன்னமே சம்பந்தர் அப்பர் வரலாறுகளில் இராசராசச் சோழரும் அவர் மகன் இராசேந்திரச் சோழரும் உலகப் பிரசித்தி யடைந்து சோழர் ஆதிக்கத்தை வெளிநாடுகளுக்கும் செலுத்தித் தம் பிரபல்யத்தைப் பெருங் கோயில்கள் எழுப்பி அவைகளிற் பதித்து வைத்திருக்கிறதாகச் சொன்னோம். அவ்வரசர்கள் தாங்கள் செய்த தான தருமங்களைப் பதிப்பித்தது

மாத்திரமே யன்றி சைவ சமயாசாரியர்களின் உருவங்களைப் பிரதிஷ்டித்தும் அவைகளுக்கு ஆபரணங்கள் முதலியவை தந்தும் தம் சைவாபிமானத்தை வெளிப்படுத்தி யிருந்தார்கள். அவ்வாசிரியர்களுள் சுந்தரமூர்த்திகளும் ஒருவராவர். சுந்தரமூர்த்திகளோடு நங்கை பரவை நாச்சியாருடைய உருவமும் ஸ்தாபித்தது நோக்கத் தக்கது. சுந்தரர் பெரும் ஆசாரியராகப் பாவிக்கப் பெற்றதுமன்றி அவருடன் வாழ்ந்த உருத்திர கணிகையரான பரவை நாச்சியாரையும் மானிடர் போற்றத் தக்க நிலையில் வைத்துப்பிரதிஷ்டை செய்ததை நோக்கினுல் ஆசாரியருடைய அந்த வாழ்க்கையை எந்த நிலையில் அக்காலத்து மக்கள் வைத்து நோக்கினுர்கள் என்று அறிய முடியும். ஒருகால் அக்காலத்திலேயே சுந்தரரை ஆலால சுந்தரரின் அவதாரமாகவும் பரவை நாச்சியாரைக் கைலாயத்துக் கமலினியின் அவதாரமாகவும் பாவித்தனர் போலும். ஏனெனில் வெறும் மானிட சொரூபமாகப் பாவித்திருப்பின் பரவைநாச்சியார் ஆலயத்தில் தாபிக்கக்கூடிய அப்பெருமை வாய்ந்த செய்கைகளைத் தம் வாழ்நாளில் நடத்தியதாகத் தெரியவில்லை. இந்த ஸ்தாபனத்திற்குப் பிறகு சுமார் 100 ஆண்டுகளுக்குள் அவரது சரித்திரம் எழுதின சேக்கிழார் சுவாமிகள் அவ்வித அவதாரக் கொள்கைகளைத் தழுவிச் சரிதம் எழுதி உள்ளதால், இராசராசர் காலத்திலேயே அக்கொள்கை மனிதர் மனதில் ஊன்றி இருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். மேலும் பரவைநாச்சியார் உருவம் மட்டும் தாபிக்கப்பெற்றுச் சங்கிலி நாச்சியார் உருவம் விடப் பெற்றதின் காரணம் அறியக் கூடவில்லை. சங்கிலி நாச்சியார் மணம் திருவொற்றியூரில் நடந்தது. அச்செய்தி தஞ்சை மட்டும் எட்டாததினுலோ, அல்லது பரவைநாச்சியார் சுந்தரரோடு வாழ்ந்தபடி நெடுங்காலம் சங்கிலி நாச்சியார் வாழவில்லை என்பதினுலோ, அல்லது பரவை நாச்சியார் வாழ்க்கையில் நெல் கொணர்தல், சிவபிரான் தூது செல்லல், செங்கல் தங்கம் ஆதல் முதலான அற்புதங்கள் நடந்தாற் போலச் சங்கிலியார் வாழ்க்கையில் நடைபெருததினுலே சங்கிலி நாச்சியார் உருவம் ஆலயத்தில் தாபிக்கப் பெறும் அளவு மகிமை பெறவில்லை போலும்.

மேற்கூறிய தாபனம் இராசராசர் I-ன் கடைசி ஆண்டான 1013-14 கி. பி.-யில் இராஜராஜேஸ்வர ஆலயத்துக் காணியாளரான ஆதித்த சூரியன் என்ற தென்னவன் மூவேந்த வேளான் என்ற பிரபுவினால் செய்யப்பட்டது. அச்செய்தி சுந்தரரைக் குறித்த மட்டில் அடியிற் கண்டவாறு செதுக்கப்பட் டிருக்கிறது.

(S 99 VA II No. 38)

உடையார் ஸ்ரீ ராஜராஜீசுரம் உடையார்க்கு ஸ்ரீ கார்பம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் ஸ்ரீ ராஜராஜீராசுரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளிவித்த செப்புப் பிரதிமங்கள் உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும் ரத்னங்கள் சரடு நீக்கித் தக்ஷிணமேரு விடங்கன் என்னும் கல்லால் நிறை எடுத்தும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை யெடுத்தும் கல்லில் வெட்டினபடி—பாதாதி கேசாந்தம் பதினேழு விரலே இரண்டு தொரை உசரமும் இரண்டு திருக்கையும் உடையராகக் கனமாக எழுந்தருளிவித்த நம்பி ஆரூரனார் ப்ரதிமம் ஒன்று, இவர் நின்ற இரு விரலரை உசரத்துப் பத்மம் ஒன்று இதனோடும்கூடச் செய்த எண்விரல் சமசதுரத்து மூவிரலே இரண்டு தொரை உசரத்து இவர் எழுந்தருளி நின்ற பீடம் ஒன்று பதினறு விரல் நீளத்து இரண்டு திருக்கை யுடையராகக் கனமாக எழுந்தருளிவித்த நங்கை பரவையார் ப்ரதிமம் ஒன்று இவர் எழுந்தருளி நின்ற இரு விரலே இரண்டு தொரை உசரத்து பத்மம் ஒன்று. இதனோடுங் கூடச் செய்த அறுவிரலே இரண்டு தொரை சமசதுரத்து மூவிரல் உசரத்து பீடம் ஒன்று,..............

....　　....　　....

....　　....　　....

இவனே நம்பி ஆரூரனார்க்குக் குடுத்தன—உருத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி ஐம்பத்தாறும் உருத்திராக்ஷம் ஐம்பத்தாறும் உட்பட நிறை எண் கழஞ்செய் ஒன்

பது மஞ்சாடிக்கு விலைகாசு இருபைத்தைந்து, இவனே நங்கை பரவையார்க்குக் குடுத்தன—திருக்கைக்காறை ஒன்று பொன் கழஞ்சரையாக இரண்டினாற் பொன் முக்கழஞ்சு திருக்காற் காறை ஒன்று பொன் கழஞ்சரையாக இரண்டினாற் பொன் முக் கழஞ்சு—மோதிரம் ஒன்று பொன் அரைக்கழஞ்செய் : மஞ் சாடியும் குன்றி

... ...

....

இவன் எழுந்தருளிவித்த நம்பி ஆரூரனார்க்குக் குடுத்தன-உருத் திராக்ஷம் பொன்னின் சுரிகட்டிற்று ஒன்றும் காண்படு கண் ணுங் கொக்கு வாயும் உட்பட நிறை கழங்செ எழுமஞ்சாடிக்கு விலை காசு மூன்று, இவன் எழுந்தருளிவித்த நங்கை பரவை யார்க்குக்குடுத்தன திருவொன்றுட்படப்ப ட்டைக்காறை ஒன்று பொன்முக்காலே குன்றி, இவன் எழுந்தருளிவித்த நம்பி ஆரூரனார்க்குநித்த விநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து உடையார் ஸ்ரீராஜராஜீசுரமுடையார் தேவதானம் வெண்ணி நக ரத்தார் யாண்டு இருபத்தொன்பதாவது வரை குடுத்த பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்துக் கல்லில் வெட் டின திருக்கம்பி ஒன்று பொன்கழஞ்சே மஞ்சாடியுங் குன்றி திருக்கம்பி ஒன்று பொன்கழஞ்சே மஞ்சாடி திரள் மணிவடம் ஒன்று பொன் இருகழஞ்சே மஞ்சாடியுங்குன்றி திருக்கைக் காறை ஒன்று பொன்கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றி திருக்காற்காறை ஒன்று பொன்கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியாக இரண்டினாற் பொன் முக்கழஞ்சே முக் காலே மூன்று மஞ்சாடி. இவன் எழுந்தருளிவித்த நங்கை பர வையார்க்குக் குடுத்தன: திருக்கம்பி ஒன்று பொன்முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி திருக்கம்பி ஒன்று பொன் முக் காலே இரண்டு மஞ்சாடி.''

இச்சாசனத்தில் சம்பந்தரையும் அப்பரையும் தாபித்து அப்பிரதிமைகளுக்குப் பத்மம் காறை முதலியவைகள் தந்திருந்த போதிலும் நம்பி ஆரூரருக்கும் நங்கை பரவையாருக்கும் அதிக மாகப் பொருள்கள் உதவினதையும் வரிசைக் கிரமத்தில் நம்பி

ஆரூரரையும் நங்கை பரவையாரையும் முதலில் வைத்துப் பிறகு திருநாவுக்கரையர் திருஞான சம்பந்த அடிகளையும் வைத் திருக்கும் முறையையும் கவனிக்கவேண்டும். பெரிய புராணத்தி லும் முதலில் சுந்தரர் வரலாறும் பின்னல் நாவுக்கரசர் வரலா றும் அதற்குப்பின் சம்பந்தர் வரலாறும் இருத்தல் காண்க. மற்றும் இறுதியில் அப்புராணம் சுந்தரர் வரலாற்றில் எஞ்சியது சொல்லுகிறுற்போல, இந்தச் சாசனத்திலும் சுந்தாருடைய எஞ் சிய அணிகள் கடைசியில் சொல்லப்பட் டிருப்பதும் காணலாம். இதைத் தவிரச் சுந்தாருக்குக் கொடுத்திருக்கும் பிராதானியத் தின் பொருள் விளங்கவில்லை.

மேலும் 41-ம் சாசனத்திலும் அதே ஆதித்த சூரியன் செய்த தருமங்களும் நம்பி ஆரூரனர், திருஞான சம்பந்த அடி கள் திருநாவுக்கரைய தேவர் என்ற வரிசைக் கிரமத்தில் சொல் லப்பட்டிருத்தலும் குறிபிடத் தக்கது.

மேலும் திருவாரூரில் தியாகராஜ சுவாமி சந்நிதியில்; உள்ள ஒரு கல்வெட்டின் பிற்பகுதியில் (73 of 90) S. I. I. Vol. IV & Vol II P. 153) வடமொழியில் மூவருடைய பிரதிமைகளும் அக் கோயிலில் தாபிக்கப் பெற்றிருந்த தாகவும் அவர்களுக்கு அன பாயன் என்ற குலோத்துங்கன் II என்ற அரசன் தருமம் செய்ததாகவும் கண்டிருக்கிறது. மூவர்களுடைய பெயர்களை வட மொழியில் பிரமபுரீசர் (சம்பந்தர்) வாகதிபதி (அப்பர்) ஸ்வஸ் வாமி மித்திரர் (சுந்தரர்) என்று கண்டிருப்பதோடு சுந்த ரரை ஆளுடைய பிள்ளையார் என்றும் அவர் தாயார் இசை ஞானியார் என்றும் அம்மாது சைவ சமயத்தில் ஞான சிவாச்சாரியர் குடும்பத்தில் கமலாபுரத்தில் (திருவாரூர்) பிறந்ததாகவும் கண்டிருக்கிறது. இதனல் இசைஞானியா ருடைய பிறந்த இடம் இன்னதென்ற அரும் செய்தியும் கிடைக் கிறது. மேலும் இவ்வரசன்தான் பெரிய புராணம் இயற்று வதற்காகச் சேக்கிழாருக்குப் பேருதவி புரிந்த அனபாயச் சோழன் என்றும் தெரிகிறது.

மேலும் இராஜராஜச் சோழர் காலத்திலேயே திருப்பதி

கம் பாடுவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்திருந்ததை முன்னமே சம்பந்தர் சரித்திரத்தில் கூறி யிருக்கிறோம்.

ஆகவே இக் கல்வெட்டுகளால் சோழர்களில் முக்கிய அரசர்கள் காலத்தில் சுந்தரருக்கும் அவர் தாயார் இசைஞானியாருக்கும், பரவை நங்கையாருக்கும் ஏற்பட்டிருந்த மதிப்பு, மகிமை, தெய்விகத்தன்மை இவைகளை நாம் செவ்வனே அறியக்கூடும். (தொடரும்)

குமரன் தலக் குறட் பா

[திரு. வ. சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள், M. A.]

ஐயடிகள் காடவர் கோன் நாயனர் திருவாய் மலர்ந்த க்ஷேத்திர வெண்பாவைப் படித்த நாள் முதல் குமரன் தலங்களுக்கும் இவ்வாறு ஒரு நூல் பெரியோர் யாருஞ் செய்திலரே என வருந்தினேன். சென்ற சிவராத்திரி தினம் திருநெல்வேலியிற் குறுக்குத்துறை என்னும் தலத்தைத் தரிசனஞ் செய்து மகிழ்ந்த பொழுது "எடுங்களத்தா என்று முன் ஏழைமட நெஞ்சே நெடுங்களத்தான் பாதம் நினை" என்னும் அடிகள் பாசுரம் நினைவுக்கு வர, குறுக்குத் துறை என்பது குமரன் திருவருள் கூடுவதற்குக் குறுக்குத் துறை (குறுக்கு வழி)யாகும் என்னுங் கருத்து உதிக்க, குறுக்குத் துறைக் குமரன் திருவருளையே துணையாகக் கொண்டு குமரன் திருக்கோயில் கொண்ட தலங்களைப் புகழ்ந்து "குமரன் தலக்குறட்பா" என்னும் இந்நூலை இயற்றினேன். ஆசை காரணமாக யாக்கப்பட்ட நூலாதலின் ஆன்றோர் அருவருக்காது நூலைப் படித்து மகிழ்வர் என மயிலவன் திருவருளை நாடுகின்றனன்.

காப்பு.

தம்பி முகவன் துணைசெய்வன் தன்னுடைய
தம்பி தலம்பாடு தற்கு.

1. திருப்பரங்குன் றந் சென்று சேவிப்போர் என்றும்
இருப்பரங்குன் சாமீப மே.

2. திருச்செந்திப் பிஞ்ஞகனைச் சேவிப்போர்க் கென்றுங்
கருச்சந்திப் பில்லையினி காண்.

3. திருவாவி னன்குடியைச் சிந்திப்போர் நிற்பர்
கருவாவி நீந்திக் கடந்து.

4. திருவே ரகத்தான் திருப்பெயரே என்றுங்
கருவே ரறத்தான் கழறு.

5. குன்றுதோ றாடுங் குமர எனத்துக்கங்
குன்றுதோ இல்லையோ கூறு.

6. பழமுதிர் சோலைப் பகவ! எனுமன்
பெழமுதிர் பத்தி யெழுமே.

7. தணிகைக்குச் சென்றால் தமியேன் வினைகள்
தணிகைக்கும் ஐயமுண்டோ சாற்று.

8. வெள்ளிகரம் வேணுமென்னும் வீணலைச்சல் வேண்டாதே
வேள்ளிகாம் போற்ற விரும்பு.

9. வள்ளிமலை வாழ்குமர வள்ளல்ப தாம்புயத்தை
உள்ளிமலை வாய்பிறவி யோர்ந்து.

10. கருவிரிஞ்சிச் சூழாக் கதியருள்வன் எந்தை
திருவிரிஞ்சைக் கோயிலமர் சேய்.

11. ஆண்டார்குப் பஞ்சேர்ந் தறுமுகவன் தாள்நெஞ்சிற்
பூண்டார்குப் பாயவினை போம்.

12. சமரகோட் டெப்பகடான் சாருமுனே அங்கை
குமாகோட் டநீதொழவே கூப்பு.

13. இளையனூர் சூதிற் கிறியிற் படாதே
இளையனூர் வேலூரை யேத்து.

14. பல்லக்கோட் டைப்புனைந்த பண்பன்சேய் வாழ்கின்ற
வல்லக்கோட் டைப்பதியை வாழ்த்து.

15. இருப்போரூர் வேண்டுதியேல் ஏழை மடநெஞ்சே
திருப்போரூர் நன்றெனவே தேர்.

16. மேருமங்கை சேர்ந்துவடி வேலன் கழலடிக்கே
சேருமங்கை சேர்வீர் சிவம்.

17. சேயூர்முருகன் திருப்புகழே சொல்ல என்றன்
வாயூறு மற்றிதுவாய் மை.

18. பெரும்பேறு வேண்டிடின் பேசுமின் என்றும்
பெரும்பேறு வாழ்முருகன் பேச்சு.

19. மலைமயிலங் கண்டு வணங்குபவர் என்றுந்
தலைமையிலங் கோங்கிடுவர் தாம்.

20. புள்ளிருக்கு வேளூர்ப் புலவன்முத் துக்குமரன்
உள்ளிருக்க இன்னலுண் டோ?

21. எந்தன் குடியாண்ட எந்தை குமரனமர்
கந்தன் குடிதொழுமென் கை.

22. இடைக்கழி வேலனையே ஏத்துமின் தீய
நடைக்கழி யாமை நலம்.

23. சிக்கலா னந்தஞ் சிதம்பரத்தின் செல்வனவன்
பக்கலா னந்தம் பயில்.

24. எட்டிகுடி கொண்டான் என்மனத்தே, நான்முகனைக்
குட்டிகுடி கொண்டான் கூத்து.

25. எண்கணுன் சேவடியே எப்போதுங் காண்பதுவே
கண்கணுன் பெற்ற கருத்து.

26. வயலூர் முருகன் மலரடிக்கே ஆட்செய்
இயலூர் மனம்பெறுநாள் என்று?

27. செங்கோடு செங்கோடு செங்கோ டெனச்சொல்லின்
எங்கோடு மோஎன் இடர்.

28. கன்னிமலை வேடர்வள்ளி காந்தன் விரும்பியுறை
சென்னிமலை சேர்வாய் தெரிந்து.

29. பட்டாலி வாழ்குமரன் பாதந் தொழுதுநசை
விட்டாலி டர்கள் விடும்.

30. கருதமலை பாலுண்ட காங்கேயன் வாழும்
மருதமலை வாழ்த்துமென் வாய்.

31. விராலி மலைமுருகன் வீடாம் எனச்சொல்
வராலிலை தண்மை மதி.

32. பழநித்தண் டாயுத பாணி கழலைத்
தொழநித்தஞ் சேருஞ் சுகம்.

33. வம்பிடுகீ நல்ல வழிகாண வேண்டிலின்னே
கும்பிடுகீ குன்றக் குடி.

34. பிரான்மலையிற் சேய்கழலைப் பேணிப் பணியத்
தரான்மலையிப் பொல்லாச் சடம்.

35. கோடும்பைக் குமரனையே கூறுவோர் நெஞ்சில்
இடும்பைக் கிடமே இலை.

36. ஒழுகுமலை மொக்குள் உடலமென் றோர்ந்து
கழருமலை கைதொழுவாய் கண்டு.

37. துருக்குத் துறையே குமர னருள்கூடக்
குறுக்குத் துறையாங் குறி.

38. இலஞ்சிக்குச் சென்றங் கிருத்தல் பிறவி
மலஞ்சிக்கு நீங்கும் வழி.

39. திருமலைவாழ் சேயின் திருவழகைக் காண்க
பொருமலையே போக்கும் பொருட்டு.

40. துள்ளியூர் பாம்பைத் தொடர்மயிலான் கூரயிலான்
வள்ளியூர் போற்று மகிழ்ந்து.

41. முதிர்காம மூடாது முந்திப் பணிவாய்
கதிர்காம வேலன் கழல்.

சிவஞான போதக் கருத்து

இரண்டாவது சூத்திரம்

மூன்றவது அதிகரணம்

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்கள். B. A.]

(௨௩௪-வது பக்கத் தொடர்ச்சி)

யும் வருகின்றன. தீவினையை விலக்கும் அறத்திறனும் நல்வினையை மேற்கொள்ளும் அறத்திறனும் சேர்ந்து முன் 81-வது பந்தியிற் கூறியபடி உயிரினுடைய நுண்மன உடலில் மனஅற நினைவுத்திறனும் (mental faculty) மனஅற உணர்வுத்திறனும் ஆக அமைந்து பின்வரும் நிலஉலக வாழ்வின் ஒழுக்கத்துக் கெல்லாம் அடி முதலாய் (basic source) உள்ளன. மிகுதியாய் நல்வினை செய்தல் ஏறி அதன் பயனை உயிர் மிக்க இம்மை மறுமை இன்பத்தை நுகருங்காலத்திலும்

அவ்வின்பம் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின் அதற்குத் தெவிட்டுதலை (Satiety) யுண்டாக்கித் துன்பமாக மாறுகின்றது. நல்வினை பயனுகவும் துன்பம் உண்டாதலை உயிர் அறிந்த பொழுது அதற்கு இதுவரை உள்ளே வெளிப்படாமல் அடங்கியிருந்த நிலையான இன்பத்தில் (latent desire for ever-lasting happiness) நாட்ட முண்டாகிறது. இந்த நாட்டம் வலுவடைந்த பொழுது உயிரானது நிலையான இன்பம் எனப்படும் பேரின்பம் பிறப்பு இறப்பு உள்ள காலம் நீங்கும் வரை உண்டாகாது என்று அறிகிறது. இவ்வறிவின் பயனுகத் தீவினையைப் போலவே நல்வினையும் பிறப்பு இறப்புக்குக் காரணமாயிருத்தலால் நல்வினை தீவினை இரண்டும் ஒப்புமையாக (சமமாக)த் தவிர்க்கக் கூடியவைகள் என்று உயிர் அறிந்து உணர்கிறது. உயிர் இவ்வாறு இருவினைகளையும் துன்பத்தைக் கொடுக்கிற பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாக அறிந்து உணர்ந்து அவற்றைத் தனது நுண்மன உடலில் ஒப்பாக (சமமாக) எண்ணும் நிலையே இருவினையொப்பு நிலையாகும். இவ்வாறு இருவினைகள் உலக இன்பம் முன்னிலையாக உயிரைத் தமது வயப்படுத்தி ஒழுகச் செய்யும் வலி முற்றிலும் இழந்து நிற்கும் தன்மையே வினைமலம் பரிபாகம் அடைதலாகும்.

8±. இனி மக்களுயிர் பிறப்பினுல் எவ்வாறு ஆணவமல பரிபாகம் அடைகிறது என்பது கருதுவாம். உயிரை அநாதியே சேர்ந்துள்ள ஆணவமலமே மூலமலம் எனப்படும். இந்த ஆணவமலம் மறைப்பு நீங்கும் பொருட்டு முதல்வன் தனது பேரருளினுல் உயிருக்கு உடல், உட்கருவி, உலகம் நுகர்வுப் பொருள்களை (தனுகரண புவன போகங்களை)க் கூட்டுவித்த பொழுது அது காலம் நியதி கலை வித்தை அராக தத்துவங்களால் இயக்கப் பெற்று முன் மலத்தினுற் றடைப்பட்டிருந்த செயல் அறிவு வேட்கைகள் சிறிது விளக்கம் அடைகின்றது. அப்பொழுதும் ஆணவமலமும் மாயா தத்துவங்களையும் இருவினைகளையும் துணையாகக் கொண்டு உயிரைத் தொழிற்படுத்துகின்றது. மாயா தத்துவங்கள் அருள் விளங்குதற்கும் ஆணவமலம் சேர்தற்கும்

ஒரே இடமா யிருத்தலினுலே தான் உயிர் ஒன்றுக் கொன்று இகலுந் தன்மைத்தான இருவினைகளைச் செய்கின்றது. உயிர் நிலஉலக வாழ்வில் இருவினைகளைச் செய்து அவைகளினு லுண்டாகிற நுகர்வுக் கருத்துப் பொருள்களை (materials of ideas of experience) மேலே இறப்புப்பின் வாழ்வு நிலைப் பகுதியிற் கூறியபடி நிரய உலக வாழ்விலும் துறக்க உலக வாழ்விலும் மனதிலே வேலை செய்து நினைத்து (சிந்தித்து) ஒரு நிலையுள்ள மனஅற நினைவுத் திறனையும் (mental faculty) மனஅற உணர்வுத் திறனையும் (moral faculty) அடைகின்றது. இந்த மனஅற நினைவுத் திறனுலும் மனஅற உணர்வுத் திறனுலும் உயிருக்கு ஆணவமலம் மறைப்புச் சிறிதுதான் நீங்கியுள்ளது. இன்னும் உளதாகிய மலமறைப்பு நீங்குவதற்கு உயிர் மீளவும் நில உலக வாழ்வுக்கு வந்து முன்தான் அடைந்த மனஅற நினைவுத் திறனும் மனஅற உணர்வுத் திறனும் நடைமுறையிற் செயற்பட்டு வலுவடைய வேண்டி யிருத்தலு மல்லாமல் இனி நிரய துறக்க உலகங்களுக்குக் கொண்டு போதற்கு, புதிதாகவும் உலக நுகர்வுக் கருத்துப் பொருள்களை (materials of ideas of wordly experience) சேர்த்தல் வேண்டும். உயிருக்கு நில உலக வாழ்வு நில உலகில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்குப் பள்ளிக்கூடம் போலும். மாணவன் கல்விகற்று முடியும்வரை பள்ளிக்கூடத்துக்குப் போதல் இன்றியமையாது வேண்டப்படுதல் போல உயிர் மேலும் மேலும் மனஅற நினைவுத் திறனும் (mental faculty) மனஅற உணர்வுத் திறனும் பெற்று தக்க பருவம் அடையும்வரை நில உலக வாழ்வுக்கு வந்து உலக நுகர்வை (worldly experience) அடைதல் வேண்டும். வண்ணுன் ஒருவன் அழுக்குப் புடவை யொன்றிலுள்ள அழுக்கைப் போக்குதற்கு அதனோடு உவர்மண் அழுக்கையுஞ் சேர்த்து வைத்து அழுக்குடன் உவர் மண்ணையும் ஒரு சேரப் போக்குதல் போல முதல்வனும் உயிரிடமுள்ள ஆணவமல அழுக்கைப் போக்குகிறதற்கு அம்மலத்துடன் மாயாமல அழுக்கையும் வினைமல அழுக்கையும் ஒன்று சேர்த்து உயிரைப் பக்குவப் படுத்தி உயிருக்குப் பரிபாகம் வந்த காலத்தில் ஆணவமல

அழுக்குடன் மாயாமல அழுக்கையும் வினைமல அழுக்கையும் ஒருசேரப் போக்குவன். ஆணவமல பரிபாகம் என்பது உயிருக்கு அநாதி கேவலத்தில் அறிவு வேட்கை செயல்கள் தொழிற்படாது தடுத்து அறியாமையைச் செய்யும் ஆணவமல வலியை மேலே கூறியவாறு தேய்த்துத் தேய்த்துக் கீழ்மடங்கச் செய்து கெடுத்தலாகும். பரிபாகம் என்ற சொல்லின் பொருள் முன் 83-வது பந்தியில் (para) விளக்கப்பட்டது.

85. மேலே கூறியவற்றால் மாந்தர்கள் முதல்வனது அருளைப் பெறுதற்குரிய பருவம் அடைதலுக்கு நில உலகக் கட்டு வாழ்வு இன்றியமையாது வேண்டப் படுவதென்பது பெறப்படுகின்றது. நில உலக வாழ்வும் அதற்குப் பின் நிகழும் நிரய உலக வாழ்வும் துறக்க உலக வாழ்வும் சேர்ந்தே மக்களுடைய உயிர் வளர்ச்சிக்கு (soul evolution)க் காரணமாயிருந்து அவர்களுக்கும் பாகம் வருவிக்கின்றன. முதல்வனது அருளை (அனுக்கிரக சத்தியை)ப் பெறுதற்குத் தக்க பருவம் உண்டாகும் வரை மக்கள் மறைப்புவலிவயப்பட்டு பிறப்பும் இறப்பும் அடைந்து வருகிறார்கள். ஆதலின் இப்பிறப்பு இறப்புக்கள் இயற்கை நிகழ்ச்சிகளா யுள்ளன. நில உலக வாழ்வு பயனுடையதா யிருத்தலுக்கு அஃது ஒரு குறியையும் அக்குறிக்கு ஏற்ற நெறியையும் அந்நெறிக்கு வாய்ந்த பண்புகளையும் உடையதாயிருத்தல் வேண்டும் என்று கூறுதல் அல்லாமல் ஒரு சாரார் கூறுதல்போல நில உலக வாழ்வு கிளிஞ்சிலில் வெள்ளிபோல பொய் (மித்தை) என்றும் அது தவிர்க்கப்பட வேண்டுமென்றும் சைவசமயங் கூறுகிறதில்லை. நிலஉலக வாழ்வானது "சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பள்ளி யெழுச்சிக் கடைசிப் பாட்டிற் கூறியிருத்தல் காண்க. இதனுடன் மூன்றாவது அதிகாரம் முடிந்தது.

———

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

அந்தணன் (கசு)

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

(பரல் ச, ௱௬௪-வது பக்கத் தொடர்ச்சி)

பண்டைத் தமிழ் மக்கள் கடவுளுக்கு வழங்கிவந்த சொற்களில் அந்தணன் என்ற சொல் ஒன்று. அச்சொல்லால் அவர்கள் கொண்டிருந்த கருத்துக்கள் யாவை என இக் கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. அந்தணன் என்ற பண்டைத் தமிழ்ச் சொல்லில் அடிச்சொல்லாய் விளங்குவது தண்மை என்பது. "தண்மை"க்கு முன்னிற்கும் அம் என்பது முன்னடைச் சொல் (prefix). பின்னிற்கும் அன் என்பது உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதி உருபு. தண்மை என்னும் பண்புப் பெயர் அம் என்னும் முன்னடையுடன் சேருங்கால் அந்தண்மை என்றாயது. அந்தண்மை என்பதனுடன் அன் சேர மை விகுதி கெட்டு அந்தணன் என ஆகியது.

3. தண்மை என்னும் பண்புச் சொல் குளிர்ச்சி என்று பொருள்படும். "தண்மைதான் குளிர்ச்சி தாழ்வு" என்பது சூடாமணி நிகண்டு. சில மலையிடங்கள் தவிரத் தமிழ்நாடு பொதுவாய் வெம்மையா யிருத்தல்பற்றித் தமிழ்நாட்டு மக்கள் இயல்பாகக் குளிர்ச்சியையே இன்பம் பயப்பதாக விரும்புகின்றார்கள். இங்கிலாந்து முதலிய குளிர்ந்த இடங்களில் வெம்மையானது இன்பம் பயத்தல் காண்க (warmth of feeling). ஆதலின் தண்மை என்ற சொல் இன்பம் என்ற பொருளில் அவர்களால் வழங்கப்பட்டு வந்தது. இன்பத்துக்கு முதலாயுள்ளது அன்பு ஆதலின் அஃது அன்பு என்ற பொருளிலும் வழங்கப்பட்டு வந்தது. 'தண்மை' அன்பு என்று பொருள்படும் அளி என்ற சொல்லுடன் சேர்ந்து தண்ணளி என ஒரு சொன்னீர்மைப் பட்டுப் பேரன்பு அல்லது அருள் என்ற பொருளில்

பண்டைத் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டு வந்திருத்தல் காண்க.

4. இரண்டாவது பந்தியிற் கூறியபடி அமைந்த அந்தணன் என்ற சொல்லினுள்ள அம் என்பது அழகு என்று பொருள்படும். ஆகவே அந்தணன் என்பது அழகாக அன்பு செய்கிறவன் என்று பொருள்படும். பண்டைத் தமிழ் நூல்களில் அந்தணன் என்று வழங்கப் படுதலன்றித் "தண்ணன்" என்று தனியே வழங்கப்படுதலில்லை. பண்டைத் தமிழ் அறிஞர் உயிர்களின் நிலைமை அறிந்து அதற்குத் தக்கவாறு அழகாக அன்பு செய்தலே நற்பயனுடையதாகும் என அறிந்திருத்தலே தண்ணன் என்ற சொல்லைத் தனியே வழங்காதிருத்தற்குக் காரணமாகும்.

5. அந்தணன் என்ற சொல்லாற் பெறப்படும் அழகாக அன்பு செய்தல் என்பது என்ன? அச்சொல்லில் என்ன கருத்துக்கள் அடங்கியுள்ளன என்பது கருதுவாம். ஒரு சலவைக் கல்லில் செதுக்கப்பட்ட உருவப் பொருளொன்று அழகுடையதாய்க் காணப்பட வேண்டுமானல் அதன் பல உறுப்புக்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமுள்ள அளவு உடையதாயும் அவ்வுருவப் பொருளின் மொத்த அளவுக்கு ஒவ்வொரு உறுப்பும் அதற்கு ஏற்ற அளவு உடையதாயும் இருத்தலே வேண்டும். அழகுப் பொருள் உயிர்ப்பொருள்களாக இருந்தால் உயிரில்லாத உருவப் பொருளுக்கு மேலே கூறியபடி உறுப்புகள் அமைந்திருத்தலுடன் உறுப்பு ஒவ்வொன்றும் அதற்கு உரிய தொழிலை மற்ற உறுப்புக்களின் தொழில்களோடொன்று பட்டியைந்து எல்லா உறுப்புக்களும் சேர்ந்த உடலுக்கும் அவ்வுடலில் நிலவும் உயிருக்கும் நலந்தரும்படி செய்தல் வேண்டும். அதுபோலக் கடவுள் எல்லா உயிர்களிடத்தும் ஒப்புமையான (சமமான) பேரன்பு உடையவனாயிருந்தாலும் அவ்வன்பு ஒருயிரிடத்துச் செயற்படும் பொழுது அவன் அவ்வுயிரினுடைய நிலைபை அறிந்து அது நலம் அடையும் வண்ணம் அதனுடனியைந்துநின்று அந்நிலைக்குத் தக்கவாறு அன்பு செய்கின்ருன். அன்பு அறிவின் வழி செயற்படவில்லையானல் நலம்

உண்டாகாது. இவ்வாறு எல்லாம்வல்ல கடவுள் தனது பேரன்பைப் பேரறிவின்வழிப் பேராற்றலினால் உயிர்களுக்கு நலம் பயக்கும்படி வழங்குதலே அழகாக அன்பு செய்தல் ஆகும். இந்தப் பேரன்பு, பேரறிவு, பேராற்றல்களே அவனுடைய இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்திகளாகும். இவைகள் தமிழில் முறையே வேட்கைவலி அறிவுவலி செயல்வலி என்று கூறப்படும். இவ்வாறு அழகாக அளவு செய்தலே மேலே கூறப்பட்ட அந்தண்மை ஆகும். இந்த அந்தண்மை செந்தண்மை என்றுங் கூறப்படும். கடவுள் இந்த அந்தண்மையை உடையவன் எனப் பண்டைத் தமிழ் அறிஞர் அறிந்து அவனை அந்தணன் என்ற பெயரினாற் கூறினர். மூதறிஞர் திருவள்ளுவ நாயனார் கடவுளை "அறவாழி அந்தணன்" அதாவது அறக்கடலாகிய அந்தணன் என்று திருக்குறள் முதல் அதிகாரம் 8-வது குறளிற் கூறினர். அறமின்றி அந்தண்மையும் அந்தண்மையின்றி அறமும் பயனுடையவாய் அமையா ஆதலின் அவர் அவ்வாறு கூறினர்.

6. கடவுளுடைய அந்தண்மைக்கு அவன் எல்லா உயிர்களும் மலத்தினின்றும் நீங்கித் தன்னைச் சார்ந்து பேரின்பம் அடைதல் போலாகும் என்ற அருள் நோக்கமே காரணமாகும். ஆதலின் பகுத்தறிவுடைய மக்கள் கடவுளை அருளுடையவன் என்று அவனிடத்தில் அதைச் செய்து வழிபடல் வேண்டுமே அன்றிச் சினமுடையவன் கொடுமைசெய்கிறவன் என்று நினைத்து அச்சத்துடன் வழிபடுதல் கூடாது. "அன்பருக்கு அன்பனே" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியபடி அன்பே அன்பை வருவிக்கும் தன்மை உடையது. இவ்வுண்மையை நன்கு அறியாத சிலர் உலகிற்கு அருளுடைய கடவுள் ஒருவன் தலைவனாயிருந்தால் நாம் இப்பொழுது உலகிற்காணுகிறபடி மக்களுக்குள் துன்பங்கள் உண்டாகுமா? என்று கேட்கிறார்கள். மக்கள் அறிவுப் பெருக்கம் அடைதற்கு அவர்களுக்குத் தாங்கள் அறிந்த வண்ணம் ஒழுகும் உரிமை கொடுத்த கடவுள் அவர்கள் தங்கள் அறிவை நல்வழியிற் செலுத்தி நன்மை செய்யாது தீவழியிற் செலுத்தித் தீமை செய்வார்களானால் அவர்களைத் தீய

வழியினின்று விலக்கி நல்வழியி லொழுகச் செய்தற்கு அருளி ஞல் அவர்களுக்கு வேண்டும் அளவில் மாத்திரம் துன்பங் கொடுக்கின்ருன். அது பற்றி அவனுடைய அருட்டன்மைக்குச் சிறிதும் இழுக்கு உண்டாகாது.

7. தமிழ் மறைகளில் அந்தணன் என்ற சொல் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்ட சில இடங்களை அடியிலே குறிப்பிடுவாம்.

1. அந்தணனைத் தொழுவா ரவல மறுப்பாரே

திருஞான சம்பந்த சுவாமிகள் திருக்கொடிமாடச்செங் குன்ரார்ப்பதிகம். ௧-வது பாட்டு

2. அரவஞ் சேர்சடை அந்தணன் அணங்கி ளேடமரு மிடம்

திருஞான சம்பந்த சுவாமிகள் திருக்கச்சி யேகம்பப் பதிகம். ௬-வது பாட்டு.

3. திருமார்பிற் புரிவெண்ணூ றிகழ்பூண்ட அந்தணனை

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாவடுதுறைத் திருத்தாண்டகம். ௰-வது பாட்டு.

4. அந்தணனே அருளாயடி யேற்கிட்டனங் கெடவே

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுது குன்றப்பதிகம். எ-வது பாட்டு.

5. அந்தணு வெனையஞ்சலென் றருளாயாரெனக்குறவமரர்களேறே

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறைப்பதிகம். ரு-வது பாட்டு.

6. அந்தணனுகி யாண்டு கொண்டருளி

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்—கீர்த்தித்திருவகவல். ௪௨-வது வரி.

7. அந்தணராமிவரா ருருறைவதென்றேன்

௧௧-வது திருமுறை பொன்வண்ணத் தந்தாதி ௪௬-வது பாட்டு.

8. இனிப் பண்டைத் தமிழ் அறிஞர்கள் அந்தணன் என்னும் சொல்லை மும்மலங்கள் நீங்கிக் கடவுள் அருள் விளங்கப் பெற்ற பெரியோர்களைக் குறிக்கவும் வழங்கி வந்

தார்கள். அத்தகைய பெரியோர்கள் கடவுளுடன் இரண்டறக் கலந்து அவனுடைய பண்புகளை உடையவர்கள் ஆதலாலும் அவர்கள் கடவுளே என வழிபடப்பாலராம் முறைமையின ராதலாலும் கடவுளைப் போலவே அந்தணர்கள் எனக் கூறப்பட்டனர். திருவள்ளுவ நாயனார் அவர்களைத் திருக்குறட் பாயிரம் 3-வது அதிகாரத்தில் நீத்தார், துறந்தார், பெரியார், நிறைமொழி மாந்தர், அந்தணர் முதலிய பெயர்களாற் கூறுகின்றார். அவர் அந்தணர் என்ற சொல்லுக்கு "எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுவார்" என 10-வது குறளிற் கட்டுரைத் தருளினார். "அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியாய்—நின்றது மன்னவன் கோல்" என்ற குறளில் அவர் அந்தணர் என்ற சொல்லை நீத்தார் என்ற பொருளிலும் வழங்கியுள்ளார்.

9. தமிழ் நாட்டிற்கு ஆரியர்கள் வந்த காலத்திற்கு முன் பண்டைத் தமிழர் அந்தணர் என்ற சொல்லைத் தங்களுடைய ஆன்மார்த்த வழிபாட்டிற்கும் பரார்த்த வழிபாட்டிற்கும் ஆசிரியரா யிருந்த ஆதிசைவ மறையவரைக் குறிக்க வழங்கி வந்தார்கள். பார்ப்பார் என்ற தமிழ்ச் சொல்லையும் அவர்கள் ஆதிசைவ மறையவரைக் குறிக்க வழங்கி வந்தார்கள். மாணிக்க வாசக சுவாமிகள் 'பார்ப்பான்' என்ற சொல்லைக் கடவுளைக் குறிக்கத் திருவாசகம் புணர்ச்சிப்பத்து ௧௦-வது பாட்டில் வழங்கியுள்ளார். திருவள்ளுவ நாயனாரும் 'பார்ப்பான்' என்ற சொல்லைத் திருக்குறளில் ஓரிடத்தில் மாத்திரம் (134-வது குறள்) வழங்கி யிருக்கிறார். ஆனால் மாணிக்கவாசக சுவாமிகளாவது திருவள்ளுவ நாயனாராவது பிராமணன் என்ற வடமொழிச் சொல்லை எங்கும் வழங்கவில்லை. ஆரியர்கள் தமிழ் நாட்டுக்கு வந்தபின் அந்தணன் என்ற தமிழ்ச் சொல்லும் பார்ப்பான் என்ற தமிழ்ச் சொல்லும் அவர்களைக் குறிக்கவும் வழங்கப்பட்டு வந்தன. பார்ப்பான் என்ற சொல் ஆரியர்களுக்கு வழங்கப் பட்டு வந்ததைத் திருமூல நாயனார் "பெயர் கொண்ட பார்ப்பான்" என்ற திருமந்திரப் பாட்டாற் குறிப்பிடுகின்றார்.

10. மேலே கூறியவாறு அந்தணன் என்ற தமிழ்ச் சொல்

முதலாவது கடவுளையும் பின் கடவுட்டன்மை அடைந்த பெரியோரையும் பின் ஆதிசைவ மறையவரையும் பின் ஆரிய மறையவரையும் குறிக்கத் தமிழ் நாட்டில் வழங்கப்பட்டு வந்தது காண்க.

11. இக்கட்டுரையிற் செய்யப்பட்ட அந்தணன் என்ற சொற்பொருள் ஆராய்ச்சியால் பண்டைத் தமிழ் மக்கள் கடவுளை அருள் உடையவன் என்று கருதி அன்புடன் வழிபட்டு வந்தார்கள் என்பது நன்கு புலனாகும்.

ஆய்ச்சியர் குரவை

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(ஒன்பதாஞ் சிலம்பு ௩0௯-ம் பக்கத் தொடர்ச்சி)

கோடிப்பாலை யிசையில், குரல் நரம்பாய மாயவன் இக்கூத்தில் முதன்மை கொண்டவனாயினும், இளி நரம்பாய வெள்ளை (முன்னவன்) யன்முன் அடங்கிப் பாடியாடுத லியல்பென்பதைக் குறிக்கவேண்டிப் பகுதி மாத்திரையாக வொலிக்க நேர்ந்தமையும், இளி நரம்பாய வெள்ளையன் தனது நிலைக்குத் தகுதியாக முதன்மை யொலி கொண்டு முழங்க நேர்ந்தமையும், கொண்டவன் வலக்கொண்ட துத்த நரம்பாய பிஞ்ஞை வலிய வொலி கொண்டு மல்லாட நேர்ந்தமையும், விளரி நரம்பாய இரேவதி முன்னவனாகிய வெள்ளையன் மனைவியாயிருந்தும் இளைய மைத்துனன் மனைவியாகிய பிஞ்ஞையின் முன் விளக்கமுறாமல் நிற்றல் கொண்டு தன்னொலி குறைந்தும் வேற்றொலி விரவியும் வலிமை யில்லாத மந்த சுரமாகப் பாட நேர்ந்தமையும், ருக்மணியும் வாருணியும் தம்மாற்றாள்களின் கொண்டாட்டத்தால் வாயடங்க நேர்ந்தமையும், அசோதை தனது மக்களின் ஆட்டபாட்டமும் மருமக்களின் கொண்டாட்டமுங் கண்டு கொண்ட குதூகலத்தால் மயங்கி நின்றுடுவதும் பொருந்திப் பொலிதல் கண்டு வியக்குங் கவினுடையதாம். இது

கொண்டு, அக்காலப் பெண்மக்கள் யாழிற் கையாள வேண்டிய பண்முறைகளையும், அம்முறைகளை வேளை யறிந்து வழங்கும் நேர்மைகளையும் நன்கறிந்துள்ளமை தெளியலாம்.

இங்ஙனம் நால்வரும் மங்தோச்சமத்துடன் பாட, எழுவரும் அடி பெயர்த்தாடத் தொடங்கினர். அப்பொழுது பாடிய பாட்டானது, அவர்களது ஆட்டத்திற் குகந்த சந்தத்தைக் கொண்டு, இடைக்குலக் கன்னியர் மாயவன்பாற் கொண்டமட்டிலா வன்பினை வெளிப் படுத்துவதா யிருக்கின்றது. இன்னும், அப்பாட்டு, குரவையாடு மகளிர்க்குக் கண்ணன்பாற் பேரன்பினையும், முல்லையங் தீங்குழலிசையின் சிறப்பினையும் நன்கு புகட்டுகின்றது. கன்று குணிலாக் கனியுதிர்த்த செய்தியும், கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த திருவிளையாடலும், பாம்பு கயிறுக் கடல் கடைந்த பண்பும் மாயவன் லீலா விபூதியைக் குரவை மகளிர் மனங்கொண்டு, கொண்டாட்டத்தில் உற்சாகங் கொள்ளச் செய்கின்றன. தொடக்கத்தில், குழலோசையின் மயங்கி மாயவனை மணக்க விரும்பிய பிஞ்ஞையை நோக்கி, அவள் தோழி கூறிய கூற்றினைப் பாடியது, நாடகத் தலைவனாகிய கண்ணபிரானையும், நாடகத் தலைவியாகிய பிஞ்ஞைப் பிராட்டியையுங் கொண்டாடி வழிபட்டதாகும் போலும். மேலும், அவர்கள், பிஞ்ஞைப் பிராட்டி, யமுனா நதியில் தன் தோழிமார்களோடு புனலாடுகையிற் கண்ணன் புகுந்து நடத்திய விளையாடல்களை விளக்கிப் பாடத் தொடங்கினர். "தொழுனைத் துறைவ னோடாடிய பின்னை, யணிநிறம் பாடுகேம் யாம்," என்ற இளங்கோவடிகள் திருவாய் மொழிக்கு அடியார்க்கு நல்லார் கண்ணளிப்புக் கிட்டாமை, கீழ் வரும் பாடல்களின் கருத்தைத் தெளிவிப்பதிலும், அறுவை யொளித்த வரலாற்றின் போக்கினை யறிவதிலும் இடையூற்றினை யுண்டாக்குகின்றது.

பிஞ்ஞை யென்பாளும், வெள்ளையன் என்பாளும்,

"இறுமென் சாய னுடங்க நுடங்கி
யறுவை யொளித்தான் வடிவென் கோயாம்,"

என்று கண்ணனைப் புகழ்ந்தனர். மாயவன் என்பாளும், இரேவதி யென்பாளும்,

" அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம்,"

என்று பிஞ்ஞையைப் புகழ்ந்து,

" வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம்,"

என்று அவளை மீண்டும் வியந்தனர். பிஞ்ஞை யென்பாளும், வெள்ளைய னென்பாளும்,

" நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்,"

என்று மாயவன் செயலைப் போற்றிக் கூறினர். மாயவ னென்பாளும், இரேவதி யென்பாளும்,

" தையல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தான் முகமென் கோயாம்,"

என்று பாடிப் பிஞ்ஞையின் நாணமுங் காதலு மிகுந்த திருமுகத்தைச் சிறப்பித்தனர். பிஞ்ஞை யென்பாளும், வெள்ளைய னென்பாளும்,

" கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்."

என்று பிஞ்ஞையின் பேரழகிற் கண்ணன் மயங்கி நின்றமையைப் பாடினர். இங்கு, நாடக வியலை யொட்டிய வுரையாடல் சிறுபான்மை தென்படுவதையும், யமுனை நதியிற் கண்ணபிரான் நிகழ்த்திய கோபிகா வஸ்திராபகரணத்தின் ஒரு பகுதி விளக்கப்பட் டுள்ளதையும், இருபுறக் காதலின் தோற்றத்தையும் நன்குணரலாம். இப்பாடல்களும் ஆட்டத்திற் குரிய சந்தவின்பங் கொண்டு நிகழ்தல் கண்டு களிக்கற்பாலது. இப்பாடல்கள் உரையாசிரியராற் குரவை மகளிர் கூற்று, எனப் பொதுப்படக் கூறப்பட்டுள்ளனவேனும், பொருண்முடிபுஞ் சந்தர்ப்பமு நோக்கி மேற்கண்டவாறு வகுத்துக் கூறப்பட்டன.

இவ்வித மாடிப் பாடப்பட்ட குரவைக் கூத்தினைக் கண்டு

வியந்த மாதரி தன் மகள் ஐயையையுங் கூட்டி, குரவை மகளிரு டன் கூடி யுள்வரிப் பாட்டாகத் திருமாலைப் பாடி வணங்கினாள். அப்பாடல்களுள், பூவை நிலையாகப்பாடிய பாடல்கள் மூன்றில், பாண்டிய மன்னர் சோழ மன்னர் சேரமன்னராகிய மூவரையும் திருமாலோடு பொருத்தி யிணைத்துக் கூறியமை, தமிழ் நாட்டு மூவேந்தர்பால், தமிழ் மக்களுக்கிருந்த பேரன்பினையும், அம் மூவேந்தர் பெருமையினையும் நன்கு விளக்குகின்றது. இன்னும், அது, இக்காலத்திற் கொண்டாடுங் கொண்டாட்ட முடிவில் அரச வாழ்த்துங் கடவுள் வாழ்த்துங் கொண்டு முடிப்பதை அக் காலத்திலுந் தமிழர்கள் கைக்கொண்டிருந்தன ரென்பதைத் தெளிவு படுத்துகின்றது. பாண்டிய மன்னரின் வாழ்த்து முன் னர்க் காணப்படுவது, குடிமக்கள் தமதரசர்களை முதலிற் கொண்டாடுவதில் முனைந்து நிற்றலையும், சேரர்களின் இளங் கோவாகிய அடிகளின் செழுந் தூய்மையினையும் தெளிவுறுத்து கின்றது. இனி, அவர்கள் முன்னிலைப் பரவலாகக் கண்ணனைக் கொண்டாடியதும், படர்க்கைப் பரவலாகத் திருமாலைப் பணிந்து வழுத்தியதும் ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களையும் பின்னடையச் செய்யும் பெற்றியனவாம். பாற்கடலைக் கடைந்த கைகள் ஆய்ச்சியர் கடைகயிற்றாற் கட்டுண்ணலும், உலகடைய வுண்ட வாய் உறி வெண்ணெயினை யுண்ணலும், மூவுலகையு மளந்த வடிகள் பஞ்சவர்க்குத் தூதாக நடத்தலும் கண்ண பிரான் பெருமையினையும், அவன் அன்பர்களிடத்திற் கட்டுண்டு கிடத்தலையும் வெளிப் படுத்துகின்றன. படர்க்கைப் பரவலின் கண், "ஐம்பொறிகளுள் முதன்மை கொண்டனவாய செவி, கண், வாய் மூன்றும் முறையே திருமால் சீர் கேளாதும், கரிய வனைக் காணாதும், நாராயணா வென்னாதும் வீணே நடக்குமா யின், பயனிலவாம்." எனவுரைத்த பண்பு ஆய்ச்சியர் கண்ணன் பாற் கொண்ட கழிபேரன்பையும், இளங்கோவடிகளின் துறவுத் தூய்மையையும் தெள்ளி நாக்குகின்றது.

நிற்க, நற்குறி தீக்குறிகளாகிய சகுனம் பார்க்கும் முறை யை யாய்வோம். இம்முறையில் நம்பிக்கை யுள்ளார்க்குப் பயனு றுதலும், நம்பிக்கை யில்லார்க்குப் பயனின்மையுமா மென்பது

பெரும்பாலார் கொள்கை. அக் கொள்கையின்படியே ஆய்ச்சியர் குரவையில் மாதரி கண்ட தீக்குறிகள் கோவலனுக்கு நேரிட்ட தீங்கின் முற்குறிகளாயின. ஆயினும், கோவலன் சிலம்பினை விற்க வெளிப்பட்டு, இடைக்குலமன்றித் தன் குலமறியுந் தகுதி யன்றாகலின், தன்னையிமி லேறொன் றெதிர்ந்ததை யிழுக்கென வறியானாய்ச் செல்லத் தீங்கு பயந்த செய்தி யொன்று சிலப்பதிகாரத்திற் காணப்படுகின்றது. இங்கே கோவலன் வணிகனாயினும், இடைச்சேரியிலுள்ள இடையர் மனையில் வாழ்ந்து, இடையர் தெருவே செல்வதால், கொல்லே றெதிர்ந்தமையைத் தன்குலமறியுந் தகுதியுடைய சகுனமாகக் கொள்ள வேண்டியது போலும். மேலும், சகுனங்கள், ஒவ்வொரு குலத்திற்கும் இடத்திற்கும் தகுதியாக அக்காலத்திற் பிரிக்கப் பட்டிருந்தன போலும். அப்பிரிவுகள் பெரும்பாலும் இடவமைப்புக்களைக் கருத்திடைக் கொண்டனவாம். கோவலன் தன்னைக் கொல்லே றெதிர்ந்தமை தன்குலமறியாச் சகுனமாகக் கருதி விலக்கினும், தன்னையறியாது தன் மனச்சாட்சியில் அச்சகுனம் புகுந்து அவனை வருத்தி யுள்ளத்தைக் குழப்பி நம்புதலை யுண்டாக்கி யிருக்கக் கூடுமாகையால், அச்சகுனம் அவனுக்குத் தீங்கு பயக்கலாயிற்று போலும். ஆகலின், சகுனந் நம்புதலைக் கொண்டவர்க்குத் தன் பயனைத் தவறாது கொடுக்குங் கொள்கைத்தெனப் புலனாகின்றது. இடைக்குலக் கன்னியர் கொல்லேறு தழுவிய இடைக்குலக் குமரர்களை மணக்க விரும்புவது, அவர்கள் வீரவாழ்க்கையிற் கொண்ட விருப்பினையும், தமது கணவர்களிடத்தில் இவ்வுலக வாழ்வுக் கிடையூறுங் குணங் காணாக் கொள்கையினையும், தமது குலத்தொழிலிற் சிறந்த தேர்ச்சியினையும் வேண்டியேயாம்.

இதுவரை கண்ட ஆராய்ச்சியாற் சிலப்பதிகாரத்தின் நாப்பண் விளங்கும். இவ்வாய்ச்சியர் குரவையில் மேற்கண்டவாறே பல நற்பொருள்களையும், பழங்கால பழக்க வழக்கங்களையும், யாழின் போக்குகளையும், ஆய்ச்சிய ரியல்புகளையும், திருமாலின் சிறப்புகளையும் சகுனத்தின் பண்புகளையும் நாம் தெளிவாகக் காணலாம். பழந்தமிழ் நூல்களிற் புதைபட்டுக் கிடக்கு மிது போன்ற பொருள்கள் இன்னு மெவ்வளவோ?

தமிழ்த் திருவாளர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்

(ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது)



நமது பொதுநிலைக் கழக முதன் மாணவரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் ஆசிரியருமான மணி. திருநாவுக்கரசு முதலியார் நிகழும் வைகாசி ௧௦-ஆம் நாள் சனிக்கிழமை (23-5-1931) முற்பகலில் திடீரென இம்மண்ணுலக வாழ்வுநீத்து விண்ணுலகு புகுந்த செய்தி, இத்தமிழ் நாட்டவர் எல்லாரையும் திடுக்கிடச் செய்து, அவர்க்குப் பெருந்துயரைத் தருவதொன்றாய் எங்கும் பரவலாயிற்று. முகிழ்த்து மணங் கமழ்ந்து அழகாய் மலரும் பருவத்தே ஓர் அரிய செங்கழுநீர்ப் பூ அதனருமையறியான் ஒருவனாற் கிள்ளியெறியப்பட்டு அழிந்தாற்போலவும், மறைநிலாக் காலத்தே திணிந்து பரந்த இருளின்கட் செல்லும் நெறி இதுவெனக் காட்டுதற்கு ஏற்றி வைத்த ஒரு பேரொளி விளக்குச் சடுதியில் வீசிய சூறைக்காற்றினால் அவிந்து மறைந்தாற்போலவும், நீண்ட நாள் வறுமையால் வருந்திய ஒருவன் புதையலாய்க் கண்டெடுத்த பொன் நிறைந்த குடம் ஒன்று வன்னெஞ்சக் கள்வனொருவனாற் கவர்ந்துகொள்ளப்பட்டாற்போலவும், இத்தமிழ் நாட்டுக்கு ஒரு கல்வி மலராய், ஓர் அறிவு விளக்

காய், ஓர் அருங்குணப் புதையலாய்த் தோன்றிய இவ்விளைஞர் தமது சங-ஆம் ஆண்டில் கதுமெனக் கூற்றுவனாற் கவரப்பட்டது ஒருபெருங்கொடுமையன்றோ! இச்சென்னைமா நகரின் வட பகுதிக்கு மணி. திருநாவுக்கரசு முதலியாரும், இதன் தென் பகுதிக்குத் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் இருபெருங் கண்களாய்த் திகழாநின்றனர்; அவற்றுள் ஒரு கண்ணை இழந்து இப்போதிது துயர் கூர்ந்து நிற்கலாயிற்றே! ஞாயிறு திங்கள் என்னும் இரண்டில் ஒன்று அழிந்து மறைந்தால் திரும்பவும் அதனையொப்ப தொன்றனைப் பெறுதல் இயலுமோ? அது போலவே, இவ்வருமைத் தமிழ் மகனுரை யொப்பார் ஓர் இளைஞரைத் திரும்பவும் யாம் பெறக்கிடைப்பது அரிதரிது!

இவர் 1888-ஆம் ஆண்டு இவர்தம் பெற்றோர் ஆற்றிய தவத்தின் பயனுய்ச், செங்கற்பட்டு மாகாணத்தில் உள்ள மணிமங்கலம் என்னும் ஊரிற் பிறந்தார். இவருடன் பிறந்தாரில் இவர்தம் தம்பியரான திருஞானசம்பந்த முதலியாருங் கோடீசுவர முதலியாருங் கல்வியிலுந் தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கு உழைப்பதிலுஞ் சிறந்து திகழ்கின்றூர்கள். பின்னவரான கோடீசுவரர் பி. ஏ., எல். டி. என்னும் ஆங்கிலப் பட்டமும் பெற்றுக் கோவிந்தப்ப நாயகர் கல்விச் சாலைக்குத் தலைமையாசிரியராகவும் அமர்ந்திருக்கின்றூர்.

தமது பிள்ளைமைப் பருவத்தே திருநாவுக்கரசு தம் தந்தையாரால் தமிழ் நூல்கள் கற்பிக்கப்பட்டு வந்ததுடன், ஆங்கிலக் கல்விச் சாலைகளிலுஞ் சேர்ந்து ஆங்கிலமுங் கற்று வந்தார். அக்காலங்களில் இவருக்குக் கல்வி பயிற்றிவந்த ஆசிரியர்களெல்லாரும் இவரது நுட்ப அறிவின் திறனையுங் கல்வி கற்பதில் இவர்க்குள்ள வேட்கையினையுங் கண்டு பெரிது வியந்து இவரைப் பாராட்டி வந்தார்கள் எனவும், தமிழ் ஆங்கிலப் பாடங்கள் எல்லாவற்றிலும் இவர் தம்முடன் பயின்ற உடன் மாணுக்கர் எல்லாரையும்விடத் திறமை மிக்கவராயிருந்தனரெனவுங் கேள்வியுறுகின்றோம். ஆங்கிலக்கல்லூரியில் தொடர்பாகக் கலைபயின்று பட்டம் பெறுதற்குத் தக்க செல்வ வளம் இன்றி, இவர் சிறு பரு

வத்திலேயே வறுமைப் பட்டமையாற் பத்தாவது வகுப்புவரை யிற் பயின்று, அதன்பின் கல்லூரிப் பயிற்சியை விட்டு நீங்கினர்.

அங்ஙனம் ஆங்கிலப் பயிற்சியை விட நேர்ந்தாலும், தமிழ் நூல் கற்பதில் தமக்குள்ள அவா சிறிதும் நீங்காமல் வரவர வளர்ந்து வந்தமையால், இவர் சென்னையில் திரு. கலியாண சுந்தர அடிகளைச் சார்ந்து தமிழ் நூல்கள் கற்று வந்தார்.

பின்னர் இன்றைக்குச் சிறிதேறக்குறைய 23-ஆண்டுக ளுக்கு முன், எம்மாணவர் நாகை. கோபாலகிருஷ்ணன் வாயிலா கத் திருநாவுக்கரசு எம்மை வந்து அடுத்தனர். அப்போது யாம் சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தமை யாற், சென்னையிலேயே குடியிருப்புக் கொண்டிருந்தேம். கோபாலகிருஷ்ணனுந் தாமுமாகச் சில நாட்கள் இவர் எம்மை வந்து கண்டுவருகையில், தமிழிலுள்ள பழைய செந்தமிழ் நூல்களை எம்பால் முறையாகக் கற்க வேண்டு மென்னுந் தமது விருப்பத்தைக் கோபாலகிருஷ்ணன் வாயிலாக எமக்கு மெல்லெனப் புலப்படுத்தினர். அது தெரிந்து யாம் "ஆங்கிலங் கற்கின்ற மாணவர் தமிழ் நூல்களை மிகுதியுங் கற் பாராயின், தமிழ் நூற்சுவை ஆங்கில நூற்பயிற்சியைத் தடை செய்யும்; ஆதலால், ஆங்கிலத்தை மிகுதியாகவுந் தமிழைச் சிறி தாகவும் பயின்று, ஆங்கிலப் புலமையை முற்றுவித்துக்கொண்ட பின் தமிழை மிகக் கற்றலே வேண்டற்பாலது," என்றேம். அதன்மேல், இவர் ஆங்கிலம் நீளப்பயிலுதற்கு ஏற்ற வசதிகள் பயவாத தமது வறிய நிலைமையினையும், தமிழ் கற்றுவது அறிவு பெறவேண்டுமெனத் தமக்குள் அடங்காது எழும் அவாவினை யும் எமக்குத் தெரிவித்தனர். இவர் அவைகளைத் தெரிவித்த முறையானது, எமது நெஞ்சத்தை இளகச் செய்து, அப்போதே இவர்பால் எமக்கு மிக்க அன்பினைத் தோற்றுவித்தது. இவர் வேண்டுகோளுக்கும் இசையலானேம். அது முதல் இவருங் கோபாலகிருஷ்ணனும் ஒருங்கு சேர்ந்து, 'திருமுருகாற்றுப் படை'யும் 'நன்னூலும்' துவங்கி அவையும் பிறவும் ஒழுங்காக எம்பாற் பாடங் கேட்டு வரலாயினர்.

இருவரும் நுண்ணுணர்வுடையராகக் காணப்படினுங், கோபாலகிருஷ்ணனுக்கு எழுதும் ஆற்றலே மிகுதியாயுள தென்பதும், திருநாவுக்கரசுக்கு எழுதும் ஆற்றலொடு பேசும் ஆற்றலும் ஒப்ப உளதென்பதும், அப்போதே புலப்படலாயின. இவ்விருவர்க்கும் உள்ள அவ்வேற்றியல்பு, இவர்கள் வளர்ந்து பெரியரானபின்னுன் வெள்ளிடைமலைபோல விளங்கலாயிற்று. கோபால கிருஷ்ணன் பொருள் பொதிந்த இனிய செந்தமிழ்க் கட்டுரைகள் எழுதுவதிலும், புதிய கதைகள் அமைப்பதிலும் மிக்கு விளங்கினர்; ஆனல், அவைக்களங்களிற் கேட்போர் கருத்தை இழுக்கத்தக்க சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றல் அவர்க்கு வாய்த்திலது. மற்றுத் திருநாவுக்கரசுக்கோ, கட்டிளமைக் காலத்தே கட்டுரைகள் கதைநூல்கள் எழுதுவதிற் கருத்துச் சென்றிலதாயினும், அவைகளிற் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் இவர்தம் அறிவும் ஆற்றலும் ஈடுபட்டிருந்தன. அக்காலத்திலேயே இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டவர், இவரை மிகவும் கொண்டாடிப் பேசினர். ஒரு பொருளை எடுத்து விரித்துப் பேசுங்காற், கேட்பவரது கருத்து மகிழ்ந்து அதிற் பதியுமாறு நகைச் சுவை தோன்றப் பேசுந் திறம் இவர்க்கு வாய்ந்தாற்போற் பிறர்க்கு வாய்ப்பது அரிது. நகைச்சுவை மட்டுந் தோன்றப் பேசுவார் பலர் உளர்; ஆனல், அவரது உரையில் அறிந்து நினைவுகூரத் தக்க அரும்பொருள்கள் அமையா. மற்றுத் திருநாவுக்கரசு நிகழ்த்தும் உரையிலோ, நகைச் சுவையோடு பொருட் சுவையும் அமைந்திருந்தது. இன்னும், நகைச் சுவையில்லாமல், உயர்ந்த துறைகளைப் பற்றிப் பேசுங்காலும், கேட்பார்க்குச் சலிப்பும் உவர்ப்பும் தோன்றுமல் அவர்களது கருத்தை அவற்றின்பாற் பதியவைக்கும் முறையில் அவைதம்மை அழகு படுத்திப் பேசும் வல்லமையும் இவர்க்கிருந்தது. இங்ஙனம் "என்பொருளவாகச் செலச் சொல்லுஞ்" சொல் வன்மை இவரது இளம்பருவம் முதல் இவர் இறந்துபடுங் காலம் வரையிற் குன்ருதிருந்தது.

இங்ஙனஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் வகையில் இவர் தமக்கிருந்த அறிவாற்றலைச் சிறுபருவ முதலே நூலெழுதுங்

துறையில் செலுத்தி யிருந்தனராயிற், சைவத்திற்குந் தமிழுக்கும் நிலையான பயனைத் தரத்தக்க பல அருந்தமிழ் நூல்களை இவர் இயற்றியிருக்கலாம். அதைப் பற்றி இவர்க்கு யாம் பலகால் வற்புறுத்திச் சொல்லியும், அதில் இவர்க்குக் கருத்துச் செல்லவில்லை. சிறு பருவத்தில் இவருக்கிருந்த வறுமையானது புராணப் பிரசங்கஞ் செய்யும்படி இவரைத் தூண்டியது. அதனால் வந்த வருவாய் இவரது இளம்பருவ வாழ்க்கைக்கு உதவி செய்தது.

பின்னர் இவர் கல்விச் சாலைகளில் தமிழாசிரியராய் அமர்ந்து, தமது வாழ்க்கையை இயன்ற வரையில் வறுமை யின்றிச் செலுத்திக்கொள்ள வாய்த்தது முதற்றான், கட்டுரைகள் எழுதும் பழக்கத்தையுங் கைக்கொள்ளலானார். தமது குடும்பச் சுமை முற்றும் இவரே தாங்கவேண்டி யிருந்தமையானும், அச்சுமையை எளிதாக்குதற் கேற்ற செல்வ வளம் இல்லாமையானுங் குடும்ப வாழ்க்கையை இனிதாக்குதற்கு வேண்டும் பொருள் வருவாயை நோக்கியே, இவர் திங்கள் இதழ் கிழமை இதழ்நாளிதழ்கட்குக் கட்டுரை யெழுதவும் பள்ளிக்கூடங்கட்குப் பாடப் புத்தகங்கள் இயற்றவும் வேண்டியவரானார். பொருள் வருவாயை நோக்கி எழுதப்படும் எதுவும் பெரும்பாலும் நிலையான பயனைத் தரத்தக்க தாகாது. இதனை நமது தமிழ் நாட்டுச் செல்வர்கள் உணர்ந்து பார்த்து, நூல் எழுதும் ஆற்றல் வாய்ந்த தமிழறிஞர்க்கு வறுமை தீரப் பொருளுதவி செய்திருப்பார்களாயின், இதுகாறும் எத்தனையோ அருந்தமிழ் நூல்கள் பேரறிஞர்களால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கும். ஆனால், அச் செல்வர்கள் தமது பெரும்பொருளைப் பயனற்ற தீவினையைப் பெருக்கத் தக்க ஆரவாரமான வழிகளிற் பாழாக்குகின்றனரே யன்றித், தமிழ் மொழியை வளம்படுத்தி வளர்க்குந் துறைகளிற் சிறிதும் பயன்படுத்துகின்றிலர்! மேல் நாட்டவரிற் கற்றவர் தொகையும், அக்கற்றவரால் அரும்பெரும் பொருள் பொதிந்து இயற்றி வெளியிடப்படும் நூல்களின் தொகையும் நாடோறும் பதினாயிரக்கணக்காய்ப் பெருகி வருதலையும், தமிழ் நாட்டவரின் நன்கு கற்ற மிகச் சிலரின் தொகையும் வறுமையால் நாளுக்கு நாள்

அருகி வருதலையும் ஒப்பிட்டு எண்ணிப் பார்க்குங்கால், இத் தமிழ் நாட்டவர் எந்த வகையில் முன்னேற்றம் அடையப் போகின்றார்கள் என்னுந் திகில் பெரிதா யிருக்கின்றது; நகைக் குந் துணிக்கும் வீணான வெளிமினுக்குகளுக்கும் வெற்றா வாரங்களுக்கும் இத்தமிழ் நாட்டிற் கணக்கின்றிச் செலவாகும் பொருளையுங், கல்விக்குங் கைத்தொழிலுக்கும் புதிய புதிய ஆராய்ச்சிகளுக்குஞ் சமய அறிவு வளர்ச்சிக்கும் மேனாட்டிற் பயன் படுத்தப்படும் அளவற்ற பொருளையும் ஒப்பிட்டு எண் ணிப் பார்க்குங்கால், இந்நாட்டவர் மேல்நாட்டவரோ டொப்ப நாகரிக இன்ப அறிவு வாழ்க்கையைப் பெறுதல் கனவிலுங் கைகூடுமோ என்று வருந்தி ஏங்க வேண்டியதா யிருக்கின்றது! இந்நாட்டில் வீணாகச் செலவழியும் பெரும்பொருட்டிரள் நூறு கோடியில் ஒரு சிறு பங்காயினுந் தமிழ் கற்றார்க்குப் பயன் படு மாறு வைக்கப்படுமானால், நம் திருநாவுக்கரசை யொத்த எத் தனையோ தமிழ்ப் புதல்வர்கள் தமிழறிவிற் சிறந்து, எத் தனையோ அரும்பெருந் தமிழ் நூல்களை இயற்றி வெளியிட் டிருப்பார்கள்! திருநாவுக்கரசும் இவரைப்போன்ற வேறு சிலரும் அரிய பெரிய தமிழ் நூல்கள் எழுதாமைக்குக் காரணம், அவ ரது வாழ்க்கை இனிது நடத்தற்குப் போதுமான பொருள் வரு வாய் இல்லாமையே யன்றோ? ஐயகோ! தமிழறிஞர்க்குள்ள வறுமை என்னான்று எங்ஙனம் நீங்கப் போகின்றது! நம் அரு மைக் கண்மணிகளாம் தமிழிளைஞர் சிலரையும் நாம் இங்ஙனம் விரைவில் இழக்க நேர்வது பெரும்பாலும் அவர்க்குள்ள குடும் பக் கவலையினாலன்றோ? இது நிற்க.

இனி இவருடைய அறிவு ஆராய்ச்சி நல்லியல்புகளைப் பற் றிச் சிறிது கூறல் வேண்டும்: இவர் இயற்கையிலேயே கூர்த்த அறிவுடையவர்; தாம் ஒன்று கற்றாற் பின்னர் அதனை நூறாகப் பெருக்கி விடுவர்; அதனைப் பிறர்க்கு விளக்கிச் சொல்லுதலி லும் வல்லர்; அங்ஙனம் விளக்குதற்கு வேண்டிய பலவற்றைப் பல துறைகளிலிருந்தும் புதியவாக எடுத்துச் சேர்த்துக்கொள் வர். குடும்பச் சுமையும் மிகுதியான செலவும் இவற்றின் பொருட்டு ஓயாமற் பொருளீட்டும் முயற்சியும் இல்லாதிருந்

தால், உணவை ஒழுங்குபடுத்தி நோய்க்கு இடமானவைகளை விலக்கித் தமதறிவையும் முயற்சியையும் ஒருமுகப்படுத்தி யிருந்தால், தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள இன்னும் எத்தனையோ அரும்பெரு நூல்களை யெல்லாம் ஆழமாகப் பயின்று, அப் பயிற்சியாலாய பெரும் பயனை இவர் இத்தமிழுலகுக்குத் தந் திருக்கலாம். ஆழ்ந்தகன்ற நூல்களைப் பயின்று அவற்றின் பொருள்களைப் பயன்படுத்தத்தக்க அத்துணைச் சிறந்த இயற்கை யறிவு இவர்க்கு அமைந்திருந்தது. ஆனல், அது பயன்றராமல் இத்துணை விரைவில் மறைந்து போயிற்றே!

இவர் எம்பாற் கல்வி பயின்று வெளியேறிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்ற காலையில், இவரது அறிவானது ஆராய்ச்சி முறையிற் சென்று, தாம் கற்றவற்றிற் பொருந்துவன இவை, பொருந்தாதன இவை எனக் காணும் நீர்மையதா யிருக்கவில்லை. தம் முன்னுசிரியராகிய கலியாணசுந்தர அடிகள் கொண்டிருந்த ஆரியப் பற்றிலேயே இவர்க்குப் பிடிமானம் மிகுதியா யிருந்தது. எம்முடைய ஆராய்ச்சித் துறைகளிலும், யாம் ஆராய்ந்து கட்டிய முடிபுகளிலும் நீண்ட காலம் வரையிற் பிடிமானம் இல்லாமலே இருந்தார். ஆசிரியர் மெய்கண்ட தேவர் அருளிச் செய்த 'சிவ ஞான போதம்' தமிழ் முதல் நூலேயன்றி வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துச் செய்ததன்று என யாம் ஆராய்ந்துரைத்த முடிபைத் தழுவாமல், அது மொழிபெயர்ப்பு நூலே யென்று எழுதியும் பேசியும் வந்தார். எழுதும்போதும் பேசும்போதுந் தமிழ் மொழியைப் பிறசொல் கலப்பின்றித் தனித் தூய தமிழாகவே வழங்க வேண்டுமென்று யாம் வற்புறுத்தி வருங் கொள்கையில் நீண்ட காலம் வரையில் உடம்பாடில்லாமலே யிருந்தார். 'வேதம்' என்றும் 'ஆகமம்' என்றும் வடமொழியில் வழங்கும் நூல்கள் இறைவன் அருளிச் செய்தன வல்ல என்று யாம் ஆராய்ந்துரைத்த முடிபிற் கருத்தொருப்பா டில்லாமலே யிருந்தார். இன்னும் இங்ஙனமே நூலாராய்ச்சித் துறைகளிலுஞ் சீர்திருத்த முறைகளிலும் யாம் ஆராய்ந்து கொண்ட கோட்பாடுகளில் இவர் உடன்பாடுடையராய் நில்லாமற் றம் முன்னுசிரியராகிய கலியாண சுந்தர அடிகள் சென்ற வழியே சென்றூர்.

என்றாலும், இவர் எம்மிடத்து வைத்த பேரன்பினும் பெரும் பாராட்டினுஞ் சிறிதும் பிறழ்ந்தவர் அல்லர். அதனால் எமக்கும் இவர்பாலுள்ள அன்பு சிறிதும் பிறழ்ந்திலது. கருத்து வேறு பாடு பற்றி அன்பு சிதையாமலும் பகைமை கொள்ளாமலும் எம்மோடு என்றும் ஒரு நீர்மையராய் ஒழுகிய இவரது சிறந்த உள்ள மேம்பாடானது, கருத்து வேற்றுமை குறித்து அன்பின்றி ஒருவரை யொருவர் பகைக்குந் தமிழ்ப் புலவர்க்கும் பிறர்க்கும் அறிவு தெருட்டும் அருமணி விளக்கமாய் நிற்கற்பாலது.

யாம் சென்ற ஆராய்ச்சித் துறையிலுஞ் சீர்திருத்த முறை யிலும் இவர் முன்னமே எம்மோடு ஒத்து நின்று உதவி புரிந் திருந்தனராயின், இத்தமிழ் நாட்டில் இன்னும் எவ்வளவோ நலங்கள் விளைந்திருக்கும். எம் சைவ சமயாசிரியர் தமிழாசிரியர் செய்து வைத்த சீர்திருத்தங்களையே யாம் இருபத்தைந்தாண்டு களுக்கு முன்னமேதொட்டு எம்முடைய நூல்களாலும் எம் முடைய விரிவுரைகளாலும் ஆங்காங்கு விளக்கி வருகின்றோம். இற்றைக்கு மூன்றாண்டுகளுக்கு முன் புதிது தோன்றிய சீர் திருத்தக்காரரது இயக்கமானது எம்முடைய கோட்பாடுகளையே தழுவி யெழுந்ததாயினும், இடைக்காலத்தே எம் சைவ ஆசிரி யர்க்கு மாறாய்த் திரும்பிச் சைவ சித்தாந்தத்துக்கு உடம்பாடா காத "பௌராணிக சைவர்"தம் பொருந்தாக் கூற்றுகளை எடுத் துக்கொண்டு சிவபிரானையுஞ் சிவனடியார்களையுந் தமக்குத் தோன்றியவாறெல்லாம் இழித்துப் பேசுவதாயிற்று. அவ்வாறு சைவ சித்தாந்தத்தின்மேல் ஏற்றப்பட்ட பழிகளைக் களைந்து, சைவ சித்தாந்த உண்மையினை நாட்டி, அப்புதிய இயக்கத்தா ருடன் யாம் போராடிய காலத்தும் யாம் தனி நின்றே அதனைச் செய்யு நிலையிலிருந்தேம். புதிய இயக்கத்தார் நிகழ்த்துந் தடை கட்கு விடை கூறமாட்டாத பௌராணிக சைவர் அவரை யெதிர்ப்பது விடுத்துச் சைவ சித்தாந்த உண்மையினை நாட்டும் எம்மையே எதிர்க்கலாயினர். ஒரு பக்கத்திற் புதிய இயக்கத் தாரும் மற்றொரு பக்கத்திற் பௌராணிக சைவருந் தாக்க, அந் நேரத்தில் யாம் சிவபிரான் றுணையொன்றே கொண்டு, அவ்விரு வர்க்கும் ஈடு கொடுத்துச் சைவ சித்தாந்த உண்மையினைத் தனி

நின்றே நாட்டும் நிலையினம் ஆனேம். அந்நேரத்தில் நம் அருமைத் திருநாவுக்கரசு நம்முடன் சேர்ந்து நின்று சமயத் தொண்டு செய்திருந்தனராயின் இன்னும் எவ்வளவோ நலங்கள் விளைந்திருக்கும்.

ஆனாலும், அப்போராட்டந் துவங்கிய இரண்டோராண்டுக் குப்பிற் சடுதியில் திருநாவுக்கரசின்பாற் றோன்றிய ஒரு முழு மாறுதலானது எமக்குப் பெரு வியப்பினையும் பெரு மகிழ்ச்சியினையும் பயந்தது. பாழ்ங் கொள்கையையே விடாப்பிடியாய்க் கொண்ட புதிய இயக்கமும் அவர்க்குப் பழுதாகத் தோன்றலாயிற்று; முழுமுதற் கடவுளான எல்லாம் வல்ல சிவத்தினிலக்கணத்துக்கும், அதனை அறிவுறுத்துஞ் சைவ சித்தாந்தத்துக்கும், அதனைத் தனக்கேயுடைய தெய்வத் தமிழுக்குஞ், சைவ ஆசிரியர் மேற்கொண்ட சீர்திருத்தத் துறைகட்கும் முற்றும் முரணான பௌராணிக சைவக் கோட்பாடும் அவர்க்குப் பழுதாகத் தோன்றலாயிற்று. இங்ஙனந் தோன்றிய பின்னர்த்தான் ஆராய்ச்சி முறையிற் செல்லும் எமது தமிழ்த் தொண்டு சிவத் தொண்டு சிறந்தனவாகுமெனத் திருநாவுக்கரசு நன்கறிந்து, அதுமுதல் எம்முடைய கோட்பாடுகளையே முற்றுந் தழுவி நடக்கக் கங்கணங் கட்டினர். எமது திருத்தொண்டினால் இத்தமிழகத்துக்கு விளையும் நலங்களைப் பகுத்துணர்ந்து பாராமையாற் பௌராணிக சைவரிற் பலர் எம்மைப் புறங்கூறுவாராய்ச் சிறிதுந் திருந்தாதிருக்க, நம் அருமைத் திருநாவுக்கரசு உடனே எம் வழிக்குத் திரும்பிப், பழமையை யொட்டிய சீர்திருத்தத் துறையில் இறங்கியது பெரிதும் பாராட்டற்பால தொன்றா யிருந்தது. சென்ற தைத் திங்கள் பூச நாளன்று பல்லாவரத்திற் கூடிய எமது பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு விழாப் பேரவைக்குத், திருநாவுக்கரசு பல வகையில் உதவி செய்ததுடன், பௌராணிக சைவர் பெரிதும் வெருக்கொளத்தக்க மிக உயர்ந்த சீர்திருத்தங்களையும் அஞ்சா ஆண்மையுடன் கொணர்ந்து, எமதும் அவையாரதும் முழு உடன்பாடு பெற்று அவைதம்மை நன்கு நிறைவேற்றி வைத்தார். இவர் இத்துணை அஞ்சா ஆண்மையின

ராய்த் தமிழ் மக்கள் ஆக்கத்தைக் கோரி உழைக்க முன் வந்த தானது எமக்கு அடங்கா மகிழ்ச்சியினை விளைவித்தது. ஆனு லும், இவர் தமது உணவினை ஒழுங்குபடுத்தாமலும், உடலோம் புந் தவவொழுக்க முறைகளைக் கைக்கொள்ளாமலும் இத்துணை விரைவில் தமதுடம்பை நீத்து ஏகியது நினைக்குந் தோறும் பெருந்துயரத்தைத் தருகின்றதே! ஆ! ஊழ்வினையின் வலிவை என்னென்பேம்!

இனி, இவர்தம் நல்லியல்புகளைப் பற்றிச் சிறிது கூறல் வேண்டும்: எவருந் தாம் நல்ல தொன்று செய்தால் அதனை எங்கும் பறையறைந்தாலென வெளிப்படுத்துவர்; நல்லதல் லாதது செய்தால் அதனைத் தமக்குற்றார்க்குந் தெரிவியார். மற்றுத் திருநாவுக்கரசோ தாம் செய்த நன்மையைத் தெரிவி யார்; தாம் நல்லதல்லாதது ஏதேனுஞ் செய்திருந்தால் எம்மிடம் அதனைத் தெரிவியாதிரார். பிறர்க்குத் துன்பத்தை விளைவிக்கத் தக்க பொய் இவர் வாயில் வருவதில்லை. மனநலன் நன்கு வாய்ந்தாரை யன்றி, ஏனையோரை இவர் ஒரு பொருட்படுத் தார். வெளிமினுக்கும் பட்ட ஆரவாரங்களும் இவரை மருட்ட மாட்டாவாயின.

மிக இளைஞராயிருந்த காலந் தொட்டே இவர் எம் அறி வுரைகளைப் பெரும்பாலும் ஏற்று ஒழுகும் இயல்பினரா யிருந் தார். நெடுங்காலத்திற்கு முன் ஒருகால் இவர் ஆரவாரமான பட்டங்கள் சூட்டிக் கொள்வதில் அவாவுடையராய், அவ்வாறு தாம் புனைந்துகொண்ட பட்டங்கள் பதித்த தாள் ஒன்றை எம் பாற் கொணர்ந்து காட்டினர். அது கண்டு யாம், "நம் மக்கள் முன்னேற்றத்திற்குஞ் சிவபிரான் திருவடிக்கும் நாம் இயற்றுந் தொண்டு அவ்வுண்மையே நோக்கியதாய் இருக்க வேண்டுமே யல்லாமல், ஆரவாரமான பட்டங்கள் சூட்டிக்கொள்வதற் கென்று நடைபெறல் ஆகாது. வேண்டுமாயின் நீ தமிழாசிரிய ராய் வேலை பார்க்கும் நிலையைச் சுட்டிப் 'பண்டிதர்' 'தமிழா சிரியர்,' என்பவைகளை மட்டும் நின்பெயரோடு சேர்த்து வழங்க லாம்" என்றேம். அது முதல் இவர் வெளி யாரவாரமான பட்டங்கள் புனைந்துகொள்வதை அறவே விடுத்தார்.

பின்னும், இவர் இளைஞரா யிருந்தபோது தமிழிற் பாட்டுகள் கட்டுவதில் மிக்க சுருசுருப் புடையரா யிருந்தார். ஒருகால் யாம் இவரை நோக்கி "நமது தமிழ் மொழியிற் கோடிக்கணக்கான பாட்டுகள் பாடப்பட் டிருக்கின்றன. ஆனால், உரை நூல்களோ சிலவும் இல்லை. பொது மக்கட்கு இனி உரை நூல்களே வேண்டும். ஆதலால் நீ பாட்டுப் பாடுவதை விடுத்து உரை எழுதுவதிலேயே பழகல் வேண்டும்" என்றேம். அது முதல் இவர் பாட்டுப் பாடுதலை விடுத்து, உரை எழுதுதலில் திரும்பினர். இங்ஙனமே இவர் தமது இளமைக் காலத்தே எம் அறிவுரைகளைக் கேட்டு அவற்றின்படி நடந்த வகைகள் பல. ஆசிரியர் கூறும் அறிவுரையை ஏற்று நடவாத இஞ்ஞான்றை மாணவர்க்குத், திருநாவுக்கரசின் அரிய நடை நல் விளக்காக ஒளிரற்பாலது.

இனி இவர் தம் கருத்துக்கு மாறானவரிடத்தும் பகைமையின்றி அன்பினால் அளவளாவும் இயல்பினரென்பதை முன்னரே எடுத்துச் சொன்னேம். இவ்வருங் குணம் எல்லார்க்கும் வாய்ப்பதன்று. கல்வியறிவு வாய்ந்த நம்மனோர் எல்லாரும் இந்நல்லியல்பின் விழுப்பத்தை நன்குணர்ந்து என்றைக்கு அதனை யுடையராய் ஒழுகத் தலைப்படுகின்றனரோ அன்று முதற்றான் நம் நாடு செழிப்புறும். நம் அருமைத் திருநாவுக்கரசின் இந்நல்லியல்பும் நம் தமிழறிஞர்க்கும் பிறர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாக நிற்கற்பாலதாகும்.

இனி, இவர் தமது சிற்றிளமைப் பருவந் தொட்டே தமது வருத்தத்தையும் பாராமற் பிறர்க்குதவி செய்யும் இரக்க நெஞ்சமும் நல்லெண்ணமும் உடையர். இவர் எம்பாற் கல்வி பயின்று கொண்டிருந்த அந்நாளில் ஒருபோது எம் மூத்த மகள் மிகக் கொடிய காய்ச்சலாற் பற்றப்பட்டு உணர்விழந்து கிடந்தாள். யாங்கள் எல்லோமும் பெருந்திகிலும் பெருங்கவலையுங் கொண்டு அம்மகளுக்கு வந்த அந்நோய் தீர்க்கத் தக்க மருத்துவரை ஒருவர் பின் னொருவராய் வைத்துப் பார்த்து வந்தோம். அவ்வுற்ற நேரத்தில் நாகைக் கோபால கிருஷ்ணனும் நம் அருமைத் திருநாவுக்கரசும் அல்லும் பகலும் எம்மை யகலாதிருந்து பல வகை

உதவிகளுஞ் செய்து வந்தார்கள். நோயானது மிக முறுகிப் பேரிடர் பயப்பதாய் நின்ற ஒருநாளிரவில், இவ்விருவருஞ் சென்று வேறோர் ஆங்கில மருத்துவரை அழைத்து வந்தனர். அப்போது இரவு மணி பதினொன்றுக்கு மேல் இருக்கும். வந்த அம்மருத்துவர் தக்க மருந்து கொடுத்து, வேறு சில நுட்ப முறைகளுஞ் செய்து, கடைசியாகப் பாலிற் கலந்து கொடுக்கப் பனிக்கட்டிகள் வேண்டும் என்றனர். அஞ்ஞான்று யாம் சென்னையில் மண்ணடிக்கு அருகிலுள்ள அரமனைக்காரன் தெருவில் ஒரு வீட்டின் மேன்மாளிகையிற் குடியிருந்தேம். யாம் இருந்த அப்பகுதியில் அந்நேரத்தில் எங்கும் பனிக்கட்டிகள் கிடைக்கவில்லை. அதன் மேல் திருநாவுக்கரசு எப்படியாவது அவற்றைக் கொண்டுவருதற் கெண்ணி, எழும்பூருக்கு அருகிற் பனிக்கட்டி செய்யுந் தொழிற் சாலைக்கே போகப் புறப்பட்டார்; கோபால கிருஷ்ணனும் அவருடன் சென்றார். மின்சார வண்டியாவது குதிரை வண்டி மாட்டு வண்டிகளாவது அந்நேரத்தில் கிடையாமையால் அவர்கள் அந்நள்ளிரவில் கால் நடையாகவே செல்ல வேண்டுவதாயிற்று. யாமிருந்த இடத்திற்கும் பனிக்கட்டித் தொழிற் சாலைக்குஞ் சிறிதேறக்குறைய மூன்று மைல் இருக்கும். இவர்களிருவரும் பனிக்கட்டிகள் வாங்கிக்கொண்டு திரும்பி வருகையில் இரவு மூன்று மணி இருக்கும். இவர்கள் அன்றிரவு செய்த அச்செயற்கரிய உதவியால் எம்மகள் நோய் நீங்கி உயிர் பிழைத்தாள். இங்ஙனம் உற்ற நேரத்தில் எவ்வகை இடைஞ்சலுக்கும் அஞ்சாது நின்று தம்பா லன்புடையார்க்கு உதவி செய்யும் விழுமிய நல்லியல்பு இவர் தம் இறுதி நாளளவும் இவர்க்கிருந்தது. யாம் சென்னையி லிருந்த காலமெல்லாம் யாமும் எம்மைச் சார்ந்தாரும் அடுத்தடுத்துக் குளிர் காய்ச்சலாற் பற்றப்பட்டு வருந்தாநின்றேம். இதனைக் கண்ட திருநாவுக்கரசு "சென்னைக் குடியிருப்புத் தங்களெல்லார்க்குஞ் சிறிதும் இசையாததா யிருக்கின்றது. உடல் நல மன நலங்களுக்கு இசைந்த பல்லாவரமே தங்களெல்லார்க்கும் பொருந்துவதாகும்" என்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி எம்மை 1911-ஆம் ஆண்டிற் பல்லாவரத்திற் குடியேற்றி வைத்து உதவி செய்தார்.

இங்ஙனம் பலவகையாலுஞ் சிறந்த தவப்பிறவியினரான நம் அருமைத் திருநாவுக்கரசு நம்மனோரை யெல்லாம் இத்துணை விரைவில் விட்டு நீங்கியதான பெருங்குறை இத்தமிழகத்துக்கு எளிதிற் றீருமோ! எல்லாம் வல்ல சிவபிரான் இவரது சிறந்த உயிருக்கு மறுமை யுலகில் நீண்ட காலம் ஆறுதலைத் தந்தருளி, அதன் பின் இவர் மீண்டும் நம்மிடையே எல்லா வசதிகளோடும் பிறந்து, தாம் அரைகுறையாய் விட்டுச் சென்ற தமிழ்த்தொண்டு சிவத்தொண்டுகளை நன்கினிது முடித்து அதன்மேற் பிறவி யெடாராய்ச் சிவபிரான் றிருவடி நீழலில் வைகிப் பேரின்பம் நுகர்ந்திருப்பாராக வென அப்பெருமான் திருவடிப் போதுகளை இறைஞ்சி வேண்டுகின்றேம். இவர் தம் முதன் மனைவிக்குப் பிறந்த ஒரு புதல்வன் உளன். முதன் மனைவி காலமான பின் மணந்துகொண்ட இவர்தம் இரண்டாம் மனைவிக்கு ஐந்து பெண் பிள்ளைகள் உளர். இவர் தம்பியர் இருவர் உளர். இவர் தந் தந்தையார் ஆண்டில் மிக முதியராயிருக்கின்றார். சென்னையில் நம் திருநாவுக்கரசிடம் தமிழ்க் கல்வி பயின்ற இவர்தம் மாணாக்கர் பலர் உளர். அவருட் பாரிப்பாக்கந் திருக் கண்ணப்ப முதலியாரும், சென்னை முத்தியால்பேட்டை உயர்தரக் கல்விச் சாலைத் தமிழாசிரியர் மயிலைத் திரு. முத்துக் குமாரசாமி முதலியாருந் தமிழறிவிற் சிறந்தவர்களாய்த் திகழ்கின்றார்கள்.

போர்க் கருவிகள் போந்த புதுமை

(காழி. சிவ. கண்ணுசாமி. B. A.)

எஃகினாலும் இரும்பினாலுஞ் செய்யப்பட்ட ஆயுதங்களையே பெரும்பாலுந் துணையாகக் கொண்டு முற்காலங்களிற் போர்கள் நிகழ்ந்து வந்தன. இக்காலத்திலோ பெரிய பெரிய தேயங்களின் மக்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து தம் முழு அறிவையும் பயன்படுத்தி இராப்பகலாக உழைத்தாலுங்கூடப் போதிய அளவிற்குப் போர்க் கருவிகளைத் தயாரித்துக் கொள்ள முடியாத வகையிற் போர்கள் நிகழ்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து ஒரு

போரை நடத்துதற்கு வேண்டிய போர்க் கருவிகளைக் கோடிக் கணக்கிற் செய்துகொள்ளக்கூடிய திறமை வாய்ந்திருந்தா லல்லது ஒரு தேயம் மற்றொரு தேயத்தின்மீது கடற்போருக்கோ நிலப் போருக்கோ சென்று வெற்றி பெறுதலென்பது முடியாது; அத்தகையதோர் திறமை யில்லாவிடத்து அத்திறமை வாய்ந்த மற்றொரு தேயத்தையாவது அது தனக்குத் துணையாகப் பெற்றிருந்தால்தான் வெற்றி பெற முடியும்.

இனி, ஒரு மனிதனின் போர்த்திறமையை நன்கு விளக்கி வந்த பண்டைய ஆயுதங்களினால் விளைக்கப்பட்ட கெடுதியைவிட அறிவின் திறமையை விளக்கிவரும் இன்றைய ஆயுதங்களினால் விளைக்கப் பெறும் கெடுதி பன்மடங்கு அதிகமானது என்பது யாவர்க்குந் தெரிந்ததே. ஒன்றுக்கு நூறு பங்கதிகமென இவ்வாறு சாவை யூட்டிவரும் இக்கருவிகள் பல பொருள்களைக் கொண்டு செய்யப்பட்டு வருகின்றன. அப்பொருள்களில் ஒரு சிறிதும் கெடுதல் பயக்காதன வெனத் துணியப்பட்ட ஒரு சிலவும் இருக்கின்றன வென்றும் அவை எவ்வாறு இன்றியமையாதனவாக வேண்டப்பட்டுப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன வென்றும் கூறின் விந்தையாகவே தோன்றலாம். ஆயினும் அது உண்மையே. உணவிலிடும் உப்பும் உடல் கழுவும் 'சோப்' என்னும் சவர்க்காரமுமே வெடிக்கருவிகளைச் செய்ய உதவி வருகின்றன. சோப் உண்டுசெய்வதிலிருந்துதான் வெடிகுண்டிற்கு வேண்டிய முக்கிய பொருள்கள் பெறப்படுகின்றன. அப்பொருள்களைச் சீர்படுத்தப் பயன்படுவது உணவிலிடும் உப்பே. அது எப்படி யெனில், உப்பு என்பது சோடியம் என்ற உலோகச் சத்தும் குளோரின் என்ற ஆவிச்சத்துஞ் சேர்ந்தது. இயற்கையிலேயே இவ்விரண்டுஞ் சேர்ந்ததாக உப்பு நிலத்திலிருந்து வேண்டிய அளவிற்குப் பெறப்படுகிறது. உப்புச் சத்துள்ள ஓரிடத்தில் ஒரு கிணறு தோண்டிவிட்டால் அக்கிணற்று நீரின் வழியாக வேண்டிய உப்பைப் பெறலாம். உப்புநீரைக் காய்ச்சினால் நீர் ஆவியாகப் போய்விட எஞ்சி நிற்பது உப்பென்பது தெரிந்ததொன்றே. உப்பு உணவிற்கு இன்றியமையாத பொருள் தான். ஆனால், குளோரின்' என்ற ஆவிச்சத்தையும் 'காஸ்டிக்சோடா'

என்ற எரிகாரச் சத்தையும் உண்டாக்குவதற்கும் அது மிகவும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. 'குளோரின்' என்ற ஆவிச்சத்தின் உதவியாலேயே ஜெர்மானியர்கள் 'நச்சுப் புகை' என்ற ஒரு ஆவியை யுண்டுபண்ணிப் பெரும்போரில் கானடா தேய மக்களுக்குப் பெருந் தீங்கிழைத்துவிட்டனர். அந் 'நச்சுப்புகை' நிறைந்த இடத்தில் மூச்சு விடுவதென்பதே முடியாது. தப்பித் தவறி மூச்சுவிட முடிந்து பிழைத்துச் செல்வோர்களின் காற்றுப்பைகள் அவர்கள் ஆயுட்காலம் முழுதும் தேறுதவாறு கெட்டுவிடும்.

இனி, சவர்க்காரச் சாலைகளில் கொழுப்பு காய்ச்சுவதற்காகப் பெரிய பெரிய செப்புப் பாத்திரங்கள் வைத்திருப்பார்கள். கொழுப்பென்றால் ஆடு மாடுகளின் இறைச்சியிலிருந்து பெறப்படுவது மட்டு மன்று; காய் கறிகளிலிருந்தும் கொட்டைகளிலிருந்தும் பெறப்படுவதையும் அது குறிக்கும். இக்கொழுப்புடன் 'காஸ்டிக் சோடா' என்ற எரிகாரங் கரைத்த நீரைச் சேர்த்துக் குறிப்பிட்ட நேரங் காய்ச்சினால் எரிகாரச்சத்து கொழுப்புடன் கலந்து விடுகிறது. அக்கலப்பு ஏற்பட்டவுடன் இரண்டு புதுப்பொருள்கள் தோன்றுகின்றன.

முதலில் அவ்விரண்டு பொருள்களும் தனியாகப் பிரிந்து தோன்றுவதில்லை; ஒன்றுடனொன்று கலந்தே தோன்றும். ஆனால் ஒரு சிறிது உப்பைக் கரைத்த உவர்நீரை அக்கலப்பில் ஊற்றினாலோ அவ்விரண்டும் தனியாகப் பிரிகின்றன. ஒன்று கட்டியாக மாறி அடியிற் சென்று தங்குகிறது. அதுவே 'சோப்' என்னும் சவர்க்காரம். கொழுப்பும் எரிகாரமுஞ் சேர்ந்த கலப்பு நீரிலிருந்த அது உவர்நீர் சேர்ந்தவுடன் கட்டியாகப் பிரிந்து விடுகிறது. அஃதேனெனின் சவர்க்காரம் உவர்நீரிற் கரையாததாகையினால்தான். இப்பொழுதும் கடலில் சவர்க்காரந் தேய்த்துக் குளித்தல் முடியாது என்பது நன்கு தெரிந்ததே.

மேல் இரண்டு பொருள்கள் தோற்றமுறுகின்றன என்று கூறியதில் "சோப்" என்ற இதுவொன்று நீங்க மற்றொன்று "கிளிஸரைன்" என்பதாகும். இது கொழுப்பும் எரிகார நீரும்


உவர்நீருஞ் சேர்ந்த கலப்பு நீரேயாகும். இதை நன்றாக வடிகட்டியபின் சுத்தமான "கிளிஸரைன்" தனியாக எடுக்கப்படும்.

இவை சரி; 'சோப்' என்பதும் 'கிளிஸரைன்' என்பதும் எவ்வாறு உண்டாக்கப்படுகின்றன வென்பது தெரிந்தது; ஆயினும் அவற்றிற்கும் போர்க் கருவிகளுக்கும் என்ன தொடர்போ தெரியவில்லையே என்று கேட்கலாம். கிளிஸரைனுடன் 'ஸல்ப்யூரிக் ஆஸிட்' என்ற கந்தகப் புளிப்பையும் 'நைட்ரிக் ஆஸிட்' என்ற தீப்புளிப்பையுஞ் சேர்த்து வெடி மருந்துகள் செய்யப்படுகின்றன. கிளிஸரைனில் "ஆக்ஸிஜன்" என்ற உயிர்வளியும், "ஹைட்ரஜன்" என்ற நீர்வளியும் "கார்பன்" என்ற கரியும் கலந்திருக்கின்றன. ஆகவே இக்கலப்புடன் ஒரு சிறிது "நைட்ரஜன்" என்ற தீவளியைச் சேர்த்தால் வெடி பொருள்கள் செய்து கொள்ளலாம். இந்தத் தீவளியும் கிளிஸரைனும் சேர்ந்த கலவைக்கு 'நைட்ரோ கிளிஸரைன்' என்று பெயர். இக்கலவையே எத்தகைய வெடி பொருட்கும் அடிப்படையாகும். இனி வெடிமருந்துகள் உண்டாக்கப் படுவதைப் பற்றி அடுத்த இதழில் விவரிப்பாம்.

மணி. திருநாவுக்கரசு முதலியார்

நமது செல்விக்கு முதலாவது ஆண்டில் ஆசிரியராயிருந்தவரும், தென்னாடு முழுதும் 'சொன்மாரி' என்று யாவராலும் பாராட்டப்பட்டவரும், நல்லியல்பும், கூர்த்த அறிவும், உயர்ந்த ஆசிரியத்தன்மையும், செந்நாப்புலமையும் மிக்குடையவருமாகிய திரு. முதலியாரவர்கள் தமது இளம்பருவத்திலேயே 23—5—1931 சனிக்கிழமையன்று உயிர் துறந்தமை கேட்டு உளமிக வருந்தினோம். மறுமையுலகில் அவர்களுடைய உயிர் சிவமணத்திற்படிக. அவர்களுடைய குடும்பத்தவருக்கும், நண்பர் குழுவினருக்கும் எங்கள் ஆராத்துயரத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றோம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார்.



மின்சார வல்லுநர் தோமாஸ் ஆல்வா எடிசன்

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ	மெய்கண்டான் யாண்டு-எாஅ ஆனித்திங்கள் 1931ஞ ஜூன்—ஜூலை மூ	பரல் கூ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

ஏறி லெருதேறு மேழிலா யிழையோடும்
வேறும் முடனுமாம் விகிர்த ரவரேன்ன
நாறும் மலர்ப்பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் மடியார்கட் கடையா குற்றமே.

ஏறி லெரு தேறும்=ஏறினல் எருதினையே ஊர்தியாகக்கொண்டு ஏறுகின்றவனும்

எழிலாயிழை=ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த அழகுடைய உமாதேவியாரோடு

ஓடும் (ஆம்)=ஒன்ருகியும்

வேறும் (ஆம்)=வேருகியும்

உடனும் ஆம்=உடனுகியும் இருக்கின்றவனுமாயுள்ள

விகிர்தரவர் என்ன=(தமது உண்மையியலிலிருந்து வேறுபட்ட பொது இயலில்) பல்வேறு வடிவமுடையவர் என்று

நாறும் மலர்ப்பொய்கை=மணம் வீசுகின்ற பூக்கள் நிறைந்த பொய்கையினை உடைய

நல்லூர்ப் பெருமானை=திருநல்லூரில் திருமேனிகொண் டருளியிருக்கும் முதல்வனை

கூறும் அடியார்கட்கு=துதித்துப் புகழ்கின்ற அடியார்களுக்கு

குற்றம்=மலத்தினுலாகிய குற்றங்கள்

அடையா=அடையாவாம்.

இந்தத் தேவாரப் பாட்டு இறைவன் இறைவியுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் கலந்திருக்கின்ற (பொதுவியல்) அத்துவிதத்தைக் கூறுகின்றது. ஏறி லெரு தேறும் என்பது இறைவனுக்கு அற வடிவாயுள்ள எருதொன்றே சிறப்பான ஊர்தியாக இருத்தலால் எரு தேறும் ,என்று கூறாமல் ஏறி லெரு தேறும் என்று கூறினர். **திருநாவுக்கரசு சுவாமிகளும்** "அயிராவணமேறா தானேறேறி" என்றார்.

எழில் ஆயிழை என்றது உமாதேவியார் அழகுக் கொருவரு மொவ்வாதவர் என்றபடி. "அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி" என்று **அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியிற்** கூறினர். ஓடும் வேறுமுடனும் என்பது ஒன்றாய் வேறாய் உடனாய் என்ற மூன்று வகை அத்துவித இயைபுகளையும் குறிக்கின்றது.

விகிர்தர்—விகிர்தம் (**विकृत**) என்ற வடமொழிச் சொல் வேறுபாடு அல்லது மாறுபாடு (Change) என்று பொருள் படும். (**विकृ**) என்ற அடிச் சொல் மாறு (to Change) என்ற பொருளைக் குறிக்கும். விகிர்தர் என்பது வேறுபட்ட பல வடிவங்களை யுடையவர் ஆகும்.

இறைவன் இறைவியோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் கலந்து நிற்கிற பொது இயல் (தடத்த இலக்கணம்) நிலையில் பல வடிவங்களை உடையவர் ஆகின்றார் என்பது குறிக்கப்பட்டது. குற்றம் பால்பகா அஃறிணைப் பெயர். அது மலச் சேர்க்கையா லுண்டாகிய பலவகைக் குற்றங்களை உணர்த்துதலால் "அடையா" என்னும் பன்மை வினைகொண்டது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

தென்புலத்தார் யார்?

(ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது)

சென்ற தைப்பூச நாளன்று பல்லாவரத்தில் நடைபெற்ற பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டுவிழாப் பேரவையில் திருவாளர் கி. குப்புசாமி முதலியாரவர்கள் "தென்புலத்தார் தெய்வ" மென்னுந் திருக்குறளிற் போந்த தென்புலத்தா ரென்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார்உரையைத் தழுவி உரைத்த கொள்கையினை யாம் உடன்படாது, அச்சொல்லுக்கு வேறு பொருள் கூறினேமாக, அதுபற்றி அறிஞர்க்குள் வழக்கு நேர்ந்ததாகலின், யாம் கொண்ட கருத்தினை நன்கு விளக்கிக் காட்டவேண்டுமென அன்பர் பலர் கேட்டுக்கொண்டதற் கிணங்கி, அதனை இங்கே இயன்றமட்டும் விளக்குவான் புகுந்தேம்.

தென்புலத்தா ரென்பதற்குப் பரிமேலழகியா ருரைத்த பொருள் இது: "தென்புலத்தார் பிதிரர்; பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கு இடம் தென்றிசையாதலின் தென்புலத்தா ரென்றார்."

இனித், தெற்கே குமரிநாடு இருந்தகாலத்து அதன்கண் ஓடிய பஃறுளி யாற்றங்கரையை யடுத்த பெருநாட்டில் அரசு செலுத்திய பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி மேலதாக வைத்து நெட்டிமையார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய "ஆவுமானியற் பார்ப்பனமாக்களும்" (புறநானூறு, கூ) என்னுஞ் செய்யுளினும்,

"தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறூஅ தீரும்"

என்று தென்புலம் வாழ்நர் குறிக்கப்படுகின்றனர். இச் செய்யுளுக் கெழுதப்பட்ட பழைய உரையில் தென்புலம் வாழ்நர் என்பதற்குத் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியிலிறந்தோர்" என்பது பொருளாக எழுதப்பட்டிருக்கின்றது.

தென்புலத்தார் என்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார் உரைத்த பொருளும், புறநானூற்று உரைகாரர் உரைத்த பொருளும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மாறுபட்டு நிற்றல் மேலே காட்டிய அவ்விருவருரைகளையும் ஒத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

இனி, இவ் விருவேறு உரையுள் எஃது அச்சொற்பொருள் உண்மை யறிவிப்பதென்பது ஆராயற்பாற்று. இந்நிலவுலக மெங்கணுமுள்ள மக்கட் கூட்டத்தாரிற், பண்டுதொட்டு நாகரிகத்திற் சிறந்தார் முதல் அதிற் சிறவாதார் ஈறாக எல்லா வகுப்பினரும் இறந்துபட்ட தத்தம் முன்னோர்களை நினைந்து வழிபாடாற்றி வந்திருக்கின்றனர். தம் முன்னோரை நினைந்து வழிபடாத ஒரு வகுப்பினரை யாண்டுங் காண்டல் இயலாது. எங்குமுள்ள மக்களின் இவ்வியற்கை வழக்கத்துக்கு இசையவே நம் பண்டைத் தமிழ்மக்களுந் தம்மை நாகரிக வாழ்க்கையில் வாழச் செய்த தம் முன்னோரை நினைந்து வழிபாடு செய்துவந்தனர்; இவர் அங்ஙனந் தம் முன்னோரை வழிபட்டு வந்த குறிப்புப் புறநானூற்றுரைகாரர் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங் குடியில் இறந்தோர்" என்றுரைத்த வுரையால் தெற்றென விளங்காநிற்கின்றது.

மற்றுப், பரிமேலழகியார் உரைத்த உரையோ தமிழரில் இறந்து பட்ட முன்னோரைக் குறியாதாய்த், 'தென்புலத்தார்' என்பதற்குப் 'பிதிரர்' என்று பொருள் கூறி, "அப்பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி" என்றும், "அவர்க்கிடந் தென்றிசை" என்றும் அவர் வரலாறு விரித்தது. எனவே, பிதுரர் என்பார் தமிழரின் இறந்துபட்ட முன்னோரல்ல ரென்பதூஉம், அவர் நான்முகனாற் படைப்புக்காலந்தொட்டே படைக்கப்பட்டுத் தென்றிசைக்கண் வாழும் ஒரு கடவுள் வகுப்பினராவ ரென்பதூஉம் பரிமேலழகியார் கருத்தாகின்றன. ஆனல், வடநூல்களிலோ பிதுரரைப் பற்றிய வரலாறு பரிமேலழகியார் கூறியபடி காணப்படவில்லை. அரிவம்ஸத்திலும் வாயுபுராணத்திலும் அவர் வரலாறு இங்ஙனம்

சொல்லப்படுகின்றது: "தேவர்கள் நான்முகனை வணங்காது இகழுவே, அவன் அவர்களைப் பேதையராகும்படி வைதான்; அது கண்டு அவர் தாஞ் செய்த பிழையைப் பொறுக்கும்படி வேண்ட, அவன் அவர்களை நோக்கி 'நீவிர் நும்புதல்வர்பால் அறிவு பெறக்கடவீர்' என்று ஏவினன். அங்ஙனமே அத்தேவர்கள் தம் புதல்வர்பாற் றவச்சடங்குங் கழுவாய்ச் சடங்குங் கற்றுணர்ந்து அங்ஙனங் கற்றுணர்ந்தமை நோக்கித் தம் புதல்வர்களையே 'பிதுரர்' என வழங்கினர்; அக் காரணம் பற்றியே தேவர்களின் புதல்வர்கள் முதற்பிதுர ராயினர்." ஏனைய புராணங்களும் பிதுரர் வரலாற்றை இவ்வாறே நுவல்கின்றன. ஆனால், மனுஸ்மிருதியோ, இரணியகருப்பன் மகன் மனு; அவன் புதல்வர்களான விராஜர், மரீசி, அத்திரி, பிருகு, ஆங்கிரசர், புலத்தியர், வசிட்டர் முதலான எழு முனிவர்களின் மக்களே 'பிதுரர்' ஆவரென்றும், இவர்கள் எழுவகைக் கூட்டத்தினராய்ச் சாத்தியர்களுக்கும் அக்நிஷ்வாத்தர்களுக்கும், தைத்தியர் தானவர் இயக்கர் கந்தருவர் நாகர் இராக்கதர் சுபர்ணர் கின்னரர்களுக்கும், பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் பிதுரராவரென்றும் நுவலா நிற்கின்றது (௩, ௧௯௪-௧௯௭). இந் நூல்களிலாதல், ஆபஸ்தம்பர் கௌதமர் வசிட்டர் போதாயனர் இயற்றிய தருமசூத்திரங்களிலாதல், சாங்காயனர் ஆஸ்வலாயனர் பாரஸ்கரர் காதிரர் கோபிலர் இரணியகேசின் ஆபஸ்தம்பர் இயற்றிய கிருகிய சூத்திரங்களிலாதல் மேற்கூறிய 'பிதுரர்' தென்புலத்தில் உள்ளவராகக் குறிப்பிடப்படவில்லை.

இனி, இந்நூல்களுக்கும் வடமொழியில் உள்ள மற்றெந் நூல்களுக்கும் முற்பட்டதாகிய இருக்குவேதமானது எவரைப் பிதுரர் என்று கூறுகின்றதென்பதைச் சிறிது ஆராய்வோம். இருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின்கண் உள்ள பதினைந்தாம் பதிகமானது பிதுரர்கண்மேற் பாடப்பட்டிருக்கின்றது. அதனைப் பாடிய பண்டை ஆரியர் இறந்துபோன தம் முன்னோரையே பிதுரர்களாக விளித்துப் பாடியிருக்கின்றனர்; அவர்

பாடிய அப்பதிகத்தின் சில பகுதிகளை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றேம்:-

"சோமபானத்தில் ஒருகூறு பெறுதற்குத் தக்காரான மூதாதைகள்
கீழுள்ள நடுவுள்ள மேலுள்ள உலகட்கு மேலேறுக!
ஆவிவடிவத்தைப் பெற்ற அவர்கள் அமைதியும் அறமுமுடையராய்
யாம் அழைக்குங்கால் வந்து எமக்கு உதவிசெய்க! (க)

முன்னரே இறந்துபோனேரும், அவர்க்குப்பின்னர் இறந்துபோனேரும்
இம் மண்ணுலகத்திற்கு அணித்தாகத் தங்கினேரும்,
வல்லரான தேவர்களிடையே தங்குவோரும் ஆகிய
மூதாதைகளுக்கு இவ்வணக்கத்தைச் செலுத்துவோமாக! (உ)

சோமநறவைப் பெறுதற்குத் தக்காரான, எங்கள் சோமவிருந்திற்குச்
சிறப்புடன் வந்தோரான எங்கள் பழைய மூதாதைகளுடன்
விழைவுடையாரோடு விழைவுடையனுய்க் களிப்புடையனுய்
இயமன் தான்வேண்டியபடி யாமிடும்அவியுணவைஅயில்க! (ங)

ஓ தீக்கடவுளே, ஒளிபுலகில் உறைபவராய், மூதற் பிறந்தவராய்,
இறைவனை வழுத்துபவராய்
அவியுணவை அயில்பவரும் பருகுபவருமாய், மெய்ம்மையுடையராய்த்,
தேவர்களோடும் இந்திரனேடும் இயங்குபவராய் உள்ள எம்
எண்ணிறந்த பண்டை மூதாதைகளுடன் நீ வருக! (௯)

ஓ ஜாதவேதனே, இங்கு வந்தவரும் வராதவரும், யாம் அறிந்தவரும்
அறியாதவரும் ஆன மூதாதைகள் இத்துணையரென்பதை
நீ நன்குணர்வை;அவரவர் பங்குக்கென்று நன்குசமைத்துவைக்கப்பட்ட
இவ் வேள்வியை ஏற்றுக்கொள்க! (கங)

தீயில் எரிக்கப்பட்டவரும், எரிக்கப்படாமற் புதைக்கப்பட்டவரும்
ஆன அவர்கள் வானுலகின் நடுவில் தாம் பெறும் அவியுணவி
னுற் களிகூர்கின்றூர்கள்;
ஓ முதல்வனே, அவர்கட்கு ஆவியுலகத்தையும்,அவர்கட்குரிய
ஆவியுடம்பையும், நின்னுள்ளம் வேண்டியபடியே ஈந்திடுக!" (கச)

இங்ஙனம் போந்த பழைய இவ் இருக்குவேதப் பதிகத்தில், ஆரியரின் மூதாதைகளே "பிதுரர்" ஆதலும்; அவர்கள் தாந் தாஞ் செய்த நல்வினை தீவினைக்கேற்ப இறந்தபின் இம் மண்ணு

லகத்திற்கு அணிமையிலும் இதற்குமேல் நடுவணதான வானுல கிலும் அதற்குமேலுள்ள துறக்கவுலகிலுஞ் சென்று வைகுத லும்; அவர்தம் மூதாதைகள் இறந்தஞான்று அவர்களுள் ஒரு பகுதியாரை நெருப்பிலிட்டு எரித்தும், மற்றொரு பகுதியாரை மண்ணின் கீழிட்டுப் புதைத்தும் வந்தனரென்பதால் அப் பிதுரர், பரிமேலழகியார் கூறியபடி "அயனாற் படைக்கப்பட்ட தோர் கடவுட்சாதி" யாகாமையுந் தெற்றென விளங்காநிற்கும். ஆரியரின் மூதாதைகளான அப் பிதுரர்கள், இயமன் உலகத்தி லும் பகலவன் உலகத்திலுந் திங்கள்உலகத்திலுஞ் சென்று வை குவரென அவ்விருக்குவேத ஒன்பதாம் மண்டிலத்தில் ககரு-ஆம் பதிகத்து அ, கூ, ய ஆஞ் செய்யுட்கள் மொழிகின்றனவே யன்றி, அவர் தென்புலத்தின்கட் சென்று வைகுவரெனக் கூறு கின்றில. மேலும், ஆரியர் தம்மைச் சேர்ந்தார் உயிர்துறக்குங் கால் இயமனை வேண்டிப் பாடிய பதிகத்தில், இறந்து செல் வோன் உயிரைநோக்கி,

> "ஓடுக! சரமாவின் குட்டிகளும், பழுப்புநிறத்தோடு பலவரிகளை யுடையனவும் நான்கு கண்கள் வாய்ந்தனவும் ஆகிய இரண்டுநாய் களையும் நின் இனிய வழியினிடையே விரைந்து கடந்துசெல்க! இயமனுடன் கூடி மகிழ்ந்திருப்பாரான இரக்க நெஞ்சமுள்ள மூதாதைகள்பால் விரைந்து அணுகுக!"

(இருக்குவேதம், ய, கச, ய) என்று கூறுதல் கொண்டுந், தம் மூதாதையர் இயமனுலகத்திற்குச் செல்வதாகப் பண்டை யாரியர் நம்பிவந்தமை நன்கு புலனாகாநிற்கும். இயமன் தென்பு லத்திற்கு உரியவனாகப் பிற்காலத்தெழுந்த வடநூல்கள் நுவ லுங் கதை, பண்டை வடநூலாகிய இருக்குவேதத்தில் யாண் டுங் காணப்படாமை கருத்திற் பதிக்கற்பாற்று. அவர் சென்று வைகும் இயமனுலகு, வானநாட்டின் நடுவண் உள்ளதாகவே முன்னர்க் காட்டிய கரு-ஆம் பதிகத்தின் கச-ஆஞ் செய்யுள் ஐய மறவோதுதல் காண்க.

இன்னும் அவ் இருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின் பதி னாறும் பதிகத்து ங-ஆஞ் செய்யுளானது இறந்து செல்லும் ஒருவனுயிரை நோக்கிக் கூறுகின்றுழிப்,

> "பகலவன் நின்கண்களைப் பெறுக; காற்று நின் உயிர்ப்பைப் பெறுக; நின் வினைப்பயனுக்குத்தக மண்ணுலகத்திற்கோ விண்ணுலகத்திற்கோ நீ செல்க!
> நின்வினை அங்ஙனமாயின் நீ நீரினுட் செல்க; அல்லது செடிகளினுட் புகுந்து, நின் உறுப்புக்கள் எல்லாவற்றுடனும் ஆண்டு வைகுக!"

என்றுரைக்குமாற்றால், நல்வினைசெய்த உயிர் விண்ணுலகத்திற் சென்று வாழுமென்பதும்; நல்வினைசெய்யாத உயிர் மண்ணுலகத்தை யடுத்துப் பேய்களாக அலைந்து திரிதலே யல்லாமல், நீரினுட் புகுந்து நீரணங்காகவும் கானகத்துள்ள செடிகளினூடே புகுந்து காட்டணங்காகவும் உறையுமென்பதும் பண்டையாரியர்தம் நம்பிக்கையாதல் நன்கு புலனாகின்ற தன்றோ? இங்ஙனமெல்லாம் இறந்துசென்ற உயிர்கள் வைகும் இடங்கள் வான் நடுவணதான இயமனுலகும், ஞாயிறு திங்களுலகும், மண்ணுலகும், மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவணதாம் உலகும், நீருங் காடுமேயாம் என இருக்குவேதம் நுவலக் காண்கின்றனமேயன்றி, அது தென்புலம் என நுவலுதலை அதன்கண் யாண்டுங் கண்டிலேம். அது நிற்க.

இனிப், பிதுரரை ஒரு கடவுட்சாதியென்று கூறிய பரிமேலழகியாருரை ஒரு சிறிதும் பொருந்தாமை இருக்குவேத ஆராய்ச்சியால் தெற்றென விளங்குதலும் ஈண்டுக் காட்டுவாம். தேவர்கள் இயங்கும் நெறியையும், இறந்து செல்லும் பிதுரர்கள் இயங்கும் நெறியையும், இருக்குவேதப் பத்தாம் மண்டிலப் பதினெட்டாம் பதிகத்து முதற்செய்யுளும், இரண்டாம் பதிகத்து ஏழாஞ் செய்யுளும் முறையே,

> "ஓ மிருத்யுவே, தேவர்கள் வழக்கமாய்ச் செல்லும் நெறியை அகன்று, நினக்குத் தனியேயுரிய நெறியின்கண் இங்கிருந்து புறப்பட்டுச் செல்க!"

என்றும்,

> "அங்கியே, பிதுரர்கள் செல்லும் நெறியை நன்குதெரிந்து கொண்டு, அதன் நெடுகச் சுடர்ந்தெரிந்து பேரொளி விளக்கத்தைச்செய்க!"

என்றும் வேறுவேறு கூறுதலை உற்றுநோக்கவல்லார்க்குப், பண்டை ஆரியர்கள் தேவரையும் பிதுரரையும் வேறுவேறாகக்

கருதினரே யல்லாமற், பிதுரரையுந் தேவராகக் கருதிற்றில ரென்னும் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்குவிளங் காநிற்கும். ஆகவே, பண்டையாரியர் இயற்றிய வேத வழக் குக்கு முற்றும் முரணுகப், பிதுரரைத் தேவரென்றுரைப்போர் வேதவழக்கைத் தழுவிய 'வைதிக' ராதல் யாங்ஙனம் என மறுக்க.

இருக்குவேதத்தை எழுத்தெண்ணிப் பயின்றவரும், அதனை முதன் முதல் அச்சிற் பதிப்பித்து, அதன் பதிகங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் துதவியவருமான மாக்ஸ்மூலர் என்னும் ஆசிரியர் (Professor Max Muller), "வேதத்தில் மூதாதையர் அல்லது பிதிரர் தேவர்களுடன் சேர்த்து வழுத்தப்படுகின்றனர்; என்றாலும், அவர்கள் மற்ற வருடன் ஒன்றுகவைத்து மயங்கக் கூறப்படவில்லை. தேவர் கள் பிதுரர்களாதல் எஞ்ஞான்றும் இல்லை. மனுவினாலும் யாஞ் ஞியவற்கியராலும் பிதுரர்கள் ஒரோவொருகாற் பண்டைத் தேவ வகுப்பினர்நிலைக்கு உயர்த்தப்பட்டுத் 'தேவ' என்னும் அடைமொழியால் வழங்கப்படினும், பிதாருந் தேவருந் தனித் தனித் தோற்றமுடைய ரென்பதும், மக்கள் உள்ளமானது தான் வழிபடுதற்கென்று வகுத்துக்கொண்ட இருவேறு நிலை களைக் குறிப்பவரென்பதும் நாம் எளிதிற் காண்டல் கூடும். இஃது என்றும் மறக்கப்படாத ஒரு பாடமாக இருத்தல்வேண் டும். இருக்குவேத ௬-ஆம் மண்டிலத்து ௫௨-ஆம் பதிகத்தின் ௪-ஆஞ் செய்யுளில் இங்ஙனங் காண்கின்றோம்:

"மேலெழுகின்றவிடியற்காலம்என்னைக்காப்பதாக! ஓடுகின்றயாறு கள் என்னைக் காப்பனவாக! திண்ணியமலைகள் என்னைக்காக்க! தேவர்களை அழைக்கும் இப்போது பிதுரர்கள் என்னைக்காப்பாராக!

இச்செய்யுளில், விடியற்காலமும் யாறுகளும் மலைகளுந் தேவர்கள் வணக்கவுரையிற் சேர்த்துச் சொல்லப்படினும், அவற்றின் வேறான இருப்பு உடையாராகப் பிதுரர்கள் நுவலப் படுதல் இனிது விளங்குதல் காண்க.

"இதுவேயுமன்றி, மூதாதையருள்ளுந் துவக்கத்தி லிருந்தே இருவேறு வகையினர் கருதப்படுதலும் நாம் பகுத்துணர்ந்துகொள்ளவேண்டும்; அவருள் ஒரு பகுதியார் நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபோகி அரைவாசி மறக்கப்பட்டவர்களாய்ச், சில குடும்பங்களின் உண்மையில் இல்லாத முன்னோராவர், அல்லது, வேதநூற் புலவரின் கருத்துப்படி மக்கட்டொகுதி முழுதுமேயாவர்; மற்றொரு பகுதியார் சிறிது காலத்திற்கு முன்னரே இறந்துபோகி, இன்னும் பின்னுள்ளோரால் நினைந்து பணியப்படுவோ ராவர்.

"மிகப் பழைய மூதாதையர் பொதுவாகத் தேவர்களுக்கு அணுக்கராவர். இறந்துசென்ற உயிர்களுக்கு அரசனான இயமன்றன் உலகத்திற்குச்சென்று, அங்கே அவர்கள் தேவர் சிலருடன் கூடியிருப்பவராக அடிக்கடி நுவலப்படுகின்றனர். (இருக்குவேதம், எ, எகூ, ச, தேவாநாம் சதமாதா; இருக்குவேதம், ௰, கரு, உ, தேவாநாம் வசநீ:)

"இன்னும், பாட்டனுக்குப் பாட்டனுவார் துறக்கவுலகையும், பாட்டன்மாராவர் வானுலகையுந், தாதையர் மண்ணுலகையுஞ் சார்ந்திருப்பவராய், முதற்சொன்னவர் ஆதித்தியருடனும், இரண்டாவது சொன்னவர் உருத்திரருடனுங், கடைசியிற் சொன்னவர் வசுக்களுடனுங் கூடியிருப்பவராகக் கூறப்படுதலைச் சிலகாற் காண்கின்றேம்.

"இயமனை பிதுரரில் ஒருவனுக வைத்து வழுத்தப்படுதலுடன், அவன் மக்களுள் முதன் முதல் இறந்தவனென்றும், மூதாதையர் செல்லும் நெறியாகி மேற்றிசையிற் பகலவன்மறையுமிடத்துக்குச் செலுத்தாநின்ற 'பிதிரியானத்' தை மிதித்தவனுவன் என்றும் வழுத்தப்படுகின்றான்; (இருக்குவேதம், ௰, உ, எ; ௰, கச, க-உ), அவன் வைவசுவதன் என்றும் (௰, ருஅ, க), வைசுவதன் மகன் என்றுஞ் (௰, கச, ரு) சொல்லப்படுகின்றான். பின்வந்த அதர்வவேத காலத்தில் இயமன் மக்களுள் முதற் றேன்றியவனுகச் சொல்லப்படுகின்றான் (அதர்வவேதம்,

௧அ, ௩, ௧௩; இருக்குவேதம், ம, ௧௪, ௧-உடன் ஒத்து நோக்குக)''*

என்று மாக்ஸ்மூலர் என்னும் ஆசிரியர் கூறுதல்போலவே, வேதநூலாராய்ச்சி வல்ல கீத் (A. B. Keith) என்னும் அறிஞருந், "தேவர்கள் நெறியானது பிதுரர்கள் நெறியின் வேறுவதென்றே அடுத்தடுத்துச் சொல்லப்படுகின்றது; வழியில் நாய்கள் இருக்குமென்பதனால் அந்நெறியானது தனிப்பட்டதென்பதும், அமைதிவாய்ந்த தேவநெறி யாகாதென்பதும் புலனாகின்றன."† என்று பெரிதாராய்ந் தெழுதியிருக்கிறார்.

மேலே மாக்ஸ்மூலர் ஆராய்ந்துரைத்த பகுதியாற், பிதுரர் இருவகையினராய், நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபட்டு அவருக்குப்பின் வந்தாரால் மறக்கப்பட்டவரும், பிற்காலங்களில் இறந்துபட்டுப் பின்னுள்ளாரால் நினைவுகூரப்பட்டவரும் ஆதலும், அவர் துறக்கம் வான் நிலம் என்னும் உலகுகளைச் சார்ந்து வைகுவார் ஆதலும்; பிதுரர்களுக்குத் தலைவனான இயமனே பண்டொருகால் மக்களுள் ஒருவனாய் இருந்து முதன் முதல் இறந்துபட்டோனாதலும்; அவனும் பிதுரரும் இருக்குமிடம் பகலவன் மறையும் மேற்றிசைக் கண்ணதாதலும் நன்கு புலனாகின்றன. இவை யவ்வளவும் இருக்குவேதப் பதிகங்களால் ஐயமறத் தெரிக்கப்படுமாறும் மேலே அவைதம்மை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கின்றேம். எனவே, பிதுரராவார் "அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்றும், "அவர்க்கிடந் தென்றிசை" என்றும் பரிமேலழகியாரும் அவரைப் பின்பற்றினாருங் கூறும் உரை, அவர்தாம் இறைவன் நூலாகக்கொண்ட பண்டை ஆரிய இருக்குவேத வுரைக்கே முற்றும் மாறாய் நிற்றல் கண்டுகொள்க.

---

*Prof. Max Muller's 'India What Can It Teach Us?,' pp 222—223

†'The Religion and Philosophy of the vedas and Upanishads,' by A. B. Keith, D. C. L., D. Litt., p. 411

இனி, வடக்கிருந்த ஆரியர்கள் இறந்துபோன தம் முன்னோரை நினைந்து வழிபட்டு வந்தாற்போலவே, தெற்கிருந்த தமிழர்களும் பண்டிருந்த தமது குமரிநாட்டின்கண் நாகரிகத்திற் றலைசிறந்தாராய் வாழ்ந்துசென்ற தம் முன்னோரை நினைந்து வழிபட்டு வந்தாராகல் வேண்டுமென்பது, தொடக்கத்தில் எடுத்துக்காட்டிய "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னும் பழைய புறநானூற்றுச் செய்யுளிற் போந்த "தென்புலம் வாழ்நர்" என்னுஞ் சொற்றொடராலும், "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நங் குடியில் இறந்தோர்" என்னும் அதன் பழைய வுரையாலும் நன்கு புலனாகின்ற தன்றோ? பண்டை நாளிருந்த 'குமரிநாடு' இப்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கே பெரும்பரப்பினதாய் இருந்தமையும், அதன்கட் பல்லாயிர ஆண்டுகட்குமுன் உயிர்வாழ்ந்த பழந்தமிழ் மக்கள் இம்மை மறுமைக்குரிய எல்லாத் துறைகளிலும் நாகரிகத்திற் றலைசிறந்து நின்றமையும், அந் நாட்டின்கட் செங்கோலோச்சிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்தே தோல்காப்பியம் என்னும் ஒப்புயர்வற்ற செந்தமிழ்த் தனி முதல்நூல் அரங்கேற்றப்பட்டமையும், அஞ்ஞான்றிருந்த செந்தமிழ் மக்களின் நாகரிகத்திலிருந்தே பிறநாடுகளிலிருந்த 'ஆரியர்,' 'பாரசிகர்,' 'எபிரேயர்' முதலான ஏனை மக்கட்பிரிவின ரெல்லாருஞ் சிறிது சிறிதாக நாகரிகம் இன்னதெனத் தெரிந்து சீர்திருந்தினமையும், இன்னும் இதனை யொட்டிய பிற வரலாற்றுக் குறிப்புகளுங் மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் எமது பெருநூலில் விரித்து விளக்கியிருக்கின்றேம். அத்துணை நாகரிகத்திற் சிறந்த பண்டைத் தமிழ்மக்கள், தாம் இருந்த தென்புலமாகிய தமிழகத்தில் தமக்கு முன்னரே நாகரிகமுடையராயிருந்து இறந்துபோன தம் மூதாதைகளையே 'தென்புலத்தார்' என வழங்கி வழிபட்டு வாழ்ந்து வந்தனரன்றித், தமக்கு ஏதொரு தொடர்பு மில்லாத ஆரியர்தம் மூதாதைகளாகிய 'பிதுரர்' களையாதல், இற்றைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஆரியக் குருக்கண்மாராலுந், தமிழ்நாட்டுக் குருக்கண்மாராலுங் கட்டியெழுதப்பட்ட புராணங்களிற் புதிது புகுந்த அயன் படைப்

பான 'பிதுரர்'களையாதல் வணங்கிவந்தவ ரல்லர். ஆரியக் குருக்கண்மார் புதிது கட்டிய கட்டுப்பாட்டில் அகப்பட்டுத் 'திவசங்' கொடுக்கின்ற இஞ்ஞான்றைத் தமிழர்களுங்கூடத், தம் தாய்தந்தையார், பாட்டன் பாட்டியர், பூட்டன் பூட்டியரை நினைந்து அது செய்யக் காண்கின்றனமே யன்றிப், பரிமேலழகியார் கூறும் அயன் படைப்பான பிதுரரை நினைந்து அங்ஙனஞ் செய்யக் காண்கின்றிலேம். இதனலும், பரிமேலழகியாருரை பண்டைத் தமிழ்வழக்குக்காதல் பின்றைத் தமிழ்வழக்குக்காதல் சிறிதும் இசைந்து நில்லாமை, இதனை நடுநின்று காண்பாரெவர்க்கும் நன்கு விளங்காநிற்கும்.

இனி, ஆரியர் தம் மூதாதைகளை வழிபடும் முறையும், தமிழர் தம் மூதாதைகளை வழிபடும் முறையுந் தம்மிற் பெரிதும் வேறுபடுவ வென்பது காட்டுதும். ஆரியர்க்கு மிகப் பழைய நூலாகிய இருக்கு, எசுர், சாமம், அதர்வம் முதலிய நான்கு வேதங்களிலேனும், அவற்றின்கட் சொல்லப்பட்ட வேள்விகள் இங்ஙனம் வேட்கற்பால என அவற்றின் முறைகளை விரித்து அவ் வேதங்களுக்கு உரை நூல்களாய் எழுந்த பிராமணங்களிலேனும் உயிர்களுக்கு ஊழ்வினையும் மறு பிறவிகளும் உண்டென்பது எட்டுணையுங் காணப்படவில்லை. அதனல், இறந்த உயிர்கள் தாஞ் செய் ஊழ்வினையால் மீளப் பிறக்கும் என்னும் உண்மையைப் பண்டைநாளில்,

தொடரும்.

வள்ளுவர் வாய்மொழிக் கோடல் அல்லது புலவர் நட்பு

[திருநெல்வேலி, S. கணபதி B. A.]

தோற்றுவாய்: காண்பன வெல்லாம் காட்சியாகா; பாலெல்லாம் நல்லாவின் பாலாகா; அங்ஙனே நூல்களெல்லாம் நூல்களாகா. மலர்தலையுலகிடைத் தோன்றிய நூல்கள் பலவேயாயினும் அவைகளை எல்லாம் ஆன்றோர் நன்னூல்களெனக்கொள்ளுமா

றில்லை. நன்னூலாயின் அந்நூல் ஆக்கியோன் காலத்தே பல புலவர்களானும் புரவலர்களானும் போற்றப்பட்டிருத்தல்வேண்டும்; பல புலவர்கள் அந்நூற்கண் காணக்கிடக்கும் செம்பொருள்களைப் பொன்னேபோல் போற்றித் தங்களது நூல்களில் எடுத்து ஆண்டிருத்தல் வேண்டும். அஃதுளதாயின் அந்நூலாசிரியன் வினையினீங்கி விளங்கிய அறிவினையுடையவன் என்று காவலரானும் பாவலரானும் கற்றோரானும் மற்றோரானும் சென்னிமேல் நனிகொள்ளப்படுவன். அஃதிலதாயின் அந்நூற்புலவன் புலவன் (அஃதாவது தேர்ந்த அறிவினையுடையவன்) என்னும் பெயர்க் குரியானல்லனென்ப. ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்னும் ஆங்கிலநாடக ஆசிரியரது நாடகங்கள் அன்னாரது காலத்தே ("His plays took well") புகழப்பட்டும் பிறநூல்களில் பயிலப்பட்டும் வந்தன என்பது இதற்குச் சான்றுதல் காண்க. அங்ஙனே திட்பமு நுட்பமு மொட்பமுஞ் சிறந்து, உள்ளுதொறுள்ளு தொறும் உவகைத்தேன் பிலிற்றுவதூஉம் நவிறொறு நவிறொறு நாச்சுவை பெருக்குவதூஉம் பயிறொறும் பயிறொறும் பேரின்பம் பயப்பதூஉமாய தேவிற்சிறந்த வள்ளுவனார் யாத்திட்ட பாவிற் சிறந்த குறளுமென்ப.

வள்ளுவனாரது ஏறுகத்தறித்த குறள் அன்னாரது காலத்தே புலவர்களால் அஃகாவன்பின் ஒல்காப்புகழுடன் பல்கால் சிந்தித்துத் தெளியப் பட்டதென்பதற்குத் திருவள்ளுவமாலையே சான்றுதல் குறிக்கொளற்பாற்று. ஒருபுலவர்க்கு

"அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்"

என்றதனல் குறள் வெண்பா முப்பொருள் தெரித்து வீட்டை அதனின்றும் தெளியச் செய்தது. என்னை? "வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவ தல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்" என வருஉம் பரிமேலழக ருரையானுமென்க. மற்றொருவர்க்கு வள்ளுவரது குறள் சிந்தைக் கினியதாய், செவிக்கினிய

தாய், வாய்க்கினியதாய் இருவினைக்கு மாமருந்தாய்த் திகழ்ந்தது. பிறிதொருவர்க்கு அஃது ஓதற்கெளிதாய் உணர்தற்கரிதாகி வேதப் பொருளாய் இலங்கிற்று. பாத்திறனுடைய சாத்த னார்க்கு அம்முப்பால்

"நோய்நாடி நோய்முதனாடி யது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்றதற்கு இலக்கியமாய் அவரது நோயின் மூலகாரணத்தை ஆய்ந்தாய்ந்து தெளிந்து அது தீர்க்குமாறறிந்து தீர்த்தது. மற்றும் மதுரைத் தமிழ் நாகனார்க்கு,

"எல்லாப் பொருளு மிதன்பாலுள விதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையால்"

எனத் தோன்றிற்று.

இன்னணம் பொன்னேபோல் போற்றப்பட்ட அந்நூல் அக்காலத்திலிருந்த சங்கப் புலவர்களது விழுப்புகழுரையுடன் இலங்குவதாயிற்று என்று எண்ணுதற் கிடனிலதாய்ப் பிற்கா லத்திற் றோன்றிய பொய்கண் டகன்றமெய்ப் புலவர்க்கும் பல் லாற்றானும் நல் விருந்தளிப்பதாயிற்று. அஃதுண்மையாதல் பிற்றைஞான்று தோன்றிய அருபெரும் புலவர்கள் திருக் குறளைக் கசடறக்கற்று, அதன்படி ஒழுகிப் பின்னர்த் தத்தம் நூல்களில் திருக்குறளையேயாதல் அல்வழி அதன்கண் காண்கு றாஉம் அரிய கருத்துக்களையேயாதல் உரிமையுடன் எடுத்தாளும் தன்மையினின்றும் யாம் செவ்விதில் உணரற்பாலம். ஒருசில புல வர்கள் திருக்குறளின் ஆன்ற கருத்துக்களை மாத்திரம் தம் நூல் களிற் எடுத்தாண்டார்கள்; மற்றுஞ் சிலர் தம் நூல்களிற் குறளை யே இறையதும் மாறுதலின்றி இடைபுகுத்தினார்கள். எவ்வாறு எந்தெந்தப் புலவர்கள் எந்தெந்த நூல்களிற் எந்தெந்த விதமாகத் திருக்குறளையேயாதல் அல்லது குறள் கருத்துக்களை யேயாதல் எடுத்துத் தங்களது நூலை அணிபெறச் செய்தார்கள் என்பதை ஒருவாறு எடுத்துக் காட்டுவான் புக்கதே இக்கட்டு ரையின் கருத்தாம். புலவர்கள் அவ்வாறு திருக்குறளைத் தங்க

ளது நூற்கண் ஆங்காங்கு இடை புகுத்தியதனுல் வள்ளுவரது உணர்ச்சிக்குத் தங்களது உணர்ச்சியும் ஓரோவழி உடன்பாடாயிற்று என்பது தேற்றம். உடன் பாடாகவே,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்"

என்ற உண்மை அங்கை நெல்லியெனத் தெரியக் காண்டும். நட்பினராகவே புலவர்மாட்டு வாட்ட மிலருளுங் கோட்டமில் குணனும் அசையா நிலையும் நசையாமனமும் அஃகாவன்பும் வெஃகா உள்ளமும் வெகுளாப்பண்பும் விடாப் பேரன்பும் தெற்றெனத் தோன்றிற்று.

நிற்க, வள்ளுவரது குறளை எடுத்தாண்ட பல புலவருள்ளும் தலைசிறந்தவர்கள் அருட்பிரகாசரான நமது சிவப்பிரகாச சுவாமிகள்; அமிழ்தினுமினிய தமிழெனு மடந்தை யணிமேகலையாம் மணிமேகலையின் அணிகெழுபோக்கினை அருளிப் போந்த நம் கூலவாணிகச்சித்தலைச் சாத்தனுர்; செம்பொருளின்பம் பயந்த ஒப்பாரு மிக்காருமில்லாக் கம்பநாட்டாழ்வார்; பயில்வாருள்ளத்தை அள்ளும் சிலப்பதிகாரமெனும் இலக்கியச் செலவு தந்த இளங்கோவடிகள்; சொல்லுக்கு வில்லியென்ற வில்லிப்புத்தூராழ்வார்; உமாபதி சிவம், உய்யவந்த தேவநாயனுர், சேரமான் பெருமாளுயனுர்; ஆளுடைய பிள்ளையார்; ஆளுடைய நம்பிகள், அமுதடைந்த அன்பர்; நக்கிரர்; கபிலர்; பூதஞ்சேந்தனுர்; திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகள்; காலஞ்சென்ற மனேன்மணிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்; நீதிநூல் தந்த வேதநாயகம் பிள்ளையவர்கள்; இன்னனைய பலர். இவர்களெல்லோரும் எடுத்தாண்ட ஒரு சில குறட்பாக்களை விரிவஞ்சிச் சுருக்கமாக நிரல்படத் தொடுத்துக் காட்டுவாம்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

(கடவுள்வாழ்த்து-செ. க.)

இக்குறளின் நுண்பொருள் பிறநூல்களில் பயின்றிருத்தல்;

'அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து"
(உமாபதிசிவம்-திருவருட்பயன்-பதிமுது நிலை-செ. க.)

"அகரமுதலி னெழுத்தாகி நின்ற யடியேனுய்யப்
போவதோர் சூழல் சொல்லே"
(சுந்தரர் தேவாரம்-திருநெல்வாயில்-செ. 7)

"அகர வுயிரெழுத் தனைத்து மாகி வேறு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்துமாகி"
(தாயுமானவர்-பொருள்வணக்கம்-செ. 12)

"விற்பிரம்பா லுற்றவடுமேவ வுலகெங்கு நிறை
சிற்பரனே தெய்வஞ் சிவ சிவா!—சொற்சிறந்த
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
(சிவசிவ வெண்பா)

"சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றெப்பாற்
சோர்வி லடையாற் றெளிந்தோஞ் சோமேசா—ஓரின்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
(சோமேசர் முதுமொழி வெண்பா.)

"அக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு"

"ஒன்றென மறைகளெல்லா முரைத்திட வுயிர்களொன்றி
நின்றன னென்றுபன்மை நிகழ்த்துவ தென்னை யென்னி
னன்றவை பதிதானென் றென்றறையு மக்காங்கடோறுஞ்
சென்றிடு மகாம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே"

"எவ்விடத்து மிறையடியை யின்றி யமைந்தொன்றை
யறிந்தியற்றிடா வுயிர்க ளிறைவன்றனுஞ்
செவ்விதி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்கடோற்றும் போதவனை யின்றித் தோற்று
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்து
மவ்வுயிர்போ னின்றிடுவனுதலானு
மரனடியை யகன்று நிற்பதெங்கே யாமே"
(மனவாசகங்கடந்தார்-உண்மை விளக்கம் செ. 30)

நச்சினர்க்கினியரும் "மெய்யினியக்க மகர மொடு சிவ னும்" என்னுஞ் சூத்திரத்து "இறைவன் இயங்குதிணைக் கண் ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் றன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கு மொப்ப முடிந்தாற்போல அகாமும் உயிர்க் கண்ணுந் தனிமெய்க் கண்ணுங் கலந்து அவற்றின் றன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லா மொப்ப முடிந்தது; அகரமுதல வென்னுங் குறளான் அகர மாகிய முதலையுடைய வெழுத்துக்க ளெல்லாம், அதுபோல இறைவனகிய முதலை யுடைத்து உலகுஎன வள்ளுவனர் உவமை கூறியவாற்றுனும், கண்ணன் "எழுத்துக்களில் அகர மாகின்றேன் யானே" யெனக் கூறியவாற்ருனும், பிற நூல்க ளானு முணர்க" என்ற உரை நடையானும் முதற்குறளின் கருத்தொருமை யறிதற்பாலது.

2. "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி லேதிற் பிணந் தழீஇயற்று"

(வரைவின் மமளிர்-செ. 3)

இக்குறளின் கருத்து பிறநூலின்கட் காண்டல்:

"கலவி செய்த மாதென்னை விலைகேட்டாளுட னெக்கக்கலந்து காம நலமுண்ட வுனக்கு விலையேதென்றேன் சவமனைய நான்சுகிக்க விலையென்ருள் பொய்யென்றேன் வள்ளுவர்கூறிய துறளாமினியநூலில் விலைமாதைச் சேர்தல் பிணந்தழுவியதை யொக்குமென்றர் வீணே வென்ருள்"

(ச. வேதநாயகம்பிள்ளையவர்கள் நீதிநூல்-கணிகைய ரியல்பு செ. 24.)

ஈண்டு தந்நலம் விலை கொடுப்பார் யாவர்க்கும் விற்பதல் லது அதற்கு ஆவார் ஆகாதாரென்னும் வரைவிலாத மகளிரது இயல்பினை விதந்தோதுவான் புக்க ஆசிரியர் திருவள்ளுவனர் அவர்கள் "பொருட்பெண்டிர்" என்றும், "வரைவின் மகளிர்" என்றும், "இருமனப்பெண்டிர்" என்றும் கூறியதூஉம், "வண்டிற் றுறக்குங் கோண்டி மகளிர்" என்றும், "நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத்துறக்கும் வண்டு" போல்குவர் என்றும் மணிமேகலை ஆசிரியர் கிளந்ததூஉம், "பொன்விலைப்

பாவையர் '' என்றும், " பொன்னேக்கியர் '' என்றும், " நிதி வழி நேயநீட்டு மன்றலங் கோதை மாதர் '' என்றும் கம்பர் சொற்றதூஉம் நனி சிந்திக்கற்பாலன.

3. " கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடிக் கண்ணே யுள.''

(புணர்ச்சி மகிழ்தல்-செ. க.)

இவ்வாய்மொழியினைத் தம் தாய்மொழியெனப் பிற சைவப்பெரியார் நூல்களில் காண்டல்.

பெண்ணரசாய்த்தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமருமின்சொற் பணிமொழியாள்—மண்ணின்மேற்
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுளவென்று—பண்டையோர் கட்டுரையை மேம்படுத்தாள் ''

(சேரமான் பெருமாணுயனுர் திருக்கைலாய ஞானவுலா—பேரிளம்பெண் 174·178.)

" பண்டுநிகழ் பான்மையினுற் பசுபதிதன்னருளாலே
வண்டமர் பூங்குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத்தவள் வனப்பைப் புறங்கண்ட அலத்தைக்
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றமர்ந்திருந்தார் காதலினால்''

(பெரிய புராணம் - ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணம் - செ. 267)

4. " இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு''

(பொருள் செயல்வகை -செ. 2)

இவ்வருங் குறள் திருவருட் செல்வர் பிரபந்தத்தில் கண் கூடாகக் காண்டல்.

—"எங்காளு
மில்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பென்னுஞ் சொல்லாலே''

(சேரமான் பெருமாணுயனுர் திருக்கைலாய ஞானவுலா, அரிவை 134-136)

(தொடரும்)

நால்வர்களும் கல்வெட்டுகளும்

திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் B.A., B.L.

(உாம வது பக்கத் தொடர்ச்சி)

III

அப்பர் சம்பந்தரைப் போன்றே சுந்தரமூர்த்திகளுக்கும் ஆசார்ய மகிமை தந்து இராஜராஜச்சோழர் முதலானவர்கள் போற்றி வந்தபடியே அவருக்குப் பின்னல் வந்த சோழமன்னர்களும் போற்றி வந்தனர். சுவாமிகளைக் குறித்துப் பல இடங்களில் பல கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்தினல் அடியிற் கண்ட விவரங்களை அறியலாம்.

i. நாயனர் பெயர்கள்

1. சுந்தர நாயனர்—அவிநாசி.
   i.—181/1909, ii.—187/1909
2. வன்றெண்டர்—திருத்துறைப்பூண்டி—478/1912
3. ஆளுடையநம்பி—திருவிடைமருதூர் 309/07
   ii. திருவொற்றியூர் 371/11
4. திருத்தொண்டத்தொகை i. சங்கிராமநல்லூர் (கோ) 148/09
   ,, ii. திருப்பத்தூர் (ராம) 104/08
5. நம்பி ஆரூரனர்—தஞ்சை S.I.I. Vol. II. No. 38-41
6. பிள்ளைநம்பி ஆரூரனர்—குகூர்—276/17
7. தடுத்தாட்கொண்ட தேவர் திருவெண்ணைநல்லூர் 423/21
8. ஆலாலசுந்தரர்—ஷை 435/21
9. ஸ்வஸ்சாமி மித்ரர்—73/90 திருவாரூர்.

இப்பெயர்களெல்லாம் நாயனர் சரிதத்தில் வருவதைக் கவனிக்கலாம்.

i. நாயனர் கோயில்கள்.

1. அவிநாசி (கோவை 12) சுந்தரபாண்டியதேவர் 31-ம் ஆண்டு சுந்தரபாண்டியன் I (1216—35)

புக்கொளியூரில் குளக்கரையின்மீது அரசனல் தாபிக்கப் பெற்ற சுந்தரநாயனர் கோயிலுக்கு நெல்லுக்காக பாண்டிமண்டலத்து கீழ்வழிநாட்டு அரணையூர் என்ற சிவல்லிபுரத்து வியாபாரியால் பொன் அளித்தது. சுந்தரபாண்டியன் என்ற ஒரு கொங்குபாண்டியனும் இருந்தான். புக்கொளியூர் என்றது அவிநாசியின் பூர்வ பெயர். (கி. பி. 1247)

2. அவிநாசி (கோவை 18)

வீரபாண்டியன் 14-ம் ஆண்டு பார்ப்பாரப்பூண்டி என்ற வீரராஜேந்திர நல்லூர்க் குடிகள் தென்பள்ளியில் இருந்த சுந்தரநாயனர் ஆலயத்திற்கு நெல் தானம் கொடுத்தது. ஒரு வீரபாண்டியன் 1265 முதல் 1281 வரை ஆண்டான். தென்பள்ளியும் புக்கொளியூரும் வேரு என்பது தெரியவில்லை. (கி. பி. 1279)

(3) ஆரகலூர் (சேலம் 11)

குலோத்துங்கன் III-29-ம் ஆண்டு—5/19/1206, எம்பெருமக்கள் (அப்பர் சுந்தரர் சம்பந்தர்) சேவைக்காக 5000 காசு தானம் செய்தது.

(4) திருவிடைமருதூர் (தஞ்-336) கோனேரின்மைகொண்டான் 21-ம் ஆண்டு ஆளுடையபிள்ளையார் ஆளுடையநம்பி இவ்விருவர் பூஜைக்காக பூதானம் செய்தது.

(5) தஞ்சை (தஞ்-1337-40) ராஜராஜதேவர் 29-ம் 1014, ராஜேந்திர - 3-ம் 1017 A. D.

நம்பி ஆரூரனருக்குப் பீடம் காறை முதலிய தருமம். (மேலே விபரம் காண்க.) நங்கை பரவையாருக்கும் பிரதிமை உண்டு.

(6) குகூர் (கும்பகோணம்) 299/17. நம்பி ஆரூரனர் கோயி

சில் சித்திரைத் திருவிழாவிற்காகப் பூதானம் செய்தது. சாலையில் கப்பல் அழித்த ராஜகேசரிவர்மன் 10-ம் ஆண்டு.

(இராஜராஜன் I-995 A.D.)

(7) பனையவரம் (தென் ஆறு) 320/17 இராஜேந்திர சோழர் (?) 8-வது ஆண்டு. இதில் ராஜேந்திர சோழ தேவர்க்கும் பரவை நங்கையாருக்கும் நந்தாவிளக்கு தானம் செய்தது (கி. பி. 1021) கண்டிருக்கிறது.

(8) திருவாரூர் (73/90)

வடமொழியில் 'ஸ்வஸ்வாமி மித்ர' என்று குறிக்கப்பட்டுள்ளது. சுந்தாருடைய தாயார் இசைஞானியார் பிறப்பிடம் திருவாரூர் என்றும் குறிக்கிறது. மூவருக்கும் ஆராதனைக்காக தானம் தந்தது. குலோத்துங்கன் II, 7-ம் ஆண்டு கி. பி. 1130.

கல்வெட்டுகளில் கண்டபடி மேற்சொல்லிய எட்டு இடங்களில் சுந்தரர் ஆலயங்கள் இருப்பதன்றி ஒவ்வொரு சிவாலயத்திலும் அறுபத்துமூவர் மண்டபங்களில் நால்வரையும் தாபித்து இருப்பது யாவரும் அறிந்ததே. எனினும் தனிமையாக அடியிற் கண்ட ஆலயங்களை ஒட்டிச் சுந்தாருக்கு ஆலயமோ சிலாஸ்தாபனமோ உண்டு என்பதை அன்பர்கள் அறியவேண்டும்.

(1) பேரூர் (கொங்குநாடு) பள்ளுப்படலத் திருவிளையாடலை ஒட்டியது.

(2) அவிநாசி (கொங்கு) முதலை பிள்ளை உமிழ்ந்ததை ஒட்டியது.

(3) திருமுருகன்பூண்டி (கொங்கு) வேடுபறியை ஒட்டியது.

(4) திருவஞ்சைக்களம் (மலைநாடு) சேரமானொடு நட்புப் பற்றியதும் கைலாயம் சென்றதும்.

(5) வேதாரணியம் (சோழ) தியாகராயருக்கு எதிரில் சேரமானொடு சென்றது.

(6) திருவாரூர் (சோழ) பரவையாருடன் வாழ்ந்தது.

(7) திருநாவலூர் (நடு) பிறப்பிடம்.

(8) திருவெண்ணைநல்லூர் (நடு) அருள்பெற்று தடுத்தாட்கொள்ளப் பெற்றது.

(9) திருவொற்றியூர் (தொண்டை) சங்கிலியாரோடு மணம் கொண்டது.

iii. நாயனூர் மடங்கள்.

i. திருத்தொண்டத்தொகையான் மடம்: சங்கிராமநல்லூர் கொழுமம் (கோவை 448.) சோளீசுரமுடையார் ஆலயம் கோனேரின்மை கொண்டான் 25-ம் ஆண்டு கொழுமத்தில் வீர சோழ திருமடை விளாகத்தில் திருத்தொண்டத்தொகையான் மடத்து தபசிகள் மூவருக்கு அன்னதானம் செய்ய நெல் கொடுத் தது. வீரராஜேந்திர சோழனுக்கு கோனேரின்மை கொண்டான் என்ற பட்டம் உளதால் கி. பி. 1232 ஆக இருக்கலாம்.

ii. திருத்தொண்டத்தொகையான் திருமடம்:—

திருப்பத்தூர் (ராம 242). குலசேகரபாண்டியன் 13-வது ஆண்டு திருத்தொண்டத்தொகையான் திருமடத்தைச் சொல்லி இவ்வூர்ச் சபையோர் தயாபஞ்சரம் என்ற பெயருடைய ஆலய மண்டபத்தில் கூடி வரி சகாயம் செய்ததைக் குறிக்கிறது. ஒரு வேளை குலசேகரன் I ஆக இருக்கலாம். அப்படியாயின் காலம் கி. பி. 1203.

iii. திருத்தொண்டத்தோகையான் குகை:—10/1918. திருவிடவாயல் (தஞ்சை)—இராஜேந்திர சோழன் III. 4-ம் ஆண்டு 14-10-1249--இத் திருத்தொண்டத்தொகையான் குகையை ஒரு வாணுதராயரின் பொருட்டு ஆணை மங்கலமுடையான் அரையன் வடுகனுதன் என்ற சென்னுவரையர் தாபித்தது. திருத்தொண் டத்தொகையான் குகையில் திருமுறை சேமித்து வைத்திருக் கும் திருப்பள்ளியறையைக் காப்பவர், திருப்பாட்டு ஓதுபவர் இவர்கள் ஜீவனத்திற்கு திருமுறைத் தேவாரச் செல்வன் குகை யில் வசிக்கும் முதலியார் திருவையாறுடையார் வழித்தோன் றிய ஒரு பக்தனல் பூதானம் செய்யப்பட்டது. திருமுறைத் தேவாரச் செல்வன் குகையானது இராஜாதி ராஜவளநாட்டு கழுமலநாட்டு திருக்கழுமலத்து திருத்தோணிச்சுரம் உடைய நாயனுர் ஆலயத்தில் நரசிங்கதேவர் சந்ததியார் கட்டிய குகை யில் உள்ளது. ஆகவே கொங்குநாடு, பாண்டிநாடு, சோழநாடு

இம்மூன்று நாடுகளிலும் 13-ம் நூற்றாண்டின் முற்பாகத்தில் மூன்றுமடங்கள் ஏற்பட்டிருந்ததையும் அவைகளில் தேவார படனம் நடந்து வந்ததையும் அறிந்தோம். இன்னமும் கல்வெட்டுகளில் குறிக்கப்படாத பல மடங்கள் இருந்திருக்கலாம். அது வேறு ஆராய்ச்சிக்கு இடம் ஆகும்.

iv. நாயனார் பேயர் வைத்தது.

i வன்றொண்ட முதலியார்:—

திருத்துறைப்பூண்டி மருதீசுவரர் ஆலயம் } (தஞ்சை) 1539

ராஜ ராஜன் III. 18 ஆம் ஆண்டு கி. பி. 1234

இதில் திருத்துறைப்பூண்டி உடைய நாயனாருக்கு ஒரு வன்றொண்ட முதலியார் உத்தம சோழபுரத்து ஒரு நிலத்தை தானம்செய்தது.

ii. திருத்தொண்டத்தொகை மங்கலம்

திருமயானம் பிரமபுரீசுவரர் ஆலயம் தஞ்சை 96

கோனேரின்மை கொண்டான்.

22-ஆண்டு-இக்கல்வெட்டின் கீழ்ப் பெயரில்லாத ஒரு அரசன் காலத்து II-ம் ஆண்டில் வீணை வாசிக்கவும், வேதம் சொல்லவும் ஸ்ரீருத்திரம் சொல்லவும் தானம் செய்ததையும் திருத்தொண்டத்தொகை மங்கலம் சிவபாதசேகர மங்கலம் என்ற இரண்டு ஊர்களையும் நாயன்மார் பெயர்களையும் குறிக்கும் சாசனம் ஒன்று இருக்கிறது.

iii. வன்றொண்டன்

தஞ்சை திருப்புறம்பியம் சாக்ஷீஸ்வரநாதர் ஆலயம் 344/27. அரசன் பெயர் இல்லை. 13-வது ஆண்டு.

இதில் திருப்புறம்பிய முடையார்க்கு ஐப்பசி, பங்குனி உற்சவங்களிலும் திருவேட்டை, தீர்த்தம் நாட்களிலும் சேவை செய்வதற்காக அவரிட்டாயன், திருத்தொண்டன், வன்றொண்டன், சண்டேசுவரன், இயற்பகை, கோட்புலியார், விறன்மிண்டன், அனுக்க நம்பி என்றபெயர் உடையார்கள் பூதானம் செய்தது.

இதில் பல நாயன்மார்களின் நாமங்களும் வரிசையாக வந்துள்ளதைக் கவனிக்கவேண்டும்.

iv. வன்றேண்டத்தாழி

திருவிடைமருதூர் ராஜ ராஜன் I-999.	ஒரு தாழிக்கு வன்றெண்டத் தாழி என்ற பெயர் கொடுக்கப் பட்டுள்ளது.

v. தடுத்தாட்கொண்டதேவர்

திருவெண்ணைநல்லூர் கிருபாபுரீசுரர் ஆலயம் 423/21.

இதில் திருமுனைப்பாடி நாட்டு திருவெண்ணைநல்லூர் தடுத்தாட்கொண்ட தேவர்க்கு கூடல் ஆளப்பிறந்தான் அரச நாராயணன் என்ற காடவராயன் சில கிராமங்களின் வரிகளைத் தானம் செய்தது கண்டிருக்கிறது

அரசன் பெயரில்லை.

காலம்-12-ஆம் நூற்றுண்டு.

vi. தடுத்தாட்கோண்ட நாயனர்.

திருவெண்ணைநல்லூர் கிருபாபுரீசுவரர் ஆலயம். 430/21.

ஜடாவர்மன் வீரபாண்டியன் 5-ஆண்டு 12—11—1301 தடுத்தாட்கொண்ட நாயனுருக்கு நந்தவனம் வைப்பதற்காக 25-பணத்திற்கு விக்கிரமபுரத்து ஊராருக்கு 500 குழி நிலம் விற்றது.

vii. ஆலாலசுந்தரப் பெருந்தெரு

திருவெண்ணைநல்லூர் 435/21 இராஜராஜ தேவர் 5-ம் ஆண்டு.

திருவெண்ணை நல்லூர்-ஆட்கொண்டதேவர் சந்திவிளக்குக்காக ஆலாலசுந்தரப் பெருந்தெருவில் வசித்த ஒருவன் 4-பசு தானம் செய்தது.

viii. வழக்குவென்ற திருவம்பலம்

வெண்ணை நல்லூர் 441/21 குலோத்துங்கச் சோழன் 29-ஆண்டு வழக்குவென்ற திருவம்பலம் என்ற கல் மண்டபம் கட்டுவதற்காகச் சில குடிகளுடைய வீடுகளை எடுத்துக்கொண்டு வேறு இடம் தந்தது.

ix. தடுத்தாட்கொண்ட நல்லூர்
வெண்ணெநல்லூர் 446/21
சகம் 1430—1508. A. D.

கோயில் அதிகாரிகள் ஒரு சூரிய நாராயணன் என்பவருக்குத் தடுத்தாட்கொண்ட நல்லூர் செங்காடன் குளத்தூர் என்ற ஊர்களை விற்றது.

x. ஆலாலசுந்தரர் நந்தவனம்

காளஹஸ்தி ஈசுவரர் ஆலயம்—99/22 குலோத்துங்கச் சோழன் 32-ஆண்டு.

ஆலாலசுந்தரர் நந்தவனத்தில் இரண்டு ஆள் வேலைக்காக விமராசன் 800 குழி நில தானம் செய்தது.

xi. திருத்தொண்டத்தொகை ஈசுவரமுடையார்

சிதம்பரம். (தென் ஆறு 54) குலோத்துங்கன் III. 2-ஆண்டு 1180-கி. பி. திருத்தொண்டத்தொகை யீசுவரம் உடையார் ஆலயமும், நிலமும், குளமும் ,திர்வையிலிருந்து நீக்கப்பட்ட விவரம் கண்டிருக்கிறது.

xii "பிச்சன் என்று பாடச்சொன்னன்" என்ற பெயர் திருவெண்ணெ நல்லூர். 431/21. கோப்பெருஞ்சிங்கன்—27 ஆண்டு—28—3—1268 இப்பெயர் கொண்ட வெள்ளி முரசைக் கோயிலுக்குத் தானம் செய்தது குறிக்கிறது.

xiii. பெருமாள் ஆலாலச் சுந்தரப் பெருமாள்: திருவெண்ணெநல்லூர் 437/21—இப்பெயர்கொண்ட ஒருவர் கட்டளையின்படி தேவாரம் பாடிச் சொல்லும் விஷயத்தைக்குறித்து ஒப்பந்தம் செய்ததைக் குறிக்கிறது.

மேற்காட்டிய கல் வெட்டுகளிலிருந்து மனிதன், முரசு அளவை, ஊர், தெரு, மண்டபம், நந்தவனம், ஈசுவரன் இவர்களுக்கெல்லாம் நாயனர் பெயரும் அவர் சரித்திரத்தில் கண்ட செய்திகளின் பெயரும் இட்டு வழங்கி வந்ததைக் கவனிக்கலாம். இவைகள் பெரும்பான்மை சோழர் ஆதிக்கத்திலே 10 முதல் 15 நூற்றாண்டுவரை வழக்கத்திலிருந்தன என்பதும் தெ

ரிகின்றது. பழைய கல் வெட்டுக்களிலே ஆலாலசுந்தரர் என்ற பெயர் கிடையாது. பிற்காலக் கல்வெட்டுக்களில் அப்பெயர் வந்ததும் காண்க. நம்பிஆரூரனுர் ஆலாலசுந்தராருடைய அவதாரம் என்ற கொள்கை பின்னர் வந்ததுபோலும்!

V. சரித்திர பாகங்கள்.

1. ஆளுடையநம்பி புராணம்

திருவொற்றியூர் (செங் 965) ஆதிபுரீசுவரர் ஆலயம் இராஜாதிராஜ தேவ 11-9 ஆண்டு கி. பி. 1181 படம்பக்க நாயக தேவர் ஆலயத்தில் பங்குனி உத்திரத் திருவிழாவில் ஆளுடைய நம்பி புராணத்தை வாசிக்க அப்போது அரசனும், சதுரானன பண்டிதனும், வாகீசுவர பண்டிதனும், கோயில் நாயகனும், ஸ்ரீகாரியஸ்தனும், மற்றேரும் புராண படனம் கேட்டதை இச்சாசனம் குறிக்கின்றது.

2. திருத்தோண்டத்தோகை

திருவொற்றியூர் (செங் 1006) இராஜாதிராஜதேவன் 1 28 ஆண்டு கி. பி. 1046.

இது பங்குனிஉத்திரத் திருவிழாவிற்கு நைமித்திகத்திற்குத் தானம் செய்ததையும் அதற்காகக் காவலூர் சபையார் 30 காசு பெற்றுக்கொண்டு வருடம் 1-க்கு 75-கலம் நெல் கொடுப்பதாக ஒத்துக்கொண்டதையும் கோயில்நிர்வாகம் சம்பள விகிதங்கள் முதலியவையும் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையைப் பற்றியும் 63-நாயன்மார் பிரதிமைகளைப் பற்றியும் கூறுகிறது.

3. "பிச்சன்என்று பாடச்சொன்னுன்."

திருவெண்ணெ நல்லூர் (தென் ஆறு) 431—21

கோப்பெருஞ்சிங்கன்-27-ம் ஆண்டு—28—3—1268. செஞ்சிக்குச்சேர்ந்த ஒரு மத்தியஸ்தனை உடையான் ஸ்ரீ கைலாயமுடையான் என்பவன் திருவெண்ணெநல்லூர் ஆட்கொண்டதேவர்க்கு "பிச்சன் என்று பாடச்சொன்னுன்" என்ற பெயரு

டைய இரண்டு வெள்ளி முரசும், ஒரு பொன் கால்காறையும் தானம் செய்தது.

4. தேவாரம் ஓதுதல்

திருவெண்ணை நல்லூர் 437/21 தேவாரம் ஓதிக்கொண்டு திருவிழாக்களில் தெருவழியாகப் போகும் உரிமைகளின் பொருட்டு ஒரு சண்டையில் உயிர்துறந்த திருப்பூவண முடையார் இலங்கேசுவரன் என்பவனுக்காகத் திருவெண்ணை நல்லூர் கைக்கோளர்கள் பெருமான் ஆலால சுந்தரப்பெருமான் கட்டளையின்படி ஒப்பந்தம் செய்தது. ருத்ரோத்காரி வைகாசி 22 தேதி. அரசன் பெயரில்லை.

5. திருப்பதிகம் பாடினது

குகூர் (கும்பகோணம்)। 275/17. இராஜராஜன் I. 12 ஆண்டு—கி. பி. 997.

திருநாறையூர் நாட்டுக் குகூர் வாசிகள் திருப்பதியம் பாடின பிள்ளைநம்பி ஆரூரனுக்குப் பூதானம் செய்தது.

6. திருப்பதியம் பாடுதல்

திருப்பத்தூர் திருத்தளீசுர முடையார் ஆலயம் (ராம 237) குலசேகரப்பாண்டியன் 4-ம் ஆண்டு. திருந்தளி நாயனுர் ஆலயத்தில் திருப்பதியம் பாடக்கண்டன் உய்யவந்தான் என்பவன் அதிசய பாண்டிய நல்லூரில் சில வரிகளை விற்றது.

மேற்காட்டிய கல்வெட்டுக்களிலிருந்து சுந்தர மூர்த்திகளின் சரித்திர பாகங்கள் பல சோழர் காலத்திலேயே பிரபலமாக தெரிந்து ஆளப்பட்டன என்பது வெளிப்படை. சுவாமிகள் திருத்தொண்டத் தொகையும் திருப்பதிகங்களும் பாடினதும் ஈசன் பிச்சன் என்று பாடச்சொன்ன விஷயமும் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் அவரது புராணம் ஆலயங்களில் படனம் செய்ததும் அப்போது அரசர்கள் முதற்கொண்டு ஏனையோர் கேட்டதும் வழக்கமாக இருந்தது. திருவொற்றியூரில் அரசன் முன்னிலையில் புராணபடனம் செய்தது கி. பி. 1181-ல். இராஜாதிராஜன் பாட்டனுன குலோத்துங்கன் II (1123-1146)

கேட்டுக்கொண்டபடி சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினர். ஆகவே இராஜாதி ராஜன் கேட்ட புராணம் சேக்கிழார் இயற்றிய புராணம் என்றே ஊகிக்கலாம். மேலும் தேவாரப் பதிகங்கள் ஆலயங்களில் ஓதுதலும், அதற்காகப் பொன், நிலம் முதலியவை தானம் செய்தலும் அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இதைப்பற்றிப் பல கல் வெட்டுக்கள் இருந்தபோதிலும் ஒன்றுமாத்திரம் உதாரணமாகக் குறிக்கப் பட்டது. தேவாரம் தெருவழியே பாடிச்செல்லும் வழக்கம் இருந்ததென்பதும் அப்போது எந்தத் தெரு என்பதைக் குறித்து வழக்கு ஏற்பட்டுக் கலகமாகி ஒருவர் உயிர் துறந்ததும் அதன்பேரில் மத்தியஸ்தம் ஏற்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டதும் திருவெண்ணெய் நல்லூர்ச் சாசனத்தில் சொல்லப்படுகிறது. தற்காலத்தில் இதைப்போன்ற கலகங்கள் பல நேரிடுவதை நாம் நேரில் அறிவோம். முன்காலத்திலும் இருந்தது என்று இதனால் அறிகிறோம்.

மேலும் மேற்காட்டிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் எல்லாக் கல் வெட்டுக்களையும் பாகுபடுத்தி ஆராயும் பட்சத்தில் அடியிற்கண்ட வருஷ வரிசையாகவும், அரசர்கள் வரிசையாகவும் அவைகளைக் குறித்திடலாம்.

ஹூ	அரசர்கள் பெயர்,		அவராண்டகாலம்.	சாசன எண்
995	இராஜராஜன்	1	9:5—1013	ii-6
997	,,		,,	v-5
999	,,		,,	iv-4
1014	,,		,,	ii-5
1017	இராஜேந்திரன்		1013—1045	ii-5
1021	,,		,,	ii-7
1046	,,		,,	v-2
1130	குலோத்துங்கன்	ll	1123—1146	ii-8
1180	,,	lll	1178—1216	iv-11
1181	இராஜாராஜன்	ll	1171—1186	v-2
1203	குலசேகரபாண்டியன்		1170—1216	iii-2

1206	குலோத்துங்கன் III	1178—1216	ii-3
1232	கோனேரின்மை கொண்டான் (வீரராஜேந்திரன்)	1207—1252	iii-1
1234	ராஜராஜன் III	1216—1248	iv-1
1247	சுந்தரபாண்டியன	1238—1255	ii-1
1249	ராஜேந்திரன் III	1245—1267	iii-3
1268	கோப்பெருஞ்சிங்க பல்லவன்	13-நூற்றுண்டு	iv-11
1279	வீரபாண்டியன்	1265—1285	ii-2
1301	ஜடாவர்மன்வீர பாண்டியன்	1296—1392	iv-6

பெயரில்லாததும் இன்னுனென்று நிச்சயமாக சொல்லக் கூடாதவர்களும் அடியிற்கண்டன.

அரசன் பெயரில்லை	1508	iv-9
ஷெ		iv-3
ஷெ		iv-5
ஷெ		v-4
கோனேரின்மைகொண்டான்		ii-4
,,		iv-2
இராஜராஜன்		iv-7
குலோத்துங்கன்		ix-8
ஷெ		iv-10

மேலே கண்ட பாகுபாட்டைக் கவனித்தால் சோழர்களில் இராஜராஜன் I முதல் இராஜேந்திர III வரை எட்டு அரசர்கள் காலங்களில் சுந்தரரைப்பற்றிய கல் வெட்டுகள் கிடைக்கின்றன வென்றும், அவைகள் கி. பி. 995 முதல் 1249 வரை சுமார் 250 ஆண்டுகள் பரவி இருந்தன வென்றும் புலப்படும். அக்காலத்திலும் இராஜேந்திரன் முதல் குலோத்துங்கன் II காலம் மட்டும் 7அரசர்கள் காலம் முழுதும் சுந்தரர் கல் வெட்டுகள் இல்லை. மற்ற சைவ சமயாசாரிகளின் கல் வெட்டுகளும் அரிதாக இருந்தன. ஆகவே அந்த ஏழு அரசர்கள் காலங்

களில் சைவசமய அபிமானம் குன்றியிருந்தது எனலாம்; அல்லது அடிக்கடி அரசாங்கக் குழப்பமும் சிறுகாலம் ஆண்ட அரசத் தொகுதியும் இளவயதான அரசர்களும் இருந்தமையால் ஆலயங்களைக் கவனிப்பார் இல்லை போலும். இராஜேந்திரன் III காலத்திலேயே சோழ ஆதிக்கம் குறைந்து வந்ததினால் கல்வெட்டுகளும் காணோம்.

மேலும் பாண்டிய அரசர்களுள் குலசேகரன், சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டியன் என்ற நால்வர் காலத்தில் 1203 முதல் 1279 வரைக்குமட்டும் நான்கு கல்வெட்டுகள் கிடைத்தன. அவர்களிலும் 2, 3, பாண்டியர்கள் கொங்கு பாண்டியர்களே. வீரராஜேந்திரன் என்பான் கொங்கு சோழன். கோப்பெருஞ்சிங்கன் காடவர் குலத்து ஒரு சிற்றரசன். பெயர் கிடைக்காதவை சில உள. அவைகளும் இதே காலத்தைச் சேர்ந்தவைகளே. ஆக கி. பி. 995 முதல் 1301 வரை 300 வருட காலம் சுந்தரருடைய மகிமை பரவி வந்தது. பின்னல் 1508-ல் ஒரே கல்வெட்டுதான் தனியாக நிற்கிறது. சுந்தரர் கைலாயமடைந்த 170 வருடங்களுக்குள்ளாக அவருடைய முதல் பிரதிமை தாபிக்கப்பெற்றது குறிப்பிடத்தக்க ஒரு செய்தி ஆகும். 14-ம் நூற்றாண்டு முதல் அவரைப்பற்றிய யாதொரு கல்வெட்டும் கிடைக்காததின் காரணம் புலப்படவில்லை. பிற்காலத்தில் வந்த விஜயநகரத்தாரும் அவர்கள் பிரதிநிதிகளான நாயகர் முதலான அரசர்களும் சைவசாரியர்களிடம் அன்பு வைக்கவில்லை போலும்.

இனி, சுந்தரர் வாழ்க்கையில் அவர் மிதித்த தலங்களில் அவரைப்பற்றி எதுகாறும் கல்வெட்டுகள் சொல்லுகின்றன என்பதைக் கவனிப்போம். சுந்தரர் பிறந்த ஊர் திருநாவலூர். தற்போது அதைத் திருநாமநல்லூர் என்று வழங்குகிறார்கள். இந்த ஊர் ஆலயத்தில் 56 கல்வெட்டுகள் உண்டு. அவைகளில் சில வெகு பழையவை. பராந்தகன் காலத்ததும் உண்டு. அப்படியிருந்தும் சுந்தரரைப்பற்றிய விவரம் காணோம். முனையதரையன் என்ற அரசன் பெயரைச் சில கல்வெட்டுகளில் காண்

கிறோம். இவ்வரசன் நரசிங்கமுனையர் குலத்தோனாக இருக்க வேண்டுமென்று முன்சொன்னோம்.

இனி, சுந்தரர் தடுத்தாட்கொள்ளப்பெற்ற திருவெண்ணை நல்லூரைக் கவனிப்போம். அங்கே 12 கல்வெட்டுகளில் சுந்தரர் பெயரும், பெயர் வைத்ததும் போன்ற கல்வெட்டுகள் 7 உள்ளன. அவைகளில் "பிச்சன் என்று பாடச்சொன்னார்" "வழக்குவென்ற திருவம்பலம்" இந்த இரண்டு பிரயோகங்களும் பாராட்டத் தக்கவை.

இனி, அவர் பரவை நாச்சியாருடன் வெகுகாலம் வாழ்ந்த இடமாகிய திருவாரூரில் கிடைத்த 50 கல்வெட்டுகளில் ஒரே ஒரு கல்வெட்டில் அதுவும் வடமொழியில் சுந்தரர்பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. ஆனல் வேறு ஒரு கல்வெட்டில் திருத்தொண்டத்தொகைபாடிய தேவாசிரிய மண்டபத்தின் பெயர் குறிக்கப் பெற்றிருக்கிறது. அவர் மணம் செய்துகொண்ட மற்றொரு தலமாகிய திருவொற்றியூரில் 169 கல்வெட்டுகளில் இரண்டு கல்வெட்டுகள் அவருடையபுராணத்தைப் பற்றியும், திருத்தொண்டத் தொகையைப் பற்றியும் கூறுகின்றன. சங்கிலியாரைப் பற்றியாவது மகிழடி சேவையைப் பற்றியாவது ஒன்றும் காணோம். அவர் அற்புதங்கள் நடத்திய ஊர்களில் ஒன்றாகிய அவிநாசியில் இரண்டு கல்வெட்டுகளில் அவரது ஆலயத்தைக்குறித்து சொல்லப்பெற்றது கவனிக்கத்தக்கது. அவரது முத்தித் தலமாகிய திருவஞ்சைக்களத்தில் அவரைப்பற்றிய யாதொரு கல்வெட்டும் கிடையாது.

இதுகாறும் சொல்லிவந்தவைகள் நாளது வரையில் வெளியிட்டிருக்கும் கல்வெட்டுகளை ஆராய்ந்து அறிந்தவைகளே அன்றி முழுதும் அல்ல எனலாம். ஏனெனில் இன்னமும் வெளிவராத கல்வெட்டுகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. வெளி வந்தவைகளிலும் முழுப்பாகங்களும் பதிப்பிக்கப்படவில்லை. இக் குறை நமது பொதுமக்களுக்குச் சரித்திர ஆராய்ச்சியிலுள்ள அபிமானக்குறைவினுல் ஏற்பட்டதே ஆகும்.

———

மொழியாராய்ச்சி
(Comparative Philology)

[வித்துவான் G. தேவநேசன் அவர்கள்]

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம், Turanian, semitic, Aryan என முப்பெருங் கவைகளாயடங்கும். இவற்றுள் ஒவ்வொரு கவையும் பற்பல கிளைகளாய்ப் பிரியும். ஒவ்வொரு கிளையும் ஒவ்வொரு மொழித்தொகுதியாகும். இவற்றுள், துரேனியக்கவையில் திராவிடக் (Dravidian) கிளைக்குத் தலைமையாகக் கருதப்படுவது அமிழ்தினுமினிய தமிழ் மொழியே.

ஒரு மரத்தில், சிறு கிளைகட்கு நேர் இயைபு இன்றேனும் அவற்றைத் தாங்கும் பெருங்கவைகட்கு அடிமரத்துடன் நேர் இயைபிருப்பதுபோல, உலகமொழித்தொகுதிகட்குள் சிறு பிரிவுகட்கு நேர் இயைபின்றேனும் அவற்றிற்கு மூலமானபெரும் பிரிவுகட்கு நேரியைபு திட்டமாயுள்ளதாம். எல்லாக் கிளைகட்கும் மூலமான ஓர் அடிமரமிருப்பதுபோல எல்லா மொழிகட்கும் மூலமான ஒரு தாய்மொழியுமிருத்தல்வேண்டும். உலகத்திலுள்ள மக்களெல்லாம் ஒரு தாய் வழியினராதலின் அவர் வழங்கும் மொழிகளும் ஒரு தாய் வயிற்று வழியிலாதல் வேண்டும்.

உலகத்தின் மக்கள் முதல் முதல் தோன்றினவிடம் கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் இந்துமகா சமுத்திரத்தில் அமிழ்ந்துபோனதும் தலைச்சங்கமிருந்ததுமான குமரி நாடே. ஆஸ்திரேலியா, தென்னிந்தியா, தென்னாப்பிரிக்கா என்ற மூன்றும் ஆதியில் நிலத்தாலிசைந்திருந்தனவென்று மேனாட்டுப் பண்டிதர்கள் கண்ட வுண்மையே இதற்குப் போதிய சான்றாம். ஆகவே மக்கள் முதன் முதற் பேசிய மொழி தமிழேயாதல் வேண்டும்.

எல்லா மொழிகளும் இயற்கை செயற்கையென இருபாலா

யடங்கும். இவற்றுள் தமிழ் ஒன்றுமே இயற்கை. ஏனைய வெல்லாம் செயற்கை. ஆதலான், தமிழ் இயன்மொழி (Primitive Language) என்றும் ஏனைய திரிமொழி (Derivative Languages) என்றும் கூறப்படும். எல்லா மொழிகட்குமுள்ள பெரும்பாற் சொற்களைப் பகுதிப்பொருளுடன் இயற்கை வடிவில் வழங்குவது தமிழேயென்று மொழி நூலால் (Philology) விளங்குகின்றது. அவற்றுள் ஆங்கிலம் (English) கிரேக்கு (Greek) லத்தின் (Latin) என்ற மும்மொழிகளிலும் சென்று வழங்கும் தென் சொற்கள் ஆயிரக்கணக்கினவென்பதை ஐநூற்றுக்கு மேற்பட்டவற்றால் வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிற் காட்டுதும்:—

Abba-அப்பன்
Abbey-a monastery presided over by an abbot
Abbot-the father of an abbey
Abide, a+bide bide-வதி பதி-வதி-வதிதல்-தங்குதல்
Abode, bode-பதி
Accumulate, ad+cumulas. cumulas-கும்மல். குமி-கும்மல், குமியல்
Acre, *Gr*. agros-அகரம்
Add-அடு, அடை, அடுக்கு
Admire, ad+mire *L*. Miror-மருள்
Agony, *Gr*. agon-இகல்
Agirculture, agros-அகரம். culture-கல்லல்
Ah, Aha-ஆ!
Alias, *Gr*. allos-அல்லது
All-எல்லாம்
Allegory-அல்லகுறி (a description of one thing under the image of another)

Alone, all+one. one-ஒன்று
Along, long-ஒழுங்கு-நீளம்

"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும்
[பொருள"
—தொல், சொல், உரி சூ 19

ஒழுகு-ஒழுங்கு-ஒழுக்கம்

Aloof-அலக்கு, அலாக்கு
Alum-அளம்
Amalgam, malgam-முள்கு முள்கல்-கலத்தல்
Amateur *L*. amo-அமர், to love

"அமர்தல் மேல்"-தொல்,சொல்,உரி
"ஆத்திச்சூடியமர்ந்த தேவனை"
—ஔவை

Amaze, a+maze. maze-மய, மயங்கு, மசங்கு
Amethyst, *Gr*. amethystos.-a-அ, methu-மது
Amiable, amo-அமர்
Amicable, amo-அமர்
Amour, *L*. amor-அமர், to love

Anaglyph, *Gr.* ana-அண்ணம்-மேல், glypho-குழிப்பு
Analogue-அன்ன இலக்கம் இலக்கம்-சொல்
Anatomy, *Gr.* ano-அண்ணம், temno-துமி
Anchor-நங்கூரம் *L.* ancora *Gr.* anghyra
Anemometer, Gr. anemos-ஆன்மா. meter-மாத்திரை
Angel-அஞ்சல்
Animal, *L.* anima, *Gr.* anemos-ஆன்மா
Anna-அணா
Annual, *L.* annus-ஆண்டு
Anus-அண்டி
Anxiety-ஏங்கு, ஏக்கம்
Aorta, *Gr.* aeiro-ஏர்-எழுச்சி

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு"
—திருமுரு.

Apply-அப்பு
Apprehend, ad+prehend. prehend-புரிந்து கொள்; hend-get-கொள்
Appeal, *L.* ad+pello; pello-விளி (பிலிசு-தெலுங்கு)
Arch-அரசு
Archon-அரசன்
Architect-அரசத்தச்சன்
Are-இரு
Area-அழுவம்
Ashes-அடலை
Assert, *L.* ad+sero. sero-சேர்
Assign, *L.* ad+signum; signum-சின்னம்
Astrology, star-தாரகை, logy-இலக்கம் or இலக்கியம்
At-இடை
Attack-தாக்கு (prosthesis)
Attar-அத்தர்
Attorney-அத்தாணி
Attract, *L.* ad+traho, traho, draw-திரை. திரைத்தல்-இழுத்தல். திரைத்துக் கட்டு என்னும் வழக்கு நோக்குக
Audacity-அடம்
Augment-ஆக்கம்
Avail, *L.* ad+valeo, valeo-வலி, to be strong
Avarice, *L.* avaritia-இவறல்

"இவறலும் மாண்பிறந்த மானமும்"
—குறள்

Axle-அச்சு
Babe-பார்ப்பு, பாப்பா
Back-பிறக்கு (இடைக்குறை)
Bandy-பண்டி
Bag-பக்கறை
Baggage- ,,
Ban-பன்
Bang, Bangue-பங்கி
Banyan-வாணியன், the Indian fig-tree so called by the English because the Banyans (merchants) held their markets under it
Bar-பார், பாரை, a rod; *v.t.* to hinder

"பாரீந்திருந்த கலை பாரறச் சென்ற [கேள்வி"
(சீவ. க. யா.1).
பாரற=தடையற

Bard-பாணன்
Bark-படகு
Barometer-பாரமாத்திரை
Barrel-புழை
Barrier-பார்
Barrister, one qualified to plead at the bar
Basket, perhaps பழக்கூடை
Bat-மட்டை
Battalion-பட்டாளம்
Battery-பட்டறை
Bay-பாய்

"ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள"
(தொல். சொல். உரி. சூ 63)

Beak-மூக்கு
Bear-பொறு
Beauty, from beau - பொ, பொல், பொன்.

பொலி+உ=பொலிவு
,, +அம்=பொலம்
பொல்+பு=பொற்பு
,, +பி=பொற்பி-beauty

"பொற்பதோர் பவழந்தன் மேல்"
—சீவ. 2247

பொற்றது=பொலிவு பெற்றது.
பொல் பகுதி

Bed-படை, படுக்கை
Bee-வீ, ஈ
Beetle-விட்டில்
Betel-வெற்றிலை
Bhang-பங்கி
Bill *L.* bulla-புள்ளி

"புள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாது"
—உலக வழக்கு

Bird-பறவை
Birth-பிறப்பு
Bolt-பாள்
Bore-பொள்
Borough-புரம் Bourg, Burgh
Bottle-புட்டில்
Bowl-வள்ளம், a round cup
Boy-பையன்
Blame-பிழை
Blare-பிளிறு
Bleach-வெளு
Blink-விழி
Blunt-மழுங்கு
Boast-பீத்து, (கொச்சை)
Boat-ஓடம்
Body-படிவம்-வடிவம்
Break-பிள
Broad-பரந்த. Breadth-பரப்பு
Brush-பரசு, பரசுதல்-பெருக்குதல்
Bud-மொட்டு
Bull-புல்லம்

"எருடு மூரிபுல்லம்"— சூடாமணி

Bull-புள்ளி
Bun-பணி, பண்ணிகாரம்-பணிகாரம்-பணியாரம்
Bunch-மஞ்சரி
Burden-பொறை
Burial-புதையல்
Bush-புதர்
Butler-bottler-புட்டிலர்
Butt-புட்டி, முட்டி
Buttock-புட்டம்
Cachirration-கெக்கரித்தல்
Caitiff-கைதி
Calamity-கலி
Calf-களபம்
Calico, a cloth from Calicut-கோழிக்கோடு, கள்ளிக்கோட்டை
Can-கூடு

Can-கெண்டி
Candy-கண்டு-சர்க்கரை
Cane-கன்னல், a reed
Canton-கண்டம், Canton-ment
Canto-காண்டம்
Canvas, *Gr.* Cannabis-சணப்பு
Card-கடிதம்
Care, *L.* Carus-கரிசு
Carve-குழி
Cash-காசு
Catamaran-கட்டுமரம்
Caution *L.* Caveo-கவல், கவனி
Cave-குவை, குகை
Cellar-கல்லறை
Chaff-சாவி
Chair-குறிச்சி (Ch=k)
Cheetah-சிறுத்தை
Cheroot-சுருட்டு
Chew-சவை
Child-குழந்தை (ch=k)
Chit-சிட்டு
Choir, *L.* Chorus-குரவை, a dance in a ring
Clan-குலன்
Class-குழு
Clay-களி
Clock-கடிகை
Coat-குடி. குடித்துணி-உலக வழக்கு
Cold-குளிர்ந்த
Collar, *L.* collum-களம் கழுத்து
College-கழகம், originally a collection of men. (*Chambers' Dictionary*)
Colon-குழல்-குடல்
Colour-கெழு

"குருவுங் கெழுவு நிறனாகும்மே"
தொல்: சொல்: உரி

Column-கால்
Comedy-கோமாளி originally a ludicrous spectacle. *Gr.* Comodia
Comely-காமர்
Comic, adj. of comedy
Cone-கொனை, a point
Cool-குளிர்
Coolie-கூலி
Coot-கூழை
Copper-செப்பு (c=ch)
Corn-சோளம்
Corner-கோணம்
Cot-குடி
Cottage-குடிசை
Cotton-கொட்டை-பஞ்சு
Court-கோட்டம் *Gr.* Chortos
Cover-கவி
Covet-கவர்-விரும்பு
Cow-கோ
Coward-கோழை. குவளை-கோழை
Crab-கடப்பான்
Crack-கிறுக்கு
Crane-குருகு
Crew-குழு
Crime-கருமம்
Crook-கொடுக்கு
Cross குறுக்கு
Crow-கரை
Cry-கரை
Crypt-கரப்பு
Cuddy-கூடு
Culture-கல், பகுதி
Cumber-கும்பல்
Cumulate-கும்மலிடு
Curl-சுருள். (c=s)

Curry-கறி
Cycle-சக்கரம்
Cyclopædia, *Gr.* Kyklos-சக்கரம், paideia-படிப்பு
Daddy-தாதை
Dance-தாண்டவம்
Dare-திரம்
Deity-தெய்வம்
Dense-திண்
Drive-திரி
Desert *L.* de+sero. sero-சேர்
Devotion-தபம்-தவம்
Digest, *L.* dis - gero; gero-செறி
Dignity-தகை
Divine-தெய்வ. திவ்விய
Donation, *L.* donum-தானம்
Drag-திரை
Draw-திரை
Drive-துர
Drone-சுரும்பு-ஆண்வண்டு
Ear-அள்-கலப்பை
Ear-ஏர்-காது
Early-ஏல
Echo-இசை
Economy-சிக்கனம்
Err-இழுகு
Every-ஒவ்வொரு
Face-முகம் (c=k)
Facility-வசதி
Fade-வாடு
Fairy, from fay-பேய்
Falcon-வலியன்
Fall-விழு
Fallacy-மாலம்
Fascinate-வசி
Faste-விசை
Fast-பசி
Fate-விதி
Fault-வழு
Fay-பேய்
Fear-வெருவு
Feed-ஊட்டு
Fiddle-விடலை. (See Violin in Chambers')
Fiend-பேந்து
Filial, *L.* filus-பிள்ளை
Firm-உரம்
Flag-விலோதம்
Flash-பளிச்சு (ஒளிக்குறிப்பு)
Flesh-விழுக்கு
Flog-விளாசு
Flood-வழாறு
Flora-மலர். Florin, a coin stamped with the lily flower
Flower-மலர்
Folio-ஓலை
Fool-மாளி, கோமாளி-a court fool
Foot-பாதம்
Forest-புறவு
Form-உருவம்
Frame-வரம்பு
Freeze-உறை
Frill-விறையல்
Fry-வறு
Full-முழு
Fury-வெறி
Fuss-பூசல்-ஆரவாரம்
Galleon-கலம்-கப்பல்
Gallery-கலவறை. கலம்-அணி
Gallon-கலம்
Gallop-கலிப்பு or கெலிப்பு
Gate-கடை, கடவு
Gather-கூடு
Gaunt-கோதை

Geology, *Gr.* ge-கூ logos-இலக்கம்
Geometry *Gr.* ge-கூ metry மாத்திரை
Get-கொள்
Ghoul-கூளி
Giddy-கிடுகிடுத்த
Ginger-இஞ்சி
Girl-குருளை, a child
Globe-கோளம்
Goal-கழை
God-கடவுள்
Gore-கறை
Grain-களஞ்சு-கழஞ்சு
Granary-களஞ்சியம்
Grave-குழி
Grease-கொழுப்பு
Group-கருவி-தொகுதி
Guano-சாணி
Guava-கொய்யா
Guide-காட்டு
Gulf-குலவு
Hail-ஆலி-ஆலங்கட்டி
Hall-சாலே
Hang-தூங்கு
Hard-கடினம்
Haricot-அவரைக்கொட்டை
Heap-குப்பை
Hear-கேள்
Heath-இதை, a barren open country
Heathen, from Heath
Hell-அளி, அளறு
Herd-கிடை
Heritage-உரித்து
Hear-வீரன்
High-உக "உகப்பே யுயர்வு" —தொல்-சொல்: உரி
Hoarse-கோரம்
Hockey-Hookey-கொக்கி
Hole-குழி
Honour-மானம்
Hood-கூடு
Hook-கொக்கி
Hookah-உக்கா
Horn-கோணம்-கோடு
Horror-அரள்
How-எவ்வது
Howl-ஊளை
Huge-உகந்த
Hut-குடி
Hyperbole-உப்பர்ப் போலி, உம்பர்-உப்பர், புகலி-போலி
In-இல்
Inn-இல்
Iron-இரும்பு
Isagon, *Gr.* isos-இசை, gonia-கோணம்
Item, *Sans*.-இதம்-இப்படி இ, பகுதி
Jackass, jack-சேவு-ஆண்
Jar-சால், சாடி
Javelin-சவளம்
Jeer-கேலி
Joint-சந்து
Jury-சூள்
Kail-கீரை
Keen-கூர்
Kid-குட்டி, குட்டன்-வெள்ளாட்டுக்குட்டி
Kill-கொல்
Kiln-காள (வாய்)
Kin-கிளை
Kiss-கொஞ்சு
Knee, *Gr.* gonu-கணு
Lakh-இலக்கம்
Leather-உதள்
Legible, *L.* Lego-இலகு
Lemon-எலாமிச்சை
Lime ,,

Local, *L.* locus-இலக்கு-இடம்
Logic, *Gr.* logos-இலக்கம்-தருக்கம்
Lone, alone, all + one-எல்லாம் ஒன்று-தனிமை
Long-ஒழுங்கு
Lull-லாலாட்டு
Mad-மத்த
Maid-மாது
Mall-மழு
Mammoth-மாமதம்
Man-மன்
Manage, to handle. *L.* Manus, *H* Manicas-மணிக்கை
Mango-மாங்காய்
Mantle-மீந்தோல், a loose outer garment
Manub *from* manus
Many-மன்-மிகுந்த
Mare-மறி பெண்குதிரை
Marine, *L.* Marinus-வாரணம்
Marrow-மூளை
Marvel-மருள்
Mat-மாற்று
Match-மட்டம்
Maze-மச, மசக்கு, மய-மச
Mead-மட்டு-மது
Meal-மெல்லப்படுவது
Meat-மடை
Melon-முலாம்
Melt-மெல்கு
Mere-வெறு
Merge-முழுகு
Mess-மிசை
Metre-மாத்திரை
Might-மைக்து
Mind-மனது
Miracle-மருட்கை
Miser-பிசிரி
Moan-முணங்கு
Mole-மறு
Money-மனவு, மணி
Mood-படி
Moor-முல்லை.
Moringa-முருங்கை
Mosquito, dim. of musca-மசகு
Moss-பாசி
Moth-மூட்டைப் (பாச்சா)
Mould-புழுதி
Mould-முழை. Mouldwarp-முழைவார்ப்பு
Mouth-மடை
Much-மிக
Mucus-மூக்கு
Mud-மண்
Mural *adj*. *L.* Murus-புரிசை
Murmur-முறுமுறு
Myth-மித்தை
Nacre, a white matter-நிகர்-ஒளி
Nadir-நாட-போல
Nag-நாகு
Nation-நாடு Native-நாட்டான்
Nature-நாற்றம். நாறு-தோன்று.
Navigate, *L.* Navis-நாவாய்; ago-உகை
Near-நெருங்கு
Need-நாடு
Nerve-நரம்பு
Nice-நயம்
Ninny-நன்னி
Nod-நடுங்கு
Nook-முக்கு

Note-நோடு. Notion-நோட்டம்
Nut-நெற்று
On-அண்-மேல்
One-ஒன்று
Opium-அபின்
Page-பாங்கன்
Page-பக்கம்
Pain-பையுள்
Palace-மாளிகை
Palaeology, *Gr.* Palaios-பழைய; logos-இலக்கம்
Palanquin-பல்லக்கு
Pan-பானை
Pandit-பண்டிதன்
Par-புரை-ஒப்பு
Passion-பாடு
Paste-பசை
Path-பாதை
Pathos-வாதை
Pave-பாவு
Peak-மூக்கு
Pawn-பணயம்
Pearl-பரல்
Pecuniary, *L.* pecu-பசு
Pedagogue, *Gr.* Paidos-பைதல்; ago-உகை
Peer-புரை-ஒப்பு, உயர்வு
Peril-பருவரல்
Perry Pear-பேரி
Pestle-முசலி-உலக்கை
Petal-மடல்-இதழ்
Petty-பிட்டு-சிறிய
Philology, *Gr.* philos-விழைவு; logos-இலக்கம்
Phonetic, *Gr.* phone-வாணி
Pick, syncope of பொறுக்கு
Piece-பிச்சு. பிய்+சு-பிய்ச்சு-பிச்சு
Pitcher-பத்தர்-குடம்

Place-வளாகம். (p=k)
Plain-வெளி
Plank-பலகை
Play-விளை(யாடு)
Plausible-பழிச்சவல்ல
"பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள்"
தொல். உரி. சூ. 84
Ply-வளை
Pock-பொக்குளம்
Poem-பா, பண்
Police, the system of regulations of a town. *Gr.* Polis-பாழி-நகர்
Polish-(பள) பளப்பு
Politics from polis
Polygon-பலகோணம்
Pool-பாழி-சிறுகுளம்
Pore-புரை-துளை
Port-புதவு
Portia-பூவரசு
Pot-பாண்டம்
Pouch-பொச்சு
Pour-வார்
Powder-பொடி
Practise-பழகு
Praise-பரசு
Prate-பிதற்று
Price-பரிசு. Prize-பரிசு
Pride-பெருமை
Puberty-பூப்பு, பூப்படைவு
Pulpit-பலிபீடம்
Pupa-பார்ப்பு
Pussy-பூசை-பூனை
Put-போடு
Putty-புட்டி
Puzzle-மசக்கு
Pyre-பொறி
Race-இராசி
Rajah-அரசன்

Red-இரத்த
Rice-அரிசி
Ring-கறங்கு
Roar-உரறு
Roll-உருள்
Round-உருண்ட
Rude-முரடு
Saccharine-சர்க்கரை
Sack-சாக்கு
Saddle-சேணம்
Sail-சேலை
Sake-சாக்கு
Salaam-சலாம்-வளைவு, வணக்கம்
"தந்தலை தாழ்தல் சலாஞ் செய்தல்"
உரிச்சொல் நிகண்டு
Saloon-சாலை
Sandal-சாந்தம்-சந்தனம்
Satan-சாத்தான்
Savour-சுவை
Scale-சிலும்பு
Sculpture-சிற்பம்
Semblance, *L.* similis-சமம்
Series, *L.* sero-சேர்
Sermon-சேர்மானம்
Serry-செறி
Serum-சிலம்
Shake-அசைக்கு for அசை (வடஆற்காட்டு வழக்கு)
Share-கூறு (sh=k)
Sharp-கூர்ப்பு(ஆன)
Shawl-சால்வை
Shell-சோழி
Sheet-சீட்டு
Shed-சிந்து
Shed-கொட்டு-கொட்டகை
Ship-கப்பல்
Shirt, a short garment-குட்டை
Shore-கரை
Short-குட்டை
Shrink-சுருங்கு
Sign-சின்னம்
Simile-சமம்
Sky-காயம்-ஆகாயம்
Slack-சுணக்கம்
Slave-சிலதி
Slip-சருக்கு
Slope-சரிவு
Smoke-புகை
Smooth-மெது
Snake-நாகம்
Sneak-நகர், to creep
Solar, adj. *L.* Sol-சூரன்
Sound-சந்தம்
Soup-சூப்பு
Speech-பேச்சு
Spire-புரி-வளைவு
Spot-பொட்டு
Spead-பரத்து
Spy-வேய்
Squash-கசக்கு
Squirrel, dim. of *Gr.* skiouros-கிரி
Star-தாரகை
Sugar-சர்க்கரை
Summit-சிமை
"ஆடுகழை நரலுஞ் சேட்சிமை"—
புறம். 120
Sup-சப்பு
Swear-சூள்
Taber, Tambour-தம்புரு
Tank-தாங்கல்-குளம்
Tarry-தரி
Teak-தேக்கு
Telephone-தொலைவாணி
Terminus-தீர்மானம்
Terrace-தளம்
Territory-தரைத்தலம்

Theology, *Gr.* theos-தெய்வம், logos-இலக்கம்
Thorough-துருவ
Thread-திரி
Thrive-தழை
Thrust-துருத்து
Till-தொள், to cultivate, to dig
Timid-திமிர்
Tire-அயர்
Tissue-தசை
Toleration-தாளுதல்-பொறுத்தல்
Tone-தொனி
Tract-திரை-இழு
Train-திரை
Transact, *L.* trans-துருவ, ago-உகை
Transparent-துருவிப் பார்க்கும்
Tree-தரு
Trick-திருக்கு
Trophy-திருப்பு
Truck-திரிகை, a wheel
Tube-தூம்பு
Turn-திரும்பு
Umber-அம்பர், ஒரு பிசின்
Vain-வீண்
Valiant-வலியுள்ள
Value-விலை
Vary-வேறு (படு)
Varnish-வண்ணம்
Vault-வளைவு
Vermicule, *L.* vermisculus-உலம்-குழவு
Very-உறு
Vest-வேட்டி
Victroy-வெற்றி
Viol, Violin, Low *L.* Vidula-விடலை
Vulture-வலசார்
Walk-ஒழுகு-நட
Wall, *L.* vallum-வாளம்
Want-வேண்டு
Wanton-வேண்டுமென்று செய்பவன்
War-போர்
Warm-உரும்-வெப்பம்
Wax-வீங்கு
Way-வாய்
Wet-ஓதம்
Wether-உதள்

"மொத்தையும் தகரும் உதளும் அப்பரும்
யாத்த என்ப யாட்டின் கண்ணே"
—தொல்-மரபு சூ 47

While-வேளை
White-வெள்ளை, வெட்டை
Wide-வீதி
Will-உள்ளம்
Wind-வளி
With-உடன்
Wonder-விந்தை
Worm-உலம்-புழு
Worth-பெறுதி
Yean-ஈன்
Yet-இன்னும்
Yoke-நுகம்
Yonder-ஆண்டை
Zenith-சென்னி

———

பண்டைத் தமிழ்ச் சொற்கள்.

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B.A.]

அடிகள் (௧௭)

பண்டைத் தமிழ் மக்கள், தாங்கள் வழிபட்ட கடவுளைக் குறிக்க, 'அடிகள்' என்ற சொல்லை வழங்கி வந்தார்கள். அவர்கள் ஏன் அச்சொல்லைக் கடவுளுக்கு வழங்கி வந்தார்களென்பதைப் பற்றி இக் கட்டுரையில் ஆராய்வாம்.

(2) ஒரு கூட்ட மக்கள் கடவுளை ஒரு பெயரினால் வழங்குதற்கு அடிப்படையா யுள்ளது அவர்கள் கடவுளைப்பற்றிக் கொண்ட கொள்கைகளே ஆகும். அக் கொள்கைகள் யாவை? கதிரோனும் அவனினின்றும் வேறாகாத ஒளியும்போலக் கடவுளும் அவனினின்றும் வேறாகாத அருளும் என்றும், கதிரோனொளி உலகி லெங்கும் நிறைந்திருத்தல்போலக் கடவுளினது அருளும் உலகிலுள்ள உயிர்ப்பொருளிலும் உயிரில் பொருளிலும் நிறைந்திருக்கின்றது என்றும், அந்த அருள் ஆற்றல் ஒன்றே உலகிற் பல வகையாய்ப் பல தத்துவங்களில் வெவ்வேறு பெயருடன் விளங்குகின்றது என்றும், பண்டைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தார்களென்று பண்டைத் தமிழ் நூல்களால் நாம் அறிகின்றோம். ஏறக்குறைய 40, 50 ஆண்டுகளுக்கு முன்னே மேற்குநாட்டு இயற்கை ஆராய்ச்சியாளர்கள் வெப்பம், வெளிச்சம், மின்சாரம் (heat, light, electricity) முதலியவைகள் வெவ்வேறு சத்திகள் என்ற கொள்கையைக் கொண்டவர்களா யிருந்தார்கள். இப்பொழுது ஏறக்குறைய 45, 50 ஆண்டு காலமாகத்தான், அவர்கள் உலகில் விளங்கும் சத்து (energy) ஒன்றே என்றும் அந்த ஒரு சத்தியே பல வகையாய்ப் பலவகை மாயா தத்துவங்களில் விளங்கும்பொழுது வெப்பம், வெளிச்சம், மின்சாரம் முதலிய பல சத்திகளாய் விளங்கிப் பல பெயர்கள் பெறுகின்றது என்றும் முடிவு கட்டியிருக்கிறார்கள். நீண்ட காலத்துக்கு முன்னே, பண்டைத் தமிழ் மக்கள் இந்த உண்மையை அறிந்திருந்தார்கள்.

(3) இன்னும், பண்டைத் தமிழ் மக்கள் கடவுள் உருவமாவது அருவமாவது அருவுருவமாவது உடையனல்லனுயினும் உயிர்கள் தன்னை அறிந்து உய்யும்பொருட்டு, உருவப் பொருளிலும் அருவப் பொருளிலும் அருவுருவப் பொருளிலும் இயைந்து விளங்குகின்றான் என்ற உண்மையையும் அறிந்திருந்தார்கள். ஒரு சார்பு மக்கள் உருவம் அருவம் அருவுருவங்களுக்கு அப்பால் நிற்கும் கடவுளை, நாம் உருவ முதலிய பொருள்களில் வைத்து வழிபடுதல் அவனைக் குறைவு படுத்தலாகும் என்று கூறி, அவ் வழிபாட்டை இகழ்ந்து கூறுகிறார்கள். பண்டைத் தமிழ் மக்கள் இவ்வாறு கொள்ளாமல், "யாரொருவ ருள்குவா ருள்ளத் துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்" என்றும், 'ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன் புனத்தகத்தான் " என்றும் திருநாவுக்கரசு சுவாமிகளும், "மேலுலந்த தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும், அக்கோலத் தவ்வுருவேயாம்" என்று காரைக்கா லம்மையாரும் கூறிய வண்ணம் கடவுள் தன்னை அன்புடன் வழிபடும் மக்களுக்குப் பேரிரக்கத்தால் அவர்கள் தங்கள் தங்கள் அறிவுக்குத் தக்கபடி கொண்ட உருவ முதலானவைகளில், அருளாய் விளங்கி, அருள் செய்கின்றான் என்ற உண்மையை அறிந்திருந்தார்கள். இவ்வாறு கடவுள் உலகில் விளங்கும் தன்மை, அவனுடைய பொது இயல் என்று கூறப்படும். "வான்பிணிக டெரும் வண்ணம் வானகமு மண்ணகமு மற்று மாகிப் பரந்தவன் காண்" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறியபடி, கடவுள் உயிர்களைச் சார்ந்திருக்கிற மலப்பிணி தீரும்வண்ணம், உயிர்ப் பொருளும் உயிரில் பொருளும் அடங்கிய உலகில் விளங்குகின்றமையால், அவனை அவ்வாறு விளங்குகின்ற தன்மையில் மக்கள் வழிபடுதலே இயற்கைக்கு இணங்கியுள்ளது என்று அவர்கள் கண்டார்கள். விரிப்பின் உரை பெருகும்.

4. மேலே கூறியவாற்றால், கடவுள் உலகில் விளங்கித் தோன்றுதற்கு, அவனது அருளே காரணம் என்பதும், அவன் உயிர்கள் பொருட்டுக் கொள்ளும் உருவ வகைகளெல்லாம் அருள் உருவங்களே என்பதும் புலனாகும். "உருவென் றுண

ரப்படாத அடி" என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள். அவ்வாறு மக்கள் கடவுளை உருவங்களில் வைத்து வழிபடுதற்குத் தங்கள் உருவம் போன்ற உருவங்களில் வழிபடுதலே இயல்பாகும். மக்களுடைய உடலுருவத்தில் தலை எல்லா உடல் உறுப்புக்களுக்கும் மேலாயும், கால்களிரண்டும் எல்லா உடல் உறுப்புக்களுக்குங் கீழாயும் உள்ளன. கால்களிரண்டும் எல்லா உறுப்புக்களையுந் தாங்குவனவாயும், உடலை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு இயக்குவனவாயு முள்ளன. உடல், பெரிய உலக (Macrocosm) அமைப்பைப் போலச் சிறிய அளவி லமைந்துள்ளமையால் அது ஒரு சிறிய உலகம் (Microcosm) என்று கூறப்படுகின்றது. ஆதலின், பண்டைத் தமிழ் மக்கள் பெரிய உலகம் விளங்குதற்கும் இயங்குதற்கும் காரணமாயுள்ள அருளானது, அவ்வுலகம் போன்று சிறிய உலகமாய்த் திகழ்கிற உடலைத் தாங்கியும் இயக்கியும் நிற்கிற கால்களுக்குப் பய னுவமையா யிருத்தலால், அருளைக் கால்கள் என்று பொருள் கொள்ளும் 'அடிகள்' என்று கூறினார்கள். அடிகளிரண்டா யிருத்தலின் அடிகள் என்று பன்மையில் அவர்கள் கூறினார்கள். அடி பால்பகா அஃறிணைப்பெயர் ஆதலின், அடி என்று கூறுதலும் நூல் வழக்கில் உள்ளது.

5. கடவுளுடைய அடிகள் அருளை உணர்த்துகின்றன என்று அடியிற் காட்டப்பட்டிருக்கிற திருநாவுக்கரசு சுவாமிகளுடைய தேவாரப் பா வொன்றினால் நன்கு விளங்கும்.

"மருளவா மனத்தனாகி மயங்கினேன் மதியிலாதேன்
இருளவா அறுக்கு மெந்தை இணையடி நீழலென்னும்
அருளவாப் பெறுதலன்றி யஞ்சினா னலமந் தேற்குப்
பொருளவாத் தந்த வாறே போதுபோய்ப் புலர்ந்த தன்றே.

"கானப்பே ரண்ணலின் அடியலாற் சரணுடையரோ அடியரே" என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்திலும் அடி என்ற சொல் அருளைக் குறிக்கின்றது. சிவஞான போதம் சிவஞான சித்தியார் முதலிய ஞான நூல்களில், அடி, கழல், தாள் ஆகிய சொற்கள் திருவருளையும், அல்லது திருவருளா லுண்டா

கும் பேரின்ப நுகர்வை (சிவானந்தானுபூதியை)யும் குறிக்க வழங்கப்பட்டிருக்கின்றன. திருவள்ளுவருடைய திருக்குறள் முதலாவது அதிகாரம் 2, 7, 8, 9 குறள்களில் தாள் என்ற சொல்லும் 3, 4, 10 குறள்களில் அடி என்ற சொல்லும் கடவுளது அருளைக் குறிக்கின்றன.

6. இனி அருளாற்றல் கடவுளினின்றும் பிரிக்க முடியாததாயிருத்தலின், அடிகள் என்ற சொல் கடவுளைக் குறிக்கப் பெரும்பாலும் வழங்கப்பட்டு வந்தது. திருமூலர் திருமந்திரத்தில் (138) திருவடியே சிவமாவது என்று கூறி யருளினர். மூவர் தேவாரங்களிலும் அடிகள் என்ற சொல் கடவுளைக் குறிக்கப் பல இடங்களில் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. மூவர் தேவாரங்களினும் திருவாசகத்தினும் இவ்விரண்டு இடங்கள் அடியிலே காட்டப்படும்.

(1) "அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே"

திருஞான சம்பந்த சுவாமிகள், திருந்து தேவன்குடித் தேவாரம் க-வது பாட்டு.

(2) "ஆதியந்தமில்லா அடிகள் வேடங்களே"

மேற்படி தேவாரப் பதிகம் 2-வது பாட்டு.

இவ்வாறே, இந்தப் பதிகப் பாட்டின் ஒவ்வொன்றினுடைய நான்காமடியிலும் அடிகள் என்ற சொல் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டு வந்திருத்தல் காண்க,

(3) "நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர் புன்சடையடிகள் நின்றவாறே"

திருநாவுக்கரசு சுவாமிகள், நின்ற திருத்தாண்டகம் க-வது பாட்டு.

(4) "எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்துமாகி யெழுஞ்சுடரா யெம்மடிகள் நின்றவாறே"

மேற்படி தாண்டகம் உ-வது பாட்டு.

இந்தத் தாண்டகப் பதிகம் ஒவ்வொரு பாட்டின் நான்காம் அடியிலும் அடிகள் என்ற சொல் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டிருத்தல் காண்க.

(5) "ஆறு தங்கிய சடையரோ நமக் கடிகளாகிய அடிகளே"

சுந்தரமூர்த்தி சுவாமிகள், நமக்கடிகளாகிய அடிகள் தேவாரம், க - வது பாட்டு.

(6) "தட்டியாளவுங் கிற்பரோ நமக் கடிகளாகிய அடிகளே"

மேற்படி தேவாரம். 2-வது பாட்டு.

இந்தத் தேவாரப் பதிகம் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் நமக் கடிகளாகிய அடிகளே என்று கூறப்பட் டிருத்தல் காண்க.

(7) "அடிகளே யடியே னுதரித் தழைத்தா லதெந்துவே யென் றருளாயே"

திருவாசகம், அருட்பத்து, இ-வது பாட்டு.

(8) ஆளெம்மை யாளு மடிகளார் தங்கையில்"

திருவாசகம், அன்னைப்பத்து, 8-ம் பாட்டு.

7. இனி, அடிகள் என்ற சொல் கடவுளுக்கு வழங்கப்பட்டுவந்தபின்னர் கடவுட்டன்மையை அடைந்த பெரியார்களையுங் குறிக்க வழங்கப்பட்டு வருகின்றது. அடிகள் என்றசொல் இப்பொழுதும் பேச்சு வழக்கிலும் நூல் வழக்கிலுங் கடவுட்டன்மையையுடைய பெரியோர்களைக் குறிக்க வழங்கப்பட்டு வருகின்றது. ஆனாலும், அதற்குச் சரியான ஆரிய மொழியாகிய சுவாமிகள் என்ற சொல் தகுதியால் எத்தன்மையராயினும் கல்லாடை தரித்தவர்களையும், பிறப்பினல் ஆரியர்களையும், குறிக்க வழங்கப்பட்டு வருதல்போல அடிகள் என்றசொல் வழங்கப்படுவதில்லை. அச்சொல், முதலாவது, சைவ சமயத்தாரால் வழங்கப்பட்டு வந்த பின், புத்த சமயத்தாராலும் புத்த சமயத் துறவிகளைக் குறிக்க மணிமேகலை சிலப்பதிகார நூல்களிலும் வழங்கப்பட்டு வந்தது.

(தொடரும்)



பச்சையப்பன் காலேஜில் தமிழாசிரியராயிருந்தவரும்,
தமிழ், தமிழ்வியாசங்கள், திருவள்ளுவர், கம்பர், கலிங்கத்துப்பாணி வசனம்
முதலிய நூல்களியற்றியவருமாகிய
திருமணம்- செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ.

ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ	மெய்கண்டான் யாண்டு-எாஅ ஆடித்திங்கள் 1931ஆ ஜூலை மீ—ஆகஸ்டு மீ	பரல் எ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

உயிரா வணமிருந் துற்றுநோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத்தந்தால்
உணரப் படுவாரோ டொட்டிவாழ்தி
அயிரா வணமேறு தானேறேறி
யமரர்நா டாளாதே யாரூராண்ட
அயிரா வணமேயென் னம்மானேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

அயிராவணமேறு து=கைலாயத்திலுள்ள யானைமேலேறாது
ஆனேறேறி=எருதின்மேலேறி
அமரர் நாடாளாதே=விண்ணுலகத்தை ஆளுதல் செய்யாது
ஆரூராண்ட=திருவாரூரை யாளுதல் செய்த
ஐராவணமே=பிருதிவி மூர்த்தியே (நில உருவினனே)
என்னம்மானே=எனது தந்தையே

உயிராவணமிருந்து=மூச்சு (வெளியே) விடாமலிருந்து, அதாவது, மூச்சு அடக்கி

உற்றுநோக்கி=அசையாமற் பார்த்த வண்ணமே பார்த்துக்கொண்டிருந்து

உள்ளக் கிழியின்=உள்ளமாகிய துணியில்

உருவெழுதி=(உனது அடிகளுடைய) வடிவம் எழுதி

உயிராவணம்=உயிராகும் தன்மை யுண்டாகும்படி, அதாவது, தன் முனைப்பு இல்லாதபடி

உன்கைத் தந்தால்=உன்வசம் ஒப்புவித்து விட்டால்

உணரப்படுவாரோடு=நீ உயிருடைய தன்வயமின்மையை அதற்கு உணர்த்தி உன்னல் அவ்வுண்மை உணரப்பட்ட உயிரோடு

ஒட்டி வாழ்தி=இரண்டற (உயிருடன்)ச் சேர்ந்து கலந்து அதற்கு உன்னுடைய பேரின்பத்தைக் கொடுத்து வாழச் செய்கின்றாய்

நின்னருட்கண்ணால் நோக்காதார்=ஆதலால் இவ்வாறு நினது அருளை அடையாதவர்கள்

அல்லாதாரே=மக்களாய்ப் பிறந்தும் மக்கள்அல்லாதவர்களாவார்கள்.

விளக்க உரை

அயிராவணம் (ஐராவணம்) என்பது கைலாய மலையிலுள்ள இரண்டாயிரம் கொம்புகளுடைய ஒரு யானை. அயிராவணமேறாது ஆனேறேறி அமரர் நாடாளாதே ஆரூராண்ட என்பது “வான் பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறிய வண்ணம் விண்ணுலகத்தை விட்டு இம்மண்ணுலகத்துக்கு வந்து உயிர்களை யாட்கொள்ளும் சிவபெருமானுடைய அருட்டிறம் கூறுகின்றது.

அயிராவணம்=ஐராவணம். இரா என்னும் வடமொழி பிருதிவி (நிலம்) என்று பொருள்படும். இராவணம்=பிருதிவியின் மயம். இ என்ற எழுத்து ஆதிவிருத்தி சந்தியால் ஐகாரமாயிற்று. ஐராவணம் என்பது பிருதிவி மயமான சிவபெருமானுடைய உருவத்தைக் குறிக்கிறது. பிருதிவி சிவபெருமானுக்கு எட்டு உருவங்களில் ஒன்று. திருவாரூர் பிருதிவித்தலம் ஆதலின் அங்கே புற்றிடமாகத் திருமேனி கொண்டருளி யிருக்கின்ற சிவபெருமானை ஐராவணமே என்று அடிகள் விளித்தனர்.

உயிராவணம்=உயிர்த்தல் என்பது மூச்சுவிடுதல்.

உயிராவண்ணம்=மூச்சு விடாதபடி யிருத்தல். இது பிராணுயாமம் என்று கூறப்படும் யோகத்துக்குரிய எட்டு உறுப்புக்களில் ஒன்று. உள்ளத்தை அடக்குதற்கு மூச்சடக்கம் (பிராணுயாமம்) துணையா யிருக்கின்றது. மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு என்ருர் திருமூலர்.

உற்றுநோக்கி=உற்றுநோக்கி என்பது நுண்ணிதாய்ப் பார்த்த வண்ணமே பார்த்துக் கொண்டிருத்தல், அதாவது, மனதைப் பிற பொருளிற் செல்லாமற் றடுத்துத் தியானப் பொருளைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி நிறுத்துதல்.

உள்ளக்கிழி=உள்ளமாகிய கிழி; இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. கிழி என்பது கிழிக்கப்பட்ட துணி (Painter's Canvas).

உரு எழுதி—தியானத்துக்காகச் சிவபெருமானுடைய அடிகளை உள்ளத்திலே எழுதுதலை அடிகள் "இம்மை யுன்ருளென் னெஞ்சத் தெழுதி வை" என்று திருச்சத்திமுற்றம் திருவிருத்தம் (செ. 6) லும் "உழைத்துந் துள்ளியு முள்ளத் துள்ளேயுரு விழைத்தும்" என்று திருப்பேரெயில் திருக்குறுந்தொகை (செ.8) யிலும் குறிப்பிட்டிருத்தல் காண்க. மாணிக்கவாசக அடிகளும் "படமாக வென்னுள்ளே தன்னிணைப் போதவை யளித்து" என்று திருப்பூவல்லி 14-வது பாட்டிற் கூறியருளினுர். திருமூலர் திருமந்திரத்தில் "ஞானக் கூத்தன் படந்தான் செய்துள்ளுட் படிந்திருந்தானே" என்று கூறினுர்.

உயிராவணம்—உயிராம் வண்ணம் என்பது; உயிராம் என்பதி லுள்ள மகர வொற்றுத் தொகுத்தும் வண்ணம் என்பதிலுள்ள ணகர வொற்றுத் தொகுத்தும் நின்றன. உயிரானது தன்முனைப்பு அற்ற பொழுதுதான் உண்மையில் உயிராகின்ற சிறப்புத் தன்மையை அடைதலின் உயிராவணஞ் செய்திட்டு என அடிகள் கூறினுர்.

உன் கைத் தருதல் என்பது உயிரானது தன்வய மில்லாதபடி வியாபகமான சிவபெருமானுடைய வேட்கை அறிவு செயல்களில் தனது வேட்கை அறிவு செயல்கள் அடங்கி நிற்றல்.

உணரப்படுவார்—ஒருவர் தியானத்தால் சிவபெருமானுடன் ஒன்றித் தன் வயமழிந்த பொழுது அவர், தான் என ஒரு முதலாக நின்று உணராததால் உணரப்படுவாரோடு என்று அடிகள் செயப் பாட்டு வினையாற் கூறினுர்.

ஒட்டி வாழ்தி=ஒட்டி வாழ்தல்; சிவபெருமானுடன் இரண்டற (அத்துவிதமாய்)க் கலந்து அவனது திருவடி இன்பத்தை நுகர்தல்.

உலகிலுள்ள சில நெறிகள்போல் சிவநெறியானது அறிவு நூலில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை நம்பி ஒழுகுகிற வெறுங் கொள்கை நெறி (Theoretical Religion) அன்று; சைவர் ஒருவர் அருள் நூல்களைக் கற்று ஐயந்திரிபு அறும்படித் தெரிந்தார் வாயிற் கேட்டும் சிந்தித்தும், பின் பக்குவம் வந்தகாலே இறைவனால் அதிட்டிக்கப் பெற்ற குரவனுடைய உபதேச உண்மை மொழியைக் கேட்டும், கேட்ட உண்மையைத் தனது உள்ளத்தில் பற்றும்படிச் சிந்தித்தும், சிந்தித்த உண்மையைத் தன்னுள்ளே தானாகத் தெளிந்தும், தெளிந்த உண்மையை நிட்டை கூடி இறைவனுடன் இரண்டற ஒன்றிப் பேரின்பம் நுகரச் செய்யும் நடைநெறி. (Practical Religion) இந்நடைச் சிவநெறி (Practical Saivaism) சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும், முறையே ஒன்றுக்கொன்று மேற்பட்ட, நாலு நிலைகளை உடையது. ஒவ்வொரு நிலையிலும் நாலு நிலைகள் உள. இந்த அருமைத் தேவாரப்பாட்டில் திருநாவுக்கரசு அடிகள் யோகத்தைக் கூறுகின்றார். யோகத்துக்குச் சாதனமாயுள்ள உறுப்புக்கள் எட்டு. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரம், தாரணை இரண்டும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். உயிராவணம் என்றதனால் பிராணாயாமமும் (மூச்சடக்கம்) அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய இயமம், நியமம், ஆசனமும்; உற்று நோக்கி என்றதனால் பிரத்தியாகாரமும் தாரணமும்; உள்ளக்கிழியின் உருவெழுதி யென்றதனால் உருவத்தியானமும், உன் கைத்தந்தால் என்றதனால் அருவத்தியானமும், ஒட்டி வாழ்தி என்றதனால் சமாதியும் இந்தப் பாட்டால் குறிப்பிடப்பட்டன.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

Comparative Philology

வடமொழிச் சென்ற தென் சொற்கள்

[வித்துவான் G. தேவநேசன் அவர்கள்]

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் Turanian, Semitic, Aryan என முப் பெரும் பிரிவுகளாயடங்கு மென்பது முன்னர்க் கூறினும். அவற்றுள் ஆரியக் கவையில் Teutonic கிளைக்குத் தலைமையானது வடமொழி யென்னும் சமஸ்கிருதம்; ஏனைய German, Dutch, English முதலியன.

மேனுட்டு மொழியாராய்ச்சிப் புலவர், இலக்கண ஒற்றுமையாலும் இலக்கியச் சொற்களின் ஒற்றுமையாலும் வடமொழியை ஜெர்மன் மொழிக்கு இனமாகக் கண்டிருக்கின்றனர். ஆகவே இந்திய ஆரியரும் ஜெர்மானியரும் ஒரு காலத்தில் ஓரே வகுப்பினராய் ஓரேயிடத் (மேலாசியா) தில் வாழ்ந்திருக்கவேண்டும். சரித்திர நூல்களெல்லாம் பெரும்பாலும் கிறிஸ்துவுக்குப் பிற்பட்டனவாதலின், அவர்க்கு முற்பட்ட வரலாறுகளை யெல்லாம் உணர்தற்கு மொழிநூலே சிறந்த கருவியாகின்றது. ஒரு வகுப்பாரை இன்னுரென்று உணர்தற்கு அவரது பேச்சினும் சிறந்த கருவி பிறிதொன்றில்லை.

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"

ஆகவே, இந்திய ஆரியர் ஜெர்மானியர்க்கு இனமென்றும் அவர் பேசிய மொழியும் ஜெர்மனுக்கு இனமென்றும் அறியப்படும். அதை அவ்விரு மொழிகட்கும் இன்றியமையாத சில பொதுச் சொற்களாற் காட்டுதும். இங்கிலீஷ் ஜெர்மன் மொழியினின்றும் பிறந்ததாதலின், கீழ் வரும் இங்கிலீஷ் சொற்களெல்லாம் ஜெர்மனென்றே தெளிக. (Jutes, Saxons, Angles என்ற மூவகை ஜெர்மானிய வகுப்பினரே கி. மு. 449-ல் ஜெர்மனியினின்றும் பிரித்தானியாவுக்குப் போய் இங்கிலீஷ் மொழியை வழங்கினவர்)

English	சமஸ்கிருதம்	English	சமஸ்கிருதம்
brother	பிராதா	nose	நாசி
book	புஸ்தகம்	nine	நவம்
common	சாமானியம்	person	புருஷன்
create	சிருஷ்டி	prime	பிரதமம்
daughter	தௌஹித்ரி (மகளின் மகள்)	preacher	புரோகிதர்
		science	சாஸ்திரம்
decimal, decem	தசம்	str. (an old suffix)	ஸ்திரீ
dentem	தந்தம்	establish	ஸ்தாபி
eight	அஷ்டம்	stand	ஸ்தா (root)
father	பிதா	shaving	க்ஷவரம்
germ	கிருமி	special	விசேஷம்
generation	ஜெனனம்	seven	சப்தம்
gravity	குருத்துவம்	six	சஷ்டி
house	ஆசயம்	sui	சுயம்
heart	ஹிருதயம்	serve	சேவி
item	இதம்	she	சா
inter	அந்தர்	sweat	ஸ்வேத
idea	ஐதிகம்	terra	தரை
ignorance	அஜ்ஞானம்	tree	தரு
ignition, ignis	அக்னி	two	த்வா
murther, murder	ம்ருத்	three	திரி
		that	தத்: they-தே
mother	மாதா	voice, vocal	வாக்கு
mediator	மத்தியஸ்தர்	verto (root)	விருத்தம்
name	நாமம்	word	வார்த்தை

இனி இலக்கண ஒற்றுமைகளாவன:—

1. மெய் மொழி முதலாதல்
2. ஒருமை இருமை பன்மை என எண் மூன்றுதல்
3. பெயரெச்சங்கள் பால் எண் வேற்றுமைகளைக் காட் [டல்
4. இலக்கணப் பால் (grammatical gender)
5. வினைமுற்றுக்கள் பால் காட்டாமை
6. பயனிலை வினைச்சொல்லாயே யிருத்தல்

இவை போன்றவை இன்னும் எத்துணையோ உள. முக்கியமானவை மட்டும் இங்கு உதாரணமாகக் குறிக்கப் பட்டன

ஆரியம் என்னும் குறியீடு முதன்முதல் ஆரிய மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவாய் வழங்கிற்று. பின்பு Teutonic வகுப்புக்கு மட்டும் வழங்கத் தலைப்பட்டது. அதன் பின்பு இந்திய ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்திற்கே சிறப்பாய் வழங்கிற்று. இந்திய ஆரியர் நால் வகுப்பாராயினும், அவர்களுக்குள், பிராமணர் மட்டும் இக் குறியீட்டைத் தமக்கும் தம் மொழிக்கும் வரையறுத்துக் கொண்டனர்.

ஆரிய வகுப்பு மொழிகளுள், Latin, Greek என்ற இரண்டும் முற்பட்டவை. Teutonic மொழிகள் அவற்றிற்குப் பிற்பட்டவை. ஐரோப்பிய அரசுகட்கெல்லாம் முந்திய கிரேக்க வரச சரித்திரம் கி. மு. 3000-ம் ஆண்டினின்று தொடங்குகின்றது. ஆகவே, சமஸ்கிருத ஆரியர் வட இந்தியாவிற் குடியேறினதும் அதே காலமாய்த்தா னிருக்கவேண்டும்.

உலகில் முதன்முதல் உண்டானது தமிழ். தமிழர் (8000 B.-C.) குமரி நாட்டினின்றும் வடக்கே போய்ச் சின்ன ஆசியாவில் குடியேறினர் என்பது பாபிலோனியக் குகை வெட்டாலும் குழி வெட்டாலும் தெரியவருகின்றது. அங்கேதான் தமிழ் சேமியக் (Semitic) கிளையாகத் திரிந்தது. எபிரேயம் (Hebrew) அரபி (Arabic) முதலியன சேமியக் கிளைமொழிகள். அவற்றையடுத்து Latin, Greek முதலிய ஆரியக்கிளைமொழிகள் பிறந்தன. ஒரு தாய்மொழியினின்றும் ஒரு கிளைமொழி உண்டாயிருப்பின் அதன் இன்றியமையாத முதற் சொற்களெல்லாம் தாய்மொழியாயிருக்கும். ஏனையவெல்லாம் அதற்குச் சொந்தமான ஆக்கச் சொற்களே. அவற்றுள் ஒரு பகுதி பிறமொழிகளினின்றும் கடன் கொண்ட திசைச் சொற்களாயிருக்கும். ஒரு மொழியின் ஆக்கச்சொற் பெருக்கத்திற்கும் சுருக்கத்திற்கும் காரணம் அம்மொழியை வழங்கும் மக்களறிவேயாகும்.

ஆரியக் கிளைகளில் ஒன்றாகிய Teutonic என்பது Greko-Latin என்ற பெருங்கிளையினின்றும் கிளைத்த பொழுதே (அதாவது சமஸ்கிருத ஆரியர் இந்தியாவுக்கு வருமுன்னமே) அதில் நூற்றுக் கணக்கான தமிழ்ச் சொற்கள் கலந்திருந்தன.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து தமிழரோடு (கி. மு. 2500) கலந்தபின் எண்ணிறந்த தென் சொற்கள் வட மொழியிற் கலந்தன. ஆரியர் வருமுன்னும் வந்தபொழுதும் வட இந்தியாவில் வழங்கி வந்தவையெல்லாம் கொடுந்தமிழ் மொழிகளே.

ஆரிய வருகைக்கு முன் சமஸ்கிருதத்தில் அல்லது Teutonic மொழிகளிற் கலந்திருந்த தென் சொற்களிற் சில:—

Tamil	English	Sanskrit
அரத்தம், இரத்தம்	red	ரக்தம்
அரசன்	Rajah	ராஜா
அகம்	*Gr.* eikos, house	ஆசயம்
ஆன்மா	animos	ஆத்மா
இலக்கம்	lakh	லக்ஷம்
உதகம்	water	உதகம்
எட்டு	eight	அஷ்டம்
கோடி	crore	கோட்டி
சக்கரம்	circle	சக்கரம்
சக்கரை	sacharine	சர்க்கரை
சின்னம்	signum	சின்னம்
தரை	terra	தரா
தரு	tree	தரு
நாகம்	snake	நாகம்
நாவாய்	*L.* navis	நௌகு
பாதர்	father	பிதா
பாதம்	foot	பாதம்
பேசு	speak	பாஷி
மன்	man	மநு
மத்தி	mid	மத்தி
மனது	mind	மனஸ்
மாத்திரை	metre	மாத்ரா
மாதர்	mother	மாதா
வண்ணம்	varnish	வர்ணம்
வடிவம்	body	ப்ரதிமா
வரை	marry	வரி
வாரணம்	*L.* marinus	வருணை
வேட்டி	*L.* vestis	வேஷ்டி
	vesture	வஸ்த்ரம்

சமஸ்கிருதத்திற்கு முதற்காவியம் இராமாயணம். இராமர் இருந்தது இடைச்சங்க காலம். ஆகவே தொல்காப்பியமும் அகத்தியமும் இராமாயணத்திற்கு முற்பட்டனவாம். வட மொழிக்கு முதல் இலக்கணம் பாணினீயம். பாணினி பாரதத் திற்கும் பிற்பட்டவர். பாரதகாலம் 1000 B. C.; இராமாயண காலமோ 2000 B. C.; ஆகவே பாணினீயம் தொல்காப்பியத்திற் குக் குறைந்தது ஆயிரம் ஆண்டுகட்குப் பிற்பட்டதாகும். ஆரிய வருகைக்கு முன்னமே தமிழர் முத்தமிழிலும் பலகலைகளிலும் தேர்ந்திருந்தனர். அகத்தியம் வழிநூலேயன்றி முதனூலாகாது. இதன் விரிவை யெல்லாம் எமது 'முதற்றாய்மொழி (The classica Prima) யிற் கண்டுகொள்க.

இனி, வடமொழிச் சென்ற தென்சொற்களாவன:—

மதம்—மதி + அம் = மதம்.

தேய் + உ = தேய்வு—தேவு—தே—தி

தேய்வு + அம்—தேய்வம்—தெய்வம் *Gr.* Theos.

தேய்வம்—தேவம்—தேவன்.

தெய்வம் என்பது முதலாவது நெருப்பையும் பின்பு சிவத் தையுங் குறிக்கும். (திருவாசக விரிவுரை காண்க).

சிவ + ம் = சிவம்—சிவன்—சிவை.

உரு + திரம் = உருத்திரம்—உருத்திரன்-ருத்ரன் = சினன்— உருத்தல் = சினத்தல், திரம் தொழிற்பெயர் விகுதி.

அரி + அம் = அரம்—அரன்.

ஓ—ஓம்—ஓங்காரம் or ஓகாரம்.

ஓவென்பது மூலவொலிக் குறிப்பு. ஒல், ஒலி, ஒலம், ஓசை, ஓதை முதலிய ஓசைபற்றிய சொற்களெல்லாம் ஓகர ஒகார முதன் மொழிகளாதல் காண்க. ரீ என்பது ரீங்காரமானாற் போல ஓ என்பது ஓங்காரமாயிற்று.

உரு + திரம் + ஆக்கம் = உருத்திராக்கம் — ருத்திராக்ஷம் (உருத்திராக்க விளக்கங் காண்க.)

வி + பூதி = விபூதி. புழுதி—பூதி: வி, உபசர்க்கம்.

ஆணவம்: ஆள்—ஆண்—ஆண்மை—ஆணவம்.

மாய் + ஐ = மாயை : ஐ, தொ.வி.

காமி + அம் = காமியம், காம் + இயம் என்றும் பிரிக்கலாம். இயம் ஒரு தொழிற்பெயர் விகுதி. காம் + அம் = காமம்
+ அர் = காமர்.

குமரன், குமரி—கொம்மை (திரட்சி) என்னும் பண்பினடியாகப் பிறந்தவை. c. f. virgin *Gr.* orago-to swell. சேய் (Zeus) முருகன், வேலன் என்பன குமரற்கு மறுபெயர்கள்.

சண்டிகை:—சள்—சள்ளை—சண்டை—சண்டன்—சண்டி—சண்டிகை.

காளி:—கள்—கள்ளம்—காளம்—காளி.
—களம்—களங்கம் = கருப்பு.

சினன்:—சின + அம் = சினம்—சினன்.

விஷ்ணு:—விண்—விண்டு. விண்ணைப்போல் நீலமாயும் எங்கும் நிறைந்துமிருப்பவன்.

மாயோன்:—மா—மாய்—மாயோன். மா = கருப்பு.

கிருஷ்ணன்:—கள்—கள்ளன்—கண்ணன்.

மாயோன், கண்ணன் முதலிய பெயர்கள் கிருஷ்ணாவதாரத்திற் புதிதாய் உண்டானவையல்ல. அதற்கு முந்தியே வழங்கினவை. "மாயோன் மேய காடுறை யுலகமும்" என்று தொல்காப்பியத்திற் கூறப்பட்டிருப்பது காண்க.

அரங்கன்:—அரங்கம்—அரங்கன். அரங்கம் = ஆற்றிடைக்
[குறை

இராமன்:—இராமம்—இராமன்.

இராமம் என்பது திருமண்காப்பு. இராமம் = இரேகை வரி. இராமக் கரும்பு என்னும் வழக்கு நோக்குக. வடநாட்டில் இதைத் தவறுக நாமம் என்று வழங்குகின்றனர். இராமர் ஒரு வைணவ பக்தர். இராமருக்கு முன்பே மால் வழிபாடு தமிழ் நாட்டிலிருந்தது.

இரண்டு, அலம்பு, இலக்கு, உலாத்து முதலிய சொற்கள் உயிர் முதல் நீங்கி வழங்குவதுபோல அரங்கன் இராமன் முதலிய சொற்களும் உயிர் முதல் நீங்கி வழங்குகின்றன.

நாராயணன்:—நாரம் + அயனன்.

வருணன்:—வார் + அணம்—வாரணம்—வாரணன் — வருணன்.

வார் + இ=வாரி. வார் + இதி=வாரிதி.

ஆத்மா:—ஆன் + மா = ஆன்மா. ஆன் = பசு. மா பெருமைப் பொருள் விகுதி. மான் என்பது ஈறு குறைந்து நின்றதெனினும் ஒக்கும். *Gr.* animos. வடமொழியில் ஆத்மா சரீரத்தைக் குறிக்கும்.

நரன்:—நரை + அன் = நரன் = நரைப்பவன்.

பதி:—பதிக்குத் தலைவன்; இடவாகு பெயர். பதி=நகர், வீடு.

பசு:—பாசத்தாற் கட்டப்பட்டது பசு.

பாசம்:—பசுமை—பச்சை—பாசி—பாசம். பாசம்போற் பிணிக்குங் கயிறு; கயிறுபோற் பிணிக்கும் மலம்.

பாசம் என்பதற்கு ஆசை யென்று பொருள் கூறினும் பொருந்தும்.

நரகம்:—நரகல்—நரகம்.

c.f, dungeon, from dung.

காயம்—ஆகாயம். காயம்=கருப்பு. 'காயப் பெயர்வயின்' என்று தொல்காப்பியத்துள் வருதல் காண்க.

பூதம்:—பொது—பொதுக்கு—பொந்து—பூதம்.

உலகம்:—உல + கு=உலகு. உலகு + அம்=உலகம்.

உலத்தல்=அழிதல்.

நீர் + அம்=நீரம்—நாரம் = நார் + அம்.

சலி + அம்=சலம். சலி + அனம்=சலனம். சலி + அதி= சலதி—சலித்தல்=அசைதல். சலிப்பு என்னும் உலக வழக்கையும் அசைவு என்னும் மெய்ப்பாட்டையும் ஒப்பு நோக்குக.

காலம்—கால் + அம் = காலம். சமை + அம் = சமையம். (விதி—முதனிலைத் தொழிலாகு பெயர்).

வானநூல்—சூரியன்—சுர்—சுரன்—சூரன்—சூரியன். *Gr.* sol. சுர் என்பது ஒரு வெம்மைக் குறிப்பு.

சுர் + அம்=சுரம்=காய்ச்சல், பாலைநிலம்.

மதி—காலத்தை மதித்தற் கிடமானது.

மதி + அம் = மாதம். *c.f.* Moon. மானி + அம் = மானம்.
மதியால் உண்டாவது மத்தம் *c.f. L.* lunacy from [luna.
தாரகை—தார் போல்வன.
புதன்:—புத்தன்—புதன். புத்தி—உத்தி.
சனி:—சல்—சல்லியம்—சனி.

கோள்கள் ஏழேயன்றி ஒன்பதாகா. ஆயின் நாட்களும் ஏழன்றி ஒன்பதாயிருத்தல் வேண்டுமென்றறிக.

இராசி = (race) கூட்டம்.
மேஷம்:—மேழகம்—மேழம்—மேஷம்.
ரிஷபம்:—விடை—விடலை—விடபம்—இடபம்.
ஆ + விடை = ஆவிடை. விடைத்திருப்பது விடை.
c.f. குண்டாயிருப்பது குண்டை.
கோழிவிடை என்னும் உலகவழக்கைக் காண்க.
கும்பம்: கும்—குமி—கும்பு—கும்பம். கும்பல் = குவிதல்.
கும்பு + இடு = கும்பிடு. கும்பு + அல் = கும்பல்
+ அம் = கும்பம்
+ அனை = கும்பனை (Company)
கும்பு—கூம்பு. குமி—குவி. கும்பு—குப்பு—குமி + ழ் [குமிழ்.
குப்பு + ஐ = குப்பை. குப்பு + அல் = குப்பல்.
மீனம்: மின்—மீன்—மீனம்.
கன்னி:—கன் + இ = கன்னி. கன்னுதல் = பழுத்தல்.
c.f. maturity from mature—to ripen.
துலாம்: தால்—தாலம்—துலை—துலாம்.
சிங்கம்: சிங்கு + அம் = சிங்கம், அழிப்பது.
சிங்கல் + குறைதல், அழிதல்.
கற்கடகம்: கல் + கடகம் = கற்கடகம், கல் நண்டு.
வடவை: வடம் + ஐ = வடவை, வடக்குள்ள நெருப்பு
c.f. Aurora Borealis, the northern light.
aurora—fire; borealis—northern.

வடவை + முகம் = வடவை முகம். இதைப் பெடலா முகம் எனத் திரித்துப் பெட்டைக் குதிரை என்று பொருளுரைப்பர்.

"வடவைக்கனலைப் பிழிந்தெடுத்து"—வீரராகவர்

"அக்கடலின்மீது வடவனல் நிற்கவில்லையோ"—தாயுமானவர்.

பூகோளம்:—கோளம்: குழு—கோளம்—கோலி.

மண்டலம்: மண் + தலம் = மண்டலம் = வட்டம்

பூமி வட்டமாயிருப்பது தமிழர்க்குத் தெரிந்திருந்தது.

இடை யென்னும் உறுப்புப்பெயர் அம்சாரியை பெற்று இடமானாற்போல, தலையென்னும் உறுப்புப்பெயர் அம்சாரியை பெற்றுத் தலமாயிற்று. இடப்பெயர்கள் பெரும்பாலும் சினைப் பெயர்களாகவே யிருக்கும்.

"கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின் சார் அயல் புடைதேவகை எனாஅ
முன்னிடை கடைதலை வலமிடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்."
—தொல்—சொல்—வேற். சூ. 21.

மண்டலம்—மண்டிலம். மண்டலித்தல்—வட்ட மிடுதல்.

திங்கள் மண்டிலம் = திங்கள் வட்டம்.

கண்டம்: கண்—கண்டு—கண்டம்

தீவு: தீர் + உ = தீர்வு—தீவு. தரைப் பாகத்தினின்றும் தீர்ந்திருப்பது. இதைத் த்விபம் என்று திரித்து இரு பக்கத்தில் நீரால் சூழப்பட்டிருப்பதென்று பொருளுரைப்பர்.

இலக்கணம்:—

இலக்கு + அணம் = இலக்கணம்—லக்ஷணம்.
+ இயம் = இலக்கியம்—லக்ஷியம்.

இலக்கித்தல் = எழுதுதல்—சீவக: செய் 180

c.f. grammar from *Gr*, gramma, a letter
Gr. grapho, to write,
literature from letter.

கரம், காரம், கான், ஏனம்—தமிழ்ச்சாரியைகள்.

ஆய்தம்: ஆய் + தம் = ஆய்தம். ஆய்தல் = ஆரிதல்.

மாத்திரை: மா + திரை = மாத்திரை. மாத்தல் = அளத்தல்.
+ திரம் = மாத்திரம்.

மா என்பது ஒரு எண்ணளவுக்கும் ஒரு பரப்பளவுக்கும் [பெயர்.

பகுதி: பகு + தி = பகுதி—பாதி பகு—வகு.
+ அம் = பக்கம்-பக்ஷம்—பாகம். பக்கம்–பாங்கு [—பாங்கன்
+ அல் = பக்கல்—பகல்—பால்
+ ஐ = பகை; பகு—பா: பாத்தீடு—பாதீடு.
பா + தி = பாத்தி. பகுதி—பிரக்ருதி

மூலம்: முள்—முளை—மூலம்

விகுதி: விகு + தி = விகுதி. விகு—வீ. வீதல் = முடிதல்.
விகுதி—விக்ருதி.

சூத்திரம்: சூ + திரம் = சூத்திரம், சுருக்கம்

வண்ணம்:—பண்—பண்ணம்—வண்ணம்—வண்ணகம்.

சந்தம்—ஒலிக்குறிப்புப் பற்றியது. சந்தடி என்பது வழக்கு.

பண்ணத்தி: பண் + அத்தி = பண்ணத்தி.

உருபு:—உரு + பு = உருபு; உரு + உ = உருவு. உருவு + அம் = உருவம்—உருத்தல், தோன்றுதல். உரு × அரு c.f. உறு × அறு.
உருவம் from ரூபம்.

காரணம்:—கரு—கருவி—கரணம்—காரணம்—காரியம்.
கரு—கருப்பு—கருப்பம். மேகம் சூல்கொண்ட பின் கருத்திருத்தல் காண்க.

ஏது: ஏது என்று வினவுவதற்குக் காரணமா யிருப்பது.
c. f. the why; the how.

அம்போதரங்கம்:—அம்பு + தரங்கம்
அம்—அம்பு, தரங்கு + அம் = தரங்கம், கரையைக் குத்துவது.

உவமை: உவ + மை = உவமை. உவத்தல் = விரும்புதல். உவமவுருபுகள் பெரும்பாலும் விருப்பு வெறுப்புப் பொருள்களிலேயே வரும். உவமை—உபமா
உ-ம். நாட = விரும்ப. புகல—போல. புகலல்—விரும்பல்.
c. f. like similar, to be pleased with.

உருவகம்: உரு + அகம் = உருவகம். ஒன்றை மற்றோர் உருவாகச் சொல்லுதல். உருவகம்—ரூபகம்.

இசை, நாடகம்—

சுரம்: சுரை + அம் = சுரம். சுரை = துளை. நாகத்திற்குப் பிரியமானது நாகசுரம்.

தொனி: தொள்—தொளை—தொண்டை—தொனி

இராகம்: அராகம்—இராகம். கலிப்பாவுறுப்பு.

தாண்டவம்: தாள்—தாண்டு—தாண்டவம்

நடம்—நட—நடி—நடம்—நட்டம். நடி + அம் = நடம்.
நடி + அகம் = நாடகம்.

மண்டலம்—mandoline. சுரவீணை—Saraphina

குடம்—குடை + அம் = குடம், வளைந்திருப்பது. குடம்—கடம்

அரசு

அரி—அரம்—அரன்—அரசு—அரசன் *Gr.* archon

அரைசன்—அரையன்—Roy, Royal

மரங்கட்குள் அரசுபோன்றிருப்பது அரசமரம்

சேரன்: சாரல்—சேரல்—சேரன்—சேரலன்—கேரளன்.

சோழன்: சோளம்—சோழம்—சோழன்.

கள்ளர் வெட்டிச் (மக்காச்) சோளம் சோழநாட்டில்தான் சிறப்பாய் விளைகிறது.

பாண்டியன்: பாண்டி + அன் = பாண்டியன், வீரன்.
பாண்டி = வட்டம். பாண்டில் = எருது.
பாண்டியன் காளை போன்றவன்.

பாண்டவர் சம்பந்தப்பட்டவன் என்று Caldwell கூறியிருப்பது தவறு. பாண்டியன் பெயர் பாரதத்திற்கு 1000 ஆண்டுகட்கு முற்பட்ட வால்மீகி ராமாயணத்திற் கூறப்பட்டுள்ளது.

சாமம்: சமம்—சாமம்

பேதம்: பேதி + அம் = பேதம்

தானம்: தா + அனம் = தானம்

தண்டம்: தண்டி—தண்டு—தண்டம்.
தண்டி + அனை = தண்டனை. தண்டி—தடி.
தடித்தல் = பருத்தல். தடிதல் = வெட்டுதல்
முதல் தண்டனை தடியாலடிப்பதா யிருந்தது.

சினைப்பெயர்கள்—

முகம்: முகர்—முக+ம்=முகம், முகத்தல். முக—மோ.
முகர்—நுகர். முகப்-நுகம். முகம்—மூக்கு-மூஞ்சி
—முகடு. முக+பு=முகப்பு. முக+வை=முகவை.

முகம் முதலாவது மூக்கின் பெயராயிருந்து பின்பு தானியாகு பெயராய் முகத்திற்காயிற்று. வடமொழியில் வாயை மட்டும் குறிக்கும்.

இரத்தம்+அரத்தம்—இரத்தம். அரக்கு, அலத்தகம்
இரத்தி என்பவை செந்நிறத்தைக் குறிக்கும்.

பித்து+அம்=பித்தம்—பைத்தியம்.

கரு+பு=கருப்பு. கருப்பு+அம்=கருப்பம்.

மொழி—முழும்—முட்டு—முட்டி—முஷ்டி. பதி+அம்=பாதம்.

வடிவுப் பெயர்கள்

வடிவம்=படி—படிவு—படிவம், bcdy, பிரதிமா.
—வடி—வடிவு—வடிவம்.

வட்டம்: வள்+தம்=வட்டம். வள்+இ=வளி
+தி=வட்டி—வண்டி +அம்=வள்ளம்
+து=வட்டு—வண்டு=வளையல்
+தை=வட்டை—வடை. வளை+அம்=வளையம்
+ஐ=வளை +அல்=வளையல்

வளையம் வடமொழியில் வலயம் என்று வழங்கும்.
வட்டம் விருத்தத்தின் திரிபன்று.

திசைப் பெயர்கள்

திக்கு+ஐ=திகை, திகைத்தற்குக் காரணமாயிருப்பது.
திகை—திசை

குண்டு—குண்டம்=குணம்—குணக்கு

குடம்: குடை—குடம், கதிரவன் வளையுமிடம்—குடக்கு.

உத்தரம்: உ+தரம்=உத்தரம். உ=மேல், உயர்வு

தெற்கு+அணம்—தெற்கணம்—தெக்கணம்—தக்கணம்

தெக்கணம்—Deccan. c. f. கொங்கு+அணம்=கொங்கணம்.

எண்ணுப் பெயர்கள்—

இலக்கம்=எண். இப் பொதுப்பெயரே நூறாயிரத்துக்குச் சிறப்புப் பெயராயிற்று. lakh—லக்ஷம்

எட்டு—அஷ்டம்

கோடி—கோட்டி. கோடி=கடைசி யெண்

நானு—நால்—நாலா—நானு

பல்வகைச் சொற்கள்—

தமிழம்—த்ராவிடம்

வேட்டி: வெட்டுவது வேட்டி. வேட்டி—வேஷ்டி

c. f. துணிப்பது துணி; அறுப்பது அறுவை.

முட்டி—முட்டியாற் செய்யும் போர். முட்டி—முஷ்டி

c. f. wrestle from wrist

காகம்—காக்கா—காக்கை—காகம்

மயில்—மயூரம். கூகை—கூகம்

கலை—கல்+ஐ. படி+அம்=பாடம்

சுற்றுரு—சூத்ரம். கலி+யாணம்=கலியாணம்

கலித்தல்=தழைத்தல், யாணம்=புதுமை, புதுவருவாய்.

பழும்—பலம். பழு+அம்=பழும். அடவி—அடர்ந்திருப்பது

பரி+அம்=பாரம்—பாரி. தரி+அம்=தாரம்

தருக்கு+அம்=தருக்கம்—மிகுத்துக்காட்டுதல்

குடி—குடில்—குடிலம்—குடீரம். சாய்+ஐ=சாயை

இ—இதம்=இப்படி. பவளம்—ப்ரவாளம். நீலம்—நீலம்

இனி, அக்கா, அத்தா, ஆணி, அம்மா, அம்பா, அகுட, ஆளி, கடு, காவேரி, குசம், கூச்சம், குடி, கூன், குளம், கோட்டை, கட்டில், சாம், சா, பட்டணம், பொன், பள்ளி, வெள் முதலியன வடமொழியினின்றும் கால்டுவெல் கண்காணியார் எடுத்துக் காட்டிய தென் சொற்களாம். இன்னும் இவை போன்ற ஆயிரக் கணக்கான தென் சொற்கள் வடமொழிவாய்ப் பட்டுள்ளன.

தமிழரசு தலைதாழ்ந்தபின் செந்தமிழாராய்ச்சி சில நூற்றாண்டுகளாக இல்லாமையான், வடமொழிப் புலவர் தமிழரை ஒரு பெட்டை மிரட்டு மிரட்டி வந்தனர். இப்போதோ

மொழியாராய்ச்சியால் எண்ணிறந்த வடமொழி வாய்ச்சொற்கள் மூடவன் குதிரைகளாய்த் திரும்பி வருகின்றன. சில தமிழர் வடமொழி வாய்ப்பட்ட சொற்களை யறிந்திருந்தும் அவற்றை எடுத்துக் கூறத் துணிந்திலர்.

"மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையாற்
பொய் போலும்மே பொய்போலும்மே"

வடநூலார் தமிழ்ச் சொற்களைக் கடன் கொண்டபின் அவற்றைத் தமிழ் வடிவில் வைத்திருப்பதில்லை. உடனே உருத் தெரியாது மாற்றிவிடுவர். மறைக்காடு, பழமலை போன்ற இடப் பெயர்களைக்கூட வேதாரண்யம், விருத்தாசலம் என்று மொழிபெயர்ப்பாராயின் வேறு என் சொல்வது? இவ்வாறு எத்தனையோ தென்சொற்கள் வடமொழிச் சென்று வாகுகாரய் வழங்குகின்றன. அவை களராங் காலமும் ௩ண்ணும்.

வடமொழியிலுள்ளதெல்லாம் வடசொற்கள் என்று மொழிநூ லுணராதார் சிலர் கொண்டிருக்கின்றனர். மூல முதன் மொழியாகிய தமிழ் தவிர வேறு எந்த மொழியாவது பிறசொற்க ளில்லாததில்லை. ஒரு சொல்லை இன்ன மொழி யென்று அறிதற்கு அதன் பகுதிப் பொருளையும் அதனின்றும் திரிந்த பல்வேறு சொற்களையும் பார்க்கவேண்டும். அவை எந்த மொழியிலுள்ளனவோ அந்த மொழிக்கே அது உரியதாம். வினைச் சொல்லாயின் புடைபெயர்ச்சி (Conjugation) வேண்டும். பெயர்ச்சொல்லாயின் பெயரிலக்கணம் (Declension) வேண்டும். கல் என்னும் வினை கற்றான், கற்றாள், கற்றார், கற்றது, கற்றன, கற்ற, கற்க, கற்பித்தான், கற்கப்பட்டது, கற்றிலன், கலை எனப் பல வடிவுகளிலும் புடை பெயரவேண்டும். வடமொழியிலோ அது கலா (கலை) எனத் தொழிலாகுபெயராய் மட்டும் நிற்கும். இஃதோர் உதாரணம்.

சில வடமொழிப் பற்றுடையார் முனிவர் என்னும் சொல்லுக்கு முனி என்பது பகுதி யென்றறியாமல், மவுனம் செய்பவர் முனிவர் என்று வடமொழிவழி யுரைப்பர். 'ஐயன்' என்னும் தமிழ்முறைப் பெயரை ஆரியன் என்பதின் சிதைவாகக்

கூறுவர். இங்ஙனமே ஏனைச் சொற்களுக்கும் அவர் வடமொழியைக் கற்பிப்பதுண்டு.

ஒரு வகுப்பாராவது பிற வகுப்பாருடன் இயைபின்றித் தாமாய் உலகத்தில் வந்தவரல்லர். அங்ஙனமே தமிழ் தவிர ஒரு மொழியாவது பிறமொழியின் கலப்பின்றித் தானாய் வந்ததன்று என்று தெளிக.

நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், B.A., B.L.]

மாணிக்க வாசகர்

I

ஸ்ரீமத் மாணிக்கவாசகர் சைவ சமயாசாரியர்களின் பெயர் வரிசையில் நாலாவதவராகச் சொல்லப் பெறுகிறார். ஆனால் அவருடைய திவ்வியப் பாடல்களின் கனிவும் பொருளும் நோக்கினால், முதலாவதவராகக் கொள்ளல் வேண்டும். மற்றைய சமயாசாரியர்களைக் காட்டிலும் மாணிக்கவாசகருடைய புகழ் உலகெங்கும் பிற நாடுகளிலும், பிற பாஷைகளிலும், பிற மதத்தாரிடத்தும் சென்று விளங்குவது அவருடைய தூய கொள்கைகளின் உண்மையையும், மேன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. அத்தகைய பெரியாரின் உண்மை வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அன்னார் வசித்த காலமும் ஐயமற அறிந்துகொள்ளும் பாக்கியம் பெறுதவர்களாக நாம் இருக்கின்றோம். அன்னார் சரித்திரம் பரஞ்சோதியார் திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல், திருவாதவூரர் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், கடம்பவனப் புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம் முதலிய புராணங்களிலும், பயகரமாலை, சுந்தரப்பாண்டியம், கல்லாடம் முதலிய பிரபந்தங்களிலும் பலவித வேறுபாடுகளுடன் சொல்லப் பெற்றிருக்கின்றது. சமீப காலத்தில் புலவர் புராணம் முதலிய நூல்களில் எடுத்தாளப் பெற்றிருக்கின்றது. பலவித வரலாறுகளையும் எடுத்துக் கூறி அவைகளைப் பரிசோதித்துச் சமீப காலத்திற் பண்டிதர்கள் பல ஆராய்ச்சி உரைகளை அவர் பொருட்டு எழுதியிருக்கின்றார்கள்.

அவைகளைக் கொண்டு இன்னர் உரைதான் உண்மை எனக் கொள்ளல் சாத்தியமாக இல்லை. ஆகவே மாணிக்கவாசகப் பெருமானே அருளிய அவரது திருவாசகமே அவரது சரித்திரத்தைக் காட்டும் உண்மையான நூல் என்று நாம் கொள்ளல் வேண்டும். திருவாசகத்து வரலாற்றுக்குச் சற்று ஏறக்குறைய ஒத்து வருவது திருவாதவூரர் புராணம் என்றே சொல்லல் வேண்டும். இப் புராணங்கள் எல்லாம் மாணிக்கவாசகர் வாழ்ந்த காலத்திற்கு வெகு நூற்றாண்டுகளுக்குப் பிந்தி எழுதப் பெற்றவையாகையால் சரியான வரலாறுகளை அவைகள் கூற முடியா. நாள் ஆக ஆக உண்மைகள் மறைந்தும் கர்ண பரம்பரைகள் கலந்தும் கதை பெருகுவது வழக்கமல்லவா? மற்ற சமயாசாரியர்கள் சரிதங்களை எழுதியதுபோலச் சரித ஆராய்ச்சிவல்ல ஒரு சேக்கிழார் நமது மணிவாசகப்பெருமானுக்கு இல்லாமல் போனது நமது துர்ப்பாக்கியமே.

இது கிடக்க, அவரது காலத்தைப் பற்றியோ ஒருவரும் ஒரு திடமான கொள்கையைக் கூறுவார் இல்லை. மற்ற பெரியார்களைப்பற்றி ஒரு நூற்றாண்டு அளவிலாவது கால நிச்சயம் சொல்லக் கூடும்; ஆனல் உலகம் வியக்கவல்ல கனியெனும் பெருநூலை அருளின மாணிக்கவாசகனர் 10 நூற்றாண்டளவில் கூறப் பெறுகிறர். ஒரு புலவர்பெருமான் முதல் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரை ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழ்ந்தவர் என்று பல புலவர்கள் பலவித மேற்கோள்களைக் கொண்டு நிரூபித்தால் அவர் பெருமையும் நமது ஆராய்ச்சிச் சிறமையும் எவ்வண்ணம் விளங்கும் பாருங்கள். முதல் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரை சொல் நடை எவ்வளவு மாறிக்கிடக்கிறது என்பது அறிவோம். அப்படியிருந்தும் மணிவாசகருடைய காலத்தை நிச்சயமாக இந்த நூற்றாண்டு என்று நிர்ணயிக்க முடியாமல் இருக்கிறது. காலஅளவு விவகாரமானது சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டுக் கல்விமான்களை ஆட்டி அலைத்துக் கொண்டிருக்கிறது. தற்போது, மணிவாசகனர் மூவருக்கு முந்தியவரா பிந்தியவரா என்பது ஒரு பெரும் போராக விளைந்துகொண்டு

நிற்கிறது. இப்போது நடக்கும் விவகாரத்தைக் கவனித்தால் வேறு சான்றுகள் கிடைக்கு மட்டும் இப்போர் முடிவு பெருது என்று நினைக்கவேண்டி யிருக்கிறது. ஆனல் கல் வெட்டுகளால் ஏதாவது சிறிது உதவி கிடைக்குமோ என்று ஆராய்ந்ததில், பலன் மிகக் குறைந்தே காண்கிறது. ஆனலும் நாளதுவரை கிடைத்த கல்வெட்டுகளைத் திரட்டினல் ஒரு சிறிதாயினும் பயன் கிடைக்கலாம் என்ற எண்ணத்தினல் இங்கே அவைகளைத் திரட்டிக் காட்ட முயல்கிறேன். மாணிக்க வாசகரைப்பற்றிப் பதினேராம் நூற்ருண்டிற்கு முந்தி யாதொரு கல்வெட்டும் கிடைக்கவில்லை. கல்வெட்டுகளின் காலஅளவை, அவைகளில் கண்ட பொருள்கள், அவைகள் சொல்லப்படும் விதம் இவைகளைக் கொண்டு ஒருவித முடிவு க்கு வரக்கூடும் என்பது என் எண்ணம்.

மாணிக்கவாசகப் பெருமான் பாண்டிநாட்டில் வைகை யாற்றங்கரையில் உள்ள திருவாதவூரில் அவதரித்தார். அவர் மறையோதும் அந்தணர் குலத்தில் பிறந்தவர். தாய் தந்தை யர்கள் பெயர்கள் பழைய நூல்களில் புலப்படவில்லை. பிந்திய காலத்தில் அவர் தந்தை சம்புபாதாசிரியர் என்றும் தாய் சிவ ஞானவதியார் என்றும் கூறுவர். இச் சொற்கள் காரணப் பெயர்களேயன்றி இடுகுறிப் பெயர்களல்ல. அவரது பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர் என்பர். இதுவும் காரணப் பெயராக நிற்கிறது. பிந்தி வந்த மாணிக்கவாசகர் என்பதும் அவர் சொற் பெருமை பற்றியே வந்ததாகும். ஆகவே அவரது இயற் பெயர் நமக்குக் கிடைக்கவில்லை.

மாணிக்கவாசகர் பிள்ளைப் பிராயத்திலே தக்க கல்வி பயின்று நுண்ணறிவு படைத்துச் சிறந்த கல்வி வல்லாராக விளங்கினர். அவரது நுண்ணறிவு கண்டு அக்காலத்துப் பாண்டிய மன்னன் அவரை அழைத்து விருதுகள் வழங்கி அமைச்சராக அமைத்துக் கொண்டான். பழைய நூல்களில் அவ்வரசன் பெயர் குறிக்கப்படவில்லை. ஆனல் பின் வந்த திருவிளையாடலில் அரிமர்த்தனன் என்று கண்டிருக்கின்றது.

இக்காலத்து சிலர் வரகுணன் என்று கூறுகின்றனர். இதற்குத் திருக்கோவையாரில் வரகுணன் என்ற பதப்பிரயோகமே காரணம். திருவாசகத்தில் அரசன் பெயர் சொல்லப்படவில்லை. ஆனால் அவர் அமைச்சராயிருந்ததற்குக் குறிப்புகள் உள.

அமைச்சராயிருக்கும்போதே சமய விசாரணையில் ஈடுபட்டுச் சிவபெருமானிடம் அன்பு மிக்கு ஒரு மெய்க் குரவனைத் தேடி உய்யவேண்டுமென்ற ஆர்வம் கொண்டார். அதற்கு அநுகூலமாக ஒரு சம்பவமும் ஏற்பட்டது. சேனையில் குதிரைகள் குறையவே அவைகளை வாங்கவேண்டும் என்று எண்ணுகையில் கடலோரத்துத் துறைமுகத்தில் யவனர் குதிரைகளைக் கொண்டுவந்துளர் என்று கேள்வியுற்று, அரசன் மணிவாசகரை விளித்துப் பொருள் தந்து அனுப்பினன். மாணிக்கவாசகர் பொருள் பெற்று ஏகுகையில் திருபெருந்துறை அடைந்தனர். அங்கு ஒரு குருந்த மரத்தடியில் ஒரு பெரியார் தம் சீடர்கள் சூழ உபதேசம் செய்து வீற்றிருந்ததை நோக்கி, மனம் குழைந்து ஆனந்தபரவசராகி அவர் பாதம் பணிந்தனர். அவ்வாசிரியரால் எடுத்தாளப் பெற்று ஐந்தெழுத்துண்மை போதிக்கப் பெற்றூர். அக்குரவனை ஈசனாகவே பாவித்து தாம் வந்த காரியத்தை மறந்து தொண்டு செய்து அவர் பாதத்திலே தாம் கொணர்ந்த பொருளை அர்ப்பணஞ்செய்தனர். ஆசிரியர் திருப்பணிக்குச் செலவிடச் சொல்ல அவ்விதமே ஆலயத் திருப்பணி செய்தனர். அதனைக் கண்டு மக்கள் அவரை உன்மத்தன், பித்தன் என்று ஏசினர். அதற்கவர் சிறிதேனும் கவலவில்லை. அடிகள் கொண்டு சென்ற பொருளைக் குதிரை வாங்காது திருப்பணியில் செலவழித்த செய்தியைக் கேட்ட பாண்டியன் அவரை வரும்படி ஆக்ஞை இட்டனன். அவர் வாவே குதிரைகளைக் காணாது அவரைத் துன்புறுத்தினன். அவர் ஈசனைத் தொழ, ஈசன் அவர் வேண்டுகோட்கிணங்கி நரிகளைக் குதிரைகளாக்கி அரசனிடம் ஒப்புவித்தனன். மணிவாசகரும் துன்பம் நீங்கினர்.

ஆனால் அன்றிரவு குதிரைகளெல்லாம் மீண்டும் நரிகளாகி ஏற்கனவே சாலைகளில் இருந்த அரசனது குதிரைகளைக் கடித்

தும் வீடுகளில் புகுந்து மக்களை இம்சித்தும் காட்டிற்கு ஓடி விட்டன. இம்மாயச் செய்தியைக் கண்ட அரசன் சீற்றம் கொண்டு மணிவாசகனரை அழைப்பித்து அவரைத் தண்டித்தான். அவர் பொறுக்கமுடியாது ஈசனைத் தொழுதிறைஞ்சினர். ஈசன் அருள் புரிய எண்ணிப் பெருமழை பெய்வித்து வைகையில் வெள்ளப் பெருக்கெடுப்பித்து அதை மதுரை நகர் மேல் ஏவினர். அரசன் தன் நகரைப் பாதுகாப்பதற்கு எண்ணி ஊரார் இல்லம்தோறும் ஒவ்வொரு ஆளை வேலைக்கு அனுப்பும்படிப் பறையறைவித்துக் கரையைக் கட்டும்படி உத்தரவிட்டான்.

இப்படியிருக்க, மதுரையில் ஓர் ஏழைப் பிட்டுவாணிச்சி தனியாக வாழ்ந்து, ஈசன் மீது அன்பு மிக்கு இருந்தாள். அவளுடைய பங்கு வேலைசெய்ய ஆள் கிடைக்கவில்லை. அவ்விதம் கிடைக்காத குறையைக் கண்டு வருந்தி ஈசனைத் தொழவே ஈசன் மண்வேலை செய்யும் ஒரு கூலியாளாக வந்து அவளிடம் உதிர்ந்த பிட்டுகளைக் கூலியாகப்பெற ஒப்புக் கொண்டு வேலைக்குச் சென்றார். வேலை செய்யாமல் குலாவி ஆடிக்கொண்டிருக்கையில் கண்காணிக்க வந்த அரசன் அவ்வேலையாளைப் பிரம்பால் அடிக்க அவன் ஒரு கூடை மண் அள்ளிக் கொட்டவே உடைப்பு முழுதும் செம்மையாகிற்று. ஆளும் மறைந்தனன். அரசன் இவ்வற்புதச் செயலைக்கண்டு வியந்து தன் அறியாமையால் இவையெல்லாம் நிகழ்ந்தது எனத் தெரிந்து ஈசனை வணங்கி மாணிக்கவாசகரைச் சிறையினின்றும் விடுத்துத் தன்னை மன்னிக்கும்படி இறைஞ்சினன். மாணிக்கவாசகரும் தன் அமைச்ச கோலத்தைவிட்டு, துறவிக்கோலம் பூண்டு வெளிச் சென்றனர். திருப்பெருந்துறை சென்று தன் குரவனை மீண்டும் வணங்கி அடியார்களுடன் கூடச் சிலநாள் இருந்து பின் அவர்களைப் பிரிந்து அவர் ஆணையின்படி உத்தரகோசமங்கை, திருவண்ணுமலை, திருக்கழுக்குன்றம் முதலான தலங்களைத் தரிசித்துப் பாடல்களை அருளி ஈசன் திருவடிகளை இறைஞ்சிச் சென்ருர்.

அக்காலத்தில் தில்லையில் ஈழ நாட்டினின்று வந்த ஒரு புத்த குருவிடம் வாதாடி அவரை வென்று சைவ சமய உண்மை

களை நிலைநிறுத்தினர். பிறகு அத்தலத்திலேயே ஒரு பன்னசாலை கட்டி அதில் இருந்தனர். அக்காலத்தில் நடராசப் பெருமானைக் கண்குளிரக் கண்டு செந்தமிழ்ப் பாடல்கள் பல அருளிச் செய்தனர். ஒரு நாள் பெரியார் ஒருவர் தோன்றி மாணிக்க வாசகனர் பாடிய பாடல்களை எழுதிக்கொள்ளவேண்டும் என்று விண்ணப்பிக்க மணிவாசகனரும் அவைகளை அருள அப்பெரியாரும் எழுதிக்கொண்டனர். பின்பு ஈசன் மீது ஒரு கோவை பாடும்படி வேண்ட அவ்விதமே திருச்சிற்றம்பலக்கோவையையும் பாடி அருளினர். இவை யெல்லாம் எழுதிய பெரியார் உடனே மறைந்தருள ஈசனே இவ்விதம் வந்தருளினர் எனக் கண்டு வியந்தார். மறுநாள் அர்ச்சகர்கள் ஆலயத் திருக் கதவு திறக்கையில் அப்புதிய ஏடு இருக்க வியந்து பிரித்துப் பார்க்க அதில் "திருவாதவூரன் பாட அழகிய திருச்சிற்றம்பல முடையான் எழுதியவை" என்றிருக்கக் கண்டனர். உடனே எல்லோரும் அடிகளிடம் சென்று அதன் பொருளை விளக்கும்படிக் கேட்க அவர் பொன்னம்பலத்தின் எதிரே புகல்வேம் எனக் கூறி எல்லாரையும் இட்டுச் சென்றனர். அங்கே "இத் தமிழ் மாலைக்குப் பொருள் இவரே" என்று ஈசனைச் சுட்டிக் காட்டி மன்றினில் புக்கு சிவச்சோதியில் மறைந்தனர். அதனைக் கண்ட எல்லோரும் ஆனந்த நீர் பொழிந்து அன்பினல் உருகினர்கள். அப் பாடல்களே திருவாசகமும் திருக்கோவையாருமாகத் தமிழ் மறையில் ஓர் பாகமாக இப்போது இலங்குகின்றன.

மணிவாசகர் அமைச்சராக வாழ்கையில் இல்லறம் பூண்டு ஒரு கற்பிற் சிறந்த உத்தமியுடன் வாழ்ந்தனர் என்று அவர் அருளிய மாதர்களின் ஆடல் பாடல் பண்பு இவை கூறும் திருப்பாடல்களைக் கொண்டு திருமறைமலையடிகள் ஊகித்தெழுதுகின்றனர்.

மேலே கூறிய சரித்திரம் இக்காலத்து விஞ்ஞானம் அறிந்த மக்கள் எளிதில் நம்பக்கூடாத பல அருஞ் செயல்களைக் கொண்டிருந்தபோதிலும் அவைகளுக்கு மணிவாசகனர் திருப்பாடல்களிலேயே சான்றுகள் இருத்தல் கண்டுகொள்க.

ஆசாரிய மூர்த்திகள் வேதியராக வந்து ஆண்டமையை

"அந்தணராகி யாண்டு கொண்டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்"

எனவும், குருநாதனால் தொடர்பு நீக்கப் பெற்றதை,

"சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

எனவும், ஈசன் குதிரைச் சேவகனாய் வந்ததை,

"பள்ளிச்குப் பாயத்தர் பாய்பரிமேல் கொண்டென்
உள்ளங் கவர் வரால்"

எனவும், நரியைப் பரியாக்கியதை,

"நரிக ளெல்லாம் பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே"

எனவும், பிட்டுக்காக மண் சுமந்ததை,

"பிட்டுநேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பித்தனே"

எனவும், மண் சுமந்தபோது அடி பட்டதை,

"மண்சுமந்து கூலிகொண்டு அக்கோலான் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"

எனவும், தில்லைக்கு வரச் சொன்னதை,

"நாயினேனை நலமலி தில்லையுட்
கோலமார் தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங் கொழித் தருளி"

எனவும் ஆசிரியர் சரித்திர பாகங்கள் காட்டும் சொற்கள் அவரது பாடல்களிலிருந்தே பெறக்கிடக்கின்றன.

II

தேவாரம் அருளின மூவர் காலத்து அரசர்களின் பெயர்களை ஆராய்ந்து அறிவதற்கு அவர்கள் சொன்ன பாடல்களிலிருந்தும், அவர்கள் காலத்து வாழ்ந்த ஏனைய பெரியார்களின் பெயர்களிலிருந்தும் அவர்களுடைய சிவிய சரித்திரத்தைப் பலருக்கு ஊட்டிய சேக்கிழார் மொழிகளிலிருந்தும் வேண்டிய

ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனல் மாணிக்கவாசகர் காலத்து அரசர்களின் பெயர்களை நிச்சயமாகச் சொல்வதற்கு அவருடைய பாடல்களாவது அவற்றைப்பற்றிக் கூறும் இதர கவிஞர்களாவது எவ்வித ஆதாரங்களையும் குறிக்கவில்லை. மாணிக்கவாசகர் தென்னவன் என்று மாத்திரம் அங்கங்கே குறிக்கின்ரூர். ஏனைய அரசர்கள் பெயர்களையே காணேம். ஆனல் திருக்கோவையாரில் மட்டும் "வரகுணனும் தென்னவன்" என்று இரண்டு செய்யுட்களில் வரகுணனைக் குறிக்கின்ரூர். இந்த வரகுணன் எவன் என்ற விவாதம் தீர்க்கமுடியாமல் கிடக்கின்றது. பெரும்பான்மை சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கி. பி. 862-ல் இருந்த வரகுணன் என்பார்கள். ஆனல் இதை நிச்சயமாக நிரூபிக்க மேல்சான்றுகள் கிடையா. (Mythic Journal-ல் திரு. K. G. சங்கரையர் திருக்கோவையார் வரகுணன் 832-ம் ஆண்டு வரகுணன் அல்லன் என்பர். XXII p. 50)

மேலும், சம்பந்தரும் அப்பரும் சிறுத்தொண்ட நாயனர், கோச்செங்கணன், கண்ணப்பர் முதலான அடியார்கள் பெயர்களையும், சுந்தரர், சம்பந்தர், அப்பர் முதலிய தமக்கு முந்திய அடியார்கள் பெயர்களையும், நரசிங்க முனையர், ஏயர்கோன் கலிக்காமர், சேரமான் பெருமாள் முதலான தம் காலத்துப் பெரியார்களின் பெயர்களையும் குறித்திருக்கிரூர்கள். இதனல் அவர்கள் காலம் எளிதில் ஆராயமுடியும். ஆனல் மாணிக்கவாசகரோ அவ்விதம் முன்னேர்களையாவது தம் காலத்துப் பெரியார்களையாவது கூறவில்லை. உலக விவகாரத்தை விட்டு எப்போதும் ஈசன் பாதத்தையே எண்ணிக் கொண்டிருந்தவராதலால் ஏனையோர் பெயர்களைக் குறித்திலர் போலும்.

தேவாரம் பாடிய மூவரின் பெயர்களை அவர்களின் சமீப காலத்துப் புலவர்கள் குறித்துள்ளார்கள். திருவிசைப்பா ஆசிரியர்களும் நம்பி யாண்டாரும் மூவர்களுடைய பெயர்களைக் குறித்துள்ளார்கள். ஆனல் மாணிக்கவாசகர் பெயரை அவ்விதம் குறிக்கவில்லை. 862-ல் மாணிக்கவாசகர் இருந்தவர் என்று கொள்ளினுங்கூட ஏன் அவர்பெயர் குறிக்கப்பெறவில்லை? அடி

கள் எவராலும் அறிந்து கொள்ளக் கூடாத முற்றும் துறந்த முனிவராகத் திகழ்ந்ததினுலோ அல்லது வேறு எந்த காரணத்தினுலோ தெரியவில்லை. ஆனல் அவரைப்போலேவே முற்றும் துறந்த ஞான வள்ளலான பட்டினத்தடிகளே அவரை முதன் முதலில் "திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்" எனக் குறித்தவராவர்.

இவ்விதம் பெரும்புலவர்களாலேயே குறிக்கப்படாத பெருமை வாய்ந்திருப்பின் அரசர்களாலும் குறிக்கப் பெறும் இயல்பு அவரை எட்டுமா ? சோழ ஆதிக்க காலத்தில் இராசராசச் சோழரும் அவர் மகன் இராசேந்திரச் சோழரும் மூவர் உருவங்களைத் தாங்கள் கட்டி நிலைநிறுத்தின தஞ்சைக் கோயிலில் தாபித்துப் பல தானங்கள் விட்டனர். ஆனல் அவ்வுருவங்களிலே மாணிக்க வாசகர் உருவம் வைக்கப்படவில்லை. அக்காலத்தில் வேறு கோயில்களிலும் கூட அவர் சிலை வைக்கப் பெறவில்லை. மூவர்களைப்போல இவர் பெயர் உலகத்தில் அக்காலத்தில் பிரசித்தி பெறவில்லை போலும். முதல் முதலாக வீரராஜேந்திரன் காலத்தில் தான் இவரது பெயர் கல்வெட்டில் புகுந்தது எனப் பின் சொல்லும் ஆராய்ச்சியினல் தெரியவரும். இவ்விதம் இல்லாமற் போனதற்குக் காரணம் தெரியவில்லை.

நமது அடிகளின் பெயரும் அவரது பாடல்களை ஓதுதல் முதலியவைகளும் பதினோராம் நூற்றுண்டுவரைக் கல்வெட்டுகளில் பதியப்படாதது போலவே அவரது சிலைகளும் ஆலயங்களில் வெகு காலம் வரைக்கும் பிரதிஷ்டை பெறுமல் இருந்தன. குலோத்துங்க சோழன் III. (1178—1216) கட்டிய தாராசுரம் என்ற ஆலயத்தில் சிவனடியார்கள் உருவங்களும் செயல்களும் கல்லில் செதுக்கப் பெற்றிருக்கின்றன. இவைகள் திருத்தொண்டத் தொகையில் உள்ளவாறு இருக்கின்றன. இவை மிகப் பழையவைஎனக் கூறலாம். இவ்வுருவங்களில் மாணிக்கவாசகர் உருவமாவது அவர் செய்கையாவது கிடையா. ஆகவே இதற்குப் பிந்தி தான் ஆலயங்களில் மாணிக்கவாசகரையும் மூவரோடு நால்வராகச் சேர்த்துவைத்தல் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் தாராசுரத்து அடியார் உருவங்களுள் 'பொய்யடிமையில்லாப்புலவர்' உருவமும் உண்டு. நம்பியாண்டாரும் சேக்கிழாரும் கூறுவதுபோல இவ்வுருவமும் சங்கப்புலவரையே ஒத்திருக்கிறது. இப்போது சில ஆராய்ச்சியாளர்கள் மாணிக்கவாசகரைப் பொய்யடிமை யில்லாப்புலவர் என்று சுந்தரர் குறித்திருக்க வேண்டும் என்ற கொள்கை சோழர் காலத்திலேயே இல்லாமல் இருந்தது என்னலாம்.

III

இனி, மாணிக்கவாசகரைப்பற்றிக் கிடைத்த கல்வெட்டுகளிலிருந்து அவரைப்பற்றிக் கூறும் பொருள்களை எடுத்துத் தொகுத்துக் கூறுவோம்.

i. நாயனார் பெயர்கள்

அடியிற் காணும் பெயர்களைக் கல்வெட்டுகளால் அறியலாம்:—

(1) திருவாத வூரடிகள்:—தஞ்சை (213) திருவலஞ்சுழி—இவ்வாலயத்தில் திருநாவுக்கரசர், திருக்கண்ணப்ப தேவர் இவர்கள் பதுமைகளோடு திருவாதவூரடிகள் விக்கிரகமும் கூறப்பெற்றுள்ளது. கி. பி. 1158.

(2) திருவாதவூராளி நாயனார்:-தஞ்சை (709)—வழுவூர். கி. பி. 1167.

(3) திருவாதவூர்த் தேவர்:—தஞ்சை (850)—திருவீழிமிழலை. கி. பி. 1226:

(4) மாணிக்க வாசகர்:—

i. தஞ்சை (850) திருவீழிமிழலை. கி. பி. 1226

ii. செங்—(976) திருவொற்றியூர். கி. பி. 1024

(5) திருவாதவூர் நாயனார்:—

i. 30-16 கி. பி. 1305

ii. 285-27 மருதநல்லூர். கி. பி. 1148

(6) வாதவூர் நாயனார்:—தஞ்சை (708) வழுவூர். கி. பி. 1181

(7) திருவாதவூர் பிரமராயன்:—கி. பி. 1390

இக்கல்வெட்டில் ஒருவன் தன் பெயரில் திருவாதவூர், பிரமராயன் என்ற இரண்டு மொழிகளை ஏனைய மொழிகளுடன் சேர்த்து வைத்திருப்பதை நோக்கினால் இவ்விரண்டு பெயர்களும் நாயனூர்க்கு இருந்ததை ஊகிக்க முடியும். ஆகவே மேற்காட்டிய கல்வெட்டுகளிலிருந்து நமது ஆசாரியருடைய சரித்திரத்தில் நமக்கு கிடைக்கக் கூடிய அவர் திருநாமங்கள் பலவும் போற்றப் பெற்றிருக்கும் நிலையை அறிகிறோம். அவர் அவதரித்த ஊரான திருவாதவூரையே தமது பிள்ளைத் திருநாமமாக வைத்திருந்ததை "திருவாத வூரடிகள்" என்ற பெயரினாலும் அப்பெயரின் திரிபுகளான "திருவாதவூராளி நாயனர்" "திருவாதவூர்த் தேவர்" "திருவாதவூர் நாயனர்" "வாதவூர் நாயனர்" என்ற பெயர்களினாலும் அறியலாம். மேலும், அரசனிடம் அமைச்சராய் அமைந்தபோது "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டம் பெற்றதும், கி. பி. 1390-ல் வேறொரு பக்தன் தான் "திருவாதவூர் பொன்மேய்ந்த சோழப் பிரமராயன்" என்ற சிறப்பு பெயருடன் விளங்கினதிலிருந்து அக்காலத்திலேயே நமது ஆசாரியருக்கு "பிரமராயர்" என்ற பட்டம் இருந்த செய்தி உலகப்பிரசித்தி பெற்றிருந்ததென ஊகிக்கலாம். பிற்காலத்தில் ஆசாரியர் திருவாசகம் பொழிந்த காலைச் சிவபெருமானால் அருளிக் கொடுக்கப்பட்ட "மாணிக்க வாசகர்" என்ற திவ்விய நாமமும் இரண்டு கல்வெட்டுகளால் ஆதரிக்கப்பெற் றிருக்கின்றது. ஆகவே 11-ம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டு வரை அவர் திருநாமங்கள் வழங்கி வந்த செய்தி இக்கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது.

ii. நாயனர் விக்கிரகங்களும் அவைகளின் தாபனங்களும்

நமது ஆசாரியரின் உருவத்தாபனங்கள் அடியிற்கண்ட ஆலயங்களில் கூறப் பெற்றிருக்கின்றன.

(1) மருதநல்லூர் (தஞ்சை, கும்பகோணம் தாலுக்கா 285-1927) சிவாலயத்து முன் மண்டபத்து வடச்சுவர். இராஜராஜச் சோழன் 2-ம் ஆண்டு-கி. பி. 23-2-1148-குலோத்துங்கச் சோழவள நாட்டுத் திருநாறையூர் நாட்டுத் திருக்கருக்குடி விழு

மிய நாயனார் ஆலயத்தில் தான் தாபித்த திருவாதவூர் நாயனார் மூர்த்திக்கு ஆராதனைக்காகச் சென்னிமங்கலத்து விசுவேசுவர ஆலயத்துத் தேவதாசியான கரையேற விட்டாள் திருநட்டப் பெருமாள் என்பவள் நிலதானம் செய்தது.

(2) திருவலஞ்சுழி:—(தஞ்சை 213) கபர்தீசுவரர் ஆலயம் முன்மண்டபத் தென்சுவர். இராஜராஜ தேவச் சோழன் II-12-ம்—ஆண்டு 26-3-1158—இக்கல்வெட்டில் திருநாவுக்கரசு தேவர், திருவாத வூரடிகள் திருக்கண்ணப்ப தேவர் இவ்விக்கிரகங்களின் ஆராதனைக்காக பூதானம் செய்தது கண்டிருக்கிறது.

(3) வழுவூர்:—(தஞ்சை 709) வீரட்டானேசுவரர் ஆலயம் முன்மண்டபத்துத் தென்சுவர். சோழன் இராஜாதிராஜ தேவன் II—5-ம் ஆண்டு—1-7-1167 ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் திருவாதவூராளி நாயனார் விக்கிரகத்தின் சந்நிதியில் மார்கழி மாதம் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓதுவதற்கும் பங்குனித் திருவிழா நடத்துவதற்குமாக ஒரு அன்பன் பணம் தானம் செய்தது.

(4) வழுவூர்:—(தஞ்சை 708) அதே ஆலயம் அதே சுவர் குலோத்துங்கச் சோழன் III—3-ம் ஆண்டு அதாவது கி. பி. 1181—மேல் கல்வெட்டில் கூறிய அன்பனே திருவீரட்டானமுடையார் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் வாதவூர் நாயனார் ஆராதனைக்காக ஒரு நிலத்தை வாங்கி அளித்தது.

(5) திருவீழிமிழலை:—(தஞ்சை 850) வீழிநாத சுவாமி ஆலயம் முதல் பிரகாரத்துத் தென்சுவர். இராஜராஜ தேவன் III-11-ம் ஆண்டு-அதாவது 30-11-1226-திருவீழிமிழலை மூன்றும் பிரகாரத்தில் எழுந்தருளி இருக்கும் திருவாதவூர்த் தேவர் மாணிக்கவாசகருடைய விக்கிரகத்திற்கு ஆராதனைக்காக பூதானம் செய்தது,

(6) சன்னவனம்:—(இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலுக்கா—30-1916) சால்யவனேசுவரர் ஆலயம் முன்மண்டபத்துத் தென்சுவர். சகல நாடும் வென்ற மாறவர்மன் குல

சேகரபாண்டியன் 38-ம் ஆண்டு—கி. பி. 1305-இக்கல்வெட்டில் சுந்தர பாண்டிய பட்டன் என்பவன் அவ்வூராலயத்தில் தாபித்த திருவாதவூர் நாயனார் விக்கிரகத்திற்கு ஆராதனைக்காக வியாதரையன் கோட்டை வாசிகள் பூதானம் செய்தது குறிக்கப் பெற்றிருக்கிறது.

ஆகவே சோழ நாடாகிய தஞ்சை ஜில்லாவில் 4 ஆலயங்களிலும் பாண்டிய நாடான இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு ஆலயத்திலும் மாணிக்க வாசகருடைய உருவம் தாபிக்கப் பெற்று ஆராதனையும் செய்யப் பெற்று வந்ததை மேற் சொல்லிய 5 கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். அவைகளும் முறையே 1148 முதல் 1305 வரைக்குள் தானசாசனங்களால் ஆதரிக்கப் பெற்றன என்றும் அறிகிறோம். ஆனால் வாதவூரடிகள் அவதாரத்தலமாகிய திருவாதவூரில் அவரது ஆலயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வூரில் நாளிதுவரை கிடைத்த இரண்டு கல்வெட்டுகளும் சமீப காலத்தவை; அவைகளில் அடிகளைப்பற்றி ஒன்றுங் கிடையாது. மேலும் அடிகள் அதிக காலம் வாழ்ந்து அற்புதங்கள் விளைவித்த மதுரையிலும் அவரது தாபிதத்தைப்பற்றிக் கல்வெட்டுகள் கூறவில்லை. அவரது வேறு திருவருட் செயல்களைக் கூறுவதும் கிடையா; காரணம் தெரியவில்லை. நமது ஆசாரியர் ஞானோபதேசம் பெற்று, பாண்டியனது பெரும் பொருள் செலவழித்து ஆலயம் எழுப்பின திருப்பெருந்துறையான ஆவுடையார் கோயில் சாசனங்களிலும் நம் ஆசாரியரைப்பற்றிக் கல்வெட்டுகள் கிடையா. ஆனால், தற்காலத்தில் ஆவுடையார் கோயிலிலே மாணிக்க வாசகருக்குத் தனி ஆலயமும் திருவிழாக்களில் அவரது உருவத்திற்குப் பெரும் சிறப்பும் ஏற்பட்டிருப்பது சகலரும் அறிந்த செய்தியாகும். திருவதிகையில் அப்பருக்கும், சீகாழியில் சம்பந்தருக்கும், திருவெண்ணெய் நல்லூரில் சுந்தரருக்கும் தனி ஆலயங்களும் தனிச் சிறப்புகளும் ஏற்பட்டிருப்பதைப் போன்று நமது மணிவாசகப் பெருமானுக்கும் ஆவுடையார் கோயிலில் சிறப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அது எக்காலத்தில் ஏற்பட்டது என்பதற்குப் போதிய சான்று இல்லை. ஏனைய அவதாரத் தலங்களைப்

போல் அல்லாமல் இவ்வாலயத்தில் ஒரு சிறந்த மாறுபாடு உண்டு. மற்ற ஆலயங்களில் சமயாசாரியர்களுக்குத் திருவிழாக்களில் அதிகச் சிறப்பு இருந்தாலும் ஆலயத்துப் பெருமானுக்கும் சிறப்பாக திருவிழா நடத்துவார்கள். ஆனால் அவ்விதம் ஆவுடையார் கோயிலில் இல்லை. இதற்கு காரணம் என்னவோ?

ஆவுடையார் கோயிலில் தற்போது உள்ள பெரும் ஆலயமான ஆத்மநாத சுவாமி ஆலயம்தான் மாணிக்க வாசகர் நிருமாணித்தது என்று தற்காலத்தில் நம்பப்பட்டு வருகின்றது. ஆனால் அதை நிரூபிக்க அந்த ஆலயத்தில் யாதொரு கல்வெட்டுச் சான்றும் கிடையாது. பழைய ஆலயமானது பிற்காலத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்று முந்தி இருந்த சகல சின்னங்களும் அழிக்கப்பட்டன போலும். ஏனெனில் தற்போது ஆலயத்தில் காணும் கல்வெட்டுகள் எல்லாம் 15, 16-ம் நூற்றாண்டின் அளவே இருக்கின்றன. அவைகளிலும் இவ்வூருக்குத் திருப்பெருந்துறை என்பது பெயர் என்ற ஒரு முக்கியமான செய்தியைத் தவிர மாணிக்கவாசகரைப் பற்றிய வேறு செய்திகளைக் கூறவில்லை. இக்கல்வெட்டுகளினாலே 15--ம் நூற்றாண்டிலிருந்தாவது இத்தலம் திருப்பெருந்துறை என்று வழங்கப் பெற்று வந்ததை அறியலாகும். சிலர் இத்தலம் பெருந்துறை அன்று அது மேற்கே மலை நாட்டில் உள்ளது என்பதை இக்கல்வெட்டுகள் மறுக்கின்றன. ஆனால் 15-ம் நூற்றாண்டிற்கு முந்திய சான்றுகள் நமக்கு கிடைக்கவில்லை.

இது கிடக்க, இவ்வாலயத்தில் வேறு மாறுபாடுகளும் உண்டு. கோயில் தெற்குப் பார்த்த சந்நிதி. மணிவாசகருக்கு உபதேசித்த வண்ணம் எழுந்தருளினதினாலே இவ்விதம் இருக்கலாம். குருந்த மரத்தடியில் உபதேசம் செய்த உருவம் ஆலயத்தின் பிற்பிரகாரத்தில் இருக்கிறது. மூலஸ்தானத்து இலிங்கமும் அம்மன் உருவமும் இல்லை. ஆகமப்படி நடத்த வேண்டிய ஆராதனை பிடங்களாகிய ஆவுடையார்களுக்கே நடந்து வருகின்றது. பரிவார தேவதைகளாகிய நந்தி, சண்டிகேசர் இவர்கள் இல்லை. விநாயகரும் சுப்பிரமணியரும் கடைசிப் பிரகாரத்தின்

கோபுரத்தில் எழுந்தருளி இருக்கிறார்கள். இவ்வித மாறுபாடு களுக்குக் காரணம் தெரியவில்லை. ஒரே தனி முதற் கடவுளைப் போற்றுபவ ராதலினால் மாணிக்க வாசகர் இவ்விதமாக ஆல யத்தை நிருமாணித்தனரோ என்று சிலர் ஊகிக்கின்றனர்.

இவ்வாலயத்துப் பிரகாரத்திலே மேல் புறத்தில் அகோர வீரபத்திரர் உருவம் இருக்கின்றது. இதன் எதிரில் பேய் பிடித்த மக்கள் பேயாடுவது ஒரு விசேஷமாக இருக்கின்றது. ஏனைய சிவாலயங்களில் இந்நிகழ்ச்சியைக் காண்பதரிது. சைவ சமயாபிவிருத்தி ஏற்பட்டதற்கு முந்தி இருந்த பண்டைய சிறு தேவதைகளின் ஆராதனை இவ்விடத்தில் மிகுந்து எஞ்சி நின் றது போலும்.

மேலும், இவ்வூரில் ஆதி கைலாயநாத சுவாமி ஆலயம் என்ற ஒரு புராதன கோயில் உண்டு. ஒரு சிலர் இவ்வால யத்தைத்தான் மாணிக்கவாசகர் வழிபட்டது என்பார்கள். அதற்கு ஆதாரமாக செத்திலாப்பத்தில் "கயிலைமலை மேவிய கடல்" என்று சிவபிரானைப் பாடியுள்ளதைக் குறிப்பிடுவார்கள்.

இனி, இவ்வூர் ஆலயத்தில் ஆவுடையாரே பிரதான மூர்த்தி யாக உள்ளதால் இவ்வூருக்கே ஆவுடையார் கோயில் என்ற பெயர் வழங்கி வந்தது போலும். ஆனால் கல்வெட்டுச் சான்று வேறு விதமாக இருக்கின்றது. இவ்வாலயத்து சகம் 1521 சார்வரி புட்டாசி 20-ந் தேதியிட்ட (502-25) கல்வெட்டில் திருப்பெருந்துறை ஆளுடைய பரம சுவாமிகள் என்று பெயர் கண்டிருக்கின்றது. இதைக் கொண்டு ஆளுடையார் கோயில் என்ற பதமே ஆவுடையார் கோயில் என்று மருவி இருக்க லாம் என்று ஊகிக்க இடமுண்டு. மேலும் 1524 சகம் சுபகிருது பங்குனி 22-ந் தேதியிட்ட ஒரு கல்வெட்டிலும் ஆதி கைலாய நாதர் கோயில் சாசனம் ஒன்றிலும் திருப்பெருந்துறைக்குப் பவித்திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலம் என்று பேர் உண் டென்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பெயரில் மாணிக்க சப்தம் இருப்பது அறியத்தக்கது. இதனால் மாணிக்க வாசகர் சம்பந் தம் அறியக் கிடக்கின்றதோ என ஆராயலாகும். சகம் 1524-ம் ஆண்டுக் கல்வெட்டுகளில் (503—507/25) அக்காலத்தில் இவ்

வாலயத்தின் திருப்பணிக் கர்த்தாவாக ஒரு பரதேசி முத்திரை வாமதேவ பண்டாரம் என்ற ஒருவர் இருந்தார் என்றும், அவர் திருப்பணி செய்தும் குருபூஜை செய்வித்தும் அவைகளுக்காக தானங்கள் பெற்றும் அவ்வாலயத்தின் திருமலைக் கொழுந்து பிள்ளை மூர்த்தத்தின் மஞ்சனத்திற்குத் தானம் செய்தும் வந்தார் என்றும் அறிகிறோம். மேலும் 1539 சகம் ஆண்டுக் கல்வெட்டினால் இக்கோயிலில் ஒரு மண்டபத்திற்கு ஆபத்சகாய பேரம்பலம் என்ற பெயரிருந்ததாகவும் அறிகிறோம். இவ்வூரில் உள்ள ஆதி கைலாய நாதர் ஆலயத்தில் திரிபுவன வீரசோழன் 34-ம் ஆண்டுக் கல்வெட்டிலும், கஜேந்திரப் பெருமாள் ஆலயத்து 1308 சகம் ஆண்டுக் கல்வெட்டிலும் திருப்பெருந்துறை என்ற நாமம் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்விஷ்ணு ஆலயத்தில் 12-ம் நூற்றாண்டுச் சாசனம் ஒன்றும் இருக்கின்றது.

(தொடரும்)

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

அடிகள் (௧௭)

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்.]

(௨௬௰-ம் பக்கத் தொடர்ச்சி)

(8) 'ஆண்டான் அடிமைத் தொடர்பு' என்பது சைவ சமயத்திற்குரிய ஒரு சிறந்த உண்மை. அந்த உண்மையில் கடவுள், ஆண்டவன் (தலைவன்) என்றும், உயிர்கள் அவனுடைய அடிமைகள் என்றும், இருவேறு அறிவுப் பொருள்களுக்குமுள்ள தொடர்பு அத்துவிதத் தொடர்பு என்றும், சைவநூல்கள் கூறுகின்றன. உடலுறுப்புகளில் தலை எல்லா உறுப்புகளுக்கும் மேலாயிருப்பதாலும், தூல உடலில் தலையிலுள்ள மூளையே அறிவுக் கருவியாயிருத்தலாலும், அச்சொல்லுடன் பண்பு விகுதி 'மை' சேர்ந்த தலைமை என்பது அறிவால் ஆளும் முதன்மையைக் குறிக்கிறது. அடி, உடலுறுப்புக்களெல்லாவற்றிற்கும் கீழாயிருத்தலினாலும், உடலை இடம் விட்டு இடம் பெயர்த்தற் கருவியாயிருத்தலினாலும், அச்சொல்லுடன் மை

என்ற பண்பு விகுதி சேர்ந்த அடிமை என்ற சொல் அறிவால் ஆளுந் தலைவனுக்குள் அடங்கி ஒழுகிப் பணிசெய்யும் பணியாளைக் குறிக்கின்றது. இங்கே அடிமை என்ற சொல், தன்னலத்தின் பொருட்டுத் தலைவன் செய்யும் ஆளுகையை அறிந்து சுதந்தரத்துடன் அதற்குத்தக ஒழுகும் பணியாளன் என்று பொருள்படும். தலைவன் நலத்துக்காகவே யாதொரு சுதந்தரமுமின்றி அவனிட்ட பணியைச்செய்யும் பணியாளன் (Slaves) என்ற மேற்கு நாட்டுக் கருத்தை அதில் ஏற்றுதல் கூடாது. கடவுளுக்குப் பொதுவாக மக்களெல்லாரும் மேலே சொன்ன கருத்தில் அடிமைகளா யிருந்தாலும், ஆண்டவனாகிய கடவுள் தங்களை ஆளுந் தன்மையையும், தாங்கள் அவனுக்கு அடிமைகளாக அடங்கி நடக்கும் அடிமைத் தன்மையையும் உள்ளபடி அறிந்து உணர்ந்து ஒழுகுகிற மக்களே, கடவுளுக்குச் சிறப்பாக அடியார் என்று கூறப்படுவார்கள். வேறு ஒரு பொருளையும் பற்றாது கடவுளது அருளையே பற்றாகக்கொண்டு, யான் எனது என்னும் செருக்கின்றித் தாங்கள் செய்யும் பணியெல்லாம் இறைபணியாகச் செய்யவல்ல தகைமை யுடையவர்கள் அடியார்களாவார்கள். இந்த அடியார் என்ற சொல்லினும் அடி என்பது அருளைக் குறித்தல் காண்க. இக்காலத்து, 'அடியார்' என்ற சொல் திருநீறு அக்குமணி முதலிய சிவவேடம் பூண்டவர்களைக் குறிக்க உபசாரமாய் வழங்கப் படுகின்றது.

9. ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை பற்றியே, குருவானவன் ஒரு மாணவனுக்குத் தீக்கை செய்யுங்கால், தான் கடவுளால் அதிட்டிக்கப் பட்டவன் என்ற நிலையில் மாணவன் தலையில் தனது திருவடிகளைச் சூட்டி, அவனைத் தன்னுடைய அடிமையாகச் செய்துகொள்கிறான். திருவடி சூட்டலானது திருவருளிற் கலத்தலைக் குறிக்கின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் "பிரானுயடி யேன்மேல்வைத்தாய் நீயே" என்று கூறியிருத்தல் காண்க.

10. இக்காலத்து, உலக வழக்கிலும் இழிந்தோனொருவன் உயர்ந்தோ னொருவனை நோக்கி "உமது அடிக்கு எனது

தலையால் தாழ்ந்த வணக்கம் செய்கிறேன்" என்றும் "உமது அடிக்கு உரைக்கிறேன்" என்றும் "உமது அடி என் தலைமேலே" என்றும் "உமது அடிமை" அல்லது "அடியான்" என்றும் "அடியேன்" என்றும் கூறுதலை நாம் காண்கின்றோம். இந்த வசனங்களில் இழிந்தோன் உயர்ந்தோனுக்கு அடங்கி ஒழுகலும் அவன் அருளை அல்லது தயவைப் பெறுதலும் குறிக்கப்படுகின்றன. வணங்குகிறவன் தலையும் வணங்கப்படுகிறவன் அடியும் முறையே தாழ்மையையும் உயர்வையுங் குறிக்கின்றன. "தாளை வணங்காத் தலை" என்று திருவள்ளுவர் கூறியிருத்தல் காண்க. உயர்வானது உண்மையில் அன்பு அறிவு செயல் வகைகளாற் கருதப்பட்டால் மட்டுமே உயர்ந்தவனிடத்துச் செய்யும் பணிவு உண்மையாக இருக்கும். செல்வம் அதிகார முதலிய உலக நலங்கள்பற்றி ஒருவனுக்கு உயர்வு உளதாகக் கருதி இழிந்தோனுற் செய்யப்படும் பணியானது உண்மையாக இராமல் நடிப்பாயிருக்கும். நமது இந்திய நாட்டில் வெறும் பிறப்புப்பற்றியும் வணக்கம் செய்யப்படுகின்றது. பணிவு (Humility) உண்மையாக இருந்தாலொழிய பணிவு செய்கிற இழிந்தோனுக்கும் பணிவைப்பெறுகிற உயர்ந்தோனுக்கும் யாதொரு நலமும் உண்டாகா திருத்தலுடன் தீய பண்பும் வளரும். இக்காலத்துப் பெரும்பாலும் மக்கள் செய்யும் வணக்கமும் பணிவும் அவர்களது உள்ளத்தோடொன்றியவைகளாயிராமல் உரை செயல் வகைகளாகவே காணப்படுகின்றன.

(தொடரும்)

திருநெல்வேலி
தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்
நிறைவேற்றற் கழகத்தாரால் செய்யப் பெற்ற தீர்மானம்

சந்திரன், செவ்வாய் முதலிய கோள் (கிரகங்)களுக் கெல்லாம் பிறப்பிடமாகவும் அரசாகவும் விளங்குகின்ற சூரியனை வைத்து ஆண்டு, மாதம் முதலியவைகளைக் கணிப்பதே சௌரமானம். நிலை

யான ஒளியையுடையதாகிய சூரியனிடமிருந்து தோன்றிய பூமியி லிருந்து தெறித்து மிகச் சிறிய உருவுடையதாய்ச் சூரியனைக் காட்டி லும் பலகோடிப் பங்கு சிறியதாய் சூரியனுடைய ஒளியால் விளக்க முறுவதேயன்றித் தனக்கெனவுள்ள ஒளியற்றதாய்ப் பூமியையும் சூரியனையும் சுற்றிச்சுற்றி வலம்வருவதாய் வளர்ச்சி தளர்ச்சிகளை யுடையதாயுள்ள சந்திரனுடைய வளர்ச்சி தளர்ச்சியை வைத்து நாட் களை எண்ணுவது சாந்திரமானம். சௌரமான ஆண்டு சித்திரை மாதத்தில் தொடங்கி பன்னிரண்டு மாதங்களை உடையது. சாந்திர மான ஆண்டு பங்குனி மாதத்தில் வரும் அமாவாசைக்கு மறுநாள் தொடங்குகிறது. சாந்திரமான மாதம் அமாவாசை கழிந்த மறு நாள் பிரதமை முதல் தொடங்கி மறு அமாவாசை முடிய உள்ள காலம். சௌரமான மாதமென்பது சூரியன் பன்னிரண்டு இராசி களில் ஒவ்வொரு இராசியிலும் இருக்கும் காலமாகிய சித்திரை முதலிய மாதங்கள். சாந்திரமாதங்களின் பெயர்கள் சைத்திரம், வைகாசம் முதலியன. சாந்திரமாதப் பெயர்கள் சித்திரை, வைகாசி முதலிய சௌரமாதப் பெயர்களின் திரிபுகளே.

சாந்திரமானிகளாகிய ஸ்மார்த்தப் பிராமணர்கள் **சௌரமாதங்க ளோடு சாந்திர மாதங்களை இணைத்தே வழங்கிவருகின்றார்கள்.** சௌர மான ஆண்டு சுமார் 365¼ நாட்களையுடையது. சாந்திரமான ஆண்டு சுமார் 354 நாட்களை யுடையது. இதனால் சௌரமானப்படி சுமார் இரண்டு வருடம் எட்டு மாதங்கள் (அதாவது 32 மாதங்கள்) ஆகும் போது சாந்திரமானப்படி ஒரு மாதம் அதாவது முப்பது நாட்கள் அதிகப் படும். அதாவது அந்தச் சாந்திர வருடத்தில் 13 அமாவா சைகள் வரும். அதில் ஒரே சௌர மாதத்தில் முதலிலும் கடைசி யிலுமாக இரண்டு அமாவாசைகள் வரும். உதாரணமாக நிகழும் **பிரசோற்பத்தி** ஆண்டில் ஆனி மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வந்திருக்கின்றன. ஆனிமீ 2உ அமாவாசையோடு சாந்திரமான ஆனிமீ முடிகிறது. 3உ தொடங்கி 31உ முடிய சாந்திரமான ஆடி மாதம். ஆனால் இந்தச் சாந்திரமான ஆடிமாதமோ சௌரமான ஆடியோடு சேராமல் ஆனி மாதத்திலேயே முடிந்து விடுகிறது. ஆகையால் சாந்திரமானிகள் இந்தச் சாந்திர ஆடிமாதத்தை அதிக ஆடிமாத (அதாவது போய் ஆடிமாத) மென்று தள்ளிவிட்டு சௌர மான ஆடிமாதத்தோடு சம்பந்தப்பட்டுள்ள, அதாவது ஆடிமீ 1உ பிரதமை முதல் தொடங்கி ஆடிமீ 29உ அமாவாசையோடு முடி வாகிற சாந்திரமாதத்தையே நிஜ (அதாவது உண்மையான) சாந்திர

அடிமாதமாகக் கொள்கிறார்கள். இதனால் சௌரமானமே நிலையுள்ள தென்பதும் சாந்திரமானம் நிலையில்லாததென்பதும் சௌரமானத்தோடு சேராத சாந்திரமானம் பொய்யானதே (அதிமாதமே)னச் சாந்திரமானிகளே உடன்பட்ட நடையினரென்பதும் வெளிப்படை. இதனாலேயே தனித்தியங்கும் நிலையுள்ளதாகிய சௌரமானத்திலேயே திருவிழாக்களும் நோன்புகளும் நடைபெற வேண்டுமெனவும் தனித்தியங்கும் நிலையற்றதாகிய, சௌரமானத்தைச் சார்ந்து நடை பெறுவதாயுள்ள சாந்திரமானப்படி அவை நடைபெற்றால் மக்களுக்குப் பல கேடுகள் விளையும் எனவும் சிவாகமங்களெல்லாம் பல இடங்களிலும் எடுத்தோதுகின்றன. சாந்திரமானக் கொள்கையார் தங்களுடைய வீடுகளில் மண முதலிய மங்களச் சடங்குகளை நடைமுறையில் சாந்திரமானப்படிச் செய்யாமல் சௌரமானப்படியே செய்துவருகிறார்கள்.

நிகழும் ஆண்டில் சாந்திரமானத்தில் அதிமாதம் வந்தபடியால் நவராத்திரி விழாவைச் சாந்திரமானிகளாகிய ஸ்மார்த்தப் பிராமணர்கள் புரட்டாசி மாதக் கடைசியில் தொடங்கி ஐப்பசி மாதத்தில் மகாநவமி விஜயதசமிகளைத் தமது பஞ்சாங்கங்களில் குறித்திருக்கின்றார்கள். அது முற்றிலும் தவறானதும் சிவாகமவிதிக்கு மாறானதுமாகும். காமிகாகமம், மகுடாகமம், அசிதாகமம், காரணாக விசயதசமிவிதி, அகோரசிவாசாரியார் மகாநவமி பூசாவிதி, நிச்வாசக காரிகை, முதலிய மூலாகமங்களும் பத்ததிகளும் நவராத்திரியானது சௌரமானப்படி புரட்டாசி மாதத்தில் மகாநவமியை முடிவாகக் கொண்டு நடைபெற வேண்டுமென்று விதித்திருக்கின்றன. அவ்விதி கொண்டு சைவப்பஞ்சாங்கத்தில் குறித்துள்ளபடி நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு ஆவணி௴ 27௳ சனிக்கிழமை நவராத்திரி விழா தொடங்கி புரட்டாசி௴ 4௳ ஞாயிறன்று மகாநவமியைக் கொள்வதே நலம்.

இதே மாதிரி சென்ற மூன்றாண்டுகளுக்கு முன் விபவ௵த்தில் மாறுபாடு தோன்றியபோது 1928-ம்௵ அக்டோபர்௴ 6, 7-ம் ௳களில் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் கூடிய பேரவையில் தேவகோட்டை சிவாகம பரிபாலன சங்க ஆகம பரிசோதகர் வியாகரண சிரோன்மணி திரு. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களும் சைவப் பஞ்சாங்க கணிதர் வித்வான் திரு. ஒ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் பல ஆகம கணித நூல்களிலிருந்து தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டி விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர் சஷ்டி உற்சவங்கள் சௌமானப்படிதான் நடக்கவேண்டு

மேன நிலை நாட்டினர்கள். அப்பேரவை யாரும் அதுதான் சரியெனத் தீர்மானங்கள் நிறைவேற்றினர்கள். அங்ஙனமே திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், திருக்குற்றாலம் முதலிய எல்லாக் கோவில்களிலும் அவ்விழாக்கள் சௌரமானப்படியே நடைபெற்றன. தரும புர ஆதீன கர்த்தரவர்களும் அதுவே பொருத்தமெனத் தங்களுடைய ஆளுகையிலுள்ள கோவில்களில் அவ்விழாக்களை நடத்தினர்கள். அந்த விபவ ஆண்டில் பாம்பே முதலிய மாகாண வாசிகள் தங்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் சௌரமானப்படியே நவராத்திரி விழாவைக் கொண்டாடியுள்ளார்கள். ஆதலின் நிகழும் ஆண்டிலும் சைவ மடாதிபதிகளும், சென்னை என்டௌமென்டு போர்டாரும், கோவில் கமிட்டியார்களும், தர்மகர்த்தர்களும், இந்து சமயப் பெருமக்களும் தங்கள் ஆளுகையிலுள்ள திருக்கோவில்களில் ஆவணிமூ 27உ சனிக்கிழமை நவராத்திரி விழா தோடங்கி புரட்டாசிமூ 4உ ஞாயிறன்று மகா நவமியும் 5உ திங்களன்று விசயதசமியும் நடைபெறுமாறு வேண்டும் ஏற்பாடுகள் செய்யும்படி அவர்களைத் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தாராகிய நாங்கள் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

M. V. NELLAIAPPA PILLAI,
For தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்.
20—7—1931.

சரஸ்வதி பூசையும் ஏடு தொடங்கலும்

புரட்டாசி மாதத்திலேயே செய்யவேண்டும்.

"கன்னியா ராசியில் சூரியனிருக்கும் பொழுது வருகிற வளர்பிறைக் காலமே தெய்வங்களை வழிபடுவதற்குரிய சிறப்புக் காலம். சூரியன் சிங்க ராசிக்கு வரும்பொழுது தன் வீட்டை அடைவதாகச் சொல்லப்படுகிறது. அவனுக்கு மேடம் உச்ச வீடென்றும், தனுசு நட்பு வீடென்றும் சொல்லப்படுகின்றன. மேட சிம்ம தனுசுக்கு ஒரு திரிகோணமென்பது பெயர். சூரியன் கன்னியில் நுழையும் காலமாகிய புரட்டாசி மாதமானது புவனத்திலுள்ள சக்திகளெல்லாம் விகாசத்தை அடைகின்ற காலம். அதாவது புரட்டாசி மாதத்தில் சூரிய கிரணங்களின் பயனும் பூமியிலுள்ள பலவித பௌதிக சக்திகளும் சம்பந்தப்படுவதினல் எல்லாப் பொருள்களும் விருத்தியடைய ஆரம்பிக்கின்றன.

"இவ்வுலகத்தில் பிரவர்த்தியை யுடையவர்களாய் காமிய கிருத்தியங்களை வகிக்கும் உயிர்கள் அவரவர்கள் விரும்புகிற காம பலன்களை யடைவதற்குக் கன்னியை யடைந்த சூரியன் மூலமாக மாய அவச் சின்னமாகிய சகுணேசுவரனை ஆராதிக்கிறார்கள். அந்த ஆராதனைக்குக் கன்னியும் சூரியனும் சேருகின்ற புரட்டாசி மாதமே பொருத்தமாகக் கருதப்பட்ட காலம். இந்த ஆராதனை புத்தியினால் அதாவது சிரத்தையோடு அநுட்டிக்கப்பட வேண்டியதாகையால் புத்திக்கு அதிட்டான சத்தியாகிய புதனுக்குக் கன்னியை ஆட்சிவீடாகவும் மூலத்திரிகோண வீடாகவும் சொல்லப்படுகிறது. இம்முறையாகவே ஞானத்தைக் குறிக்கின்ற தனுசில் சூரியனிருக்கும் பொழுது, அதாவது மார்கழி மாதமானது, விருப்பற்றுச் செய்கிற நிஷ்காமிய பூசைக்குரிய காலம் இந்த உபாசனை ஞானத்தினால் அதாவது வித்தையோடு அனுஷ்டிக்கப் படவேண்டிய தாகையால் ஞானத்துக்கு அதிட்டான சத்தியாகிய வியாழனுக்கு தனுசை ஆட்சி வீடாகவும், மூலத் திரிகோண வீடாகவும் சொல்லப்படுகிறது. தனுர் மாத பூசையும், ஆருத்திரா தரிசனமும், வைகுண்ட ஏகாதசியும், மார்கழி மாதத்தில் அனுஷ்டிக்கப் படுவதைக் காணலாம்.

"ஆகவே மேலே விவரித்தபடி ஆத்மாவுக்குப் பிரேரகனான சூரியன் புத்திக்குப் பிரேரகனான புதன் வீடாகிய கன்னியிலிருக்கும் காலம், அதாவது புரட்டாசி மாதமானது காமியமான ஆராதனைகளுக்குப் பொருத்தமான சமயமென்று கைக்கொள்ளப்பட்டிருக்கிறது."

இது 'பூரண சந்திரோதயம்' என்ற பத்திரிகையின் கி. பி. 1910, 1911-ல் வெளிவந்த முதற்றொகுதி பக்கங்கள் 259-268, 334-341 "மகாலய பக்ஷமும் நவராத்திரியும்" எனத் தலைப்பிட்டு திரு. P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் விவரமாக எழுதியிருப்பதிலிருந்து தொகுக்கப்பெற்றது. இதனால் நவராத்திரி விழா புரட்டாசி மாதத்தில்தான் நடைபெறவேண்டு மென்பதும் உயிருக்குத் தலைவனாகிய சூரியன் புத்திக்குத் தலைவனாகிய புதனுடைய ஆட்சி வீடாகவும் மூலத்திரிகோண வீடாகவுமுள்ள கன்னியாராசியில் இருக்கின்ற காலமாகிய புரட்டாசி மாதத்திலேயே பிள்ளைகளுக்கு ஏடு தொடங்குதல் விழா நடைபெற வேண்டுமென்பதும் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

———

தென்புலத்தார் யார்?

[ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது]

(௨௯௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, ஆரியர் தம் மூதாதைகளை வழிபடும் முறையும், தமிழர் தம் மூதாதைகளை வழிபடும் முறையுந் தம்மிற் பெரிதும் வேறுபடுவ வென்பது காட்டுதும். ஆரியர்க்கு மிகப் பழைய நூலாகிய இருக்கு, எசுர், சாமம், அதர்வம் முதலிய நான்கு வேதங்களிலேனும், அவற்றின்கட் சொல்லப்பட்ட வேள்விகள் இங்ஙனம் வேட்கற்பால என அவற்றின் முறைகளை விரித்து அவ் வேதங்களுக்கு உரைநூல்களாய் எழுந்த பிராமணங்களிலேனும் உயிர்களுக்கு ஊழ்வினையும் மறுபிறவிகளும் உண்டென்பது எட்டுணையுங் காணப்படவில்லை. அதனால், இறந்த உயிர்கள் தாஞ் செய் ஊழ்வினையால் மீளப் பிறக்கும் என்னும் உண்மையைப் பண்டைநாளில் இருந்த ஆரியர்கள் சிறிதும் உணர்ந்தவரல்ல ரென்பது நன்கு புலனாகும். ஆகவே, இறந்து இயமனுலகை யடைந்த தம் முன்னோர்கள் என்ஞான்றும் இன்பம் நுகர்ந்தபடியாய் ஆண்டிருப்பரெனவே அவர்கள் நம்பி வந்தார்கள். அவ்வாறு கொண்ட தமது நம்பிக்கைக்கு ஏற்பவே, இறந்துசென்ற தம் பெற்றோர்க்கும் மூதாதையர்க்குஞ், சோமச்சாறு பால் தேன் சுரா நெய் முதலியவைகளையுந் தாம் உணவாக அருந்திவந்த விலங்கின் இறைச்சிகளையும் படைத்து, நாடோறுஞ் செய்யப்படுவதாகிய 'பிதிர்யஞ்ஞத்'தையுந், திங்கடோறுஞ் செய்யப்படுவதாகிய 'பிண்டபிதிர்யஞ்ஞத்'தையும், ஆண்டுதோறுஞ் செய்யப்படுவதாகிய சிரார்த்தத்தையுஞ் செய்து,

"தூய புல்லின்மேல் அமர்ந்திருக்கும் மூதாதையரே, வந்து
　　எமக்கு உதவிசெய்க; இப்படையலை நுங்களுக்காகச்
　　செய்துவைத்தோம்; அவற்றை ஏற்றுக்கொள்க.
மிக மங்களமான விருப்பத்துடன் வந்து, சிறிதும் வருத்தமின்றி
　　எங்களுக்கு உடம்பின் நலத்தையுஞ் செல்வத்தையுந்
　　தந்திடுக!"

(இருக்கு, ௧0, ௧௫, ௪) என்று அவர்களை வேண்டிக் குறையிரந்து வந்தார்கள்.

இதுவேயுமன்றிப், பழைய ஆரியர்கள் இறந்துபோன தம்மவர்க்குச் செய்துபோந்த சவச்சடங்கிற்குந், தமிழ்நாட்டவர் செய்து போந்த சவச்சடங்கிற்கும் உள்ள மாறுபாடு பெரிய தொன்றாய்க் காணப்படுகின்றது. இறந்துபோன தம்மவர் உடம்பை ஆரியர் தீயிலிட்டுக் கொளுத்துதற்கு முன், முதலில் ஒரு வெள்ளாட்டையும் அதன்பின் ஓர் ஆவையும் (பசு மாட்டையுங்) கொன்று, அவற்றின் உடம்பிலிருந் தெடுத்த ஊனையுங் கொழுப்பையும் எலும்பின் மூளையையும் அப் பிணத்தின்மேல் முற்றும் பொதிந்து, அதன்பின் அதனைத் தீயிலிட்டுக் கொளுத்தி வந்தனரென்பது இருக்குவேத ௧0-ஆம் மண்டிலத்து ௧௬-ஆம் பதிகத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு செய்வதனால், நெருப்பானது இறந்தவன் உடம்பைச் சுடாதென்று பழைய ஆரியர் நம்பிவந்தனர். இங்ஙனம் பிறவுயிரின் ஊனைப் பொதிந்து தம்மவர் உடம்பை எரித்தால், அவருடம்பை நெருப்புச் சுடாதென்று நம்பின ஆரியர், இறந்து இயமனுலகு சென்ற தம்மவர் எப்போதும் அங்கிருந்தபடியே இன்பம் நுகர்ந்திருப்பரெனவும், அவர்பொருட்டுத் தாம் இங்கே படைக்கும் ஊனும் உணவும் இயமனுலகிலிருக்கும் அவர்கள்பாற் சென்று அவர்கட்கு உண்டியாகப் பயன்படுமெனவும் நம்பிவந்தது வியப்பன்று; ஏனென்றால், "அம்புலியில் ஔவையார் நூல் நூற்கின்றார்" என்றால், அதனை நம்புகின்றவர் கூட்டமும் இங்கு மிகுதியாய் இருக்கின்றதன்றோ?

மற்றுத், தமிழ்மக்களோ பண்டைக்காலந் தொட்டு "இறந்தவுயிர் மீளப் பிறக்கும்" என்னும் உண்மையைக் கண்டறிந்தவர் ஆவர். முற்பிறவிகளிற் செய்த வினைகள் ஒரு தொகுதியாய் 'ஊழ்' என நின்று பிற் பிறவிகளுக்குக் காரணமாதலை அவர்கள் நன்கறிந்து, அதனைப் "பால் வரைதெய்வம்" என வழங்கி வந்தமை, தமிழர்க்குரிய மிகப் பழைய நூலாகிய தோல்காப்பியத்தால் தெளியப்படும்.* இறந்த உயிர்கள் தாஞ்செய்து

* சொல், ௫௭.

தொகுத்த ஊழ்வினைக்குத் தக மறுபிறவிகளிற் செல்லும் இவ்வுண்மையைக் கண்டறிந்தமையால், பண்டைத் தமிழ்மக்கள் இறந்துபட்ட தம் பெற்றோர்க்கும் பாட்டன் பாட்டியர்க்கும் ஊணும் உடையும் படைத்து, அவற்றை ஆரியப் பார்ப்பனர்க்குக் கொடுத்தலாகிய 'சிரார்த்தத்'தைச் சிறிதுஞ் செய்தவரல்லர். இப் பிறவியில் நமக்குத் தாய்தந்தையரா யிருந்தவர் இதனை விடுத்து மறுபிறவியில் வேறு தாய்தந்தையர்க்குப் பிள்ளைகளாய்ப் பிறக்கின்றனரல்லரோ? இது நாலடியாரிற் போந்த,

" எனக்குத் தாயாகியாள் என்னை ஈங்கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானல் தாய்த்தாய்க் கொண்
டேகும் அளித்திவ் வுலகு "

என்னுஞ் செய்யுளாலும், ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனர் தாம் அருளிச்செய்த சிவஞானபோதச் செம்பொருணூலிற்,

" கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற்—கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றமனந்
தள்ள விழுங்கருவிற் றான் "

என்றறிவுறுத்தியவாற்றானும் நன்கு தெருட்டப்படுதல் காண்க. இதுவேயுமன்றி, வடநாட்டில் உள்ள இராமகாளி யென்னுஞ் சிறு பெண்பிள்ளையும், வேறு சிறார் சிலருஞ் சிலபல ஆண்டுகளுக்கு முன் தாம் பிறந்திருந்த பிறவிகளின் வரலாறுகளை நினைவு கூர்ந்து சொல்ல அவ்வரலாறுகள் அத்துணையும் உண்மையா யிருத்தலை அப் பக்கங்களில் உள்ளார் கண்கூடாய் அறிந்திருக்கின்றனர் அல்லரோ? இராமகாளி என்னும் அப்பெண் முற்பிறவியிற் பெற்ற மக்கள், அவளை நோக்கிச் செய்து பார்ப்பனர்க்குக் கொடுத்த ஊணும் உடையும் பிற பண்டங்களும் அவளுக்கு இப் பிறவியில் வந்து பயன்பட்டனவா? சிறிதும் இல்லையே. அதுபோலவே, இறந்துபட்ட தம் தாய்தந்தையரை நோக்கி நம்மனோர் இப்போது செய்யுஞ் சிரார்த்தமும், அதிற் பார்ப்பனர்க்கு அவர்கள் வழங்கும் பண்டங்களும் வேறு பிறவிகளிற் சென்று பிறந்திருக்கும் அவர்களுக்குச் சிறிதும்

பயன்படாவென்பது திண்ணம். இவ்வுண்மை கண்டே வேத நூற் புலமையிற் சிறந்த தயானந்தசரசுவதி சுவாமிகளும் தாம் இயற்றிய சத்தியார்த்தப் பிரகாசிகையின்கண், இறந்துபட்ட தம்மவரை நோக்கி நம்மனோர் சிரார்த்தஞ்செய்து பார்ப்பனர்க்கு உணவுப் பண்டங்களும் பிறவும் வழங்கல் பயனற்றதென வற் புறுத்தி வரைந்திருக்கின்றார். ஊழ்வினையும் அதனாற் பிறவிகள் அடுத்தடுத்து வருதலும் அறியாத பண்டையாரியர், தம் மூதாதை யர் என்றென்றும் இயமனுலகில் இருப்பரென நம்பினராகலின், அவர் அவ்வறியா நம்பிக்கையால் தம் மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்தது வாய்வதேயாம். மற்று, நம் பண்டைத் தமிழ்மக்களோ மிகப் பழைய நாளிலேயே ஊழ்வினையின் இயல் பும், அதனால் உயிர்கள் அடுத்தடுத்துப் பிறவிகளிற் சேறலும் நன்காராய்ந்து கண்டவராகலின், அவர்கள் தம் மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்திலர். மற்று, அவர் தமது பண் டைத் தமிழகத்திலிருந்து உலகமெங்கணும் நாகரிகத்தைப் பர வச்செய்த தம் முன்னோர்கள் அனைவரையுமே பொதுவாகத் 'தென்புலத்தார்' எனக்கொண்டு அவரை நினைவுகூர்ந்து நன்றிக் கடன்செலுத்தி வந்தனரென்பதே தேற்றமாம். இதுவே தென் புலத்தாரை ஓம்புதலாகு மென்று திருக்குறள் கூறிற்றென்க. அதனாலன்றே, சிராத்தங் கொடுக்கும் முறைகளை வடமொழிக் கண் உள்ள மிருதிநூல்கள் கூறுமாப்போற், பழைய தமிழ்நூல் கள் எவையுஞ் சிறிதுங் கூறுவாயின? 'சிரார்த்தம்,' 'திதி,' 'திவசம்' முதலிய சொற்கள் வடமொழியே யன்றித் தமிழ் மொழி யல்லாமையுந், தமிழர்க்குள் அவ் வீண்வழக்கம் இல்லா மையின் அதனைக் குறிக்குந் தமிழ்ச் சொல்லும் இல்லாமையும் யாங் கூறும் இவ் வுண்மைக்கு உறு பெருஞ்சான்றாமென்க.

அற்றேற், பிதுரர்கள் தென்புலத்தில் உள்ளவர்களாகக் கூறும் வழக்கு யாங்ஙனம் வந்தது? எப்போது வந்தது? என்று அறிய விரும்புவார்க்கு, அவ் வரலாற்றினையும் ஈண்டொரு சிறிது விளக்கிக் காட்டுதும். தேவர்கள் உறையுந் துறக்கவுலகம் வடகிழக்கில் உள்ளதெனவும், பிதுரர்கள் உறையும் பிதுரவுலகந்

தென்கிழக்கில் உள்ளதெனவுங் கொள்ளும் வழக்கு முதன் முதற் சதபதபிராமணத்திலே தான் காணப்படுகின்றது.*

இச் சதபதபிராமணம் இயற்றப்பட்ட காலத்தில், ஆரியர்கள் பெருந்தொகையினராகத் தென்றமிழ்நாட்டிற் குடிபுகுந்திலரேனுந், தென்றமிழ் நாட்டிலிருந்து வடநாடு சென்று போந்த தமிழ்மக்கள் வாயிலாகவும், வடநாட்டிலிருந்து தென்றமிழ் நாடு புகுந்து திரும்பிய தமிழ்மக்கள் வாயிலாகவுந் தமிழ்மக்களின் நாகரிக வரலாறுகளை அறிந்துகொண்ட பண்டை அவ்வாரியர்கள், தாம் இயற்றிய இந்நூலின்கண் தமிழர் வணங்கிய முழுமுதற்கடவுளையும், அவர்தம் வழக்கவொழுக்கங்களையுஞ் சிறிது சிறிதாகத் தழுவி யுரைக்கலாயின ரென்பது ஆராய்ச்சியாற் புலனுகின்றது. தெற்கிருந்து வடநாடு தொடுத்து இவ்விந்தியநாடு முற்றும் அஞ்ஞான்று தமிழ்மக்களே நிரப்பியிருந்தன ரென்பது இஞ்ஞான்றை வரலாற்று நூலாசிரியர் நடுநின்று ஆராய்ந்தெழுதியிருக்கும் நூல்களால் தெற்றென விளங்கா நிற்கும். †

பாண்டவர் ஐவர்க்குங் குருகுலமன்னர் நூற்றுவர்க்கும் பதினெட்டு நாள் வரையிற் பெரும்போர் நடந்த ஞான்று, பாண்டவர்க்கு நண்பனுந் தென்றமிழ்நாட்டுச் சேரமன்னனுமான உதியஞ்சேரலாதன் என்பான் அப் பாண்டவர் படைக்கு அப் பதினெட்டு நாளும் அறச்சோறு வழங்கிப், ‘பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்’ என அக் காலத்துச் சான்றோர்களால் உயர்த்துப் பேசப்பட்டமை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய “மண்டிணிந்த நிலனும்” என்னும் புறநானூற்று முதற் செய்யுளால் நன்கறியக் கிடக்கின்றதன்றோ? இவ்வுதியஞ் சேரலாதன் மகனுகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பதிற்றுப்

*சதபதபிராமணம், ௬-ஆம்கண்டம், ௬-ஆம்அத்தி, உ-ஆம்பிராமணம், ௩.
„ ௧௨- „ எ- „ ௩- „ ௯.
„ ௧௩- „ அ- „ ௧- „ ௫.

† Read Prof. Rhys Davids' Buddhist India, pp. 44, 45, 56, 116, 119, 149, 151, 156, 211, and the chapter VIII of Ragozin's Vedic India.

பத்தின்கண் மூன்றும்பத்திற் புகழ்ந்து பாடிய கோதமனார் என்னும் நல்லிசைப் புலவரே பாண்டவரில் முதல்வனான தரும புத்திரனையும் புகழ்ந்து பாடிய "விழுக்கடிப்பு அறைந்த" என்னுஞ் செய்யுள் ஒன்றும் 'புறநானூற்'றிற் காணப்படுகின்றது. இங்ஙனமே வான்மீகியார், மார்க்கண்டேயனார் என்னும் நல்லிசைப் புலவர்கள் பாடிய செய்யுட்களும் 'புறநானூற்'றின்கட் காணப்படுகின்றன (௩௫௮, ௩௬௫). "இனித் தமிழ்ச்செய்யுட் கண்ணும், இறையனாரும் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாருங் கௌதமனாரும் போல்வார் செய்தன தலை" யாய ஒத்து என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் புறத்திணையியல், ௨௦-ஆஞ் சூத்திரவுரையிற் கூறுதல்கொண்டு, மேற்கூறிய முரஞ்சியூர் முடிநாகராயரும், கோதமனாரும், வான்மீகியாரும், மார்க்கண்டேயனாரும் எல்லாம் பாண்டவர் காலத்தவரென்பது உய்த்துணரக் கிடக்கின்றதன்றோ? ஆகவே, வடக்கே பாண்டவ அரசர் இருந்த மிகப் பழைய காலத்தே, இத்தென்னாட்டின்கண் மட்டுமேயன்றி, அவ் வடநாடெங்கணுந் தமிழ் மக்களுந் தமிழ் மன்னர்களுந் தமிழ்ச் சான்றோர்களும் நிறைந்திருந்தனரென்பது பண்டைத் தமிழ்ச் செய்யுள் வரலாறுகளானும் நன்கறியக் கிடக்கின்றமை காண்க.

இனிப், பழைய நாளில் வடக்கே குடிபுகுந்த ஆரியர் தமிழ் மொழியின் இயல்பையும் அமைப்பையும் நோக்கியே தமது ஆரிய மொழியினைச் சீர்திருத்தி, ஏராளமான தமிழ்ச் சொற்களையுந் தம்முடைய ஆரிய நூல்களிற் புகுத்தின ரென்னும் உண்மை இப்போது வடமொழி வல்ல மேல் நாட்டாசிரியர்களாலே நன்கெடுத்துக் காட்டப்பட்டு வருகின்றது.† அரை நூற்றாண்டுக்கு முன்னமே கால்டுவெல் (Dr. Caldwell) என்னும் ஆசிரியர் தாம் அரிதாராய்ந் தெழுதிய 'திராவிட மொழிகளின் இலக்கண ஆராய்ச்சி' என்னும் விழுமிய நூலில், தமிழ் மொழி இவ்விந்தியா நாடெங்கணும் அதற்கப்பாலும் பரவியிருந்த உண்மையினை எவரானும் மறுக்க இயலாத அரியபெரிய

† See for instance 'The Cambridge History of Ancient India,' pp. 41-42.

சான்றுகளால் நன்கு நிறுவியிருக்கின்ருர். அவரெடுத்துக் காட்டிய பல சான்றுகளுள், நாவிற்பிறக்கும் மெய்யெழுத்துக் கள் சில தமிழ்மொழி யினத்திற்கே உரியனவென்றுந், தமிழ ருடன் வந்து கலவாதமுன் அவ்வெழுத்துக்களை யுடையரல்லாத ஆரியர், அவருடன் வந்து கலந்த பின்னரே அவற்றை யெடுத் துத் தம் மொழியிற் சேர்த்துக் கொண்டன ரென்றுந் தெள்ளி தின் விளக்கிக்காட்டி யிருக்கின்ருர்.*

இங்ஙனமெல்லாம் மேனுட்டாசிரியர் நடுநின்று மிக ஆழ்ந் தாராய்ந் துரைக்கும் உரை, இச் சதபதபிராமண ஆராய்ச்சியினு லும் மேலும் உரம் பெற்று உண்மையாக விளங்குதலை ஈண் டொரு சிறிது காட்டுதும். இருக்கு, எசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு நூல்களில் எங்குங் காணப்படாத 'மகா தேவன்' என்னுஞ் சிவபிரான் றிருப்பெயர் இச்சதபத பிராம ணத்தின் ஐந்தாங் காண்டத்திலேதான் (௩, ௫) முதன் முதற் காணப்படுகின்றது. இதுகொண்டு, நாகரிகத்திற் சிறந்த தமிழ் முதுமக்கள் வழிபட்டுவந்த சிவபிரானே எல்லாத் தேவர்க்கும் பெரியோன் என்னும் உணர்ச்சி இந்நூல் எழுதிய காலையிற்றான் ஆரியர்க்கு முதன்முதல் உண்டாயிற்றென்பது நன்கு புலனும். தாம் வணங்கி வேண்டிவந்த தேவர்களெல்லாருந் தம்போற் பிறந்து இறக்கும் மக்களுயிர்களே யல்லாமற், பிறந்திறவாச் சிவத் தோடு ஒத்தவராகா ரென்னும் மெய்யுணர்வு சதபத பிராமண காலத் தாரியர்க்கு உண்டாயது, அஞ்ஞான்று அவர் தமிழ் மேன்மக்களுக்கு அடங்கி அவர்க்கு அணுக்கராய் ஒழுகி, அவர் பால் அம் மெய்யுணர்வினைப் பெற்றமையினுலேயாம். இவ் வுண்மை இச் சதபத பிராமணத்தின் இறுதிக்கண் உளதாகிய பிருகதாரணியகோப நிடதத்தை உற்று நோக்குதலானும் நன்கு விளங்கும். 'கார்க்கிய பாலாகி' என்னும் ஆரியப் பார்ப்பனன் 'அஜாதசத்துரு' என்னுந் தமிழ் மன்னனை யடுத்து அவனுற் சிவத்தினியல்பு அறிவுறுத்தப்பட்ட வரலாறு, இப்பிருகதார ணிய கோப நிடதத்தின் கண்ணேயே விளக்கமாகச் சொல்லப்

* Dr. Caldwell's 'A Comparative Grammar of the Dravidian Languages,' 3rd edition, pp. 147-151.


பட்டிருக்கின்றது (உ, ச). தமிழ அரசர்களை யெல்லாம் அஞ்ஞான்றிருந்த ஆரியர் 'க்ஷத்திரியர்' என்று வழங்கின வரலாறுகளை எம்முடைய வேளாளர் நாகரிகம் என்னும் நாலினுஞ் சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் என்னும் நாலினுஞ் சான்றுகளுடன் விளக்கிக்காட்டி யிருக்கின்றேம்.

இன்னும், பண்டைத் தமிழர்கள் முழுமுதற்கடவுளை அப்பன் வடிவிற் சிவபிரானாக வைத்து வணங்கியது போலவே, அதனை அருள் நிலையான அம்மை வடிவில் வைத்துத் திருமாலாகவும் வணங்கி வந்தனர். ஆகவே, வடநாட்டின்கண் இருந்த தமிழரோடு கலந்து அவரது சிவ வழிபாட்டைத் தெரிந்துகொண்டு அதனைப் பாராட்டிய சதபதபிராமண காலத்தாரியர், அவர் செய்துபோந்த திருமால் வழிபாட்டையுந் தெரிந்து அதனையும் இந்நாலின் பதினன்காங் காண்டத்திற் சிறப்பித்து பேசியிருக்கின்றார். "விஷ்ணு தேவர்களிற் சிறந்தோன்" என்னுஞ் சொற்றொடர் இதன்கட் காணப்படுகின்றது. 'விஷ்ணு' என்னுஞ் சொல் இருக்கு வேதத்திற் காணப்படினும் ஆண்டது பகலவனையே குறிக்கின்றது. மற்றுச், சதபத பிராமணத்திலோ விஷ்ணு ஒரு தனித் தெய்வமாகவுந், தேவர்க்குள் நிகழ்ந்தபோரில் வெற்றி பெற்றுச் சிறந்த தலைமை யுடையதாகவுஞ் சொல்லப்படுகின்றது. இவ்வாறு அத் தெய்வத்திற்கு ஆரியர் தலைமை கொடுக்கத் துவங்கியது, அவர் தமிழரது திருமால் வணக்கத்தைத் தெரிந்து கொண்ட பின்னரேயா மென்பது அறியற்பாற்று.

(தொடரும்.)

பிரசோற்பத்தி வருட
சைவப் பஞ்சாங்க அச்சுப்பிழை

கிரகணம் பக்கம் 19-ல் புரட்டாசி 10உக்கு (26-9-31) என்றும், பங்குனி 20உ என்றது 10உ என்றும் (2-4-32) என்றது (22-3-32) என்றும் இருத்தல் வேண்டும். 32, 44-ம் பக்கங்களில் அவ்வத் தேதிகளில் சரியாய்க் குறிக்கப்பட்டிருக்கிறது; 19-ம் பக்கத்தில் தனியாக எடுத்தெழுதியதில் நேர்ந்த பிழை அச்சுப் பிழையே யன்றிக் கணிதருடைய பிழையன்று.



அ. சோமசுந்தரக் கடவுள் பிட்டுக்கு மண்சுமந்தது.

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ	மெய்கண்டான் யாண்டு-எ௱அ ஆவணித்திங்கள் 1931ளு ஆகஸ்டுமூ—செப்டம்பர்மூ	பரல் அ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் தண்புக லூரனே.

தத்துவந்தலை=மண்முதல் நாத மீறாகிய ௩௬ தத்துவங்களினது உச்சி

கண்டறிவாரிலை=பார்த்து அறிகின்றவர்கள் (உலகில்) இல்லை.

தத்துவந்தலை கண்டவர்=தத்துவங்களினது உச்சியைக் கண்டவர்

கண்டிலர்=(இறைவனைத்) தாங்கள் வேறு அவன் வேறாகப் பார்க்க மாட்டார்கள். (அவனோ டிரண்டறக் கலந்து நின்று அவனைத் தங்கள் மெய்யுணர்வில் அறிவார்கள் என்றபடி)

தத்துவந்தலை நின்றவர்க்கு அல்லது=தத்துவங்களினது உச்சியில் நின்று பார்க்கிற மெய்யுணர்வு உடையார்க்கு அல்லாமல்

தண்புகலூரன்=குளிர்ச்சி பொருந்திய திருப்புகலூரில் திருமேனி கொண்டருளி யிருக்கும் இறைவன்

தத்துவன் அலன் = உண்மையியலில் விளங்கமாட்டான்

விளக்கவுரை

தத்துவந்தலை என்பது ௩௬ தத்துவங்களின் உச்சி; அதாவது நாத தத்துவத்திற்கு மேலிருக்கிற அறிவு வெளி (ஞானகாசம்). இந்த அறிவு வெளியில் இறைவன் நடஞ் செய்கின்றான்.

கண்டறிவாரில்லை என்பது தத்துவங்களைக் கடந்து அவைகளுக்கு மேல் அறிவு வெளியில் உண்மை இயலில் விளங்குகின்ற இறைவனைத் தங்கள் மெய்யுணர்வில் (சுவானுபூதி உணர்வில்) உணர்கின்றவர்களில்லை; அவ்வாறு உணர்கின்றவர்கள் அரியர்கள் என்றபடி.

தத்துவந் தலைநின்றவர் கண்டிலர் என்பது அவ்வாறு ௩௬ தத்துவங்களையுங் கடந்து அப்பால் நிற்கின்ற மெய்யுணர் வுடையவர்கள் இறைவனோடொற்றித்து நின்று அத்துவிதமாய் உணர்த லல்லது, தாங்கள் வேறு இறைவன் வேறாய் நின்று இரண்டு பொருளாக அறிவதில்லை என்றபடி. இதே கருத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகள் "நின்னை யொப்பார் நின்னைக்காணும் படித்தன்று நின்பெருமை" என்று தனித் திருவிருத்தத்திற் கூறியிருத்தல் காண்க.

தத்துவந்தலை நின்றவர்க்கல்லது தண்புகலூரன் தத்துவனலன்: ௩௬ தத்துவங்களையுங் கடந்து, அப்பால் இறைவனுடன் இரண்டற ஒன்றுபட்டு நிற்கும் மெய்யுணர்வு உடையார்களுக்கே அவர்களுடைய உணர்வில் இறைவனுடைய உண்மையியல் விளங்கித் தோன்றும்; எனையோர்க்கு விளங்கித் தோன்றாது. தத்துவங்கள் நீங்கும் வரை கருவி அறிவு முற்றிலும் நீங்காதாதலின், மருள் முற்றிலும் நீங்காது என்பது கருத்து.

இந்தத் தேவாரக் கருத்தைத் திருமூலர் தாம் அருளிச்செய்த திருமந்திரத்தில் (2271)

"ஆறாறுக் கப்பா லறிவா ரறிபவர்
ஆறாறுக் கப்பா லருளார் பெறுபவர்
ஆறாறுக் கப்பா லறிவா மவர்கட்கே
ஆறாறுக் கப்பா லரனினி தாமே."

என்று கூறியருளினர்.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

தென்புலத்தார் யார்?

[ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது]

(௩௩௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னும், இதன் பத்தாங் காண்டத்தில்வேதங்கள் மூன்று (த்ரயீவித்யா) என்றே நுவலப்படுகின்றன. இதனை உற்று நோக்குங்காற், சதபதபிராமணம் எழுதப்பட்ட காலத்தில் ஆரியவேதங்கள் மூன்றே யிருந்தன வென்பதும், இதற்குப் பிற்பட்ட காலத்திலேதான் ஆரியர் அதர்வத்தையுஞ் சேர்த்து அவற்றை நான்காக்கின ரென்பதும், இவர் இங்ஙனந் தம் ஆரிய வேதத்தை நான்காக்கியது தமிழர்கள் தமது வேதத்தை அஃது அறம் பொருள் இன்பம் வீடு நுதலுதல்பற்றி நான்கு கூறாக வழங்கியது கண்டேயா மென்பதும் இனிது விளங்காநிற்கும்.

இன்னும், இந்நூலின் பதினொன்காங் காண்டத்திலே 'சூத்திரம்' என்னுஞ் சொல் முதன்முதற் காணப்படுகின்றது. இதற்கு முற்பட்ட இருக்கு முதலான பழைய ஆரியநூல்களில் யாண்டும் இச்சொற் காணப்படுகின்றிலது. பண்டை யாரிய நூல்களில் ஓரிடத்துங் காணப்படாத இச்சொல், முதன்முதல் இச் சதபதபிராமணத்தின்கட் காணப்படுதலை ஆராய்ந்துபார்க்குங்கால், இந்நூல் இயற்றியகாலத் திருந்த ஆரியர் தமிழரொடு கலந்து, அவர்தம் நூலில் வழங்கிய 'சூத்திரம்' என்னுஞ் சொல்லை யெடுத்து, இதன்கண் வழங்கிக்கொண்டா ரென்பது தெற்றென விளங்காநிற்கும். இச் சதபதபிராமணம் இயற்றப் படுதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிய தாகிய தோல்காப்பியச் செந்தமிழ் நூலின்கண், *

"மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித்

* தொல்காப்பியநூலின் காலம் இற்றைக்கு ௩௫௦௦-ஆண்டுகளுக்கு முற்பட்டதாதல் எமது 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் நூலில் விரித்து விளக்கப்பட் டிருக்கின்றது.

துளக்க லாகாத் துணைமை யெய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரந் தியல்பென யாத்தனர் புலவர்'' (மரபியல், ௱)

என்று போந்த சூத்திரத்தாற் 'சூத்திரம்' என்னுஞ் சொல்லும் அதனால் உணர்த்தப்படும் பாவின் இலக்கணமும் நன்கு அறிவுறுத்தப்பட்டமை காண்க. இவ்வாற்றாற் 'சூத்திரம்' என்பது தனித்தமிழ்ச் சொல்லேயாதலும், அதனைத் தமிழ்மக்களிடமிருந் தெடுத்தே சதபதபிராமணகாலத் தாரியர் வழங்கிக் கொண்டாராதலும் ஐயுறவுக்கு இடனின்றி நிறுவப்படுதல் காண்க.

இன்னுந், தெற்கே தமிழ்நாட்டின் ஒரு பெரும்பகுதியாகிய குமரிநாடு கடல்கொண்டழிந்த வரலாறு, இச் சதபதபிராமணத்தின் முதற்காண்டத்தின்கண் (அ, க, க) விரிவாகச் சொல்லப்பட் டிருத்தலால், இந்நூல் அக் கடல்கோளுக்குப் பின்னர் இயற்றப்பட்டமையும், இதனை அக்காலத்து ஆரியர் வடநாடு போந்த தமிழர்பாற் கேட்டுணர்ந்து அதன்கட் குறிப்பிட்டமையும் நன்கு பெறப்படும்.

அதுவேயுமன்றிப், பாண்டவர் ஐவர் காலத்திற்குப்பின் இச் சதபதபிராமணம் இயற்றப்பட்ட தென்பதற்கு, அசுவமேதஞ் செய்து கொலைப் பாவத்தைக் கழுவிக்கொண்டவராகச் சொல்லப்படும் 'ஜநமேஜய,' மன்னனும் அவ னுடன்பிறந்தாரான 'பீமசேனன்,' 'உக்கிரசேனன்,' 'சுருதசேனன்' என்னும் மூவரும் இதன் ௧௩-ஆங் காண்டத்திற் சொல்லப்பட் டிருத்தலே உறபெருஞ் சான்றும். இம் மன்னர் நால்வரும் பாண்டவ அரசரின் வழித் தோன்றல்கள் ஆதல், பாரத கதையினை யுணர்ந்தார் எவரும் நன்கறிவர். எனவே, தலைச்சங்கத் திருந்து தமிழாராய்ந்தவரும், பாண்டவர் காலத்தவனான பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனுக்கு நண்பரும் ஆன முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் பெருமான் காலத்திற்குச் சிறிதேறக்குறைய ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னரே 'சதபதபிராமணம்' இயற்றப்பட்டதாகல் வேண்டுமென் றுணர்ந்துகொள்க.

மேலுஞ், சதபதபிராமணத்திற் குறிக்கப்பட்ட தமிழ்நாட்டுக் கடல்கோளுக்கு முன் 'பஃறுளி' யாற்றங்கரைப் பக்கத்தே பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் வேந்தர்பெருமான் அரசு செலுத்தின வரலாறு, மேலெடுத்துக் காட்டின "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னும் புறநானூற்றுச் செய்யுளால் இனிது விளங்குதலின், சதபதபிராமணகாலம் இப்பண்டைப் பாண்டிவேந்தன் காலத்திற்கும் பிற்பட்டதாதல் தெற்றெனப் புலனும். அத்துணைப் பழைய காலத்திருந்த இப் பாண்டிவேந்தன் சிவபிரான் றிருவடிக்கண் மிக்க அன்புடையனு யிருந்தனனென்பது,

> "பணியியரத்தை நின்குடையே முனிவர்
> முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே"

என்று காரிகிழார் என்னும் புலவர் பெருமான் அவனைச் சிறப்த்துப் பாடிய புறநானூற்றுச் செய்யுளால் (௬) நன்குணரப்படும். சிவநேயத்திற் சிறந்த இப் பாண்டிய மன்னனை அக்காலத்திருந்த ஆரியக் குருமார் தம் வயப்படுத்தி, அவன் பல யாகங்களையுஞ் செய்யும்படித் தூண்டிவிட்டன ரென்பதனுல், அவ்வாரியக் குருமார் அத்துணைப் பழைய நாளிலேயே நம் தமிழ்நாடு புகுந்து நம் அரசர்களையுஞ் செல்வர்களையுந் தம் வயப்படுத்தித் தமது வேள்விச் சடங்குக்கு அவர்களை உடன்படுத்திக் கொண்டமை நன்கு புலனுகின்றதன்றோ? இவ்வாறு அவ்வேந்தன் ஆரியக் குருமார் சூழலில் அகப்பட்டுப் பல வேள்விகளைச் செய்ததனுலேயே'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி' எனப் பெயர் வழங்கப்பெற்ருன்.

இங்ஙனமாக ஆரியக் குருமார் மிகப் பழைய நாளிலேயே வடநாட்டி லிருந்த தமிழ் மன்னர்களான பாண்டவர் முதலாயினுரைத் தம் வயப்படுத்திக்கொண்டாற் போலவே, அவர் தென்றமிழ்நாடு புகுந்து இங்கிருந்த வேந்தர்களையுந் தம் வயப்படுத்திக்கொண்டார். இங்ஙனம், இவர் தமிழ் வேந்தர்களைத் தம் வயப்படுத்திக் கொண்டாலும், அவர்க்குரிய கடவுள் வழிபாடும் ஏனை நல்லொழுக்க முறைகளும், மிக விழுமியவாய் இருந்த

மையின், அவைதம்மை அழிக்கமாட்டாராய்ச், சில திரிவுபாடு களுடன் அவற்றைத் தாமுங் கைக்கொண்டு, தம் நூல்களில் வரைந்து வைத்து ஒழுகலாயினர். இவ்வாறவர் தமிழர்பா லிருந்தெடுத்துத் தாம் கைக்கொண்டொழுகிய ஒழுகலாறுகள் பலவற்றுள், 'தென்புலத்தார்' கடனும் ஒன்றாகும்.

இனி, இச் சதபதபிராமண காலத்திற்கு முற்பட்டவனாகிய 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி'மேல் நெட்டிமையார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னுஞ் செய்யுளில், தென் புலத்தார்க்கு நன்றிக்கடன் செலுத்துந் தமிழரின் ஒழுகலாறு நுவலப்பட் டிருத்தலின் இச் சதபதபிராமணம் இயற்றப்படு தற்கு முன்னமே நம் பண்டைத் தமிழ்மக்கள் தெற்கே குமரி நாட்டிலிருந்த தம் மூதாதையரை ஒருங்கே நினைந்து இறைவனை வழிபட்டு வந்தமை தெற்றென விளங்காநிற்கும். இங்ஙனந் தெற்கிருந்த தம் மூதாதையர்க்கு நன்றிக்கடன் செலுத்திவந்த தமிழரது ஒழுகலாறு, இருக்கு, எசுர் முதலான மிகப்பழைய ஆரிய நூல்களுள் யாண்டும் நுவலப்படாமையின், அக்காலத்து ஆரியர்க்கு அது தெரியாதென்பதூஉம், மற்று அந் நூல்களுக் குப் பிற்பட்டு வந்த சதபதபிராமணத்தில் அவ் வொழுகலாறு நுவலப்பட் டிருத்தலின் அப் பிற்காலத் தாரியர்க்கே அது தெரியலாயிற் றென்பதூஉம் ஐயுறவுக்கிடனின்றி நாட்டப் பட்டமை காண்க.

இனி, ஆரியர் இவ்விந்திய நாட்டிற்புகுந்த காலந்தொட்டே, தமக்கு ஊண் கொடுத்து உடை கொடுத்து இருக்க உறையுள் கொடுத்துப் பல வகையால் உதவியாற்றி வந்த தமிழ்மக்களைத் 'தஸ்யுக்கள்,' 'தாசர்கள்,' 'இலிங்கத்தை வணங்குபவர்கள்,' 'வேள்விச் சடங்கு செய்யாதவர்கள்,' 'அசுரர்கள்,' 'இராக்கதர் கள்' என்று இகழ்ந்து வந்தமையோடு, அவர்களைச் சுவடற அழித்துவிட வேண்டுமென்றுந், தாம் வணங்கிய 'இந்திரன்,' 'வருணன்' முதலான தேவர்களை ஓயாமல் வேண்டிவந் திருக் கின்றார்கள். இக்காலத்துந் தம்மைச் 'சாமி, சாமி' என்று பல

வகையாற் கொண்டாடித், தமக்கு வேண்டிய உதவிகளை யெல் லாஞ் செய்துவருந் தமிழ் மக்களை, அவ்வினத்தவர் 'சூத்திரர்' என்னும் மிக இழிவான சொல்லால் வழங்கிவருதல் எவரும் அறிந்ததன்றோ? இங்ஙனம் பண்டைநாள்தொட்டு இன்று காறும் ஆரியரும் அவர் குழுவிற்சேர்ந்து அவர் வண்ணமாயினுருந் தமிழரை நஞ்சாகப் பகைத்து வரும் வரலாறுகளை வேளாளர் நாகரிகம், சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் என்னும் நூல்களில் விரித்து விளக்கிக்காட்டி யிருக்கின்றேம். இவ்வாறு தமிழர்பால் ஆரியர்க்கு இயற்கையேயுள்ள நச்சுப்பகைமை, இச் சதபதபிராமண காலத்து ஆரியர்மாட்டுங் காணப்படுகின்றது. இவ் ஆரியர்கள் தாம் தேவரெனவுந், தாம் உறையும் வடதிசைக்கண் மட்டுமே தேவர்கள் உறையுந் துறக்க வுலகம் உண்டெனவுந், தாம் மட்டுமே அத் துறக்கவுலகு செல்லத், தம் மவரல்லாத தமிழர்களாகிய அசுரர்களெல்லாந் தெற்கேயுள்ள கூற்றுவனுலகு செல்வரெனவும் வரைந்திருக்கின்றனர்; அது வருமாறு:—

சதபதபிராமணம், கஉ-ஆங் காண்டம், எ-ஆம் அத்தியாயம், ௩-ஆம் பிராமணம், எ.

"இரண்டு வேதிகள் இருக்கின்றன, 'தேவருலகும் பிதருலகும் என ஈருலகுகள் உண்டு' என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். ஒன்று (ஒருவேதி) வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் இருக்கின்றன; ஏன் என்றால், தேவர்களுலகு வடக்கிலும் பிதுரர்களுலகு தெற்கிலும் உள்ளன; வடபால் உள்ளதனால் அவன் தேவருலகைப் பெறுகின்றான், தென்பால் உள்ளதனால் அவன் பிதுரருலகைப் பெறுகின்றான்."

க௩-ஆங் காண்டம், அ-ஆம் அத்தியாயம், க-ஆம் பிராமணம், ரு

"தேவர்கள் தமக்கு எதிரிகளும் பகைவருமான அசுரர்களை அவர்களிருந்த இடங்களினின்றுந் துரத்திவிட்டார்கள்; இருக்க இடமில்லாமையால் அவர்கள் வெல்லப்பட்டார்கள். ஆனதனாற்றான், தேவரினத்தைச் சேர்ந்த மக்கள் தாம் புதைக்கும் இடங்களை நாற்கோண வடிவினதாக அமைக்கின்றனர்; மற்று, அசுர

இனத்தைச் சேர்ந்த கீழ்நாட்டவரும் (சூத்திரரும்) பிறருமோ தேவர்களால் தாம் தம் இருப்பிடங்களினின்றுந் துரத்தப்பட்டவர்களாதலால், அவர்றை வட்ட வடிவினதாக அமைக்கின்றனர். அவன் அவ்விடத்தைக் கிழக்கிற்குந் தெற்கிற்கும் இடையிலே தங்குமாறு அமைத்தான்; ஏனென்றால், பிதுரர் உலகிற்குச் செலுத்தும் வாயில் மெய்யாகவே அவ்விடத்திலேதான் இருக்கின்றது.''

இவ்வாறிவர்கள் வரைந்திருப்பது கொண்டு, வடபால் உள்ளதுதான் தேவர்கள் உறையுந் துறக்கவுலகமாம் என்பதுந், தென்பால் உள்ளதுதான் பிதுரர்கள் உறையும் நரகவுலகமாமென்பதும், ஆரியராகிய தாமெல்லாந் துறக்கவுலகு செல்லத் தமிழராகிய பிறரெல்லாந் தெற்கேயுள்ள நரகவுலகே செல்வரென்பதும் இவ் வாரியர்க்குக் கருத்தாதல் நன்கறியப்படும். எனவே, தமிழர்க்கு நரகப்பேறல்லது வேறில்லையென்றும், பிதுருலகென்பது நரகவுலகே யன்றிப் பிறிதன்றென்றும் இவ்வாரியர் கொண்டமை நினைவில் இருத்திக்கொள்க. இங்ஙனந் தமிழர்மேல் வைத்த நச்சுப்பகைமை காரணமாகவே, தெற்கே நாகரிக முடையராயிருந்து இறந்துபட்ட தமிழர் தம் மூதாதைகளுக்குரிய தென்றிசையை, உயிரைக் கொள்ளை கொள்ளுங் கூற்றுவ னுலகாகவும் அவர்தம் பிதுருறையும் அவ் வுலகை நரகவுலகாகவுஞ் சதபதபிராமணகாலத் தாரியர் எழுதிவைத்தனர். அவர் இத்துணை இழிவு படுத்தி எழுதிவைத்ததனை ஆராய்ந்து பார்க்கமாட்டாத இஞ்ஞான்றைத் தமிழர்களும் பிதுருலகு தென்றிசைக்கண் உளதென்னும் அவருரையைத் தழுவி, அதற்கியைய ஒழுகலாயினர் கண்டீர்! இங்ஙனந் தென்றிசைக்கண் உறைவார் 'பிதுரர்' என்று கூறிய ஆரியர்க்கு, அவரை அயன் படைப்பான தேவர் என்று மாற்றிச் செல்வதற்கு மனம் ஒருப்படுமோ? ஒருப்படாதன்றே. ஆனதனாற்றான், சதபதபிராமணத்தின்கண் யாண்டும் பிதுரர் 'தேவர்' குழுவிற் சேர்த்துச் சொல்லப்படாமல், தேவர்களுறையும் வடதிசைக்கு எதிரான தென்றிசைக்கட் கூற்றுவனுலகில் உறைபவராகச் சொல்லப்பட்டன ரென்க. ஆகவே, பரிமேலழகியார்

உரைத்தவுரை ஆரியவேத நூலுக்கும், அதற்குரையா யெழுந்த சதபதபிராமணத்திற்கும் முற்றும் மாறுதல் கண்டுகொள்க.

அற்றேற், பரிமேலழகியார் 'பிதரரை' அயன்படைப்பான கடவுட்சாதி யென்றது எங்கிருந் தெடுத்ததெனிற் கூறுதும். வடமொழியில் இஞ்ஞான்று காணப்படும் புராணங்களிற் பெரும்பாலன, தென்னாட்டின்கண் உள்ள சைவர் வைணவர் களால் ஆக்கப்பட்டனவாகும். இச் சைவ வைணவரிற் பெரும் பாலார் பண்டைத் தமிழரின் வழிவந்தவரே யல்லாமல் ஆரிய ரின் வழிவந்தவ ரல்லர். என்றாலும், ஆரியர் இந்நாட்டிற் குடி புகுந்து இங்குள்ள அரசர்களையுஞ் செல்வர்களையுந் தம் வயப் படுத்தித் தம்முடைய ஆட்சியையும் முதன்மையையும் நாட்ட வே, அவருடைய சிறுதெய்வ வணக்க வெறியாட்டு வேள்விகட் குச் சிறிதும் உடம்படாத சைவ வைணவர், ஆரியக் கோட் பாட்டை மறுத்துத் தாம் வணங்கிப் போந்த சிவபிரான் வழி பாட்டையுந் திருமால் வழிபாட்டையும் நிலைநிறுத்துதற்கு, ஆரியர் கொணர்ந்த வடமொழியையே கருவியாய்க்கொண்டு புராணங்களும் ஆகமங்களும் இயற்றினர். இங்கு வந்த ஆரியர் தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றுந், தாம் வழங்கிய மொழி யைத் தேவமொழி யென்றுஞ் சொல்லி இங்குள்ள அரசர்களை யும் பிறரையும் நம்பச் செய்து, இங்கு எவர்க்கு மில்லாத ஒரு பெருஞ் சிறப்பையும் ஒரு பெரும் பாராட்டையுந் தமக்கு உண்டாக்கிக் கொண்டமையினாலே, அவர்களுடைய கோட்பாடுகளை மறுத்துத் தம்முடைய கோட்பாடுகளை நிலை நிறுத்த வேண்டிய இன்றியமையாமையினையும், அங்ஙனஞ் செய்வது தமிழிலன்றி அவர் சிறந்தெடுத்துப் பாராட்ட வைத்த தேவமொழி யென்னும் வடமொழியின்கட் செய்ய வேண் டிய இன்றியமையாமையினையும், அங்ஙனம் அதன்கட் செய் வதூஉம் மக்களாகிய தம் பெயராற் செய்யப்படின் ஆரியரா லும் அவர் வயப்பட்டாராலுங் கைக்கொள்ளப்படா தாகலின் தம் பெயரை மறைத்துக் கடவுட் பெயரால் அமைக்கவேண்டும் இன்றியமையாமையினையும் நன்குணர்ந்த சைவ வைணவர் தத் தந் தெய்வங்களை அப்புராணங்களையும் ஆகமங்களையும் வட

மொழியில் ஆக்கலாயின வென அவற்றில் வரைந்து வைத்தனர். இவ்வடமொழி நூல்க ளெல்லாந் தமிழ்நாட்டி லுள்ளவர்களாலே இற்றைக்குத் தொள்ளாயிர ஆண்டுகளுக்கு முன்னேதொட்டு நெடுக ஆக்கப்பட்டு வந்தமைக்குச் சான்றுகளும் அந்நூல்களின் பிற வரலாறுகளும் எமது மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் பெருநூலில் விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு புராணங்களும் ஆகமங்களும் வடமொழியில் எழுதப்பட்ட பிற்காலத்திலேதான் தென்புலத்து மூதாதையரான பிதுரர்களுந் தேவர்களாக உயர்த்தி நம் தமிழர்களால் எழுதி வைக்கப்பட்டார்கள். ஆரியர்கள் தமிழரை அசுரர்களென்றும், அவருறையுந் தென்றிசையைக் கூற்றுவனுலகென்றும், அதன்கண் இருந்து இறந்துபட்ட மூதாதையரை அக் கூற்றுவனுலகு சென்று வைகும் பிதுரரென்றும் இழித்துக் கூறினராகலின் அவ் இழிபை மாற்றவே, புராண ஆகமங்க ளெழுதிய தமிழ்க் குருக்கண்மார் அவரை அயன் படைப்பான கடவுட்சாதி யென்று அந்நூல்களில் வரைந்து வைத்தா ராதல் வேண்டும். அதனைத் தழுவியே பரிமேலழகியாரும் அவரைக் கடவுட்சாதி யென்று எழுதிவிட்டா ரென்க.

முற்செய்த நூல் இது, பிற்செய்த நூல் இது வென்று வரலாற்று முறையில் நின்று ஆராய்ந்து பாராமையினாலேயே தமிழ் ஆரியம் முதலான மொழிகளை நன்கு கற்றவர்களும் நூல்களின் உண்மையும் நூலாசிரியர் கருத்தும் உணராராய்ப் பழையவற்றைப் புதியவாகவும் புதியவற்றைப் பழையவாகவும் மயங்கக்கொண்டு, உண்மையைப் பொய்யாகவும் பொய்யை உண்மையாகவும் நம்பிப் பெரிதும் பிழைபடுகின்றார். அதுவேயுமன்றி, ஆரிய மொழி நூல்களில் எஃது எங்ஙனம் எழுதப்பட் டிருந்தாலும் அதனை அங்ஙனமே நம்பி அறியாமையில் அமிழ்ந்திக் கிடப்பதும் நம்மனோர்க்குள் வேரூன்றிய வழக்கமாய் விட்டது. அதுவல்லாமலும், ஆரியர் தமிழர்க்குச் செய்துபோந்த தீமைகளை எடுத்துச் சொல்லி, இனித் தமிழர் அத் தீமைகளி னின்றும் விலகி முன்னேற்ற மடைதற்குரிய வழி வகைகளைக் காட்டினால், அதனையுங் குற்றமாகச் சொல்வார் தந்நலம் பாராட்டுந்

தமிழரிற் பலர் உளராகலின், அவராலும் ஆராய்ச்சியறிவு தடைப் படுகின்றது. என்றாலும், தென்புலத்தில் மிக்க நாகரிகமுடையரா யிருந்து காலஞ்சென்ற தம் மூதாதையர் அனைவரையும் ஒருங்கு சேர்த்து நினைத்து, அவர்க்கு மேன்மேல் நலம் அருள்கவென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நன்றிக்கடன் செலுத்துவதே, அம் மூதாதையர் வழிவந்த தமிழ்மக்களாகிய நமக்கு உரியதா மென்பதூஉம், அதனையே பண்டைத் தமிழ்ச் சான்றோராகிய நெட்டிமையாரும் அவர்வழி பிழையாது வந்த தெய்வப் புல மைத் திருவள்ளுவனாரும் அருளிய செந்தமிழ்ப் பாட்டுகள் அறி வுறுத்துகின்றன வென்பதூஉம், நம் தமிழ் மக்கட் குரித்தல்லாத பிதுரர் வழி பாட்டைத் "தென்புலத்தார் தெய்வம்" என்னுந் திருக்குறளுக்கு ஏற்றிச் சொல்லிய பரிமேலழகியாருரை கொள் ளற்பால தன்றென்பதூஉம் இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் கண் எடுத்துக்காட்டி நம் மக்களை மெய்ந்நெறியில் உய்த்தல் இன்றியமையாததாதல் காண்க.

நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், B.A., B.L.]

(௩௨௪ வது பக்கத் தொடர்ச்சி)

iii. நாயனார் பெயர் வைத்துக்கோள்வது

ஏனைய ஆசாரியர்களைப் போலவே நமது மணிவாசகப் பெருமானின் பெயரையும் மக்கள் இட்டுக்கொண்ட விவரம் இரண்டு கல்வெட்டுகளால் கிடைக்கின்றது. அவை வருமாறு:-

1. மாணிக்க வாசகன் என்ற பேரிய நாயன்—இது திரு வொற்றியூர் (செங் 976) தியாகராய சுவாமி ஆலயத்தின் (ஆதிபுரீசர்) கர்ப்பக் கிருகத்தின் மேல்சுவரில் இராஜாதி ராஜதேவன் I (?) ஆறும் ஆண்டில் (கி. பி. 1024) ஏற்பட்ட சாசனத்தில் உள்ளது. அப்பெயர் கொண்டவர் திருவொற்றி யூருடையார் கோயிலின் ஊழியக்காரர் என்றும் ஒரு விளக்கிற்

காக 32 பசுக்களைத் தானம் செய்தார் என்றும் அக்கல்வெட்டு கூறுகிறது.

2. திருவாதவூர் பொன்மேய்ந்த சோழப் பிரமராயர்: திருச்சி ஜில்லா இரத்னகிரி (திருச்சி 102) மலையில் வெளிப் புறத்துப் பாறையில் செதுக்கி யிருக்கும் கல்வெட்டில் தெரிகிறது. கி. பி. 24-3-1390-ல் விஜயநகர அரசன் விரூபாட்சி ராயர் I காலத்தில் மேற்கூறிய ஒரு பக்தர் நிலவிற்பனை செய்தது குறிக்கிறது. ஆகவே பதினோராவது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஆசாரியருடைய நாமம் பிரபல மடைந்து வந்தது எனலாம். ஆனால் ஏனைய சமயாசாரியர்களைப் போன்று அதிகமாக உதாரணங்கள் கிடைக்காததின் காரணம் தெரியவில்லை.

iv. சரித்திர விஷயங்கள்

1. திருவெம்பாவை ஓதல்—திருவொற்றியூர் ஆதிபுரீசர் ஆலயம். மேற்கு பீடம்-வீரராஜேந்திர தேவர் (1063-70) காலம் சிவவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்து 60 வேலி நிலத்தை மீட்டி அதற்கு வீரராஜேந்திர விளாகம் என்ற பெயர் தந்து அதன் வருமானத்தைத் திருவெம்பாவை திருப்பதியம் பாடுதற்கு உபயோகித்தது.

2. திருச்சாழல் ஓதல்—எவ்வாருரூர் (தென்ஆறு—523) கிராமார்த்த நாதேசுவரர் ஆலயம். விக்கிரம சோழன் 17-ம் ஆண்டு-கி. பி. 1135-பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் திருச்சாழல் ஓதுதற்குத் தானம் செய்தது.

3. திருவெம்பாவை ஓதல்—வழுவூர் (தஞ்சை 709) வீரட்டானேசுரர் ஆலயம். இராஜாதி ராஜன் II-1-7-1167-மார்கழித் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓதற்குத் தானம் செய்தது. (முன்னர்க் காண்க)

ஆகவே இம்மூன்று கல்வெட்டுகளிலிருந்தும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவெம்பாவை திருச்சாழல் இவை ஓதுதற்கு ஏற்பாடுகள் செய்ததை அறிகிறோம். இவைகளும் 1063 முதற்கொண்டே ஏற்பட்டது குறிக்கத் தக்கது. மற்ற

திருவாசகப் பாசுரங்களைக் குறித்து யாதொரு கல்வெட்டும் கிடைக்கவில்லை. நாளிதுவரை கிடைத்த கல்வெட்டுகளில் எல்லாம் வீரராஜேந்திரன் கல்வெட்டே இப் பெருமானைப்பற்றிய முதல் கல்வெட்டு ஆகும் (மேலே சொன்ன ராஜாதிராஜன் I கல்வெட்டின் தேதி சிறிது சந்தேகத்திற் கிடமாகும்). ஆகவே மணிவாசகப் பெருமானின் அருட்பாக்களின் மகிமை உலகத்தார் அறிவதற்குச் சிறிது காலதாமதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சி என்ற பதிகம் ஒன்று உண்டு. அதைச் சிவாலயங்களில் இன்றும் பாடுவதுண்டு. கல்வெட்டுகளில் திருப்பள்ளியெழுச்சியைக் குறித்து இரண்டு கிடைத்தன. ஆனல் அக்காலக் கோயில்களில் மாணிக்கவாசகர் அருளின திருப்பள்ளியெழுச்சியைப் பாடினர்களோ இல்லையோ தெரியவில்லை. ஆராய்வதற்காக அவைகளை இங்கே குறிக்கிறேன்.

1. காமரசவல்லி (திருச்சி 837) கார்க்கோடேசுர ஆலயம்: பரகேசரிவர்மன்—9-ம் ஆண்டு—ஸ்ரீபலி, திருப்பள்ளியெழுச்சி இவை நடத்துவதற்காக பூதானம் செய்தது.

2. வழுவூர் (வடஆறு 716) பிரமபுரீசுவரர் ஆலயம். வீரராஜேந்திரன்—7-ம் ஆண்டு—திருப்பள்ளியெழுச்சிக்காக நெல் தானம் செய்தது.

மாணிக்க வாசகர் பாசுரங்களைத் தவிர அவரது சரித்திர பாகத்தில் கண்ட இதர செயல்களைச் குறித்து யாதொரு கல்வெட்டும் கிடைத்திலது. சுந்தரர் சரிதத்தில் "வழக்கு வென்ற அம்பலம்" "பிச்சன் என்று பாடச் சொன்னன்" முதலான விசேடங்கள் கிடைத்தன. ஏனைய நாயன்மார்களைப் பற்றியும் சிற்சில குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனல் நமது மாணிக்க வாசகரைப்பற்றி வெகுதூரம் தேடிப் பார்த்ததில் "குதிரையிடு புராணத் திருநாள்" என்ற ஒரு பிரயோகம் கிடைத்தது. இது தென்காசி குலசேகரமுடையார் ஆலயத்து ஜடிலவர்மன் திருநெல்வேலிப்பெருமான் பாண்டியன் காலத்துச் சாசனத்தில்

உள்ளது. சகம் 1477=5-4-1555-ல் குணராமன் அழகன் பெருமாள் என்ற இளவரசன் பிரதிவருடம் ஆவணி மூலத்தன்று "குதிரை இடு புராணத் திருநாள்" நடத்த பூதானம் செய்ததாகத் தெரிகிறது. "ஆவணி மூலம்", "குதிரை இடு" என்ற இரு பிரயோகங்களிலிருந்தும் அவ்விழா மாணிக்க வாசகரைப் பொறுத்து இருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

இனி, திருவாதிரைத் திருவிழா மாணிக்கவாசகரை ஒட்டி உள்ளதால் அதனைக் குறித்துப் பரிசோதித்ததில் அடியிற் குறித்த ஐந்து ஆலயங்களின் குறிப்புகள் கிடைத்தன. ஆனால் அவைகளில் மாணிக்க வாசகர் பெயர் குறிக்கப் பெறவில்லை. அவையாவன:—

1. தேவிகாபுரம் (வடஆறு 161) ஒரு நாயினப்ப நாயகன் திருவாதிரை உற்சவத்திற்காக நெய் தானம் செய்தது.

2. சூலூர்ப்பேட்டை (நெல்-633) விஜயகண்ட கோபாலன் மார்கழித் திருவாதிரைக்காக 550 குழி தானம் செய்தது.

3. இரத்னகிரி (திருச்சி 107) சுந்தர பாண்டியன் I-23-12-1267-மார்கழித் திருவாதிரைக்காக தானம்.

4. குன்றுண்டார் கோயில் (புது-122) கற்குகையில் எழுத்து. கோதை மைந்தன் (சேரன்) திருவாதிரை யன்று 110 பிராமணருக்கு அன்னதானம்.

5. திருவேங்க வாசல் (புது 390) வைகாசித் திருவாதிரையில் சந்திக் கூத்து நடத்த தானம் (இதன்விவரம் தெரியவில்லை.)

இவ்வைந்து திருவிழாக்களுக்கும் மாணிக்க வாசகருக்கும் சம்பந்தம் உண்டா என்று தெரியவில்லை. எனினும் தற்காலத்தில் எல்லாக் கோயில்களிலும் திருவாதிரையில் மணிவாசகப் பெருமானை எழுந்தருளிவித்தலால் இவ்விழாக்களிலும் அவ்விதமே செய்திருக்கலாம்.

இது நிற்க மணிவாசகர் சரிதத்து அற்புதச் செயல்களான நரியைப் பரியாக்கினது, பிட்டுக்கு மண் சுமந்தது முதலான விழாக்கள் பெரிய ஆலயங்களில் நடந்து வருதலால் அவை

களைக் குறித்து மதுரை முதலிய ஆலயங்களில் ஏன் எழுதப் பெறவில்லையோ தெரியவில்லை.

மற்ற சமயாச்சாரியர்களின் பெயரால் மடங்கள் ஏற்பட்டு அவைகளைப்பற்றிப் பல கல்வெட்டுகளில் குறிப்புகளும் இருக்கின்றன. ஆனால் மாணிக்கவாசகரைப்பற்றி ஒரு மடமாவது காணவில்லை. நமது ஆசிரியர் அன்பிலே ஆழ்ந்திருந்தாரே அன்றி உலக விவகாரங்களில் ஒரு கணமும் செலவிடவில்லை. அவரது அடியார்களும் அத்தன்மையவர்களே. ஆகையால் உலக வழக்காகிய மடங்களைத் தாபிக்கவில்லை போலும். அவர் பெயர் கொண்ட ஈசுவரன் பெயரும் இல்லை. திருவிடை மருதூரில் (தஞ்சை 313-விக்கிரம சோழன் கி. பி. 1923 கல்வெட்டு) மாணிக்கக் கூத்தன் என்ற தலக்கடவுள் பெயரும் மாணிக்க வாசகருக்குச் சம்பந்தப்படாத பெயர் போலும்.

இனி, மேலே சொன்ன கல்வெட்டுகளை வருட வரிசைக் கிரமமாகப் பாகுபடுத்தி ஆராய்ந்து பார்க்கலாம்.

ஆண்டு கி. பி.	அரசன்	காலம்	மேற்கோள்
1024	ராஜாதிராஜன் I	1018-1050	iii—1
1063	வீரராஜேந்திரன்	1063-1070	iv—1
1135	விக்கிரமன்	1118-1135	iv—2
1148	ராஜராஜன் VI	1146-1178	ii—1
1158	,,	,,	ii—2
1167	ராஜாதிராஜன் II	,,	ii—3
1181	குலோத்துங்கன் III	(1178-1216)	ii—4
1226	ராஜாதிராஜன் III	1216-1248	ii—5
1305	குலசேகர பாண்டியன்		ii—6
1390	விருபாட்சன் I		i—7
1555	திருநெல்வேலிப் பாண்டியன்		iv

ஆகவே மேற்காட்டிய அரசர்களில் சோழவம்சத்தில் கி. பி. 1024 முதல் 1226 வரையில் 8 சோழ அரசர்கள்

காலத்துச் சாசனங்களில் அதாவது 200 ஆண்டுகள் அளவில் மாணிக்கவாசகரைப் பற்றிய கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. பாண்டிய மன்னர்களில் கி. பி. 1305 மதுரை அரசன் காலத்திலும் கி. பி. 1555 - ல் தென்காசிப் பின் பாண்டியர் ஒருவரின் காலத்திலும் ஆக இரண்டு கிடைத்திருக்கின்றன. தவிர 1390-ல் விஜயநகர மன்னன் விரூபாட்சன் காலத்து ஒன்று கிடைத்திருக்கிறது. இப் பாகுபாட்டைக் கவனிக்குமிடத்து ஏனைய ஆசாரியரை ஆதரித்ததுபோலவே சோழமன்னர்கள் மாணிக்கவாசகப் பெருமானையும் போற்றி வந்தார்கள் என்று ஒருவாறு கூறலாம். ஆனல் மாணிக்கவாசகர் தம் வாழ்நாளில் தொண்டு செய்த அரசனை பாண்டிய மன்னர் அவரைப் பற்றிச் சிறிதும் கவனிக்கவில்லை எனத் தெரிகிறது. அவரது நாடாகிய பாண்டி நாடும் அவரைப் பற்றிச் சிந்தித்திலது எனத் தோன்றுகிறது. இனிமேல் கிடைக்கக்கூடிய கல்வெட்டுகளில் இதைப்பற்றி ஏதேனுங் கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B A.]

கூத்தன் (௧௮)

1. பண்டைத் தமிழ் மக்கள் கூத்தன் என்ற தமிழ்ச் சொல்லைக் கடவுளுக்கு இட்டு வழங்கி வந்தார்கள். அவர்கள் அப்படி அச் சொல்லை வழங்கி வந்ததற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி இக்கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. கூத்தன் என்பது கூத்து என்ற சொல்லும் அன் விகுதியும் சேர்ந்து ஆகிய சொல். கூத்து என்பதனுடன் உடையான், பிரான், பெருமான் என்ற சொற்களைக் கூட்டுச் சொற்களாகச் சேர்த்துக் கூத்துடையான், கூத்தப்பிரான், கூத்தப் பெருமான் என்று கூறுதலுமுண்டு. கூத்து, குனிப்பு, ஆடல், நடம், நடனம் என்ற தமிழ்ச் சொற்கள் ஒரு பொருட்

பன்மொழிகள். குனிப்பு என்ற சொல்லுடன் உடையான் என்ற சொல்லைச் சேர்த்துக் குனிப்புடையான் என்றும், ஆடல் என்ற சொல்லுடன் ஆன் என்ற உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதி சேர்த்து ஆடலான் என்றும் பண்டைத் தமிழ்மக்கள் கடவுளுக்குப் பெயர்க ளமைத்து வழங்கிவந்தார்கள்.

3. தொடக்கநிலையில் கூத்து என்பது ஒருவர் தமது கால்கைகளையும் பிற உடலுறுப்புக்களையும் அசைத்து ஆடுதலாகும். அவ்வாறு ஆடுதல் கூத்தாடுதல் என்று சொல்லப் பெறுகின்றது. கூத்தாடுதலில் கால்களிரண்டும் ஏற்றமாயும், கைகளிரண்டுங் காலாட்டத்திற் குறைந்தும், ஏனைய உறுப்புக்கள் கையாட்டத்திற் குறைந்தும் அசைக்கப் படுகின்றன. கூத்தாடுதலுக்கு அடிப்படையாயுள்ள முயற்சி அசைவாகும் (vibration). கூத்தாடுஞ் செயலுக்குக் காரணமாயுள்ளது உள்ளக் களிப்பாகும். உலகக்கவலையாற் பற்றப்படாத சிறு குழந்தைகளும், சிறுவர் சிறுமிகளும், தங்களுடைய உள்ளத்திற் களிப்பு உண்டாகும்பொழுது தனித்தும் சேர்ந்தும் குனித்து ஆடி விளையாடுதலையும் சிறு பெண்கள் பாட்டுப் பாடிக் கும்மியடித்து விளையாடுதலையும் நாம் யாண்டும் பார்க்கிறோம்.

4. மலை இடங்களில் வாழ்கிற குறவர் வேடர் முதலிய வகுப்புமக்கள் கல்வியறிவு இல்லாதவர்களா யிருந்தும் வேலையொழிவு நேரங்களிலும் விழாக்கள் கொண்டாடும் நாட்களிலும் தனித்தும் இருவர் கைகோத்தும் பலர் சேர்ந்தும் ஆடியும் குனித்துப் பாடியும் மகிழ்ந்து விளையாடுகிறார்கள். அவ்வாறு ஆடல் பாடல் செய்யுங்கால் அவர்களுடைய கால் கை உடல் அசைவுகளும் பாடல்களும் சிறுவர் சிறுமிகளுடைய ஆடல்களைப் போன்றிராமல் ஏறக்குறைய ஒன்றுக்கொன்று இணங்கினவைகளா (symmetrical) யிருக்கும். மலை இடங்களுக்கு நாம் போனால் அங்கே இப்பொழுதும் அவர்கள் ஆடல் பாடல்கள் செய்து களித்து மகிழ்தலைக் காணலாம்.

5. சிறிது ஏற்றமாகத் திறன்வாய்ந்த கழைக் கூத்தாடிகள் உயரமான இரண்டு கால்கள் நட்டு அதனூடே கட்டப்பட்

டிருக்கிற கழை அல்லது கயிற்றின்மேல் நின்றும் நடந்தும் ஓடியும் கூத்தாடல் செய்து பார்க்கிறவர்களை மகிழச் செய்கிறார்கள். இன்னும் ஏற்றமான திறமையுடைய ஆடல்களைக் கற்றுப் பழகின களியாட்டாளர் (Circus players) மேற்சொல்லிய கழை அல்லது கயிற்றின்மேல் நின்று ஆடுதலுடன் விரைவாக ஓடுகிற குதிரைமேல் நின்றும் ஆடிப், பார்க்கிறவர்களை மகிழச் செய்கிறார்கள். இந்த ஆட்டக்காரர்கள் பாட்டுக்கள் பாடுவதில்லை.

6. மேற்கு நாடுகளில் ஆடவர்களும் பெண்களும் ஆடுதலைக் (dancing) கற்றுப் பயின்றுத் தனித்தும் கூட்டமாயும் திறமையுடன் தங்கள் உள்ளக் களிப்பை வெளிப்படுத்தியும் பார்க்கிறவர்களை உள்ளக் களிப்பை அடையச் செய்தும் ஆடல் புரிகின்றார்கள். அவர்களிற் சிலர் இந்த ஆடல் பாடல் செய்து பொருள் தேடுகிறவர்களாயு மிருக்கின்றார்கள்.

7. நமது தமிழ்நாட்டில் பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் இந்த ஆடல் பாடல்களை ஏனைய நாட்டு மக்களைப் பார்க்கினும் மிக்க திறமையுடன் செய்யப் பழகி யிருந்தார்கள் என்பதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களால் நாம் அறிகிறோம். கி.பி. இரண்டாவது நூற்றாண்டில் நடந்த சிலப்பதிகாரக் கதையில் கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையால் கேடறிவிக்கும் நிமித்தங்கள் நிகழ, அதுகண்ட மாதரி முதலிய இடைச்சியர் கெட்ட நிமித்தங்களுக்குச் சாந்தியாகத் திருமாலைக் குறித்துக் குரவைக் கூத்து இசைப்பாட்டுடன் ஆடினார்கள் என்பது கூறப்பட்டுள்ளது. (சிலப். கஎ-வது ஆய்ச்சியர் குரவை). குரவையாவது எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்து ஆடுதல். மிகப் பழைய நூலாகிய புறநானூறு 22-வது பாட்டில் "சினமாந்தர் வேறிக்குரவை ஒத நீரிற் பெயர்பு பொங்க" என இக்குரவைக் கூத்து கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் தங்கள் உள்ளத்திலுண்டாகின்ற ஒன்பது சுவைகளையும் (நவரசங்களையும்) கைக்குறி முகக்குறி கண்குறி மெய்க்குறிகளால் இசை தாளங்களுடன் பாடி ஆடிக் காண்பவர் கண்ணுக்கு இனிமையும்

கேட்பவர் காதுக்கு இனிமையும் பயக்கும்படிக் காட்டவல்ல திறனை அடைந்திருந்தார்கள். ஆடற் கலையானது (art of dancing) மேற்கு நாட்டில் உலகவாழ்வுக் களிப்புக்காக மட்டும் சில பகுதியினராற் பயிற்சி செய்யப்பட்டு வருதல்போலப் பண்டைத் தமிழ் மக்களாற் பயிலப்படவில்லை. அவர்கள் எல்லாரும் ஆடற் கலையை இயற்கையாக மக்கள் உள்ளத்தி லெழுகின்ற நகை முதலிய சுவைகளுடைய வெளிப்பாடுகளாக (expressions of inner emotional moods) அறிந்து பயின்று வந்தார்கள். அவர்கள் பயின்றுவந்த ஆடற் கலையானது உள்ளக்களிப்பை வெளிப்படுத்தற்கும் பிறரிடம் உண்டு பண்ணுவதற்கும் வழியாயிருந்ததுடன் உலக இன்பத்தை வெறுத்துக் கடவுளைச் சார்தலினுண்டாகும் பேரின்பத்தை அடைதற்கு ஆவலை உண்டாக்கும் வழியாயு மிருந்தது. ஆதலின் நாட்டியங்கள் (dancing) கோயில்களிற் செய்யப்பட்டு வந்தன. ஆடற்கலை பயின்றுவந்தது தமிழ்நாட்டுக் குலப்பெண்களே. மக்களெல்லாரும் அன்புணர்ச்சி வெளிபபாடுகளுக்கு (emotional expressions) உரியவரானாலும் பெண்மக்களே தங்கள் உடலமைப்பினாலும் மகப்பெறுதல், மகற்குப் பாலூட்டி வளர்த்தல் முதலிய அன்புச் செயல்களினாலும் அவ்வெளிப்பாடுகளுக்குச் சிறப்பாக உரியவர். ஆதலின் தமிழ்நாட்டுக் குலப்பெண்களே ஆடற் கலையைப் பயின்றுவந்தார்கள். மூவர் தேவாரங்களிலும் பெரிய புராணத்திலும் தமிழ்நாட்டுக் குலப்பெண்கள் அரங்குகளில் ஆடல் பாடல் பயின்றுவந்தார்கள் என்பது கூறப்பட் டிருக்கின்றது. தமிழ்மக்கள் அறிவு உணர்ச்சி செயல் வலிகளில் குன்றித் தாழ்ந்த நிலைமையை அடைந்தபொழுது குலப்பெண்கள் கல்வி பயிலாதிருந்ததுடன் ஆடற்கலையைப் பயிற்சிசெய்யாமலு மிருந்ததினால் பொருள்தேடும் வழியாக அக்கலை வேசைப்பெண்களாற் பயிலப்பட்டு வந்தது. தமிழ்நாட்டு வேசைப்பெண்கள் மாத்திரம் ஆடற்கலையைப் பிற்காலத்திற் பயின்றுவந்ததனால் கூத்தி என்ற சொல் வைப்பாட்டி என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்கு இக் கல்விபயிற்றும் ஆசிரியர்கள் நட்டுவர் என்று கூறப்படுவார்கள். அவ் வேசைப் பெண்கள்

கோயில்களிலும் மண முதலிய சிறப்புகள் நடக்கும் வீடுகளி லும் நாட்டியம் சதிர் ஆடிப் பொருள் தேடி வந்தார்கள். அவர்க ளிடத்திலும் இப்பொழுது சில ஆண்டுகளாக நாட்டியக் கலைப் பயிற்சி அருகி வருகின்றது.

8. மேலே கூறிய கூத்தாடுதல் தூலத்தில் நிகழுஞ் செயல். அந்தச் செயலுக்குக் காரணம் மக்கள் உள்ளத்தில் நிகழும் களிப்பு அல்லது மகிழ்ச்சி. இந்தக் களிப்பு அறிவும் உணர்ச்சி யும் (intellect and feeling) சேர்ந்து கலந்ததனு லுண்டா கிறது. கூத்தாடுஞ் செயல் செவ்விதாய் நடைபெறுதற்கு அறி வும் (intellect) உணர்ச்சியும் (feeling) உள்ளத்தில் சமமா யுள்ள நடுநிலையி லிருத்தல்வேண்டும். அறிவும் உணர்ச்சியும் கலந்து நடுநிலையில் நிற்றலினலே உயரிய அன்பு உண்டாகிறது. உணர்ச்சி மிகுதியினல் ஆட்டமானது ஒழுங்கின்றிக் குதிக் கும் குதியாட்ட மாய்விடும். அறிவு மிகுதியினல் கூத்தாடுஞ் செயல் நிகழாது. ஆகவே செவ்விதான கூத்தின்கண் அறிவும் உணர்ச்சியும் செயலும் ஒன்றுக்கொன்று இணங்கியுள்ள நடு நிலையில் (balance) இருத்தல் வேண்டும். அறிவு உணர்ச்சி செயல் (intellect, feeling & action) ஆகிய இந்த மூன்றும் சேர்ந்து நிகழாத செயல் உலகிலொன்றுமில்லை. இந்த மூன் றும் திருத்தமடைதலினுலேயே மக்கள் திருத்தமடைந்து சீரிய நாகரிகநிலை அடைகிருர்கள். இந்த மூன்றும் முழுமையும் திருத்தம் அடைந்து ஒன்றுபட்டுள்ள நிலையே வீட்டின்பத் திற்கு உரிய நிலையாகும். இந்தக் காரணத்தினலே பண்டைத் தமிழ்மக்கள் தாங்கள் பயின்றுவந்த சீரிய செவ்விய கூத்தா னது பேரின்ப நிலைக்கு வழியாயுள்ளது என்று அறிந்திருந் தார்கள்.

9. இதுகாறும் கூறியவாற்ருல் கூத்துக்கு அடிப்படை யான கருத்தானது கூத்து ஆடுகிறவர்கள் தங்கள் உள்ளத்தி லுள்ள களிப்பை வெளிப்படுத்தலும் கூத்துப் பார்க்கிறவர்கள் தங்கள் உள்ளத்தில் களிப்பை அடைதலுமாகும் என்பது நன்கு விளங்கும். மக்களது உள்ளத்தில் உண்டாகும் இந்தக் களிப்புக்கு அதனிடத்தில் அடங்கி (latent) உள்

ளது எது? மக்களிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் தாங்கள் இன்பம் அடையவேண்டும் என்ற ஒரு வேட்கை (இச்சை) அடங்கியுள்ளது. அந்த வேட்கையே உள்ளக் களிப்பாய் வெளிப்படுதலுக்கும் அக் களிப்பினல் வெளிப்படும் கூத்துக்கும் காரணமாக அமைந்துள்ளது. உயிர்களிடத்தில் இன்பம் அடைதல் வேண்டும் என்ற வேட்கை எதனலே உண்டாகிறது என்றால் கடவுள் மலத்தினுற் பிணிக்கப்பட்ட உயிர்கள் அம் மலத்தினிட மிருந்து விடுதலைபெற்றுத் தன்னை அடைந்து இன்பம் அடைதல் வேண்டுமென்று அவைகள்மேல் வைத்த பேரருளின் திறத்தினலே தனது திருவுள்ளத்திற் கொண்ட நினைப்பினலேயாகும். இந்த நினைப்பே அதிசூக்கும நடனமாகும். கடவுளாகிய சிவபெருமான் தன்னை விட்டுப் பிரியாதிருக்கின்ற அருட்சத்தியாகிய உமாதேவியாரோடும் உலகில் படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் தூலத்தில் நடைபெறுதற்குச் செய்யுந் திருநடனமானது தூலநடனமாகும். சிவமாகிய கூத்தனும் சத்தியாகிய கூத்தியும் சேர்ந்து உலகிலெங்கும் உயிர்களுடைய இதயத்திலும் நடம் செய்வதனலேயே உலகில் எல்லா உயிர்களுக்கும் இன்ப வேட்கையும் அவ் வேட்கையை அடைதற்கு முயற்சியும் உண்டாகின்றன. "அவனசையாம லோரணுவும் அசையாது" என்ற முதுமொழி இக் கருத்தையே உரைக்கின்றது. நடனத்தைப்பற்றி இங்கே விரிப்பில் உரை பெருகும். சிவநெறியில் (சைவ சமயத்தில்) கூறப்பட்ட இந்த உண்மையை பண்டைத் தமிழ்மக்கள் அறிந்திருத்தலினல் அவர்கள் தாங்கள் வழிபட்ட கடவுளுக்கு மேலே கூறிய கூத்தை அல்லது நடனத்தைச் செய்கிறவன் என்ற பொருளில் கூத்தன் என்று பெயரிட்டு வழங்கி வந்தார்கள். இந்து சமயிகள் தவிர வேறு எந்த சமயிகளும் இந்த உண்மையை அறியாமையினல் கடவுளைக் கூத்தன் என்ற பெயரினல் அழைக்கவில்லை. பிற்காலத்தில் வடமொழிக் கலப்பு மிக்கு வந்தபொழுது தமிழ்மக்கள் நடம் என்ற தமிழ்ச் சொல்லுடன் இராஜன் என்ற வடமொழிச்சொல்லைச் சேர்த்துக் கூத்தனுக்குப் பதிலாக நடராஜன் என்ற கூட்டுச் சொல்லை மிகுதியாய் வழங்கி வருகிறார்கள். இப்பொழுதும்

கூத்தன் கூத்தநாயனார் என்ற பெயர்கள் தமிழ்மக்களில் ஆண் மக்களுக்கு இட்டு வழங்கப்படுகின்றன.

10. தமிழ்மறை நூல்களில் கணக்கற்ற பல இடங்களில் கூத்தன் என்ற சொல் கடவுளுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. அவைகளில் சிலவற்றை இங்கே காட்டுவாம்.

1. ஒற்றையேற துடையா நடமாடி யோர்பூதப் படைசூழ
   திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் : திருவலிதாயம் 4 - வது பாட்டு.

2. கூத்தனுக் காட்பட் டிருப்பதன்றே நந்தங் கூழைமையே
   திருநாவுக்கரசர் தேவாரப்பதிகம் கோயில் திருவிருத்தம் 5-வது பாட்டு.

3. கூத்தனைக் குருமா மணி தன்னைக் கோலக்காவினிற் கண்டு கொண்டேனே
   சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகம் திருக்கோலக்கா 4-வது பாட்டு.

4. தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
   திருவாசகம் வாழாப்பத்து 4-வது பாட்டு.

5. குனிப்புடையானுக்கே சென்றாதாய் கோத்தும்பி
   திருவாசகம் திருக்கோத்தும்பி 3-வது பாட்டு.

6. தில்லைக் கூத்தனை யேத்தலர்போல்
   திருக்கோவையார் 44-வது பாட்டு.

7. சிதம்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
   சொற்பத மாமந்தச் சுந்தரக் கூத்தனைப்
   பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
   யற்புதக் கூத்தனை யாரறி வாரே,
   திருமந்திரம் 2723-வது பாட்டு.

8. கூத்துக் கெல்லா மிவராடித் திரிவது.
   பொன்வண்ணத்தந்தாதி 7-வது பாட்டு.

9. குழைக்கலையும் வடிகாதிற் கூத்தனா ரருளாலே
   பெரியபுராணம் மானக்கஞ்சாற நாயனார் புராணம்-11-வது பாட்டு.

(தொடரும்)

போர்க்கருவிகள் போந்த புதுமை

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

வெடி மருந்து

வாணமருந்து என்றழைக்கப்படும் வெடிமருந்து எக்காலத்தில் எந்நாட்டில் யாரால் முதன்முதற் கண்டு பிடிக்கப்பட்டதென்பதை யாராய்ந்து தெளிதற்கியலவில்லை. ஆயினும் பல நாடுகளில் பன்னூற்றாண்டுகளாக அது கையாளப்பட்டு வருகிறது என்பது மறுக்கமுடியாததொரு உண்மையாகும்.

சிறுவர்களில் வெடிமருந்து செய்ய முயலாதவர்கள் சிறு பகுதியினரே என்று சொல்லலாம். தத்தமக்குத் தெரிந்த முறையில் தம்மாற் கூடியவரையில் ஒவ்வொரு நாட்டிலுள்ள சிறுவர்களிற் பெரும்பகுதியினரும் அதைச் செய்ய முயன்று, முயற்சிக்கேற்ற வெற்றியை யடைந்திருக்கின்றனர். அத்தகைய முயற்சியில் "குப்" என்று எரிந்து சுடுநாற்றம் வீசி, மட்டற்ற புகையைக் கிளப்பி, பொதுவாகக் கூறுங்கால் வேறு கெடுதி பயவாது செல்லும் "புஸ் வாணமே" மிகுதியென்று கூறவேண்டும். "கெடுதி பயவாது" என்று குறிப்பிட்டது எது கருதி என்றால் அச்சிறுவர்கள் தேர்ந்த முறையில் அதைச் செய்யாததினால் கெடுதியில்லையாயிற்று ஆதலினாலேயே. சரிவரமட்டும் அது செய்யப்படுமாயின் பெருங்கெடுதி பயவாமற் போகாதென்பது திண்ணம்.

வெடிமருந்து யாது?. வெடிமருந்து என்பது கரியும் கந்தகமும் வெடியுப்புஞ் சேர்த்தரைக்கப்பட்டதொரு கலவை. அக்கலவையை நீர்விட்டுப் பிசைந்து சிறு வில்லைகளாகத் தட்டி யுலரவைத்து அதன்பின் அவ்வில்லைகளைப் பொடிசெய்து கொண்டால் வெடிமருந்தாகும். வெடிமருந்தில் சேர்க்கப்பட்டுள்ள முப்பொருள்களின் அளவு நாடுதோறும் வேறுபடுகிறதாயினும் பொதுவாகக் கூறுமிடத்து முக்காற்பங்கு வெடியுப்பும், நூற்றுக்குப் பதினைந்து வீதம் கரியும், பத்திலொருபகுதி கந்தகமும் சேர்த்துக்கொள்வதே ஏற்ற அளவாகும் எனச் சொல்லலாம்.

இனி, வெடிமருந்து எவ்வாறு எரிந்து வெடிக்கிறதென் பதை யாராய்வாம். கணப்புச்சட்டி எரிய விடுதல் என்று வழக்காற்றில் கூறக் கேட்டிருக்கலாம். கணப்புச் சட்டி எரிந் தால் சூடு உண்டாவானேன்? விறகு, நிலக்கரி முதலியவற்றி னுள்ள கரிச்சத்து அவை எரியுங்கால் காற்றிலுள்ள உயிர்வளி யுடன் கலந்து "கரிப்புளிப் புகை"யாக மாறுகிறது. மாறிய இப்புகை காற்றுடன் கலந்து எளிதில் வெளியிற் சென்று விட் டாலும் கணப்புச் சட்டி யிருக்குமிடத்தில் சூடு உண்டாயி ருக்கக் காண்கிறோம். ஆதலால் இச்சூடு விறகு நிலக்கரி முதலி யவற்றில் இயல்பாகவே அமைந்திருக்கவேண்டும் என்றே கொள்ளக்கிடக்கிறது. ஆனால் விறகையோ கரியையோ தொட் டால் சூடு தெரிகின்றதோவெனில், இல்லை. அவை எரிவதினால் அவற்றின் கண்ணுள்ள கரிச்சத்து உயிர்வளியுடன் கலப்பதினா லேயே சூடு பிறக்கின்றது. கணப்புச்சட்டி யெரிய விடுவதின் நோக்கம் சூடுண்டாக்குதலேயன்றிக் "கரிப்புளிப் புகை" பெறுவதில்லையென்பது கருதியேதான் அதைக் 'கணப்புச் சட்டி' என முன்னோர் அழைத்து வந்தனர்போலும். கணப்பு என்பது சூட்டைக் குறிக்கும் சொல்லன்றோ?

நிற்க, கரிச்சத்து உயிர்வளியுடன் கலந்தால் சூடு பிறக்கிற தென்பது சரியேயாயினும் ஏன் அது அவ்வாறு கலத்தல் வேண் டும் என்று கேட்கலாம். அக்கேள்விக்கு எளிதாக விடைகூறி விளக்க முடியாது. வைக்கோலையும் நெருப்பையும் ஒரே இடத் தில் இருக்கவிட்டால் எப்படி வைக்கோலில் நெருப்புப் பிடிப் பது இயற்கையோ அப்படியே கரிச்சத்தும் உயிர்வளியும் ஒரே யிடத்தில் இருக்கப்பெறுங்கால் பின்னது முன்னதுடன் சென்று கலத்தலும் இயற்கையாக இருக்கிறது என்றுதான் கூற முடி யும். ஆயினும் கரிச்சத்தும் உயிர்வளியும் கலப்பதற்கு ஒரு சிறிது நெருப்பு இன்றியமையாது வேண்டப்படும்; ஏனெனில் எரிந்தால்தான் கரிச்சத்து உயிர்வளியுடன் கலத்தலுறும்.

இனி, கரிநெருப்பு "நின்று" எரிகிறது என்று கூறக் கேட் டிருக்கலாம். அதாவது அது மெதுவாக எரிகிறது என்பதே அதற்குப் பொருள். அஃதேனெனின் கரிக்கட்டிகளின் மேற்

புறத்தில்தான் கரிச்சத்து உயிர்வளியுடன் கலக்கும் வசதியுடைத்தாக விருக்கிறது. அவ்வாறின்றிக் கரிக்கட்டிகளை யுடைத்துத் தூள் செய்து விட்டாலோ அத்தூள்கள் நெருப்பூட்டப்பட்ட விடத்து உயிர்வளியுடன் கலக்க எளிதில் வசதியுற்று எரிகின்றன. எரிவதனோடு மட்டுமன்றிப் புல்லிய ஓசையுடன் அத் தூள்கள் வெடிக்கவுங் கேட்கலாம். நிலக்கரிச் சுரங்கங்களில் அடிக்கடி விபத்து உண்டாவது இவ்வாறேதான். இதை இருப்புப் பாதை எஞ்சினில் கரி தள்ளுவோன் மண்வெட்டி போன்ற கரிதள்ளும் கருவியாற் கரியை யெடுத்து நெருப்பிற் போட்டுவிட்டு அக்கருவியை நெருப்பின்மீது உதறும்போது அதிலொட்டியிருக்குங் கரித்தூள்கள் சடபடவென வெடிக்குங் காலுங் காணலாம். எனவே வெடியுண்டாக வேண்டுமானல் விறகு அல்லது கரியும், அதிலுள்ள கரிச்சத்து ஒரே காலத்தில் எரிந்து வெடிப்பதற்கு உயிர்வளிக் கலப்பும் இன்றியமையாது வேண்டப்படும் என்பது பெறப்பட்டது.

எடுத்துக்கொண்ட பொருளாகிய வாண மருந்து அல்லது வெடி மருந்தில் இவை இருக்கின்றனவா என்று பார்த்தால் இருக்கின்றனவென்பது தெரியும். எப்படியெனில், கரித்தூளிற் கரிச்சத்தும், வெடியுப்பில் உயிர்வளியும், இவற்றுடன் விரைவில் எரியும் பண்புடைய கந்தகமும் இருக்கின்றன. எனவே உயிர்வளிக்காகக் காற்றைத் தேடிச்செல்ல வேண்டுவதில்லை. வெடியுப்பிலேயே அது இயற்கையாகச் சேமித்து வைக்கப் பட்டிருக்கிறது. அன்றியும் வெடிமருந்து தூள் செய்யப் பட்டிருத்தலால் ஒவ்வொரு கரித்தூளுக் கருகிலும் கந்தகத்தூளுக் கருகிலும் வெடியுப்புத் தூளிருந்து வேண்டுங்கால் உயிர்வளியை யளிக்கவு மேதுவாகிறது.

வெடியுப்பில் உயிர்வளியேயன்றி ஒரு பகுதி தீவளியுமிருக்கிறது. வெடிப்பதற்கு உயிர்வளிமட்டுமே சாலுமாயினும் தீவளியில்லாக்கால் உயிர்வளி விரைவில் வேலை செய்யாதாகையால் ஒரு சிறிது தீவளியும் வேண்டப்படும். இத் தீவளியை ஒரு விந்தையான பொருளென்றே கூறவேண்டும். சோம்பலே உருவாயமைந்த இயற்கைப்பொருள் ஒன்று உண்டென்

ருல் அது தீவளிதான். ஏனெனில் அது தானே இயங்கிப் பயன்படுவ தென்பதில்லை. ஆயினும் தன்னைச் சேர்ந்த பொருள்களை, அதிலுஞ் சிறப்பாக உயிர்வளியை, அது வேலை செய்யுமாறு தூண்டுவதுபோல் வேறெதுவுந் தூண்டுவதில்லை. இதர பொருள்கள் சேர்ந்த ஒரு கலவையில் ஒரு சிறிது தீவளியைப் புகவிட்டால் ஏதாவதொரு தடபுடல் உண்டாகாம லிருக்காது. எனவே வெடியுப்பில் தீவளியும் இயற்கையா யமைந்திருப்பதனுலேயே அதன் பயனை யொருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

ஆகவே, வெடிமருந்தை யொருசிறிதெடுத்து அதில் தீமூட்டினல் கரிச்சத்தும் உயிர்வளியும் ஒன்றுடனென்று கலத்தற்குரிய தகுதி முதற்கண் உண்டாகிறது; அத்தகுதி யுண்டானதும் வெடியுப்பிலுள்ள தீவளி தன்னுடனுறையும் உயிர்வளியை உடனே சென்று கரிச்சத்துடன் கலக்குமாறு ஒரு சவுக்கடி கொடுக்கிறது. அவ்வடிபெற்ற உயிர்வளி சுருக்கெனக் கரிச்சத்துடன் சென்று கலக்கவே "குப்"பென வெடிமருந்து எரிகிறது. அவ்வாறு எரிவதனல் வெடிமருந்து முன்னிருந்த எடையைப் போன்று 2500 மடங்கு எடை கொண்டதாக மாறி விடுகிறது; அதாவது ஒரு அங்குல கனமுள்ள வெடிமருந்து "குப்"பென எரிந்தால் 2500 அங்குல கனமுள்ள புகையாக மாறுகிறது. இவ்வாறு ஒன்று இரண்டாயிரத்தைந்நூறு மடங்காக விரைவில் வீக்கமுறுவதால்தான் வெடியுண்டாகிறது. ஆனல் இவ்வெடியினல் ஓசை உண்டாகவேண்டுமானல் வெடிமருந்து அடைப்பான ஒரு இடத்தில் அதாவது குழாய்,குண்டு போன்ற உருவமுள்ள அடைப்பான பொருளில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வடைப்பான பொருள் துப்பாக்கி போன்ற வலிவுள்ளதாக இருக்குமானல் ஒன்று இரண்டாயிரத்தைந் நூறுமடங்காக மாறுமென்று மேற்கூறிய புகை, அவ்வாறு தான் பெருக்கமுறுவதற்கு வேண்டிய இடம் அத் துப்பாக்கிக் குழாயினுட் கிடைக்கப்பெறுமையால், 40 டன் வேகங்கொண்டு அழுத்தித் தள்ளும் ஆற்றலுடைத்தாக மாறி வெளிக்கிளம்ப முயலுகிறது. அம் முயற்சியால் துப்பாக்கிக்குள் கெட்டிக்கப் பட்டிருக்கும் குண்டை அது 40 டன் வேகத்துடன் வெளியே

அழுத்தித் தள்ளுகிறது. எனவே, இதுகாறுங் கூறியவாற்றால், வெடி மருந்து எவ்வாறு செய்யப்படுகிறது என்றும், எதனல் எரிகிறது என்றும், ஏன் வெடிக்கிறதென்றும், துப்பாக்கிக்குள் வெடிப்பதனல் எவ்வாறு அது குண்டுகளைத் தள்ள உதவுகிற தென்றும் ஒருவாறு விளக்கப்பட்டது.

சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்]

இரண்டாவது சூத்திரம்

நாலாவது அதிகரணம்

86. சூத்திரத்திற் கூறியபடி நாலாவது அதிகரணத்தின் மேற்கோள் " ஆணையி னீக்கமின்றி நிற்கும் " என்பது. ஆசிரியர் இம்மேற்கோள் உரையில் தொக்கி நின்ற முதல்வன் என்ற எழுவாயை வருவித்தும் ஆணை என்ற சொல்லை " ஆணையாகிய சிற்சத்தி " என விளக்கியும் "நீக்கமின்றி நிற்கும்" என்ற சொற்றொடருக்கு " சமபேதமாய் நிற்பன் " என வடமொழிப் பதங்களை வழங்கியும் முதல்வன் தனதாணையாகிய சிற்சத்தியோடு சமபேதமாய் நிற்பன் என அதிகரண மேற்கோளைக் கூறினர்.

87. சூத்திரத்தில் நீக்கமின்றி நிற்குமன்றே என்ற சொற்றொடருக்குமுன் அணிமையில் நின்ற 'ஆணையின்' என்பது முன் இரண்டாவது அதிகரணத்தில் இருவினையின் என்பதனேடு சேர்ந்து நின்று பொருடந்ததுமன்றிச் சிங்க நோக்காய் நீக்கமின்றி நிற்கும் என்பதனேடு இயைந்தும் பொருள் தருகின்றது. ஆணையின் என்பதிலுள்ள இன் உருபு ஐந்தாவது வேற்றுமை உருபாய் நீக்கப்பொருள் தந்து நிற்கிறது. ஆணையின் என்பது ஆணையிலிருந்து அல்லது ஆணையைவிட்டு என்று பொருள்படும். ஆணை என்ற சொல் அருள்வலியை (அருட் சத்தியை)க் குறிக்கிறது. அது 'ஆற்றல்' அல்லது 'சிற்சத்தி' என்றும் கூறப்படும். சமபேதம் என்னும் வடமொழி நன்

ருப்ச்சேர் என்று பொருள்படுகிற சமவே (समवे) என்ற அடிச் சொல்லிலிருந்து வந்தது. சமபேத (समवेत) என்பது சமவே (समवे) என்ற வினைச்சொல்லிலிருந்து வந்த இறந்தகால வினை யெச்சச்சொல் (Past participle). சமபேத (समवेत) என்பதி லிருந்து சமபேதம் என்று தமிழ் மொழியில் வழங்கப்படுகின் றது. சமபேதம் என்ற வடமொழிச் சொல்லின் பொருளை ஆசிரியரே "நீக்கமின்றி நிற்றல்" என்று சூத்திரத்திற் கூறியுள் ளார். நீக்கமின்றி நிற்றல் கலப்பினால் உண்டாகிறது. கலப்பி னால் நீக்கமின்றி நிற்றலாவது முதல்வனும் அவனது அருள்வலி யும் ஒருபொருள் என்றாவது இருபொருள்கள் என்றாவது பிரித்தறியவாராது கலந்து இவ்விரண்டிற்கும் பொதுவாய் நிற்ற லாகும்.

88. ஆசிரியர் மூன்றாவது அதிகரணத்தில் உயிர்கள் மாறிப் பிறக்கும் எனக்கூறி அவ்வாறு உயிர்கள் மாறிப்பிறத் தலை அவைகள் செய்த வினையின் பயனைக் கூட்டுவிக்கும் அருள்வலியினின்றும் முதல்வன் நீக்கமின்றி நிற்பன் என நாலாவது அதிகரணத்திற் கூறுகின்றார். இதனால் மூன்றாவது அதிகரணத்துக்கும் நாலாவது அதிகரணத்துக்குமுள்ள இயைபு விளங்கும்.

89. இந்த அதிகரணத்தின் மேற்கோட் பொருளுக்கு எதிரிடையான கொள்கைகள் இரண்டு உள. முதல்வனும் அருள் வலியும் இருவேறு பொருள்கள் என்று கூறும் மீமாம்சகர் முத லியோர் கொள்கை ஒன்று. முதல்வனும் அருள்வலியும் வேறு அன்றி ஒரே பொருள் என்று கூறும் நையாயிகர் முதலியோர் கொள்கை மற்றொன்று. இவ்விரண்டு கொள்கைகளினால் மாணாக் கருக்கு உண்டாகும் ஐயப்பாடு நீக்குதற் பொருட்டு ஆசிரியர் நாலாவது அதிகரணம் கூறுகின்றார்.

90. இந்த அதிகரணத்தின் மேற்கோளுக்கு முதலாவது அதிகரணம் மேற்கோளாகிய "அவையே தானேயாய்" ஏது வாக அமைந்துள்ளது. முதல்வன் எல்லாப் பொருள்களோடும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் கலந்துநிற்பதே எங்கும் நிறைந்த தன்மை (சர்வ வியாபகத்துவம்) ஆகும். அவ்வாறு

ஆசிரியர் முதலாவது அதிகரணத்திற் கூறிய எங்கும் நிறைந்த தன்மையையே இங்கு நாலாவது அதிகரணம் மேற்கோளுக்கு ஏதுவாகக் கூறுகின்றார். ஆனால் அந்த ஏதுவாகிய சர்வவியாபி யாய் நிற்றலுக்கு(எங்கும் நிறைந்து நிற்றலுக்கு) அடைமொழி களாக "ஏகானேக மிரண்டு மின்றி" என்ற சொற்றொடரைச் சேர்த்துக் கூறுகின்றார். ஏகானேகம் என்ற சொற்றொடர் பிரிக்கப்படுங்கால் ஏகம் அனேகம் என இரண்டு சொற்களாய்ப் பிரியும். ஏகம் அனேகம் இரண்டு மின்றி என்பது முதல்வனும் அவனினின்றும் பிரித்தறியவராத அருளும் ஒரு பொருள் என்றாவது, முதல்வன் தன்னுடன் வேறின்றிக் கலந்திருக்கிற அருளுடன் எல்லாப் பொருள்களிலும் ஒன்றி நிற்றல்பற்றி அனேக பொருள்கள் (பல பொருள்கள்) என்றாவது நாம் சொல்ல வொண்ணாது என்பதாம். ஒருபொருளென்று (ஏகம்) சொல்லுவோமானால் ஒருபொருள் ஓரிடத்திலிருக்குமேயன்றி எவ்விடத்திலும் நிறைந்திருக்க முடியாது. கதிரோன் தன்னி னின்றுபிரிக்க வொண்ணாத ஒளியினால் எங்கும் நிறைந்திருத்தல் போல முதல்வனும் தன்னைவிடடுப் பிரிக்க வொண்ணாத அருள் வலியால் எங்கணும் நிறைந்திருத்தல்பற்றி முதல்வனும் அருள் வலியும் இரண்டு பொருள்கள் என்று நாம் சொல்வோமானால் இரண்டு பொருள்கள் இரண்டு இடங்களிலிருத்தலன்றி எவ் விடத்தும் நிறைந்திரா. அதுவன்றி முதல்வன் தனது அருள் வலியினின்று இரண்டாக வேறுபட்டுக் கலந்து நிற்பானானால் அவன் எல்லாப் பொருள்களிலும் வேற்றுமையின்றி (அபேத மாய்)க் கலந்திருத்தல் சாலாது. அவன் பல பொருள்களிலும் வேற்றுமையின்றிக் கலந்திருத்தல் பற்றி அவனை அனேகன் என்று நாம் சொல்வோமானால் அவன் அப் பல பொருள்களி லும் வேறாய் நிற்பனே அல்லாமல் சூத்திரத்தின் முதல் அதி கரணத்தில் கூறியபடி அவைகளுடன் ஒன்றாயும் உடனாயும் நிற்றல் முடியாது. முதல்வனை அவ்வாறு கூறுதலும் அவ னுடைய எங்கும் நிறைந்த தன்மைக்கும் முழுமுதற் றன்மைக் கும் இழுக்காய் முடியும். ஆதலின் ஆசிரியர் முதல்வன் ஏகா னேகமிரண்டு மின்றிச் சர்வ வியாபியாய் நிற்றலை அதிகரண

மேற்கோளுக்கு ஏதுவாகக் கூறினர். முதல்வன் தனது அருட் சத்தியோடு வேற்றுமையின்றி ஒரு பொருளாயும் வேற்றுமை யுடன் இரண்டு பொருளாயும் நிற்றலின்றி வேற்றுமையும் வேற் றுமை யின்மையும் இல்லாமல் அவ்விரண்டிற்கும் பொதுவாய் எங்கும் நிறைந்து நிற்பன் என்பது இம்மேற்கோளின் பொரு ளாகும்.

91. முதல்வனும் அருள்வலியும் வேற்றுமையின்றி ஒரு பொருளாயும் அல்லது வேற்றுமையுடன் இரண்டு பொருள்க ளாயும் அல்லாமல் இரண்டுக்கும் பொதுவாய் நிற்றல் யாங்ஙன மெனின், இதன் உண்மைத் தன்மை முதல்வனுடன் வேறற ஒன்றி நின்று, மலப்பிணிப்பு முற்றும் நீங்கி, அவனது அருளி னுல் உணரும் பெரியோர்கள் உணரலாமே அன்றி மலப்பிணிப்பு உடைய நம்மனோரால் வாயினுற் கூறப்படுந் தன்மையுடைத் தன்று. அது நம்மனோரால் சில ஏதுக்கள் வாயிலாக எதிர் மறைத் தன்மையில் (negative aspect) இவ்வாறு இருக்கும் என்று மாத்திரம் ஊகித்து அறியப்படுந் தன்மை உடையது.

92. திருவாசகம் சிவபுராண அகவலில் "ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க" என்னும் அடியின்கண் இறைவனை ஏகன் அனேகன் என்று கூறியதனேடு "ஏகானேகமின்றி" என்று இங்கே கூறியது முரணுதோ எனில் முரணுது. உண்மை நிலையில் ஒருவனயிருக்கும் முதல்வனை பொது நிலையில் (தடத்த நிலையில்) உலகிலுள்ள பல சமயத்தார்களுக்கும் அருள்புரிதற் பொருட்டு பல உருவங்களை உடையவன் என்ற உண்மை சிவ புராண அகவலிற் கூறப்பட்டுள்ளது. இங்கே பொது நிலையில் முதல்வன் ஐந்தொழில் செய்தற்கண் தனக்கும் அருள்வலி யாகிய முதல்விக்கும் உள்ள நெருங்கிய தொடர்புநிலை கூறப் படுகின்றதாகலின் அதனேடு முரணுமை அறிக.

93. அழிப்புக் காலத்தில் அருட்சத்தி முதல்வனுகிய சிவனிடத்தி லொடுங்கி, அந்த அருட்சத்தியுடன் எல்லா உயிர்ப் பொருளும் உயிரில் பொருளும் அவனிடம் ஒடுங்கி நிற்பச், சிவன் ஒரு பொருளாய்த் தனித்து நிற்பன். படைப்புக் காலத் தில் அருட்சத்தி சிவனிடமிருந்து பிரிந்து விரியும் பொழுது

ஒடுங்கின எல்லாப் பொருள்களும் அவ்வருட்சத்தியினிட மிருந்து தோன்றுகின்றன. அருட்சத்தி சிவனிடமிருந்து பிரிந்து விரிந்த காலத்திலும் சிவம் தனித்து வேருகியும் அருட்சத்தி தனித்து வேருகியும் நிற்றலில்லை. சிவத்தில் அருட்சத்தியும் அருட்சத்தியில சிவமும் கலந்து உள்ளன. இந்த அருட்சத்தியையே பெண் வடிவாகிய உமாதேவி என்று சிவநெறி நூல்கள் கூறும்.

"பைங்கொடி யாளும் பரமனிருந்திடத்
திண்கொடியாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடியாகி விளங்கி வருதலாற்
பெண் கொடியாக நடந்த துலகே"

என்று திருமூல நாயனர் திருமந்திரத்திலும் "கோலமா மங்கை தன்னைக் குறித்தொரு கோலமாய் சீலமே அறிய மாட்டேன்" என்று திருநாவுக்கரசு நாயனர் திருவாவடுதுறைத் திருநேரிசைத் தேவாரப் பதிகத்திலுங் கூறியிருத்தல் காண்க. படைப்புக் காலத்தில் அருட்சத்தியாகிய உமாதேவியார் சிவனிடமிருந்து பிரிந்து நிற்குங்கால் உமாதேவியார் சிவன் விளங்குதற்கு உருவமாயிருக்கின்ருள். "உமையலா துருவமில்லை...... ஐயனை யாறனர்க்கே" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருஐயாற்றுத் தேவாரப் பதிகத்திலும் "உருவாருமையோடேஞனன்" என்று திருஞான சம்பந்த சுவாமிகள் திரு அண்ணமலைத் தேவாரப் பதிகத்திலும் இக்கருத்தைக் கூறி யருளினர்கள். சிவன் அறிவு உருவனகியும் உமாதேவியார் அவனுடனியைந்து நின்று தொழில் செய்தலினலேயும் படைப்பு முதலிய ஐந்தொழில்கள் நடைபெறுகின்றன. ஐந்து தொழில் செய்யச் சிவன் உமாதேவியாரோ டியைந்து நிற்குங்கால் ஒன்ருயும் வேருயும் உடனுயும் நிற்பன். இக்கருத்தைத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருநல்லூர்த் தேவாரத்தில் "ஏறிலெரு தேறுமெழிலா யிழையோடும் வேறுமுடனுமாம் விகிர்தரவ ரென்ன" என்று கூறியருளினர். இவ்வாறு முதல்வனகிய சிவன் உமாதேவியாரோடு ஒன்ருயும் வேருயும் உடனுயும் அத்துவிதமாய்க் கலந்திருத்தலின் வழியாக அவன் இச்சூத்திரம் முதலாவது

அதிகாரணத்திற் கூறியபடி உயிர்ப் பொருளோடும் உயிரில் பொருளோடும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் அத்துவித மாய்க் கலந்து நிற்கின்றான். அவன் உயிரில் பொருளோடு அத்து விதமா யியைந்து நிற்கும் இயைபினைப் பார்க்கினும் உயிர்ப் பொருளோடு அத்துவிதமாய் இயைந்து நிற்கும் இயைபு நெருங்கியதா யுள்ளது; அவன் உயிர்ப்பொருளோடு அத்து விதமாய் இயைந்து நிற்கும் இயைபைப் பார்க்கினும் உமா தேவியாரோடு அத்துவிதமாய் இயைந்து நிற்கும் இயைபு மிக நெருங்கியதாயுள்ளது. (தொடரும்)

கருமை

[திருக் கபசம் எழுதியது]

(௩௭௬-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தெழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுமவற்றுள் நகரத்தையும் மகரத்தையும் பற்றிச் சில மொழிந்தோம். இனி மூன்றாமெழுத்தாகிய சிகரம் பற்றிச் சில நவின்று இக் கட்டு ரையை முடிக்க விரையுதும். 'சிவ்வெழுத்தே தெய்வ ருத்திர னும்' என்று காட்டிய மேற்கோளையும், 'சிவ்விரண்டு தோளதாய்' என்று கூறப்பட்டதையும் நினைவிற் கொணர்வோமாயின், சிக ரம் சிவனுக்கிடமா யிருப்பதும், அது தோள் முதலிய புறக் கருவிகளையும், மூச்சுப்பை (Lungs) நெஞ்சப்பை (Heart) முத லிய அகக்கருவிகளையுங் குறிப்பதும் செவ்வனம் அறியலாகும். மகரமாகிய வயிற்றிற்கு மேலுங் கழுத்திற்குக்கீழுமுள்ள மெய்ப் பகுதியே சிகரத்தாற் காட்டப்படுகின்றது. சகரத்தை எழுதிய பின் அதைச் சிகரமாக்குதற்குக் கீறப்படும் வரி தோளிலிருந்து இறங்குகின்ற கையை யொத்திருப்பது காணத்தக்கது. நகர மும் மகரமும் வலமிடமாகப் பிரிக்கப்பட்டவாறே சிகரமும் பிரிக்கப்பட வேண்டும். நகரம் நிலத்தையும் மகரம் புனலையுஞ் சுட்டியவாறு சிகரம் நெருப்பைக் குறிக்கும்.

ஐம்பெரும் பகுதிகளுள் நிலம், நீர் என்ற பருப்பொருள் களுக்குப் பின் நெருப்பைக் கொண்டுவருவது இயல்பேயாம்.

நிலத்தையு நீரையும்போல் தீ அத்துணைத் திண்ணியதன்று; காலையும் வானையும்போல் அத்துணை நுண்ணியதுமன்று. நீரிலிருந்து நிலந் தோன்றிற்றென்பது பழைய கொள்கை. இது தெரித்தற் பொருட்டு நீரிற் கிடக்கின்ற மாயோனது உந்தித் தாமரையினின்றும் நிலத்தோனாகிய அயன் வெளிப்பட்டானென மொழிப. நெருப்பினால் நீர் விளைந்ததென்பதும் பண்டிருந்தோர் கொள்கையாம்.

"கருவளர் வானத் திசையிற் றோன்றி
யுருவறி வாரா வொன்ற னூழியு
முந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியுஞ்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெய றலைஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கு
முள்ளீ டாகிய விருநிலத் தூழியும்"

(திருமால்—இரண்டாம் பரிபாடல்—5-12 வரிகள்.)

என்று கூறப்பட்டிருப்பது கொண்டு இஃதறியப்படும். ஈண்டு ஊழி என்பதற்கு நிலை (Stage) என்று பொருள் தருவது நன்றெனத் தோன்றுகின்றது. மேற்காட்டிய அடிகளுக்கெழுதிய உரையின்கீழ், "பரம்பொருளினின்றும் ஆகாயந் தோன்றி, அதனின்றுங் காற்றுத் தோன்றி, அதனின்றுந் தீத்தோன்றி, அதனின்றும் நீர் தோன்றி, அதனின்று நிலந்தோன்றிற்றென்று வேதத்துள்ளும் கூறப்பட்டது" என்று பரிமேலழகர் குறித்துளார். நுண்ணியவற்றிலிருந்து பருப்பொருள்கள் தோன்றுமுறை யிங்கு விரிக்கப்பட்டது. நிலம், நீர் என்பவற்றிற்குப் பின் நெருப்பு வரவேண்டிய ஒழுங்கை இதனால் தெள்ளிதிற் காணலாம். நெருப்பிற்கும் சிவனுக்குமுள்ள கேண்மையை இறந்த பகுதிகளில் விரிவாக விளக்கினோம். ஈண்டு வேறொரு முறையில் அதைத் தொடர்வாம்.

நெஞ்சப்பை, மூச்சுப்பை முதலிய அகக்கருவிகளும், கைகளாகிய புறக்கருவிகளுங் கூடிய உடற்பகுதியை நெருப்பிற்குஞ் சிவனுக்கும் இடமாகக் கொண்டதன் இயைபை முதலில்

நோக்குவாம். இரவு, பகல்; தூக்கம், இயக்கம்; வாங்குமாற்றல், பாயுமாற்றல் என்று நாம் முன் கண்டவற்றில் பகல், இயக்கம், பாயுமாற்றல் ஆகிய மூன்றும் ஒன்றிச் சிவனைச் சாருமென்பது காட்டப்பட்டது. இயக்கமுண்டாக்குங் கருவிகளாய கைகளிருக்கும் உடற்பகுதியைச் சிவனுரோடு சேர்த்தல் பொருந்தும் ஆனல், நெருப்பிற் கிடமாய் இப்பகுதியைக் கொண்டதற்குக் காரணம் வேண்டும். அஃதென்னை?

எரிதல் என்னுந் தொழில் நிகழ்வதற்கு இன்றியமையாதது காற்றிலுள்ள உயிர்வளி (Oxygen) யாகும். காற்றில்லாவிடத்து எரிதல் இல்லை. உடலிற் காற்று நடமாடுமிடம் நெஞ்சன்றோ? நெஞ்சிற் காற்று வருவதும் போவதும் எற்றிற்கென்றறிந்தவர்க்கு, நெஞ்சிற் சிவனை நிறுத்தியதன் காரணம் வெளிப்படாமற் போகாது.

வயிற்றிற் செல்கின்ற உணவு சாறுகவுஞ் சக்கையாகவும் பிரிந்து போகின்றது. சாறு குருதியோடு கலக்கச் சக்கை எருவிடு வாயிலால் வெளிப்படுகின்றது. உணவின் பகுதியாகிய அழுக்கு இங்ஙனம் எளிதில் தள்ளப்படுமாயினும் குருதியொடு ஒன்றி நிற்கும் நண்ணிய மலம் இந்த முறையில் நீங்காது. இதை எரித்துத்தான் வெளிப்படுத்தல் வேண்டும். மலத்தை எரித்துத் தொலைப்பவனுகிய சிவன், உடலில் இந்நிகழ்ச்சி நடைபெறும் இடத்தொடு சிவனை நிற்பது ஏற்புடைத்தென்பதைத் தெரிவிக்கவே, மூச்சுப்பையும் நெஞ்சுப்பையு மிருக்குமுடற்பகுதியில் அவனுக்கிடம் வகுக்கப்பட்டது. முப்புர மெரிசெய்தவதனல் மும்மல நீக்கமன்றோ காட்டப்பட்டது?

நோய்கள் தோன்றுவதற்குக் காரணம் குருதியில் அழுக்கு அல்லது கிருமிகள் மிகுவதேயாம். உடலை வருத்தும் நோய்க்குக் காரண மிதுவாதற் போலவே, உயிரை வாட்டும் பிணிக்குக் காரணம் மலமென்றறிதல் வேண்டும். நெஞ்சப் பையிலிருந்து புதிய இரத்தம் நரப்புக் குழாய்களின் வழியாக உடலெங்குஞ் சென்று ஆங்காங்குள்ள அழுக்குகளைப் பற்றிக்கொண்டு வேறு குழாய்களின் வாயிலாய் மூச்சுப்பைக்கு வந்து சேருகின்றது.

ஈண்டு நாம் முகர்கின்ற காற்றிலுள்ள உயிர்வளி, இரத்தத்திலுள்ள மலத்தொடு புணர்ந்து கரிமலவளியாகி (Carbon-di-oxide) வெளிப்படுகின்றது. மலங்கழிந்த செந்நீர் மறுபடியும் நெஞ்சப்பையுட் சென்று, ஆண்டிருந்து முன்போல் உடலெங்கும் பரவுகின்றது. இங்ஙனம் நடைபெறுகின்ற சுற்றியக்கம் (Circulation) இடையூறின்றி நிகழுமாயின் உடம்புக்குக் கேடில்லை. மலத்தொடு உயிர்வளி பொருந்துங்காற் சூடுண்டாகிறது. இஃது எரிதலாற் பிறக்கின்ற சூடு. நாம் உள்ளே வாங்குகின்ற காற்றைவிட வெளியே செலுத்துகின்ற காற்று வெப்பமுடையதாயிருப்பது கொண்டு இதை யறிந்துகொள்க. நெருப்பிற்குஞ் சிவனுக்கும் நெஞ்சைவிடச் சிறந்தவிடம் வேறுண்டுகொல்!

இஃதன்றித் தில்லையில் திருக்கூத்து நடப்பது மூச்சு வாங்குவதும் விடுவதுமாகிய தொழிலொடு பொருந்தியதென்று சொல்லப்படுகிறது. புறத்தில் தில்லை அகத்தில் நெஞ்சையொத்தது என்று ஓர் உரையும் உண்டு. இதுபற்றிக் கோவில் எனுஞ் சொல் தில்லைக்குச் சிறப்பாக வழங்கப்படும். உள்ளும் புறமும் நடக்கின்ற இயக்கமே சிவனது கூத்தென்பது உணாற்பாலது.

இயக்கமில்லாவிடின் வையகம் நாற்ற மெடுத்துப்போம். ஓடாது கட்டுப்பட்ட நீர்நிலையிற் புழுக்கள் தோன்றி நாற்ற மெடுப்பதை யறியார் யார்? உயிருந் தான் தோன்றிய விடத்திற் கிடந்து, அண்மையிலிருப்பவற்றிற் படிந்து வாளாவிருக்குமாயின், மலத்திற் சிக்கி இருள் வாய்ப்படும்.

இருளுந் தூக்கமும் ஒன்றுமாறு ஒளியும் இயக்கமும் ஒன்றும். தூக்கத்தை (சுகத்தை) விரும்பும் உயிர் ஒளியை விட்டு விலகுவது திண்ணம். இயக்கமென்பது புடைபெயர்ச்சி யாதலால் அதற்கு முயற்சி வேண்டும். முயற்சி, பயிற்சி என்பன கீழிருந்து மேலேறுதற் கின்றியமையாதனவாம். எத்துறையினும் வெற்றி பெறுவதற் கிவையே வழிகளாம். கீழே விழுதற்கு முயற்சி வேண்டியதின்று. உயரச் செல்லவிடாது யாவற்றையுங்

தடுக்கின்ற நிலத்தினது ஈர்க்குமாற்றல் (Gravitation) போல் உயிரைக் கீழே யிழுக்கின்ற ஒரு வலியுண்டு. இதை மலமென்ப. மலம், இருள், கருமை யாவன ஒரு பொருட் பன்மொழிகளாம். இயற்கையாகவே ஒவ்வோருளத்திலும் மலமுளது. ஒளி நோக்கி மேற்செல்லும் உயிரின் முயற்சியைக் கீழ்நோக்கி யிழுக்கும் இருள் தடை செய்கின்றது. இங்ஙனம் ஒளிக்கும் இருளுக்கும் போர் நடக்கின்றது. இப்போரே அறம்; இதில் ஒளி பெறும் வெற்றியே வீடு. இயக்கத் தலைவனின் உதவியின்றி உயிர் இருளை விட்டகல்வ தெங்ஙனம்?

நானிலத்திலுள்ள மலத்தைத் தாங்கிக்கொண்டு செல்கின்ற நீரிற் பெரும் பகுதி ஆறுகள் வழியாகக் கடல்போய்ச் சேர்கின்றது. வையகத்தின் அழுக்கை எல்லாம் வாங்கியும் கடல் கறைபடுவதில்லை. ஏனெனின், கடலில் ஓவா இயக்கமுண்டு. இயக்கம் தூய்மை செய்வதை இதனால் அறிந்துகொள்க. நீரை ஆவியாக்கி விண்ணில் ஏறச் செய்வது கதிரவன் வெப்பம் அல்லது தீயாகும். உயிரும் விண்ணேறுவதற்கு வழி இதுவாம். அழுக்கு நீங்கினாலன்றி நீர் மேலேறாது.

கடல்நீர் ஆவியாக மாறி, முகிலா யெழுந்து, மழையாய் விழுந்து, ஆறாய்ப் பெருகி, முந்நீரிற் கலப்பது உடலில் நாம் முன்னர்க் கண்ட சுற்றியக்கமாகும். இத்தகைய ஒரு சுற்றியக்கம் ஒளிக் கடலாகிய இறைவனுக்கும் உயிர்கட்கு முண்டென்று கொள்க. நீரைவிட நமக் கின்றியமையா ததாகிய காற்றும் அசையாது நின்றுவிடின் நச்சுத்தன்மை எய்திவிடும். இயக்கத்தால் காற்று தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்கிறது.

நில உருண்டை நிலைபெயராது நிற்குமாயின், அதன் விளைவு என்னும் என்று நினைப்பதற்கு மஞ்சுதும். ஞாயிறுந் திங்களுங் கோள்களும் உடுக்களும் இயங்கிச் செல்கின்ற முறையையும் மாட்சியையுங் கருதி விந்தை மேலிட்டு ஒடுங்கா உளமும் உளங்கொல்! இயக்கமின்றேல் தோற்றமுமில்லை வளர்ச்சியுமில்லை; படைப்பு (அயன்) மில்லை, காப்பு (அரி)மில்லை. எங்கும் வெளிப்பட்டு மிளிர்கின்ற இவ்வியக்கம் விண்ணினும் மண்ணி

லும் வியத்தகுசெயல் பல நிகழ்த்தி, யாவற்றையுந் தத்தம் நெறியிற் செலுத்து மிவ்வியக்கம், அறிதற்கும் பகர்தற்கு மரிது.

அவா, வெகுளி, அழுக்காறாகிய கருமையிலிருந்து நீங்க, ஒளிக்கு மியக்கத்திற்கும் நிலைக்களனாய் விளங்குந் தலைவனது உதவி வேண்டும். தூங்கற்க, விழித்தெழுக.

முற்றும்.

அகத்தியர் ஆரியரா? தமிழரா?

[வித்துவான் ஞா. தேவநேயன்]

மக்கள் முதன்முதல் தோன்றினவிடம் இந்துமகா சமுத்திரத்தில் ஒரு காலத் தமிழ்ந்துபோன நிலப்பரப்பே (Lemuria) என்பது, Hackel, Clater, Thurston முதலிய மேனாட்டுப் பண்டிதர்களின் உய்த்துணர்வு. திருநெல்வேலிக்குத் தெற்கே ஒரு பெரிய நிலப்பரப்பு (குமரி நாடு) முற்காலத்தி லிருந்ததென்பது தொல்காப்பியம், சிலப்பதிகாரம், புறநானூறு, கலித்தொகை, திருவாசகம், சிவதருமோத்தரம், கந்தபுராணம் முதலிய நூல்களால் அறியக் கிடக்கின்றது. அந்நிலப்பரப்பில் பேசப்பட்ட மொழியே உலக முதன்மொழி யென்றும், அதினின்றும் கிளைத்தவையே ஏனைய மொழிகளெல்லா மென்றும் Hackel பண்டிதர் மானிக்கிறார்.

உலகத்தில் மகன் தோன்றினது குரங்கினின் றென்பது Darwin, Hackel முதலியோர் கருத்து. அஃறிணை உயிர்களில் மனிதனுக்கு அடுத்தது குரங்கென்பது யாவர்க்கும் தெரிந்த செய்தி. குரங்குகளிற் சில சிறப்பறிவுள்ள இனங்கள் ஆதியில் தென்னாட்டில் இருந்ததாக இராமாயணத்தாற் றெரிய வருகின்றது. இதுபற்றியே Darwin முதலியோர் கருத்தும் எழுந்ததாகும். தமிழிலும் குரங்கு வானரமென்று சொல்லப்படும். வால்+நரம்=வானரம், வாலையுடைய மனிதனென்பது பொருள். ஆனால் குரங்கினின்றும் மனிதன் உண்டானானென்பது தவறான கொள்கையே.

குமரிநாடு தமிழ்நாடாதலாலும், அதில் பேசப்பட்டது தமிழாதலாலும் தமிழரே முதன் மக்கள் வகுப்பினரென்றும், தமிழே முதன்மொழி யென்றும் பெறப்படும். உலகத்தில் மக்களுண்டான காலமாவது தமிழுண்டான காலமாவது இது வென வரையறுத்துக் கூற ஏலாதவாறு அத்துணைத் தொன்மைத்தாயிருக்கின்றது. ஒரு மதிப்பாய்ச் சொல்லுவதானல் கி. மு. 10,000 என்று சொல்லலாம்.

மக்கள் பல்கினவுடன் பலமுறை கூட்டங் கூட்டமாக வடமேற்கே சென்று மேலாசியாவிற் குடியேறினதாகத் தெரிகின்றது. பைபிள் என்னும் கிறிஸ்தவ மறையில் ஆதியாகமத்தில் (கி. மு. 5000) மேலாசியாவில் கிளர்ந்த ஒரு பெரு வெள்ள வரலாறு கூறப்பட்டுள்ளது. அதன்பின்,

"பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரே விதமான பேச்சும் இருந்தன.—ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம் பண்ணுகையில் சிநேயார் தேசத்திலே சமபூமியைக் கண்டு அங்கே குடியிருந்தார்கள்." (ஆதி. 11: 1, 2.) என்றிருக்கின்றது. இதிற் குறிக்கப்பட்டது தமிழர் வடமேற்கே சென்ற பல செலவுகளில் ஒன்றுதல் வேண்டும்.

காலஞ் செல்லச் செல்லப் பலவகைத் திரிபுகளினல் தமிழினின்றும் பலவகை மொழிகள் கிளைத்தன. இந்த தேசத்தில் தெற்கினின்றும் வடக்கே போகப்போகக் கொடுந்தமிழாயும் கிளைமொழியாயு மிருக்கும். பின்பு மேற்கே செல்லச் செல்லத் தனி மொழிகளாய் மாறிவிடும். ஆயினும் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் மாருமலே யிருக்கும். தமிழர் வடமேற்கே போய்க் குடியேறினர் என்பதற்கு இதுவும் ஓர் ஆதாரமாகும். இதை யறியாதார் வடநாட்டு மொழிகளிற் பல தமிழ்ச்சொற்களுண்மைப்பற்றித் தமிழர் வடக்கேயிருந்து வந்தவரெனத் தடுமாறியுரைப்பர்.

எல்லா மொழிகளும் இயற்கை, இயற்கைவிியற்கை, செயற்கை, செயற்கையிற்செயற்கை என நாற்பாற்படும். அவற்றுள் தமிழ் ஒன்றுமே இயற்கைவிியற்கை. தெலுங்கு

கன்னடம் முதலியவை இயற்கை. எபிரேயம், லத்தீன் முதலியவை செயற்கை. சமஸ்கிருதம் ஒன்றும் செயற்கையிற் செயற்கை.

மேனுட்டு அரசுகள் எல்லாவற்றுக்கும் முந்தியது யூதம் (the Jewish). அதற்குப் பிந்தியது பாபிலோனியம். பாபிலோனில் நாகரீகத்தைப் பரவச் செய்தவர் சுமேரியர் என்னும் தமிழ் வகுப்பாரென்னும் பிரித்தானியப் பொருட்காட்சிச் சாலையிலிருந்த ஹால் (Hall)என்பவர் கண்டுபிடித்திருக்கின்ருர். சுமேரியர் நாகரீகத் தமிழரும் அவர்க்கு முன்சென்ற ஏனையோர் அநாகரிகத் தமிழருமாவார். பாபிலோனியத்திற்குப் பிந்தியது கிரேக்க ஆரியவரசு.

வடமொழியாரியர் இந்துதேசத்தில் (கி. மு. 3000) குடியேறினபோது வடுகு மட்டும் வடநாடுகளில் வழங்கிற்று. வடுப்பட்ட தமிழ் வடுகு. தெலுங்கு என்ற பெயர் மிகப் பிந்தினது. வடுகு முதலாவது கொடுந்தமிழாயிருந்து பின்பு (கி. மு. 3000) கிளைமொழியாய்ப் பிரிந்துவிட்டது. ஆரியர் இந்தியாவுக்கு வரும்போது அநாகரிகரா யிருந்தனர்.

“ஆரியர் மிலேச்சர்” என்பது திவாகரம்.

சமஸ்கிருதம் ஜெர்மானிய மொழியைச் சார்ந்ததென்று முன் கட்டுரையில் மொழிந்தாம். மேனுட்டு மொழிகட்கெல்லாம் உயிர்மெய் எழுத்துமுறை முதலியன இல்லாததுபோல வடமொழிக்கும் இல்லாதிருந்தன. பின்பு தமிழைப் பின்பற்றியே அவை வடமொழிக்கு வகுக்கப்பட்டன. இதை வடமொழியும் தென்மொழியும்’ என்னுமோர் கட்டுரையில் விரிவாய் விளக்குவாம்.

ஆரியர் இந்தியாவிற்கு வந்தபின், வடநாட்டில் வழங்கும் கொடுந்தமிழ்ச் சொற்கள் வடமொழியில் மிகுதியாய்க் கலந்தன. ஆரியர் ஆரிய வர்க்கத்தி லிருந்துகொண்டு பல தேவதோத்திரத்திரட்டாகிய வேதங்களை யியற்றினுர்கள். பிற நூல்களெல்லாம் பெரும்பாலும் தமிழ்ச் சார்பிற் பிறந்தவை. ஆரிய வரவுக்கு முன்னரே தமிழர் முத்தமிழிலும் பல கலை

களிலும் கைத்தொழில்களிலும் தலைசிறந்திருந்தனர். சிற்பம், கம்மியம், ஓவியம், கண்ணுள் வினை (Painting) முதலிய நுண்டொழில்களைக் கற்க யவன (கிரேக்கர்) ரும் சோனக (துலுக்கர்) ரும் வந்திருந்தனர். பின்பு தமிழ் தலைதாழ்ந்தது. காரணம் யாதோ அறிகிலம். பாண்டியர் தமிழ்ப் புலவரை ஆதரித்திலர் போலும். தமிழ் நூல்கள் பயிலப்படாது ஏட்டுச் சுவடிகளாய் மட்டுமிருந்தன. அக்காலை வந்தார் அகத்தியர். (கி. மு. 2500)

அகத்தியத் தமிழ்க் கிளர்ச்சி (The Agustian Revival of Tamil Literature)

அகத்தியர் என்னும் பெயர் அகஸ்தியர் என்னும் வடமொழிப் பெயரின் தற்பவம். விந்தமலையை அடக்கினவர் என்று அதற்குப் பொருள் கூறுவர். தமிழரோ செந்தமிழ்ப் பெயராகக் கொண்டு தமிழுக்கு அகத்தியமானவர் என்று பொருளுரைப்பர். அகத்தியர் தென்னாடடைந்ததைப் பற்றிப் பல வரலாறுகளுள. அவற்றுள் இரண்டு வருமாறு :—

1. கைலாயத்தில் சிவபெருமான் திருமணத்திற்காகத் தேவரெல்லாங் கூடியபோது வடதிசை தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. அன்று பூமியைச் சமப்படுத்துவதற்காகத் தேவர் வேண்டுகோட்படி சிவபெருமான் கட்டளை பெற்றுத் தெற்கே சென்ற அகத்தியர், தென்னாட்டில் தமிழர் வினவும் வினாக்கட்கு விடை யளிக்குமாறு சிவபெருமானிடம் தமிழ் கற்றுப் பொதிய மலை சென்று அங்கு வதிந்தனர்.—இதனால் அகத்தியர் தமிழரல்ல ரென்பதும், அகத்தியருக்கு முன்பே தமிழிருந்த தென்பதும் பெறப்படும்.

2. ஒரு காலத்தில் காசியிலிருந்த வடமொழிச் சங்கத்தார் அகத்தியரை அவமதித்தனர். அதனால் அவர் மாறுகொண்டு முருகனிடம் சென்று வரங்கிடந்தனர். முருகன் அவர்க்குக் காட்சி யளித்துச் சில ஏட்டுச் சுவடிகளைக் காட்டி, அவற்றால் தமிழை வளர்க்குமாறு பணித்தனர். அகத்தியர் அங்ஙனமே அச்சுவடிகளைக் கொண்டு போய்ப் பொதியத்தி

லிருந்து தமிழை வளர்த்தனர்.—இதனுல் அகத்தியர்க்கு முன்பே தமிழ் நூல்கள் ஒரு முறை கல்வி வழக்கற் றிருந்தன வென்றும், அகத்தியர் அவற்றை ஆராய்ந்து தமிழ் வளர்த்தா ரென்றும் அறியப்படும்.

ஆரியம் அக்காலத்தில் மிகத் திருந்தாமலும் நிரம்பிய நூல்களில்லாமலு மிருந்ததே அகத்தியர் தமிழைக் கற்றதற்குச் சிறந்த காரணமா யிருத்தல் வேண்டும். அதோடு உச்சரிப் பருமையாலும் வடமொழி உலக வழக்கிற்கு ஏற்றதாயில்லை.

அகத்தியர் தென்னுடடைந்த போது குமரி நாட்டைக் கடல் கொள்ளவில்லை. அதன் தெற்கில் பஃறுளியாறும் மேற்கில் குமரி மலையும் வடக்கில் குமரியாறு மிருந்தன. பஃறுளியாற்றங்கரையில் தென்மதுரை யிருந்தது. அதுவே அற்றைப் பாண்டியன் தலைநகர். அகத்தியர் முதனூல்களைத் தழுவித் தம் பெயரால் அகத்தியமெனப் பெயரிய ஒரு பெரு நூலைச் செய்தார். அது முத்தமிழையுங் கூறும் பன்னீராயிரஞ் சூத்திரங் கொண்டது. அதன் பெருமை பற்றி அதைப் பேரகத்தியமென்பது வழக்கம். இதை யறியாதார் சிற்றகத்தியமும் ஒன்றிருந்ததெனச் சாதிப்பர். அங்ஙனமாயின் ஒரு முதுபுராணரும் ஒரு சிற்ருசிரியரும் ஒரு சிறுகதையு மிருந்திருத்தல் வேண்டும். சிறப்பியல்பு பற்றி இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை வழக்காற்றினு முண்டு. (*c. f.* Akbar the Great; Queen Victoria the Good). இப்போது பேரகத்தியத்திரட்டு என வழங்கும் நூலிலுள்ள சூத்திரங்களிற் பல அகத்தியத்தைச் சார்ந்தனவல்ல; பிற்காலத்துச் சேர்க்கப்பட்டவை; ஆதலின் ஆராய்ச்சிக்காகா.

அகத்தியர் தமிழை வளர்க்குமாறு ஒரு சங்கம் (கழகம்) நிறுவி அதை ஆதரிக்கும்படி பாண்டியனை வேண்டினர். அவனும் ஆதரித்தனன். அதுவே தலைச் சங்கம். அஃது இருந்தது தென்மதுரை. அதற்கிலக்கணம் அகத்தியம். அதன் இறுதிக் காலத்தில் தொல்காப்பியர், அவிநயர் முதலிய பன்னிருவர் அகத்தியரிடம் தமிழ் பயின்றனர். அவருட் பெரும்பாலார்

ஆரியர். தலைச்சங்கத்தில் அகத்தியர் இருந்தது மகேந்திர (குமரி) மலை. அங்கிருந்தே சிவபெருமானிடம் ஆகமங்களைக் கேட்டறிந்ததாகத் தெரிகிறது. பின்பு குமரி நாட்டின் இடைப் பகுதியைக் கடல் கொண்டது. (தென்பாகம் சிறிது காலமிருந்து பின்பு கடலில் அமிழ்ந்தது. அதுவே சூரபதுமன் ஆண்ட இடம். வடபாகம் இராமாயணத்திற்குப் பின்பு அமிழ்ந்ததாகத் தெரிகிறது.)

குமரி நாட்டைக் கடல்கொண்ட பின் பாண்டியன் தலைநகர் பொருநை (தாமிரபரணி) முகத்திலிருந்த கபாடபுரத்திற்கு மாற்றப்பட்டது. அகத்தியரும் தமது இருக்கையைப் பொதியமலைக்கு மாற்றிக்கொண்டனர். பொதியம் என்பது பொதியில் என்பதன் மரூஉ. பொது + இல் = பொதியில் = அம்பலம். (இலக்கணப்போலி.) அக்காலத்து ஆசிரியரெல்லாம் முனிவராதலின் மலைகளே இருக்கைகளாயிருந்தன. பொதியிலுக்கு மறுபெயர் மலையம். மலை என்னும் பொதுப்பெயரே அம் சாரியைப்பெற்றுப் பொதியிலைச் சிறப்பாய்க் குறிக்கும். பொதுப்பெயர் சிறப்புப் பொருளைச் சுட்டுவதை மலரடி என்னும் தொடரிற் காண்க. மலர் என்றது தாமரை மலரை. மேற்குத் தொடர்ச்சி மலைகள் அக்காலத்தில் குடமலை யெனப்பட்டன. மகேந்திரமும் பொதியமும் குடமலைப் பகுதிகளாகும். குடதிசையிலிருந்தது பற்றி அகத்தியர் குடமுனிவர் எனப்பட்டனர். அதை யுணராதார் குடத்திற் பிறந்தவரென்று புராணங் கட்டிவிட்டனர். அதன் பின்பு கும்பமுனி, கலசமுனி, என அதன் இனமொழிகளாலும் பெயர் வழங்கத் தலைப்பட்டன.

கபாடபுரத்தில் இடைச்சங்கம் நிறுவப்பட்டது. தொல்காப்பியர் முதலிய அகத்தியர் மாணவர் பன்னிருவரும் தலைமை பெற்றிருந்தனர். அகத்தியமும் (தலைச்சங்கத்திற்கும் இடைச்சங்கத்திற்கும் இடையில் தொல்காப்பியர் செய்த) தொல்காப்பியமும் இலக்கணமாயின. அகத்தியர் இடைச்சங்கத்தில் நீடித்திருக்கவில்லை. அகத்தியமும் அங்ஙனமே தலைச்சங்க காலத்தில் மக்கட்கு அறிவும் ஆற்றலும் ஆயுளும் அதிகமாயிருந்ததி

ணல் முத்தமிழும் ஒருங்கு பயிலப்பட்டன. இடைச்சங்க காலத்தில் அவை மிகக் குறுகினதினல் முத்தமிழ் வேறு வேறு பிரிந்தன.

இடைச்சங்கம் இராமாயண காலம். (கி. மு. 2000) வடமொழியில் முதற்காவியம் வான்மீகிராமாயணம். வான்மீகியும் இராமரும் சமகாலத்தவர். இராமர் தென்றிசைக்குச் சென்றபோது அகத்தியரிடம் வில்லம்பு பெற்றனர். அகத்தியர் தம் இசையறிவால் இராவணனை வென்று அவனைத் தமிழ் நாட்டிற் காலிடாவண்ணம் செய்திருந்தனர்.

சுக்கிரீவன் சீதையைத் தேடுமாறு அனுமானைத் தென்றிசைக் கனுப்பும்போது,

"..................அவ்வாறே ஆந்தரம், புண்டரம், சோளம், பாண்டியம், கேரளம் முதலிய நாடுகளையும் காண்பீர்கள்......... அந்த மலயமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனி சிரேஷ்டரான அகத்தியரைக் காண்பீர்கள்..........அதைவிட்டு அப்பாற்சென்றால் முத்தாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டிய நாட்டின் கதவைக் காண்பீர்கள். (இதுவே கபாடபுரம்) அதன்பின் தென் சமுத்திரத்தை யடைந்து பின்பு செய்ய வேண்டியதை நிச்சயம் பண்ணுங்கள். அந்த சமுத்திரத்தின் கண்ணே மலைகளுட்சிறந்ததும், சித்திரமான பலவித குன்றுகளை யுடையதும், பொன்மயமானதும், நானுவித மரங்களும் கொடிகளும் செறிந்ததும், தேவர்களும் ரிஷிகளும் யக்ஷர்களும் அப்சரப் பெண்களும் தங்குவதும், சித்தர்களும் சாரணர்களும் கூட்டம் கூட்டமாக இருப்பதுமாகிய அழகிய மகேந்திர மலை முழுகிக்கிடக்கின்றது." என்று சொன்னதாக வால்மீகியிராமாயணம் (மொழி பெயர்ப்பு) கிஷ்கிந்தா காண்டத்திற் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் ஜமதக்கினியின் புதல்வரென்று நச்சினர்க்கினியர் கூறியுள்ளார். ஜமதக்கினி பரசுராமரின் தந்தை. பரசுராமரும் இராமரும் சமகாலத்தவர். ஆகவே எவ்விதத்திலும் இடைச்சங்க காலமே இராமாயண காலமாத லறிக.

அகத்தியர் இராமாயண காலத்துக்கு முன்பே தென்னாடு வந்தவர். இக்காலத்திற் றெரியும் தமிழிலக்கணிகள் எல்லாரினும் முற்பட்டவராதல்பற்றி அவரைத் தமிழரென்று சொல்லுதல் பொருந்தாது. அகத்தியர் காலத்திலிருந்து தமிழை வளர்த்தவர் பெரும்பாலும் ஆரியரேயாவர். அவர்க்குத் தமிழே தாய் மொழியாயிற்று. (கடைச் சங்கத்தில் நக்கீரனார் கபிலர் முதலிய அந்தணரே தலைமை பெற்றிருந்தனர். இற்றைப் பார்ப்பனரோ தம் முன்னோர் செய்த நன்றியை யெல்லாம் சிதைத்து வருகின்றனர்.) கடைச்சங்க காலத்திற்குப் பின், பல பாண்டியரிருந்தும் எங்ஙனம் தமிழை வளர்த்திலரோ, அங்ஙனம் தலைச் சங்கத்துக்கு முன்னும் பல பாண்டியர் தமிழை வளர்த்திலர். அகத்தியர்க்கு நெடுங்காலத்திற்கு முன்னர்த்தான் தமிழரே தமிழை ஆதரித்திருக்க வேண்டும்.

(தொடரும்.)

கோளறு பதிகம் - செய்யுள் ௨.

[திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள்; B. A., L. T.]

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனு
லொன்பதொ டொன்றொடேழு பதினெட்டொடாறு
முடனாய நாள்களவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

இது திருஞான சம்பந்தர் தேவாரத்தில் ஒன்று. இந்நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருமறைக்காட்டில் அற்புதங்கள் செய்து அமர்ந்திருந்தகாலை கூன்பாண்டியவரசன் மனைவியார் மங்கையர்க்கரசியாரும் மதிமந்திரி குலச்சிறை நாயனாரும் அனுப்பிய தூதர் பிள்ளையாரிடம் தாம் கொண்டுவந்த சுருளைக் கொடுத்தனர். சமண சமயப் பெருக்கால் சைவசமயம் குன்றி

யதை அதில் பொறித்திருந்தது. அரசனும் அச்சமயந் தழுவி யதை நொந்து பாலருவாயரை அழைத்துச் சைவ சமயத்தை முன்னிலைக்குக் கொண்டுவர நினைத்தனர். சுருளைப் பிரித்துப் படித்ததும் ஞானசம்பந்தருடைய மனம் வருத்தமுற்று உடனே பாண்டிய நாட்டிற்குப் புறப்பட வெண்ணினர். வெகு காலம் சமண சமயப் பெரியராயிருந்து சூலை நோயால் மீட்கப் பட்ட வாக்கரசர் சமண வாசகத்தை யோதி நாளும் கோளும் சரியில்லை, புறப்படுவது நலமன்றென்றனர். அப்பொழுது சீகாழி மன்னர், புத்தேளிருக்காகப் பாற்கடலைக்கடைந்தஞான்று வாசுகி விடத்தைக் கக்க, அதை விழுங்கிய எம்பெருமானாகிய நீலகண்டன்மீது அன்பு அடியாரவர்க்கு மிகின் எக்கோளாயி னும் எந்நாளாயினும் இடர்ப்படுத்தாது என்றுகூறி யேகினர். செயமாது கைகொடுப்பள். நோய்பே யணுகாது. விலங்குகள் விலகும் என்று பலவாறு உறுதி மொழிந்தனர். முதற் செய்யு ளில் மூன்றாமடியில் 'நவகோள்களாகிய ஞாயிறு திங்கள் செவ் வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே' (ராகு, கேது) என்றும் இரண்டாஞ் செய்யுள் மூன்றாமடிக்கண் 'ஒன்பதொடொன்றொடேழும் பதினெட்டொடாறு முடனாய நாள்கள்' என்றும் வருகின்றதைக் காண்கின்றன. பின் தரப்பட்ட அடியின் பொருளை உரைகாரர் மயங்கக் கூறியுள் ளார். 'பிரயாணத்திற்காகாத பன்னிரண்டு நட்சத்திரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. 9-பூரம், 1-கார்த்திகை, 7 ஆயிலியம், 18-பூராடம், ஆறுமுடனாய நாள்கள் மேற்கூறிய நான்கு மல் லாது எட்டு நட்சத்திரங்களுமாம்.' 6 எப்படி 8-ஐக் குறிக்கிற தென்பது விளங்கவில்லை. நிற்க,

திரு. க. சாதாசிவ செட்டியாரவர்கள் 'அகத்தியர் தேவாரத் திரட்டு உரையில் எழுதியது அடியிற் குறிக்கப்பெற் றிருக்கின் றது. அவ்வுரையும் பொருத்தமாயில்லை.

[ஒன்பது-ஒன்பதாவது நாளும், ஒன்பதொடு ஒன்று-பத் தாவது நாளும், ஒன்பதொடு எழு-பதினாறாவது நாளும், பதி னெட்டு-பதினெட்டாவது நாளும், ஆறும்-ஆறாவது நாளும்,

உடனுய நாள்கள்-இவைகளோடு சேர்த்தெண்ணப்படும் நாட்களும், அவை-ஆகிய அவைகள் யாவும்.

இத்திருப்பாட்டில் ஆகாதனவாய நாட்கள் அடியார்க்கு நல்லனவென்பது கூறப்பட்டது. பிரயாணத்திற்கு ஆகாத நாட்கள்:—பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி என்பனவாம். ஒன்பதாவது—ஆயிலியம், பத்தாவது—மகம், பதினுருவது—விசாகம். பதினெட்டாவது—கேட்டை, ஆருவது—திருவாதிரை, உடனுப நாட்கள்—பிற ஏழு நாட்கள். இவ்வாறன்றிப் பலபடி யெண்ணுவோர் எண்ணிய தெய்தாது இடர்ப்படுவரென்க.]

இனி, இவ் வையப்பாட்டை எம்மூரின்கணுள்ள திருவாளர் தில்லைநாயகச் சோதிடரிடம் எடுத்தோதி விளக்குமாறு வினவினேன். அன்னுர் சிறிது சிந்தித்து அளித்த விடை மிகப் பொருத்தமாகத் தோன்றிற்று. அதனைச் செந்தமிழ்ச் செல்வியைப் போற்றுவாருக்குத் தெரிவிக்கக் கருதி இவண் வரைகின்றேன்.

9, 1. 7 ஆக மூன்று. 18 ஒடு 6-இருபத்து நாலு, ஆக 24 + 3 = 27 நட்சத்திரங்கள். இவற்றில் எதுவேயாயினும் அதனுல் இடரில்லை. அதற்குக் காரணம் 'ஈசனன்பு உளமே புகுந்தது' அவனன்பு அடியார்க்கு நிறைந்துளதேல் கிரகங்களும் நட்சத்திரங்களும் கேடு இழைக்கா என்று தெற்றெனத் தெளிவுறுகின்றது. யான் மயக்கவுரை யென்று கூறியதை மறுத்து அது தெளிவுரை யென்று காட்டுவார்க்கு என்றுங் கடப்பாடுடையேன்.

———

தென்னிந்திய தமிழ்ச் சங்கம் திருநெல்வேலி

தனித்தமிழ்த் தேர்வுகள்

தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களின் தமிழறிவை வளர்த்துத் தமிழறிஞர்கள் பலரைப் பெருக்கித் தமிழைப் பண்டைய வுயர்நிலைக்குக் கொண்டுவரத் தொண்டு புரிதலை மேற்கொண்டு 1924 ஜூனில் திருநெல்வேலியில் நிறுவப் பெற்றுள்ள தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்வுகள் 1926 ஜூன் முதல் ஆண்டுதோறும் திருநெல்வேலி, திருச்சி, சென்னை ஆரணி திருவனந்தபுரம், சிதம்பரம் ஆகிய தலை நகர்களில் நடைபெறுகின்றன. நிகழும் ஆண்டு வரை 101 மாணவர்கள், தமிழ்த் தேர்வு, இளந்தமிழ்ப் புலவர், தமிழ்ப்புலவர் பொது, சிறப்பு ஆகிய தேர்வுகட்கும் விண்ணப்பித்துள்ளார்கள். 34 பேர்கள் தேர்ச்சி யுற்றுத் தேர்ச்சியிதழும் பெற்றுப் பல கலாசாலைகளில் ஆசிரியர்களா யமர்ந்திருக்கின்றனர். வாரந் தவறாமல் உள் நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் சங்கப் பாடமுறைப் புத்தகம் முதலியன வேண்டிப் பலர் எழுதிப் பெற்றுப் பயின்று வருகின்றார்கள் ஆங்காங்குத் தமிழாசிரியர்களும் தங்கள் முயற்சியில் பல மாணவர்கட்குச் சங்கத் தேர்வுகட்குரிய பாடங்களைக் கற்பித்து மாணவர்களைத் தேர்ச்சி பெறவுஞ் செய்து வருகின்றார்கள். திருநெல்வேலிப் பக்கமுள்ளவர்கள் படிக்க விரும்பின் சங்கத்தைச் சார்ந்து நடத்தப்படும் "திருவள்ளுவர் செந்தமிழ்க் கல்லூரி"யில் சேர்ந்தும் பயில ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்ச் சங்கத் தேர்வுகளை ஆங்காங்கு நடத்தித்தந்த அறிஞர்கட்கும், வினாத்தாள் குறித்தும் விடைத்தாள் மதிப்பிட்டும் உதவிய தமிழ்ப் பேரறிஞர்கட்கும் சங்கத்தின் நன்றி யறிதலை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றனம்.

1931 ஜூன் 25, 26, 27, (எாஅ ஆனி ௰க, ௰உ, ௰ங) வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் நடந்த தனித்தமிழ்த் தேர்வுகட்கு விண்ணப்பித்துத் தேர்ச்சி யுற்றிருப்பவர்களின் பெயர் முதலியன அடியிற் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் ஒன்பதின்மர்; எழுதியவர் ஐவர்; தேர்ச்சி யுற்றவர் நால்வர். இளந்தமிழ்ப் புலவர்க்கு விண்ணப்பித்தவர் ஒருவர். அவர் எழுதித் தேர்ந்துள்ளார். தமிழ்ப் புலவர் பொதுவுக்கும் விண்ணப்பித்தவர் இருவர், எழுதியவர் இருவர், தேர்ந்தவர் ஒருவர்.

தேர்ச்சி யிதழ் பெறத் தக்கவர்

தமிழ்த் தேர்வு

இரண்டாவது வகுப்பு

பதிவெண் 78. V. இராமலிங்க நாயக்கர், குண்ணத்தூர்,
ஆரணி, வடஆற்காடு ஜில்லா.

மூன்றும் வகுப்பு

,, 75. சு. பார்வதி யம்மாள், சிவன் கோயில்,
தெற்கு ரத வீதி, பாளையங்கோட்டை.

,, 74. K. M. அண்ணாமலைச் செட்டியார்,
குப்பங்கிராமம், கண்ணமங்கலம் P. O.,
வடஆற்காடு.

,, 73. K. A. தாண்டவமூர்த்திக் கவுண்டர்,
உபாத்தியாயர், குப்பங்கிராமம்,
கண்ணமங்கலம் P.O., ஆரணி, வடஆற்காடு.

இளந்தமிழ்ப் புலவர்

மூன்றும் வகுப்பு


,, 25. சே. ஷான்முகமது ராவுத்தர், உபாத்தியாயர்,
தென்னூர் மந்தை, திருச்சி.

தமிழ்ப்புலவர் பொது

மூன்றும் வகுப்பு

,, 7. யோ. தங்கசாமி பாண்டியன், குறும்பலாப்பேரி,
பாவூர்ச் சத்திரம் P. O., தென்காசி.

திருநெல்வேலி. }
14—8—31. }
பு. சி. புன்னைவனநாதன்,
அமைச்சர்



'சாக்ரெட்டிஸ்' என்னுங் கிரேக்க தத்துவ நிபுணருக்கு நஞ்சு ஊட்டப்படுதல்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௯	மெய்கண்டான் யாண்டு-௭௱௮ புரட்டாசித் திங்கள் 1931ஆு செப்டம்பர்மூ—அக்டோபர்மூ	பரல் ௯

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் . . .

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
  மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
  ஓரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
  அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
  இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

(பதவுரை)

மைப்படிந்த கண்ணாளும் தானும்=மை தீட்டப்பெற்ற கண்களை யுடைய உமையாளும் சிவபெருமானும் (பிரியாது சேர்ந்திருக்கிற உமாமகேசுரனை —மாதிருக்கும் பாதியனை)

கச்சி மயானத்தான்=திருக்கச்சி மயானத்திலே யிருக்கிறவன்

வார் சடையான்=நீண்ட சடையை உடையவன்

என்னினல்லால்=என்று நாம் அவனுடைய பொது இயலை(தடத்த இலக்கணத்தை)ச் சொல்லக்கூடுமே அல்லாமல்

ஒப்புடையனல்லன்=அவனுடைய உண்மை இயலை (சொரூப இலக்கணத்தை)ப் பற்றி எந்தப் பொருளோடாவது உவமித்துக் கூறப்

படாதவன்; அஃதாவது, எந்தப் பொருளாவது அவனுக்கு ஒப்பு என்று சொல்லக் கூடாதவன்;

ஒருவனல்லன்=ஏகன் என்றாவது, அநேகன் என்றாவது கூறக் கூடாதவன்;

ஒரூரனல்லன்=யாதாம் ஓர் ஊரில் இருப்பவன் என்று கூறக் கூடாதவன்;

ஒருவமனில்லி=எந்தப் பொருளோடாவது பயனிலாவது மெய்யிலாவது உருவிலாவது உவமித்துக் கூறக் கூடாதவன்;

அப்படியும்=அவனுக்கு அந்த உருவமும்

அந்நிறமும்=அந்த நிறமும்

அவ்வண்ணமும்=அந்தப் பண்பும்

அவனருளே கண்ணாகக் காணினல்லால்=அவனுடைய திருவருளைத் துணையாகக் கொண்டு உணரவேண்டுமே அல்லாமல்

இப்படியன்=இந்த உருவத்தன்

இந்நிறத்தன்=இந்த நிறத்தன்

இவ்வண்ணத்தன்=இந்தப் பண்புடையவனென்றும்

இவன் இறைவன் என்று எழுதி=இவன்தான் இறைவன் என்று விரலாற் சுட்டியும், துணியில் எழுதியும்

காட்டொணாதே=காட்ட முடியாதவன்.

ஏ=அசை நிலை.

(விளக்க உரை)

மைப்படிந்த கண்ணாளுந் தானும் கச்சி மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லால் என்பது இறைவனுடைய பொதுவியலை (தடத்த இலக்கணத்தை)க் குறிக்கின்றது.

> "ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
> திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ"

என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியிருத்தல் காண்க. பின் மூன்று அடிகளிலும் இறைவனுடைய உண்மையியல் (சொரூப இலக்கணம்) கூறப்படுகின்றது.

ஒப்புடையனல்லன்=அவனுக்கு ஒப்பான ஒரு பொருள் இல்லை என்பது பொருள்.

ஒருவமனில்லி—அவனோடு மெய் பயன் உருவுகளில் எதிலாவது உவமித்துக் கூறக் கூடாதவன் என்பது பொருள்.

அப்படியும், அந்நிறமும், அவ்வண்ணமும் என மூன்று வகையாக அடிகள் சொன்னது முறையே இறைவனுடைய உண்மை அறிவு இன்ப (சச்சிதாநந்த)த் தன்மையை. "பூவண்ணம் பூவின் மணம் போல மெய்ப்போத வின்பமா வண்ணம் மெய் கொண்டவன்" என்று திருவிளையாடற் புராணத்திற் கூறியிருத்தல் காண்க.

அவனருளே கண்ணாகக் காணுதலாவது, ஒருயிர் தத்துவக் கருவிகளைக் கடந்து நின்று அவனுடைய அருளோ டொன்றுபட்டு வேறற நின்று தன்னிலே (உயிரிலே) அவனை விளங்க உணர்தலாகும். அவ்வாறு ஒருயிர் இறைவனைத் தன்னறிவிலே விளங்க உணர்தல் அவன் கதிரோனைக் காந்த விளக்கு முதலிய விளக்குகளின் ஒளி கொண்டு பார்க்க முடியாது தனது கண்ணொளி கதிரோனொளியோ டொன்றுபட்டு நின்று பார்த்தல் போல்வது.

3-வது அடியில் அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் என்று சொன்னதற்கு ஏற்ப, அடிகள் 4-வது அடியில் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று கூறினார்.

இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே என்றதனாலே விரலாற் சுட்டியும் கையால் எழுதியும் ஊனக் கண்ணாற் சுட்டி அறியப் படுகிறவனல்லன் என்பதும் அகக்கண்ணாகிய மெய்யறிவுக் கண்ணால் (ஞானக் கண்ணால்) உணரப்படுகிறவன் என்பதும் கூறப்பட்டன. "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்" என்று திருமூலர் திருமந்திரத்திற் (2944) கூறியதும் இக்கருத்தையே.

இறைவன் உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்யும் பொது இயல் நிலையில் அவனை இன்ன உருவன் என்றும், இன்ன வூரி விருப்பவன் என்றும், இன்ன பெயருடையவன் என்றும் மக்களாகிய நாம் நமது கருவி அறிவு கொண்டு கூறலாமே அல்லாமல் அவன் தனியே நிற்கும் உண்மை இயல் நிலையை அறிந்து கூறுதல் முடியாதென்றும், ஒருயிர் தனது கருவி அறிவு கடந்து நின்று இறைவனது அருளோடொன்றுபட்டு வேறற நிற்கும் நிலையில் மட்டும் தன்னறிவில் அவன் விளங்கக் கண்டு உணரலாமென்றும் இந்தத் தேவாரப்பா கூறுகின்றது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்]

அண்ணல்—அண்டன் (௧௧)

1. பண்டைத் தமிழ் மக்கள் அண்ணல் என்ற சொல்லை யும் அண்டன் என்ற சொல்லையும் தாங்கள் வணங்கும் கடவுளி னது பெயர்களாக வழங்கி வந்தார்கள். இரண்டு சொற்களும் அண் என்ற ஒரு வேர்ச்சொல்லிலிருந்து வந்தமையால், அவைகள் ஒரு கட்டுரையில் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன. அவர்கள் அச்சொற்களைக் கடவுளுக்கு வழங்கி வந்த தற்கு அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களை இக்கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. அண்ணல் என்ற சொல்லானது 'அண்' என்ற பகுதி யும் (அடிச்சொல்) 'அல்' என்ற தொழிற்பெயர் விகுதியும் சேர்ந்தும், அவ்வாறு சேரும்பொழுது அண் என்பதிலுள்ள ணகரவொற்று இரட்டித்தும் ஆகியது. அண் என்ற அடிச் சொல் சேர் என்று பொருள்படும். சேர், சார், பற்று, கிட்டு, கூடு, அடை என்பன ஒருபொருட் சொற்கள். அண்ணல் என்பது சேர்தல் என்று பொருள்படும். அது தொழிலாகு பெயராய்ச் சேர்தலை உடையவனை, அதாவது, சேர்ந்திருப்ப வனைக் குறிக்கின்றது. அவ்வாறு 'அண்' என்ற பகுதியடியாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற பொருளில் 'அண்ணன்' என்ற சொல்லும் தமையன் மனைவி என்ற பொருளில் 'அண்ணி' என்ற சொல்லும், சமீபம் என்ற பொருளில் 'அண் மை' என்ற சொல்லும், சேர்ந்திருத்தல் என்ற பொருளில் அண்ணித்தல் அண்ணுதல் என்ற சொற்களும் வழங்கப்படுதல் காண்க. 'அண்ணல்' என்பதனுடன் ஆர் விகுதி சேர்த்து அண்ணலார் என்று கூறுதலுமுண்டு. சேர்ந்திருக்கிற நாக்கு என்ற பொருளில் அண்ணு, அண்ணுக்கு என்ற சொற்களும் வழங்கப்படுகின்றன. ஒரு பொருளுடன் மற்றொரு பொரு

ளைச் சேர்க்கிறதற்காக அறையப்படும் ஆணியும் அண் என்ற பகுதி அடியாய்ப் பிறந்த சொல்லாகும்.

3. 'அண்டன்' என்ற சொல்லும் அன் என்ற பகுதி அடியாய்ப் பிறந்த சொல்லாகும். அண் என்ற பகுதியின் ஈற்றிலுள்ள ணகரவொற்று டகர உகர உயிர்மெய் யெழுத்தை அவாவி அதனைச் சேர்ந்து 'அண்டு' என்ருகியது. அண் என்ற சொல்லும் அண்டு என்ற சொல்லும் ஒரே பொருளில் வருகின்றன. ஒருவன் பிறனெருவனை அண்ணினன் என்ருலும் அண்டினன் என்ருலும் பொருளொன்றே. வேணும், அல்லது வேண்டும் என்றும் வேணவா அல்லது வேண்டவா என்றும் வினைச் சொற்களில் டகர உகர உயிர்மெய் சேர்த்தும் சேர்க்காமலும் நாம் ஒரு பொருளில் வழங்குகின்ருேம். பெண்ணைக் குறிக்க பெண் என்ருவது பெண்டு என்ருவது நாம் சொல்லுகின்ருேம். மேகத்தைக் குறிக்க விண் என்ருவது அல்லது விண்டு என்ருவது நாம் சொல்லலாம். 'அண்டு' என்ற பகுதியுடன் உயர் திணை ஆண்பால் ஒருமை விகுதி அன் சேர்ந்து 'அண்டன்' என்ருகியது. அண்டன் என்ற சொல்லுக்கும் சேர்ந்திருக்கிறவன் என்பதே பொருள். அண்டை என்ற சொல் அருகிடம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. அண்டம் என்ற சொல்லும் அண்டு என்ற பகுதியடியாய்ப் பிறந்த சொல்லாகும். அண்டப்பட்டது அதாவது அடை காக்கப்பட்டது என்ற பொருளில் அண்டம் என்பது கோழி முதலிய பறவைகளின் முட்டைக்குப் பெயராய் வழங்கப்பட்டு வந்தது. துண்டிக்கப் பட்டது 'துண்டம்' என வந்ததுபோல, அண்டப்பட்டது அண்டம் என வந்தது.நாம் வாழும் பூமி முட்டைவடிவினதா யிருத்தல் பற்றி முதலில் முட்டையைக் குறித்த சொல் பின் பூமியையுங் குறிக்க வழங்கப்பட்டு வந்தது. இதனல், தமிழ் முன்னோர்கள் நீண்ட காலத்துக்கு முன்னே பூமி வட்ட வடிவினதா யிருத்தலை அறிந்திருந்தார்கள் என்பதை நாம் அறிகிருேம். பூமியைக் குறிக்கிற மண்டலம் (மண் + தலம்) என்ற பெயர்ச்சொல் வட்டம் என்ற பொருளிலும் அதன் அடியாய்ப் பிறந்த மண்டலித்தல் என்ற வினைச்சொல் வளைந்திருத்தல் என்ற பொருளி

லும் பண்டைத்தமிழ் நூல்களில் வழங்கி வந்திருத்தலும் பூமி வட்டவடிவினது என்று அவர்கள் அறிந்திருந்ததை நமக்கு அறிவிக்கிறது. அண் அண்டு அண்டை என்ற சொற்கள் தெளிவாகத் தமிழ்மொழிச் சொற்கள் என்று நமக்கு விளங்குகிறபடியால் அண்டு என்ற பகுதியின் அடியாகப் பிறந்த அண்டம் என்ற சொல்லும் தமிழ்மொழிச் சொல் என்பது தெளிவு. அண்டம் (अंड) என்ற சொல் வடமொழியில் முட்டை என்ற பொருளில் வழங்கப்படுதல் உண்மையே. ஆனால் அந்தச் சொல் தமிழ் மொழியிலிருந்து வடமொழியில் வந்து வழங்கப்படும் பல சொற்களில் ஒன்று. அவ்வாறே கடவுளைக் குறிக்கிற அண்ட: (अंडः) என்கிற வடமொழிச் சொல்லும் தமிழ் மொழியிலிருந்து வடமொழிக்கு வந்த சொல்லாகும்.

4. அண்ணல் என்ற சொல்லும் அண்டன் என்ற சொல்லும் சேர்ந்திருக்கிறவன் என்று பொருள்படும் என்பது மேலே விளக்கப்பட்டது. அவ்வாறு சேர்ந்திருக்கிறவன் கடவுள் என்று பண்டைத்தமிழ் மக்கள் அறிந்திருந்தார்கள் என்ற உண்மையை அவர்கள் பின்பற்றிவந்த சைவசமயங் கூறுகிற நூல்களில் நாம் காண்கின்றோம். சேர்ந்திருக்கிறவன் என்பது யாரை அல்லது எதனை என்னும் கருத்தை அவாவி நிற்கும். கடவுள் உயிர் உலகம் (பதி, பசு, பாசம்) என்ற முப்பொருள்களில் சேர்ந்திருக்கிறவன் கடவுள் என்றால் எஞ்சி நிற்கும் பொருள்கள் உயிரும் உலகமும் ஆதலின் உயிரையும் உலகையும் சேர்ந்திருக்கிறவன் என்பது கருத்தாகும். முன் இயவுள் என்ற பண்டைத் தமிழ்ச் சொல் (2) விளக்கக் கட்டுரையிற் கூறப்பட்டபடி, கடவுள் உயிரையும் உலகையும் இயக்குதற்காக அவைகளோடு சேர்ந்திருக்கின்றான். அவன் அவைகளை இயக்கினாலன்றி அவைகள் தாமாக இயங்கா. அவைகள் கடவுள் வயப்பட்டவை; கடவுளோ தன்வயப்பட்டவன்; அதனால் அவன் முதன்மை (தலைமை)ப் பண்பு உடையவனாகின்றான். "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும். ஆதலின் அண்ணல் என்ற சொல் தலைவன் அல்லது முதல்வன் என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது.

அது தலைமை என்ற பொருளிலும் வழங்கப்படுதலுண்டு. அண்டன் என்ற சொல்லும் தலைவன் அல்லது முதல்வன் என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது.

5. கடவுள் உயிரைச் சேர்ந்திருந்தும் உயிர் மலத்தினால் அநாதியாகப் பிணிக்கப்பட்டிருத்தலினாலே அறியாமையையும் அதனாலே துன்பத்தையும் உடையதாகின்றது. அம் மல நீக்கத்துக்காகவே கடவுள் உயிருக்கு உடல், உட்கருவி, உலகம் நுகர் பொருள்களை (தனு கரண புவன போகங்களை)க் கொடுத்து அதனை உலகில் வாழும்படிச் செய்து மலத்தை நீக்கி இன்பம் தருகின்றான் என்று சைவ சமய நூல்கள் கூறுகின்றன. உயிரானது தத்துவக் கருவிகளை ஒன்றொன்றாய் நீக்கி மலம் நீக்கப் பெற்ற பொழுது தனது அறிவிலே கடவுள் விளங்கக் கண்டு அவனோடு ஒன்றுபட்டு இன்பம் அடையப் பெறுகின்றது. இக்கருத்து

> கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
> அண்டனை யான்மாவி லாய்ந்துணரப் பண்டணைந்த
> ஊனத்தைத் தான்விடுமோ றுத்தமனி ஞெண்கருட
> சானத்திற் றீர்விடம்போற் றான்

என்ற சிவஞானபோதம் 9-வது சூத்திர வெண்பாவிற் கூறப்பட்டிருத்தல் காண்க. இவ்வெண்பாவில் கடவுளுக்கு அண்டன் என்ற சொல் வழங்கப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. உயிரை இன்பம் அடையச்செய்யவே கடவுள் அதனைச் சேர்ந்திருக்கிறான். திருச்சிற்றம்பலக் கோவையார் ௱கூ-வது பாட்டில் "மத்தகஞ்சேர் தனிநோக்கினன் வாக்கிறந்தூ றமுதே—யொத்தகஞ் சேர்ந்தென்னை யுய்ய நின்றோன்" என்றும், திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய திருவல்லம் தேவாரம் ரு-வது பாட்டில் "சார்ந்தவர்க் கின்பந் தழைக்கும் வண்ணம்—நேர்ந்தவன்" என்றும், திருவருட் பயன் 8-வது அதிகாரம் ௩-வது பாட்டில் "இன்பதனை யெய்துவார்க் கியும்" என்றும் கூறியிருத்தல் காண்க. "திரு புத்தூரனைச்சிந்தை செய்யசெய்யக்—கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே" என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருவரிசிற்கரைப்புத்தூர்த் தேவாரம் 5-வது

பாட்டில் அண்ணிக்கும் என்ற சொல் தித்திக்கும் என்ற பொருளில் வழங்கப்பட் டிருக்கின்றது.

6. இனி, அண்ணல், அண்டன் என்ற இரண்டு சொற்களும் கடவுளைக் குறிக்கத் தமிழ் நூல்களில் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவாம்.

1. அத்தனெமையாளுடைய அண்ணலிடமென்பர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பழுவூர்த் தேவாரம் ௧-வது பாட்டு.

2. தொண்டருக்கெளியாய் திருவாலவாய்—அண்டனே.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாலவாய்த் தேவாரம் எ-வது பாட்டு.

3. அண்ணலார் போகின்றார் வந்து காணீரழகியரே யாயாத்தூ ரையனாரே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திரு ஆமாத்தூர்த் திருத்தாண்டகம் ௧-வது பாட்டு.

4. அண்டரே யமரேறே திருவையா றமர்ந்ததேனே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திரு ஐயாறு தேவாரம் ௬-வது பாட்டு.

5. அண்ணலே யெனை யஞ்சலென்றருளா யாரெனக்குறவமரர்களேறே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறைப் பதிகம் 2-வது பாட்டு.

6. அண்டா வாலங்காடா வுன்னடியார்க் கடியே னாவேனே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாலங்காடு தேவாரம் எ-வது பாட்டு.

7. அண்ணலாண்டு தன்னடியாற் கூட்டிய வதிசயங் கண்டாமே.

திருவாசகம்-ஞானகுரு தரிசனம் ௫-வது பாட்டு.

9. அண்டனடஞ் செய்யு மாலயந் தானே.
திருமந்திரம் அதிசயப் பத்து ௬-வது பாட்டு.

8. அண்ண லிருப்பிட மாரு மறிகிலர்
அண்ண லிருப்பிட மாய்ந்து கொள்வார்களுக்கு
அண்ண லழிவின்றி யுள்ளே யமர்ந்திடும்
அண்ணலைக் காணி லவனிவ னாமே.

திருமந்திரம் அற்புதக் கூத்து ௧௨-வது பாட்டு.

10. அண்ணலே யெனை ஆண்டு கொண்டருளிய வமுதே
பெரிய புராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் ௩௬௮-வது பாட்டு.

7. அடிகள் அந்தணன் என்ற சொற்கள் முதலாவது கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டுப் பின் கடவுளினது அருள் பெற்ற பெரியாரைக் குறிக்க வழங்கப்பட்டு வந்தன போல அண்ணல் என்ற சொல்லும் கடவுளுக்கு முதலாவது வழங்கப் பட்டு, பின் மக்களை ஆளும் அரசனுக்கும், மக்களில் கடவுளினது அருள்பெற்று விளங்கும் பெருமையிற் சிறந்தோனுக்கும், பொதுவாகத் தலைவனுக்கும் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. அண்டன் என்ற சொல் கடவுளுக்கு வழங்கப் பட்டு வந்தபின் பொதுவாகத் தலைவன் என்னும் பொருளில் வழங்கப்பட்டு வந்தது. அண்டர் என்ற சொல் தேவர்கள் என்ற பொருளிலும் வழங்கப்பட்டு வருகிறது. தலைவன் என் னும் பொருளில் கோன் என்ற சொல்லைத் தங்கள் பெயருக்குச் சேர்த்துக் கூறுகிற இடையர் என்ற சாதியார்களைக் குறிக்க வும் 'அண்டர்' என்ற சொல் வழங்கப்படுகின்றது.

சேக்கிழார்

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

சேக்கிழார் சுவாமிகள் சைவப் பெரியார்களின் சரித்திரங் கள் மறைவுபடாமல் உலகத்தோர் பொருட்டாகச் சேமித்து வைத்தருளிய பெருமான் ஆவர். ஏனைய புலவர் மக்களைப் போல் அல்லாது உண்மைச் சரித்திர பாகங்களையும் அவ்வக்

காலத்தில் நடந்த நடவடிக்கைகளையும்சேர்த்துத் திரட்டி இனிய நடையில் அச்சரித்திரங்களை அருளி யிருக்கின்றார். அதற்கு அநுகூலமாக அவருக்கு அவருடைய அமைச்சுத் தொழிலும் தேர்ந்த கல்வியும் திரண்ட அநுபவ ஞானமும் இருந்தன. அன்னார் சரிதத்தை அவருக்குப் பின் 200 ஆண்டுகளில் அவதரித்த உமாபதி சிவாச்சாரியர் அருளிய சேக்கிழார் புராணத்தினால் அறியலாம். மேலும் அவரியற்றிய பெரிய புராணத்தின் கண்ணேயும் பல உட்சான்றுகள் உள. சேக்கிழார் பிள்ளைத்தமிழில் அவரது பெருமையும் சமீப காலத்தில் வெளியான சேக்கிழார் சரிதம் (சுப்பிரமணிய பிள்ளை), சைவசிகாமணிகள் இருவர் (சோமசுந்தர தேசிகர்) என்ற நூல்களில் ஆராய்ச்சி உரைகளும் காணலாம்.

தொண்டை நாட்டிலே குன்றத்தூரிலே வேளாளர் மரபிலே சேக்கிழார் குடியிலே அவர் அவதரித்தனர். அருண்மொழித்தேவர் என்ற பிள்ளைத் திருநாமம் அவர்க்கு இட்டார்கள். அவரது இளவல் பாலறுவாயர் என்பார். அக்காலத்திலும் அரசர்கள், பெரியார்கள், கடவுளர்கள் ஆகிய இவர்கள் பெயர்களை மக்களுக்கு இடுவது வழக்கம். அருண்மொழி என்பது அக்காலத்துச் சோழ மன்னர்கள் தங்கள் பட்டப் பெயர்களாக வைத்துக்கொள்வது. பாலறுவாயர் என்பது திருஞானசம்பந்தப் பெருமானது திருநாமம். சேக்கிழார் குடியிலே நமது பெரியார் சிறந்து விளங்கி அக்குடிக்கே பெரும் புகழ் கொடுத்தவரானதினால் அவரைச் சிறப்பாகச் சேக்கிழார் நாயனார் என்றே உலகத்தார் வழங்கி வந்தார்கள்.

சுவாமிகள் இளவயதிலேயே கல்வியில் சிறந்து அறிவில் முதிர்ந்தவராக விளங்கி யிருந்தார். அதனைக் கண்ட அக்காலத்து மன்னர் அநபாயச் சோழர் அவரை அழைத்துத் தன் அமைச்சராக வைத்துக் கொண்டார். அவரது மேம்பாட்டைக் கண்டு வியந்து அவருக்கு உத்தம சோழப் பல்லவராயர் என்ற பட்டமும் தந்தனர். இக்காலத்து மன்னரைப் போன்றே அக்காலத்துச் சோழரும் பெருமக்களுக்குப் பட்டங்கள் வழங்குவதுண்டு என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

சுவாமிகள் அமைச்சுத் தொழிலில் அமர்ந்திருந்தும் சைவ சமயத்தில் ஈடுபட்டவர் ஆதலால் சோழநாட்டுத் திருநாகேசுவரரிடம் அன்பு மிகுத்திருந்த காரணத்தைக் கொண்டு தம் ஊரிலும் அவர் ஒரு நாகேசர் ஆலயத்தை எழுப்புவித்து மடவிளாகம் ஒன்று கட்டி அதற்குத் திருநாகேசுவரம் என்ற பெயரிட்டு வழங்கி வந்தனர்.

அமைச்சுத் தொழிலில் அமர்ந்திருக்கையில் ஒருநாள் அரசர் தம் நண்பர்களோடு சிற்றின்பமும் ஜைன உபதேசமும் நிறைந்துள்ள சீவக சிந்தாமணி என்ற நூலை வியந்துபாராட்டிக்கொண்டிருக்கையில் மிகவும் துயரமெய்தி அரசரை விளித்துச் சைவத்தில் பிற்பலன் கிடைக்கக்கூடிய பல சரிதங்கள் இருக்க இப் பொய்ந்நூலை மகிழ்வது நன்றன்று. கரும்பிருக்க இரும்பு கடித்தலும், விளக்கிருக்க மின்மினித் தீக் காய்தலும் போலாகும் அச் செயல் என்றார். அரசன் அவ்வித சரிதங்கள் உண்டோ என, நம்பியாண்டார் நம்பிகள் அருளின திருவந்தாதியில் கண்ட சரிதங்களை எடுத்து உரைத்தார். அவைகளைக் கேட்டு மகிழ்ந்து அச்சரிதங்களை அமைத்துக் காவியமாக ஒரு நூல் இயற்றும்படி வேண்ட சுவாமிகள் தில்லையில் சென்று ஈசன் அருள் காட்ட அதனைப் பெற்று ஓர் ஆண்டளவில் திருத்தொண்டர் புராணத்தை இயற்றி அருளினர்.

புராணம் எழுதுவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அரசர் உடனே தில்லைக்குத் தன் பரிசனங்களுடன் சென்று சுவாமிகளிடம் புராணத்தை ஓதும்படி வேண்டினர். அப்படியே சேக்கிழாரும் ஆயிரக்கால் மண்டபத்தில் அரசர் முதலானோர் இருந்து கேட்க ஓர் ஆண்டு அளவில் தம் புராணத்தை விரித்துரைத்தனர். பின்னர், புராணத்தைச் சேக்கிழாருடன் யானையின் மீதேற்றி ஊர்வலம் செய்வித்து யாவரையும் மகிழ்வித்தனர். புராணமும் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. பின்னர் அருண்மொழித்தேவர் அமைச்சுத் தொழிலைத் துறந்து சிவசிந்தனையிலேயே வீற்றிருந்து பின் சிவபதம் அடைந்தனர். அரசர் அவர் தம்பி பாலறுவாயரை அமைச்சராகக்

கொண்டு அவருக்குத் தொண்டைமான் என்ற பட்டம் அளித்து ஆண்டு வந்தனர்.

II

ஏனைய சைவப் பெரியோர்களைப் போன்றே சேக்கிழார் காலத்தைப் பற்றியும் பலவித அபிப்பிராயங்கள் புலவரிடை உண்டு. ஒருவர் இராஜேந்திரச் சோழன் (1013—1045) காலம் என்றும், ஒருவர் குலோத்துங்கன் I (1073—1118) காலம் என்றும், ஒருவர் குலோத்துங்கன் II (1123—1146) காலம் என்றும் கூறுவர். சேக்கிழாரும் தாம் எழுதிய சரித்திரங்களில் பல சரித்திரப் பகுதிகளைக் குறித்தனரே யன்றித் தம்மைப் பற்றியும் தாம் இருந்த காலத்தைப் பற்றியும் ஐயந்தீரக் குறிப்புகள் எழுதி வைக்கவில்லை. அரசர்களின் பெயர்களைக் குறிக்கும் போதும் அநபாயன் போன்ற பட்டப் பெயர்களைக் குறித்துள்ளாரே ஒழியச் சிறப்புப் பெயர்களைக் குறிக்கவில்லை. அக்காலத்தைய பிறநாட்டு அரசர்களின் பெயர்களையும் அவர் குறிக்கவில்லை. இதனாலே கால நிர்ணயத்திற்கு முட்டுப்பாடு நேர்ந்திருக்கிறது.

சேக்கிழார் அவதரித்த காலத்தில் சோழர் ஆதிக்கம் உன்னத ஸ்திதியில் இருந்தது. சைவ சமயமும் நிலைநின்று பெருகியது. 7, 8, 9 நூற்றாண்டுகளில் சமயாசாரியர்கள் நால்வரும், கண்டாதித்தர் கருவூர்த் தேவர் நம்பியாண்டார் முதலான சைவப் பெரியார்களும் தழைத்து ஓங்கிச் சைவத்தை நிலைநிறுத்தினார்கள். சோழ மன்னர்களும் அவர்களின் உபதேசங்களுக்கு ஆட்பட்டு ஆலய மெழுப்பியும் திருப்பதிகங்கள் ஓதுதற்கு ஏற்பாடுகள் செய்தும் சைவத்தைப் பெருக்கி வந்தார்கள். இதனைச் சார்ந்தாற் போல வைணவமும் மாத்வமும் இத்தென் னாட்டில் வளர ஆரம்பித்தன.

சைவ சமயாசாரியர்கள் சைவத்தை நிலை யூன்றினதற்கு முன்பு 500 ஆண்டுகளாகச் சமணமே இந்நாட்டில் பிரபலித்திருந்தது. அம்மதம் வடக்கே இருந்து வந்தது. அதனாசிரியர்கள் கலைகளில் வல்லவர்கள். தாங்கள் செல்லும் நாடுகளிலெல்லாம்

அவ்வம்மொழிகளைக் கற்று அவைகளில் தங்கள் கொள்கைகளை நிலைநிறுத்திச் சிறந்த நூல்களையும் வெளியிட்டனர். தெலுங்கு நாட்டில் 10-ம் நூற்றாண்டிற்கு முந்தி ஜைனப் புலவர்களே முற்பட்டிருந்தார்கள். இராஜேந்திரச் சோழன் (1030) அதைப் பிடித்துச் சைவத்தைக் கொண்டு சேர்த்தபோது அங்கிருந்த ஜைனர் கன்னட நாட்டிற் புகுந்தனர். கன்னட நாட்டில் அதன் பிறகு 100 ஆண்டுகள் வரை அவர்களே சிறந்து விளங்கி வந்தனர். சமணராக இருந்த ஹாய்சள அரசர்கள் வைணவத்திற்கும் சைவத்திற்கும் திரும்பவே அங்கேயும் அம் மதம் நிலைகுலைந்தது. நம் தமிழ் நாட்டிலோ அப்பராலும் சம்பந்தராலும் சமணம் சீர்குலைந்ததை அவ்வாசாரியர்கள் சரிதத்தில் காட்டி யிருக்கின்றோம். ஆனால் அரசியலில் சமண சம்பந்தம் குறைந்து போயும் தமிழர்களுடைய சமரச பாவனையினால் ஜைன மதம் முழுதும் குன்றாமல் புலவர் மாட்டு நிலைத்து வந்தது. ஏனெனில் 8, 9, 10 நூற்றாண்டுகளிலுங்கூட ஜைனப் பெரு நூல்களான கொங்கு வேள் மாக்கதை, சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், சிந்தாமணி முதலிய காவியங்களும் அறநெறிச் சாரம் முதலான நீதி நூல்களும் இயற்றப் பெற்றன. மேலும் 10, 11, 12 நூற்றாண்டுகளில் வீரசோழியம், நேமிநாதம், வச்சணந்தி மாலை, யாப்பருங்கலக் காரிகை, திவாகரம் பிங்கலந்தை முதலான இலக்கணங்களும் அடியார்க்கு நல்லார் முதலியோர் அரிய உரைகளும் உண்டாயின. இதன் பின்னரும் நன்னூல், நம்பி அகப்பொருள், சூடாமணி நிகண்டு முதலியவை ஏற்பட்டதும் அறிவோம். ஆகவே, சமண மேம்பாடு கலைகளிடம் நீங்காது தழைத்திருந்தது நோக்கத் தக்கது. அதற்குக் காரணம் அவற்றில் கண்ட அரும் பொருள்களே யாகும்.

நிற்க, நாம் முன்கூறியதுபோலச் சிந்தாமணி என்ற நூலைச் சோழர் சைவராயிருந்தும் கலா விநோதத்திற்காக மகிழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான் சேக்கிழார் அதன் காரணத்தை அறிந்து அக்காரணமாகச் சைவத்தில் காவியமில்லாக் குறையைப் பெரியபுராணம் இயற்றி நீக்கினர். அக்குறை நீங்கின

வுடன் அரசர்களும் ஜைன நூல்களை ஓதுதலை விடுத்துச் சைவ நூல் பாராயணம் செய்தலையும் அதனைக் கேட்டலையும் வைத்துக்கொண்டனர். பெரியபுராண ஆசிரியரான சேக்கிழாரே புராணபடனஞ்செய்ய அநபாயச் சோழர் கேட்டதை அவரது புராணத்தால் உமாபதி சிவாச்சாரியார் சொல்ல அறிகின்றோம். மேலும் கி. பி. 1181-ம் ஆண்டில் திருவொற்றியூர் படம்பக்க நாதரது ஆலயத்து மண்டபத்தில் பங்குனி உத்திரத் திருவிழாவில் சுந்தரமூர்த்தி சுவாமிகளான ஆளுடைய நம்பிகள் புராணத்தை வாசிக்க, அதனை அப்போதைய அரசனான இராஜாதிராஜ தேவ (II) சோழனும் சதுரானன பண்டிதனும் வாகீசர பண்டிதனும் கோயில் நாயகனும் ஸ்ரீகாரியஸ்தனும் மற்றும் பலரும் விற்றிருந்து புராண படனத்தைக் கேட்டதாகத் திருவொற்றியூர் ஆதிபுரீசர் ஆலயத்துச் சாசனம் கூறுகிறது. (செவ். 965) இச்சாசனத்தில் கண்ட புராணம் சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகவே யிருக்கும். ஏனெனில் திருத்தொண்டர் புராணத்தின் அமைப்பை உற்று நோக்கின் சுந்தரர் சரிதமே முக்கிய பாகமாகக் கொண்டு ஏனைய அடியார்களின் சரிதங்கள் அதினின்றும் பிரியும் கிளைகளாக வைத்துச் சேக்கிழார் எழுதியிருப்பதை அறியலாகும். அந்தக் காரணத்தைக் கொண்டே நாம் அச்சாசனமும் ஆளுடைய நம்பி புராணம் என்று கூறுகிறதாகக் கொள்ளல் வேண்டும். ஆகவே அரசியல் வர்க்கத்திலும் அதிகார வர்க்கத்திலும் சைவ சமயம் ஊன்றிவிட ஆரம்பித்தது என்றும் அதற்கு ஊன்றுகோலாக உதவியவர் சேக்கிழார் என்றும் சொல்லலாம்.

III

தென்னாட்டில் இவ்விதமாய்க் காலப்போக்கு இருந்த காலத்தில் அவதரித்த சேக்கிழார் சுவாமிகளைப்பற்றிக் கல்வெட்டுக்களில் என்ன காண்கிறோம் என்பதை இனி எடுத்து எழுதுவோம்.

வழங்கிவந்த பெயர்கள்

i. குடிப்பெயர்

சேக்கிழார் என்னும் பதம் வேளாளர் மரபில் ஒரு குடிக்குப் பெயராக இருந்தது. இன்னமும் அந்நாட்டில் ஒரு குடிப் பெயராக இருந்து வருகின்றது. இதைப்போலவே கூடல் கிழான், புரிசைகிழான், வெண்குளப் பாக்கிழான்,[1] குளத்துழான்[2] முதலிய குடிகளும் இருந்தனர். சங்கத்தார் காலத்திலும் கிழார் என்ற பதம் வழக்கத்தில் இருந்தது. கிள்ளிமங்கலம் கிழார், கோளியூர் கிழார், நல்லாவூர் கிழார், நொச்சி நியமங் கிழார், பெருங்குன்றூர் கிழார், பொதும்பில் கிழார், மருதங்கிழார், மாங்குடி கிழார் முதலிய சங்கப்புலவர்களின் பெயர்களில் இப்பதத்தைக் காண்க. இனிக் கல்வெட்டுக்களில் வருவனவற்றைக் குறிப்போம்.

1. சேக்கிழான் குட்டேரன்—நந்திவனம் (செங். 82) கணேசர் ஆலயத்து ஒரு கல்லில் கண்ட சாசனம். இதில் சேக்கிழான் குட்டேரன் என்பவன் ஒரு நந்தாத்தீபம் தானம் செய்தது கண்டிருக்கிறது. இப்பெயர் ஒரு குடிப்பெயர் ஆகும்.

2. சேக்கிழான் அம்மையப்பன் பராந்தக தேவன் என்ற கரிகாலசோழ பல்லவராயன்—திருக்கடவூர் (தஞ்சை 650) அமிர்தகடேசர் ஆலயத்து முதல் பிரகாரத்துத் தென் சுவர் சாசனம் - குலோத்துங்கச்சோழன் 4-ம் ஆண்டு. இதில் குலோத்துங்கச் சோழவளநாடு என்ற புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் அம்மையப்பன் பராந்தக தேவன் என்ற கரிகால்சோழ பல்லவராயன் என்பான் பூதானம் செய்ததைக் கூறுகிறது. இதில் சேக்கிழார் குடியைக் காண்கிறோம். இதில் காணும் பெயரும் அருண்மொழித் தேவருடை

---

1. "குன்றத்தூர் வேண்குளப்பாக்கிழான் அரையன் தில்லைநாயகரான நந்தியன்பன்" என்று சிதம்பரம் சாசனம் கூறும். S. I. I. IV. 227

2. காரிகைக்குளத்தூர் குளத்துழான் சிற்றம்பலமுடையான் என்று பல்லவராயன் பேட்டைச் சாசனம் கூறும். =433/1924.

யதாக இருக்கலாம் என்றும் சாசன ஆராய்ச்சிக்காரர்கள் ஊகிக்கின்றனர். சேக்கிழார் சுவாமிகளுக்கு உத்தம சோழ பல்லவர் என்ற பட்டம் உண்டு. இதில் கண்டவருக்கும் பராந்தக கரிகாலசோழ பல்லவராயர் என்ற பட்டம் உண்டு. ஆகையால் இவரே பெரியபுராண ஆசிரியராக இருக்கக்கூடும். அல்லது அவ்வமிசத்தில் வேறொருவர் அமைச்சத்தொழிலும் பட்டமும் தரித்தவராக இருத்தல்வேண்டும்.

3. சேக்கிழார் பாலறுவாயன் களப்பாளராயர்—கோட்டூர் (தஞ்சை 482) கொழுந்தீசர் ஆலயம் கர்ப்பக்கிரகத்துத் தென் அஸ்திவாரத்தில் கல்வெட்டு. குலோத்துங்கன் III-2-ம் ஆண்டு. குலோத்துங்கச் சோழவளநாட்டுக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயர் ஒரு தீபம் வைப்பதற்காகப் பணம் தானம் செய்தது. இச்சாசனத்தினால் சேக்கிழார் குடி இருந்ததெனவும் அதில் பாலறுவாயர் களப்பாளராயர் என்பவர் இருந்தனரெனவும் தெரிகிறது. இவரே சேக்கிழார் சுவாமிகள் தம்பி என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பேரும் ஊரும் ஒன்றாக அமைந்திருக்கிறது. காலமும் சமீபத்தில்தான் இருக்கிறது. ஏனெனில் குலோத்துங்கன் II (1123—1146) காலத்தில் பெரியபுராணத்தார் இருந்திருந்தால் அவர் தம்பி குலோத்துங்கன் III(1178-1216) காலத்தில் இருந்திருக்கலாம் அல்லவா?

4. புரவுவரித் திணைக்களம் சேக்கிழார்—முதற் குலோத்துங்கன் காலத்தில் இப்பெயர் கொண்டார் ஒருவர் இருந்தார். இப்பெயரில் வரும் புரவுவரித் திணைக்களம் என்னும் பதத்தொடர் திருவொற்றியூர் (செங். 1011) கோயில் சாசனத்தில் அரசியல் வரி வாங்கும் அதிகாரியின் பெயரில் பிரயோகிக்கப் பெற்றிருக்கிறது. இஃது இராஜாதிராஜ தேவன்-I காலத்தது.

5. சேக்கிழான் செட்டி சங்கன் அநுராதபுரம்—இலங்கைத்தீவு—(607/1912B). ஒரு கல்லில் தமிழில் உள்ளது. சிரி சங்க போதிமாராயன் 5-ம் ஆண்டு.[1] இதில் சேக்கிழான் செட்டி சங்கன் என்பவன் குமாரகணத்துப் பேரூர் வாசிகள் வட்டிக்

காக 30 ஈழக்காசுகள் பெற்று நொந்தாவிளக்கு திருவமுது இவைகளுக்காகக் கொடுத்தது கண்டிருக்கிறது. (S. I. I. No 1403 Vol. 11.)

6. சேக்கிழான்—சென்னை—608/2 அதே இடத்தில் அதே அரசன் 7-ம் ஆண்டில் சேக்கிழான் சென்னை என்பான் தானம் செய்தது.

இவ்விரண்டு கல்வெட்டுகளிலிருந்தும் சேக்கிழான் என்ற குடிப்பெயர் சிங்களம் அதாவது ஈழநாட்டிலும் வழங்கி வந்தது எனத் தெரிகிறது. இச் சிரிசங்கபோதி என்ற அங்கபோதி III என்ற அரசன் மகாவம்சத்தின்படி கி. பி. 624-ல் பட்டத்திற்கு வந்தவன் (1913 E. P. 103.) இதனுல் சேக்கிழார் என்ற பெயர் எத்துணைப் பழம்பெயர் என்று அறிகிறோம்.

மேற்காட்டிய மேற்கோள்களிலிருந்து சேக்கிழார் குடி தமிழ்நாட்டில் வெகு புராதன காலத்திலிருந்து இருந்து வருகின்றதென்றும், அக்குடிமக்கள் தொண்டைநாடு மாத்திரமேயன்றிச் சோழநாடு ஈழநாடு முதலிய நாடுகளினும் வாழ்ந்து வந்தனர் என்றும், அவர்களில் அமைச்சுத் தொழில் பூண்டவர்கள் பலர் இருந்தனர் என்றும், சைவத்தில் சிறந்திருந்து ஆலயங்களுக்குத் தானங்கள் பல செய்து விளங்கினர் என்றும் அறிகிறோம்.

ii. சுவாமிகளின் இயற்பெயர்:— பெற்றோர்கள் சுவாமிகளுக்கு அருண்மொழித் தேவர் என்ற பெயர் சூட்டினர்கள் என்று அவர் புராணத்தினல் தெரிகிறது. இப்பெயர் அருண்மொழி என்பது அக்காலத்து மன்னர் வைத்துக்கொண்ட பெயர் என்று கல்வெட்டுகளால் தெரிகிறது. அதனைக் கொண்டு பெருங்குடி மக்களும் தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிட்டார்கள். அரசர்கள் தாங்கள் ஆண்ட நாட்டிற்கும், ஊர்களுக்கும், அக்கிரகாரங்களுக்கும், தாம் பிரதிஷ்டித்த விக்கிரகங்களுக்கும் பெயரிட்டனர் என்றும் அடியிற் குறித்த கல்வெட்டுகளால் தெரியவரும். தாங்கள் கொடுத்த பட்டத்திலும் இப்பெயர் புகுத்தி யிருப்பதாகவும் தெரிகிறது.

முதலில் இப்பெயர் வைத்துக் கொண்ட மன்னன் இராஜ ராஜன் I என்ற பிரக்யாதி பெற்ற சோழ மன்னன். இதனைத் திருமலைச் சாசனம் ஒன்றில் *"அலைபுரியும் புனற் பொன்னி யாளுடைய சோழன் அருண்மொழிக்கு யாண்டிருபத் தொன்று வது என்றங்" S. I. I. Vol. I. P. 95 என்றதில் காண்கிறோம். இனி 'அருண்மொழி' அல்லது 'அருமொழி' வரும் பெயர்களைக் குறிப்பாம்.

1. மனிதர் பெயர்கள்

1. அருமொழி—செங். 1055 S. I. I. II. P. 259. ஆண்களும் பெண்களும் இப்பெயர் வைப்பது.

2. அருமொழி பிரமராயன்—தஞ்சை—819. இது ஒரு பட்டம்.

3. அருமொழிப் பல்லவரையன்—இது ஒரு பட்டம். S. I. I. II. P. 495.

4. அருமொழித் தேவர்—தஞ்சை—1237. S. I.I. II. P. 260, 437. இது இராஜராஜன் I பெயர்.

5. அருமொழிதேவ மிலாடுடையார்—தென். ஆ.—718.

6. அருமொழி நிர்த்தப் பேரரசன்—S. I. I. II. P. 297.

7. அருமொழி நங்கை—வட ஆ.—49, தஞ்சை—1358, திருச்சி—886. இது வீரராஜேந்திரன் I பட்ட மகிஷியின் பெயர்.

---

*அலைபுரியும் புனற்பொன்னி ஆளுடைய சோழன்
அருமொழிக்கு யாண்டு இருபத் தொன்றுவ தென்றங்
கலைபுரிய மதிபுணன் வெண்கிழான் கனிச் செக்
கரமரு பொற்சூரியன்றன் நாமத்தால் வாம
கிலைபுரியும் சிற்றருக் கவிஞ்சிட்டு நீமிர் வைய்கை மலைக்கு
நிமேழி இருமருங்கும் செல்விளையக் கண்டோன்
குலைபுரியும் படை அரைசர் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர் வைய்கைக் கோவேய்.
—S. I. I. II. P. 95.

ii. ஈசுவரன் பெயர்கள்

1. அருமொழி தேவ ஈசுவரர். தஞ்சை—148. தென் ஆ.—54, 925. புதுக்—397.

iii. ஊர்ப்பெயர்கள்

1. அருமொழி தேவ சதுர்வேதி மங்கலம்—கோ. 120.

2. அருமொழி தேவ நல்லூர்— செங். 111.

3. அருமொழி தேவபுரம் வட ஆ.—389. புதுக்—298—9.

4. அருமொழி தேவ தெரிந்த திருப்பரிகளத்தார் வேளம்—இது தஞ்சையில் ஒரு பாகம், S. I. I. II. P. 437.

iv. நாடு

1. அருமொழி தேவ வளநாடு. செங்—1025. தஞ்—148, 493, 721. திருச்—703.

v. அளவை

1. அருமொழி தேவ மரக்கால். செங்—972.

இப்பெயர்களினால் அரசன் பெயரை எதுகாறும் மக்கள் பாராட்டி வந்தனர் எனத் தெரியும். நமது சுவாமிகளும் இராஜ ராஜன் I காலத்திற்குப் பிந்தியவர் எனவும் தெரியவரும்.

(தொடரும்)

* தமிழை வளர்ப்ப தெப்படி?

[தாராபுரம். நா. ஆறுமுகம் பிள்ளை யவர்கள்.]

பழம்பெருமையைப் பலகாலும் பேசி மகிழ்வதினும் இன்றுள்ள சிறுமையை நினைந்து நீக்க முயல்வதே அறிவுடைமைக் கழகாம். ஆங்கில நன்மக்கள் தங்கள் பழம்பெருமையைப் பேசியா காலத்தைக் கடத்துகின்றனர்? ஒவ்வொரு நொடியினும் தங்கள் மொழியை வளர்க்கும் முயற்சியினன்றோ முனைந்து நிற்கின்றனர்? உலகின் எம்மொழியினும் உள்ள உயர்ந்த நூல்

* இஃது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்ற விரிவுரையாகும்.

களை எல்லாம் ஆங்கில மொழியிற் காணலாம்; ஆங்கில மொழியி லுள்ள நூல்களை எல்லாம் பிறமொழிகளிற் காண்டல் இயலாது. இங்ஙனம் இவர்கள் தங்கள் மொழியில் எல்லா நூல்களையும் ஆக்கிக் கொண்டமையானன்றோ எளிதின் அவற்றைக் கற்று ணர்ந்து அறிவினும் ஆற்றலினும் சிறந்தோராய்ப் பல்லாயிரம் கற்றொலைவிலுள்ள நம் நாட்டையும் பிற நாட்டையும் ஆளுகின்ற னர்? வாணிபம் முதலிய எல்லாத் துறைகளினும் தலைசிறந்து விளங்குகின்றனர்? இவர்தம் உயர்வுக்கு வேறெதனை ஏதுவாகக் கூறினும் இதுபோற் பொருந்துவதாகா தென்பது திண்ணம். இவர்கள் உயர்ந்த செயலைப் பின்பற்றாமல் எந்நேரமும் இழித் துரையாடி மகிழ்வர் நம்மவரிற் பல்லோர். இதனாலாம் பய னென்?

ஆங்கில நன்மக்களைப் பின்பற்றி நம் இந்தியநாட்டின் வடபாலுள்ள மக்கள் தங்கள் மொழியில் ஏராளமான நூல்களை ஆக்கிக்கொண்டு சீரும் சிறப்பும் உடையோராய் இனிது வாழ் கின்றனர். தமிழினின்று தோன்றிய தெலுங்கினுங்கூட அம் மொழியாளர் பல நூல்களையும் ஆக்கிக்கொண்டனர்; ஒரு பல் கலைக்கழகமும் படைத்துக்கொண்டனர்.

நாம் நம் தாய்மொழியை வளர்க்க என்ன செய்கின்றோம்?

கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப் படக்கிடந்ததா வெண்ணவும் படுமோ?

தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்டபாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்டதும்மறைக் கதவினை யடைத்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

என்னும் பாடல்களைப் பலகாற் பாடி உரை கூறுகின்றோம்; இச்செய்யுட்கள் தமிழினருமையை நன்கெடுத் தியம்புவனவே யாயினும், இவற்றைப் பாடுவதாலும் உரைகூறுவதாலுமே நாம் தமிழை வளர்த்தவர்க ளாவேமா? தமிழில் நூல்கள் பல பல்கி விடுமா? நாம் முன்னேற்ற மடைந்துவிடுவேமா? ஒருகாலு

மில்லை. பிற நாட்டாரைக் கண்டேனும் நாம் நம் தமிழை வளர்க்க முயற்சியாம லிருப்பது அந்தோ! எவ்வளவு இழிதகைமை! சற்றே நினைந்து பார்மின்.

நம் தாய்மொழியிற் பண்டைக்காலத்துத் தண்டமிழிலக்கிய நூல்கள் சிலவே யல்லாமல் ஆங்கில மொழியேபோல் வரலாற்றுநூல் உண்டா? இயற்கைப் பொருணூல் உண்டா? உடனூல் உண்டா? உயிர்நூல் உண்டா? உழவுநூல் உண்டா? மருத்துநூல் உண்டா? வானநூல் உண்டா? பொறிநூல் உண்டா? வேறு தொழினூல் உண்டா? ஒன்றேனுமில்லையே. சிலசில வானநூலும் சிற்சில மருத்துநூலும் உளவேனும், வான நூலின் ஒன்றேனும் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்தற்கேற்ற பெற்றி வாய்ந்த பெருநூலாக இல்லை; அன்றியும், இவ்விருவகை நூலினும் பிழை மலிந்தன பல; பொருள் விளங்காதன பல. முசுமுசுக்கையை எண்ணெயிலிட்டுக் காய்ச்சு என்று சொல்வதனை இருகுரங்குக்கையை எண்ணெயிலிட்டுக் காய்ச்சு என்று சொன்னால் எவ்வாறு மருத்துவம் கற்பது? சொன்மின். இவ்வாறு யான் கூறுவதனால் தமிழில் மருத்துநூலே இல்லையென்று கூறியதாகவேனும், தமிழின்பால் அன்பில்லாதவனென்றேனும் எண்ணன்மின். தமிழிற் போதிய அளவு நூல்கள் இல்லையென்றே கூறுகிறேன். தமிழன்பர் பேரேட்டுப் பட்டியில் என் பேரை இறுதியிலேனும் எழுதிக்கொண்மின்.

இனி, நூல்வளம் மிகுதியாக இல்லாத தமிழை நாமேன் கற்றல்வேண்டும்? இதனை அடியோடு ஒழித்துவிட்டு எல்லாரும் நூல்வளம் மிக்க வேறு மொழியாளராக மாறிவிடல் நலமன்றோ வெனின், அன்று. சிறந்த கற்பும், இயற்கையழகும், பேரன்பும் வாய்ந்த நம் தாய் பொன்னணியும் பட்டுடையும் இலளேல் அவளைத் தள்ளிவிடலாமா? அவளுக்கு வேண்டுவன தருதல் மக்கள் கடனன்றோ? பன்னூறாண்டுகட்குமுன் இஞ்ஞான்றுள்ள நூல்கள் ஆங்கிலத்தில் இருந்தனவா? இல்லையே. ஆங்கில நன்மக்கள் ஓயாமுயற்சியானன்றோ தங்கள் மொழியில் நூல்களைப் பெருக்கிக்கொண்டனர்? நாமும் ஏன் அவ்வாறு

செய்தல் கூடாது? புதிய புதியவாகத் தோன்றும் பொருள்கட்கு ஏற்ற சொற்களைத் தமிழின்கண் காணல் இயலாதென்பீரோ? பிறமொழியி னுதவியின்றித் தனித்தியங்கும் ஆற்றல் இல்லாத ஆங்கிலம் முதலிய மொழிகளினுங்கூடப் புதிய புதிய பொருள் கட்குப் புதிய புதிய சொற்களை அமைத்துக்கொள்ளுகின்ற னரே. எல்லாப் பொருள்கட்கும் ஏற்ற சொற்களைத் தன்னகத் துக்கொண்ட தனிமொழியாய தமிழில் பொருள்கட்கேற்ற சொற்களை அமைத்தல் இயலாதென்ப தெவ்வளவு அறியாமை. நம் அறிவுக்குத் தோன்றுவிடினும் பல புலவர்களுடனுங் கூடி ஆராய்ந்தால் எல்லாப் பொருள்கட்கும் ஏற்ற சொற்களைத் தூய தனித்தமிழிலேயே அமைத்தல் இயலுமென்பது திண்ணம். தமிழில் நூல்கள் இல்லாமை தமிழின் குறை யென்றெவரேனும் கூறவியலுமா? அது தமிழராகிய நம் குற்றமல்லவா?

இந்திய நாட்டுக்கே இந்தியைப் பொதுமொழி யாக்கல் வேண்டுமென்னும் அம்மொழியாளர்தம் தாய்மொழியன்பை நினைந்து நாம் எல்லோரும் மகிழ்தல் வேண்டுமாயினும், அவர் கூற்றை நம்பித் தம் தாய்மொழியைக் கைவிடத் துணிந்த தமி ழர்தம் பேதைமைக்குப் பெரிதும் வருந்தவும் வேண்டும். மொழி நூல் வல்லாரைக் கேண்மின்; நீவிரும் ஆராய்ந்து பார்மின்; கற்பதற் கெளிமையும் கேட்பதற் கினிமையும் வாய்ந்த மொழி தமிழையன்றிப் பிறிதொன்றில்லை யென்பதை நன்குணர்வீர் கள். பன்னிப் பன்னிப் பல பேசுவானேன்? "தமிழை வளர்ப்பதெப்படி?" என்பதுபற்றி ஆராய்வாம்.

தமிழை வளர்க்கவேண்டுமேல் தமிழ்ப்புலவர்கள் ஒற்று மையா யிருத்தல் வேண்டும். ஐயகோ! நம் நாட்டில் தமிழ்ப் புலவர்களுக்குள் ஒற்றுமையென்ப தொருசிறிதும் இல்லையே. ஒரு புலவர் ஓர் ஆராய்ச்சிநூலோ, உரைநூலோ, செய்யு ளூலோ எழுதி வெளியிடின் பல புலவர்கள் மறுப்பெழுதத் தொடங்கிவிடுகின்றனரே; வில்லம்பினுங் கொடிய சொல்லம்பினை எய்கின்றனரே; கலாம் விளைக்கின்றனரே. ஒரு நூலிற் குற்ற மிருப்பின் அதனை ஏன் மறுத்தல் கூடாது? குற்றத்தை எடுத்

துக்காட்டல் உலகுக்கு நன்மை பயக்குமன்றோ? என்பார் சிலர். ஆம்; அஃது உண்மையேயாயினும், எடுத்துக்காட்டும் முறை யில்லையா? "குற்றமே தெரிவார் குறுமா முனிவன் சொற்ற பாவினும் ஓர் குறை சொல்வரால்" உலகிற் குற்றமில்லாதவர் யார்? ஒருவர் எழுதிய நூலின்கண் குற்றங் காணின் அதனை இனிய முறையின் இன்சொற்களான் எழுதியவர்க் கெடுத்துக் காட்டித் திருத்திக்கொள்ளச் செய்தல் வேண்டும்; எடுத்துக் காட்டியும் திருத்திக்கொள்ளா திருப்பரேல் உலகம் அவர் குற்றங் கண்டு மயங்காமைப்பொருட்டு எவர்க்கும் எவ்வகையினும் துன்பம் பயவாமுறையின் மறுப்பெழுதி வெளியிடல் வேண்டும்; இம்முறையே நன்முறையாம். நூலெழுதியவரும் தாம் எழுதியது குற்றமாயின் அதனை உடனே திருத்திக்கொள்ளல் வேண்டும். எல்லாரும் நம்மைக் கல்விக்கடல் என்று மெச்ச வேண்டும் என்னும் எண்ணத்துடன் மறுப்பெழுதுவதும் தாம் எழுதியது பிழையென்றுணர்ந்தும் தம் பெருமைக் கிழுக்கென ஒப்புக்கொள்ளாதிருத்தலும் அறிவின்மையாம்; இதனுல் தம் தாய்மொழிக்கும் தாய்நாட்டுக்கும் கேடு சூழ்ந்தவராவர். தமிழ்ப் பெரும் புலவர்களே! இன்றே நுங்கட்குள் இருக்கும் பகைமையை ஒழிமின்; தீயநினைவை அகற்றுமின்; அன்பி ஞல் ஒன்றுகூடி அளவளாவுமின்; தமிழ் நாட்டுக்கோர் தமிழ்ப் பெருங் கழகத்தை நிலைநாட்டுமின்.

தமிழ்மொழி சிறந்த நிலையடைதற்குக் கழகமே சிறந்த வாயில். பண்டைக்காலத்துப் பசுந்தமிழ்ப் புலவர்கள் கழகங் களின் வாயிலாகவே மொழியை வளர்த்தனர். இஞ்ஞான்றும் மேனுடு முதலிய பிறநாட்டாரெல்லாரும் கழகங்களின் வாயி லாகவே தங்கள் தங்கள் மொழியை உயர்நிலை யடையச் செய் கின்றனர். நம் நாட்டில் எத்தனையோ கழகங்கள் தோன்றிச் சில ஆண்டுகள் மட்டுமே நின்று ஒழிந்தன; அவை நடை பெற்ற காலத்தேனும் தமிழ் வளர்ச்சிக்கு முயன்றனவா? ஒரு நூலேனும் வெளியிட்டனவா? இல்லையே; ஓராண்டுக் கொருமுறை கூட்டங்கூடி ஏராளமான பொருளை வீண்செலவு செய்து இரண்டொரு புலவரைக் கொண்டு இரண்டொருநாள்

விரிவுரை நிகழ்த்தி முடிவடையச் செய்தன. இதனால் ஏதேனும் பயனுண்டா?

இனியேனும் என்றும் நின்று நிலவுமாறும் தமிழ்நாட்டுக்கே பொதுவாகவும் ஒரு பெருந் தமிழ்க்கழகம் நிறுவுதல்வேண்டும்; தமிழறிவு நிரம்பிய எல்லாப் புலவர்களும், தமிழறிவுடனே ஆங்கிலம், ஆரியம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளில் ஒன்றேனும் பலவேனும் உணர்ந்தவர்களும் பலதுறை நூல்களில் வல்லுநரும் அதில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். இக்கழகம் தமிழ்நூ லாராய்ச்சிப்பிரிவு, உரை நூற்பிரிவு, செய்யுணூற்பிரிவு, வரலாற்றுநூற்பிரிவு, மருத்து நூற்பிரிவு, வானநூற்பிரிவு முதலிய பல பிரிவுகளை உடையதாயிருத்தல் வேண்டும்; உறுப்பினர்களில் அவ்வத்துறையின் வல்லார் பலர்பால் அவ்வப்பிரிவைத் தனித் தனியே ஒப்புவித்தல் வேண்டும். இவர்களின் ஒவ்வொரு பிரிவினரும் ஆங்கிலம் முதலிய மொழிகளின் உள்ள அரிய பெரிய நூல்களைத் தமிழின் மொழிபெயர்த் தெழுதியும் தாங்களே கண்டறிந்த நுண் பொருள்களை விளக்கமாக எழுதியும் கழகப்பெருங் கூட்டத்திற் கொண்டுவந்து அரங்கேற்றிப் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கழகத்தின் வாயிலாக வெளியிடல் வேண்டும். இக்கழகத்திற்கு தமிழ், ஆங்கிலம், ஆரியம் முதலான மொழிகளில் வல்லுநரும் ஆராய்ச்சியிற் சிறந்த நுண்ணறிவுடையாரும் நடுநிலையாளருமான பெரியார் தலைவராயிருத்தல் வேண்டும். இவ்வாறு எல்லாரும் ஒற்றுமையாக இருந்து செய்தால் தமிழில் எண்ணில்லாத நூல்கள் பல்கிவிடும். ஒழிந்த நேரங்களில் எல்லாத் தமிழ்மக்களும் படித்துணரப் பலதுறைப் பொருளையும் விளக்கும் ஒரு கிழமைத்தாளேனும் வெளியிடல்வேண்டும்.

நூலெழுதுவார் நினைவிற் பதிக்கவேண்டுவ தொன்றுண்டு. பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களில் ஒருசிலரேனும் தமிழ் நூல்கட்கு உரைகூறும் வன்மையுடையோரா யிருக்கின்றனரா? இல்லையே. ஏன்? தமிழ்மொழியின்கண் உள்ள பல்லாயிரக் கணக்கான சொற்களைக் கற்று நினைவின்கண் இருத்தமாட்டாமையானன்றோ? இங்ஙனமாக, இன்னும் தமிழில் அயன்மொழிச்

சொற்களைக் கலந்தால் தமிழர் எவ்வாறு தமிழ் கற்கப்போகிறார்கள்? தமிழ் எப்படி வளர்ச்சியுறும்? இதனால் தமிழில் சொற்பெருக்கம் வேண்டாமென்பதென் கருத்தன்று; ஒரு பொருள் குறிக்கப் பலசொல் வேண்டுவதில்லையென்பதே கருத்து. பன்மணிகளால் ஆக்கிய கோவை கண்ணுக்கழகு பயப்பதுபோலப் பல அயன்மொழிச்சொற்கள் கலந்த தமிழும் காதுக்கினிமை பயக்கும் என்கின்றனர் சிலர். பவழத்தாலாகிய கோவையைப் பவழக்கோவை என்போம். பச்சையாலாகிய கோவையைப் பச்சைமணிக் கோவை என்போம். பன்மணிகளாலாய கோவையை என்னென்போம்? பன்மணிக்கோவை என்போமேயல்லால் ஏதேனும் ஒரு மணியாலாய கோவையென்று கூற ஒரு சிறிதும் ஒருப்படோம் அன்றோ? இதுபோலவே அயன்மொழிச் சொற்கள் கலந்த தமிழைத் தமிழென்று கூற ஒரு சிறிதும் ஒருப்படோம்; பிறமொழிச் சொற்களைக் கலப்பதால் நாளடைவில் தமிழ் அடியோடு ஒழிந்து வேறுமொழியாக மாறிவிடும் என்பது திண்ணம். வயிரக்கல்லின் ஒளியை மிகுதிப்படுத்த நினைந்து அதை நெருப்பிலிட்டுக் காய்ச்சுவாருளரோ? அயன்மொழிச் சொற்கள் கலந்த தமிழ் இனிமை பயவாதென்பதனை மணிப்பிரவாள நடையே வலியுறுத்தும். இப்போதே பலர் தமிழ் தனிமொழியன்று; வடமொழியினின்று தோன்றியதெனக் கூறுகின்றனர். தமிழ்நூற் கடலின் கரைகண்டுணர்ந்த சுவாமிநாத தேசிகரே

> "...... ....தமிழ் நூற் களவிலை யவற்று
> ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ
> வன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென்
> றறையவே நாணுவ ரறிவுடை யோரே."

என்று தமிழியல்புக்கு மாறுபடக் கூறுவரேல் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்? இஞ்ஞான்று எண்களெல்லாம் ஆங்கிலத்திலேயே குறிக்கப்பெறுகின்றன; சில தமிழ்ப் புலவர்களுங் கூடத் தமிழ்க் கணக்கறியார்; ஆயிர மாகாணி அறுபத்திரண்டரை யென்றால் இந்தக் கணக்கு எங்களுக்குத் தெரியாதென்பர் மாணவர்.

(தொடரும்

*திருவாசகமும் பரஞ்சோதிமுனிவரும்

(திரு. அ. மு. சரவண முதலியா ரவர்கள்)

திருவாசக மென்பது தனக்கு ஒரு வாசகமும் இணையின்றித் தன்னை ஓதினவர் உள்ளத்தே சென்று தெள்ளமுதுந் தேனும் பாலுமாய்த் தித்தித்து, அவர் மனத்தைக் கரைத்து மலத்தைக் கெடுத்து, ஊனை உருக்கி, உணர்வைப் பெருக்கவல்லதொரு அன்பு நூலாகும்.

அதனை, வாதவூரின்கண் போதவடிவினராகத் தோன்றி, அருந்தவர் நிறைந்த பெருந்துறை புகுந்து, குருந்துறு நீழலிற் றிருந்துறு மறைமுடிச் செம்பொரு ளனைத்தும் நம்பனிடத்துக் கொள்ளைகொண்ட வள்ளலாகும் மணிவாசகனார் மலர்வாய் ஒழுகிய யானெனதற்போக்கும் தேன்யா றென்ப.

பரஞ்சோதிமுனிவ ரென்பார் ஆண்டவன் ஆலவாயின்கண் அடியார்களின் பொருட்டு ஆடியருளிய அறுபத்து நான்கு அருள் விளையாடல்களையும் 'திருவிளையாடல்' எனப் பெயரிய நூலாகப் பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாவலர் பெருந்தகையாகும்.

இம்முனிவர் பெருமான் அத்திருவாசகமென்னுந் தேன் கடலில் எங்ஙனம் திளைத்தாடித் தேக்கெறிந்தாரென்பதை ஆய்ந்து முடிப்பதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

கருவாசம் போக்குந் திருவாசக ஆசிரியராகிய வாதவூர் வள்ளலின் வரலாற்றைக் கூறுவன (இக்காலத்தெழுந்த உரைநடை நூல்களன்றி) ஐந்து நூல்கள். அவை பழைய திருவிளையாடல், திருவிளையாடற்புராணம், திருவாதவூரர் புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணமென்பன. இவற்றுள் திருவுத்தரகோசமங்கைப் புராணத்தில் †அடிகளின் முன் வரலாற்றுக் குறிப்பு மட்டும் கூறப்பட்டுள்ளது. திருப்பெருந்துறைப்புராணம் அண்மைக் காலத்திலிருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாற்

---

* இது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்ற விரிவுரையாகும். † அடிகள் என்பது மணிவாசகனாரை,

பாடப்பெற்றுள்ளது. முன்னுள்ள நூல்கள் மூன்றிலும் அடிகள் வரலாற்றுப் பகுதிகள் சிற்சில ஒன்றோடொன்று முரண்பட்டுக் காணக்கிடக்கின்றன. அவை தம்மைச் சிக்கறுத்துத் துணிந்து நாம் கோடற்குரிய பொருள் இதுதானென்று உயர் திரு. மறைமலையடிகள் தங் கூர்த்த மதியாற் பல ஆண்டுகள் ஆராய்ந்து முடிவு கட்டி யிருப்பதை அவர் தம் "மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்" என்னும் அரிய தனித்தமிழ் நூலின்கண் பரக்கக் காண்க. இங்கு நாம் எடுத்துக்கொண்ட பொருள் "பழைய திருவிளையாடல் ஆசிரியராகிய வேம்பத்தூர் நம்பி, திருவாதவூர் புராண ஆசிரியராகிய கடவுண்மா முனிவ ராகிய இவ்விருவரினும் திருவிளையாடற் புராண ஆசிரியராகிய பரஞ்சோதி முனிவரென்பார் திருவாசகத்தில் நிரம்பவும் பயிற்சி பெற்றவர்" என்பதேயாதலின் அத்துறையிற் செல்லுவேமாக.

பரஞ்சோதி முனிவ ரியற்றிய திருவிளையாடற் புராணத்தில் ஆளுடைய அடிகளோடு தொடர்புடைய நான்கு படலங்களிலும் பிற இடங்களிலும் திருவாசகக் கருத்துக்கள் பலவும் தொடர்கள் பலவும் அடிகள் பலவும் செறிந்து காணப்படுகின்றமையும், ஏனைய இரண்டு நூல்களிலும் அத்துணைக் காணப்படாமையுமே மேற்கூறியதற்குப் போதிய சான்றாகும்.

அடிகள், 'இறைவனது இன்னருளைப் பெறுதற்கு யான் எவ்வாற்றானும் தகுதியுடையனல்லேன்; அங்ஙனமிருக்கவும் அப்பெருங்கருணை யுடைய பெம்மான் அருட்குரவனாகி எளிவந்து என்னை வலிய ஆண்டுகொண்டு எனக்கு ஆராத இன்பம் அளித்த செயல்,

"பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமே லிசைமுரலு மூர வதுவன்றோ
நாய்மேற் றவிசிடு மாறு" —பழமொழி, ௭௫.

என்றாங்கு 'நாய்க்குத் தவிசிட்டதை ஒக்கும்' எனக்கருதி இக்கருத்தைத் தாமருளிய திருவாசகத்தின்கண் ஆறு இடங்களிற் கூறியருளுகின்றார். அவ்விடங்களும் அக்கருத்துடைய பாட்டுக்களும்,

"கேட்டாரு மறியாதான்..............நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே காட்டாதனவெல்லாங் காட்டி..............." (திருச் சதகம், உஅ).

"ஒன்ருய் முளைத்தெழுந்து.....................நன்ருக வைத் தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த, என்தாதை................" (திருக்கோத்தும்பி, அ).

"பூமேலயனோடு...............நாய்மேற்றவிசிட்டு..............." (ஷை, உ௰.)

"நானாடியணைவான்..............நாய்க்குத் தவிசிட்டு...... ...." (உயிருண்ணிப் பத்து, உ.)

"கற்றறியேன்..............போற்றவிசு நாய்க்கிடுமோறன்றே ...." (திருவேசறவு, ௬).

"செம்மைநல மறியாத................நாய்சிவிகை யேற்று வித்த..............." (அச்சோப்பதிகம், கூ).

என்பன. அறுநூற்றைம்பத்தெட்டு அருட்பாக்களுக்குள் இங்ஙனம் ஆறு இடங்களிற் கூறப்பட் டிருப்பதைக் கூர்ந்து நோக்கின் அவ்வடிகளது திருவுள்ளத்தின்கண் இக்கருத்து இடையருது நின்று நிலவிக்கொண் டிருந்ததென்பது ஒருதலை. இவ்வரிய கருத்தை அடிகள் கூற்ருக வைத்து வேம்பத்தூர் நம்பியேனும் கடவுண்மா முனிவரேனும் தங்கள் நூலில் யாண்டுங் கூறினால்லர்.

இனி, ஆண்டவன் அருட்குரவனுகப் போந்து அடிகளுக்கு அரும்பொருளை அறிவுறுத்தி அடியார்களோடும் மறைந்தருளிய பின்னர் மணிவாசகப் பெருந்தகையார் வருந்தும் பகுதியில்,

"கனவில்வருங் காட்சியெனக் கருணைமூர்த்தி காட்டி
மறைத்தலு மன்பர் கலக்கத் தாழ்ந்து
னேவுகொல்லோ கனவுகொல்லோ வின்றுநாதன்
ருமலிக்குந் தவிசிட்ட நலம்போ லென்னை
கினைவரிய திருமேனி காட்டியாண்டு நீத்ததையென்
றையுற்று நெஞ்சஞ் சேதி

இனவடியா ருடன்கூட்டா தேகினையே யென்னையுமென்
விணையையுமிங் கிருத்தி யெந்தாய்.''

(வாதவூரடிகளுக் குபதேசித்த படலம், சச)

என அடிகள் கூற்ருக வைத்துப் பரஞ்சோதி முனிவர் இக் கருத்தைப் பாராட்டி யிருப்பதுடன் "இன்ன போழ்து தான் ஆளுடைய அடிகட்கு இவ்வரிய கருத்துத் தோன்றியிருக்க வேண்டும்'' எனத் தங் கூர்த்தமதியா லாய்ந்து அறிந்து கூறி யிருப்பது போற்றத் தகுந்த தொன்ருகும்.

இன்னும் இச்செய்யுளின் ஈற்றடியாகிய "இனவடியா ருடன் கூட்டா தேகினையே என்னையுமென் விணையையுமிங் கிருத்தி யெந்தாய்'' என்பது திருவாசகத்தில்,

"மானேர் நோக்கி'' என்று தொடங்கும் பாட்டிலுள்ள "போனாரடியார் பொய்யும் யானும் புறமே போந்தோமே'' என்னும் அடியையும், "பொருத்த மின்மையேன்'' என்ற தலைப்பையுடைய பாட்டிலுள்ள, "அருள்செய் யன்பருநீயுமங் கெழுந்தருளி யிங்கெனை, இருத்தினய் முறையோவென் னெம் பிரான் வம்பனேன் வினைக்கிறுதி யில்லையே'' என்னும் அடிகளையும் தழுவியிருத்தல் காண்க.

இன்னும் பரஞ்சோதி முனிவர், ஆண்டவன் அடியாரோடும் மறைந்தருளியதன் பொருட்டு அடிகள் வருந்தும் அப்பகுதியிலேயே,

"வஞ்சவினைக் கொள்கலமா முடலைத் தீவாய் மடுக்கிலேன்
வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லே னுதனேயதுவு
நின துடைமை யென்றே
அஞ்சினேன் தானேயு மழியாதாவி யையனே
நினைப்பிரிந்து மாற்ற கில்லேன்
என்செய்கோ வெந்தாயோ வெந்தாயோவென் றிரங்கினர்
புரண்டழுதா ரினைய சொல்வார்.''

(வாதவூரடிகளுக் குபதேசித்த படலம், ௬0)

என்று படிப்போருள்ளம் பாறையாயினும் நெக்குவிட்டுருகுமாறு கூறியிருப்பது திருவாசகத்திலுள்ள,

"வினையென் போலுடை யார்பிற ராருடை யானடிநா யேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்து நான் முட்டிலேன் றலைகீறேன்
இனையன்பாவனை யிரும்புகன்மனஞ் செவியின்னதென் றறியேனே"
(திருச்சதகம், ௩எ)

"ஓய்விலாதன வுவமனிலிறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயிலாகிய குலத்தினுங் கடைப்படு மென்னை நன்னெறி காட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே."
(ஷை, ௩௧.)

"அறுக்கிலே னுடல்துணிபடத் தீப்புக்கார்கிலேன் திருவருள் வகை
யறியேன்
பொறுக்கிலேனுடல் போக்கிடங் காணேன் போற்றி போற்றியென்
போர்விடைப்பாகா
இறக்கிலே னுனைப்பிரிந்தினி திருக்கவென் செய்கே னிதுசெய்க
வென்றருளாய்
சிறைக்கணேபுனல் நிலவிய வயல்சூழ் திருப்பெருந்துறை மேவிய
(செத்திலாப் பத்து, ௬) [சிவனே."

என்னுந் திருப்பாட்டுக்களின் கருத்துக்களை முற்றுந் தழுவி நிற்றல் காண்க.

இன்னும் அப்பரஞ்சோதியார் பாடலிலுள்ள 'நாதனே நினதுடைமை யென்றே அஞ்சினேன்" என்னுந் தொடருக்கு,

"அன்றே யென்றனாவியு முடலுமுடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னை யாட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வென்டோண்முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே."
(குழைத்த பத்து, எ)

என்னுந் திருவாசகச் செய்யுள் ஆதாரவாதல் காண்க.

மறித்தும் மேற்காட்டிய பகுதியிலேயே அடிகளின் கூற்றாக வைத்து 'வஞ்சவினை' என்று தொடங்கும் பாட்டை அடுத்துப் பரஞ்சோதி முனிவர்,

"வறியவனு மொருபிறவிக் குருடன் கையில்
வந்தபெரு விலைபோன் மழலை தேருச்
சிறியவனு மொருமதலை கையிற்கொண்ட
செம்பொன்மணி வள்ளம்போற் றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை யெளிவந்தாண்ட
வருமையறியேன் றன்பத்தழுவத் தாழப்
பிறிவறியா வன்பரொடு மகன்றாய் கல்லாப்
பேதையேன் குறையல தெம்பிரா னாலென்னே"

எனக் கூறுகின்றார். இச்செய்யுளிலுள்ள "மழலைதேருச் சிறியனு மொருமதலை கையிற்கொண்ட செம்பொன்மணி வள்ளம்போல்" என்னும் தொடர் திருவாசகத்திலுள்ள,

"மையிலங்குநற் கண்ணிபங்கனே
வந்தெனைப்பணி கொண்டபின் மழக்
கையிலங்குபொற் கிண்ணமென்ற
லாலரியை யென்றுனைக் கருதுகின்றிலேன்."

என்ற அடிகளையும், "பிறிவறியா வன்பரோடு மகன்றாய்" என்னுந் தொடர் திருவாசகத்தில் அடைக்கலப்பத்து கூ-வது செய்யுளிலுள்ள "பிறிவறியா வன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ், மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்" என்னும் அடிகளையும், "கல்லாப் பேதையேன் குறையல தெம்பிரானு லென்னே" என்னுந் தொடர் திருவாசகத்தில் "என்னலறியாப் பதந்தந்தா யானதறியாதே கெட்டேன், உன்னாலொன்றுங் குறைவில்லை" என்ற அடிகளையும், "வான் பாவிய" என்ற முதற்குறிப்பையுடைய பாட்டிலுள்ள, "நான் பாவியனானுலை நல்காயெனலாமே" என்னும் அடியினையும் சொல்லாலும் பொருளாலும் முற்றுந் தழுவிச் செல்லுமாறு காண்க.

இனி, அடிகள் "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என அருளிச் செய்ததைப் பரஞ்சோதி முனிவர், "முன்னு முதுபொருட்கு முன்னு முதுபொருளாய்ப் பின்னும் புதுமைக்கும் பின்னாகும் பேரொளியாய்" எனக் கூறிச் செல்கின்றார்.

இன்னும் அடிகள்,

"குழைத்த சொன்மாலை கொண் டருள்போற்றி"

"ஆவாவென்ன ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே"

"பஞ்சேரடியாள் பாகத்தொருவா பவளத்திருவாயால்
அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே"

என அருளியவற்றை முறையே,

"பாவார் தென்சொற் பனுவன்மாலைப் பணிகொண்டாய்"

"ஆவாவென்று யஞ்சேலென்று யறகேயோ"

"பஞ்சேரடியாள் பாகாகூடற் பரமேட்டி
அஞ்சேலென்னுமிதுவோ வருளுக்கழகையா"

என அடிகள் கூற்றாகவைத்துப் பரஞ்சோதிமுனிவர் பகரும் பாட்டுக்கள் சொல்லாலும் பொருளாலும் ஒத்திருத்தல் காண்க.

இன்னும் பரஞ்சோதிமுனிவர்,

"காவிநேருங் கண்டா நாயிற் கடையான
பாவியேனைப் பொருளாக்கொண்டென் பணிகொண்டாய்
ஆவியோடிவ்வுடலு நினதேயன்றேவின்(ற)
ஒவிவானாதிருந்தாலா ரென்னுடையானே"

என்று கூறிய செய்யுளிலுள்ள 'பொருளாக் கொண்டேன் பணி கொண்டாய்'' என்பது திருவாசகத்திலுள்ள 'பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே' என்பதையும், 'ஆவி யோடிவ் வுடலு நினதேயன்றே' என்பது 'அன்றே யென்றனுவி யும்' என்று தொடங்கும் பாட்டையும் ஒத்திருத்தலுடன், 'நாயிற் கடையாம் நாயேனை' என்னுந் தொடர்போலத் திருவாச கத்தில் சற்றேறக்குறைய அறுபத்தேழு இடங்களில் வரு தலையுங் காண்க.

"அத்தவோ கல்லாக் கடையேனையாட் கொண்ட
பித்தவோ பொய்புலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ சித்தர் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ"

என அடிகள் கூற்றாகவைத்துப் பரஞ்சோதியார் பாடியதிலுள்ள 'கல்லாக் கடையேனை' என்பது திருவாசகத்துக் 'கல்லாமனத்

துக் கடைப்பட்ட நாயேனை' 'கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை" என்னுந் தொடர்களையும், 'கடையேனை யாட் கொண்ட பித்தவோ' என்னுந் தொடர் 'தாதாய் மூவேழுலகுக் குந்தாயே நாயென்றனை யாண்டபேதாய்' என்பதையும், 'சித்தந் தெளிவித்து எனைத்தந்த' என்பது 'சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட' என்பதையும் தழுவிச் செல்லு தல் காண்க.

இனி, 'எங்கெழிலென் ஞாயிறு' என அடிகள் 'திரு வெம் பாவை'யிற் கூறியதைப் பரஞ்சோதி முனிவர் பிட்டுவாணிச்சி கூற்றாக வைத்து 'இரவியெங்கெழுக' என்று கூறியிருப்பதுங் கருதத் தக்கதாகும்.

மேற்காட்டிய பரஞ்சோதியார் பாடல்களெல்லாம் அடி கள் வரலாற்றைக் கூறுவனவாகிய 'வாதவூரடிகட்கு உபதேசித்த படலம்' 'நரி பரியாக்கிய படலம்' 'பரி நரியாக்கிய படலம்' 'பிட்டுக்கு மண் சுமந்த படலம்' ஆகிய நான்கினு முள்ளன. இதிற் றொடர்பில்லாத 'விருத்த குமார பாலரான படல'த்தில் 'இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாலென' எனப் பரஞ்சோதியார் பகர்ந்தது 'கீழ்ச் செய்தவத்தால் கிழியீடு நேர்பட்டு' என்னுந் திருவாசகத்தேனை நுகர்ந்தென்க. எனவே மேல் எடுத்துக் காட்டியவற்றால் திருவாசக மென்னுந் தேன் கடலிற் பல்காலுந் திளைத்து அப்பாக்கள் பலவற்றையும் நினைவிற் பதித்து வைத் திருந்தவர் பரஞ்சோதி முனிவரென்பது புலனாகின்றது.

அறிவுவல்லானொருவன் தன்னாற் காணப்படாத ஒருவனது சிலமொழிகளையோ, அல்லது அவனியற்றிய நூல் ஒன்றையோ பல்காலும் கூர்ந்து கூர்ந்து ஆராய்வானாயின், அதன்பயனாக அவனது உள்ளம், உரை, உருவ முதலிய அனைத்தையும் மக்க ளுக்கு மாண்புற வரைந்து காட்டிவிடுவானென்பது ஒருதலை. அங்ஙனமே பரஞ்சோதிமுனிவராம் எஃகறிவினரும் திருவாச கப் பயிற்சிச் சிறப்பால் கூர்ந்த தமது அறிவென்னுந் தூரியங் கொண்டு, கள்ளமற்ற உள்ளமென்னும் படத்தில் அடிகளின் அருள்வடிவத்தை வரைந்துவைத்து வழிபட்டு வந்தாரென்பது திருவிளையாடற் பாயிரத்தில்,

"எழுதரு மறைகடேரு விறைவனை யெல்லிற்கங்குல்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேலேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி
அழுதடி யடைந்தவன்ப னடியவர்க் கடிமை செய்வாம்."

என ஆளுடைய அடிகளைத் துதிப்பதால் நன்கு புலனாகின்றது. 'திருவாதவூர்ச் சிவபாத்தியனருளிய மணிவாசகத்தி லுள்ள மாண்புறு ஆதரவுகள் எத்துணைகொண்டு பரஞ்சோதியார் இப்பாடலைப் பகர்ந்தனர்' என ஆராயின், அஃது நமக்கு ஓர் வியப்பையும் மகிழ்ச்சியையும் அரன்கழல்மாட்டு அயரா அன்பினையும் விளைக்குமாகலின், அத்துறையிற் செல்லுவேமாக.

இச்செய்யுளின் திரண்ட பொருள் 'அடிகள் ஆண்டவனை அல்லும் பகலும் வழிபட்டு அழுது அவன் அருட்கழலை யடைந்தார்' என்பதாகும்.

இச்செய்யுளின் ஈற்றடியிலுள்ள 'அழுதடி யடைந்த அன்பன்' என்பது அழுது, அடி, அடைந்த, அன்பன் என்ற நான்கு சொற்கள் மூன்று சந்தியால் முடிந்ததாகும். 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பலவேறு பொருள்கள் பயக்குமாகலின் ஈண்டுவந்த 'அழுது' என்னும் அவ்வினையெச்சத்திற்குத் திருவாசகக் கருத்துடன் மாறுபடாத பொருள் கொள்ளின், 'உண்டு வலிபெற்ற சாத்தன்' என்புழிப்போலக் காரண காரியப்பொருளில் வந்ததாகக் கொண்டு, 'அழுதமையால் ஆண்டவனடியை அடைந்த அன்பர்' எனப் பொருள் காணவேண்டும்; அங்ஙனங் காணுங்கால் 'ஆண்டவன் அடிப்பேற்றுக்கு அழுதல் ஒரு சாதனம்' என்பதும், 'அடி அடைந்தார்' என்பதும், 'அன்பர்' என்பதுமாகிய மூன்று பெரும் பகுதிகள் நமக்கு வாய்க்கின்றன. ஆகலின், அவற்றை நிரலே எடுத்து ஆராய்வோம். (தொடரும்)

* சமய விளக்கம்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள்]

'சமயம்' என்ற சொல்லின் பல பொருள்களுள் ஒரு பொருள் 'வழி' என்பது. நெறி என்ற சொல்லும் அப்பொருளையே சுட்டும். எதற்கு வழி யென்னில், துன்ப நீக்கத்திற்கு அல்லது இன்பப்பேற்றிற்கு, என்க. துன்பம், தடை அல்லது இடையூறு காரணமாக வருவது; இன்பம், விருப்பம் நிறைவேறப் பெற்ற காலை எழுவது. மக்கள் தமது விருப்பங்களைத் தடையின்றித் தமது முயற்சியால் நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றல் உள்ள வரை, கடத்தற்கரிய துன்ப மொன்றையும் உணர மாட்டார்கள். தமது உழைப்பிற்குத் தீராத்தடை அல்லது பயனின்மை உண்டாய காலை, தம்மினும் மேம்பட்டதாகக் கருதும் ஒரு பொருளின் அல்லது பல பொருள்களின் உதவியை அவர்கள் நாடுவர். நாடுங்கால், அவற்றைத் தம்மைப் போன்ற இயல்புடையனவாக நினைப்பர். வெயிலிலே சென்றவர்கள் மாநிழலை நண்ணியவுடன் நிழலின் இனிமையை உணர்ந்து அதனை நல்கு மரத்தின்மாட்டு விழைவுடையராதல் கூடும். தம்மைப்போல அஃதும் ஓர் உயிர்ப் பொருளெனவும், உயரத்தில் தம்மினும் அது பெரியதெனவும் கருதி அதற்குத் தமது தாழ்மையைக் குறிக்கும் வணக்க மியற்றுதலுங் கூடும்.

மக்களுள் பொல்லாங்கு விளைப்பார், தம்மை யஞ்சி வணங்குவார் மாட்டு இரக்கம் வைப்பதைக் கண்டவர்கள், தமக்குக் கீழ்ப்பட்ட உயிர்களுள்ளும் பிறவற்றுள்ளும் அஞ்சத் தக்கனவாயும் ஊறு செய்வனவாயுமுள்ள நாக முதலியவற்றை அஞ்சி வணங்கின், அவைகள் இடையூறு விளைக்க மாட்டா, என்ற கருத்துப்பற்றி அச்சத்தால் அவற்றை வணங்குவர். இறந்துபோன உறவினரை மக்கள் கனவிற் காண்டலால் அன்னோர் மண்ணுலகை நீத்தபின் பிறிதோரிடத்தில் உறைவரென

* இது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்றவிரிவுரையாகும்.

வும், அவர்கள் மக்களினு மிக்க ஆற்றலுடைய ரெனவும், தாம் தங்கும் உலகினின்று இவ்வுலகுக்கு வருதல் கூடுமெனவும் எண்ணிய மாந்தர் இறந்த தமது உறவினரை வழிபட்டு, அவர்கட்கு உவப்பெனக் கண்டவற்றைப் படைத்தல், ஆடை சாத்துதல், மாலை சூட்டுதல், இசை முழக்குதல் முதலியனவு மேற்கொள்வா ராயினர். எப்போது மக்கள் இயற்கைப் பெருஞ் சுடர்களை யாதல், இயற்கைச் சிறு பொருள்களை யாதல், இறந்த உறவினரை யாதல், பிற பெரியோரை யாதல் வழிபடத் தொடங்கினார்களோ, அப்போது சமயமென்பது உலகிலே தோன்றியதென்னலாம். மக்கள் மன அறிவின் வளர்ச்சியே, சமய வுணர்ச்சிக் கடிப்படை. அஃதே அவர்களை விலங்கு முதலிய கீழ்ப்பட்ட உயிர்களினின்றும் பிரித்து வேறுபடுத்துவது.

உலகப் பயன்களாகிய பொருள், அதிகாரம், இன்பம், நோய் நீக்கம், போர் வெற்றி முதலியன கருதி, அவற்றை நல்க வல்லன என நம்பப்பட்ட சிறு தெய்வங்களை வணங்கும் நெறியே, நாகரிக முதிராத மக்கள் வகையார் பலருள்ளும் உலகெங்கணுங் காணப்படும். பண்டைக் காலத்திலும் இத்தகைய சமயமே பல இடங்களிலும் நிலைபெற்றிருந்தது. அப்போது மக்கள் பெரும்பாலும் உலக வாழ்வு காரணமான முயற்சிகளிலே பொழுது கழித்தனர். சமயச் சார்பிலே இத்தெய்வம் சிறந்த பயன் கொடுக்கும் அத்தெய்வம் உயர்ந்த உதவி யளிக்கும் என்ற அத்துணையே வெவ்வேறு தெய்வ வழிபாட்டினர்க்குள் பிணக்கு ஏற்படலாமே யொழிய, தெய்வத்தி னியல்பு பற்றிய வாதங்கள் அந்நிலையில் நிகழ இடமில்லை. ஏனெனில், தெய்வ வியல்பை ஆராயும் ஆராய்ச்சி மக்கள் அறிவு வளரப் பெற்ற காலை நிகழ்வது. பல்வகை மக்கட் குலத்தாருள் இணக்கமோ, போரில் வெற்றியோ, ஏற்பட்ட போது, அவர்கள் வழிபட்ட தெய்வ வணக்கங்களின் கலப்பு ஏற்பட்டிருத்தல் கூடும். அச்சத்தாலோ, அன்பினாலோ, பல தெய்வங்களைப் பயன் கருதி மக்கள் வழிபட்டபோது, அவரவர் வழிபாட்டின் உண்மைக்குத் தக்கவாறு ஒரு கடவுளே அவ்வத் தெய்வங்கள் வாயிலாகப் பயனளிப்பன் என்பது பெரியோர் கொள்கை.

எவ்வெவர் தம்மையேனும் யாவரே யெனினும் போற்றின்
அவ்வவ ரிடமாய்நின்றே அவர்க்கருள் செய்வாய் போற்றி.

என்றது காண்க.

ஐம்பொறி வாழ்க்கையில் ஈடுபட்ட உயிர்கள் கடவுளைத் தாமே யறியமாட்டா. கடவுளும் தன்னை அவர்கட்கு அந்நிலையி னுணர்த்தவு முடியாதாகலின், அவரவர் சிற்றறிவுக் கெட்டிய வழிபாட்டிற்குப் பயனளித்தல் வாயிலாகப் படிப்படியாகச் சமய வுணர்ச்சியைத் திறம் பெறுவிக்கின்றனன் போலும்.

நாளடைவில் மக்களுள் அறிவு முதிரப் பெற்றார் உலகப் பொருளின் உண்மை யியல்பினை அறிந்து, உலகிற்கு வேறாக அதனை நடத்தும் முதல்வன் ஒருவன் உளனென ஊகித்துணர்ந்தனர். செவ்விய அறிவு பெறாதவர், முதல்வனுண்மை யுணராது முடிந்த பொருள்களை வெவ்வேறாகக் கண்டன ரென்க.

தெய்வ உண்மை தெளிந்தாருள்ளும், அதன் இயல்பைப் பற்றிப் பல்வேறு கொள்கையுடைய பல்வே றறிஞர் தோன்றினர். கடவுளோ அளவு கடந்த பெருமை யுடையவன், உயிர்களோ சிற்றறிவுடையன ஆதலின், பல்வேறு கொள்கைகள் எழுத லியல்பே. "நெறிகள் தாம் பலவுமாய் அந்தந்த நெறிக்காச் செறியுந் தெய்வமும் பல பல ஆகவுஞ் செறிந்தால், அறியுந் தன்மையிங் காருனை" என்ற தாயுமானர் அருண் மொழி நோக்குக.

'சமயங்கள் பிணக்குறும் பிணக்கை—யாவரே
முடிவெண்ண வல்லார்'

என்றது மஃதே. எங்கு நிறை கடவுளின் தன்மையைப் பல சமயத்தார் பலவாறு கூறுவதைத் தாயுமானர் ஒரு திருப்பாட்டிற் குறித்தமை காண்க.

அன்னேயனே யெனுஞ் சிலசமய நின்னையே
ஐயா வையா வென்னவே
அலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்று மிலவாய்ப்
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சில சமயமேல்

பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி
  பிறவுமே நிலய மென்றும்
தன்னெறி லாததோ ரணுவென்று மூவிதத்
  தன்மையாங் கால மென்றும்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
  சதாஞான வானந்த மாய்
என்னேஎனே கருணை விளையாட் டிருந்தவா
  றெம்மனோர் புகல வெளிதோ
இகபர மிரண்டனிலு முயிரினுக் குயிராகி
  யெங்கு நிறைகின்ற பொருளே !

உண்மையின் ஒரு பகுதியைக் கண்டவர்கள், மற்றொரு பகுதியைக் கண்டவர்களோடு கலக்குங்காலை இரு பகுதியும் வெவ்வேறு தன்மையனவா யிருப்பின், அவர்க்குள் கருத்து வேறுபாடு நிகழும். அஃதே சமயப் பிணக்கிற்குக் காரணமாவது. உண்மையின் பெரும் பகுதி யுணர்ந்தார்க்கும், அதன் சிறு பகுதி யுணர்ந்தார்க்கும் போர் விளைதலும் இனைய காரணம் பற்றியே. அறிவும் ஒழுக்கமு முடையார் மாட்டுக் கருத்து வேறுபாடு இங்கு விளையாதிருத்தல் கூடும். ஏனையோருள் பெருங் கலகத்திற்கு அஃதே காரணமாகும். காய்தல் உவத்தல் அகற்றி உண்மை யாராயும் பலரும் தத்தங் கொள்கைகளை ஒப்பிட்டுப் பார்ப்பின் பெரும்பயன் விளைதல் திண்ணம். ஓந்தியின் நிறத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுற்ற இருவருள், ஒருவர் அது பசிய நிறமுடைய தென்றும், மற்றொருவர் அது நீலநிற முடைய தென்றும் வாதித்தனர். மூன்றா மனிதனொருவன் அவ்விருவரையு மறுத்து அது கருப்பு நிறமுடைய தென்றனன். அவன் அதைத் தெளிவு படுத்த வெண்ணித் தன் பையிலிருந்த கோம்பியை வெளியே யெடுத்தபோது மூவரும் அது வெண்ணிறத்ததா யிருந்தமை கண்டு வியப்புற்று, அது ஒவ்வொரு பொழுதில் ஒவ்வொரு நிறங்காட்டு மியல்பிற்றெனத் தெரிந்தடங்கினர். அவ்வாறே ஒத்த ஆராய்ச்சியுடைய பல்வேறு சமயத்தினர் தத்தங் கொள்கைகளை ஒற்றுமைப் படுத்தி உண்மை தேர்தல் கூடும்.

கடவுளின்மை பற்றி உண்மையை ஒருங்கு ஆய்தலை மேற்

கொள்ளாத பல சமயத்தினரும் தத்தங் கொள்கைகளே சிறந் தன வென வற்புறுத்துதல் இயற்கையாதலின், மணிவாசகனார்

> சமயவாதிகள் தத்தமதங்களில்
> அமைவதாக அரற்றி மலைந்தனர்

என்றருளினர்.

வெவ்வேறு கடவுட் கொள்கையினர், தத்தங்கருத்திற் கேற்ற ஒழுக்க முதலியனவற்றைச் சமைத்து, அதாவது, செப்பஞ் செய்து தம் மதம் நிறுவுவ ராதலின், 'சமையம்' என்ற சொல்லே சமயமென மருவிற் றென்றாலு மொன்று.

ஒவ்வொரு சமயத்தாரும் தத்தங் கொள்கைகளைச் சிறப்பாகத் தக்க காரணங்களோடு எடுத்து மொழியுங்கால், அவற்றுள் தமக் கொத்ததைத் தழுவி நடப்பார் சிலர். வேறு சிலர் உண்மையறிய முடியாது கலக்கமுறுவர். மணிமேகலையுள், சமயக் கணக்கர் பலரும் தத்தங் கோட்பாடுகளை இயம்பக்கேட்டு மணிமேகலை புத்தமதக் கொள்கை தனக் கொத்திருந்தமையால் அச்சமய வொழுக்கத்தைக் கடைப்பிடித்தனள். இது எதனை உணர்த்துகிற தென்றால், ஒவ்வொரு சமயமும் சிற்சில உயிர்கட்கு ஒத்ததா யிருக்குமென்பதனையே.

சமய ஆராய்ச்சியாற் கலக்கம் ஏற்பட்டுக் கவலையுளதாவதை மணிவாசகனார்

> உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
> சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்
> கவல்

என்றமையா லறிக. அத்தகைய கலக்கத்தால் கைக்கெட்டிய பயன் யாதும் பெறாது, உள்ளக்கொதிப்பே நிகழ்தல் கூடுமாதலின் தாயுமானர் 'பன்னெறியாம் பாலைவனத்தில் விட்ட பாவமென்னே' என்றனர். இன்னும் அவர் கூறுவதாவது

> பூதலய மாகின்ற மாயைமுத லென்பர் சிலர்
> பொறி புல னடங்கு மிடமே
> பொருளென்பர் சிலர் கரண முடிவென்பர் சிலர் குணம்
> போன விடமென்பர் சிலபேர்

நாதவடி வென்பர் சிலர் விந்துமய மென்பர் சிலர்
நட்ட நடுவே யிருந்த
நாமென்பர் சிலர் உருவ மாமென்பர் சிலர் கருதி
நாடி லரு வென்பர் சிலபேர்
பேதமற வுயிர் கெட்ட நிலையமென்றிடுவர் சிலர்
பேசி லரு ளென்பர் சிலபேர்
பின்னு முன்னுங் கெட்ட சூனியம தென்பர் சிலர்
பிறவுமே மொழி வரிவையாற்
பாதரசமாய் மனது சஞ்சலப் படுமலாற்
பரமசுக நிஷ்டை பெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே

என்றனர். ஒரு சமயத்தில் நின்று அதன் வழி யொழுகின் அதன் பயன் கைவரும். அது குறைவுடைத்தாயின் அதற்கு மேற்பட்ட பயனை ஒருவன் நாடுதல் கூடும். அப்போது அதனின் மேம்பட்ட சமயத்தைக் கைப்பற்றுதல் உண்டாம். அவ்வாறே படிப்படியாய்ச் சமய ஏணிகளை ஏறிச் சமயங் கடந்த முழுமுதலைக் காண்டல் கூடும். அவ்வாறின்றி ஒருவன் தான் அறிந்த கொள்கையே சிறந்ததென வாதம் நிகழ்த்துவதை மாத்திரம் மேற்கொண்டால், பிறசமய வுண்மையு முணராது தஞ் சமயப் பயனுங் கைவந்து மேற்செல்லாது, வாத நிலையிலேயே நிற்றல் நேரிடும். அதனல் முழுமுதலை யறிதல் ஒருகாலு மியையா தென்பர்.

'வாதமிடு பரசமயம் யாவுக்கு முணர்வரிய
மகிமைபெறு பெரிய பொருளே.'

என்றார். வாதமிடுஞ் சமய நெறிக் கரியதாகி என்றதும் அது. சமய வாதிகளின் போருக்கு யானை கண்ட குருடர் கதையை உவமை கூறுப. அக்கதை யாவரு மறிந்தமையால் அதனை விரித்திலம். யானையின் காலினைத் தடவிப் பார்த்தவன் யானை தூண் போல்வதெனவும், அதன் வாலைத் தடவினவன் அது விளக்குமாறுபோ லிருந்ததெனவும், அதன் காதைத் தொட்டவன் அது முறம்போ லிருந்ததெனவும், வாதிப்பாராயினர். காலைத் தடவி

னவன் யானையின் காதையும் வாலையும் உறுப்புக்களையும் தடவிப் பார்ப்பானுயின் தன் கொள்கை குறைபாடுடைய தென உணர்வன். அவ்வாறே பிற குருடரு முணர்வர்.

பன்னூல் கூறுஞ் சமய நெறி நின்று படிப்படியாய் மேற் செல்லுவார், சமய வியல்பினை நன்குணர்வர். 'புறச்சமயநெறி நின்றும் அகச் சமயம் புக்கும், புகன் மிருதி வழி யுழன்றும் புகலு மாச்சிரம அறத்துறைகள் அவை படிந்தும்' என்றதுமது. ஒரு துணையாற்றின் நீரோட்டத்தைப் பின்பற்றிச் செல்லுபவன் அது சென்று சேரும் பேராற்றினை அடைவன். பின்னர் அப் பேராறு சென்று வீழுங் கடலினைத் தலைப்படுவன். துணைச் சிற்றாறுகள் பேராற்றில் விழுந்து கடல் சேரலும் பேராறுகள் நேராகச் சென்று கடல் புகலுங் காண்டும். அனைய தன்மை சமயங்கட் கிருத்தலின், 'பல பல மதமு மீற்றின் ஒரு வழிப்படலும் போலும்', 'நதியுண்ட கடலெனச் சமயத்தையுண்ட பர ஞான ஆனந்தவெளியே', 'ஆறிருத்திலங்கு சமயங்க ளாறுக்கு மாழ்கடலாய்' என்ற திருவாக்குகள் எழுந்தன. சமயங்களெல் லாம் ஆறுகளாமெனின், ஆறுகள் கடலிற் சென்றபின் தமது வடிவ மிழந்து முடிவு பெற்றாங்கு சமயங்களும் ஓரெல்லையிற் சென்று முடிவெய்தும். ஆற்றினெல்லைக் கப்பாற்பட்ட கடலானது அளவிலாது பெரிதாயிருப்பது போல, சமய வெல்லை கடந்த முழுமுதலானது சமயம் அளவிடா ஆனந்தவடிவா யிருக்கின்றது.

அந்த ஆனந்தப் பெருங்கடலிலே திருவருட் டுணையாய புணையின்றிச் செல்லுதலியலாது. "நின்னருள் கொண்டறிவதல்லால் நெறிவேறுண்டோ" என்றதுமது.

(தொடரும்)

*அறஞ் செய்வது எதற்கு?

[திருக் கபசம் எழுதியது]

பிள்ளைகள் விளையாடுவது எதற்கு? என்ற கேள்விக்கு விடை பகர்வோமாயின், அறஞ் செய்வது எதற்கு என்ற கடாவிற்கு விடை கண்டவராவோம். நோயாலும், உறுப்புக்குறைகளாலும் ஆற்றலிழந்த சிறுரைத் தவிர்த்து, விளையாட்டில் விருப்பமில்லாப் பிள்ளைகளில்லை என்றே சொல்லலாம். இளமையின் விளையாட்டை முதுமையில் நினைந்திரங்கிய புலவரொருவர் உளங் கரையும் வகையிற் பின்வருமாறு புலம்புகின்றார்.

இனிநினைந் திரக்க மாகின்று; திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா விளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூதாளரே மாகிய வெமக்கே. (புறம். 243)

யார்தா னிங்ஙன மிரங்கார்? வாழ்க்கையின் நுகர்ச்சிகளால் உடல்தளர்ந் துளஞ்சோர்ந் தல்லற்பட்டு நிற்குமொரு முதுமகன் கூடக் கண்களில் நீர் பெருகச் சிரித்துக் குதித்து விளையாடுமொரு, சிறுவனின் நிலைகண் டகங்குழையாதிரான். வாழ்க்கையின் இன்னல்களையுங் கவலைகளையு மிச்சிறுவ ரின்னுமுணரவில்லை. இரும்பு போலுளத்தில் வந்தழுந்துந் துன்பங்களை யவர்கள் கன

* இஃது பல்லாவரம் பொது நிலைக் கழகப் பேரவையில் நிகழ்த்தப் பெற்ற விரிவுரையாகும்.

விலும் மின்னுங் காணவில்லை. செயற்குரியன செய்யாது விட்டதை நினைந்து கழிவிரக்கப்பட்டுக் கண்ணீர் சொரியு நிலையை யவர்க ளடையவில்லை. ஏற்ற காலத்தி லவர்களு நெஞ்சுபுண்ணுகி வருந்தினும் வருந்துவர். வாழ்க்கையின் காலையொளியில் திகழ்கின்ற விவர்க ளிப்பொழுது ஆடிப்பாடி மகிழ்ந்திருத்தல் நன்று.

பிள்ளைகள் ஏன் விளையாடுகிருர்கள்? பிள்ளைகள் விளையாடுதற்குக் காரணம் விருப்பமே. அவ்விருப்ப மெப்படியுண்டாகின்றது என்போமாயின், விளையாட்டி லவர்கள் பெறுமின்பமே யவ்விருப்பத்திற்குக் காரணமென்று காண்கின்றேம். இளவயதிற் பிள்ளைகள் விளையாடாவிட்டால், அவர்களுடைய அகஉறுப்புக்களும் புறஉறுப்புக்களுந் தக்கமுறையில் வளர்ச்சிபெரு. இன்றியமையாத அவ்வளர்ச்சியின்பொருட்டுப் பிள்ளைகளுக்கு விளையாட்டி லின்ப முண்டாகின்றது. ஆயினும், உறுப்புக்களின் வளர்ச்சியைக் கருதி விளையாடுகின்ற பிள்ளையு முண்டோ? இன்பங் கருதிச் சிறுவர்கள் விளையாடும்பொழுது, உறுப்புக்களின் வளர்ச்சி அவர்க ளறியாமலேயே நிகழ்கின்றது. இங்ஙனமே உயிர்வளர்ச்சியின்பொருட் டறஞ் செய்யப்படும். ஆனலது பயன் கருதி நிகழ்வ தன்று. பிள்ளைகளின் விளையாட்டைப் போலவே யஃது மின்பங் காரணமாய் நிகழ்கின்றது. பிள்ளைகளுக்கு, 'விளையாட்டை விரும்பு' என்று சொல்லவேண்டியதில்லை; இயற்கையாயவர்களுக்கு இவ்விருப்ப முண்டு. ஆனல், உயிரின் வளர்ச்சிக் கடிப்படையாகிய அறமென்பதையும் விருப்பத்தா லவர்க ளியற்ற வேண்டுமென்பதை வற்புறுத்த, 'அறஞ் செய விரும்பு' என்று கற்பித்தல் வேண்டப்படுகிறது.

உயிரின் வளர்ச்சி யாது? தேய்வு யாது? என்றிப்பொழுதுற்று நோக்குவாம். தம்மு ளொன்றுக்கொன்று முரண்பட்ட இரு நிலைகளையுந் தன்மைகளையு மொருங்கே யுடைத் திவ்வுலகு. இன்பமுந் துன்பமும், அன்பும் பகைமையும், அருளும் வெகுளியும், அமைதியுங் கொந்தளிப்பும், தூய்மையு மழுக்கும் ஆகிய பலவகைநிலைகளும் ஈண்டடுத்தடுத்துத் தோன்றுகின்றன. எதிர்த்து நிற்குமிவ் விருகூற்றுத் தன்மைகளையும் ஒளி, இருள்

என்பவற்றுளடக்கலாம். ஏனெனின், ஞாயிற்றினொளி யில்லாவிடின், எங்ஙனமுடல் வளர்ச்சியில்லையோ அங்ஙனமே, அன்பும் அருளும் வாய்மையு முயற்சியுமில்லாவிடின் உயிர் வளர்ச்சியுமில்லை. பொய்யும் பகையும் வெகுளியும் அளவு மீறிப் பெருகிடின், மக்கட் கூட்டமே யொழியும். பொதுவாக எல்லோராலும் விரும்பப்படுவன இன்பம், அன்பு, உண்மை முதலியவைவயே. நோயுற்ற பிள்ளைகள் விளையாட்டை விரும்பாததுபோல், இவற்றை விரும்பாத மக்களுமுளர். ஒளியின் பாலனவாகிய தூய்மை வாய்மை அன்பு ஆகியவற்றில் பயில்தலே அறநிலையாம். அதுவே உயிரின் தேய்வின்னதென்பது சொல்லாது பெறப்படும். ஒளி வளர்ந்து இருள் நீங்கின் உயிர் முதிர்ச்சிபெறும். ஆனால் அத்தகைய ஒளியின் வளர்ச்சியு மிருளி னீக்கமு மெல்லோர்பாலு நிகழ்ந்த ஒருகால முலகி லிருந்ததாகத் தெரியவில்லை. அந்நிலை அறத்தின் நிறைவாகும். நிறைவென்பதை (பூரணத்தை) நாமீண்டுக் காண்பரிது. அந்நிறைவை நாமெதிர் பார்க்கின்றோம்.

ஓரழகிய குரலைக் கேட்போமாயின், அக்குரலையுடையவன் அழகிய முகமும் உறுப்புகளு முடையவனா யிருக்க வேண்டுமென்றுதான் நாம் நினைக்கிறோம். நேரிலவனைக் காணுங்கால், அவன் விரும்பத் தகுந்த முகமிலாதவனா யிருப்பின், அதிலொரு குறைவிருப்பதாக நாமுணர்வது யாதுபற்றி? அரிய நூலெழுதியவரொருவர் நொண்டியாகவோ, செவிடராகவோ விருந்தால், அதிலொரு அமைதியின்மை தோன்றுவதேன்? அகத்துறுப்புக்களுக்கேற்றவாறு புறவுறுப்புகளும், புறவுறுப்புக்களுக்கேற்றவாறு அகத்துறுப்புகளு மமைந்திருக்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். அத்தகைய பொருத்தம் நாம் பெரும்பாலுங் காணப்பெறுகின்றிலம். ஆதலின், ஒளியு மிருளுங் கலந்த வ்வையக நிலை நமக்கு அமைதியளிப்பதில்லை. இது கொண்டு குறை நீங்கிய வேறு நிலைகள் வகுக்கப்பட்டன.

கட்புலனாகிய இவ்வையகத்தைக் கொண்டு காணாதவற்றைக் கருதுமுறையில், இருள், துன்பம், மடி முதலியவை தம்மு

ளொன்றுகூடிய வொரு கீழ் நிலையும், ஒளியு மின்பமு முயற்சியு மொன்றிய வொரு மேல் நிலையும் பிறக்கின்றன. இவற்றை முறையே கீழுலகம், மேலுலுகமென்பர். கீழ் மேலென்பன இழிவுஞ் சிறப்பும் பற்றி வந்தன. ஏனெனின், உலகிற்கப்பால், எல்லையற்ற பெருவெளியில் கீழுமில்லை, மேலுமில்லை. உலகிற் கொளிதருவனவாகிய ஞாயிறுந் திங்களு விண்மீன்களு நமக்கு மேலே தோன்றுவதை நோக்கி, ஒளியுலகை மேலிருப்பதாகக் கருதினர் போலு முன்னோர். நிறைவு கருதி யெழுமிந் நிலைகளை யாராய்வாம்.

ஒளி இன்பந் தருவதாயினும், அதை விலகி இருளை நாடும் பறவைகளும் விலங்குகளு முள. ஆந்தை, கூகை, பாம்பு, தேள், எலி, வௌவால் முதலியவை இவற்றுட் சிலவாம். பாம்புந் தேளுங் கீழுலகிற் பெருகி யிருக்கின்றனவென்று உடற்றுன்பத்தையும் புறவிருளையும் மறக்கவியலாதார் கூறுவார். பாம்புந் தேளு மிருளை நாடுவதேன்? அது அவற்றி னியற்கை. ஒளியை நுகர்வதற்குக் கருவியாயிருப்பது கண். ஆனல், ஒளியை நுகரவிடாமற் கண்ணை நெடுநாளாக மூடுவோமாயின், வெளிச்சத்தாலக்கண் இடர்ப்படுமேயன்றி இன்ப மெய்தாது. வட அமெரிக்காவில், கென்றக்கி (Kentucky) எனுமிடத்தில், ஒளி நுழைபறியாத பெரிய குகை யொன்றிலுள்ள நீரில் வாழு மீன்களுக்குப் பார்வையில்லை என்பதை உயிர்நூலறிஞர் குறித்திருக்கின்றனர். அங்குள்ள மீன்களுக்கு வெளித்தோற்றத்திற்குக் கண்களைப் போல் தெரிவனவாகிய இரு கரும் புள்ளிக ளிருக்கின்றன. ஆனல், விரித்துக் காட்டுங் கண்ணுடியின் வழியாக நோக்குங்கால், இவை கண்கள்போல் தோன்றுவனவே யன்றிக் கண்களல்ல வென்பது நன்குக விளங்குகின்றது. ஈண்டுக் காட்டிய நீர்வாழு முயிர்கள் வெளிச்சத்தைக் காண விடம்பெறுமையால், விழிகள் பெற்றுங் காட்சியிலவாயின. புறக்கண்ணை ஒளியில் வைத்துப் பயிற்சி செய்யாவிட்டால் நாளாவட்டத்தி லது சுருங்கி, இறுதியிற் பார்வையிழந்துவிடு மென்பது திண்ணம். புறத்தில் தோன்றி நிற்குமிவ் வுண்மை அகத்திற்கு முரித்தே. அவா, வெகுளி, அழுக்காறுகிய இருளிலேயே பயிலும் மக்க

ளது அகக்கண் குருடாகுமென்பதை எடுத்துரைக்க வேண்டுங்கொல். இவர்கள் கீழ்நிலையடையாது மற்றென் செய்வார் ?

பயிற்சியில்லாமையாலகக்கண் குருடாவ துண்மையாயின், ஏற்ற பயிற்சியாலது முன்னைவிட நன்முகக் காணுமாற்றல் பெறுதல் கூடுமன்றோ ? முயற்சி, பயிற்சி என்பன கீழிருந்து மேலேறுதற் கின்றியமையாதனவாம். எத்துறையினும் வெற்றி பெறுதற்கிவையே வழிகளாம். கீழே விழுதற்கு முயற்சி வேண்டியதின்று. உயரச் செல்லவிடாமல் யாவற்றையுந் தடுக்கின்ற நிலத்தினது ஈர்க்கு மாற்றல்போல் (gravitation) உயிரைக் கீழேயிழுக்கின்ற வொரு வலியுண்டு. இதை மலமென்ப. இயற்கையாகவே இது ஒவ்வோருளத்திலு முளது. ஒளி நோக்கி மேற் செல்லு முயிரின் முயற்சியைக் கீழ்நோக்கி யிழுக்குமிருள் தடை செய்கின்றது. இங்ஙனமொளிக்கு மிருளுக்கும் போர் நடக்கின்றது. அமரர்க்கு மரக்கர்க்கு நிகழ்ந்தனவாகப் பழைய நூல்களில் கூறப்பட்டிருக்கும் போர் பெரும்பாலு மிதையே குறிக்கும். இப்போரே அறம்; இதில் ஒளி பெறும் வெற்றியே வீடு.

மேற்கண்ட இருள்நிலை ஒளிநிலை ஆகியவற்றுள் ஒளிநிலையொன்றிற்கே வழிகூற வியலும். இருளுட் காட்சியின்மையினதற்கு நெறிகூறுதலு மின்று. அகக்கண்ணுகிய உயிரின்பார்வை நுட்பம் பெறுதற்குப் பயிற்சி வேண்டும். இருளிலிருந்து திடீரென்று வெளிச்சத்தைப் பார்க்குங் கண்கள் கூசியொடுங்குமாறு, ஐம்புல நெறியிற் சென்ற காட்சி எங்கு நிறைகின்ற பேரொளிக்கு நேராகத் திரும்புங்கா லிடர்ப் படும். ஆதலினது சிறுகச்சிறுக ஒளியை யேற்று ஒளியிலொன்ற வேண்டும். ஒளிக்குச் செல்லு நெறிக ளிருபான்மையன வென்முர். அவை இல்லறந் துறவற மெனப்படும். 'மனத்துக்கண் மாசிலனுத லனைத்தறம்' என்ற வள்ளுவர் கூற்றில், அழுக்கு அல்லது இருளை நீக்குதலே அறமெனப்பட்டமை காண்க.

இருள் நிலை, இருளு மொளியுங் கூடிய நிலை, ஒளி நிலை என்ற மூன்றிற்கு மியைந்து நிற்கு முளப் பான்மைகளைச் சற்

றாராய்வாம். ஒருவன துளப்பான்மை இத்தகைத்தென்று முடிவு கூற லெவர்க்கு மரிது. ஏனெனின், செய்கையில் வெளிப்படு மளவே நாம் ஒருவன துளத்தை யுணரக் கூடும். செய்கையில் வெளிப்படா தெழுங்தொடுங்கு நினைவுகளு முணர்ச்சிகளும் பலவாம். இவை முற்றறி வுடையோனுக்கே புலனுவதன்றி நம்போல்வார்க் கெட்டுந் தன்மையன வல்ல. ஆதலின், எடுத் துக் காட்டாக நாமீண்டுப் பார்க்கப் போகின்ற உளநிலைகள் நாம் கொண்ட கருத்திற் கேற்றவாறு நுட்பமின்றி வகுக்கப் பட்டன வென்று கொள்க.

முதலாவது :—

பிறருடைமையைத் தனதென வெளவு முளம்.

உண்பதற்கு மணிவதற்கும் வேறு வகையில் நுகர்வதற்கு முரிய பொருள்கள் பல வுலகிலுள. இவற்றை நுகரவெழும் விருப்ப மெல்லோர்க்கு முண்டு. அவ்விருப்பை நிறைவேற்றிக் கொளற்கு ஆளப்படு முறைகளோ அவரவ ருளப்பான்மையை யொட்டி நிற்கின்றது. குற்றத்தி னீங்கிய வழியிற்செல்வமீட்டி நுகர்வதற்குரியவற்றைத் தனதாக்கிக் கொளலே ஒளி விளங்கு கின்ற உயிர் கையாடு முறையாகும். ஆனுலிது எளிதிலாவ தன்று. இதற்குப் பொறுமையு மூக்கமு மின்றி யமையாதன. இது போர் முறை. அவாவெனு மிருளால் மூடப்பட்ட உயிரோ தான் விழைவதைப் பெறுதற் பொருட்டுக் குறுக்கு வழி தேடு கின்றது. நெருக்கமான, நீண்ட ஒளி நெறியிற் செல்லும் வருத்தங் கண்டஞ்சி இவ்வுயிர் 'விலங்ககன்ற' நெறி நாடுகின் றது. விலங்கு வேறென் செய்யும்? வீட்டுள் நுழைய வாயில் வழியாயிருக்கச் சுவரை யிடித் துள்ளே செல்வதும், நூலேணி கொண்டு கூரையிலேறி யுள்ளிறங்குவதும் விலங்குகளின்செய்கை யாம். பெரும்பாலு மித்தொழில்க ளிரவிலேயே நிகழ்த்தப் படுகின்றன. கொன்று தின்னுங் கொடுமாக்கள் இரவில் வெளிப் பட்டுத் திரியுமல்லவோ? வெருளியா துளமிருண்ட நிலையி லித் தகையர் உயிர்க் கொலைக்கு மஞ்சுவதில்லை. ஆனு லிதைவிடக் கொடிய செய்தி மற்றொன்றுண்டு. பொதுமக்களுக் கறிவு

விளக்கம் பிறந்திடின், அதனாற் றமது வருவாய் குறையுமென நினைத்துப் பொய்க் கதைகளாலுங் கட்டளைகளாலு மறிவின் வளர்ச்சியைத் தடுக்க முயல்வாருங் கொலைஞரே யாவர். அறிவாகிய விளக்கை யவிக்கு மிவர் தொழில், கொலையாவதல்லது வேறென்னும்? இவர்களெல்லாம் புறப்பொருளில் மயங்கி அகப்பொருளை யிழந்தாராவர். இவர்களுளம் பிற மக்களுளங்களோடு போயொன்றுவதில்லை; ஒன்றுமாயின், பிறர் துன்பத்தைத் தமது துன்பமாகக் கொள்வர். அதற்குரிய வொளி யவர்கள்பா லில்லை. ஓட்டமில்லா தோரிடத்திற் றங்கிய சின்னீரைப் போலிருக்கு மிவர்க ளுள்ளம் நாற்ற மெடுக்கத்தான் செய்யும். இந்நீர்மையர் கீழ் நிலையைத் தாமாகவே தேடிக் கொள்கின்றனர். அவர்களை இருள் நிலைக்குட் புகுத்துமொரு ஆற்றல் அவர்கட்கு வெளியே யில்லை. தாங்களே அவ்வாற்றலாகின்றார்கள். ஒவ்வொருவனு மிவ்வுலகிலெதை நச்சுகின்றானோ அதுவே யாகின்றான். இருளை நச்சியவர் இருளிற் புகுந்தால் அஃதிறும்பூ தாகுமோ?

இரண்டாவது:—

தனைத் தனதென விறுகப் பற்றிக்கொ ளுமுளம்.

இப்பெற்றியர் இருளை நச்சுகின்றவரு மல்லர்; ஒளியை விழைகின்றவரு மல்லர்; இரண்டையுந் தழுவி நிற்கின்றவர்களே. உலகிற் பெரும்பான்மையோரான மக்க ளிவ்வினத்தைச் சேர்ந்தவ ரென்பது சொல்லாமலே பெறப்படும். இவர்கள் தானென்ற தன்னிலை அல்லது தன்மையை விட்டு, முன்னிலைக்கு வரக் கூடியவர்கள். இருளை யொட்டிய நினைவுகளும் ஒளியை யொட்டிய உணர்ச்சிகளு மிவர்க ளுளத்தி லெழுந்து செயலில் வெளிப்பட்டும் வெளிப்படாமலு மொடுங்கிவிடும். இருளி லழுந்தாது இவர்களைத் தடுப்பது அச்சம்; ஒளியிலிவர்கள் செலவொட்டாது தடுப்பது இவர்கள துடைமை. பிறர் பொருளை இவர் கவராவிடினும், எளிதிலிவர் தமது பொருளைப் பிறர்க்குக் கொடார். கொடுப்பதற் கிவ ருடன்படுவதா யிருந்தால், அதனாற் றமக்கு அண்மையிலோ சேய்மையிலோ கைம்மாறு யாதாயினு முளதோ வென்று கணக்கிட்டுப் பார்ப்பார்.

கோயில் கட்டுவதற்குங் குளம் வெட்டுவதற்கும் வீட்டிட மமைப்பதற்கு மிவர்களுட் பலர் பொரு ளுதவுகின்றனர். நமது நாட்டில் இப்பான்மையதாகிய பொரு ளுதவியை மிகுதி யுங் காண்கின்றோம். இஃது ஒளி நெறியென்று நமக்குத் தோற்றும். இம்மைப் புகழும் மறுமை யின்பமும் கருதிப் பெரும்பாலு மிவ் வுதவிகள் பிறப்பதை நாமறிவோம். இது பண்ட மாற்றும் வகையிற் சேருமேயன்றித் தூய அறவழி யாகாது. கள்ளருந் தங் கரும முடிப்பான் தந்தெய்வத்திற்குக் கள்ளுங் கோழியு முதவுகின்றனர். வாய்மையுந் தூய் மையு மறிவு விளக்கமும் வளர்ந்தோங்கப் பொருளை வழங் கலே யறமாவதல்லால், பத்துப்பொன் கொடுத்தால் அது நூறு பொன்னாய்த் தமக்கு வருமென்றும், கருத் தெவ்வாறாயினுந் தாங்கொடுத்த அச் செய்தியினாலேயே மறுமையிற் றமக்குப் பெருமை யுண்டென்றும் நினைப்பது அறமன்று. இதை ‘அறவிலை வணிகம்’ என்றார் புலவர். ‘பொருளென்னும் பொய்யாவிளக்க மிருளறுக்கும்’ என்ற உண்மையை யிவர்களுணர் வார்களாயின், தங்கள் கருத்துக்கேற்ற மேலுலக நெறியைக் கூறுகின்ற படிற்றொழுக்க மாந்தருக் கிவர்தம் பொருளை வாரி யிறைத்து வருந்தார். இருள் கலந்த ஒளியை நாடு மிவர்க ளெங் ஙன மிருள் நீக்கங் கருதி யமைக்கப்படுங் கழகங்களுக்குத் தமது பொருளை யுதவுவர்? எங்ஙன மிவர்கள் கல்வியாகிய ஒளியை வளர்ப்பர்? ‘மேலுலக மில்லெனினு மீதலே நன்று’ என்று வருங்குறளின் பயனறிவர்கொல் லிவர்? தன் பயன் கருதியோ ஞாயிறு நாடோறுங் கிழக்கி லெழுகின்றது?

மூன்றாவது :—

தனதைப் பிறர்க்குரியதெனக் கொளுமுளம்.

தன்னிழப்பென்று சிறப்பிக்கப்படும் அரிய தன்மை இங்கு விளங்குகின்றது. இது நாம் முதலாவது கண்ட உளப் பான் மைக்கு நேர்முரணாவது. தனது நலத்தை யிழந்தன்றோ தாய் தன் குழந்தையை வளர்க்கவேண்டியதாகின்றது? இளைப் பாறியிருக்கும் நேரத்தையுந் தூக்கத்தையும் வெற்றுரை யாடுங்

காலத்தையு மிழந்தன்றோ ஒருவன் பிறரைக் காட்டினு மிருந்த வறிவைக் கூட்டுதற்குக் காலங் காண்கின்றான்? குழந்தையின் பொருட்டுத் தன் நலத்தைத் தாய் மகிழ்ச்சியுட னிழக்கின்றாள். உடலை வருத்தியு மறிவைப் பெறுதலை அறிஞ னின்பமாகவே கருதுகின்றான். இங்ஙனமே, ஒளிபெற்ற மக்கள், வையகத்தின் துன்பத்தையு மயக்க நிலையையுங் கண்டுள முருகித் தமதுடைமையே யன்றித் தம்மையு மிழக்க வுடன்படுகின்றனர். இஃதவர்களுக் கின்பமே தருகின்றது. ஆதலின், தமதுடைமையையுந் தம்மையு மவர்க ளிழக்குங்கால், அரியதொன்றைச் செய்தோமென்ற வுணர்ச்சியின்றி, இனிதாக, எளிதாகத் தஞ்செயலை நிகழ்த்துகின்றார்கள். வானளாவிய, பனிமூடிய, மலைமுடியிலிருந் திழிந்து, வரவர அளவிற் பெருகி, வழியிலுள்ள நீர் நிலைகளையுஞ் சிற்றோடைகளையுந் தன்னு ளீர்த்துக்கொண்டு, குறிஞ்சியையு முல்லையையும் விட்டு மருதத்துள் நுழைந்து, தன் னிருபுறமுமுள்ள நிலங்களைச் செழிப்பாக்கி மகிழ்வித்து, மக்கள் நெருங்கி வாழ்கின்ற நகரங்களுடே யோடி, அவர் வேட்கை தீர்த்து, அழுக்கை நீக்கி யழுக்குற்றுத் தூய்மையாகி, இறுதியிற் றன் பிறந்தகமாகிய பெருங்கடலை யவாவிச் செல்கின்ற தண்புன லாறுபோ லிருக்கின்றனர், ஈண்டு நாம் கருது முளப்பான்மை யுடையார். உயரவிருந்து தோன்றுமுயிரும் அறஞ் செய்தோடி ஒளிக்கடலுட் பாயும்.

---

* கல்வி

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

கல்வியே இயற்கை யறிவின் சாணைக்கல்

கல்வி என்ற சொல் கல் என்ற பகுதியி னடியாகப் பிறந்த தொன்றாகும். அறியாமையை யகற்றி அறிவை வளரச் செய்வது என்பதே அதன் பொருள். "கல்சர்" (Culture) என்ற மேனாட்டுச் சொல் கல்வி என்னும் பொருளைக் குறிக்கும் ஒப்

* இஃது திரு சிவ. கண்ணுசாமி யவர்களால் 11-10-1931-ல்

புமை வியந்து சிந்திக்கற் பாற்று. பிரான்சு தேயத்தில் பன்றிகளுக்கும் ஆடு முதலியவைகட்கும் "கல்வி கற்பிப்பது" (Educating the Pigs and the Sheep) என்ற மொழிப் பிரயோகம் வழக்காற்றில் இருக்கிறதாகத் திரு. வில்லியம் காபெட் என்பவர் தாமெழுதிய "இளைஞர்ப் புகட்டு" என்ற நூலில் குறித்திருக்கிறார். இதனால் ஐயறிவு படைத்த அக் கால்நடைகளின் அறிவையும் ஒரு சிறிது திருத்தி இயைந்தவாறு வளரச் செய்வதற்கும் கல்வி யென்றுதான் பெயர் என்பது பெறப்பட்டது. எனவே, இயற்கையாய் யாவர்க்கும் அறிவு அமைந்துள்ள தென்றும், அது பெரும்பாலும் அறியாமை என்ற படலத்தால் போர்க்கப் பட்டுள்ள தென்றும், கல்வி யென்னும் ஒளியைக் கண்டதும் அப்படலம் மாய்கின்றது என்றும், மாசு நீங்கவே அறிவு மணி யெனத் திகழ உற்றதோர் வசதியைப் பெறுகிற தென்றும் உய்த்துணரல் வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து, கல்வி இயற்கை யறிவு தீட்டும் சாணைக்கல்லே யாகும்.

பொதுப் பிரிவு

கல்வியை மேனாட்டார் "The Three R's", அதாவது, Reading, Writing & Arithmetic என்ற முப்பகுதி யுடையதாகக் கொள்கின்றனர். நம் முன்னோர்களோ எண்ணும் எழுத்தும் என இரண்டே பிரிவுடைத்தாகப் பகுத்துக் கூறி யிருக்கின்றனர். கணக்கும் எழுத்தும் என்ற பொதுப் பிரிவுகள் இரண்டே இயற்கை யறிவுக்கு ஒத்ததாகத் தோன்றுகின்றன. படித்தல் (Reading) என்ற ஒரு பிரிவு மிகையென்றும் அது கல்வி என்பதற்கே இன்றி யமையாது வேண்டப்படுவ தாகலின் அதன் பிரிவினுள் வரமுடியாத தொன்றென்றும் எடுத்துக்கூற வேண்டுவதில்லை. மேனாட்டார் மேற்கூறியவாறு முப்பிரிவுடைத்தாகப் பிரித்தது இயற்கை யறிவிற்கு ஒத்ததாக இல்லை யென்பது இதனாற் போதரும்.

சென்னை இலிங்கச் செட்டித் தெரு கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூலின் "தசரா விழாக் கொண்டாட்ட"த்தில் திருவாளர் இராவ் சாஹிப் எஸ். வேணுகோபால் செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் சுருக்கக் குறிப்பாகும்.

பிரிவின் சிறப்பு

இயற்கை யறிவிற் கேற்றவாறு இருபிரிவாய் நன்கு ஓர்ந்து தேர்ந்தே நம் முன்னோர் இவ்வண்ணம் பிரித்தனர் என்பது,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்ற ஆசிரியர் திருவாக்கான் வலியுறுத்தப்படும். "எண்" என்று ஒரு பிரிவைக் கூறியபின் "ஏனை யெழுத் தென்ப" என்றதனால் எண் நீங்கிய மற்றைக் கூறுகளெல்லாம் எழுத்தென்ற ஒரே பெரும் பகுதியில் அடங்கும் என்று ஆசிரியர் கிளந்தோதியதின் நுட்பம் போற்றற்குரியது. இனி எண் சாண் உடம்பிற்குத் தலையே தலைமைத்தாம் என்பதும் அதிலும் அதன்கண்ணமைந்த இரு கண்களே சாலச் சிறப்புடையன என்பதும் யாவரும் ஒப்ப முடிந்த உண்மைகளாம். அத்தகைய சிறப்பு வாய்ந்த கண்களோடு உவமைப் படுத்திக் கல்வியின் இரு பிரிவுகளாகிய எண்ணையும் எழுத்தையும் ஆசிரியர் கூறியதிலுள்ள நுட்பங்கள் பலப் பல. விரிவஞ்சி ஈண்டு விரிக்காது விடப்பட்டன. எண்ணும் எழுத்துந்தான் கண்கள் என்றால், அதாவது கல்வி கற்றவர்கள் தான் கண்ணுடையவர்கள் என்றால், நூற்றுக்குத் தொண்ணூறு விதம் தற்காலம் கல்வி யறிவில்லாதிருக்கும் மக்களெல்லாம் கண்ணில்லாத குருடர்களா என்றும் "முண்டகத்தின் மேல் முழு நிலம் பூத்தது" போல் அவர்கள் முகங்களிற் றோன்றுங் கண்கள் எல்லாம் மற்றென்ன வென்றழைக்கப்படல் வேண்டுமோ என்றும் வினாக்கள் எழுதல் கூடும். இயற்கையா யெழக்கூடிய இவ்வினாக்களுக்கு விடை யளிப்பார் போன்று ஒப்புயர்வற்ற திப்பியமணியாம் நம்மாசிரியர்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று உடன் கூறிப் போந்தார். கல்வியின் மாட்சிக்கும் தமிழின் ஒப்பரிய உயர்நிலைக்கும் இவ்வியைபே பெரியதொரு சான்றாகும்.

இனி, சிற்றுயிர்க் குற்ற துணை கல்வியே யாதலின், அது

யாவர்க்கும் இன்றியமையாத தென்றும், கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு எய்துங்கால் கல்லாதாரின் ஒட்பத்தை அறிவுடையார் கொள்ளாது மறுப்பர் என்றும், கற்றவரே மக்கள் மற்றவர் மாக்கள் என்றும் கல்வியானுய பயனையும் கல்லாமையினு லெய்தும் இழிவையுங் குறித்தெழுந்த நூல்களும் உரைகளும் கணக்கிலவாதலின் அவற்றைப் பற்றிக் கூறல் வேண்டா.

தவறான கோள்கை

நிற்க, கட்டாய இலவச ஆரம்பக்கல்விச் சாலைகளைப் பற்றி ஒரு தவறுதலான கொள்கை மக்கள் மாட்டு இருந்து வருகிறதென ஊகிக்க இடமிருக்கிறது. அஃது என்னவெனில், அக்கல்விச்சாலைகளில் பையன்கள் சம்பளங் கொடுக்க வேண்டிய தில்லை யாதலின் அங்குள்ள உபாத்தியாயர்கள் கருத்தோடு பையன்களுக்குப் பாடஞ் சொல்லாமல் ஒப்புக்குக் கூறித் தங் கடனைக் கழிக்கிறார்கள் என்பதே. இது மிகவுந் தவறான கருத்தாகும். பையன்கள் சம்பளங் கொடுக்காதது உண்மையே யானாலும் அங்குள்ள உபாத்தியாயர்கள் சம்பளம் பெறாமல் வேலை செய்கிறார்கள் என்பதில்லை. அவர்களுக்கு நகர சபையார் போதிய சம்பளம் அளிக்கின்றனர். அச்சம்பளம் பெறுதற் கேற்றவாறு உபாத்தியாயர்கள் தங் கடமையைச் செலுத்தி வரத் தவறமாட்டார்கள். எனவே இந்தத் தவறான கருத்தை யாவரும் நீக்குதல் வேண்டும்.

ஆசிரியர் கடமை

ஆசிரியர்களைப் பற்றிக் கூற நேர்ந்தமையால் அவர்கள் கடமையைப்பற்றி ஈண்டு இரண்டொன்று கூறி மேற் செல்லுதும். கல்வி கற்பிப்பது மிகவும் சிரியதோர் பணியென்றும், அது தானங்களிலெல்லாம் தலையாய தென்றும், எனவே அது கருத்திற் கிசைந்ததோர் திருப்பணி யென்றும் ஆசிரியர்கள் போற்றி வருதல் வேண்டும். கல்வி கற்பிக்குங்கால் மாணாக்கனின் இயற்கை யாற்றலும் அறிவின் போக்கும், கற்கை யவாவின் திறனும் தெரிந்தே கற்பிக்க முயலவேண்டும். அழ அழச் சொல்ல

வேண்டிய ஒரு மாணவனுக்கு அவ்வாறே சொல்லியும், அடித்துச் சொல்லவேண்டிய ஒரு மாணவனுக்கு அவ்வாறே சொல்லியும், தட்டிக் கொடுத்துப் புகழுரை கூறிச் சொல்ல வேண்டிய ஒரு மாணவனுக்கு அஃதே போற் செய்துங் கல்வியைப் பரப்ப முயலும் ஆசிரியர்களே உண்மை ஆசிரியர்கள். ஆனால் இத்திறன் யாவர்க்கும் எளிதில் கைவரக்கூடிய தொன்றன்று என்பதை ஒப்புக்கொள்ளல் வேண்டும். எனினும் இவ்வழி முயலுவதை இலக்காக் கொள்ளுதல் நேரிதாம்.

மாணவர் கடன்

A Nation moves on the feet of its Children என்று ஆங்கிலத்திற் கூறுவதுண்டு. அதாவது ஒரு நாட்டின் எதிர்கால வாழ்வு அதன் சிறுவர்களின் திறமையைப் பொறுத்ததென்பதே அத்தொடரின் கருத்து. இக்கருத்து எல்லா நாட்டிற்கும் யாவர்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாகும். நம் நாடு நல்வழி யுற்று நற்பதம் எய்தி நானாவிதத்திலும் முன்னேறி நலம் பெற வேண்டுமானால், ஆண்டி முதல் அரசன் ஈறாகவுள்ள பல பிரிவுகளிலும் பிறங்கும் சிறுவர்களும் சிறுமிகளும் கற்கையவாவைப் பெருக்கிச் சீரிய முறையில் கல்வி கற்றல் அவர்தம் தலையாய கடனாகும். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்லாதவர்கள் என்ற இகழ்ச்சிச் சொல் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கற்றவர்கள் என்ற புகழ்ச்சிச் சொல்லாக மாறுதலை நம் நாடு பெறுங்காலமே அதன் பொற்காலமாகும்.

மதிப்புரை

திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்

இதனை இயற்றியவர் திருநெல்வேலி எட்டயபுரம் சமஸ்தான ஜோசியர் திரு. S. குருகுஹதாஸ பிள்ளையவர்களாவர்.

இது திருநெல்வேலி ஜில்லாவைப்பற்றிய சரித்திரமாயிருந்த போதிலும் பொதுவாக இந்திய சரித்திரத்தின் ஒரு பகுதி

யாகக் கருதப்படும். சரித்திர ஆராய்ச்சி எட்டிய காலமுதல் திரு நெல்வேலி ஜில்லா யார் யார் ஆளுகையில் இருந்தது எவ்வெவ்வாறு ஆங்கில அரசியலாரிடம் வந்திருக்கிறதென்ற விபரமும், திரு நெல்வேலி என்ற பெயர். வந்த காரணமும், பொதிகை மலையின் சிறப்பும், தாம்பிரவருணி நதியின் பெருமையும், தமிழ்ப்புலவர் அட்டவணையும், கிறித்தவ சமயம் எது முதல் எவ்வாறு தலையெடுக்கலாயிற்றென்பதும், 1790-வது ஆண்டு முதல் கலெக்டராயிருந்தவர்கள் பெயர் அட்டவணையும் இதன்கண் ஆண்டுக் குறிப்புடன் விளக்கமாகக் கூறப்பட் டிருக்கின்றன. நமது முன்னோர் வரலாறும் நம் நாட்டுப் பண்டைய வரலாறும் அறிய விருப்பங் கொள்ளாத மக்கள் மக்களாகார் என்பது சொல்லாமலே விளங்கும். இதனால் அரசியல் மாறுதல்களும் அரசியிலமைப்பும் எவ்வெவ்வாறு காலத்துக்குத் தக்கபடி ஏற்படும் என்பது அறியற் பாலதாகும்.

இந்நூலைப் பொதுவாக எல்லாத் தமிழ் மக்களும் சிறப்பாகத் திருநெல்வேலி ஜில்லா மக்களும் வாங்கிக் கற்றுப் போற்றுவாராக. 363 பக்கம். புத்தகம் வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதுக.

உடற்பயிற்சி—முதற்பாடம்

இதனை இயற்றியவர் தமிழ்நாட்டு சாண்டோ திரு. லெ. சோமசுந்தரனார். 'உடம்பாரழியின் உயிராரழிவர்' என்ற திருமந்திரத் திருவாக்கின்படி உயிரைச் செம்மையாயும் துலங்கிய அறிவுடனும் வைத்துக்கொள்வதற்கு உடலை முதற்கண் செம்மையாய் வைத்துக்கொள்ளல் வேண்டும். 50 ஆண்டுகட்கு முன் உடல் நலத்திற் கேற்ற பயிற்சிகள் நம்நாட்டில் எங்கணும் இருந்தன. பின்னர் உடற்பயிற்சி என்பது அறவே ஒழிந்து நம்மக்கள் இளமைக் காலத்திலேயே முதுமை யுற்றுக் காணப்பட்டு வருகின்றனர். வலிமை யிழந்து வாடுந் தமிழ் மக்களே! நீங்கள் நோயில்லாமல் நாட்டுக்கு உறுதிபயக்க வேண்டுமாயின் உடற்பயிற்சி நூல்களை வாங்கிப் பயின்று பயிற்சி செய்

யுங்கள். உடற்பயிற்சி விளக்கப்படம் 48 இந்நூலின்கண் மிளிர்கின்றன. படமும் விளக்கமும் அடுத்தடுத்து அமையக்கூடிய வகையில் வழுவழுப்பான கனத்த ஆர்ட் காகிதத்தில் அழகியதாய் இந்நூல் அச்சிடப்பட்டுக் கலிக்காக் கட்டிடம் செய்யப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. 3

பெண்நலன் விலை அணா 6

உடற்பயிற்சி விலை அணா 6

இவ்விரண்டு நூல்களும் இயற்றியவர் பொன்னமராவதி, வலம்புரி திரு. ஆவி. சித. சொக்கலிங்க னவர்களாவர். செட்டிமார் நாட்டில் உடற்பயிற்சியைப் பற்றிய கிளர்ச்சிச் சில ஆண்டுகளாக மிக்குப் பரவி வருவது தெரிந்து மிகவும் மகிழ்கின்றோம்.

பெண்நலன் என்ற நூலில், 1. பெண் அடிமை, 2. பெண் கல்வி, 3. பிள்ளை வளர்ப்பு, 4. உடற்பயிற்சி, 5. நகை யணிதல், 6. இளமை மணம், 7. திருமணம், 8. விதவை மணம், 9. ஆண் பெண் சேர்க்கை, 10. பிள்ளைப்பேறு என்ற தலைப்புக்களைக் கொண்டு மாண்பு மிக்க அறிவு சான்ற பொருள்கள் திருத்தமாகவும் விளக்கமாகவுங் கூறப்பட்டிருக்கின்றன.

உடற்பயிற்சி விளக்கம் என்ற நூல், 1. உடற்பயிற்சி, 2. உடற்கட்டு, 3. பலம், 4. மலச்சிக்கல், 5. நோய்க் கிடங்கொடாமை, 6. புகையிலை, 7. தாதழிவு, 8. முடிப்புரை என்ற அரும்பெரும் பொருள்களை எடுத்து மொழிகின்றது. இவ்விரண்டும் தமிழ் மக்கட்கு உற்ற வகையில் உதவுந் தகையன வேண்டுவோர் இக்கழகத்திற்கு எழுதிப் பெறலாம்.


மருதமலை மான்மியம் (பிரபந்தத் திரட்டுடன்)

இதனை இயற்றியவர் கோவை வழக்கறிஞர் ராவ்சாஹிப் திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள்.

இதன்கண் மருதமலை வரலாறும், மருதமலையைப் பற்றிப் பேரூர்ப் புராணத்திலுள்ள செய்யுட்களுக்குப் பொழிப்புரையும், கல்வெட் டாராய்ச்சியும் அடங்கியன. இஃதொரு சிறந்த ஆராய்ச்சி நூலாகும். இதன் விலை அணா 6. இது கோவைத் தமிழ்ச் சங்கத்திலும், நமது கழகத்திலும் கிடைக்கப்பெறும்.

மின்சார வல்லுநர்

தோமாஸ் ஆல்வா எடிசன்



[கிராமபோன், டெலிபோன், மின்சார விளக்கு, மின்சார வண்டி, தந்காலத் தந்தி, சினிமா முதலிய ஆயிரக்கணக்கான புதுமைகளை முதன் முதல் கண்டுபிடித்தவர்]

ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ } மேய்கண்டான் யாண்டு-எாகூ ஐப்பசித் திங்கள் 1931ஞு அக்டோபர்மூ—நவம்பர்மூ { பரல் ம

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

திருநீலகண்டம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோஞ்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

பதவுரை:—

அவ்வினைக்கு=முற்பிறப்பில் உள்ளம், நா, உடலாற் செய்த தீவினைகளின் பயனாக

இவ்வினை ஆம் என்று=(இப்பிறப்பில் இப்பொழுது நுகரப்படும்) இத் துன்பம் வந்தது என்று

சொல்லும் அஃது அறிவீர்=சொல்லுகின்ற வினைச்சட்ட உண்மையை மாத்திரம் நீர் அறிந்துகொண் டிருக்கிறீர்.

உய்வினை நாடா திருப்பது=முற்பிறப்பிற் செய்த அந்தத் தீவினைகளின் பயனை இப்பொழுது வராமற் றடுத்து அதனினின்று நீர் பிழைக்கும்படிச் செய்யுஞ் செயல் இன்னது என்று ஆராயாதிருத்தல்

உம்தமக்கு ஊனம் அன்றே=அடியார்களாகிய உங்களுக்குக் குறைவு அல்லவா?

நாம் அடியோம்=அடியார்களாகிய நாம்

கைவினை செய்து=கையினுற் செய்யும் வழிபாட்டினைச் செய்து

எம்பிரான் கழல் போற்றுதும்=எமது தலைவனுகிய சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும் வணங்குவோம்;

தீவினை=(அவ்வாறு நாம் வணங்குவோமானுல்) நாம் முன் செய்த தீவினைகளின் பயனுகிய துன்பங்கள்

வந்தெம்மைத் தீண்டப்பெறு=வந்து எம்மை அணுகுதற்கு வலியில வாகும்.

திருநீலகண்டம்=அவ்வாறு துன்பங்கள் அணுகாமல் சிவபெருமான் அவைகளினின்று நம்மைக் காப்பர். அடியார்களை இடர் வராமற் சிவபெருமான் காப்பர் என்னும் உண்மையை அவர் முன் கடலி லின்று எழுந்த ஆலகால விடத்தினுல் தேவர்களுக்கு வந்த இடரை நீக்க அவ் விடத்தைத் தாமே உண்டு கண்டம் நீல நிற மான செய்தியிலிருந்து அறிந்துகொண்டு நாம் அந்த நீலகண்டத் தைச் சிந்தித்து அந்த நாமத்தை உரைப்போம்.

விளக்கவுரை:—

திருஞானசம்பந்த சுவாமிகள் கொங்கு நாட்டிலுள்ள திருக் கொடி மாடச் செங்குன்றூரில் அடியார்களுடன் தங்கி யிருந்தபொழுது அடியார்கள் பனிக்காலத்தில் சுரத்தினுல் வருந்தினர். அவர்கள் தாங் கள் சுரத்தினுல் உடல் வருந்துவதை சுவாமிகளிடம் தெரிவித்த பொழுது சுவாமிகள் இப்பாட்டு முதலாயுள்ள தேவாரப் பதிகத்தை அருளிச் செய்தனர். இப் பாட்டின் முதல் இரண்டு அடியும் சுவாமிகள் அடியார்களை நோக்கிக்கூறினுர். பின் இரண்டு அடிகளும் அவர்களைத் தம்முடன்சேர்த்து உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கூறு கின்ருர்.

அவ்வினை—அகரம் தூரத்திலிருக்கும் பொருளைக் குறிக்கிறது. இங்கே முற்பிறப்பிற் செய்த என்னும் பொருளைத் தருகிறது. வினை என் பது உள்ளம் வா உடல்களாற் செய்யப்பட்ட தீவினையைக் குறிக் கின்றது; நல்வினை துன்பம் பயவாது ஆதலின்.

இவ்வினை—இகரம் அண்மையிலிருக்கிற பொருளைக் குறிக்கும். அது இங்கே இப்பொழுது நுகரப்படும் என்ற பொருளில் வருகிறது. வினை என்பது இங்கு ஆகுபெயராய் வினையின் பயனுகிய துன்பத் தைக் குறிக்கின்றது.

அஃது என்னும் சுட்டுப்பெயர் இங்கே நூலிலே கூறப்பட்ட வினைச் சட்ட உண்மையைச் சுட்டி நிற்கின்றது.

உய்வினை—துன்பத்தினின்று நீங்கிப் பிழைக்கும் சூழ்ச்சி. வினை என்பது இங்கே சூழ்ச்சி (உபாயம்) யைக் குறிக்கின்றது. என்ன செய்தால் முன்செய்த தீவினையின் பயன் தடுக்கப்படும் என்று செய்கிற சூழ்ச்சி.

நாடாதிருப்பது—தீவினைத் தீர்வுக்கு வேண்டிய சூழ்ச்சியை முன்பு ஆராய்ந்து அறிந்து பின்பு செய்யப்படுவதாகலின் நாடாதிருப்பது என்றார்.

உந்தமக்கு—உமக்கு; தம் சாரியை.

ஊனம் என்பது குறைவு; குற்றமும் ஆகும்.

கைவினை=கையினுற் செய்யும் வழிபாடு. அது சிவபெருமான் திருவடி களிற் பூக்கள் இடுதல். "ஒரு மொழி யொழி தன்னினங் கொளற் குரித்தே" என்னும் சூத்திர விதியால் அது மனதினுல் நினைத்தலை யும், வாக்கினுல் வழுத்தலையும் உடனுகக் குறிக்கும்.

மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி

என்பது சிவஞானசித்தியார்.

செய்வினை—வினைத்தொகை—வினையின் பயனைக் குறிக்கிறது.

தீண்டப்பெறு—வினை பால்பகா அஃறிணைப் பெயர் ஆதலின் பன்மை வினை கொண்டது.

திருநீலகண்டம்=திருநீலகண்ட உருவத்தை நினைப்போம் கூறுவோம் என்னும் பொருள்பட நின்றது.

இந்தப் பாட்டானது வினை என்பது தலைவிதி (fatalism) அன்று என்றும், ஒருவருக்கு முன் செய்த தீவினையின் பயனுகத் துன்பம் வந்தக்கால் அவர் அதனினின்றும் விலகி உய்யும் பொருட்டுச் சிவ பெருமானை உள்ளம் மொழி மெய்களால் வழிபடல் வேண்டும் என்றும் கூறுகிறது; "உலையா முயற்சி களைகணு ஊழின் வலி சிந்தும் வன்மையும் உண்டு" என்னும் உண்மையைக் கூறுகிறது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

திருவாசகமும் பரஞ்சோதி முனிவரும்

[திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்]

(சஉ௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

(க) அழுதல் ஒரு சாதனமா?

இப்பகுதியை நாம் ஆராய்வதற்கு முன்னரே இங்கு அறிந்து கொள்ள வேண்டியது ஒன்று. அது, 'உலகியலில் எவ்வெவ்வுயிர்கள் நேரிய எவ்வெவ் வழிகளால் தாந்தாம் விரும்பியவற்றைப் பெறுகின்றனவோ, அவ்வவ்வழிகளெல்லாம் இறைவன் திருவடிப் பேற்றுக்கும் உரியனவாகுமெனக் கருதுவது அவ்வடிப் பேற்றுக்கு அன்பு நெறியிற் செல்லும் பெரியோர்களின் இயல்பு என்பதாகும். இவ்வுண்மையை அவர்கள் அருளிச் செய்த நூல்களிற் பரக்கக் காணலாம்.

உலகினரிற் பெரும்பாலோர் மேற்கொண் டொழுகும் இல்லறத்திற்கு மங்கலமாகிய மாண்பமைந்த மனைக்கிழத்தியும், அதன் நன்கலமாகிய நன்மக்களும் தாம் விரும்பியவற்றைப் பெறுதற்கு மேற்கொண் டொழுகும் பல வழிகளில் அழுதல் ஒரு தலைசிறந்த வழி என்பதைப் பல விடங்களிற் கண்கூடாகக் காண்கின்றோம்.

இங்ஙனம் நமது உயிர்ச் சார்பாயுள்ள பொருள்களுட் சிறந்த மனைவியும் மக்களும் அழுதலை ஒரு சாதனமாகக் கொண்டு தாம் வேண்டியவற்றைத் தந் தலைவரிடத்துப் பெறுகின்றார்களெனின், உயிர்கள், தம்மினுமினிய தம் உயிர்த் தலைவனாகிய பசுபதியை நோக்கி அழுதால் அவை வேண்டியவற்றை அவன் அளித்தருளுவா னென்பதில் ஐயம் யாதுளது?

இன்னும், நாம் ஒரு பொருளைப் பெறவிரும்பி யாரிடத்து அழுகின்றோமோ அவர் மக்கட் டலைவரா யிருப்பின், பேரருளுடைய ரல்ல ரவராகலின் நமக்கு இரங்கி அதனைக் கொடுத்தற்கு இசையார்; ஒரோவழிச் சிறிது இரக்க முடையவரா யிருந்து கொடுக்கக் கருதினும், அவர் எல்லாமுடையவ ரல்ல

ராகலின் அஃது அவரிட மிருத்தல் ஒருதலை யன்று; இல்லா விடினுந் தேடிக் கொடுக்குங் கருத்துடையரா யிருப்பின், முற்று முணர்ந்தவரல்ல ராகலின் அதனைப் பெறுதற்குரிய நெறியைப் பிழைபாடின்றி அறியும் ஆற்றலுடையவருமாகார்; ஒருவாறு பிழையின்றி உணர்ந்து முயலினும் என்பு, தோல், நரம்பு முத லியவற்றா லாக்கப்பட்ட உடம்புடையவராகலின் அம்முயற்சி காரணமாக உடல் நலங் குறையின் அதனைக் கைவிடுவர்; எங்ஙன மாயினும் அதனைப் பெறுதற்கு முடிவி லாற்ற லுடையவரு மல் லர்; இத்துணையுங் கடந்து ஓரோவழி அவர்க்கு அது கிடைப் பினும் வரம்பிலின்ப முடையவரல்ல ராகலின், தம்முயற்சியின் அருமையும் அப்பொருளின் பெருமையும் நோக்கித் தம்மின்ப நிறைவுக்கு அதனை ஆக்கிக் கோடலுங் கூடும்; அல்லது வாய்ப் பினும் வாய்க்கலாம். எனவே மக்கட் டலைவரிடம் நாம் அழுது வேண்டும் பொருள் நமக்கு வாய்த்தல் ஐயமே அன்றித் தேற்ற மில்லை. அவர் கடவுட் டலைவரா யிருப்பின் பேரருளுடைமை, எல்லா முடைமை, முற்றுணர் வுடைமை, தூய உடலுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்ப முடைமை என்பன அவரிலக்கண மாதலின் அப்பொருளை நாம் அடைதல் முக் காலும் உறுதி யென்க.

இன்னும், ஓர் அரிய மகவின் அழுகையானது பொது வாகத் தமிழுலகத்திற்குஞ் சிறப்பாகச் சைவ உலகிற்குஞ் செய்த நன்றியை இங்கு மறக்க வொண்ணுமோ! அன்றி மறைக்க வொல்லுமோ! இலை படர்ந்த பொய்கைக் கரையில் செம்மேனி வெண்ணீற்றான் திருத்தோணிச் சிகரத்தை நோக் கித் தம் புனிதவாய் திறந்து 'அம்மே அப்பா' என்றழைத்துக் கண்மலர்கள் நீர் ததும்பக் கைம்மலர்களாற் பிசைந்து, வண்ண மலர்ச் செங்கனிவாய் மணி யதரம் புடை துடிப்ப, வேத நெறி தழைத் தோங்கவும், மிகு சைவத் துறை விளங்கவும், பூத பரம் பரை பொலியவும் பொருமி அழாவிடின், நேயர்களே! நீறு எங்கே? மறை எங்கே? திருநெறித் தமிழ் எங்கே? திரு வைந் தெழுத்து எங்கே? இவை யாவும் நிலை பெறும் பொருட்டு இறைவனை நோக்கி விம்மி யழுத மகவு யார்? அறியீரோ!

அறிவீராயின் நம்மைச் சைவர் என்று சாற்றுவது யாங்ஙனம்? அம்மகவு காழிக் கன்றன்றோ! கழுமலக் கண்ணன்றோ? வேணுபுர வேந்தன்றோ! வெங்குரு வீரகன்றோ! புகலிப் புண்ணியமன்றோ! புறவி னறவன்றோ! பூந்தராய்ப் புகழல்லவா! சிரபுரச் செம்மலல்லவா! சண்பைத் தவமல்லவா! கொச்சை வயக் குழகல்லவா! பிரமபுரப் பிள்ளையல்லவா! தோணிபுரத் தோன்றலல்லவா! இங்ஙனம் அழுது அம்மை யப்பரால் எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்து ஊட்டப்பெற்றதின் பயனாக,

" ஆறதேறுஞ் சடையா னருண்மேவ வவனியர்க்கு
வீறதேறுந் தமிழால் வழி கண்டவ"ராகிய திருஞானசம்பந்த ரென்னுஞ் சிறிய பெருந்தகையாரின்திருச் செயல்களை அறியாதவன் தமிழ் மகனாவானோ? அவரைப் போற்றாதவன் சைவனாவானோ? ஆகான்; ஆகான்; ஆகான்.

இங்ஙனம் தம்முடற் றந்தையையுந் தாயையும் நோக்கிப் பாலுக்குங் காட்சிப்பொருளுக்கும் அழப்பெறாங் குழவிப் பருவத்திலேயே உயிர்த் தந்தையாகிய இறைவனையும், இன்னுயிர்த் தாயாகிய இறைவியையும் ஒருநெறிய மனம் வைத்து நோக்கி, அழுது, அழைத்து உலகை வாழ்வித்தமையா லன்றோ, 'காலம்பெற அழுதார்' என்றும், 'விடையின்மேல் வருவார் தம்மை அழுதழைத்துக் கொண்டவர்' என்றும், 'அழுதுலகை வாழ்வித்தார்' என்றுஞ் சேக்கிழார் பெருந்தகையால் நமது ஆளுடைய பிள்ளையார் பாராட்டப் பெற்றார்?

இத்துணைச் சிறந்த அழுகையை இறைவன் திருவடிப் பேற்றுக்கு ஒரு சாதனமாகக் கருதினர் மணிவாசக அடிகள் என்பது,

" யானே பொய் யென்னெஞ்சம் பொய் யென்னன்பும் பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே "

என்னுந் திருவாசகத்தால் தெற்றென விளங்குகின்றது.

இனி, " 'பெறலாமே" என்றதிலுள்ள 'ஏ'காரத்தை வினாவாக்கி அதனாற் போந்த பொருள் 'பெறலாகாது' என முடித்து,

'பொய் யன்புடைய யான் அழுவதனாற் பயன் யாது? அன்பற்ற அழுகையால் உன்னைப் பெற முடியாது' எனக் கொள்ளுவதே அடிகள் கருத்தாகும் எனக் கூறலாகாதோ" எனின், கூறலாம்; அங்ஙனங் கொள்ளினும் அடிகள் 'அன்போடு கூடிய அழுகையால் ஆண்டவனடியை அடையலாம்' எனக் கருதினாரென்றும், 'அன்பின்றி அழுகின்ற எற்கு எங்ஙனம் அத்திருவடிப் பேறு வாய்க்கும்' எனக் கருதினாரென்றுங் கொள்ளப்பட்டு, அடிப்பேற்றுக்கு அழுதல் ஒரு சாதன மென்பதும், அழுதனர் என்பதும் வலியுறுத்தப் படுவதால் முடிவில் வேறுபாடின்மை கூர்ந்துநோக்குவார்க்குப் புலனாகும். அவர், தம்மிடம் 'அன்பில்லை' எனக் கூறி யருளியதன் கருத்தை மேல்வரும் 'அன்பர்' என்பது பற்றிய ஆராய்ச்சியில் விளங்கக் காண்க.

இன்னும், "இறைவனை இறைஞ்சிக் கண்களில் நீருகுத்து அழுகின்ற அடியார்கட்கு அவன் அடிப்பேறு தப்பாது" என அடிகள் அறுதியிட் டுரைத்தமையைச் சென்னிப் பத்தில் 'புழுவினாற் பொதிந்திடு குரம்பையில்' என்று தொடங்குந் திருப்பாட்டில் 'தொழுத கையினராகித் தூய்மலர்க் கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு, வழுவிலா மலர்ச்சேவடி" என்பதனால் அறியலாகும்.

இவ்வழுதலாகிய சாதனமுந் தனக்கு வாய்க்கவில்லையே யென அடிகள் புடைபடக் கவன்றமை திருச்சதகத்திலுள்ள,

"ஆராயடியே னயலே மயல்கொண் டழுகேனே"
"அழுகே னின்பா லன்பா மனமாய்"

என்னும் அடிகளால் ஐயமற விளங்குமாறு காண்க.

இனி, அன்பர் அழுதமையைக் குறிக்கும் அழகிய ஆதாரவு ஒன்று வருமாறு :—

"முழுமுதலே யைம்புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுதலே நின்பழவடியா திரள்வான் குழுமிக்
கெழுமுதலே யருள்தந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமதுவே யன்றிமற் றென்செய்கேன் பொன்னம்பலத்தரசே"

(கோயின் மூத்த திருப்பதிகம், ௨.)

இத்திருவாசகத்தின் ஈற்றிலுள்ள 'என்னையு மென்னுடையனையும் ஒன்றுவிக்கும்' ஒரு வாசகமான 'அழுமதுவே யன்றி மற்றென் செய்கேன் பொன்னம்பலத்தரசே' என்பது, அறிவுடைய செல்வமகவு ஒன்று தன் உடற்றந்தையையுந் தாயையும் நோக்கி இடையறாது அழாநிற்க, அவ்வத்தனும் அம்மையும் அதனை வாரியெடுத்து மடிமீதிருத்தி 'எம் கண்ணே! ஏன் ஓயாது அழுகின்றாய்?' என்று கேட்பார்களாயின், அவ்வரும்பொருள் "நீங்கள்தாம் யான் கேட்டதைத் தரவில்லையே, அழாமல் என் செய்வேன்?" என விடையளிப்பதைக் கண்கூடாகக் காணும் நமக்கு, நமது அடிகள், தம்முயிர்த் தந்தையாந் திருக்கூத்தனை நோக்கி இடையறாது அழாநிற்க, அதனை யறிந்த அவ்வம்பலத்தரசு பொறுக்கலாற்றாது, "அறிவுடைய அன்ப! எற்றுக்கு இடையறாது அழுகின்றாய்?" என வினவ, அதற்கு விடை போல நின்று நமது ஊனை யுருக்கி உணர்வைப் பெருக்குவதை உணர்மின்! இங்ஙனம் உள்ளத்தை உருக்கும் திருவாசகச் செழுந்தேனை நுகர்ந்து தேவுமால் கொள்ளாது, உலகியல் நறவு மாந்தி உழலு மக்களை யன்றோ அறிஞர் ஒரு மாத்திரை நீட்டி 'மாக்கள்' என்றதூஉ மென்க.

இன்னும், அவ்வாறு அழுங் குழந்தையை இருமுதுகுரவருந் தேற்றிக் கண்ணீரைத் துடைப்பது போல நமது அடிகள், தாம் அழுங்காலை இறைவன் தன் கண்ணீரைத் துடைத்துத் தேற்றினனென்பதைத் தமது அருமைத் திருவாக்காகிய "மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி மலங் கெடுத்த பெருந்துறை" என்பதனால் விளக்கி யிருப்பது நமது ஆருயிரைக் கொள்ளை கொண்டு ஆண்டவனடியின்கண் ஆராஅன்பினை அளிப்பதை அறிந்து அகங்குளிர்வோமாக.

இனி, மக்களிற் சிலர், தாம் வேண்டுவதொன்றைப் பெறுதற்கு ஒருவர் வீட்டு வாயிலில் நின்றுகொண்டு 'ஐயாவோ'— 'அம்மாவோ' என இடையறாது கூப்பாடு போட்டு, தந்தகுதி கருதாது தாஞ்செய்யுந் துன்பத்திற் காற்றாது அவ்வீட்டார் அதனை அளிக்கப் பெற்றுக்கொள்ளுதலையும்; சிறுவர்கள் சிலர், வண்டிகளிலும் கால்நடை யாகவுஞ் செல்லுவோரின் பின் ஓடி

யும், அவர் செல்லும் வழியினை மறித்தும் ஒன்றனைப் பெறு வதையும்; பன்னாள் வரையும் அகப்படாமல் எத்திக்கொண்டு திரியும் ஒருவர் அகப்பட்ட ஞான்று அவரை இறுகப் பிடித் துக்கொண்டு 'இனி நீ வலி செய்து போக வொட்டேன்' எனக் கூறித் தங் கருத்தைச் சிலர் நிறைவேற்றிக்கொள்வதையும் நாம் நினைவில் வைத்துக்கொண்டு முறையே,

"பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னா ளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப் பொழியானென் றெதிர்ப்படுமே"

என்னும் அப்பரருளிப் பாட்டையும்,

"வணங்கியாம் விடேங்களென்ன வந்துநின் றருளுதற்கு
இணங்கு கொங்கை மங்கைபாக வென்கொலோ நினைப்பதே"

என்னு மணிமொழியையும்,

"எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே"

"மூளைத்த வெண்பிறை மொய் சடை யுடையா
யெப்போது மென் னெஞ் சிடங்கொள்ள
வளைத்துக்கொண் டிருந்தேன் வலிசெய்து
போகவொட்டேன்"

என்னுந் திருவாசகச் செம்மொழியும் அப்ப ருருண்மொழியு மாகிய இவற்றையும், ("தொடுத்துங் கொள்ளாத மையலென்" எனக் குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது இங்கு அறியத்தக்கது) நோக்குவோமாயின், "அழிதன் மாலையவாகிய பொருள்களைப் பெற மக்கள் மேற்கொள்ளும் வழிகளிற் சில வற்றை அழியாத பொருளைப் பெறுதற்கு அடியார்கள் மேற் கொள்ளுவ தியல்பு" என மேற்கூறியது வெள்ளிடைமலை யென விளங்குவதாகும்.

மேலே காட்டப்பட்ட திருவாசக ஆதாரவுகளினால் திருக் கூத்தனது செம்மலர் நோன்றாளைச் சேர்தற்கு அழுதல் ஒரு சிறந்த சாதன மென்பதூஉம், அதுதானும் தமக்குச் சித்திக்க வில்லையே யென அடிகள் புடைபடக் கவன்றா ரென்பதூஉம், அழுபவர்க்கு அடிப்பேறு தப்பா தென்பதூஉம், அதனை மேற்

கொண்டு அடிகள் ஒழுகினு ரென்பதூஉம் பிறவும் பெறப்பட்டமை காண்க.

(2) அடி யடைந்தாரா?

அடியார்க ளனைவரும் இறைவன் திருவடிப் பேறு ஒன்றையே விரும்பி நின்று அதனையே அடைவா ரென்பது அவர்களின் உண்மை வரலாறுகளிற் காணப்படுவ தொன்றாகும். 'அடியார்' என்ற சொல்லின் பொருளும் அதனை அறிவுறுத்தல் அறிக. மேருவில்லான் திருவடிப் பேறுதான் வீடுபே றென்பது. இதனை அன்பர் திருவாசக யாத்திரைப் பத்தில்,

"போவோங் காலம் வந்தது காண் பொய்விட்
டுடையான் கழல் புகவே"

எனவும்,

"போமா றமைமின் பொய் நீக்கிப் புயங்க
னுள்வான் பொன்னடிக்கே"

எனவும் கூறுமாற்றாலும், மீண்டும் அங்ஙனமே பேசுமாற்றாலும் அறிக.

இன்னும், திருநாவுக்கரசுகள், தாம் இறைவன் திருவடியுடன் இரண்டறக் கலக்கச் செல்லும் அந்நிலையிற் பாடியருளிய 'எண்ணுகேன்' என்று தொடங்குந் திருத்தாண்டகத்தின்கண்,

"புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்"

எனப் புகன்றருளியதுடன், அப்பதிகத்தின் ஈற்றடி முழுவதும் அங்ஙனமே அறைந்தருளினமையும் அறிக.

இன்னும், அப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாட்டின் இறுதியடியாகிய, "பொய் யுரைக்கா துன்னடிக்கே போதுகின்றேன்" என்பதும், 'பொய்விட் டுடையான் கழல் புகவே போவோம்' என மேலே காட்டிய மணிவாசகமும் ஒத்திருத்தலை ஓர்ந்து உளங்களிப்பதுடன், "வீடு பேற்றுக்குப் பெருந் தடையாக உள்ளது மக்களின் பொய்ம்மையே" என்பதையும் அறிந்து அதனை அகற்றி வாழ்வோமாக.

ஆளுடைய பிள்ளையாரும் திருவாழ்கொளிப்புத்தூர்த்

தக்கராகப் பதிகத்தின் ஈற்றடி முழுதும் 'அடி சேர்வோம்' எனக் கூறி இவ்வுண்மையை விளக்கி யருளினர்.

"திருவடியே சிவமாவது தேரிற்
திருவடியே சிவலோகஞ் சிந்திக்கிற்
றிருவடியே செல்கதியது செப்பிற்
றிருவடியே தஞ்சமுட் டெளிவார்க்கே"

என்பது திருமந்திரம்.

"கடல்தாயின நஞ்சமுண்ட பிரான் கழல்சேர்தல் கண்டாய்
உடல்தா னுளபயன்"

என்பது சேரமான் பெருமானின் திருவாக்கு.

இன்னும், திருமுருகாற்றுப்படை 'சேவடி படரும்' என்ற விடத்து, "திருவடியே வீடாயிருக்கு மென்றார்; அது, 'தென்னன் பெருந்துறையான் காட்டாதன வெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்—தாட்டாமரை காட்டித் தன் கருணைத்தேன் காட்டி' என்பதனானும், பிறருந் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க" என்ற நச்சினார்க்கினிய ருரையும் இதனை வலியுறுத்தல் காண்க.

அவர் மேற்கோளாகக் காட்டிய திருப்பாட்டும் திருவாசக மென்பது கருதற்பாலது.

இனி, நமது அடிகள் 'சிவனெனு நாமந்தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்' திருவடிக்கண் வைத்த பற்று முதலிய வற்றையும், அதனை அடைந்ததையும் அவர் திருவாக்குக்களிற் கிடைக்கும் ஆதாரவுகளைக் கொண்டே ஆய்ந்து காண்போமாக.

திருவாசகத் தொடக்கத்திலேயே, 'நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க' எனப் பெருமான் திருவடி பேசப்படுகின் றது. இங்ஙனம் தொடக்கத்திலேயே சிவபெருமான் திருவைந் தெழுத்தையும் திருவடியையும் அடிகள் வாழ்த்தி யருளியதன் நோக்கம் யாதாக இருக்கலாம் என்பதைச் சிறிது சிந்திப் போமாக.

வாதவூரடிகள், தாம் பிறவி யென்னும் பெருங்கடலில் வீழ்ந்து, துன்பமென்னும் பேரலைகளால் எற்றப்பட்டு, காரிகை

யாராகிய காற்றாற் கலக்குண்டு, காமமென்னும் சுறா மீனின் வாய்ப்பட்டு, 'இனி யான் உய்வது யாங்ஙனம்' என ஏக்கமுற்ற காலை, அஞ்செழுத்தாகிய புணை கிட்டியதாகவும், அது கொண்டு ஆண்டவன் அருளடியாங் கரையை அடைந்து உய்ந்ததாகவும் 'தனியனேன்' என்று தொடங்குந் திருப்பாட்டால் விளக்குகின்றார்.

இங்ஙனம் திருவைந்தெழுத்தாகிய புணை தமக்குச் செய்த—காலத்தினாற் செய்ததும், செய்யாமற் செய்ததும், பயன்தூக்காது செய்ததுமாகிய—அவ்வுதவியானது ஞாலம், வானம், கடல் முதலிய அனைத்திலும் பெரிதாகத் தோன்ற, அதற்குக் கைம்மாறாகத் தாம் யாது செய்யலாமெனத் துருவித்துருவி ஆராய்ந்து "யானிதற்கிலனோர் கைம்மாறு" என்னும் முடிவிற்கு வந்து, நன்றி புரிந்தாரை வாழ்த்துதலாகிய நல்லோர் மரபுப்படி "நமச்சிவாய வாழ்க" எனக் கூறியருளினர்.

இனி, கடலின் நடுவட்கிடந்து கலங்குமொருவற்குப் புணை ஒன்று கிட்டி, கரை கிட்டா திருப்பின், அவன் அக்கடலில் மூழ்கி இறத்தலாகிய துன்பமட்டும் இல்லா திருக்கலாமே யன்றி, கரையை யடைதலாகிய இன்பத்தைப் பெறானன்றோ? ஆதலால் துன்ப நீக்கத்திற்குக் காரணமாயிருந்த திருவைந்தெழுத்தை முற்கூறிய நமது அடிகள் இன்ப ஆக்கத்திற்குக் காரணமாயிருந்த இறைவன் திருவடியை வாழ்த்துவான் வேண்டி "நாதன்றாள் வாழ்க" என வாய் மலர்ந்தருளினர். இன்னும் அதன் கீழ் வரும் பதினான்கு அடிகளில் அத்திருவடி "வாழ்க; வெல்க; போற்றி" எனக் கூறியருளியதையுங் காண்க. (தொடரும்.)

சமய விளக்கம்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

(சஉஎ-ம் பக்கத் தொடர்ச்சி)

யானை கண்ட குருடர் கதையிலே, அறிஞர் யானையைச் சமயத்திற்கு ஒப்பிடுவர். குருடர் கண்ட உறுப்புக்கள் யானையின் பகுதிகளாக அடங்க, யானை உறுப்புக்களை யுடைய முத

லாக விளங்குதல் போல, பல சமயக் கொள்கைகளும் அவ்வவற்றிற்குரிய இடங்களில் உறுப்பாக அமையப் பெற்று விளங்கும் ஒரு சமயமே முழுச் சமயமா மென்பது போதருதலின்,

" ஓது சமயங்கள் பொருளுணரு
நூல்களொன்றோ டொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாது சமயம் பொருணூல் யாதிங்கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும் பிணக்கதின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசயம் பொருணூல் "

என்ற அருண்மொழி எழுந்ததென அறிக.

எச்சமயத்தானும், தனக்கொத்த கருத்துக்கள் பிறிதொரு சமய நூலிற் காணப்படின், அவற்றைத் தழுவிக்கொள்ளுதல் முறை யென்பது,

" அன்னிய நூலின்விதி அவிரோதமேல்
உன்னேல் பழுதென் றுளத்து"

என்றமையா லறிக. கிறித்து மதத்திலும், மகம்மதிய மதத்திலும் ஒருகடவுள் வழிபாடு கூறப்படுமிடத்து, அது சைவரால் தழுவப்படுதற் குரியதே. ஒருகடவுட் கோட்பாடில்லாத புத்த சமண சமயங்களினும் அவை அக்கொள்கை யளவிலே சிறப்புடையன வென்றே கொள்ளுதல் தக்கது.

நடையுடை பாவனைகளிலும் மொழியிலும் நாட்டிலுமுள்ள வேற்றுமை காரணமாக வெவ்வேறு நாட்டினர் ஒத்த கொள்கைகளைப் போற்றுமை, இருட்டிலே தெலுங்கன் கைத்தோட்டி தமிழன் காதி லகப்பட்ட கதையை நினைவுறுத்துகின்றது. இருள் நிறைந்த ஓரிடத்திலே சென்ற ஒரு தெலுங்க வழிப்போக்கன் கையிலே இருந்த தோட்டியானது ஆண்டுச் சென்ற ஒரு தமிழன் காதி லகப்பட்டுக்கொண்டது. தெலுங்கன் தனது தோட்டியை யாரோ எடுத்துக் கொள்ளுவதாக நினைத்து என்னுடையது என்ற பொருளில் 'நாதி,' 'நாதி,' என்று கூவினன். தமிழன் தன் காதிலே மாட்டிக் கொண்டமை கூறுவான், 'காது, காது,' என்றலறினன். காது என்ற சொல், 'அன்று,'

என்று தெலுங்கிற் பொருள்படும். தெலுங்கன் தோட்டியைத் தன்னுடைய தன்றென்று தமிழன் கூறுவதாக வெண்ணி அதனை அழுத்தமாக இழுத்தான். வலி பொறுக்க முடியாத தமிழன், 'காது, காது,' என்று மீண்டு மலறினன். இக்கூக் குரல் கேட்டு, இருமொழியு மறிந்த ஒருவன் ஓடிச் சென்றுண் மை விளக்கினன். பின் இருவரும் தமது பிழையை யோர்ந் தனர். இவ்வாறே மேலை நாட்டினரும் கீழை நாட்டினரும், ஒரு வகையாரைப் பிறிதொரு வகையார் நன்கு அறிந்துகொள் ளாமையால், சமய முரண்பா டெய்துதல் கூடும். டாக்டர் போப், தமது திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பினுல் மேலை நாட்டினர்க்கும் தமிழர்க்கும் தக்க கருத்தொற்றுமை விளைத் தலைத் தமது பெருநோக்கமாகக் குறித்துள்ளார்.

ஸோராஸ்டர் மத முதலிய சில அந்நிய நாட்டுச் சமயங்கள் சைவ சமயத்தோடு பெரும்பான்மை ஒத்த கருத்துக்க ளுடை யன. மேலை நாட்டுத் தத்துவ ஆராய்ச்சியாளர் சிலருடைய கொள்கைகள், சைவசித்தாந்த கொள்கைகளாகவே காணப்படு கின்றன. ஸர். ஜான் உட்ராவ் முதலிய அறிஞர், கீழை நாட்டுச் சமயங்களி னுண்மை யுணர்ந்து அதனையே தஞ்சமயமாகக் கடைப்பிடித்தமையுங் காண்க. விவேகானந்தரால் அமெரிக் காக் கண்டத்திற் பலர் இந்நாட்டுச் சமயக் கொள்கைகளைக் கைக்கொண்டமை போற்றற்பாலது. இதனுல் தற்கால ஆராய் ச்சி முறைக்கேற்ப நமது சமயத்தை மேலை நாட்டினர்க்கு எடுத் துரைப்பின் இதனை அவர்கள் எளிதில் தழுவுதல் கூடுமென் பது பெறப்பட்டது.

இஃதிவ்வா திருப்ப, உண்மையாக ஒற்றுமைப்படாத சமய நூல்களை ஒற்றுமைப் படுத்தும்பொருட்டுப் பொருள் கோண் முறை என்பதை ஒரு கருவியாகக் கொண்டு, நூல்கட் குப் பொருள் கூறுமுகத்தால், பல சமய நூலாசிரியரும் உரை யாசிரியரும் இந்நாட்டிலே சரித்திர வுணர்ச்சிக்கு ஊனம் விளைத் தனர். அஃது ஆராய்ச்சிக் குற்றமாகும். அது கம்பர் கல்லாதான் ஒருவனது கவிக்குப் பொருள் கூறிய முறையை யொக்கும். ஏழை பொருவன், கன்னு, பின்னு, காமா, சோமா என்று அர

சனை நோக்கிப் புலம்ப, கம்பர், கன்னு—கர்ணனே, பின்னு—பின்னைப் பிராட்டி கேள்வனே, காமா—மன்மதனே, சோமா—சந்திரனே யெனவும் பொருள்படு மென்றார். வடமொழியிலே உள்ள இருக்கு முதலிய வேத நூல்கட்குச் சைவசித்தாந்தப் பொருள் கூறுவார் முறை, மேற் கூறியதனோ டொக்கும். சங்கராசாரியார், இராமானுஜர் முதலியோர் உபநிடதங்கட்குப் பொருள் கூறுமிடத்துத் தமது கருத்திற் கேற்ப, அவைகட்கு நலிந்து பொருள் கொண் டிடர்ப்படுதல் அவர்கள் பாடிய நூல்களுட் காணப்படுகின்றது. நூல்கட்கு இவ்வாறு பொருள் கொள்ளின், விவிலிய நூலுக்கும், மகம்மதிய வேதத்திற்கும் சித்தாந்த சைவப் பொருள் கோடலும் தக்கதே என்பது முடியும்; அது தக்கதன்று. ஒவ்வொரு நூலிற் கூறும் பொருளையும், நேராகக் கற்றறிதலே பொருத்தமானது. நெடுநாட்கு முற்பட்ட நூல்களை அவை யுண்டாய கால இயல்பினை யொட்டிப் பொருள் கொள்ளுதலே உண்மை யறிவதற் கேதுவாகும். புராணங்களிலும், பிற நூல்களிலும் ஒரே சொல் பல தெய்வங்களுக்கு வழங்குவதால் வருங் குழப்பம் அதிகம். அதனல் மக்கள் கலக்கமுறுதற்குக் காரணம் ஏற்படுகின்றது. உருத்திரன் என்ற சொல், திக்குப் பாலகருள் ஒருவர்க்கும், காலாக்கினி புவனத்துள்ளார்க்கும், சிவலோகத்துள்ளார்க்கும் பிரகிருதி முடிவிலுள்ளார்க்கும் வழங்கப்படுதல் காண்க. பிறவு மன்ன.

சமய நூலுணர்ச்சிக் குளதாம் தடைகளும் இடையூறுகளும் பலப்பல. இடைச் செருகல் முதலியவற்றாலும் பல தீங்குகள் விளைந்துள்ளன, ஆதலாற் சமயக் கொள்கைகளை யாயுமிடத்து, அவ்வச் சமயச் சிறப்புநூல்களின் தெளிவாய பொருளினையே கடைப்பிடித்தல் வேண்டும். இந்தக் கட்டுரையுள், ஒவ்வொரு சமயத்திற்குமுரிய, சமய நூல், கடவுளியல், ஒழுக்கவியல், பிரமாண நூல்கள், வழிபாட்டு முறைகள், சமுதாயத்தைப் பற்றிய நோக்கங்கள் முதலியவற்றை விரித்துப் பேச இடமில்லை. சமயக் கொள்கை, சமய வொழுக்கம் என்னுமிருபகுதியுள், சமயக் கொள்கை மாத்திர முடையோரே பெரும்பான்மையோ ராவர். சமய ஒழுக்கமும் உடன் உடையவர்

மிகச் சிலரே. சைவசித்தாந்தக் கொள்கை யுடைய பலர், உல காயத வொழுக்க முடையராய்த் திகழ்கின்றார்கள்; சைவ சமயத்தாராய்ப் பிறந்தாருட் பலர், சைவ சமயக் கொள்கை யறியார். கொள்கை யறிந்தாருள்ளும் பலர் சமய ஒழுக்க மில்லாதவரே.

சில நூல்களைக் கடவுள் வாக்கென்று நம்பும் நம்பிக்கையும், அனையபிற நம்பிக்கைகளும், சமயக் கொள்கைகளின் முக்கிய பகுதியாக ஒரு சாரார் கருதுகின்றார்கள். சைவ சமயக் கொள் கைகள், இறை, உயிர், தளை, இவற்றினுண்மை, தன்மை தொடர்பு என்பவற்றைப் பற்றியும், அவற்றின், சார்பாய சரியை, கிரியை, யோகம், ஞானமென்ற ஒழுக்க முறைகளைப் பற்றியும் உள்ளவைகளே. இவற்றைக் கூறும் நூல்களைப் பிர மாண நூலாகக் கோடல் வேண்டப்படும். சமயத்தோ டொட் டிய உடற் பாதுகாப்பு விதிகளையும், சமுதாய நலம் நாடும் விதி களையும், காரணமில்லாத பல நம்பிக்கைகளையும், சமயத்தின் முக்கிய பகுதியெனக் கொண்டு, அவற்றை மேற் கொள்ளாமை, சமயத்தை மறுத்தலாகு மெனக் கழறுவதால் ஏற்படும் பிணக்கு கள் பல.' சமயத்தின் உயிர்க்கொள்கைகளையும் இன்றியமையாத ஒழுக்க முறைகளையுமே சிறப்பாகப் பாதுகாத்தல் வேண்டும். அவற்றைக் கைக்கொள்ளுவோர் எல்லாரும் சமயத்தினரே யென்ற உணர்ச்சி மேம்பட வேண்டும்.

சமயம் உயிரைப் பற்றியது, சாதி உடலைப் பற்றியதென ஓர்ந்து, சமயத்தினுண்மையும் நன்மையும் பலர்க்கும் கைவரும் படிச் செய்யவேண்டும். சாதிப் பிணக்கினாலும், சாதிப் பெருமை களாலும், சமய வுரிமைகள் உரியார்க்குக் கிடைக்கப் பெறாமை நமது திருக்கோயில்கள் முதலிய பொது நிலயங்களிற் காணப் படும். சமயத்தின் திட்ப முணர்ந்தோர் அதனைச் சாதி மாசி னாற் போழ்படாது பாதுகாப்பார். அது சமயத்தாரின் ஒரு தலையாய கடனாகும். இந்நாட்டின் சமய வரலாற்றினைச் சுருக்க மாகக் குறித்தல் தமிழ் மக்களுக் கியைந்த தொன்றாகலின், அது வருமாறு :—

கடவுள், உயிர், மெய், வினை, அறிவர் முதலிய சொற்களே தமிழரின் தத்துவக் கொள்கைகளின், தொன்மையுஞ் சிறப்பு முணர்த்துவதற்குப் போதுமானவை. ஞாயிறு, திங்கள், நெருப்பு என்னு மும்மண்டலங்களையும், கடவுளோ டியைத் துக் கூறு முறை தொல்காப்பியத்துட் பேசப்பட்டது. ஓங் காரம் தமிழெனமுடியவே, பிள்ளையார் வழிபாட்டின் அடிப் படை தமிழரைச் சார்ந்த தென்பது போதரும். முருகன் தமிழ்த்தெய்வமே. மாயோள், மாயோன் இருவருந் தமிழர் தெய் வங்களே. சிவனென்ற சொல் தமிழெனப் பிறவிடங்களில் விளக் கினமை கொண்டும், டாக்டர் கிரயர்சன் (Dr. Grierson) முத லிய மேலை நாட்டுப் புலவர் கூற்றானும் தெளிக. தமிழ் நாட்டுப் பிறதெய்வங்களைக் காலம், உலகமென்ற தொல்காப்பியச் சூத் திரத்துட் காண்க. இந்திரனுங்கூட இந்திய நாட்டிற் குரியவனே யெனத் திருவாளர் பி. டி. சீனிவாசய்யங்கார் முதலிய சரித்திர ஆசிரியர் கூறுவர். பிறவு மன்ன. சுருக்கமாக இயம்புங்கால், கதிரவன் வழிபாடு, சிவவழிபாடு, அம்மை வணக்கம், திருமால் பூசனை, முருகற் பராவுதல், பிள்ளையார்த் தொழுதல் ஆகிய எல் லாம் தமிழ் நாட்டிற்கு ஆதியில் உரியனவே. இவை ஆறும் ஓரே சமயத்தின் பகுதி யென்பது தந்திரத் தத்துவமென்னும் வடநூலுள் இவ்வறு சமயத்தாரும் அருவுருவச் சிவ வழிபா டியற்ற வேண்டுமென விதித்தமையி னறிக.

இனி, வரலாற்று முறையா னைய்ந்தார் கருத்துப் பகர்வாம். ஒப்பெனிற் கொள்க, அன்றெனில் விடுக. தமிழ் நாட்டிற்குத் தெற்கேயுள்ள நிலப் பகுதியிலே மக்கள் வாழ்க்கை தொடங்கி 80,000 ஆண்டுகட்கு மேலாயின வென்ற கருத்து அறிஞ ரால் தெரிக்கப்படுகின்றது. ஸ்காட் எலியட் எழுதிய இழந்த லெமூரியா என்னும் நூலுள், கன்னியாகுமரிக்குத் தெற்கே கடல் கொண்ட நாட்டிலிருந்த பண்டை மக்கள் 12 அல்லது 15 அடி உயரமுள்ளவர்களா யிருந்தாரெனவும் பொன்மை யுங் கருமையுங் கலந்த நிறமுடையவர்களாயும், தசைச் சுருட் டுப் போன்ற நெற்றியுடையராய், அந் நெற்றியிலே கண் படைத்தவருமா யிருந்தார்களெனவும் சில அறிஞர் ஊகிப்பதாக

வுரைத்தனர். நெற்றிக் கண்ணிற்குப் பதிலாகச் சிறு குப்பி போன்ற தசைத்திரள் (pineal gland) ஒன்று நமது தலையி லிருப்பதென்க.

கரிகால்வளவன் காலத்தில் முக்கண் படைத்த பிரதாப ருத்திரன் ஒருவ னிருந்தானென்ற கதை கேட்கப்படுகின்றது. முக்கண்ணுடையராய்த் திகழ்ந்த மக்கள், சமயவுணர்ச்சி யுடையராய்த் திகழ்ந்திருப்பின், இறைவனை முக்கண்ணினராக வழிபடுதல் இயல்பே. மாடு கடவுளைப்பற்றி நினைக்கக்கூடுமாயின், தன்னினத்துட் பெரிய தொன்ருகவே அவரைக் கருதுமென விவேகானந்தர் தமது சொற்பொழிவொன்றிற் கூறியது காண்க.

முக்கண்ணுடைய மூர்த்தி சிவபெருமானென்பது யாரும் அறிந்ததே. சிவ வழிபாடு தமிழருடைய பண்டை வழிபாடென ரகோசின், ரப்சன், கிரயர்சன் முதலிய மேலை நாட்டாசிரியர்கள் ஆராய்ச்சியாற் புலனுகின்றது. சிவமென்ற சொல்லே தமிழ்ச் சொல்லென்பது (Dr. Grierson) என்பார் கருத்து. அவர் சொல்லுவதாவது:—

"சிவபெருமானுக்குப் புலித்தோலுடையும் நாக நகையும் பேசப்படுகின்றன. புலி கோறலும் நாகத்தைப் பிடித்தாட்டலும் மிக்க திறலுடையார்க்கே இயலும். வேட்டுவத் தொழில் மிக்க வாழ்க்கையில் சடையும் மரவுரியுந் தரித்து விலங்குகளையும் பாம்புகளையும் அடக்கவல்ல தலைவனே, தெய்வப் போராற்றலுடையனுக இறந்த பின்னும் வழிபடற்பாலன். இயற்கைப் பேரொளி மண்டலமாகிய ஞாயிற்றை வழிபடாத பண்டை மக்களு முளரோ?"

குலத் தந்தையராய தலைவன் வழிபாடு நாளடைவிலே குல தெய்வ வழிபாடாகிப் பின் பெருந் தெய்வ வழிபாடாக மாறிற்றுப் போலும். கதிரவன் வழிபாடு முடன் கலந்து, கதிரவன் நிறம் சிவ முதல்வனுக்கும் ஏற்றப்பட்டது. கதிரவன் முதல்வனது இருக்கையாகவும் வடிவாகவும் கருதப்பட்டான். இளங் கதிரவன் வழிபாடு முருகன் வழிபாடாயிற்று. மலையில் வாழ்வார் யானையின்கண் தெய்வப் போராற்றலைக் காணுத லியல்பே.

யானைமுகவன் வணக்கம் அறிவு மிகுதிப்பட்டகாலே ஓங்கார தெய்வ வழிபா டாயிற்று.

அச்சத்தோடு செய்யப்படும் தந்தை வணக்கமும் அன்போடு செய்யப்படுந் தாய் வழிபாடும் அம்மையப்பர் வழிபாடாய காலே, இறைவன் திருவடிவத்திலே ஒரு கை மழுவும், பிறிதொரு கை மானு முடையனவாயின. ஒரு புறம் அஞ்சேலென்ற வீரக் கரமும், எதிர்ப் பக்கம் வேண்டியனவற்றைக் குழந்தைகட் கீயும் அருட் கையும் அமைந்தனபோலும். அன்னையு மப்பனும் முன்னறிதெய்வம் என்றதுங் காண்க. தாயாகிய அம்மை வழிபாடே திருமால் வழிபாடாக மாறிற்றுப் போலும். காடுகளில் எங்கும் கொற்றவை, முதலிய அம்மை வழிபாடே வழக்கத்திற் காணப்படுகிறது. காட்டிலுள்ள பொழிலின் மரச் செறிவு கருநிறமாய்த் தெரிதலும், ஆண்டு வழிபடப்பட்ட தாயும் கருநிறத்தளாயினள். 'மாயோள் மேயகாடுறையுலக' மென்ற பாடமே பழமையானது. முல்லைநில மக்கள் கண்ணன் ஆயரிடைப் பிறந்த காலந்தொட்டு மாயோன் வணக்கமுங் கைக்கொண்டனர் போலும்.

சிவவழிபாடே தமிழரது முழுமுதற் கடவுள் வழிபாடென்பது புறநானூறு, சிலப்பதிகாரம் முதலியவற்றின்கட் காணப்படுங் குறிப்புக்களால் விளங்கும்.

"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
நின்கொடை தாழும்"

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்"

"நுதல்விழி நாட்டத் திறையோன் கோட்டம்"

என்பன காண்க.

உயர்ந்த மலைகளில், நெருப்பு வழிபாடு சிறப்பாக நிகழும். கதிரவன் போலவே, நெருப்பும் இறை இருக்கை யென்று கொண்டகாலை, கந்தழி வழிபாடே பரம்பொருள் வணக்கமாயிற்று. 'ஆக்கி யளித் தழிக்குங் கந்தழியின் பேருருவே' என்ற இந்நிலையடியில், கந்தழி கடவுளைக் குறித்தல் காண்க.

"அருக்கனுவான் அரனுருவல்லனே"
"எரி பெருக்குவ ரவ் வெரி யீசனது
உரு வருக்கம தாவ துணர்கிலார்"

எனவும் கூறியது காண்க. திங்கள் அம்மைவழிபாட்டிலே அடங்கிவிட்டது. திங்கள் அம்மையின் கலைகளி லடங்கு மென்பது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலே, 'கண்டு படுகுதலைப் பசுங்கிளி யிவட்கு ஒரு காலபேதமென்ன நின்னைக் கலைமறைகள் முறையிடுவ' என்றமையாலறிக. கொடிநிலை வள்ளி கந்தழியென்ற தொல்காப்பியச் சூத்திர வுரையில் திங்கள் பெண்டன்மை யுடையதெனு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதுங் காண்க.

ஞாயிற்றினொளி உலகப் பொருள்களின் தோற்றத்திற் கேதுவாய தெனவும், திங்களினொளி அவற்றின் பாதுகாப்பிற் குரியதெனவும், நெருப்பு அவற்றை அழிப்பதெனவும் கருதப் பட்ட காலை,

சூரியமண்டலாதிபதயே பிரம்மணே நம
சந்திர மண்டலாதிபதயே விஷ்ணவே நம
அக்கினி மண்டலாதிபதயே ருத்ராய நம

என்ற மந்திரக் கருத்துக்கள் எழுந்தனபோலும். இம் மூன்று மண்டலத் தலைவரே மும்மூர்த்திகளாகக் கருதப்பட்டனர். ஈண்டுக் கூறிய மூவகை மண்டலமும் இறைவனதருள் வெளியி லடங்குவன. அருளே இறைவற் கிருக்கை யாதலினால் 'சக்தி மண்டலாதிபதயே ஈசுவராய நம' என்ற ஆகம வாக்கிய மெழுந்தது.

மும்மூர்த்திகளாயும் சத்தி சிவமாயும் நின்ற கடவுள் ஒருவனே யென்ற கருத்துப்பற்றி 'மூவராயு மிருவராயு முதல்வன் அவனேகாண்' என அருண்மொழி உதித்ததாகும். மும்மூர்த்திக் குத் தலைவனுயுள்ள பரம்பொருள் கடவுளென்ற கருத்துமது. 'படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திகளாயினை' என்றபடி மும்மூர்த்திகளை யதிட்டித்து முத்தொழில் புரிவா னிறைவனே யாதலின், அவர்களைக் கடவுளோ டியைத்துக் கூறும் மரபு ஏற்பட்டது. கொடிநிலை, வள்ளி, கந்தழி யென்ற சூத்திரக் கருத்துமஃதென்ப. இக் கருத்தே சைவ உபநிடதங்களிலும் பயில்கின்றது. முருகனைக் கடவுளாகவே கருதுவர். மூவரும் வணங்கும் பெருமா

னவனென்பது திருமுருகாற்றுப் படையுள்ளும், பரிபாடலின் கண்ணும் கூறப்பட்டது. திருமாலின் அம்மையாகவே கரு தினமையால் பரிபாடலுள் திருமாலுக்குப் பத்துப் பிறவி கூறப் படவில்லை. 'பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே' என்றது காண்க. இதனால் ஆதியிலே உள்ள சிவவழிபாடு, முருக வழி பாடு, உமை வழிபாடு, மால் வழிபாடு என்பன வெவ்வேறு தோற்றமுடைய ஒரு பெருமுதற் கடவுளது வழிபாடே யென் பது தெளியற்பாற்று. இவை பிற்காலத்தே பிரிவுற்று நமது நாட்டு மக்களுள் சமயப் பிணக்கிற்கேதுவாயின. மால்வழிபாடு மிக்க ஆரியக் கலப்புற்றுப் பண்டையுரு விழந்தமையால், சிவம், சத்தி, முருகன், கணபதி, என்போர் வழிபாடு ஒரு சம யத்தின் பகுதியா யடங்கி நிற்ப, மால் வழிபாடு மாத்திரம், அந்நிய சமயமாகத் தோன்றுதலாயிற்று. வரலாற்று முறை யை உற்று நோக்குவார்க்கும் அதுவும் தமிழர் பெருநெறியில் ஒரு பகுதியா யடங்க வேண்டு மென்பது தெற்றெனப் புலனும். அதற்காகச் செய்யு முயற்சி சிறக்க. கதிரவன் வழிபாடு சைவ, வைணவ மிரண்டினும் அங்கமாக அமைந்து போயினமையின் அதனைப்பற்றிய பிணக்கு யாதுமில்லை. சிவ சூரியன், சூரிய நாராயணனென்ற சொற்றொடர்களை உற்று நோக்குக.

தமிழ்நாட்டு இவ் அறு சமயங்களின் கருத்துக்கள் வட மொழி உபநிடதங்களிலும் பயில்வனவாயின, வடநாட்டுச் சம யங்களாகிய உலகாயதம், புத்தம், ஆருகதம், சாங்கியம், நியா யம், மீமாம்சகம் என்பன பின் எழுந்தன. இவற்றைப் புறச் சமயங்களெனத் திருமூலர் முதலியோர் கண்டித் தொதுக்கினர். இவற்றிற்கும் பின்னரே சைவசித்தாந்த சாத்திரங்களிற் கூறப் படும் புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச் சமயம் என நாற்கூற்று அறுவகைச் சமயப் பாகுபாடுகள் ஏற் பட்டனபோலும். இக்காலத்தே சமயங்களை ஒப்பிட்டு முறை யால் ஆராய்ச்சி செய்வார்கட்கு இவற்றோடு, கிறிஸ்து மதம், மகம்மதிய மதம், யூத மதம், ஸொராஸ்டிரியமதம், சூவி மதம், கன்பூஷியமதம் முதலியனவும், பிறவும் ஆராய்ச்சிக் குரியன வாகும்.

இதுகாறுங் கூறியவாற்ருல் சமயமென்பது முதற்கண் உலகப்பயன் கருதி, மக்கள் தம்மிற் பெரியதாகக் கருதிய ஒன்றின் உதவியை வழிபாட்டு வாயிலாகப் பெற முயன்றகாலை எழுந்ததெனவும், அதற்கு இயற்கைப் பெருஞ்சுடர் வழிபாடு, இயற்கைச் சிறுபொருள் வழிபாடு, தென்புலத்தார் வழிபாடு முதலியன வாயில்களாயின வெனவும், பயன் கருதாது கடவுளினியல்பையு முண்மையையு மாராயப்புகுந்தார் தத்த மறிவிற் கெட்டியவாறு கண்ட உண்மைகள் சமயக் கொள்கைகளாய் வடிவெடுத்தகாலை சமயப் பிணக்குகள் ஏற்பட்டன வெனவும், நடுநிலையாய ஒப்பிட் டாராய்ச்சியாலும், படிப்படியாகச் செல்லும் சமய ஒழுக்கங்களாலும் உண்மைத்தெளிவு ஏற்படுதல் கூடுமெனவும், முரண்பாடான சமயவாதம் பயனற்றதெனவும், முழுத்தன்மையுடைய தொரு சமயம் எல்லாச் சமயத்தையும் இணக்கமான உறுப்புக்களாகக் கொள்ளுமென்றும், சமயங் கடந்த பெருநிலையுளதென்றும், சமயங்களை ஒற்றுமைப் படுத்துவதில், வரலாற்று முறைக்கு மாருய பொருள்கோண் முறையாலும், பலபொருளொரு சொல் வழக்குகளாலும், சமயத்திற் குரியனவற்றைப் பிறவற்ருேடு திரியக் கொண்டு மயங்கு மயக்கத்தாலு முளதாம் வழுக்களைக் களைதல் வேண்டு மென்றும் இயம்பப்பட்டது. பின்னர் நமது நாட்டிலே சைவ முதலிய ஆறு சமயங்கள் எழுந்த முறையைத் தமிழ்நூன் முறைக்கேற்ப ஆயுங்கால், கதிரவன் வழிபாடு, சிவ வழிபாடு, அம்மை வழிபாடு, மால்வழிபாடு, குமரன் வழிபாடு, யானைமுகவன் வழிபாடு என்பன தமிழ் நாட்டிற்குரிய ஒரு பெருஞ் சமயநெறியின் பகுதிகளாமென்பதும், ஞாயிறு, திங்கள், நெருப்பு இவற்றின் வணக்கமும் மூவர் வழிபாட்டிற் கடிப்படையான தென்பதும், அன்னோர் வழிபாட்டிற்கு மேலாகச் சத்தி சிவ வழிபாடுக ளுண்மையும் பிறவும் ஆயற்பாலன வென்பதும் புலனுதல் தெரிக்கப்பட்டது. பின்னர் நாளடைவிலே சமயப் பாகுபாட்டின் பெருக்க மெழுந்த முறையும் ஒப்பிட்டாராயத் தக்கன இவையெனவும் குறிக்கப்பட்டன.

தமிழை வளர்ப்ப தெப்படி?

[திரு. D. N. ஆறுமுகம் பிள்ளையவர்கள்]

(சகக-ம் பக்கத் தொடர்ச்சி)

நூலாசிரியர்களே! எவர் எது கூறினும் கூறுக. நீவிர் பிற மொழிக் கலப்பில்லாத் தனித்தமிழ் நடையில் எழுதுமின்; எண்களெல்லாம் தமிழிலேயே குறித்திடுமின். சுக்கில ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபத்து மூன்றும் நாள் மதுரைத் தமிழ்க் கழகத்தின் இருபத்தெட்டாம் ஆண்டு விழாவில் தலைமை பூண்ட திருவாளர். சர். நார்மன் எட்வர்டு மார்ஷ்பாங்க்ஸ் என்னும் ஆங்கிலப் பெரியாருங் கூடத் தாம் நிகழ்த்திய விரிவுரையில் "தமிழில்........பிறமொழிச் சொற்களை இடையிடையே கலந்து பேசுவதை நோக்க என் மனம் வருந்துகின்றது" என்று கூறி யிருக்கின்றனர். இவருக்கிருக்கும் தமிழன்பு தமிழராகப் பிறந்த ஒரு சிலருக்கேனும் இருப்பின் "தமிழ் தனிமொழி யன்று" என்பார் வாய் அடைபடுமே.

இன்னும் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு நிலைநாட்டப் பெறும் கழகம் செய்ய வேண்டுவன பலவுள. அவற்றிற் சிலவற்றை மட்டும் கூறுகிறேன். நம் தமிழ்மக்களிற் பெரும்பாலார் தமிழ் நூல்கட்கு உரை கூறும் வன்மை யில்லாதவராகவே யிருக்கின்றன ரென்று முன்னரே கூறினேன். அது மட்டுமா? பிழையின்றி எழுதவும் அறிந்திலரே! இவர்களுக்குத் தமிழறி வுண்டாகுமாறு தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்கட்கும் பிற பழந்தமிழ் நூல்கட்கும் முன்னிருந்த உரையாசிரியர்கள் உரையைத் தழுவ வேண்டிய இடங்களிற் றழுவியும் மறுக்கவேண்டிய இடங்களின் மறுத்தும் தங்கள் நுண்ணறிவுக்குத் தோன்றிய பொருள்களை விளக்கியும் விளக்க வுரையெழுதி வெளியிடல் வேண்டும். நச்சினார்க்கினியர் பல விடங்களில் உரை யெழுது முறை பிற வுரையாசிரியர்க்குப் புதிய முறை. இவர் தம் உரையை விளக்க ஓர் பேராசிரியர் வேண்டும். முல்லைப் பாட்டுக்கும் பட்டினப் பாலைக்கும் நச்சினார்க்

இனியர் எழுதிய உரையையும் ஆசிரியர் மறைமலை யடிகள் எழுதிய உரையையும் வைத்து நோக்குவராயின் நச்சினர்க்கினியர் உரையின் போக்கு எத்தகைய தென்பது இனிது விளங்கும். இதுபற்றி மேலும் பேசுவேனாகில் பலர் உள்ளத்தே சினம் பொங்கி எழுமோவென அஞ்சுகிறேன். மேற்கூறிய நூல்களுக்கு ஆசிரியர் மறைமலை யடிகள் எழுதிய வுரையே போன்ற வுரைகள் பிற தமிழ் நூல்கட்கும் வெளியிடல் வேண்டும்; உரையில்லாத தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலிய நூல்கட்கும் தெளிவான விரிவுரைகள் எழுதவேண்டும்; சமய நூற் பொருளை எல்லாரும் எளிதின் உணர உரை நடை நூல்கள் பல எழுதி வெளியிடல் வேண்டும்.

தமிழ்மக்களிற் பல்லோர் தேவாரம் திருவாசகம் முதலிய நூல்கட்கு உரைகூறல் பிழையென எண்ணி யிருக்கின்றனர். திருவாசக விரிவுரை எழுதிய காலத்தில் ஆசிரியர் மறைமலை யடிகள் அறிவுச் சுடர்கொளுத்தி யிருக்கின்றனராயினும், இன்னமும் விரிவுரைகளானும் துண்டு வெளியீடுகளானும் இவர்கள் எண்ணத்தை மாற்றுதல் வேண்டும். திருவாசகத்துக்கு உரையெழுதல் வழுவாமெனக் கூறிய ஒரு பெரும்புலவர் தேவாரத் துக்கு உரைகூற நான் கேட்டதுண்டு.

தமிழ் மக்களாகப் பிறந்தும் தமிழின் அருமை யுணராமலும் தமிழின்பால் அன்பில்லாமலும் பலர் உளர்; இவர்கள் "தெலுகு தேட, அரவம் அத்வானம்" என்னும் தெலுங்கு பழமொழியைப் பலகாலும் பகர்கின்றனர்: "தமிழ், இறைவனைப் போற்றற் கேற்ற மொழியன்று; தமிழில் மந்திரங்கள் இல்லை; மணவினை பிணவினை முதலியன தமிழில் இயற்றல் கூடாது." என்கின்றனர். இவர்கள் எண்ணத்தை அடியோடு தொலைத்தற்கு இன்றே முயற்சித்தல் வேண்டும். தமிழின் பெருமையைப் பல வழிகளானும் இவர்கட்கு விளக்கல் வேண்டும். சிவபெருமான் திருக்கோயில்களினும் திருமால் திருக்கோயில்களினும் முறையே தேவார திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய தமிழ் மறைகளை ஓதுவித்தல் வேண்டும். இதற்கு அறநிலைப் பாதுகாப்பு மன்றத்தார் பெரிதும் உதவல் வேண்டும்.

நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.

என்னும் அருமைத் திருமொழியைப் பல்காலும் ஓதி ஓதி நெட்டுருச் செய்த பல புலவர்களுங் கூடத் தமிழில் மந்திரம் இல்லையென்கின்றனரே! தனித் தமிழர் வழிபடு கடவுளான முருகப் பெருமானுக்குரிய ஆறெழுத் தருமறையுங்கூட இஞ்ஞான்று வடசொற்களான் வழங்கப் பெறுகின்றது; உலகினர் பலரும் "சரவணபவ" என்பதே ஆறெழுத் தருமறை என்கின்றனர். நச்சினார்க்கினியர் "நமக்குமாராய" என்றனர். தமிழ்க் கடவுள் மந்திரம் தமிழில் இல்லாம லிருக்குமா? சிறந்த மந்திரத்தை வடமொழியாளர் மகா வாக்கியம் என்பர்; இது பெரும் பெயர் என்னும் தமிழ்ச் சொல்லின் மொழி பெயர்ப்பே யாம். "பெரும் பெயர் எனினும் மகா வாக்கியம் எனினும் ஒரு வார்த்தை யெனினும் ஒக்கும்" என்ற சிவஞான முனிவர் திருமொழியே இதனை வலியுறுத்தும். ஐந்தெழுத் தருமறையைச் சைவ சமய நூல்கள் பல பெரும் பெயர் என்று பல விடங்களினும் முறையிடுகின்றன; எனவே பெரும் பெயர் என்பது சிறப்பு வாய்ந்த மந்திரங்களுக்குப் பண்டைக் காலத்து வழங்கப்பட்ட மொழி யென்பது திண்ணம். பழந்தமிழ் நூல்கள் பலவற்றினும் பல இடங்களில் முருகன் என்னும் பெயர் பெரும்பெயர் என்னும் அடையடுத்தே வந்திருக்கிறது; இதனைக் கூர்ந்து நோக்கின், முருகப் பெருமானுக்குரிய மந்திரம் முருகன் என்னும் பெயருடன் மற்றோர் தனித்தமிழ்ச் சொல்லும் கூடி ஆறெழுத் தருமறையாகித் தனித் தமிழிலேயே வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்ப துறுதியாம். நம் ஆசிரியர் மறைமலையடிகளாரும் அறுகோணத்தில் அமைக்கும் முருகக் கடவுட்குரிய மந்திரமாக "முருக போற்றி" என்பதையே தமது மனித வசியம் என்னும் அரிய நூலில் எடுத்துக் காட்டி யிருக்கின்றார். இவற்றை யெல்லாம் நினைந்து தமிழில் மந்திரங்கள் உளவென எல்லாருக்கும் எடுத்துக் காட்டல் வேண்டும்; மணவினை முதலிய செயல்களை யெல்லாம் தமிழ் மந்திரங்கள் கூறியே செய்தல் வேண்டும்.

தமிழ்ப் பெரும்புலவர் என்று பட்டஞ் சூட்டிக்கொண்டு தமிழாலேயே பிழைக்கின்ற சிலர் தமிழ் மொழிக்கே கேடு சூழ் கின்றனர். தனித் தமிழ் நூல்கள் பலவற்றையும் வடமொழியி லிருந்து வந்தன என்கின்றனர்; பல்லாயிர ஆண்டுகட்கு முன் தோன்றிய தமிழ் நூல்களையும் பல்லாயிர ஆண்டுகட்கு முன் னிருந்த தமிழரசர்களையும் பற்றி எழுதுங்கால் சில நூற்றாண்டு கட்கு முன்னர்த்தான் தோன்றியன என்றும் சில நூற்றாண்டு கட்கு முன்னர்த்தான் இருந்தனர் என்றும் எழுதி யிருக்கின்ற னர். இவர்கள் உண்மையாகவே அறியாமையால் எழுதி யிருப் பின் அது குற்றமென்று யான் கூறேன்; மற்றுத் தமிழ் நூல் களின் தொன்மையையும் தமிழரசர்களின் தொன்மையையும் விளக்கினால் எங்கே தமிழுக்கும் தமிழர்க்கும் பெருமை வந்து விடுமோ என அழுக்காறு கொண்டு கரவுடை நெஞ்சினராய் எழுதி யிருப்பின் அது குற்றமன்றோ? இவர்கள் பிறர் தம்மைத் தமிழின்பால் அன்புடையார் என நினைக்க வேண்டுமென்றும் தம் கரவு வெளிப்படாதிருக்க வேண்டுமென்றும் எண்ணி அதற்கேற்றவாறு உதடு பழஞ்சொரிய உள்ளே வயிறெரிய எழுதுகின்றன ராயினும், இவர்கள் எழுத்தை நடுநிலையாளர் உற்று நோக்கின் இவர் தம் தீய நினைவை எளிதின் உணர்ந்து கொள்வர். ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழியப் பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்த உதியஞ் சேரல் மாபாரத காலத்தவன் என்பது தெளிவாகத் தெரிந் தும் இவன் மகனாகிய இமயவரம்பனை அவற்குச் சில்லாயிர ஆண்டுகட்குப் பின்னரிருந்த சேரன் செங்குட்டுவற்குத் தந்தை யென்ப தென்னையோ? எந்நூலேனும் சேரன் செங்குட்டுவன் தந்தை இமயவரம்பன் என்று கூறினதுண்டா? "குமரியொடு வடவிமயத் தொரு மொழிவைத் துலகாண்ட நெடுஞ்சேர லாதன்" என்பதனாலேயே செங்குட்டுவன் றந்தை இமய வரம்ப னாகிவிடுவானா? இமய வரம்பன் என்னும் பெயர் ஒரு பொருள் பற்றி வந்ததேனும் அஃது அவற்கு இயற்பெயர் போலவே எல்லாரானும் போற்றப்பட்ட தென்பது பழந்தமிழ் நூல்க ளான் இனிது விளங்கும். கோவலனின் ஒன்பதாந் தலைமுறைப்

பாட்டனும் விடர்ச்சிலை பொறித்த வேந்தனும் நண்புடையோர் என்று மணிமேகலை கூறலான் அவனே செங்குட்டுவன் தந்தை யென்று கோடல் பொருந்துமா? முன்னோராற்றிய அரும்பெருஞ் செயலைப் பின்னோர்க்கும் ஏற்றிக் கூறல் பண்டைக்கால வழக்கு; (இவ்வழக்கு இஞ்ஞான்றும் உண்டு) ஆகையால், இஃது ஒன்றையே ஆதரவாகக்கொண்டு முடிவு கட்டல் பிழைபாடாம். புறநானூற்றில் தரும புத்திரனைப் பாடிய கோதமனார் என்னும் பெயரொடு பதிற்றுப் பத்தில் இமயவரம்பன் தம்பியைப் பாடிய பாலைக் கௌதமனார் என்னும் பெயர் ஒற்றுமையும், மாபாரதர் (பரத குலத்தார்—பாண்டவர்) என்னும் பெயரொடு பதிற்றுப்பத்தின் மூன்றும் பத்தின் இறுதிப் பதிகத்துள்ள நெடும்பாரதாயனார் என்னும் தொடர் மொழி யொற்றுமையும், பாண்டவர் காடுபோந்த வரலாற்றோடு இப்பதிகத்துள்ள "நெடும்பாரதாயனார் முந்துறக்காடு போந்த பல்யானைச் செல்கெழு குட்டுவன்" என்பதில் அடங்கியுள்ள வரலாற் றொற்றுமையும், இமயவரம்பனும் அவன் தம்பியும் பாரதப் போரிற் சோறளித்த உதியஞ் சேரலின் மக்கள் என்ற வரலாறும் ஆகிய இவையெல்லாம் மேற்கூறிய இரு வேந்தரும் (இமய வரம்பனும் அவன் தம்பியும்) மாபாரதவர் என்பதை உறுதிப்படுத்துவனவாம்; எனவே இவர்களைக் குறித்துப் பாடப்பெற்றுள்ள பதிற்றுப்பத்தின் இரண்டு பத்துக்களும் ஐயாயிர ஆண்டுகட்கு முற்பட்டன என்பதும் தேற்றம். எது எவ்வாறாயினும் ஆகுக; தமிழ்க்குக் கேடு சூழ்வார்தம் கரவினை எல்லார்க்கும் விளங்க வெளியிட்டு அவர்களைப் புலவரினத்தி லிருந்து நீக்கல் வேண்டும்.

பண்டைக் காலத்து வழங்கி இஞ்ஞான்று வழக்கு வீழ்ந்த பல சொற்களையும் துருவித் தங்கள் நுண்ணறிவையும், பழந்தமிழ் நூல்களையும், தமிழினின்று பிறமொழிச் சொற்களையும் துணையாகக் கொண்டு உண்மைப் பொருள் காணல் வேண்டும். சில சொற்களுக்குப் பொருளறியாமையால் தங்கையையோ மகளையோ மனைவி யாக்கிவிடுகின்றனர்; இருவரை ஒருவராக்கி விடுகின்றனர். பதிற்றுப்பத்தின் பதிகங்களைப் பாடிய ஆசிரி

யர் எல்லாப் பதிகத்தினும் அவ்வவ்வரசரின் மனைவியரை அவர்தம் தந்தை பெயரைக் கூறி இன்னர் மகள் (தேவி, வேண்மாள்) என்றே குறித்துள்ளார் ; ஏழாம்பத்தின் இறுதிப் பதிகத்தின் மட்டும் அவ்வாறு கூறாமல் "அந்துவற் கொரு தந்தை யீன்ற மகள்" என்று கூறினர். ஏன் இவ்வாறு கூறினர்? வேறோரிடத்து இவள் தந்தை பெயரைக் கூறி யிருப்பாராகை யாற்றான் ஈண்டுக் கூறாது விடுத்தன ரென்று நினைக்க இடனுண்டு. இரண்டாம் பத்தின் பதிகத்தில் இமயவரம்பன் தந்தை தாய் பெயர் கூறினமையால் அவன் தம்பியைக் குறித்த மூன்றாம் பத்தின் பதிகத்தில் தந்தை தாய் பெயர் கூறாது விடுத்தமையே இதனை வலியுறுத்தும். இனி அந்துவன் என்ற சொல்லே துணையாகக் கொண்டு மேற்கூறப்பட்டவள் யாரென்பதை ஆராய்தல் வேண்டும். ஒன்பதாம் பத்தின் பதிகத்தில் "அந்துவஞ் செள்ளை" என்று ஒரு பெயர் காணப்படுகின்றது. செள்ளை யென்ற சொற்குப் பொருள் நிகண்டு அகராதிகளில் இல்லை. தெலுங்கில் செல்ல என்ற சொல் தங்கையைக் குறிக்கும் முறைப்பெயராக வழங்கப்படுகிறது. இப்பொருளே செள்ளை என்பதற்குப் பொருளாக இருத்தல் கூடும். எனவே, அந்துவஞ்செள்ளை என்பதற்கு அந்துவன் என்பானது தங்கையென்பதே பொருள். ஒன்பதாம்பத்தி னிறுதிப் பதிகத்தில் "மையூர் கிழான் வேண்மா ளந்துவஞ் செள்ளை" என்று தந்தை பெயர் கூறலாற்றான் முதற்கட்கூறாமல் "அந்துவற்கொரு தந்தை யீன்ற மகள்" என்றனர். பொறையன் பெருந்தேவி இவளென்பது பதிகத்தால் விளங்கவும் இவளை மையூர் கிழான் மனைவி யென்றும் அந்துவஞ்சேரல் மனைவி யென்றும் கூறல் பெரிதும் பிழைபாடாம். இவள் அந்துவற்குத் தங்கை யென்றும் பொறையற்கு மனைவி யென்றும் விளங்கலான் "மையூர் கிழான் வேண்மாள்" என்பதற்கு மையூர் கிழான் மகளென்பதே பொருள். இனிச் செள்ளை யென்பதற்குப் பொருள் பெற்றே மாகலால், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்பார் காக்கை பாடினியாரின் தங்கையே என்பது திண்ணம் இதனைச் சிறுகாக்கை பாடினியார் என்ற பெயரும் வலியுறுத்

தும். இதை யுணரார் பலர். காக்கை பாடினியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் இரு பெயர்களும் ஒருவர்க்கே உரியன என்று கருதுகின்றனர். புலவர் பெருமக்களே! இன்னும் இவை போன்ற சொற்களுக்குப் பொருள் கண்டு ஆதாரவுகளுடன் வெளியிடுவதுமன்றித் தமிழிலுள்ள பெரும்பாலான சொற்களுக்கும் பகுதி யறிந்தெழுதி வெளியிடல் வேண்டும். மறைமலையடிகள் ஒரு நூலில் வேதம் என்னும் சொற்குப் பகுதியறிந்து விளக்கியிருப்பது கற்பதற்குப் பெரிதும் இன்பப் பயக்கின்றது. (தொடரும்)

ஈஷ்வர சந்திர வித்தியா சாகரர்

[பண்டிதை கண்ணம்மாள் அவர்கள்]

இந்திய மக்களிடையே மலிந்துள்ள சமூகக் கொடுமைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் வேரோடு களைய முற்பட்டவர் பலர். அவர் தத்தம் காலத்தில் ஓரளவு சீர்திருத்தத் துறையில் பாடுபட்டு மறைந்தனர். அங்ஙனம் பாடுபட்ட பெரியாரில் இராஜாராம் மோகனராய் ஒருவர், ஈஸ்வர சந்திரர் மற்றொருவர். முன்னவர் உடன்கட்டை யேறும் வழக்கத்தினையும் அதனால் ஏற்படும் கொடுமையையுங் கண்டு, அரசாங்கத்தார் உதவியினைக்கொண்டு சட்ட மியற்றி, அவ்வழக்கத்தை அடியோடு ஒழித்தார். பின்னவர், விதவைப் பெண்கள் விதவை வாழ்க்கையினை விட்டு மறுமணம் புரிந்து இன்புற்றிருக்கலாமென அரசாங்கத்தாரால் சட்ட மியற்றிப் புகழ்பெற்றார். இவ்விரு பெருமக்களுக்கும் பெண்ணுலகம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அப்பெரியார்களில் பின்னவரான ஈஸ்வர சந்திரரது இனிய வரலாற்றை ஈண்டுக் கூறுதும்.

ஈஸ்வர சந்திரர் அந்தணர். அவர் வங்காள மாகாணத்தில் ஹூக்ளி ஜில்லாவிலுள்ள வீர சிங்கம் என்ற கிராமத்தில் 1820-ம் வருடம் பிறந்தார். அவரது தந்தையார் அவ்வமயம் மாதம் பத்து ரூபாய்க்கு வேலை பார்த்து வந்தார். ஈஸ்வர சந்திரர் ஒன்பது வயது வரையில் தமது கிராமப் பள்ளியில் வங்க

பாஷையைக் கற்று வந்தார். பின்னர், தமது கிராமத்திற்கருகே யுள்ள கல்கத்தாவுக்குத் தினந்தோறும் நடந்து சென்று வட மொழிக் கல்லூரியில் படித்து வந்தார். முதல் வருடப் பரீட்சையில் முதல்வராகத் தேறியதால், அவர் உபகாரச் சம்பளம் கொடுக்கப் பெற்றார். நாளடைவில் அக்கல்லூரியில் வியாகரணம், தர்மம், வேதாந்தம், அலங்காரம், சோதிடம், தர்க்கம் முதலியன சம்பந்தமான சாத்திர நூல்களைக் கற்றுப் பரிசுகளும் பெற்றார். இவற்றோடு அமையாது, அக்காலத்து முனிசிப்புகளுக்கென நடைபெற்று வந்த பரீட்சையில் தமது பதினேழாம் வயதில் தேர்ச்சியுற்றார். அடுத்த ஆண்டு அரசாங்கத்தார் அவரை நியாயாதிபதியாக நியமித்தனர். ஆயினும் அவர் தந்தையார் சொற்படி அவ்வேலையை விட்டு, மீண்டும் கல்லூரியிற் சேர்ந்து பல்வேறு சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்து, வியாசம் எழுதுவதிலும் செய்யுள் யாப்பதிலும் பரிசுகள் பெற்றார். இந்திய தர்ம சாஸ்திரப் பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சியுற்று வித்தியா சாகரர் (கல்விக் கடல்) என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்.

ஈஸ்வர சந்திரர், பட்டம் பெற்ற பின்னர் வடமொழிக் கல்லூரியில் இலக்கண போதகாசிரியராக அமர்ந்தார். பின்னர் 1840-ல் ஆங்கிலப் பாடசாலையில் வடமொழிப் பண்டிதராக வேலை பார்த்தார். அங்கிருக்கையில், அவர் போதிய அளவு ஆங்கிலங் கற்றார். 1850-ல் பண்டித வேலையை விட்டு வடமொழிப் பள்ளி யொன்றில் தலைமை ஆசிரியராக வேலை பார்க்கலானர். அவரது கல்வித் திறத்தினைக் கண்டு மகிழ்ந்த அரசாங்கத்தார் 1885-ல் அவரை ஹூக்ளி, நந்தியா, பர்ட்வான் முதலிய ஜில்லாக்களுக்குப் பரீட்சாதிகாரியாக நியமித்தனர். அப்போது அவருக்கு மாதச் சம்பளம் 500 ரூபாய்.

ஈஸ்வர சந்திரர் தமது குன்றா உழைப்பால் தமது அதிகாரத்துக்கு உட்பட்ட ஜில்லாக்களில் பெண்பாடசாலைகளை ஏற்படுத்தினர். 'பெண்கள் படிக்கலாகாது' என்ற மூடக்கொள்கையிருந்த அக்காலத்தில் பல பாடசாலைகள் பெண்களுக்கென ஏற்படுத்தியது துணிகரச் செயல் அன்றோ? பெண்கள் முன்

னேற்றத்தில் எத்துணைப் பேரவாக் கொண்டிருப்பின், அப் பெரியார் அவ்வரிய செயலைச் செய்திருப்பர்! அப்பெரியாரால் ருன் இந்திய நாட்டுப் பெண்ணுலகம் பெருமை பெற்றதென்றே கூறுதல் அமையும்.

இங்ஙனம் அவர் வேலை செய்து வருகையில், கல்வி இலாகா அதிகாரி கல்விக்காக ஈஸ்வர சந்திரர் செலவழிக்குந் தொகை அதிகமெனக் குறை கூறினர். இதனாலும் பிற காரணங் களாலும் அவர் தமது வேலையை இராஜினமா செய்துவிட்டார்.

ஈஸ்வர சந்திரர் கல்லூரிப் பண்டிதரா யிருக்கும்போதே விட்டல பஞ்ச விம்சதி என்ற வசன நூல் ஒன்றை வங்காளியில் எழுதி வெளியிட்டனர். அந்நூல், எளிய இனிய நடையையும் பொருட் பொருத்தமுடைய வார்த்தைகளையும் கொண்டு விளங்கினமையின், ஆசிரியர் பெயர் மாகாணமெங்கும் பரவி யது. பின்னர், வடமொழியைச் சுலபமாகக் கற்கத்தக்க சாத னங்களைக் கண்டறிந்து சில நூல்களை எழுதினர். அந்நூல்கள் வடமொழி ஆசிரியர்க்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்பட்டன. நாட்டு மக்களுக்கும் நாட்டு மொழிக்கும் பாடுபடுவதே தாம் பிறவி எடுத்ததன் நோக்கம் என்றெண்ணிய அப்பெரியார் வங்காள மொழியில் தேச சரித்திரம் முதலிய பல சிறப்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டார். சாகுந்தலம் முதலிய வடமொழி நாடகங்களையும் வங்க மொழியில் மொழி பெயர்த்தார். சொற்சுவையும் பொருட்சுவையும் ஒருங்கே யமையப்பெற்ற அவரது நூல்கள் நாடெங்கும் பரவின. பாட சாலை மாணவர் கற்கத்தக்க முறையில் நூல் பல எழுதி வெளி யிட்டார். வங்காள மாகாணம் முழுவதும் அவரது புத்தகங் களே மிளிரலாயின. ஆதலின், அவர் மாதந்தோறும் ஆயிரக் கணக்கான ரூபாய் வருமானம் பெற்றார். அவர் எழுதி உதவிய நூல்களில் நாட்டின் நன்மைக்கான பல புதிய கருத்துக்களையும் பெண் கல்வியின் அவசியத்தையும் ஆங்காங்கே செறிய வைத் துள்ளார். இங்ஙனம் அப் பெருந்தகையாளரது உழைப்பின் பயனால் வங்க நாட்டில் வடமொழியும் வங்காளியும் தத்தமக் கென பல நூல்களைப் பெற்றுச் சிறப்புறலாயின.

கல்விக்கு உழைத்த ஈஸ்வர சந்திரர் பல சீர்திருத்தங்களை யும் செய்யப் பிழைத்தா ரல்லர். கைம்பெண்கள் மறுமணம் புரியலாம் என்னும் சட்டத்தைக் கொணர்ந்துதவிய பெரியார் அவரே. அவர் பல சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து வித வைகள் மறுமணம் செய்து கொள்ளல் சாஸ்திரத்துக்குச் சம்ம தமே என்று பல ஆதாரங்களைக் காட்டி நூல் ஒன்றை வெளி யிட்டார். அந்நூல் வெளிப்போந்ததே தாமதம். உடனே நாட்டில் பெருங்கிளர்ச்சி யுண்டாயிற்று. வைதிகப் பண்டிதர் பலர் அவரது நூலையும் கொள்கைகளையும் கண்டித்துப் பல நூல்களை எழுதி வெளியிட்டனர். கூட்டங்கள் கூட்டி அவ ரோடு வாதும் புரிந்தனர். எனினும் என்? கல்விக் கடலாய ஈஸ்வர சந்திரர் முன் வைதிகப் பண்டிதர்கள் எம்மாத்திர மாவர்? அவர் பல நியாயங்களைக் கூறி, மறுமணம் நியாயமா னதே என்பதை நிலைநாட்டினர். என்றாலும், அவருடைய நண்பர் பலரும் எதிரிகளாயினர். ஆயினும், சுயமரியாதை யுடைய ஈஸ்வர சந்திரர் அவர்களைப் பொருட்படுத்தாது தமது, கொள்கைகளைப் பத்திரிகைகள் வாயிலாக நாடெங்கும் பரப்பி னர். அவரது தீவிர உழைப்பைக் கண்ட பெண் மக்கள் பலர் அவர் கருத்துக்களை ஆதரிக்க முன் வந்தனர். கற்றறிந்த பெரி யோர் பலரும் அவருக்கு ஆதரவளித்தனர். அவரது இயக்கம் பலப்பட்டவுடன் மறுமணத்திற்கு ஆதரவான சட்டம் அர சாங்கத்தாரைக் கொண்டு இயற்ற விரும்பினர். அவரது முயற் சியின் பயனாக 1856-ல் கைம்பேண் மணம் (விதவா விவாகம்) புரிந்து கொண்டவர்க்குப் பிதுரார்ஜிதமான சொத்துக்களின் உரிமை நீங்காதென்னும் பொருட்பட்ட சட்டம் ஒன்று அர சாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டம் நிறை வேறுவாறு செய்ய முயன்று, வைதிகர், பாவம்! தோல்வியும் வெட்கமும் அடைந்தனர்.

சட்டம் இயற்றியதோ டமையாது, ஈஸ்வர சந்திரர் மாதர் மறுமணத்தைப் பற்றி நாடெங்கும் பிரசாரம் செய்துவந்தார். தமது குமாரனுக்கு ஒரு விதவையை மணமுடித்து வைத்தார். சொல்பவர் செய்கையில் நடந்து காட்டினுல் அன்றோ மக்கள்

பின்பற்ற ஏதுவாகும் என்பதை ஈஸ்வர சந்திரர் நன்கு உணர்ந்தவர். விரைவில் தமது முயற்சியின் பயனாக அவர் பல மறுமணங்களை நடத்திவைத்தார். அவை யாவும் அவரது செலவிலேயே நடந்தன. மாதர் மறுமணம் என்பது சொல்லளவோடு நில்லாது, செயலிலும் புகுந்துவிட்டதை யறிந்த பலர் அவரை வெறுக்கத் தலைப்பட்டனர். அவரோடு பழகிய பெரியார் பலரும் விலகினர். அவரைக் குலத்திற்குப் புறம்பாக்கினர். என் செய்தும் என்? கருமமே கண்ணாயினர் இப்புன் செயல்களுக்கு அஞ்சுவரோ? அஞ்சா ரன்றே! நமது சுயமரியாதைப் பெரியார் அப் புன்மக்களைப் பொருட்படுத்தாது, தமது வேலையை மேன்மேலும் நடத்திவந்தார்; மாதர் இயக்கத்தைத் தோற்றுவித்தார்; ஜாதி வித்தியாசங்களைக் கண்டித்துப் பேசினர். அவரது குலத்தில் ஆடவன் பெற்றிருந்த கௌரவத்தைக் குலைத்து ஆணும் பெண்ணும், சம நிலையில் இருக்கத் தக்கவர் என்னும் உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டினர். வரதட்சணை என்னும் கொடிய பேயைத் தமது சமூகத்திலிருந்து ஓட்டப் பாடுபட்டார். பெண்களுக்குச் சிறு வயதில் மணம் செய்விப்பதைக் கண்டித்தார். அதனைச் செயலில் காட்டத் தமது பெண்களுக்கு வயது வந்த பின்னரே திருமணம் செய்துவைத்தார். பெண்கள் பொருட்டு அப்பெரியார் செய்த தியாகத்தை என்னென்பது! அவர் போன்ற மற்றோர் ஈஸ்வர சந்திரரை இந்தியத் தாய் என்று பெறுவாள்?

சுயமரியாதையும் சீர்திருத்த நோக்கமும் உடைய ஈஸ்வர சந்திரர் கருணையே உருவென வந்தவர் என்னலாம். பிறர் துயரங் காணச் சகியா அண்ணல் அவர். அப்பெரியார் அறவிலை வணிகர் அல்லர். தம் உள்ளத் தெழுந்த அன்பின் பெருக்கால் அறம் பல புரிந்தார். மன்னுயிர்த் தொண்டே இறைவன் தொண்டினும் சிறந்தது என்ற மனப்பான்மை யுடையவர். பல ஏழைக் குடும்பங்கட்குப் பொருள் உதவி செய்த புண்ணியர். தமது கிராமத்து ஏழைக் குழந்தைகள் இலவசமாகக் கல்வி கற்கப் பாடசாலை யொன்றை ஏற்படுத்தினர். தர்ம வைத்தியசாலை யொன்றையும் திறந்து வைத்தார். அவர் தமது கிராமத்துக்

குச் செல்லும்போதெல்லாம் துணிகளை வாங்கிச்சென்று அங்கிருந்த ஏழை மக்களுக்குக் கொடுத்துதவினராம். என்னே இம்மகானது கருணை! அவர் செய்த எண்ணிறந்த அறச்செயல்களில் நமக்குத் தெரிந்தன சில, தெரியாதன பல. வலக்கை புரியும் அறச்செயலை இடக்கை அறியலாகாதென்னும் கொள்கையுடைய அப்பெரியார் செய்தன எவையென்றுதாம் கூற இயலும்?

ஈஸ்வர சந்திரரது குன்றாப் புகழையும், கல்வியின் ஆழத்தையும் ஒழுக்க மேம்பாட்டையும் நன்குணர்ந்த அரசாங்கத்தார் 1890-ல் அவருக்கு ஸி. ஐ. இ. (C. I. E.) என்ற பட்டத்தை யளித்துக் கௌரவப்படுத்தினர். ஏழை மக்களோடு ஏழை மகனாய் எளிய வாழ்க்கையை நடத்தி, அடக்கமே அணிகலனாகக் கொண்ட ஈஸ்வர சந்திரர்—பெண்களின் இரக்ஷகர்—தேசப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட பெருந்தகையாளர்—1891-ம் ஆண்டு ஜுலை 29-ம் தேதியன்று கல்கத்தாவில் தமது பூதவுடலை நீத்துப் புகழுடம்பைப் பெற்றார். இத்தகையதோர் உண்மை யூழியரைப் பயந்த பாரதமாதா பேறு செய்தவளே யன்றோ?

தொல்காப்பியச் சூத்திரக் குறிப்புரை

[வித்துவான். திரு. G. தேவநேசன் அவர்கள்]

தொல்காப்பியர் அகத்தியர் மாணவரேனும் தொல்காப்பியத்திற்கும் அகத்தியத்திற்கும் பெரிதும் வேறுபா டுண்டு. மக்களுக்கு அறிவும் ஆற்றலும் ஆயுளும் மிக்கிருந்த அகத்தியர் காலத்து நூல்களில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட பல இலக்கணங்கள், அவை குறைந்த தொல்காப்பியர் காலத்தில் விரிவாகக் கூறப்பட வேண்டியவாயின. அதற்கென்றே தொல்காப்பியர்,

“ தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ண"

வேண்டியதாயிற்று. அல்லாக்கால் அகத்தியமுள்ளிட்ட முதனூலாராய்ச்சியே அமைந்திருக்கும். இதுபோதுள்ள இலக்கண நூல்கள் எல்லாவற்றுள்ளும் தொல்காப்பியம் முழுமதி போன்ற ஒரு தனிச் சிறப்பினதேனும் அதனிடத்துள்ள களங்கங்களையும் 'உண்மை யுரைத்தல்' என்னுமோர் மதம்பற்றி ஈண் டெடுத்துக் கூறுதல் இழுக்காகாது. இஃதோர் அடக்க வழுவமைதி யென்றே கொள்க.

குறிப்புகள் வருமாறு:—

1. "சகரக்கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே"
(தொல்-எழு-மொழி-சூ 29.

"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளிசகடு சட்டை சவளி—சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்
வந்தனவாற் சம்முதலும் வை"

என்பது நன்னூல் மயிலைநாதர் உரை மேற்கோள்.
(நன்-எழு-சூ 51.)

தமிழில் இதுபோதுள்ள சகர முதற்சொற்கள் நூற்றுக்கு மேற்படுகின்றன. சொற்களெல்லாம் ஆதியிலேயே அமைந்துள்ளன. ஒலிக்குறிப்புச் சொற்களும் பிற குறிப்புச் சொற்களுமே புதிது புதிதாய்த் தோன்றுவனவாம். சங்கிலி, சந்தம், சலி, சடுதி, துப்பாக்கி, குடாக்கு, கிண்கிணி, சதங்கை, மிருதங்கம் போல்வன ஒலிக் குறிப்புச் சொற்கள். (Onomatopœia). சடை, சருச்சரை, சப்பாணி, பச்சை, மதர்ப்பு, மெத்தை முதலியன பிற குறிப்புச் சொற்கள். ஆங்கிலத்தில் சொற்கள் புதிது புதிதாய்த் தோன்றுகின்றனவே யெனின், அவை பிற மொழிகளினின்றும் கடன் கொண்ட திசைச்சொற்களே யன்றிப் புதுச் சொற்களாகாவென மறுக்க. ஒருசார் திரிசொற்களும் (Derivatives) புதிதாய்த் திரிக்கப்படுவனவாம். சட்டி,

சக்கை, சண்டை, சதை, சப்பு, சமை, சரி, சற்று முதலிய செந்தமிழ்ப் பழஞ் சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் தமிழி லில்லை யென்று சொல்லுதல் எள்ளளவும் பொருந்தாதென்பது அவற்றின் பொருளை ஆராய்வார்க்கு எளிதிற் புலனாகும்.

2. "குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்"

(தொல்-எழு-மொழி-சூ. 34.)

என ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வாறு குற்றிய லுகரம் மொழிக்கு முதலாம் என்றாராலோ வெனின்,

"நுந்தையுகரங் குறுகி மொழி முதற்கண்
வந்ததெனி னுயிர்மெய் யாமனைத்துஞ்—சந்திக்
குயிர்முதலா வந்தணையு மெய்ப்புணர்ச்சி யின்றி
மயலணையு மென்றததனை மாற்று"

இதை விரித்துரைத்து விதியும் அறிந்துகொள்க" என்பது நன்னூல் மயிலைநாத ருரை.

(நன்-எழுத்-சூ. 51.)

3. "மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃதென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன"

(தொல்-சொல்-எழு-மொழி சூ. 49.)

என்று எகின், செகின், எயின், வயின், குயின், அழன், புழன், புலான், கடான் என வரும் ஒன்பதும் மயங்காதனவெனக் கொள்ளின், பலியன், வலியன், வயான், கயான், அலவன், கலவன், கழுழன், மறையன், செகிலன் முதலாயின மயங்கப் பெறுவென மறுக்க" என்பது நன்னூல் மயிலைநாத ருரை

(நன்-எழு-சூ. 67)

4. "ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்த பகரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகரம் ஆகும்"

(தொல்-எழு-குற்-சூ. 40.)

ஒன்பதிற்கு முதலாவது வழங்கின பெயர் தொண்டு என்பது. தொண்டு+பத்து=தொண்பது—தொன்பது—ஒன்பது ஒன்பது=90. எழுபது எண்பது ஒன்பது என்று ஒப்பு நோக்குக.

தொண்டு+நூறு=தொண்ணூறு=900. எழுநூறு, எண்ணூறு, தொண்ணூறு என்று ஒப்பு நோக்குக.

தொண்டு+ஆயிரம்=தொள்ளாயிரம்=9000. எழாயிரம், எண்ணாயிரம், தொள்ளாயிரம் என்று ஒப்பு நோக்குக.

தொண்டு என்னும் பெயர் எங்ஙனமோ தொல்காப்பியர் காலத்தில் உலக வழக்கற்றது. ஆயினும் செய்யுள் வழக்கிலிருந்தது. தொல்காப்பியரே தம் நூலில் தொடைத் தொகை கூறுமிடத்து,

"மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்பஃதென்ப உணர்ந்திசி னோரே"

(செய்—சூ. 101.)

என்று கூறியுள்ளார்.

தொண்டு என்னும் ஒன்றாம் தானப் பெயர் மறையவே பத்தாம் தானப் பெயர் ஒன்றும் தானத்திற்கும் நூறும் தானப் பெயர் பத்தாம் தானத்திற்கும், ஆயிரத்தாம் தானப் பெயர் நூறும் தானத்திற்கும் கிழிறங்கி வழங்கத் தலைப்பட்டன. பின்பு ஆயிரத்தாம் தானத்திற்கு ஒன்பதாயிரம் என்ன வேண்டியதாயிற்று. சொற்படி பார்ப்பின் ஒன்பதினாயிரம் 90 × 1000=90000 ஆகும்.

ஒன்று முதல் பத்து வரை ஏனை யெண்ணுப் பெயர்களெல்லாம் தனி மொழிகளாகவும் ஒன்பது மட்டும் தொடர் மொழியாயு மிருத்தல் காண்க. தொன்பது என்னும் பெயரே முதன்மெய் நீங்கி ஒன்பது என வழங்கும். தெலுங்கில் முதன் மெய் நீங்காது தொமிதி எனவே வழங்குகின்றது.

(தொடரும்)

தாமஸ் எடிசன் மாண்டார்

உலகத்திலே விஞ்ஞானக் கலையில் பேர் ஆராய்ச்சியாளராய் விளங்கி, மின்சார விளக்கு, தந்தி, டெலிபோன், கிராமபோன், மின்சார ரயில், சினிமா முதலிய ஆயிரக் கணக்கான புதுமைகளைக் கண்டுபிடித்து உலகத்துக்குப் பேருதவி புரிந்த தாமஸ் ஆல்வா எடிசன் அமெரிக்காவில் 18-10-31 ஞாயிற்றுக் கிழமை காலை 3-34 மணிக்குத் தமது பருவுடல் நீக்கிப் புகழுடம்பில் விண்ணுலகெய்தினர் என்ற செய்தி கேட்டு உலகமெல்லாம் பெரிதுந் துன்புற்றது.

இவரது வாழ்க்கைக் குறிப்புகள்

18-10-31-ல் காலஞ் சென்றுவிட்ட திரு. தாமஸ் ஆல்வா எடிசன் என்பாருடைய வாழ்க்கையின் முக்கியமான குறிப்புகளைப் பற்றி அவருடன் நெருங்கிப் பழகிய திரு. ஆர்தர் பிரிஸ்பேன் என்பார் ஒரு சிறந்த கட்டுரை எழுதி யிருக்கிறார். இது, மேற்படிப் பெரியார் இறக்குந் தறுவாயி லிருக்கையில் எழுதியதாகும். இதன் சாரம் வருமாறு:—

திரு. எடிசனது உயிர் சிக்கிரத்தில் போய்விடுமென்று அவருடைய மருத்துவர்கள் கருதுகிறார்கள். அவர் உடல் வலிமை குன்றிக்கொண்டு வருகிறது. அதனுடன் அவர் உலகத்திடையே கொண்ட ஊக்கமும் குறைந்துவிடும். பல்லாண்டுகளுக்கு முன்னர் திரு. எடிசன் இங்கிலாந்துக்கு வந்திருந்தபோது அவ்வரை அன்புடன் வரவேற்ற இங்கிலீஷ்காரர்கள் எப்பொழுதும் அதை மறக்கமாட்டார்கள். இந்தச் சமயத்தில் அமெரிக்கர்களுடைய எண்ணங்களெல்லாம் எடிசனிடத்திலேயே இருக்கின்றன. எடிசனது வாழ்க்கை முழுவதும் பொதுநன்மைக்காகவே செலவழிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. இவருடைய ஆராய்ச்சியினால் உலகத்திற்கு உண்டாயிருக்கும் நன்மைகள் பல. அமெரிக்கப் பெரியார்களில் லின்கனுக்கு அடுத்த பதவியை எடிசன் வகிக்கிறார். லின்கனே, வாஷிங்டனுக்கு அடுத்தபடியான நிலையை வகித்திருந்தார். வாஷிங்டன்,

தமது நாட்டுக்குச் சுதந்திரத்தைச் சம்பாதித்துக் கொடுத்தார். லின்கன் தமது நாட்டின் ஐக்கியத்தை நிலைநிறுத்தினர். எடிசனே, தமது நாட்டிற்கு வெளிச்சத்தை அளித்தார்; கைத்தொழில் வளத்தையும் அளவற்ற நிதியையும் அளித்தார்.

* * *

'இருட்டை ஓட்ட மின்சார விளக்கு எங்கும் எரியட்டும்' என்று எடிசன் கருதினர். அப்படியே உண்டாயிற்று. எல்லாக் காரியங்களுக்குஞ் "சப்ளை" செய்யக் கூடியவாறு மின்சார உற்பத்தி நிலயங்களை நிலைநிறுத்தியவர் எடிசனே யாவார். இது தவிர, டெலிபோன், கிராமபோன், பயாஸ்கோப் முதலிய அனைத்தையும் எடிசனே கண்டுபிடித்தார். எடிசன், மின்சார உபயோகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து வெளியிடுவதற்கு முன்னர், மின்சாரம் என்பது விளக்கேற்றக் கூடிய ஒரு சக்தி என்று மட்டும் சிலருக்குத் தெரிந்திருந்தது. அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் மட்டும் இந்த மின்சாரத் தொழிலில் இப்போது எட்டு லட்சம் பேர் வேலை செய்கின்றனர். இவர்கள் பெறும் சம்பளம் வருஷத்தில் 200,000,000 பவுனுகிறது. இவர்கள் உத்தியோகத்திற்கும், பெறும் ஊதியத்திற்கும் எடிசனே காரணராவர்.

* * *

எடிசனுக்குக் காது செவிடு. தமது செவிப்புலன் மந்தமாயிருப்பது, தமக்குப் பல விதங்களில் அநுகூலமா யிருப்பதாக அவர் கூறுவார். ஏனெனின் பிறருடைய வார்த்தைகளைக் கேளாமல், தமது மனோ உலகில் நிம்மதியாகச் சஞ்சரிப்பதற்கு இது பெரிதும் அநுகூலமா யிருந்தது. எடிசனுல் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மெஷினை, ருஷ்யாவிலிருந்த டால்ஸ்டாயின் உபயோகத்திற்கு நான் அனுப்பினேன். அதை யறிந்த திரு. எடிசன் ஒரு பொற்றட்டில் தமது பெயரையும் பொறித்து அதனுடன் அனுப்பினர். அதற்குப் பதிலாக டால்ஸ்டாய் எழுதியிருந்த ஒரு கடிதத்தில், தம்முடைய எழுபதாவது வயதில், மிகுந்த குறைவான சிரமத்துடன், இந்த மெஷினின் உதவி

யைக் கொண்டு எழுத முடிவதைக் கண்டு தாம் பெருமை பாராட்டிக் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். எடிசன் தமது ஆராய்ச்சிக்கு வேண்டிய பணம் பெறுவதோடு நின்று விட்டாரன்றி, அதிக பணம் குவிக்கவேண்டு மென்று அவர் ஆசைப்படவே யில்லை. உலகத்தில் மிகப் பெரிய பணக்கார ரென்று கருதப்படும் ஸ்ரீமான் ஹென்ரி போர்ட் என்பார், எடிச னின் முக்கிய நண்பரா யிருந்தார். எடிசன் கண்டுபிடித்த கருவிகளையும், அவர் உழைத்த ஆராய்ச்சிச் சாலையையும் ஒருங்கு சேர்த்து ஓரிடத்தில் பொருட்காட்சிச் சாலையாக ஸ்ரீமான் போர்ட் வைத்திருக்கிறார். எஃகைத் தூளாக்கி அதைத் தண்ணீரில் மிதக்கக்கூடிய வகையில் எடிசன் ஒரு கருவியைக் கண்டுபிடித்தாரென்றும், இதற்குப் பன்னிரண்டா யிரம் பவுன் செலவாயிற்றென்றும், தமக்கென்று ஒன்றும், எடிசனுக்காக ஒன்றும் ஆக இரண்டு மெஷிஷன்களைத் தாம் வாங் கியதாகவும் ஸ்ரீமான் ஹென்ரி போர்ட் கூறினர். எடிசனிடத் தில் வேறு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும், நிரம்பிய ஆராய்ச்சி வன்மையும் திடமான மனோ சக்தியும் பூரணமாக இருந்தன. தமது ஆராய்ச்சிகளை நடைமுறையில் கொணர இவர் சிறந்த ஆற்றல் வாய்ந்தவரா யிருந்தார். இவர் சிறு பைய னாக இருந்த போது, தந்தி அடிக்கும் தொழில் செய்துகொண் டிருந்த போது, "ஒரே தந்தியில் ஏன் இரண்டு செய்திகளை அனுப்பக் கூடாது" என்று யோசித்து, அதைக் கொண்டு ஆராய்ச்சிசெய்து வெற்றி பெற்றார். இலக்ஷக் கணக்கான தொழி லாளர்கள், மாணுக்கர்கள் முதலியோர் இவருடைய ஆராய்ச்சி யால் நன்மை யடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. எந்த உலகத்திற்கு வெளிச்சத்தைத் தந்தா ரோ, அந்த உலகத்தினின்று பிரிந்து, அகண்ட வெளிச்சமா யுள்ள உலகத்திற்கு அவர் செல்கிறார்.



திருக்காளத்தி உள் மதிற் கோபுரம்



திருக்காளத்தி சொர்ண முகி

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ } மேய்கண்டான் யாண்டு-எாகூ கார்த்திகை திங்கள் 1931ஆ நவம்பர்மூ—டிசம்பர்மூ { பரல் கக

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானு முன்னேது மறிந்திலன்
என்னைத் தன்னடி யானேன் றறிதலும்
தன்னை நானும் பிரானேன் றறிந்தேனே.

பதவுரை:—

முன் =சிவபெருமான் எனக்குத் தலைவன் என்று நான் அறியுமுன்

என்னை=நான் என்னை

ஏதும் அறிந்திலன்=சிறிதும் அறியவில்லை;

எம்பிரான் தன்னை=அதனால் என்னை ஆளுந் தலைவனாகிய சிவபெருமானையும்

ஏதும் அறிந்திலன்=சிறிதும் அறியவில்லை;

என்னைத் தன்னடியான் என்றறிதலும்=ஆனால் என்னைத் தலைவனாகிய சிவபெருமானுக்கு அடிமை என்று அறிந்த உடனே

தன்னை=அச் சிவபெருமானை

நானும்=(சிறியேனாகிய) நானும்

பிரான் என்று அறிந்தேனே=என்னுடைய தலைவன் என்று அறிந்து கொண்டேன்.

விளக்க உரை:—

ஏதும் அறிந்திலேன்=ஒன்றும் அறியவில்லை.

பிரான்=ஆண்டான்; தலைவன்; எப்பொருட்குந் தலைவனாகிய சிவ பெருமான்.

" அவ னெம்பிரானென நானடியானென விப்பரிசே
புவ னெம்பிரான் றெரியும் பரிசாவ தியம்புகவே "

என்றும் திருவாசகம் திருச்சதகம் பாட்டில் பிரான் என்பது தலைவன் என்ற பொருளில் வருதல் காண்க.

அறிதல் என்பது ஒருவன் ஆண்டானாகிய சிவபெருமான் தன்னுடன் இரண்டறக் கலந்திருத்தலை நேரே தன்னறிவிலே அருள் ஒளி விளங்கலால் அறிதல்.

இரண்டாவது அடியில் உள்ள 'தன்னை' யென்பது அசைநிலை.

மூன்றுவது அடியிலும் நான்காவது அடியிலுமுள்ள 'தன்' சிவபெருமானைக் குறிக்கின்றது. "தமையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" என்னும் சிவஞானபோதம் அவையடக்கப் பாட்டில் 'தன்' என்பது சிவபெருமானைக் குறித்தல் காண்க.

இத் தேவாரப் பாட்டு கடவுளுக்கும் உயிருக்குமுள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பு கூறுகின்றது. இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பினால் சிவபெருமான் உயிரினுடன் இரண்டறக் கலந்து அது நலம் அடையுமாறு வேண்டுவன செய்து ஆண்டுவருகின்றான். ஆண்டான் அடிமைத் தொடர்பு என்றும் உள்ளது. ஆனால் உயிர் கட்டுக் காலத்தில் அதனை அறிதலில்லை. அப்பொழுது அத்தொடர்பு பொதுத் தொடர்பு என்று கூறப்படும். இந்தப் பொது அடிமைத் தொடர்பில் பகுத்தறிவுடைய மாந்தர் தங்களைச் சிவபெருமான் ஆண்டுவருதலை அறியாதிருத்தலுக்கு அவர்கள் தங்கள் உயிரினியல்பை அறியாது தத்துவங்களாலாகிய உடலையே தாங்கள் எனக் கொள்ளுதல் காரணமாகின்றது. பொது அடிமைத் தொடர்பினுள்ள இந்த அறியாமை நிலை 'அறிந்திலன்' என்று முதல் இரண்டு அடிகளிலுங் கூறப்பட்டது.

பின் "தாமறிவார் அண்ணல் தாள் பணிவார்" (திருமந்திரம் 251) என்று திருமூலர் கூறியபடி மாந்தர் சிவபெருமானை வழிபட்டதன் பயனாகத் தத்துவங்களின் இயல்பை அறிந்து அவைகள் வேறு தமது

உயிர் வேறு என்று பிரித்துத் தத்துவங்களை உயிர் அறிகின்றது என்று உயிரினியல்பை அறிகின்றார்கள். அப்பொழுது அவர்கள் சிவபெருமானுடைய வேட்கை அறிவு செயல்கள் தங்களுடைய அறிவு வேட்கை செயல்களில் நிறைந்திருத்தலையும் (வியாபித் திருத்தலையும்) சிவபெருமானுடைய அறிவு வேட்கை செயல்களுக்குள் தங்களுடைய அறிவு வேட்கை செயல்கள் அடங்கியிருந்து அறிதலையும் (வியாப்பியமாயிருந்து அறிதலையும்) அறிகின்றார்கள். இந்த அறிவு ஆண்டான் அடிமைத் தொடர்பு பற்றிய சிறப்பு அறிவாகும். இந்தச் சிறப்பு அறிவையே "அறிதலும்" என்றும் "அறிந்தேனே" என்றும் சுவாமிகள் பின் இரண்டு அடிகளில் கூறுகின்றார்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

திருவாசகமும் பரஞ்சோதி முனிவரும்

[திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்]

(௬௫௪-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் அடிகள்

"போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும்
ஏகநின் கழலிணை யலாது."

என்பதனால் அத் திருவடிப் பேற்றையன்றித் தமக்கு வேறு பற்றில்லை என்பதையும்,

"இரவும் பகலு மெழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொலோ"
"பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொலோ"

என்பவற்றால் அப் பேறு தமக்கு என்றுன்று கிட்டுமோ வென வருந்தியதையும்,

"உன்றிரு மலர்ப்பாதம் அடைந்து நின்றிடுவா
னாசைப் பட்டேன் கண்டா யம்மானே"

என்பதனால் அதிற் றமக்குள்ள ஆசையையும்,

"தருக நின்பாதம் போற்றி"

"ஆர்த்த நின்பாதம் நாயேற் கருளிடவேண்டும்"

என்பவற்றால் அப் பேற்றுக்கு ஆண்டவனைத் தாம் மன்றாடிக் குறையிரந்து வேண்டினமையையும்,

"நின்திருவடிக்காம் பவமேயருளு கண்டாய்"

என்பதனால் 'இப் பிறவி அதனைப் பெறுதற்குத் தகுதியுடைய தன்றேல், அடுத்த பிறவியையாயினும் அதற்கு வாய்ப்புடைத் தாக அருளவேண்டும்' என விரும்பிக் கேட்டுக்கொண்டமை யையும் விளக்கியருளுகின்றார்.

இன்னும், அத் திருவடிக்குள்ள பேரருளை விளக்குமுகத் தால்,

" வண்ணந்தானது காட்டி வடிவு காட்டி
மலர்க்கழல் களவைகாட்டி வழியற்றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்"

என, வண்ணம், வடிவு என்னுமிரண்டையும் காட்டினாலும், மலர்க் கழல்களைக் காண்பித்த பின்னர்த்தான் தமது பிறப்புத் தொலைந்தது என்பதைக் குறிப்பித் தருளினர். இங்கு "வண் ணந்தானது காட்டி..................கொண்டாய்" என்பதனால் பேரொளி மயமான பெம்மான் வெளிப்பட்டுத் தன்னருட்டிரு வுருவத்தைக் காட்டிய உண்மையை அடிகள் குறிப்பிடுவது கரு தத் தக்கதாகும். அஃது எங்ஙனமெனிற் கூறுதும்:—

மக்களின் காட்சிக்கும் கடவுளின் காட்சிக்கும் ஒரு பெரிய வேற்றுமை யுண்டு. மக்கள் சேய்மையிற் காணப்பட் டால் முதலில் அவர்தம் உருவமும், சிறிது நெருங்கியபின் உறுப்புக்களும், அண்மையில் வந்தபின் நிறமும் தோன்றுகிற் கும்; இனி, கடவுளின் காட்சியிலோ முன்னர் ஒளியும், பின் வடிவமும், அதன்பின் உறுப்புங் காணப்படும். அடிகள் உண்மையாகவே இறைவனைக் கண்டு களித்தவ ராகலின், அவ் வுண்மையை 'வண்ணந்தானது காட்டி' என முதலில் ஒளியைக் கூறி, 'வடிவு காட்டி' எனத் திருவுருவத்தைச் செப்பி, 'மலர்க் கழல்களவை காட்டி' என இறுதியில் இறைவனது அருளு

றுப்பும் தமக்கு இன்ப மளித்ததுமாகிய பொன்னடியைப் புகன்றதால் விளக்கியருளினர்.

இவ்வாறு ஆண்டவனருள் வடிவத்தையும், திருவடியையும் தாம் கண்ணாரக் கண்டு களிப்பெனுங் கடலுள் ஆழ்ந்தது பற்றி அடிகள் திருவாசகத்திற் கூறியருளிய பகுதிகள் அளவிறந்தன; அவற்றுட் சில

திருவுருவக் காட்சி

"கண்ணுலியானுங் கண்டேன் காண்க"

"உண்டொ ரொண்பொருளென் றுணர்வார்க் கெலாம்
பெண்டிராணலி யென்றறி யொண்கிலை
தொண்டனேற் குள்ளவாவந்து தோன்றினாய்"

"அடியோங் கண்ணார வந்து நின்றான்"

"திகழாநின்ற திருமேனி காட்டி யென்னைப் பணிகொண்டாய்"

திருவடிக் காட்சி

(1) "மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

(2) "நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"

(3) "கண்ணார் கழல் காட்டி நாயேனை யாட்கொண்ட"

(4) "நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி"

(5) "திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனா யாண்டு கொண்டான்."

(6) "பாரிடைப் பாதங்கள் காட்டி"

(7) "கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர"

(8) "காட்டினையுன் கழலிணைகள்"

(9) "கண்ணார வுய்ந்தவா றன்றேயுன் கழல்கண்டே"

(10) "பாதமலர் காட்டியவா றன்றே"

(11) "ஒண்மலர்த்தாடந்து"

(12) "தன் பொன்னடியிணை காட்டி"

(13) பொற்கழலிணை காட்டி"

(14) "மென்மலர்க் கழல் காட்டி"

(15) "மலரடியிணை காட்டி"

(16) "விரைமலர்க் கழல் காட்டி"

(17) "தன்னிணை மலர்க்கழல் காட்டி"

(18) "நீ கண்டு கொள்ளென்று காட்டிய சேயமா மலர்ச் சேவடி"

(19) "கருணை காட்டித் தன் கழல் காட்டி"

(20) "நின்னரு ளளித்துன் னிணை மலரடி காட்டி"

(21) "நின்னுமலர்க் கழல் தந்து"

(22) "பெரியோ னொருவன் கண்டுகொள் ளென்றுன் பெய்கழ லடி காட்டி"

என்பன.

இவற்றுள், முன் பின்னுள்ள அடித் தொடர்ச்சியால் ஒன்று முதலிய எண்ணுள்ள சில தொடர்களும், "என் பிறவி கெட்டின் றழிகின்ற தாக்கிய தாள்" என்னுந் திருக்கோவையார்த் தொடரும் "திருவடி கண்ட பின்னரே பிறவி அற்றது' என மேலே காட்டியதனை விளக்குதல் காண்க.

இன்னும் அடிகள் தகுதியற்ற தம்மை ஆட்கொண்டதனுற் ருன் ஆண்டவன் திருவடி, தன்னருட் டிறமையைக் காட்டிய தென்னும் பொருள்பட, "எனையுய்யக் கொண்ட பிரான்றன் னுண்மைப் பெருக்கமாந் திறமை காட்டிய சேவடி" எனக்கூறியும், "அங்கணை னந்தண னயறை கூவி வீடருளும், அங் கருணை வார்கழல்" என அருளியும் அத்திருவடியின் பேரருளை விளக்கியருளினர்.

அத் திருவடியின் பேருருளுடைமையை வியந்து கூறுமிடத்து, "பெற்ற தாயின் தன்மை போல்வது நின் தன்மை என்பேன்; அதற்கு ஏர்பவே மகவு அழுங்காலை இன்றியமையாப் பணியின்கண் ஈடுபட்டிருக்குந் தாயானவள் வருதற்குச் சிறிது காலந்தாழ்ப்பது போல, நீயும் யான் அழுதால் வருதற்குச் சிறிது காலந் தாழ்த்துவாய்; எனினும் நின் திருவடிகள் அவ் வழுதலைப் பொருவாய் வந்து எற்கு இன்னருள் பாலிக்கும்" என்ற பொருளையமைத்து,

"பெற்றிடுதாய் போல்வதுநின் பெற்றியென்பேன் பிள்ளையது
மற்றழுதாற் கேட்டும் வராதக்கே—சற்றிருக்கப்

பெற்றாள் பொறுப்பள் பிரானீ பொறுக்கினுநின்
பொற்றாள் பொறுவென் புலம்பு.''

என இராமலிங்க அடிகள் இயம்பியது இங்கு எண்ணி இன்புறத் தக்கதாகும்.

'அழுதலை ஆண்டவன் திருவடிகள் பொறு' என்பது இங்குக் கருதத்தக்கதாகும். இவ்வாறு அத் திருவடிகள் பேரருளைக் கொண்டிருந்தமையாற்றான், அடிகள் ஆண்டவன் பிரிவுக்கும் அத்துணை வருந்தாது, அவன் திருவடிப் பிரிவுக்கே பெரிதும் வருந்தி,

''விரைமலர்த் திருப்பாத
முற்றிலா விளந்தளிர் பிரிந்திருந்து நீ யுண்டனவெல்லா முன்
அற்றவா றுநின்னறிவு நின்பெருமையும் அளவறுக்கில்லேனே''

எனவும்,

''முனைவன்பாத நன்மலர் பிரிந்திருந்து நான்
முட்டிலேன் றலைகீறேன்
இனையன் பாவனை யிரும்பு கன் மனஞ்செவி
யின்னதென் றறியேனே''

எனவும்,

''எல்லையில் கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகை மனத்தேன்''

எனவுங் கூறியருளுகின்றார்.

இன்னும் அடிகள், முன்னர்த் திருவடி காட்டிய உண்மையை,

''நின் விரை மலர்த்தாள், பண்டு தந்தாற்போற் பணித்து''
''கழுமணியே யின்னுங் காட்டுகண்டாய் நின்புலன் கழலே''

என்று கூறுமாற்றால் நன்கு விளக்கியருளுகின்றார். என்னை? 'பண்டுதந்தாற்போல்' என்றும், 'இன்னுங் காட்டு' என்றும் வருவனவற்றா லென்பது.

''அவன் பூங்கழல்யாம், பேசத்திருவார்த்தையிற்
பெருநீளம் பெருங்கண்களே''

எனக் கோவை கூறும் நமது அடிகளின் திருவாய்,

"பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே"

என வாசகம் அருளியது மாண்புடைத்தாகும்.

இனி, திருவாசக இறுதியிலுள்ள 'அச்சோப்பத்தில்,

தையலிடங் கொண்ட பிரான்றன் கழலே சேரும் வண்ணம்"

எனவும்,

"மாதொருகூ றுடைய பிரான்றன் கழலே சேரும் வண்ணம்"

எனவும் அடிகள் அருளுமாற்றல் அடியடைந்தது நன்கு புலனுதல் காண்க. 'திருவெம்பாவை' முழுவதிலும் திருவடி பேசப் பட்டிருத்தலும், அதன் இறுதிப் பாட்டில் 'ஐந்தொழிலேயும் அவன் திருவடியே நடத்துகின்றது' எனக் கூறப்பட்டிருத்த லுங் காண்க. திருவாசகத் தொடக்கத்தில் சிவபெருமான் திருவடிக்கு வாழ்த்துக் கூறுவதும் எண்ணி இன்புறற்பாலது.

மேற்காட்டிய அகச்சான்றுகளால் நமது 'அழுதடி யடைந்த அன்பர்' ஆண்டவன் அடிப்பேறு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து, இறுதியில் அதனையே அடைந்தமை வெள் ளிடை மலையென விளங்குதல் காண்க.

3. அன்பர்

பெரியார் ஒவ்வொருவருக்கும் ஏற்றம் வருவது ஒவ்வொரு காரணம் பற்றியேயாம். அடிகளின் பெருமை அனைத்திற்குங் காரணம் அவர் ஆண்டவன் அடியிணை மலர்க்கண் வைத்த மெய்யன்பு ஒன்றேதான். இவ்வுண்மையை, துறவுநிலையாற் பெருமை யடைந்தவ ரெனக் கருதி, "பாரனைத்தும் பொய்யென வே பட்டினத்துப் பிள்ளையைப் போல், ஆருந்துறக்கை யரி தரிது" எனத் தாயுமான அடிகளாற் போற்றப்பட்ட பட்டி னத்தடிகள் "திருவிடை மருதூர் மும்மணிக் கோவை'யில்

"வித்தகப்பாடன் முத்திறத்தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்"

எனக் கூறுமாற்றல் விளக்கியருளினர்.

இனி, உமாபதிசிவனர் பாடியதாக வழங்கும் "வள்ளுவர் சீரன்பர் மொழி வாசகம்' என்னும் வெண்பாவில் அடிகள்

வேறு பெயராற் குறிக்கப்படாது, 'அன்பர்' என்றே குறிக்கப் பட் டிருத்தல் காண்க.

இன்னுங் கற்பனை ஊற்றாகிய சிவப்பிரகாச அடிகள், "வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப!" என்றும்,

"செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப!"

என்றுங் கூறி யருளினமையுங் காண்க.

இன்னும், அவர் ஓர் அன்பர் என்பதற்கு அவ ரியற்றியரு ளிய 'திருவாசகம்' ஒன்று போதாதோ? பிற சான்றும் வேண்டுமோ? 'திருவாசகத்தி லுருகார் ஒரு வாசகத்திலு முருகார்' என்பது நமது நாட்டுப் பெரியார்களால் பல்லாண்டுகளாக வழங்கப்படும் பழமொழி யன்றோ? அவர் அன்பராக இல்லாவிடின் அவர் வாசகம், தன்னைப் படிப்போரையும் கேட்போரையும் எங்ஙனம் அன்பராக்கும் வன்மை யுடையதாகும்? ஒருவன் தன் பழக்கத்தி லில்லாத தொன்றைக் கூறினனாயின், அக் கூற்றுக்கு மக்களைத் தன் வழிப்படுத்தும் ஆற்ற லிராதென்பது அறிஞர் கண்கூடாகக் காணும் உண்மை யன்றோ? இற்றை நாட் பெரியா ரொருவர், "என் அநுபவத்திற்குக் கொண்டு வந்து நன்மை தீமை பாராத எதனையும் யான் மக்களுக்குச் சொல்லுவ தில்லை" எனக் கூறும் பொன்மொழி போற்றத்தக்க தன்றோ! "கற்றுப் பிறர்க்குரைத்துத் தாமில்லார் வாய்ப்படூஉம் வெற்றுரை" என்பது குமரகுருபர அடிகள் கோதில் மொழியன்றோ? அன்பின் ஊற்றுக்கு நிலைக்களனாகிய திருவாசகத்தின் பெருமையை அவ்வன்பு அணுத்துணையு மில்லாப் பேதையாகிய யானோ அறிந்து எழுதவல்லுநன்? "பாம்பறியும் பாம்பின கால்" என்பது போலப் புலவனைப் புலவன் அறிவான்; அன்பனை அன்பன் அறிவான்; யோகியை யோகி அறிவான்; ஞானியை ஞானி அறிவான்; ஏனையோர் 'அறிந்தோம்' என்பது பேதமை யன்றோ! அங்ஙனம் அறியினும் அஃது ஒரு சிறிய கூறன்றோ? திருவாசகப் பெருமையை அறிந்தோர் யார்? கவிச்சிங்கமாகிய 'சிவப்பிரகாச அடிகள்' அறிந்

தார்; அன்பு வடிவாகிய 'இராமலிங்க அடிகள்' அறிந்தார்; மேனுட்டறிஞராகிய 'ஜீ. யூ. போப்' என்பார் அறிந்தார்; பிற அறிஞர் பலர் அறிந்தனர், அறிகின்றனர், அறிவர்.

இவர்கள் அறிந்து எவ்வெவ்வாறு அடிகளையும் திருவாசகத்தையும் பாராட்டினர் என விரிக்கிற் பெருகுமாதலின் அஞ்சி விடுக்கின்றேன்.

மேற்காட்டிய வாற்ருல் நமது அடிகள் ஒரு 'அன்பர்' என்பது நன்கு புலனுகும்; ஆனல், 'அழுதல் ஒரு சாதனமா? அடியடைந்தாரா?' என்னும் இரண்டு பகுதிகளும் திருவாசகத்திலுள்ள ஆதாரவுகளைக் கொண்டே 'ஆம்' என்று நிறுவப்பட்டன. என்னை ? "திருவாசகப் பயிற்சி மிகுதியால் பரஞ்சோதி முனிவரென்பார் திருவிளையாடலில் அடிகளை 'அழுதடியடைந்த அன்பர்' எனக்கூறினர்" என முன் குறித்தலாலென்க.

இனி, "அவையிற்றைப் போன்றே இந்த 'அன்பர்' என்ற பகுதியை நிறுவுதற்கும் மேற்காட்டிய புறச்சான்றுகள் போதா; அகச் சான்றுகள் வேண்டும்" எனின், நன்று கூறினுய்! எங்ஙனம் அகச் சான்றுகள் கிடைக்கும்? ஒருவர் தம்மை ஓர் அன்பரென்ருதல், பெரியா ரென்ருதல் கூறுவாரா? அன்றிக் கருதுதல் தானுஞ் செய்வாரா? அங்ஙனம் கருதின் அவர் உண்மையான பெரியாருமாகார் அன்பருமாகார்; ஓரோவழி அவர்களிடம் அப்பெருமையும் அன்பு மிருப்பினும் அவை பறந்தோடிப் போதல் முக்காலும் உறுதி என்க. பெரியோரின் இலக்கணங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்தது, தான் 'எவ்வித நலனுமுடைய வனல்லன்; எல்லா உயிரினும் கடைப்பட்டவன்' என்று கருதுவதன்ருே? இக் கருத்து இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னுங் கால மூன்றினும் முறையே இருந்த, இருக்கின்ற, இருக்கும் பெரியா ரனைவருக்கும் ஒத்ததாகும். இஃது அவர் தம் உண்மை வரலாற்றினையும் பாட்டுக்களையும் கூர்ந்து ஆராய்வார்க்குப் புலனுவ தொன்று. அவ ரியற்றிய நூல்களை ஆராய்ந்து பார்க்கின், அவற்றின்கண் பெரும்பாலும் அவர்களின் வாழ்க்கைத் தோல்வியேதான் காணப்படும். வெற்றி குறித்த

செய்தி அரிதினும் அரிதாகும். அவ்வாறு அரிதிற் காணப் படும் வெற்றிதானும் அவர்களை யறியாது போந்ததொரு உண் மையாகும். தோல்விச் செய்தி நிறைந்து காணப்படுதற்குக் காரணம் இரண்டு: ஒன்று தமது தோல்வி அணுவாயினும் அதனை மேருமலையினும் மாணப் பெரிதாகக் கருதி, புடைபடக் கவன்று மூலநோய் தீர்க்கு முதல்வன் திருமுன்னின்று முறை யிடுதல்; இதன் பயன் ஆண்டவன் அதனை மன்னித்தலும், மறித் தும் அப்பிழை தம்மிடம் நேராமையுமாம்; மற்றொன்று, மற்ற மக்களிடத்துக் காணப்படும் தீச்செயல்களைக் கண்டு கவன்று அவற்றைத் தம்பாலேற்றிக் கூறி முறையிடலாகும். எனவே, எவ்வகையானும் தங்கள் சிறுமையையும் தோல்வியையுமே கூறு வார்களன்றி, பெருமையையும் வெற்றியையுங் கூறார்கள். பின் னுள்ளவை அவர்கட்குத் தெரிவதுமில்லை; ஒரோவழித் தெரி யினும், தாம் கோலி வரையறுத்த எல்லைக்கு அவை அணுவினும் அணுவாகத் தோன்றும். ஆனால், பிறருக்கு அவை பெரியவற் றினும் பெரியவையே. ஆதலினாற்றான் அப்பிறர் தம்மைப் புக ழும்போது,

"இல்லபுகழ்தலின் வைதலே நன்று"

என்னும் கருத்துடையவராய் அப்புகழ்ச்சியை நஞ்சினுங் கொடி தாக அப்பெரியார் நினைப்பதூஉமென்க. என்னை? அப்பெருமை யும் வெற்றியுந் தம்மிடத்து இல்லை யென்பதூஉம், அப்புகழ்ச்சி தமது தாழ்வெனுந் தன்மையைத் தொலைத்துப் பண்டமாற்றா கச் செருக்கைப் புகுத்தி விடுமென்பதூஉம் அவர் கருத்தாகலா னென்பது.

இனி, அணுவினுஞ் சிறிதாகிய தீமையை மலையினும் பெரி தாகத் தாம் கருதலினால் பிறர் இகழ்ச்சியைப் பெரிதும் அவர் அவாவுகின்றனர்; என்னை? தமக்குச் செருக்கு அரும்பா திருத் தற்கும், தமது தீமையைப் போக்குதற்கும் அஃது துணையாக நிற்குமென்பதும் அவர் கருத்தாகலின்.

இக்கருத்து முழுதுக்கும் திருவாசகத்தில் நிரம்பிய ஆதரவு களுண்டு, அவை விரிவஞ்சி விடப்பட்டன.

இனி, இங்ஙிலையி னின்றொழுகிய நமது திருவாதவூரடிக ளருளிய திருவாசகத்தின்கண் அவர் அன்பரென்பதற்கு அகச் சான்றுகள் அகப்படாவென்பது ஒருதலை. அம்மட்டுமன்றி மேற்காட்டிய காரணங்களால் அதற்கு மறுதலையாய சான்றுகள் நிறையக் கிடக்கும். அவை,

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை"

"அலவா நிற்கு மன்பிலேன்"

"நெகுமன்பில்லை நினைக்காண"

"இல்லைநின் கழற்கன்ப தென்கணே"

"நான்றனக் கன்பின்மை நானுந்தானு மறிவோம்"

"கண்ணப்பனொப்பதோ ரன்பின்மை கண்டபின்"

என்பன.

இங்ஙனம் தம்மிடம் 'அன்பில்லை, அன்பில்லை' எனப் பல படக் கூறி, ஆண்டவனை நோக்கி அந்த அன்பைத் தமக்கு அருளுமாறு திருவாசகத்தில் அடிகள் கூறுமிடங்கள் பல; அவற் றுட் சில,

"நின்றன்வார் கழற்கன்பெனக்கு நிரந்தரமா யருளாய்"

"இடையறு அன்பெனக்கென்
னுடகத்தே நின்றுருகத் தந்தருள்"

"அன்புநின் கழற்கணே, புணர்ப்பதாக"

"மெய்கலந்த அன்பரன் பெனக்குமாக வேண்டுமே"

"வேண்டுநின் கழற்கணன்பு"

"மெய்யன்பை உடையாய் பெறநான் வேண்டுமே"

"தொண்டனேற்கு முண்டாங்கொல்மிக்க அன்பே மேவுதல்"

"பெறவே வேண்டு மெய்யன்பு"

"அடியா ருனக்குள்ள அன்புந் தாராய்"

என்பன. பேரன்பராகிய நமது பெரியார் இங்ஙனம் தம்மிடம் 'அன்பில்லை' எனக் கருதிக் கவன்று, அதனைப் பெறுதற்குக் கூத்தப் பெருமான் திருமுன் குறையிரந்ததற்குக் காரணம்

என்னை? ஒருவாறு கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாச அடிகள்,

"அருங்கவிவாத வூரனேமுதலோ ரன்பிலேமென்றது வேண்டி
இரங்குதல் பொய்ம்மை அன்பிலேனென யானிரங்கலே மெய்யெனக்
[கருளாய்"

எனச் சோணசைலமாலையிற் கூறியவாறு நமது அடிகள் ஆண்டவன் திருமுன்னர்ப் பொய்தான் கூறினரோவெனின், அறுநூற்றைம்பத்தெட்டுப் பாடல்களடங்கிய திருவாசகமென்னும் ஒரு சிறிய நூலின்கண், சிறிதேறக்குறைய முப்பத்திரண்டு இடங்களிற் பொய்யைக் கடிந்து கடிந்துரைத்தருளிய நம் 'பொய்யடிமை யில்லாத புலவர்' பெருமான் 'பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே' எனத் தம்மாலழைக்கப்பட்ட சிவபெருமான் திருமுன் நின்று பொய் கூறினரெனப் புகலக் கருதுவது பொருந்துவதொன்றாகுமோ? ஆகாது; ஆகாது.

எனின், 'சிவப்பிரகாசர் கருத்து யாதாயிருக்கலாம்' என ஓர் ஐயம் நிகழுமன்றே! அதனை அகற்றுதற்கு அவரியற்றிய 'நால்வர் நான்மணிமாலை' என்னும் நூலின்கண் அடிகளை நோக்கி,

"அழுது செம்பொனம்பலக் கூத்தன்,
அருளால் பெற்ற அன்பினிலொரு சிறிது,
அடியனேற்கு மருளல்வேண்டும்; நீயே கோடல்
நின்னருட் பெருக்கிற்கு ஏற்றதன்று"

எனவும்,

"பகிர்மதிதவழும் பவளவார் சடையோன்,
பேரருள் பெற்றும் பெறாரினழுங்கி,
நெஞ்ச நெக்குருகி நிற்பை நீயே,
பேயேன் பெறாது பெற்றார் போலக்,
களிகூர்ந்துள்ளக் கவலை தீர்ந்தேனே"

எனவும் அவர் கூறுவனவே போதிய கருவிகளென்க.

(தொடரும்)

தமிழை வளர்ப்ப தெப்படி?

[திரு. D. N. ஆறுமுகம் பிள்ளை யவர்கள்]

(சகக-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சில் வராத அரிய நூல்களையும், கல்லெழுத்துக்களையும், செப்பேட்டு எழுத்துக்களையும் ஆராய்ந்து அச்சிட்டு வெளியாக்கல் வேண்டும். இவை வரலாற்றாராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவனவாம்.

இசை வடமொழிக்கே யுரியது; தெலுங்கே இசைக்கு ஏற்ற மொழி; தமிழ் அன்னதன்று; பண்களின் பெயரெல்லாம் வடமொழிப் பெயரே என்று பலர் கருதுகின்றனர். பெருங் கூட்டங்களில் பாடும் இசைப்புலவர்களுங் கூடத் தெலுங்குப் பாடல்களையும் வடமொழிப் பாடல்களையுமே பாடுகின்றனர்; தமிழில் பொருட்செறிவில்லாச் சில பாடல்களை மட்டும் வேண்டா வெறுப்புடன் பாடுகின்றனர். இனியேனும் தமிழ் மக்களாகிய இசைப் புலவர்கள் தமிழிசைப் பாடல்களைப் பாடுமாறு செய்வதுடன் தமிழில் இசையுண்டு, இசைநூலுண்டு, பண்களுக்குப் பெயருண்டு, இசைக்கருவியுண்டு என்று அறிவுறுத்தல் வேண்டும்; பல இசைநூல்களையும் வெளியிடல் வேண்டும். பழந்தமிழ் நூல்களைக் கற்றோ ரெவரேனும் தமிழில் இசை இல்லை யென்று கூறத் துணிவரா?

இஞ்ஞான்று இயற்கைக்கும் நன்னடக்கைக்கு மாறுபட்டனவாய் நடைபெறும் கூத்துக்கள் நடைபெறாவண்ணம் அரசினர் உதவி பெற்றுத் தடுத்தல் வேண்டும்; தமிழறிவும், ஆடல் பாடல்களில் தேர்ச்சியும், நல்லியல்பும் வாய்ந்தோரே கூத்தாடல் வேண்டும். இது செய்தால் பல சிறுவர் சிறுமிகள் தீயநெறியினின்றும் தப்புவர் என்பது திண்ணம்.

இக்கழகத்தில் சில தமிழ்த் தேர்வுகளை ஏற்படுத்தி அத் தேர்வுகளில் தேர்ந்தார்க்குப் பட்டம் வழங்கல் வேண்டும். ஆங்கிலக் கல்லூரிகளில் உயர்தரத் தேர்வுகளில் தேர்ந்தார்க்குப்

பல்கலைக் கழகத்தார் உடையளித்தல்போல் இவர்கட்கும் அடையாள உடை யளித்தல் வேண்டும். இப் பட்டங்களையும் உடையளித்தலையும் அரசினரும் ஒப்புக்கொண்டு மதிப்புத் தரு மாறு முயன்று முடித்தல் வேண்டும். இது கைகூடின் பல செல்வர்களுங் கூடப் புகழ்கருதித் தமிழ் கற்கத் தொடங்குவர். இத்தேர்வுகளில் தேரியவர்களுக்கே பள்ளிக்கூடங்களில் தமிழ்க் கணக்காயர் தொழில் கொடுக்குமாறு அரசினரை இசைவித்தல் வேண்டும்.

இந்நாளில் பிழைகள் பல மலிந்தனவாய்க் கற்பாருள்ளத் தைத் தீய நெறியிற் கொண்டு செலுத்துவனவய்ப் பல செய் யுள் நடை நூல்களும் உரைநடை நூல்களும் அடிக்கடி தோ ன்றுகின்றன. இவை தோன்ருவண்ணம் ஊக்கங் காட்டித் தடுத் தல் பெருநலந் தரும்.

தமிழின் பெருமை யாண்டும் பரவுதற்கும் தமிழை நன்கு வளர்ப்பதற்கும் இன்றியமையாதன இன்னும் சிலவுள. நம் நூல்களின்கண் எவ்வளவு அரிய நுண்பொருள்கள் நிரம்பி யிருப்பினும் நம்மவர் அவற்றை முதலில் உணர்வதில்லை; ஆங் கிலர் முதலிய பிற நாட்டார் உணர்ந்து வெளியிட்ட பின் "ஆ! எங்கள் தமிழ் நூலில் எவ்வளவு நுண்பொருள்கள் உள" என்று பெருமை பேசிக்கொள்ள மட்டும் முன் வருகின்றனர். எவ்வா ருயினும் நம்மொழியின் சிறப்பு நூல்களிலுள்ள நுண் பொருள் முதலிய எல்லாம் எங்கும் பரவித் தமிழ் உயர்நிலை யடைதல் வேண்டும்; இதுவே நம் நோக்கமாகையால், தமிழ் மொழியை யும் தமிழிலுள்ள அரிய பெரிய நூல்களையும் ஆங்கில நன்மக் கள் கற்றுத் தமிழின் சிறந்த இயல்பையும், தமிழ் நூல்களின் நுண் பொருள்களையும் பற்றி அரிய பெரிய விரிவுரை நூல்கள் வெளியிடுமாறு செய்தல் நம் கடமை. பேச்சு வழக்கில் இல் லாத ஆரியமொழி நூல்களைப் பற்றி மாக்ஸ்முல்லர் முதலிய ஆங்கிலர்கள் பெரிய பெரிய விரிவுரைகள் எழுதி யிருக்கின் றனரே, அது எதனுல்? ஆரிய மொழியிற் பற்றுடைய பலர் பெருமுயற்சியா னன்ரே ? இவர்தம் செயல் கண்டும் நாம்

வீணே பொழுது போக்கலாமா? ஆங்கிலத்துள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் போலவே முன்னுள்ள அரிய பெரிய தமிழ் நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆங்கில நன்மக்களும் கற்குமாறு செய்தல் வேண்டும். இரவீந்திரநாத தாகூர் அவர்கள் தம் தாய் மொழியி லாக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க, ஆங்கில மக்களும் கற்கின்றார்களன்றோ? "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்" என்னும் நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும்; ஆங்கில மக்களும் அதனைக் கற்றல் வேண்டும் என நான் பலகால் நினைந்ததுண்டு. தமிழ், ஆங்கிலம், ஆரியம் ஆகிய மொழிகளினும் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய தமிழர் கடவுட் கொள்கை நூல்களினும் வல்ல ஒரு சிலரேனும் மேனாடுகளிற் சென்று பொதுவாகத் தமிழ்மொழி தமிழ் நூல்கள் இவற்றின் பெருமையையும் சிறப்பாகத் தமிழர் கட்வுட் கொள்கைகளையும் (சைவ சித்தாந்தம்) விரிவுரைகளின் வாயிலாகப் பரப்புதல் வேண்டும். சுமார்த்தர்கள் தங்கள் கடவுட் கொள்கைகளை எவ்வளவுவரை மேனாடுகளிற் பரப்பி யிருக்கின்றனர் என்பதை நினைந்து பார்மின்.

சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரும் எல்லா வகுப்புகளினும் தமிழை இன்றியமையாத பாடமாக வைக்கவும் எத்துறை நூலையும் தமிழிலேயே கற்பிக்கவும் வற்புறுத்துவதுடன் இயலுமேல் (இனி நிலைநாட்டப் பெறும்) தமிழ்ப் பெருங்கழகச் சார்பாகவும் ஒரு கல்லூரி வைத்து நடாத்தல் வேண்டும். இக் கல்லூரியில் தமிழிலேயே எல்லாக் கலைகளையும் கற்பிப்பதுடன் தமிழிலக்கண இலக்கியங்களை நன்முறையிற் பயிற்றுவித்தல் வேண்டும். ஆங்கிலம் ஆரியம் ஆகிய மொழிகளையுங் கற்பித்தல் வேண்டும். அரசினரால் நடத்தப்பெறும் (B.A., M.A.) உயர்தரப்பட்டத் தேர்வுகட்கு இக்கல்லூரி மாணவர்களும் சென்று பட்டம் பெறுமாறு செய்தல் வேண்டும். இங்ஙனம் கல்லூரி நடாத்துதற்கு ஆங்கிலத்தொடு பலதுறைக் கலைகளில் வல்லுநரும், தமிழ்ப்புலவர்களும், ஆரியம் உணர்ந்தவர்களும் ஆகிய தமிழன்பர்கள் எளிய

ஊதியம் பெற்றுக் கணக்காயர்களாக அமர்தல் வேண்டும். ஒரு கலாசாலையில் திலகர் எளிய ஊதியம் பெற்றிருக்க வில்லையா?

எவ்வளவுதான் பேசியும் என்? இஞ்ஞான்றைத் தமிழ்ப் புலவர் வறுமையை நீக்க வழியென்ன? "அடகெடுவாய் பல தொழிலு மிருக்கக் கல்வி அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்" என்ற பாடலைப் பாடுவர் பலர். பண்டைநாளிற் போல் புலவர் அருமையறிந்து கொடுக்கும் வள்ளல்கள் உளரா? "தலைவாசலின் கதவை யாரடி திறந்தவர்கள் தமிழ் வாணர் வரில் விடுவரோ?" என்ற ஒரு புலவர் சொல்லை நோக்கிற் பல்லாண்டு கட்கு முன்னரே புலவர்க்களிப்பா ரற்றனர் என்பது விளங்கும். இந்நாள் நிலையறிந்து அறிவுக்காகக் கல்வியும் பொருளுக்காக வேறு தொழிலும் புலவர்கள் கற்றனரா? இல்லையே. எல்லார்க்கும் தமிழ்க் கணக்காயர் தொழில் கிட்டுமா? இனி இவர்கட்கேதேனும் பிழைக்கும் வழியுண்டா வென்பதைப் பற்றிச் சிறிது நினைந்து பார்ப்போம்.

அரசினர் ஒப்புவரேல் வழியுண்டு. வழக்கு நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துத் தமிழிலேயே ஓர் தேர்வு நடாத்தல் வேண்டும். இதற்குச் சிறிது ஆங்கிலத்துடன் சிறந்த தமிழறிவு வாய்ந்த புலவர்களையே எடுத்தல் வேண்டும். இத்தேர்வில் தேரியவர்கள் வழக்கறிஞர்களாக இருக்க அரசினர்பால் மன்ருடி ஒப்பச் செய்தல் வேண்டும். நம் நாட்டிற் பெரும்பாலான வழக்காளிகளும் தமிழரே; வழக்கு மன்றத்தே நடைபெறும் கடாவிடைகளும் தமிழே; பெரும்பாலான வழக்கு மன்றத் தலைவர்களும் தமிழுணர்ந்தவர்களே யாகலான், இத் தொழிலுக்குத் தமிழறிவுமட்டும் போதுமானதே. தமிழறியாத ஆங்கிலர் முதலியோர் தலைவராகவுள்ள மன்றங்களில் மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்த்துக் கூறலாம். ஆங்கில மருத்து நூற்களை மொழிபெயர்த்துத் தேர்வு நடாத்தித் தமிழ்ப் புலவர்களை மருத்துவர்களாக வரச் செய்யலாம்; இது தமிழர்கட்குப் பேருதவியாகும்; பொருட் செலவு குறையும். அறநிலையப் பாதுகாப்பு மன்றத்தார் தங்கட்குக் கீழுள்ள எல்லா வேலைகளையும் தமிழ்ப்

புலவர்கட்கே தந்தால் அவர்களும் பிழைப்பர், அறநிலையங்களில் நடைபெற வேண்டுவனவும் முறை தவறாமல் இனிது நடைபெறும். உழவுக் கல்லூரியில் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்களையும் பட்டம் பெறும் நிலை யுள்ளவர்களையுமே மாணவர்களாகச் சேர்த்துக்கொள்ளுகின்றனர். தமிழ்ப் புலவர்களையும் மாணவர்களாக எடுத்துத் தமிழிலேயே கற்பித்து உழவுபற்றிய விரிவுரையாள ராக்கினல் உழவுக் கல்வி பரவும். பதிவு மன்றங்களில் எழுத்தாளர்களாகவும் எடுத்துக்கொள்ளலாம். இத்தொழில்களெல்லாம் தமிழ் கற்ருர்க்குக் கிடைக்கு மென்பதுறுதியானல், வயிற்றுப் பிழைப்புக்கேனும் பலர் தமிழ் கற்பர். இத்தனைக்கும் அரசினரை இணங்கச்செய்தல் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் பணம் வேண்டும். பணம் பத்தும் செய்யும். பணமின்றி யென் செய்வது? நம் நாட்டுச் செல்வர்களும் நாட்டுக்கோட்டை வணிகர்களும் மணவினை பிணவினைகட்கும், பட்டங்கட்கும், மற்றுள்ள வீண் செயல்கட்கும், எத்தனையோ பெரிய கோயில்கள் பழுதுருமல் அழகாக இருப்ப அவற்றை மேலு மேலும் பெருக்கிக் கட்டுதற்கும் ஏராளமான பொருளைச் செலவு செய்கின்றனர், வாரி யிறைக்கின்றனர். இவர்கள் செலவிடும் தொகையில் ஒரு பகுதியேனும் இக்கழகத்தின் காப்புப் பொருளுக்கும், கல்லூரி நடாத்துதற்கும், நல்ல நூல் வெளியிடுகட்கும் உதவுவரேல் நம் நாடு பொன்னுடாமே!

செல்வர்களே! நுங்களால் இயன்ற அளவு இக்கழகக் காப்புப் பொருளுக் குதவுமின்; நூல் வெளியிடுகட் குதவுமின்; அயல் நாடுசென்று தமிழையும் தமிழர் கடவுட் கோட்பாட்டையும் பரப்பும் அறிஞர்கட் குதவுமின்; தமிழ் கற்கும் மாணவர்கட் குதவுமின். நுங்கள் புகழ் பல்லாண்டு பல்லாண்டு நிலைநிற்கும். முந்துமின்! முந்துமின்!!

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

மன்னன் (௨௰)

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்]

பண்டைத் தமிழ் மக்கள் மன்னன் என்ற தமிழ்ச் சொல்லைத் தாங்கள் வணங்கி வந்த கடவுளுக்கு வழங்கி வந்தார்கள். அவர்கள் அப்படி வழங்கி வந்ததற்குக் காரணமாயுள்ள கருத்துக்கள் இக்கட்டுரையில் இயன்றவாறு ஆராயப்படும்.

2. மன்னன் என்ற சொல் 'மன்' என்ற பகுதியும், 'அன்' என்ற உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதியும் சேர்ந்து ஆகியது. 'மன்' 'அன்' உடன் சேருங்கால் னகரவொற்று இரட்டியது.

3. மன் என்பது நிலைபெறு என்று பொருள்படும். மன்னன் என்பது நிலைபெறுகிறவன், நிலைபேறு உடையவன் என்று பொருள்படும். ஒரு பொருள் தன்னிற்றானே நிலைபெறுதலையுடையதா யிருக்கலாம்; அல்லது வேறொரு பொருளினாலே நிலைபெறுத்தப்படுவதா யிருக்கலாம். கடவுள் நிலைபேறு உடையவன் என்றால் அவன் தன்னிற்றானே நிலைபேறு உடையவன்; தன்னின் மிக்காரும் தன்னை யொப்பாரும் இல்லாத மேலான உயிர்ப்பொருள். அவன் யாதொரு மாறுதலும் அடையாமை நிலைபேறுடைமையின்கண் அடங்கியுள்ளது. அவனுக்கு இந்த மாறுதலில்லாத நிலைபேறு உடைமை எதனால் வந்தது? அவன், பிறப்பும் இறப்பும் இல்லாமையினால் அவன் நிலைபேறு உடையவனாகின்றான். ஏன் அவனுக்குப் பிறப்பு இறப்பு இல்லையென்றால், அவன் அநாதியே மலமில்லாதவனாதலின் பிறப்பு இறப்புகள் வேண்டப்படுவன் அல்லன். பிறப் பிறப்பு இல்லாதவன் என்று எதிர்மறையில் கூறுதல் உடன்பாட்டில் என்றும் உள்ளவன் என்பது ஆகும். என்றும் உள்ளவன் என்ற சொற்களில் அடங்கிய கருத்தைச் சுருக்கமாக 'உள்ளது' அல்லது 'உண்மை' என்று கூறப்படும். "என்றும் உள்ள பொருள்" சுருக்கமாக, 'உண்மைப் பொருள்' அல்லது 'உண்மை' என்றும் 'மெய்ப்பொருள்' அல்லது 'மெய்' 'என்றும்' வாய்மை என்

றும் கூறப்படும். அப்பொருள் வடமொழியில் சத்து என்றும் நித்தியப் பொருள் என்றும் கூறப்படும். ஆகவே, மன்னன் என்ற சொல்லாற் பெறப்படும் கருத்துக்கள் 'உள்ளது' 'உண்மை' 'மெய்', 'வாய்மை', என்ற தமிழ்ச் சொற்களாலும் சத்து, நித்தியப் பொருள் என்ற வட சொற்களாலுங் குறிக்கப்படுகின்றன.

4. மன் என்ற முதனிலைச் சொல்லே கடவுளைக் குறித்தலும் வழக்கிலுண்டு.

5. கடவுள் நிலைபேறு உடைய பொருள் ஆகவே, வேறு நிலைபேறு இல்லாத பொருள்கள் உளவா? இருந்தால் அவை எவை? என்ற கேள்விகள் இதைப்பற்றி நினைக்கிறவர் உள்ளத்தில் எழும். பண்டைத் தமிழர் கொண்ட மூன்று பொருள்களில் கடவுள் நீங்கலாக ஏனை உயிர்ப் பொருள்களும் உயிரில்லாத உலகப் பொருள்களும் உள. உயிரில்லாத உலகப் பொருள்கள் நிலையின்றி அடிக்கடி மாறிக்கொண் டிருத்தலை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். உயிர்ப் பொருள்களும், நமது கண்முன்னே பிறந்தும் இறந்தும் மாறி வருதலைக் காண்கின்றோம். சகல நிலையில் அதாவது உடலோடு கூடிய நிலையில் உயிர்களும் நிலைபேறு உடைய பொருள்கள் அல்ல. ஓர் அளவுபட்ட கால எல்லையில் உயிர்ப் பொருள்களையும் உயிரில்லாத பொருள்களையும் நிலைபெறச் செய்கிறவன் கடவுளே ஆவன். அவன் உதவியின்றி அவ் விருவகைப் பொருள்களும் உளவாகா. ஒரு கால எல்லை வரையும் நிலைத்துமிரா. ஆதலின், மன்னன் என்ற சொல் உயிர்ப் பொருள்களையும் உலகப் பொருள்களையும் நிலைக்கச் செய்கிறவன் என்ற பிறவினைப் பொருளிலும் பண்டைத் தமிழ் மக்களால் வழங்கப்பட்டு வந்தது. கடவுள் உயிர்ப் பொருள்களை அவைகள் செய்த வினைப்படி ஒருகால எல்லையில் நிலைக்கச் செய்தல், அவைகள் தன்னைச் சேர்ந்து எப்பொழுதும் நிலைபெறச் செய்தற்காகவே ஆகும் உயிரில்லாத உலகப்பொருள்கள் யாதொரு பயனையும் அடையத் தக்கவையல்லவாதலின் அவைகளை ஒருகால எல்லையில் நிலைக்கச் செய்தலும் உயிர்ப் பொருள்களின் பொருட்டாகவேயாகும்.

இவ்விருவகைப் பொருள்களும் நிலையில்லாமல் மாறிக்கொண்டிருக்கும்படிக் கடவுள் செய்தது பகுத்தறிவுடைய மக்கள் அந்நிலையின்மையைத் தங்கள் அனுபவத்தில் அறிந்து உணர்ந்து நிலையுள்ள பொருளாகிய தன்னை அடைய வழிகாட்டும் பொருட்டேயாகும்.

6. நிலைத்திருக்கிறவன் என்ற பொருளில் மன்னன் என்ற சொல்லைப் போல, 'உள்ளது', 'உண்மை', 'வாய்மை' என்ற தமிழ்ச் சொற்களும் வழங்கப்பட்டு வந்தாலும் பின்னைய சொற்கள் முன்னைய சொல்லைப் போல நிலைக்கச் செய்கிறவன் என்கிற பிறவினைப் பொருளில் வழங்கப்படவில்லை.

7. பிறவினைப் பொருளில் வழங்கப்பட்ட மன்னன் என்ற சொல்லில் ஆளுதல் என்ற கருத்தும் அடங்கியுள்ளது; ஆளுதல் இன்றி நிலைக்கச் செய்தல் முடியாதாதலின், கடவுள் உயிர்களை ஆளுதல் செய்து அவைகளை நல்வழிப்படுத்தித் தன்னை அடையச் செய்து நிலைபேறான இன்பத்தை நுகரச்செய்கிறுனதலின் அவனை ஆண்டான் என்று சைவசமய நூல்கள் கூறுகின்றன ஆண்டான் என்ற சொல்லினல் பெறப்படும் கருத்துக்கள் முன்னே அச் சொல்லைப் பற்றிய கட்டுரையிற் (செந்தமிழ்ச் செல்வி 8-வது சிலம்பு 6-வது பரல் 351-வது பக்கம் பார்க்க) கூறப்பட்டன.

8. மன்னன் என்ற சொல் கடவுளுக்குப் பெயராகத் தமிழ்த் திரு மறை நூல்களிற் பல இடங்களில் வழங்கப்பட்டு வந்துளது. அவற்றுள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவாம். அதன் பரியாயப் பெயர்களாகிய வேந்தன், அரசு, காவலன் என்ற சொற்களும் திருமறை நூல்களில் வழங்கப்பட்டிருக்கின்றன.

1. அவர் பூணரையர்க் காதியாய வடன் மன்னனுள் மண்மேல்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பிரமபுரம் தேவாரம் 6-வது பாட்டு.

2. மன்னுனவ னுலகிற் கொரு மழையானவன்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்புள்ளமங்கைப் பதிகம் 6-வது பாட்டு.

3. வேந்தாகி விண்ணவர்க்கு மன்னவர்க்கும் நெறிகாட்டும் விகிர்தனுகி.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவையாற்றுப் பதிகம் 6-வது பாட்டு.

4. இன்னங் கேண்மி னிளம்பிறை சூடிய மன்னன் பாதம் மனத்துட னேத்துவார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் காலைப் பாராயணம் 9-வது பாட்டு.

5. திருக்கோளிலி மன்னனே யடியேனை மறவலே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கோளிலிப் பதிகம் 1-வது பாட்டு.

6. தென்னவ னெனையாளுஞ் சிவனவன்—மன்னவன்.

திருநாவுக்கரசு சுவாமிகள், திருக்கடம்பூர்த் தேவாரம் 5-வது பாட்டு.

7. மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருமழபாடி தேவாரம் 1-வது பாட்டு.

8. வேந்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்குருகாவூர் தேவாரம் 7-வது பாட்டு.

9. மன்ன வெம்பிரான் வருக.

திருவாசகம் திருச்சதகம் 99-வது பாட்டு.

10. ஆரூரமர்ந்த அரசே போற்றி.

திருவாசகம் போற்றித் திருவகவல் 147-வது வரி.

11. காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே.

திருவாசகம் சிவபுராணம் 78-வது வரி.

12. மனவாசகங்கெட்ட மன்னனை நாடே.

திருமந்திரம் 85 தந்திரம் மகா வாக்கியம் 8-வது பாட்டு.

9. மன்னன் என்றசொல் உயிர்களை நிலைக்கச் செய்கிறவன் என்ற பொருளில் கடவுளுக்கு வழங்கப்பட்டு வந்தபின், கடவுள்

வேலையை ஏகதேசமாய்ச் செய்கின்ற உலகிலுள்ள மன்னர்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது. அரசன் தன் ஆணைவழி நடக்கும் மக்களுக்குப் பெரிய பதவி ஈந்தும் பொருள் கொடுத்தும் இன்பம் அடையச் செய்தும், தன் ஆணைவழி நடவாதாரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தியும் அவர்களை நல்வழிப் படுத்துகின்றான். அரசன் இவ்வாறு செய்தல் கடவுள் தன் ஆணையாகிய அறவழியில் நடக்கும் மக்களை இவ்வுலக வாழ்வினும் துறக்க உலகத்திலும் இன்பந் துய்க்கச் செய்தும் இவ்வுலக வாழ்விலும் நிரய உலகத்திலும் துன்பம் நுகரச் செய்தும் வினைப்போகங்களை ஊட்டி நல்வழிப்படுத்தலுக்கு ஒப்பானதாயிருக்கின்றதாதலின் அரசன் கடவுள் ஆணையினால் உலகில் மக்களை இன்ப துன்பங்கள் நுகரச் செய்து நல்வழிப்படுத்தும் அதிகாரி யாகின்றான். அவ்வாறு நல்வழியில் நடக்கும் மக்களை அதன்கண் ஊக்கியும் அறியாமையினால் தீயவழியில் நடக்கும் மக்களை ஒறுத்தும் நல்வழிப்படுத்துதற்கண் கடவுளுக்கு அரசன் ஒருபுடை ஒப்பாயிருத்தலின் கடவுளுக்கு வழங்கப்பட்ட மன்னன் என்ற சொல் அரசனுக்கும் வழங்கப்பட்டு வந்தது. இக்கருத்து,

> தத்தஞ் சமயத் தகுதி நில்லாதாரை
> அத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி
> யெத்தண்டமுஞ் செய்யு மம்மையி லிம்மைக்கே.
> மெய்த்தண்டஞ் செய்தல் வேந்தன் கடனே.

என்று திருமந்திரத்திற் கூறப்பட்டிருத்தல் காண்க. சிவஞான சித்தியார் 2-வது சூத்திரம் 31, 32 பாட்டுக்களிலும் இக்கருத்து கூறப்பட்டிருத்தல் காண்க.

10. பழைய சங்க நூல்களில் மன்னன் என்ற சொல் அரசனுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. தமிழ்த் திருமறை நூல்களினும் அச்சொல் அரசனுக்கு வழங்கப்பட்டு வந்திருக்கிறது. அச்சொல் மன்னனுக்குப் பொதுவாய் வழங்கப்பட்டு வந்ததுமன்றித் தமிழரசர்கள் வணங்கும் கடவுளாகிய சிவபிரான் முற்காலத்தில் தமிழ் மன்னர்களாயிருந்த சேரசோழ பாண்டிய மன்னர்களாகவே கூறப்பட் டிருக்கின்றான்.

மாணிக்கவாசக சுவாமிகள் குயிற்பத்தில்,

"உன்னை யுகப்பன் குயிலே வுன்றுணைத் தோழியுமாவன்
பொன்னை யழித்த நன்மேனிப் புகழிற்றிகழு மழகன்
மன்னன் பரிமிசைவாழ் வள்ளல் பெருந்துறைமேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக் கூவாய்"

என்று திருப்பெருந்துறை மேவிய சிவபிரானைத் "தென்னவன்," 'சோழன்', 'சேரன்', என்றே கூறியிருக்கிறார். திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபிரானைப் பாண்டிய அரசனாக "தென்னனெனை யாளுஞ் சிவன்", என்று திருக்கடம்பூர்த் தேவாரம் 5-வது பாட்டில் கூறியருளினார். மன்னர்கள் பொதுவாக உலகில் கடவுளுடைய பிரதிநிதிகளா யிருத்தலின் சிவபிரான் தமிழ்நாட்டு மன்னர்களாகிய சேர சோழ பாண்டியராகிய மூவர்கள் பேராலும் அழைக்கப்பட்டான். சிவபிரான் மலயத்துவச பாண்டியனது திருமகளாய் அவதாரஞ் செய்த உமாதேவியாரை மணந்து மதுரையில் பாண்டிய மன்னனாக, ஆளுகை செய்த காரணத்தால் அவன் 'தென்னன்' (பாண்டியன்) என்று சிறப்பாக அழைக்கப்பட்டான். திருமால் காப்புக்கடவுளாதலின் திருவாய்மொழி,

"திருவுடை மன்னரைக் காணிற் திருமாலைக் கண்டேனே"

என்று கூறுகின்றது.

தொல்காப்பியச் சூத்திரக் குறிப்புரை

[வித்துவான். திரு. G. தேவநேசன் அவர்கள்]

(௫௧௧-வது பக்கத் தொடர்ச்சி)

சொற்கள் எங்ஙனம் நிலைமாறினும் புணர்ச்சி செய்யுங்கால் சொற்றொடர்ப்படியே செய்யவேண்டும். அஃதன்றி ஒன்பது+பத்து=தொண்ணூறு, ஒன்பது+நூறு=தொள்ளாயிரம் எனப் புணர்த்து விகார விதியுங் கூறுதல் புணரியலொடு மாறுபடுவ தொன்றும்.

5. "ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ ஆகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகரம் ஒற்றும்"
(தொல்-எழு-குற்-சூ. 58.)

இதுவுமது.

6. "நம்மென் ஒரு பெயர் மெல்லெழுத்து மிகுமே"
"அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இய்யிடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயின் இயற்கை ஆகும்"
(தொல்-எழு-புள்-சூ 30, 31.)

இவற்றைப் பிரயோகவிவேக நூலார் பற்றுக்கோடாகக் கொண்டு,

"இனித் தொல்காப்பியரும், தமிழில் 'எழுவாய்வேற்றுமை பெயர் தோன்று நிலையே' என்றாராயினும், வடநூலில் எழுவாய்வேற்றுமை இவ்வா றிருக்குமென் றறிதற்கு நம் என்னுமொரு பெயரை மாத்திரம் எழுவாய்வேற்றுமை யாக்காது பிராதிபதிக யாக்கி, பின்னர் நம்மை நுங்கண் என இரண்டு முதல் ஏழிறுதியும் வேறுபடுத்து வேற்றுமை யாக்கினாற் போல, 'அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை' என்னுஞ் சூத்திர விதி கொண்டு நீயிரென வேறுபடுத்து, எழுவாய்வேற்றுமை யென்னும் பிரதமாவிபத்தி யாக்குவர். இவ்வாறு நின், தன், தம், என், எம், நம் என்பனவற்றையும் பிராதிபதிகமாக்கி, பின் நீ, தான், தாம், யான், யாம், நாம் எனத் திரிந்தனவற்றை எழுவாய் வேற்றுமை யாக்காமையானும், 'எல்லா நீயிர் நீ' எ-ம். 'நீயிர் நீ யென வரூஉங் கிளவி' எ-ம் பெயரியலுள் பெயர்ப் பிராதிபதிகமாகச் சூத்திரஞ் செய்தலானும், 'அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை' என்னுஞ் சூத்திரத்தை வடமொழிக்கு எழுவாய் வேற்றுமை இவ்வா றிருக்குமென்று தமிழ்

நூலார் அறிதற்கே செய்தாரென்க. நிலைமொழி விகாரமொழி எட்டாம் வேற்றுமை யானாற்போல நும்மென்னு நிலைமொழி விகாரம் முதல்வேற்றுமையா மென்க" எனக் கூறியுள்ளார்.

(பிர-சூ. 7 உரை)

நீயிர் என்னும் முன்னிலைப்பன்மைப்பெயர் வேற்றுமைப்படும்போது நும் என்று திரியுமேயன்றி, நும் மென்னும் வேற்றுமைத் திரிபுப் பெயர் நீயிரென்று திரியாது.

முன்னிலைப் பெயர்கள்	வேற்றுமைத் திரிபு
நீன்—நீ	நின்—நுன்—உன்
நீம்	நும்—உம்
நீம்+கள்=நீங்கள்	நுங்கள்—உங்கள்
நீ+இர்=நீயிர், நீவிர் }—நீர்	நும்—உம்

நீன் என்னும் பெயரே நீ என்று குறைந்து வழங்குகின்றது. நீன் என்னும் வடிவை இன்னும் தென்னாட் டுலகவழக்கிற் காணலாம். தான் என்பது தன் என்று குறுகினாற்போல நீன் என்பது நின் என்று குறுகும். நீன் என்பது இலக்கண வறியாமை காரணமாகக் கொச்சையாகக் கருதப்படுகின்றது. நீனுக்குப் பன்மை நீம் என்பது. மகரம் பன்மைப் பொருளுணர்த்தலை ஆங்கில இலக்கண நூல்களிலும் காணலாம். நீங்கள் என்பது விகுதிமேல் விகுதி பெற்ற இரட்டைப் பன்மை. நீவிர் என்பது இலக்கணப்போலி. நீயிர் என்னும் சொல்லே நீர் என இடைக்குறைந்து நின்றது. இங்ஙனமன்றி நும் என்பது நீயிர் எனத் திரியுமென்றல் ஒன்பது+பத்து=தொண்ணூறு என்றதனோ டொக்குமென்க.

7. "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

"வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

(தொல்-சொல்-எச்-சூ.)

இச்சூத்திரங்களால் மொழி யாராய்ச்சி சிறிது முட்டுப்படுகின்

றது. வடசொற்கள் தொல்காப்பியர் காலத்து நூல்களில் வழங்கினவாகத் தெரியவில்லை. தொல்காப்பியத்தில் வடசொல் லென் றையுறக் கிடக்கும் சில சொற்கள் செந்தமிழ்ச் சொற்களே. இடப்பெயரும் இயற்பெயருமான சில வடசொற்களே வடவெழுத் தொருவியும் ஒருவாதும் வழங்கி யிருத்தல் வேண்டும். அல்லாக்கால் தென்சொற்களே வடசொற்களாகத் திரிபுணர்ச்சியாற் கருதப்பட் டிருத்தல் வேண்டும். தொல்காப்பியர் சுருக்கமாகக் குறித்துள்ள வடசொல்லைப் பவணந்தியார் விரிவாகக் கூறிவிட்டனர்.

வடசோல்லாகாத் தேன் சோற்கள்

ஐயன்: தந்தையைக் குறிக்கும் தமிழ் முறைப்பெயர்; அரசன், ஆசிரியன், தந்தை, அண்ணன் என்னும் நாற்குரவரையுங் கடவுளையும் அந்தணனையும் முனிவனையும் பெரியோனையும் பொதுவா யுணர்த்துவது; ஆரியன் என்பதின் சிதைவன்று. பெண்பால் ஐயை.

ஆசிரியன் : ஆசு + இரியன். ஆசு = குற்றம் இரிதல் = போக்குதல்.

அந்தணன் : "அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்
　　செந்தண்மை பூண்டொழுக லான்" [கும்

இராவணன் : இராவண்ணன். இரா = இருள் = கருமை.
　　"இருள்நிறப் பன்றியை ஏனமென் றலும்"
　　(தொல்-பொருள்-மரபு.)

கும்பகர்ணன் : கும்பகன்னன். கன்னம் = காது

இராக்கதன் : இரா + கதன்; கதி + அன் = கதன்.

கதி = செலவு; இரவில் செல்லுபவன்; இதே பொருளில் நிசாசரன் என்பர் வடமொழியில். நிசி = இரவு; சரம் = செலவு. இராக்கதன்—இராக்கன்—அரக்கன். ராக்ஷஸன் என்பதன் திரிபன்று. அரக்கன் என்பதற்கு அழிப்பவன் என்றும் பொருள் கூறலாம்.

இத்துணையும் சில மாதிரிக் கெடுத்துக் கூறப்பட்டன. இங்

னமே ஏனையவும். இவற்றின் விரிவை யெல்லாம் எமது 'முதற் றாய்மொழி'யிற் கண்டுகொள்க.

1. "உச்சகாரம் இருமொழிக்குரித்தே"

(தொல்-எழு-மொழி-சூ. 42)

உசு, முசு என்ற இரு சொற்களே யன்றி, பசு, கொசு முதலிய பிறவும் உச்சகார வீற்றுச் சொற்களாதல் காண்க. பசு வென்பதை ஆரியச்சிதை வென்பர் நச்சினார்க்கினியர். அது அஃதன்று.

2. ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி ஆகும்"

(தொல்-சொல்-கிளவி சூ.-8)

து ஒன்றுமே அஃறிணை ஒருமை விகுதியாம். ஏனைய அதன் புணர்ச்சித் திரிபாம்.

உ-ம். போ + இன் + து = போயிற்று.
போ + இன் + அ + து = போயினது.
பால் + து = பாற்று.-
தாள் + து = தாட்டு, குறுந்தாட்டு.
கண் + து = கட்டு, குண்டுகட்டு.

3. அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணாதாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே"

(தொல்-சொல்-விளி-சூ. 36)

அம்ம என்பது முறைப்பெயரோடு சிவணுமைக்கு எத்துணையோ காலஞ் சென்றிருத்தல் வேண்டும். அம்ம என்னும் முறைப்பெயர் விளியே கேட்பிக்கும் பொருளில் வரும். அம்மையும் அப்பனுமாகிய இருமுதுகுரவரும் ஒருவர்க்கு முன்னறி தெய்வமும் இன்றியமையாதவருமாதலின், அவர் பெயரே பெரும்பாலும் விளி, வியப்பு, முறையிடு முதலிய பொருள்களில் வரும்.

உ-ம். அம்மை—அம்மே! அம்மா!
ஐயன் —ஐய! ஐயோ!
அன்னை—அன்னே! அன்னா!
அப்பன்—அப்பா!
அச்சன்—அச்சோ!
அத்தன்—அத்தோ! அந்தோ! (மெலித்தல்)

4. "ஒன்றன் படர்க்கை தறடற வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்"

(தொல்-சொல்-விளி-சூ.-20)

இது முன்னர்க் கூறப்பட்டது.

5. "ஆ எ ஓ அம் மூன்றும் வினா" (தொல்-எழு-நூல்-சூ.-32)

இதில் எ, யா கூறப்படவில்லை. எ, ஏகாரத்தினும், யா, ஆகாரத்தினும் அடங்குமெனக் கொண்டார் போலும். நச்சினார்க்கினியர் உரையும் அஃதே.

6. "ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே"

(தொல்-எழு-மொழி-சூ.-39)

இதில் நொ பகுதியாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் நோ என்பதே பகுதியாகி நொ எனக் குறுகி நிற்கும்.

ஏவல்	இ.காலம்	நி.காலம்-	எ.காலம்	பெயர்
நோ	நொந்தான்	நோகிறான்	நோவான்	நோய்
காண்	கண்டான்	காண்கிறான்	காண்பான்	காட்சி

---

* கடவுளுணர்ச்சி கட்டாயம் வேண்டுமா?

[திருவாளர் க. வஜ்ஜிரவேலு முதலியார் அவர்கள்]

இன்று இப்பொதுநிலைக்கழக ஆண்டுவிழாப் பேரவையில், யான் உபந்நியசிக்கப் புகும் பொருள் 'கடவுள் உணர்ச்சி

---

* பல்லாவரம் பொதுநிலைக் கழக விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு.

கட்டாயம் வேண்டுமா ?' என்பது ஆகும். இப்பொருள் இஞ்ஞான்று நந்தமிழ் நாட்டில் பெரிதும் விவாதிக்கப்பட்டு வரும் பொருள்களுள் ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். கடவுள் என்ற சொல் பொருள் அற்றது என்பது சில அன்பர்களின் உண்மையான உள்ளக் கிடக்கை; ஆகவே, அவ்வன்பர்கள் கடவுளுணர்ச்சி வேண்டுவதில்லை எனவும், அவ்வுணர்ச்சி நம் நாட்டவர்களை அரசியல், பொருளியல், கூட்டுறவியல் முதலிய உலகியற் றுறைகளில் முன்னேற விடாமல் தடை செய்கின்றது எனவும் கருதிக் கட்டுரைகளை எழுதியும் விரிவுரைகளை நிகழ்த்தியும் வருகின்றார்கள். அவர்கள் நிறைந்த அறிவும் நாட்டிற்குத் தொண்டியற்றுதற்கண் மிகுந்த ஆர்வமும் உடையவர்கள். ஆகவே, இப்பொருள்பற்றி ஈண்டு விரிவுரை நிகழ்த்துதல் வேண்டற்பால தென்றே கருதுகிறேன்.

கடவுளுணர்ச்சியின் அவசியத்தை வற்புறுத்த, மேற்கூறிய அன்பர்களின் கருத்துக்கள் தவறானவை என்று விளக்குதலையே இவ் விரிவுரையின் நோக்கமாகக் கொள்ளுகிறேன்.

உலகில் வாழும் உயிர்கள் யாவும் இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் இயல்பாகக் கொள்வதை நாம் காண்கிறோம். அங்ஙனம் அவை துன்பத்தை நீக்கிக்கொள்ளவும் இன்பத்தைத் தேடிப் பெறவும் முயற்சித்து வருதலும் கண்கூடு. இக் காட்சியால் நமக்கு விளங்குவ தென்னை ? படைப்பின் நோக்கம், உயிர்கள் துன்பத்தின் நீங்கி இன்பத்தை அடைதல் என்பது பெறப்படுகின்ற தல்லவா ? ஆகவே நமக்குத் துன்பம் எதனால் உள்ளது ? அதனை நீக்கிக்கொள்ளுமாறு யாங்ஙனம்? இன்பம் எதனால் உளதாம்? அதனை நாம் பெறுவ தெப்படி ? என் றின்ன பல்வகையான் நாடி முடிவுகாண்டல் நம் கடமை யாகும்.

இன்பமும் துன்பமும் எவற்றான் உண்டாகின்றன ? இன்பம் தரும் பொருளைத் தெரிந்து துய்த்தலானும், துன்பந் தரும் பொருளைத் தெரிந்து துய்வாது விடுத்தலானும் நமக்கு இன்பம் உண்டாகும்; இவ்வாறன்றித் துன்பந்தரும் பொருளை

இன்பந் தருவதென மாறி உணர்ந்து துய்த்தலானும் இன்பந் தருவதனைத் துன்பந் தருவதெனக் கருதித் தள்ளுதலானும் துன்பம் உண்டாம். இதனால் இன்பந் தரும் பொருளை உள்ளவா றறிதற்கு ஏற்ற அறிவும் அவ் வறிந்த பொருளை விரும்பியவாறு எய்துதற்குரிய செய்கையும் இன்பத்திற்குக் காரணம் எனவும், பொருள்களி னியல்புகளை உள்ளவாறன்றிப் பிறழ்ந்து அறிவ தாகிய மயக்க உணர்வும் குறைந்த ஆற்றலும் துன்பத்திற்குக் காரணம் எனவும் நாம் அறிகின்றோம்.

நாம் இப்பொழுது நுகர்ந்து வருவது இன்பமா? துன்பமா? எனின் நாம், துன்பமின்றி இருப்பின் அதனி னீங்குதற் காக முயற்சித்தல் வேண்டுவதில்லை; இன்பத்தைத் துய்த்துக் கொண் டிருப்போமே யானால் வேறும் இன்பம் பெறுதற்காக முயற்சித்தல் வேண்டுவதில்லை. ஆகவே நமக்குத் துன்பம் உள் ளது; இன்பமில்லை; ஒரோவழி இன்பம் துய்க்கினும் அது குறைந்த அளவினதாய் அழிவதாய் உள்ளது. இவ் வுலகினுள்ள பொருள்களால் நாம் எய்துவது இம்மட்டுமே ஆகும். அப் பொருள்கள் யாவும் இன்ப துன்ப மயக்கவடிவாயுள்ளன. அவை ஒவ்வொருகால் இம் மூன்றனுள் ஒன்றை முற்படத் தந்து மற் றிரண்டையும் பின் தருகின்றன. அன்றியும் இப் பொருள் களுள் இஃதின்பந் தருவது; இது துன்பந் தருவதென அறிதற் குரிய நம் அறிவும் தூயதாய் நிறைந்ததாய் இல்லை; அறிந்த பொருள்களை நாம் விரும்பியபடித் துய்க்கவும் துவ்வாது நீக்கவும் போதுமான ஆற்றலும் உடையோ மல்லோம். ஒன்றை நினைக் கின் அது வொழிந்திட் டொன்றுகின்றது; அன்றி அது வந்தெய்தி னும் எய்துகின்றது இத்துன்ப உலகின்கண். ஆதலினா லன்றே ஆன்றோர்கள் ஆங்காங்கே இப் பிறப்பைப் பற்றி,

'பிறந்தாருறுவது பெருகிய துன்பம்
பிறவாருறுவது பெரும்பே ரின்பம்'

என்றும்,

"மாணா (இன்பமில்லாத)ப் பிறப்பு"

என்றும்,

"தோன்றி நின் றழியப்படுங் கொடும் பிறப்பிற் றுன்பமே
ஊன்றி நெஞ்சகத் தோர்ந்திடிற் பிறிதிலை"

என்றும் அறிவித்துச் சென்றார்கள்?

இங்ஙனமாகலின், இப்பிறப்பு மிகுந்த துன்பத்தைத் தருவது; அன்றி இதன்கண் இன்பம் எய்தினும் அது சிறிய அளவினதாய், அழிவதாய்த், தூய்மை யில்லாததாய்த் துன்பக் கலப்புடையதாய் உள்ளது என்பன பெறப்படுகின்றன. இனி இவ்வுலக இன்பம் போலாது வரம்பில்லதாய், நிலைத்ததாய்த், தூயதாய்த் துன்பக் கலப்பில்லதா யுள்ள இன்பம் எது? இப் பிறப்பின் நீங்கி அவ்வின்பத்தை அடையுமாறு யாங்ஙனம்? அவ் வின்பந்தான் ஈறில்லாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம்! அவனே இறைவன்!! அவனே இன்பப் பெருமான். இப் பேரின்ப வடிவினனாகிய பெருமானே கடவுள் என் றழைக் கப்படுகின்றான்.

ஆனால் இங்கு ஓர் ஐயம் உண்டாகின்றது. இக் கடவுள் என்றொரு பொருள் உண்டா? இருந்தால் அதைக் காட்ட முடியுமா? என்பன இஞ்ஞான்று யாண்டும் எழுந்து நிலவும் வினாக்கள். இவ்விரு வினாக்களுள் முன்னையதற்குக் 'கடவுள் என்றொரு பொருள் உண்டு. அது தன்வயமும், தூய உடம் பும், இயற்கை யுணர்வும், முற்றறிவும், இயல்பாகவே பாச நீக்கமும், பேரருளும், முடிவிலாற்றலும், வரம்பி லின்பமும் உடைய பொருள். 'பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்' என்று விடை கூறுகின்றேன்.

கடவுளுண்மையைப்பற்றி விவாதித்தலை நான் இங்கு மேற் கொள்ளப் புகவில்லை. கடவுளுண்மையை வெள்ளறி வுடை யார்க்கும் இனிது விளங்கும்படிப் பெரியோர்கள் செய்து வைத் திருக்கின்றார்கள் என்றதை மாத்திரம் குறிக்க விரும்புகிறேன்.

'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்று திருக்குறள் தொடங்குகின்றது.

இதன் பொருள்,

"எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன; அதுபோல உலகும் ஆதிபகவனை முதல்வனாக உடையது"

"அவன் அவள் அதுஎனும் அவை மூவினமையின்
தோற்றிய திதியே ; ஒடுங்கி மலத்து உளதாம் ;
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என்று சைவ சித்தாந்தம் தொடங்குகின்றது.

இதன் கருத்து சுருக்கமாகக் கூறின்,

"இக் காணப்பட்ட உலகம் சடமாய்ப் பலவாய் உள்ளது. நம் அறிவினால் இது, இது என்று சுட்டி உள்ளதாய் அறியப் படுகின்றது. ஆகவே இது தோற்றம் நிலை இறுதி என்ற முத் தொழிலையும் உடையது. இது இல்பொருளும் ஆகாது; உள் பொருளே யாகும். ஆயினும் பருநிலையினின்று நுண்ணிய நிலையையும் நுண்ணிய நிலையினின்று பருநிலையையும் முறை யானே அடைதல் பற்றியே இது தோற்றமும் இறுதியும் உடைய தாகக் கூறப்படுகின்றது. ஆகவே, இவ்வாறு உள்பொரு ளாய்ச் சடமாய்த் தோன்றி நின் றழியும் காரியமா யிருத்தலின் இது ஒரு அறிவுடைய நிமித்த காரணனாலேயே காரியப்பா டாகிய இச் செயற்கை நிலைகளை எய்தியதாதல் வேண்டும். அன்றியும் இது தோன்றுங்கால் தான் முன் ஒடுங்குதற்கு இட மாகி நின்ற முதல்வனிடத்திலிருந்தே தோன்ற வேண்டு மாத லின், இவ்வுலகிற்கு அந்தத்தைச் செய்யும் கடவுளே முதற் கடவுள் ஆதல்வேண்டும்" என்பது ஆகும். இதனை உணர் தற்கு ஞானம் வேண்டாம். இச்சூத்திரத்தில் கூறியவாறே இவ்வுலகத்தின் காரணங்களைப்பற்றி ஒழுங்காக ஆராய்ந்து பார்த்தால் இவ்வுலகத்திற்கு முதல்வனாகிய கடவுள் ஒருவன் உண்டு என்ற முடிவிற்கு ஐயமின்றி யாவரும் வரக்கூடும் என்று நான் துணிவாக எண்ணுகிறேன்.

இது உலகாகிய புறத்துப் பொருளைக்கொண்டு கடவு ளுண்மையைத் துணிவதாகும்; ஆகவே இது புறச்சான்றே ஆகும். இருப்பினும் இது, நம் வாழ்க்கையில் நாடோறும்

நமக்குத் துணையாக உள்ள இவ்வுலகப் பொருள்களின் ஒழுங்கு பற்றியதாதலின் ஐயமின்றிக் கொள்ளற்பாலதே ஆகும். வேறு, கடவுளுண்மையைச் சாதிக்கும் அகச்சான்றுகளும் உள்ளன. அவையே கடவுளுண்மையைச் சாதித்தற்கு மிகச் சிறந்த கருவிகளாகும். இங்கே, கடவுளுண்மையைத் தெளிந்து அநுபவத்தாலுணர்ந்து இன்புற்ற பெரியோர்களையே நான் குறிக்கின்றேன். அவர்கள் கடவுளை அநுபவத்திற் கண்டு இன்புற்றதற்கான அடையாளங்கள் மலிந்து கிடக்கின்றன. அவர்கள் அருளிய மொழிகள் கொண்டு கடவுளை ஆராயப் புகுதல் நாம் தருக்கங் கொண்டு விவாதித்து. உணர்தலைவிட எவ்வளவோ உயர்ந்தது. நம் அறிவால் நாடி முடிவு காண்டலைவிட அது எத்தனையோ மடங்கு பயன் தருவதாகும். நாம் சாஸ்திர ஆராய்ச்சியினாலும் அளவைநூல் நியாயம் கொண்டும் தெரிந்துகொள்வதைவிட மிக விளக்கமாகவும் தெளிவாகவும் சமயாசாரியர் முதலிய அறிஞர் அருள் மொழிகள் கொண் டறிந்துகொள்ளலாம். இப் பெரியோர்களின் அருள் வாக்குக்களே கடவுளுண்மையை அநுபவ சித்தமாகத் தெரிவிப்பன (Experimental evidence).

மூன்றாவதாக எனைத்துவித மறுப்புக்கள் தோன்றினும் கடவுளுண்மை மக்கட் பகுதியிற் பெரும்பான்மையோராற் கொள்ளப்பட்ட ஒருண்மையாகும். இதனைப் பிறிதொரு நியாயங்கொண்டு விளக்க வேண்டுவதில்லை. உலகில் மக்கள் தோன்றியது முதல் நாகரிகம் பெற்றோர் பெறுதோர் ஆகிய எத்தகைய குழுவினரிடத்தும் இக் கடவுளுண்மை யுணர்வு தோன்றி வளர்ந்து வருகிறது. ஒவ்வொரு மக்கட் குழுவும் தன் தன் அறிவு நிலைக் கேற்ப அக் கடவுளைச் சில பொருள்களிற் கண்டு வழிபடுதலும் கண்கூடு. இது கடவுளுண்மையைச் சாதிக்கும் உணர்வுநிலைச் சான்றாகும். (Intutional evidence)

ஆகவே, கடவுளுண்மைக் கொள்கையின்றி மக்கள் உயிர் வாழ்தல் அரிதென்பதும் கடவுளைப்பற்றிச் சிலவற்றையாயினும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று உணர்வுடைய ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இயற்கை ஆர்வம் எழுகின்றது என்பதும் விளக்கமாகின்றன.

இனி, அக் கடவுளைக் காட்ட முடியுமா? என்ற கேள்வியை எடுத்துக்கொள்வோம். இது வினாவே யன்று. நம்மால் அறியப் படும் பொருள்கள் பல உள்ளன. அங்ஙனமின்றி வேறொராற் றான் அறிதற் குரியனவாய் உள்ள பொருள்களும் உள்ளன. இவற்றுள் பின்னையன முன்னையனபோல அறிய வரமாட்டா. முன்னையனவுங்கூட எல்லாப் பொருள்களையும் எல்லா வகையா னும் அறிதற்குரிய நிலையில் இல்லை. பொருள்களை அறிதற்குக் கரு விகளாகிய கண் முதலிய புற இந்திரியங்கள், உள்ளம் முதலியன யாவும் தத்தமக்கு யோக்கியமாகிய பொருள்களையே நம் அறிவிற் குக் காட்டும் ஆற்றல் உடையன. ஒரு கருவியா னறிதற் குரிய தைப் பிறிதொன்று னறியமுடியாது. நாவா லறிதற்குரிய தொன்றைக் கண்ணாலறிய விரும்பின் அவ்விருப்பம் எங்ஙனம் கைகூடும்? கற்கண்டிற்கு இனிய சுவையுண்டு எனின், அச்சுவை யிருப்பின் என் கண்ணிற்குக் காட்டென்றலா அறிவுடைமை? அதனை எவ்வா றநுபவிக்க முடியுமோ அவ்வாறு அநுப விக்க முயலலே அறிவுடைமை. அன்றியும் 'அன்பு' என்ற கருத்துப் பொருளைக் கண்ணிற்குக் காட்டு என்றால் எங்ஙனங் காட்ட இயலும்? அதனை உள்ளத்தாலேயே கருதி யுணர வேண்டும்.

கடவுள் அழிவில்லாத பொருள். ஆகவே அதன்கண் அழி பொருள்களுக்கு உள்ள இயல்புகள் இருக்கமாட்டா. நம் அறிவு அழிபொருட் டன்மைகளையே சிறிது சிறிது அறியும் திறம் வாய்ந்தது. நம் அறிவினால் நமக்கு வேறாய் இது என்று சுட்டி அறியப்படும் பொருள் யாவும் அழியும். "அறிவினா லறிந்த யாவும் அசத்தாதல் அறிதி" என்ற திருவாக்கை உன்னுக. ஆகவே, கடவுள் அழியாப் பொருளாகலின் அவன் இவ்வாறு அறியப்படான்; அவன் மாற்ற மனங்கழிய நின்றவன். இப் பொருள் பற்றியே அவனுக்குக் கடவுள் என்ற பெயரும் எய் திற்று. கடவுள்=கடந்தது; இதனாற்றான் நம் மாணிக்கவாசக சுவாமிகளும் 'மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே' என் றருளிச் செய்தார்.

இங்ஙனமாகலின், கடவுளையும் அவ னியல்புகளையும் இப்

பொழுது நமக்கு உள்ள குறைந்த அறிவு கொண்டு அறிய முடியாது. இந்த அறிவு கொண்டு அவனிருப்பையும் அவனியல்புகளாகிய இறைமைக் குணங்களி னிருப்பையும் மாத்திரம் இவை உள்ளன என்ற அந்த அளவானே முற்கூறியபடிச் சான்றுகள் கொண்டு அறியலாம். இவ்வாறன்றிக் கடவுளை அநுபவமாய், அவனியல்புக ளெல்லாம் நம்மறிவிற் றோய்ந்து முற்றும் விளங்கும்படி உணர விரும்பின் நமக்கு இவ் வறிவுநிலை நீங்கி உணர்வுநிலை வருதல் வேண்டும். அவ் வுணர்வுநிலையிற்றான் இன்பதுன்ப மயக்க வடிவமாயுள்ள இவ்வுலகப் பொருள் யாதும் நம் அறிவிற் றட்டாது முதல்வ னொருவனே நம் அறிவில் வேறின்றி விளங்குவன். அந்நிலையில் நமக்குத் துன்பம் சிறிதும் இன்றிப் பேரின்பம் வந்தெய்தும். இந்நிலையே நம் வாழ்க்கையின் குறிக்கோள்! இதனை உயிர்கள் எய்துதலே படைப்பின் நோக்கம்!

இந்நிலையின் நாம் எய்தும் உணர்வே மெய்யுணர் வெனப்படும். இது பரஞானம் எனவும்படும். இஃதொன்றனேயே நாம் துன்பங்களினின்று விடுதலை அடைய முடியும்.

'மொழிதலிற் பரமஞான மொன்றுமே முத்திக்கேது'

என்ற ஆன்றோர் வாக்கு ஈண்டு நினைக்கத்தக்கது. இம் மெய்யுணர்வைத்தான் ஆசிரியர் திருவள்ளுவர்

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு"

என்றார். பேதைமை என்றது மயக்க உணர்வை. பிறப்பிற்கும் பிறப்பினுல் நாம் எய்தும் எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் மயக்க உணர்வே ஆதலின் பிறப்பென்னும் பேதைமை என்று உபசாரத்தாற் கூறினர். சிறப்பு என்றது எப்பொருளினும் சிறந்ததாகிய வீட்டின்பத்தை; செம்பொருள் என்றது என்ஞான்றும் ஒருதன்மையனாய் நிற்கும் முதல்வனை. அம் முதல்வன் வீட்டிற்கு நிமித்த காரணமாதலை விளக்குதற்குச் சிறப்பென்னும் செம்பொருள் என்றும், அவனை அநுபவத்தால் உணர்தலே மெய்யுணர்வு என்று விளக்குதற்குச் 'செம்பொருள்

காண்பது அறிவு' என்றும், அவ்வுணர் வொன்றுனேயே பிறப்பின் காரணமாய மயக்க உணர்வும் பிறப்பும் நீங்கும் என்றற்குப் 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்ப தறிவு' என்றும் கூறினர்.

இன்னும் கடவுள் இம் மெய்யுணர் வொன்றுனேயே அறியப்படும் என்பதை

'உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே'
'உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே'

என்றற் றொடக்கத்து அருள் வாக்குக்களானு முணர்க.

இத்தகைய மெய்யுணர்வு நமக்கு எப்பொழுது வரும்? நம்மைச் சூழ்ந்துள்ள அறியாமை நீங்கின காலத்திற்றான் வரும். அவ்வறியாமை நீங்க வேண்டின் கடவுளைப்பற்றியும் நம்மைப் பற்றியும் அவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் அவனை நாம் காணுவண்ணம் நம் அறிவு செயல்களைத் தடுத்து நிற்கும் தடையைப்பற்றியும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். இவ் வாராய்ச்சியான் நமக்கு உண்டாகும் உணர்வையே ஈண்டுக் கடவு ளுணர்ச்சி என்றது. ஆகவே, 'கடவுளுணர்ச்சி'யானது நாம் எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கிப் பேரின்பத்தை அடைதற்கு இன்றியமையாததா யுள்ள தொன்று. இவ்வுணர்ச்சி நமக்கு வேண்டுமா? வேண்டாமா? அன்பர்களே! கடவுளுணர்ச்சி வேண்டும்! ஆன்மலாபம் அடைய விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் இது கட்டாயம் வேண்டும்!! நம் வாழ்க்கையில் நாம் முயன்று அடைந்துவரும் எவ்வகை உணர்ச்சியினும் இவ்வுணர்ச்சியே தலைசிறந்ததாய் நம் வாழ்க்கையின் பயனை விளைவிப்பதா யுள்ளது. இதனை யார்தான் வேண்டாம் என்று விலக்க முடியும்?

நான் முன்னமே கூறியபடி கடவுளுண்மைக் கொள்கையானது மக்களுட் பெரும் பகுதியினரால் கொள்ளப்பட்டு வரும் உண்மையாகும். ஆகவே, கடவுளைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற இயற்கை ஆர்வமும் உணர்வுடைய ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் எழுவது ஆகும். கடவு

ஞுணர்ச்சியானது மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வேண்டற்பாலதே. அவ்வுணர்ச்சியைப் பெற ஒருவன் எவ்வளவு முயன்ருலும் அம் முயற்சியைப் போதுமான அளவிற்கு மேற்பட்டதென்ருவது பயனற்றதென்ருவது கூற முடியாது. ஆனல் சிலர் கடவுளுணர்ச்சியின் பொருட்டுச் செலுத்தப்படும் காலத்தையும், செய்யும் முயற்சியையும் வீண் காலமாகவும் பயனில் முயற்சியாகவும் கருதுகின்ருர்கள். அவர்கள், தாம் இவ்வுலகிற் செய்ய வேண்டிய கடமைகளெல்லாம் தம்மோடுடன் ருேன்றியுள்ள பிற மக்களின் நன்மையின் பொருட்டு உழைத்தலோடு முடிவடைந்து விடுகிறதென் றெண்ணுகிறதாகத் தெரிகிறது. மனிதன் இவ்வுடலினீங்கி இறந்தபின் எந்நிலையை எய்துகிருன்? என்ற வினு அவர்கள் உள்ளத்தில் அரும்புவதில்லை போலும். ஒருவன் இறக்கும்போது எத்தகைய எண்ணங்கள் எழுந்து அவன் நெஞ்சத்தைக் கலங்கச் செய்யும் என்பதையும் அவர்கள் தம் நினைவிற்குக் கொண்டு வருவதில்லையென எண்ணுகிறேன். ஒருவனுக்கு இறந்தபின் எய்துதற்குரியனவற்றை நோக்க இவ்வுலகில் எய்தும் நிலையாத புல்லிய நன்மைகள் மிக மிகச் சிறியனவன்ருே? இறந்தபின் எய்தற்குரிய நிலைத்த நன்மைகளை அறவே மறந்துவிட்டு அழிதன் மாலைத்தாய இம்மை இன்பம் ஒன்றனையே பொருட்படுத்தி ஒழுகுதல் அறிவு உடைமை யாகாது.

கடவுளைப்பற்றி உணர்தலிற் காலங் கழிப்பின் நாம் உலகில் முன்னேற்றம் அடைய முடியாதென்று கருதுகிருர்கள். இம்மையில் நாம் எய்தும் நன்மைகளும் கடவுளுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அன்பர்களே! ஊன்றிப் பாருங்கள். சமய ஞானமும் கடவுளுண்மைக் கொள்கையுமே யல்லவா மனிதன் பிற உயிர்களின் நன்மையைக் கருதி ஒழுக வேண்டுதலின் அவசியத்தை நிலைபெறுத்துவன? உயிர்களுக்கெல்லாந் தந்தையாகிய ஒரு முதல்வன் உளன் என்ற நம்பிக்கையினு லல்லவா மக்களிடை ஒற்றுமை யுணர்வும் சகோதரத்துவமும் பெருகித் தேசம் என்ற உணர்ச்சி (recognition of national life) யை உண்டு பண்ணுகின்றன? எல்லா உயிர்

களும் கடவுளின் மக்கள்; கடவுள் எல்லா உயிர்களிடத்தும் கலந்து உளன் என்ற எண்ணம் அன்றோ ஒருவனைப் பொது நன்மையைக் கருதித் தொண்டியற்றத் தூண்டுகின்றது? இஃதொன்றே பொது நன்மையின் பொருட்டுத் தனித்த தன்மையைப் பொருட்படுத்தாது விடுதலையும் பெரிதாகிய நாட்டிற்குச் சிறிய தன்னைத் தியாகஞ் செய்தலையையும் வளர்க்கவல்லது. இவையெல்லாம தேச மக்களிடை இன்றியமையாது இருக்க வேண்டிய நற்குணங்கள்.

அறமெனப்படும் நல்லொழுக்கம் ஒரு மனிதன் இவ்வுலகில் வாழ்தற்கு இன்றியமையாதது என்பது அறநூலுடையார் யாவருக்கும் உடன்பாடு. உலகத்தைப் படைத்த முதல்வனையும் அவனை அடைவிக்கும் சமயத்தையும் பொருட்படுத்தாமல் எந்த நல்லொழுக்கத்தையும் உணர முடியாது. கடவுளுணர்ச்சியின்றி நல்லொழுக்கமே நிலைபெற முடியாது. கடவுளிடத்து அன்பும் அவரது ஆணைக்கு அடங்கி ஒழுகுதலும் மக்கள் கூட்டுறவின் கண் ஒழுங்கையும் பகையின்மையையும் உண்டுபண்ணுதற்கு இன்றியமையாதன. தம்மைப் படைத்த முதல்வனைச் சிறிதும் எண்ணாத மக்கட் கூட்டத்தின் நிலையை விவரித்தலைவிட நன்றாக நினைத்துத் தெரிந்துகொள்ளலாம். ஆதலினால் கடவுளுணர்வும் கடவுள் நெறியும் உலகியலோடும் அறவியலோடும் ஒருங்கே வளர்த்தற்கு உரியன. சுவாமி விவேகாநந்தரும் இவ்வாறே தம் விரிவுரைகளில் ஒரு நாடு பொருளின்பங்களிற் சிறந்து நிலைபெறுதற்குக் கடவுளுணர்ச்சியானது இன்றியமையாதது என வற்புறுத்திக் கூறியுள்ளார்.

ஆசிரியர் திருவள்ளுவனாரும் பொருளின்பங்களாகிய உலகியலை நிலைபெறுத்துவது அறம் என்று அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தாற் கூறி அவ்வறத்திற்குக் கடவுட்கொள்கை அடிப்படையானதென் றறிவித்தற்கு அறத்துப்பாற் பாயிரவியலில் முதற்கண் கடவுள் வாழ்த்து என்பதைப் பொருளாகக் கொண்ட அதிகாரத்தைத் தொடுத்துள்ளார். இவ் வதிகாரங் களினியையும் கருத்துப்பற்றி ஒரு தனித்த ஆராய்ச்சி செய்ய வேண்டுதலின் அவ்வாராய்ச்சியில் நான் இங்குப் புக விரும்ப

வில்லை. ஆனல் இஃதொன்றனைமட்டும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்:—

இறைவன் அறத்தை வடிவாக உடையவன். அறத்திற்கு இறைவ னுயிர். இறைவன் உணர்ச்சியும் அவன்பால் அன்புமின்றிச் செய்யும் அறம் பயன்தராது; அது உயிர் நீங்கிய உடலோ டொக்கும். பொருளின்பங்கள் அப்பெற்றித்தாய் அறத்தை அடிப்படையாகக் கொள்ளுதலினுல் அவை கடவுள் திருவருளாலேயே துய்த்தற்குரியன. கடவுளிடத் தன்பில்வழி அப் பொருளின்பங்கள் ஒருவனுற் றுய்க்கப்படும் பொருளாகாமல் அவனைத் தங்கண் அழுந்தச் செய்து பிணித்தலை யுடையனவாய்த் துன்புறுத்தும். ஈ முதலியன தேன் முதலியவற்றை உண்ணக் கருதிச் செல்கின்றன; ஆனல் அவை அத் தேன் முதலியவற்ருல் பிணிக்கப்பட்டு உயிர் துறக்கின்றன. கடவுளுணர்வின்றிப் பொருளின்பங்களை நுகரப் புகுவோனும் இந்நிலையையே எய்துகிருன். இக்கருத்துக்க ளெல்லாம்

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்த லரிது"

என்ற அருமைத் திருக்குறளிற் றேன்றுவதை, அன்பர்களே, உன்னுக! உன்னுக!!

இதுகாறும் கூறியவாற்ருன் கடவுளுணர்ச்சி ஆன்ம நிலையின் முற்றும் பேறுபற்றியும் அறவியல் பற்றியும் பொருளின்பங்கள் ஆகிய உலகியல் பற்றியும் மக்களுக்குக் கட்டாயம் வேண்டும் என்று ஒருவாறு விளக்கினேன். இன்னும் இதனை விரிக்க நான் விரும்பவில்லை. எனக்கு இவ்விரிவுரை நிகழ்த்தலாகிய உரிமை வழங்கி இதுகாறும் அன்பு கூர்ந்து பொறுமையோடு கேட்டிருந்த அன்பர்களாகிய உங்களுக்கு எனது செய்ந்நன்றி யறிதலாகிய வணக்கத்தைச் செலுத்துகிறேன். குற்றங்கள் நிகழ்த்தி யிருப்பின் மன்னிக்க. இதனேடு என் விரிவுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

பிரகிருதி சாஸ்திரம்

நாம் வசிக்கு மிவ்வண்டத்தினை யுற்றுநோக்குமிடத்து அதன்கணுள்ள பொருள்கள் கணக்கற்ற இயக்கங்களையு மாறுதல்களையு மேற்கொண் டிருப்பதைக் காண்கிறோம். அக்காட்சிகள் அல்லது தோற்றங்கள்[1] அகஸ்மாத்தாய்க் காரணமின்றியொருங்குசேர்ந்த பொருட்கூட்டங்களின் சேட்டைகளென்று எண்ணக்கூடாமற் கண்ணுக்குப் புலப்படாத பிரகிருதி நியாயங்களின்பாற்பட்ட[2] சம்பந்தா சம்பந்த நிலைமைகளா லமைந்து கிடக்கின்றன. இத்தன்மையான பிரகிருதிப் பொருள்களின்[3] சம்பந்தா சம்பந்தங்களை ஆராய்ந்து கடைப்பிடித்தலே பிரகிருதி சாஸ்திரத்தின்[4] கருத்தாகும்.

பொருள்களிடத்து நீங்காச்சம்பந்த மொன்றைக் கண்டுபிடித்தபோது அவ்வொற்றுமை விளக்கத்தைப் பிரகிருதி நியாயமென்கிறோம். உதாரணமாக : பொருள்களைக் காய்ச்சினவிடத்து அவை பருக்கின்றன ; இதனால் ' உஷ்ணம் பொருள்களைப் பருக்கச்செய்யு' மென்கிற வொரு பிரகிருதி நியாயத்தைக் கண்டுபிடிக்கலாயிற்று. அதுபோலவே ஒரு கடிகை மழைக்காலத்திற் போவதைப் பார்க்கிலும் வேனிற்காலத்தில் மெதுவாய்ப் போகின்றதென்கிற தோற்றத்தினை நோக்கினவிடத்துத், ' தொங்கு கருவிகளின்[5] நீளம் அதிகமாக அவற்றின் அசைவு வேகம் குறையு ' மென்பதும் ' உஷ்ணம் பொருள்களைப் பருக்கச் செய்யு' மென்பதுமான பிரகிருதி நியாயங்களால் அத்தோற்றத்தி னுண்மையைக் காரணங்கொண்டு தெளிகிறோம். எல்லாப் பொருள்கட்கும் பொதுவாயிருக்கு மிவ்வகை முக்கியமானவைகளைப் பற்றியே இங்கே சற்று விரித்தெழுதக் கருதினம். அவற்றைப் 'பொருட்குணம்'[6] 'பொருள் வலி'[7] யென இருவகைகளாகப் பிரித்து முன்னர்ப் பொருட்குணங்களை விளக்குகின்றாம்.

---

1. Phenomena 2. Laws of Nature 3. Matter 4. Natural Philosophy
5. Pendulums 6. Properties of matter 7. Forces

பொருட்குணம்

பிரகிருதியிற் காணும் பொருள்களுக்கெல்லாம் சில குணங்களுள. அக் குணங்களிற் சில எல்லாப் பொருள்களுக்கும் பொதுவாகவும் ஏனைய சில பொருள்களுக்கு மாத்திரமே சிறப்பாகவும் அமைந்துள. அவற்றை ஒவ்வொன்ருக எடுத்து விளக்குவாம்.

1. விரிவு[1] :—ஒவ்வொரு பொருளுக்கும் விரிவு அதாவது நீளம், அகலம், பருமன் இல்லையாயின் எப்பொருளையுங் காண்பது அரிதாய்விடும். இவற்றி னேற்றத் தாழ்ச்சியினுல் தான பலவித உருவங்களு முளவாகின்றன.

2. ஊடுருவப்படாமை[2] (நிராக்கிரயணம்):— அதாவது இரண்டு பொருள்கள் ஒரே சமயத்தில் ஒரே யிடத்தில் பொருந்தா வென்பதாம். தொட்டித் தண்ணிர்க்குட் கையைப் புகுத்தலாமெனின் இங்கே நீர்த்துளிகளைத் தம்மிடம் விட்டுப் பெயர்த்த பின்னரே கை யவ்விடத்து அமர்ந்து கிடந்ததல்லாமல் ஒரே காலத்தி லொரே இடத்தில் இரண்டு பொருள்க ளிருந்தமைக்கு உதாரண மாகமாட்டாதென்க. மீண்டும், நன்ருய்ப் பொடித்த நாழி யுப்பினையும் நாழி யப்பினையும் ஒன்ருய்ச் சேர்க்க இருநாழி யாகாது குறைவுபடுவதேனெனிற் கூறுவாம். பொருள்களி னணுக்களிற் கிடையிடையே வெற்றிடங்கள் சில சிலவற்றிற் சிறியனவாகவும் சிலவற்றிற் பெரியனவாகவும் அமைந்து கிடக்கின்றன. பருத்தி, குறுங்கிடை, மரம், நெட்டி முதலியனவற்றிற் பெரியனவாயுள்ளன. இதுபற்றியே இவைகள் அமுக்கல் அல்லது அழுத்தல் வலியால்[3] சுருங்கப் பெறுதலும் மற்றைப் பொருள்களால் அவ்வெற்றிடங்கள் நிரப்பப் படுதலுங் கூடும். ஆதலால் நாழி யுப்பும் நாழி யப்பு மிருநாழி யாகாமற் குறைவு பட்டமைக்குக் காரணம் உப்பினிற் சிறிது அப்புவினிடையுள்ள வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ளலே யென்க.

3. பாகுபாடு[4] :—பொருள்களின் பாகுபாட்டினை யாரே

---

1. Extension 2. Impenetrability 3. Pressure 4. Divisibility

யுரைக்கற்பாலார் ? ஒரு மரக்கட்டையிலிருந்து துண்டொன்று வெட்டலாம் ; அத்துண்டினின்றும் வாளுதவியால் தூள் பெறலாம் ; இத்தன்மையான தூள் ஒவ்வொன்றும் பூததிருஷ்டிக் கண்ணுடி[1] மூலமாய்ப் பார்த்தால் மரக்கட்டையின் வடிவமாய் நிற்பதையும் அஃது இன்னும் மிகச்சிறிய தூட் கூட்டங்களாலமைந்து கிடப்பதையுங் காணலாம். பொருள்களின் பாகுபாட்டினை யுரைப்பது மகா கஷ்டம். பத்து லக்ஷம் ஜீவன்களை ஒன்றன்பக்கத் தொன்ருகக் கிடத்தினுலும் ஒரு மணற் பருமனுக்கு மேலாகாதவளவு நுண்ணிய ஜீவன்களின் உண்மைகளை பூததிருஷ்டிக் கண்ணுடி வெளியிடுகின்றது. இச்சிறு ஜீவன்களுக்கும் அவயவங்களும் இயக்கமுமுள்ளன ! இவைகளுக்கு நாடிகளு முளவாயின் அந்நாடிகளின் வழியாக இரத்தமும் பாய்ந்துகொண்டிருக்குமாயின் அவ்விரத்தத் துளிகளின் நுண்மையை யாவராலுரைக்க முடியும் ?

அப்படியாயிற் பொருள்களின் பாகுபாட்டிற்கு எல்லையே இல்லையோவெனின், அப்படிக் கொள்வதும் அசாத்தியமாயிருக்கின்றது. பொருட்கலவை,[2] ஸ்படிகாகரணம்[3] முதலிய காரணங்களா லித்தன்மையான பாகுபாட்டிற்கு மோர் எல்லையுண்டென்று ஊகிக்கப்படுகின்றது. கடைசியாகப் பகுக்கப்படாது நிற்கக்கூடியவற்றிற்கே அணுக்கள்[4] எனப் பெயரிடப்பட் டிருக்கின்றது.

4. அழிவின்மை[5] :— பொருள்க ளெப்பொழுது மழிதலில்லை யென்று சொன்னல் விளக்கெரியும்போது எண்ணெய் காணுமற் போதலையும், ஏரிகளிற் சலங் குறைவுபடுதலையும் கண்ணுறும்போது அவை சிறிது ஆச்சரியமாகத் தோன்றக்கூடும். ஆயினு மிங்கே யெடுத்துக்காட்டிய உதாரணங்களும் இவைபோன்றவைகளும் உருவம் அல்லது தன்மையின் மாறுதல்களுக்குக் காட்டுக்களாமே யன்றிப் பொருளழிவிற்குக் காட்டுக்களாகா. தன்மை மாறினும் பொருளினுக் கழிவின்று. ஒரு கடாகத்தினிற் கொஞ்ச சலத்தினை உஷ்ண சக்தியால் ஆவியாக

1. Microscope 2. Chemical Combination 3. Crystallisation
4. Atoms. 5 Indestructibility

மாற்றிறு மவ்வாவி வெளிப்புகாவண்ணங் கடாகத்தின்வாய் மூடிவைத் திருந்திருக்கப்பெறின் அக் கடாகத்தின் இடை சிறிதுங் குறையாதிருப்பதைக் காணலாம். மீண்டுமக் கடாகத்தினைக் குளிர்நீராற் குளிர்ச்சி செய்த பின்னர் முதலிருந்த ஜலமவ்வளவு மாங்கிருக்கக் காணலாம். இதுபோலவே இவ்வண்டத்திலும் பலவித நிலைமாறுதல்க ளுளவேயன்றி யொரு பொருளும் புதிதாகச் சிருட்டிக்கப்படுவதாவது அழிக்கப்படுவதாவது இல்லை. அனுதி தொடங்கிப் பலவித நிலைகளில் அமைந்து கிடப்பதே யன்றிப் புதிதாக வுளதாதலு மிலதாதலு மெப்பொருட்குமில்லை.

5. ॰ நிலைப்பிடிப்பு[1] (அசேஷ்டனம்):—அஃதாவது உயிரில் பொருள்கள் புறக்காரணத்தா லன்றித் தாமொருபோது அடைந்த நிலைமைகளில் மாறுபடாமல் தம் நிலைமையினையே பற்றி நிற்றல். இயக்கமிலா நிலைமையினின்றுந் தாமே இயக்கங்கொள மாட்டா. இயக்க நிலையினின்றுந் தாமே இயங்கா நிலை கொள்ளா. நிலைப்பேதத்திணுக்குப் புறக்காரண மிருத்தலாவசியகம். பூமியின்மீது ஒடவிட்ட பந்து சீக்கிரத்தில் நின்றுவிடுகின்றது; அப் பந்தினையே நன்குழைத்த;மரப்பலகையின்மீதோடவிட்டால் அதிக நேர மோடுகின்றது. என்னை? மரப்பலகையினுலுண்டான உறழ்ச்சி வலியினும்[2] பூமியாலுண்டான வுறழ்ச்சிவலி யதிகமானதனுலென்க. அஃது இயக்க நிலையிலேயே யிராமைக்கு வாயுவி னுறழ்ச்சிவலி மற்றொரு காரணமாகும். இவ் விருவகை யுறழ்ச்சியே பந்தினோட்டத்தை யெதிராக நின்று தடுத்தனவென்க. சுழலும் பம்பரம் காற்றெழிகருவியால்[3] வாயுநீக்கப்பட்ட விடத்தில் நெடுநேரம் சுழன்று கொண்டிருக்கும், வாயுவினுறழ்ச்சி இங்கே யில்லையாதலால். கிண்டி யென்னுமூரில் நடக்கும் பந்தயத்தின்கண்[4] குதிரைகள் கொடிக்கம்பத்தைத் தாண்டி வெகு தூரஞ் செல்வதற்குக் காரணம் அவற்றின் தேகங்களுக்கு இயக்க நிலையின்கணுள்ள பிடிப்பினு லென்க. அன்றியும் ஒரு வண்டி யோடிக்கொண்

---

1. Inertia 2. Friction 3. Air-pump 4. The Guindy Races

டிருக்கையில் ஒருவன் குதிப்பானுயின் அவன் குப்புற வீழ்தல் வேண்டும். என்னே? வண்டியின் வேகத்தினை மேற்கொண்டு அவன் தேகமுமியக்கங் கொண்டிருக்கும் போது அவன் திடீரெனக் குதித்தலால் அவன் காலினியக்க மாத்திரம் பூமியிற் றேய்தலாகிய புறக்காரணத்தால் நிறுத்தப்படலும், தேகத்தின் மேற்பாகம் அத்தன்மையான புறக்காரண மொழியவே வண்டியின் வேகங்கொண்டு அசைந்தே நிற்பதனுல் விழவேண்டியதாயிற்று. புறக்காரண மில்லாதபோது அசையும் பொருள்கள் அசைந்துகொண்டே யிருப்ப, வாயுவினுறழ்ச்சி முதலிய வுறழ்ச்சிகள் சிறிது மில்லாமல் ஆகாயத்தினூடே சஞ்சரிக்குங் கிரகக் கூட்டங்கள் அனுதிதொடங்கி யசைந்தே நிற்கின்றன.

6. சுருங்கல்[1] :—பருத்தல்[2] :—யாதேனுமொரு பொருள் அழுத்தல் வலியாலாவது குளிர்ச்சியாலாவது முன் கொண்ட விடத்தினுஞ் சிறிதிடம் குறுகிக் குறையுமாயின், அது சுருங்கிற்றெனவும்; அழுத்தல் வலி நீக்கத்தினுலாதல் உஷ்ணத்தினுலாதல் அதிகமா யிடங் கொள்ளுமாயின் அது பருத்த தெனவும் படும். மிகவு மதிகமாகச் சுருங்கக் கூடியன வாயுப்பொருள்களே; மிகக் குறைவாகச் சுருங்கக் கூடியன தண்ணீர் முதலிய திரவப் பொருள்களாம்.[3] சதுரங்கலத்திற்குப் பதினையாயிரம் ராத்தல் வலியால் இருபது பங்கி லடங்கக்கூடிய ஜலம் பத்தொன்பது பங்கி லடங்கும். வாயுக்கள் அதிகக் குளிர்ச்சியினுலும் அழுத்தல் வலியினுலும் மிகச் சுருங்குவனவே யல்லாமல் திராவக ரூபமாகவும் மாறிவிடும். பொருள்கள் சாதாரணமாய்ச் சூட்டின் காரணத்தாற் பருக்கின்றன. இருப்புக் கம்பியைக் காய்ச்சினுல் அது பருக்கக் காணலாம். திடப்பொருளினும்[4] திரவப் பொருள்க ளதிகமாகப் பருக்கக் கூடியன. வாயுக்கள் பருத்தற்கு அளவே கிடையாது. கொட்டைப் பாக்கி னளவினதாக எவ்வித வாயு[5] வையேனும் ஓரறையில் விட்டால் அஃது அவ்வறை முழுவதும் பரவி விடும். அவ்வாயு வில்லாத பாகம் அவ்வறையெங்குங் கிடையாது.

---

1 Contraction 2 Expansion 3 Liquids 4 Solids 5 Gas

7. மீட்சிவலி[1] (ஸ்திதி ஸ்தாபகம்):— சில பொருள்கள் அழுத்தல் வலி அல்லது குளிர்ச்சி காரணமாய்ச் சுருங்கின வெனினும் அவ்வழுத்தல் வலி அல்லது குளிர்ச்சி நீங்கின வுடனே அவை மீண்டும் தம்முடைய முன் பெற்றியை யடைகின்றன. அத்தன்மையான பொருள்களே இம் மீட்சி வலியை யுடையனவாகும். திரவப்பொருள்கட்கும் வாயுப்பொருள்கட்கும் இக்குணம் அதிகமாக உண்டு. திடப்பொருள்களில் தந்தம்-ரப்பர்-முதலியவற்றிற்கு இக்குண மதிகம். ஒரெஃகு கம்பியினை இழுத்து விட்டுவிட்டாற் சற்று நேரத்தில் ஏறக்குறைய முன்பிருந்த பிரமாணத்திற்கு வந்துவிடும். [இம் மீட்சி வலியை நிலைபெறுத்துகை யென்பர் ஆசிரியர் சிவஞான யோகிகள்.]

8. தொளைத்தன்மை[2] :— நெருக்கம்[3] :— முன்னர் நிராக்கிரமணத்தைப்பற்றி விரித்தபோது பொருள்களின் அணுக்களுக்கு இடையிடையே வெற்றிடங்களுளவென்று கூறினோம். இவ் வெற்றிடங்கள் அழுத்தல் வலியாலாதல் சீதோஷணத்தாலாதல் குறைவுபடலும் அதிகப்படலுமே பொருள்கள் சுருங்கற்கும் பருத்தற்கு மேதுவென்றறிக. இவ் வெற்றிடங்கள் குறையக்குறைய அணுக்களின் நெருக்க மதிகமாகின்றன. திடப்பொருள்கள் கனமாயிருத்தற்கு அவற்றி னணுக்கள் நெருக்கமாக அவற்றின் இடையுள்ள வெற்றிடங்கள் சிறுபான்மை யென்பது ஒரு காரணமாகும். கனம் அதிகமாகுந்தோறும் இடையும் அதிகமாகும். குளத்தின் நடுவில் வர்ணத்திராவகம் நிறைந்ததொரு தொட்டியினை மிதக்கவிடலும் சிறிது நேரத்தில் அத்தொட்டியி லந்தத் திராவகமில்லாமற் குளிர்நீ ரிருக்கக் காணலாம். என்னை? வர்ணத் திராவகமனைத்தும் தொட்டித் துவாரங்களினூடே வெளிப்புகக் குளிர்நீர் உள்ளே நுழைவதனாலென்க.

9. நிலக்கவர்ச்சி[4] (பௌமியாகர்ஷணம்):— கவர்ச்சித் தோற்றங்களில் அநேக விதங்களுள. அவற்றை முறையே

1 Elasticity 2 Porosity 3 Density 4 Gravity or Earth's attraction

விளக்கக் கருதி முதலில் நிலக்கவர்ச்சியை யெடுத்துக்கொண்டனம். மரத்தின் பழம் ஏன் கீழே விழுந்தது? இதற்குக் காரணம் மேற்புல விஞ்ஞானிகளு ளொருவர் [1] கண்டுபிடித்தார். ஒவ்வொரு பொருளும் மற்ற ஒவ்வொரு பொருளையும் தன்தன் பிரமாணத்திற்கேற்பவும் இடையேகிடந்த தூரத்திற் கேற்பவும் இழுக்கின்றதென்னும் ஓராச்சரியகரமான பிரகிருதி நியாயத்தினை வெளியிட்டார். இவ்வியற்கை யொழுங்கிற் குட்பட்டே பூமியானது மரத்தின் பழத்தினையும், சந்திரனையும், ஞாயிறு பூமி முதலிய கிரகங்கள் யாவற்றினையு மிழுக்கின்றன வென்பதைப் புலப்படுத்தினர். இவற்றி லொன்றே மற்றொன்றை இழுப்ப தென்பதின்றி ஒன்றனை யொன்று பரஸ்பரம் இழுக்கின்றது என்பது வலியுறுத்துணரற் பாலது.

10. காந்தக்கவர்ச்சி[2] :—காந்தமென்று சொல்லப்பட்ட ஒருவித இரும்பினை நூலினல் தொங்கவிட்டால் அதனெரு முனை வடதிசையையே நோக்கி நிற்கும். அதனருகே வேறொ ரிருப்புத் துண்டினைக் கொணரின் இரண்டும் ஒன்றனை யொன்று இழுக்கக் காணலாம். ஓரிருப்புத் துண்டு அல்லது எஃகினற் செய்யப்பட்ட ஊசி ஒன்றைக் காந்தத்தின்மே லொரு விதமாகத் தேய்த்தால் அதுவுமொரு காந்தமாம். இத்தகைய காந்தந்தான் கரைகாணக் கடலில் மாலுமிக்கு வழிகாட்டிக்கொண்டு வருகிறது.

11. மின்வலிக்கவர்ச்சி[3] :—மின்வலி கண்ணுக்குப் புலப்படாதெனினும் அதிகமாக ஆகாயத்தின்கண் உண்டாகின்றது. இவ்வலி எல்லாப் பொருள்களிலும் சாதாரணமாய் ஏற்றத்தாழ்ச்சியின்றிச் சமமா யிருப்பவும் சில காரணங்களாற் சில வமயத்துச் சில பொருள்களில் அதிகமாகவும் சிலவற்றிற் குறைவாகவும் நிற்கும். மிக்க மின்வலியுள்ள பொருள் குறைந்த மின்வலியுள்ள பொருளருகில் நின்றால் ஒன்றினை யொன்று இழுக்கும். இதற்குத்தான் மின்வலிக்கவர்ச்சியென்று பெயர். வேனிற் காலத்திற் கண்ணாடியாற் செய்த கொம்பொன்றினைத் துணியால் நன்றாய்த் தேய்த்துக் காகிதத் துண்டுகள் முதலிய இலே

1 Sir Isaac Newton　　2 Magnetic attraction　　3 Electric attraction

சான பொருள்களருகிற் கொண்டுவர அவைக ளிழுக்கப்படுவதைக் காணலாம். இவ்வலி யதிகமாகி மேகங்களொன்றோடொன்று உராயும் போதுதான் மின்னலும் இடியும் உண்டாகின்றன. (தொடரும்)

(ஞானபோதினி).

திருத்தம்

(திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்.)

செந்தமிழ்ச் செல்வி 9-சிலம்பு 1-பரல் 12-வது பக்கத்தில் "மேலும் அப்பர் அவதார ஸ்தலமாகிய திருவாமூரில் அவரைப் பற்றி யாதொரு கல்வெட்டும் கிடைக்கவில்லை" என்று எழுதியிருந்தேன். எனது நண்பர் திருநாமநல்லூரைச் சார்ந்த கிழக்கு மருதூர் திரு. தி. கு. நாராயணசாமி நாயுடு அவர்கள் அன்புடன் தெரிவித்தபடி அவ்வுரை பிசகு என்று தெரிந்தது. அப்பர் அவதரித்த தலமாகிய திருவாமூரில் சில கல்வெட்டுகள் இருக்கின்றன. அவைகளில் ஒரு கல்வெட்டில் " திருநாவுக்கரைய தேவர்க்கு நாங்கள் விற்றுக் கொடுத்த நிலமாவது" என்றும், "ஆளுடைய திருநாவுக்கரைய தேவர்க்கு விலாலேகை செய்து கொடுத்தோம் திருவாமூர் ஊரோம்" என்றும் காண்கிறோம். இக் கல்வெட்டு குலோத்துங்கச் சோழன் 21-ம் ஆண்டில் செதுக்கப் பெற்றது. அதில் மெய்க்கீர்த்தியானது "புகழ் மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர் மகள் புணர" என்று இருத்தலால் அவ்வரசன் 1073 முதல் 1118 வரை ஆண்ட I-வது குலோத்துங்கன் ஆகவேண்டும். ஆகவே இக் கல்வெட்டு 1094 ஆண்டில் ஏற்பட்டது. இச் சாசனத்தை அரசாங்கத்தார் எடுத்து எழுதாததால் மேற்சொன்ன பிசகு ஏற்பட்டது. தற்போது இக் கல்வெட்டை நண்பர் நாராயணசாமி நாயுடு அவர்கள் படித்து எழுதி வெளியிட்டதால் அன்னார்க்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட் டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



சிவபுரம் ஜமீன்தார், பா. வே. மாணிக்க நாயகர்,
அவர்கள் பி. இ., ரிட்டையர்ட்
சப்ரிண்டெண்டிங் இஞ்சினியர், சென்னை.

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு கூ } மெய்கண்டான் யாண்டு-எாகூ மார்கழித் திங்கள் 1931ஆ டிசம்பர்மூ—1932ஆ ஜனவரிமூ { பரல் கஉ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேத்தப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப் பேற்றேனினி
ஈசன் றன்னையும் யான் மறக்கிற்பனே.

பதவுரை:—

ஈசன் சேவடி=என்னை ஆளுகின்ற இறைவனுடைய செவ்விதாகிய திருவடிகளை

எத்தப் பெறுதலால்=நான் வணங்கித் துதிக்கப் பெறுதலால்

ஈசன்=அந்த இறைவன்

என்னை அறிந்தது அறிந்தனன்=எனக்கு வேறாக நின்று அறிவித்து வருகிறதும் அல்லாமல் என்னை நான் அறியும் வண்ணம் என்னுடன் நின்று எனக்காக அறிந்து வருகிற முறைமையையும் நான் அறிந்துகொண்டேன்.

ஈசன் தன்னையும ஏத்தப் பெற்றேன்=அவ்வாறு காணும் உதவி செய்துவரும் இறைவனை நான் வணங்கித் துதித்து அவனை அறிந்துகொண்ட காரணத்தினால்

இனி=இனிமேல்

ஈசன் தன்னையும்=இத்துணை உதவி செய்துவந்த அந்த இறைவனை

யான் மறக்கிற்பனே=யான் என் உள்ளத்தில் எப்பொழுதும் நினைத்

தக்கொண் டிருப்பனே அல்லாமல் அவனை ஒரு கணமாயினும் மறக்க என்னால் முடியாது.

விளக்கவுரை:—

ஈசன் என்னும் வடமொழிச் சொல் ஆளுதல் என்று பொருள் படும். ஈஷ் என்னும் அடிச்சொல்லிலிருந்து வந்தது. (ईश्-to rule) ஆளுகின்ற ஆண்டவன் என்னும் பொருள்.

சேவடி என்னுஞ் சொல் செம்மை-அடி என்ற இரண்டு சொற்களா லாகியது. செம்மையிலுள்ள ஈற்று உயிர் மெய் கெட்டு முன் னின்ற மெய் திரிந்து முதலெழுத்து நீண்டு சேவடி என்றாயது. செம்மை என்பது நேர்மை, நடுவுநிலைமை. அடி என்பது அருளைக் குறிக்கின்றது. சேவடி விருப்பும் வெறுப்பு மில்லாது எல்லா உயிர்க ளிடத்தும் நடுவு நிலைமையில் நின்று அதனதன் வினைக்குத் தக்கபடி பயனுதவும் அருள்.

ஏத்துதலாவது வணங்கல்; தொழுதல். ஆளுகிற ஆண்டவனாகிய ஈசனுடைய வியாபக அறிவு வேட்கை செயல்களில் ஒருவன் தனது வியாப்பிய அறிவு வேட்கை செயல்களை அடங்கும்படி செய்து ஈசனை அன்றித் தனக்கென ஒரு செயலும் இல்லை என்று அறிந்து தன் முனைப்பு நீங்கி நிற்றல்.

ஏத்துதல் இருவகை - ஒன்று இறைவன் உயிரினிடத்தும் உலகி னிடத்தும் தோன்றும் முறைமையை வேறாக நின்று பொது வியலில் வழிபடுதல். பொது வியலில் வழிபடுதல் கேட்டல் சிந்தித்தல்களாற் பெறப்படும். மற்றொன்று அவனோடு இரண்டற (அத்துவிதமாய்த்) தோன்றி நின்று சிறப்பியலில் வழிபடுதல். சிறப்பியலில் வழிபடுதல் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல்களாற் பெறப்படும். பொது வியல் வழிபாடு சிறப்பியல் வழிபாட்டுக்குக் காரணமாகும். இங்கே கூறிய வழிபாடு இரண்டாவதாகக் கூறிய சிறப்பியல் வழிபாடு. இந்த வழிபாட்டைத்தான் அடிகள் 'ஞானத்தாற் றொழுவார் சில ஞானி கள்' என்ற குறுந்தொகைத் தேவாரப் பாட்டிற் கூறியருளியது.

ஈசன் என்னை அறிந்தது அறிதல். இறைவன் எப்பொழுதும் உயிரு டன் இரண்டறக் கலந்து நின்று அஃது உலகப் பொருளை அறியுமாறும் தன்னை அறியுமாறும் காணும் உதவியாகிய அறிதலைச் செய்து வருகி றான். அவன் அவ்வாறு உயிரினிடத்தில் காணு முதவியாகிய அறிதலைச் செய்யாவிட்டால் உயிர் ஒன்றையும் அறிய மாட்டாது. இவ்வாறு இறைவன் உயிரினிடம் நின்று காணு முதவியைச் செய்தலை உயி

ரானது உலக நெறியில் அறியமாட்டாது. அஃது உலக நெறியை விட்டு வீட்டு நெறிக்கு வந்தபொழுது தன்னிடத்தில் இறைவன் இரண்டறக் கலந்து நின்று காணும் உதவியாகிய அறிவலைச் செய்து வருகின்றதை அறிகின்றது. அதனால் உயிர் தன்னிடம் விளங்குகின்ற இறைவனையும் அறிகின்றது. உயிரினுடைய இந்த நிலையை அடிகள் இங்கே கூறுகின்றார்.

மறக்கிற்பனே-கில் என்பது ஆற்றலுணர்த்தும் இடைநிலை. 'ஏ' இங்கே எதிர்மறைப் பொருளில் வந்தது. என்றால் மறக்கமுடியாது என்பது பொருள்.

எங்கும் நிறைந்துளள (வியாபகமாயுள்ள) இறைவனது அறிவுடன் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையிலுள்ள உயிர் இறைவனை எவ்வாறு மறத்தல் கூடும்? அந்நிலை நினைப்பும் மறப்புமற்ற நிலையாதலின் உயிருக்கு மறத்தல் கூடாது.

இத் தேவாரப் பாட்டினால் மக்கள் மலத் தன்மையினின்று நீங்கிச் சிவத்தன்மை அடைதற்கு இறைவனைச் சார்தலாகிய இறைவன் வழிபாடு (இறைவனுடைய வழியிலே பொருந்துதல்) இன்றியமையாது வேண்டப்படும் என்பது பெறப்பட்டது. இறைவன் வழிபாடு வேண்டப்படுவதொன்றன்று என்றும், இறைவன் வழிபாடு மக்கட் பொருட்டன்றி இறைவன் பொருட்டு என்றும் இக்காலத்தில் உண்மை அறியாது கூறும் போலி அறிஞர் கூறும் உரையும் இப்பாட்டினால் மறுக்கப்பட்டது என அறிக.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

திருவாசகமும் பரஞ்சோதி முனிவரும்

[திரு. அ. மு. சரவணமுதலியார் அவர்கள்]

(சகூ௫-வது பக்கத் தொடர்ச்சி)

'இனி 'அடிகள் அங்ஙனங் கூறுவதற்குத் தான் ஏது என்ன' வென்பதைத் திருவாசகக் கருவிகொண்டு துருவி ஆராயுங்கால் மேல் அடியார் அல்லது பெரியார்களின் இலக்கணமாகக் கூறிய பொதுக்காரணமே யன்றி ஒரு சிறப்புக் காரணமுமுளது; அதுவும் அப்பொதுவின் ஒரு கூற்றிலடங்கு மென்க. 'அதுதான் என்னை' யெனிற் கூறுதும்:—

அடிகள், யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையானாகிய ஆண்டவன், யாவர்க்குங் கீழாகக் கருதப்பட்ட தம் பொருட்டு, அருட்டிருமேனி கொண்ட ஆசிரியனாய்ப் போந்து யாவரும் பெற்றறியா இன்பத்துள் தம்மை அழுத்தியதையும், பெருந்துறை யிடத்துக் குருந்த நிழலிலிருந்து பார்த்த அருணோக்காற் காய்ந்த இரும்பு நீரைப் பருகுமாறு தமது முனைப்பைப் பருகி, நீராயுருகவும், என்பெலாம் நெக்குருகவும், புன்புலால் யாக்கை புரைபுரை கனியவும், அன்பினாலாவி யோடியாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகவும், ஊனையும் என்பையும் உருக்கித் தேனும் பாலுந் தீங்கன்னலு மமுதுமாய்த் தித்திக்கவும் செய்ததையும், கற்போலுமெனத் தாம் கருதிய தமது உள்ளத்தைக் கல்லைப் பிசைந்து கனியாக்கியது போலக் குழைத்ததையும்; வழிமறித்து வழிமறித்து அவனருளாரமுதத்தை ஊட்டியதையும், தாம் மறுத்து மறுத்து ஓடியதையும்; அடித்தடித்து அக்காரந் தீற்றிய அற்புதத்தையும் நினைந்து நினைந்து கசிந்து கசிந்து ஆற்றாராகி, 'சொல்லுவதறியேன்' என்றும், 'ஆற்றேன்' என்றும், 'தெரியேன்' என்றும், 'தரியேன்' என்றுங் கதறுவார்க்குப் பின்னும் தம்பொருட்டு அவன் நரிபரியாக்கி வந்த நன்மையும், பரி நரியாக்கிப் போந்த பான்மையும், தத்துவங்கடந்த அவன் திருமுடியின்கண் அத்தத்துவங்கட்கெல்லாங் கீழாய மண்ணைச் சுமந்து மாசுற்றதோடமையாது அவன் பொன்மேனி புண்மேனியாமாறு பிரம்படி பட்டதும், நினைவிற்கு வருமானால் அப்பெரியாரின் தூய உள்ளம் என்ன பாடுபட்டிருக்கு மென்பதை, சில ஆண்டுகட்குமுன் நமது நாட்டிற்றோன்றி மக்களுக்குச் சமரச சன்மார்க்கத்தை அறிவுறுத்தி, சைவசமய குரவராம் தனிப் பெருமக்கள் பெருமையினை நன்குணர்ந்து, தனித் தனியாகப் பல பாக்களால் வழுத்தியது மன்றி, அவர் ஒவ்வொருவருக்கும் பப்பத்துப் பாக்களாகிய ஒவ்வொரு மாலை சாத்தி, அல்லும் பகலும் ஆண்டவனை நோக்கிக் கதறிக் கதறி அழைத்து, தம் அன்பனைத்தையும் பாட்டு வடிவங்களாக்கி மறைந்தருளிய இராமலிங்க அடிகளே தாம் அறியவில்லை யென்று கூறுவாரானால் புழுத்த நாயினுங் கடையனான யானோ அதனை அறிந்து கூற வல்லேன்?

அவ் விராமலிங்கப் பெரியார், அடிகளின் பொருட்டு ஆண்டவன் மண் சுமந்து அடிபட்ட பகுதியிலீடுபட்டுக் கூறுவதாவது:—

“வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டின்
பொன்பட்ட மேனியிற் புண்பட்டபோதிற் புவிநடையார்
துன்பட்ட வீரந்தோ வாதவூரர்தந் தூயநெஞ்சம்
என்பட்டதோ வின்று கேட்டவென்னெஞ்ச மிடிபட்டதே”

என்பது.

இவ்வரிய செய்யுளின் நுண்பொருளை விரிக்கின் மிகப் பெருகுமாதலின் விடுகின்றேன். இப் பெரியார் இங்ஙனமே நாயன்மார்கள் வரலாற்றின்கண்ணுள்ள ஒவ்வொரு பகுதியி லீடுபட்டு அந்த வண்ணமாக நின்று அப்பயனை நுகர்தலை அவரியற்றிய ‘திருவருட்பா’ என்னும் அன்பு கனிந்த நூலின்கட் பரக்கக் காணலாம். இங்ஙனம் நமது அடிகளின் வரலாற்றிலுள்ள இறைவன் மண்சுமந்த பகுதியிலீடுபட்டு இடருழந்த இவர், சிவபெருமான் திருநல்லூரின்கண் திருநாவுக்கரசுகள் திருமுடியிற் றிருவடி தீட்டிய செய்தியி லீடுபட்டு உள்ளங் குளிர்ந்ததைநோக்கின், அவர் துன்பமறிந்து புழுங்கிய நமது உள்ளமுங் குளிருமாகலின் அதனை யறிந்து மேற்செல்லுவோமாக. அது,

“ தடிவைத்த செங்கையரசே நல்லூரினின் றாமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்க ளப்பர்தஞ் சென்னியது குளிர்ந்தெப்
படிவைத்ததோ வின்பமியானெணுந்தோறு மிப்பாவிக்குமால்
குடிவைத்த புன்றலையொன்றோ மனமுங் குளிர்கின்றதோ”

என்பது.

இனி, ஆண்டவன் அடிகளின் பொருட்டு மண்சுமந்து மாறனால் மாறடி பட்டதை நினைந்து நினைந்து அடியார்களின் உள்ளம் புழுங்குமென்பதையும், அதற்குக் காரணம் அவர்களது அன்பே என்பதையும் குமரகுருபர அடிகள் திருவாரூர் நான் மணி மாலையிற் கூறிய,

“ என்பணிந்த தென்கமலை யீசனார் பூங்கோயின்
முன்பணிந்த தெய்வ முனிவோர்கள்—அன்பென்னும்
புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றருகு வார்”

என்னுஞ் செய்யுளாலும் அறியலாம். எனவே அடியார்க் கெளியனாகிய ஆண்டவன் தம்பொருட்டுச் செய்த அருளிப்பாடுக ளனைத்தையும் உன்னியுன்னி யுருகும் நமது அடிகள் கருத்தில் யாது தோன்றியிருக்கும்? அவ்விறைவனுக்குக் கைம் மாறுகத் தாம் யாதேனுஞ் செய்யக் கருதுதல் அறிவுடை மக்க ளியல்பன்றோ! அங்ஙனங் கருதிய அடிகள், தங் கூர்த்த மதியாற் பல்காலும் ஆய்ந்து, "எல்லாம்வல்ல எம்மிறைவனுக்கு ஏழையே னாற் செய்யக் கிடப்பது யாது? ஒன்றுமில்லை" என்ற முடிவுக்கு வந்து, அதனைத் தமது திருவாசகத்திற் பலவிடங்களிலும்,

"மற்றறியேன் செய்யும் வகை"
"யானிதற்கில னோர் கைம்மாறு"
"உண்டாமோ கைம்மாறரை"

என்னும் பொன்மொழிகளாற் புகன்றுவிட்டு, தாம் "ஆண்ட வனுக்கு ஒரு பேரன்பனாக இருக்க வேண்டும்" என்னு முடிவுக்கு வந்தருளினர்.

"அன்பலாற் பொருளுமில்லை யையனையாறனார்க்கே"

என்னும் அப்பர் பெருமா னருளிப்பாடும் இங்கே கருதத் தக்கது.

அங்ஙனம் முடிவு செய்த அடிகள் அந்த அன்புக்கு ஓர் வரையறை செய்தார்; எங்ஙன மெனின், "ஏழையேற்கு இத் துணைத் தலையளி செய்த அத்தலைவனை இடையறாது நினைந்து நினைந்து கனிந்து கனிந்து உள்ளந்தாளிலிருந்து உச்சியளவும் நெஞ்சாக நின்று உருக வேண்டும்; உடம்பெல்லாங் கண்ணாக விருந்து இன்ப அருவி பெருக்கி அழ வேண்டும்" என இக் கருத்தினை அடிகள் ஒரு திருப்பாட்டால் விளக்குதல் காண்க:—

" வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய்,
விண்ணோர் பெருமானே யெனக்கேட்டு வேட்டநெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர் நிற்கவென்னை யாண்டாய்க்கு
உள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணாயண்ணா
வெள்ளந் தான்பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந் தீவினையினேற்கே" (திருச்சதகம்)

அடிகள் தமது அன்பிற்கு அளவின்றி இவ்வாறு ஒரு வரையறை செய்து கொண்டமையால், பெரும்பொருள் தேடக் கருதிய ஒருவன் முன்னரே தன்னிடத்துள்ள பொருளைப் பொருளெனவே கருதாதது போலத் தமது ஒரு உள்ளம் ஓயாது உருகுதல் தோன்றப் பெறாராய், 'நெஞ்சங் கல்லாம்' என்றும், இரண்டு கண்களும் இடையறாது நீரொழுகுதலை அறியாதவராய்,

"கண்ணிணையு மரமாந் தீவினையி னேற்கே"

என்றுங் கூறிப் புடைபடக் கவல்கின்றார்.

இனி, "நூறாயிரம் பொற்காசுகள் ஈட்டினேற்றான் யான் ஒரு செல்வன்" என்னும் வரையறை செய்துகொண்டு ஈட்டும் ஒருவன் அத்தொகையிற் பத்துப் பொற்காசுகள் குறையினும் அவன், தன்னை ஒரு வறியவனென்று சொல்லிக் கொள்வானேயன்றிப் பொருளுடையவனென்று சொல்லமாட்டான். என்னை? அவன் வரையறுத்துக்கொண்டது அவ்வாறாகலி னென்பது. எனினும், ஏனையோர் அவனை ஒரு பெருஞ் செல்வ னென்று கூறுவார்களேயன்றி ஏழை யெனக் கூறமாட்டா ரென்பது கண்கூடு. அது போல அடிகள். தாம், வரையறுத்தவாறு ஆகவில்லை யெனக் கருதித் தம்மை 'அன்பில்லாதவன்' என்று பலவிடங்களிலுங் கூறினாரேனும், ஏனையோர் அவரை ஒரு 'பேரன்பர்' எனக் கொள்ளுதலே ஏற்புடைத் தென்க.

இஃது "தமது வெற்றி ஓரோவழித் தோன்றினும் அஃது தாம் வரையறுத்த வண்ணம் இல்லாமையின் அதனைத் தாம் அடைந்ததாகக் கருதாதது பெரியா ரியல்பில் ஒன்று" என மேலே காட்டியதனுள் அடங்குமென்க.

"நானுனக்கோ ரன்ப னென்பேன்"

"உலப்பிலா அன்பருளி"

என ஓரோவழி அடிகள் கூறுவனவற்றை "அவர் தமது வெற்றியை மகிழ்ச்சி மேலீட்டால் தம்மை மறந்து ஓரோவிடத்துக் கூறிவிடுவதும் உண்டு" என மேலே் காட்டியதனுள் அடக்கிக் கொள்க.

இனி, "பரஞ்சோதி முனிவர் திருவாசகப் பயிற்சி மேலீட்டால் அடிகளை 'அழுதடி யடைந்த அன்பர்' என்று கூறினர்" என மேலே காட்டியதற்கேற்ப அத் தொடரைத் திருவாசகக் கருத்துக்கு மாறுபடாமல் அதிலுள்ள ஆதரவுகளைக் கொண்டே வகுத்தும் விரித்துங் கூறினேம். இன்னும் அத் தொடரை ஈற்றடியாகக் கொண்ட 'எழுதரு மறைகடேறு' என்ற தலைப்பையுடைய செய்யுளில் "அடிகள் ஆண்டவனை இடையறாது பூசனை புரிந்து அழுது அவனடி யடைந்தார்" எனக் கூறப்படுவதால் அதற்கு அப் பரஞ்சோதியார் திருவாசகத்திற் கண்ட ஆதரவுகள்.

"பாசவேர்" என்ற முதலையுடைய பாட்டின் "பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே" என்னும் அடியும், "சித்தமே புகுந்து" என்று தொடங்குந் திருவாசகத்திலுள்ள "தன்பொற் கழற்கணே பன்மலர் கொய்து சேர்த்தலும், முத்தி தந்திந்த மூவுலகுக்கு மப்புறத் தெமை வைத்திடும் அத்தன்" என்பதுமாம்.

இனி, "தொழுத கையின ராகித் தூமலர்க் கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு, வழுவிலாமலர்ச் சேவடி" என்னுந் திருவாசகத்தை உட்கொண்டு, "அழுதிசை பாடுந் தொண்டிலகப் படும் பாதம்" என்று பரஞ்சோதியார் பகர்ந்தது பாராட்டத் தக்கது. இன்னும் அவர், அடிகள் ஆண்டவ னருளொளியிற் கலந்ததைக் கூறுங்காலும்,

"பன்னாட் பரவிப் பணி செய்ய"

என்னுந் திருவாசகத் தொடரைக் கருத்துட்கொண்டு, 'பன்னாள்' என்பதைப் 'பரவி' 'பணிசெய்ய' என்று மிரண்டிடத்துங் கூட்டி, பரவுதலைத் திருவாசகம் பாடுதலென்றும், பணிசெய்தலை வழிபாடு (பூசனை) ஆற்றலென்றும் பொருள் கொண்டு,

"மாசறு மணி போற்பன்னாள் வாசகமாலை சாத்திப்
பூசனை செய்து பன்னாட் புண்ணிய மன்று ளாடும்
ஈசன தடிக்கீழெய்தி யீறிலா வறி வானந்தத்
தேசொடுகலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார்"

எனக் கல்லுங் கரையுமாறு கவின்பெறப் புகன்ற பொன்மொழி போற்றத் தக்கதாகும்.

இதுகாறுங் கூறியவாற்ருல் "பரஞ்சோதி முனிவர் திரு வாசகமென்னும் ஒப்புயர்வற்ற திப்பிய தேனைத் தெவிட்டப் பருகித் தேக்கெறிந்தவர்" என்பது நன்கு புலனுதல் ஒருதலை.

செந்தமிழாராய்ச்சிச் செல்வராம் உயர்திரு. மறைமலை யடிகள் என்னையும் ஒருவனுகக் கருதி இப்பணி செய்ய ஆணை தந்தமைக்கு அப்பெரியாரை எழுமை எழுபிறப்பும் உள்ளுங் கடப்பாடுடையேனுய், இப்பணியை எனக்குத் தோன்ருத் துணையாக இருந்து இயற்றுவித்த எனது இன்னுயிர்த் தலைவ னும் இறைவன் மலரடியை மனமொழி மெய்யால் நினைந்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

பிரகிருதி சாஸ்திரம்

(ருகூ௰-வது பக்கத் தொடர்ச்சி)

[C. சுப்பிரமணியாசாரி B. A.]

12. தன்னணுக்கவர்ச்சி:—[1] இதுகாறும் ஒரு பொருள் மற்ருெரு பொருளினை இழுத்தலைப் பற்றிச் சொன்னும். இனி ஒரு பொருளணுக்களுள்ளேயுமித்தன்மையான கவர்ச்சி உண் மையைக் கவனிப்பாம். அணுக்களொன்றனை யொன்று கவரா விடின் பூமியாதியாவும் மணலைப்போற் பொடிமயமாய் நிற்கும். இக்கவர்ச்சி யுளதாதற்கு அணுக்கள் ஒன்றற்கொன்று மிகச் சிறிய தூரத்திலிருத்தல் வேண்டும். இத் தன்னணுக் கவர்ச்சி திடப் பொருள்களிலதிகமாகவும் திரவப் பொருள்களிற் சமமாக வும் வாயுப் பொருள்களில் இன்மையாகவுமுள்ளது. முன்ன மோரிடத்துச் சொல்லிய வண்ணம் கொட்டைப்பாக்களவு யாதேனுமொரு வாயுப் பொருளை ஓரறைக்குள் விட்டால் அஃ துடனே கொட்டைப்பாக்களவு இடமுந் தவருமலெங்கும் பரவிவிடும். ஆகவே வாயுவின் அணுக்களில் தன்னணுக் கவர்ச்சி

1 Cohesion.

சிறிதுமில்லை யென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும். ஆனால் முன்னொரு முறை சொல்லியபடி மிகுந்த அழுத்தல் வலியினாலும் குளிர்ச்சியினாலும் வாயு திராவக ரூபமாக மாறிய விடத்து அவ்வாயுவி னணுக்கள் இத் தன்னணுக் கவர்ச்சியைப் பெறுகின்றன.

13. திண்மை:—[1] இது முதல் மேல் வரும் நான்கு குணங்களும் திடப்பொரு ளணுக்களிடத்து மட்டுமே விளங்கும். இவை நான்குந் தன்னணுக் கவர்ச்சியாலுண்டான வேறு குணங்களே யென்க. எந்தப் பொருளி னணுக்கள் தத்தமக்குரிய விடங்களை விட்டுப் பெயராது அப்படிப் பெயர்க்க வரும் புறக்காரணங்களை அதிகமாக எதிரிட்டு நிற்கின்றனவோ அப்பொருளினைத் திண்பொருளெனவும், அப்படி யெதிரிட்டு நிற்க மாட்டாத அணுக்களாகிய பொருளினை மென்பொருளெனவும் [2] சொல்லுவார்கள். யாதேனு மொரு பொருள் வேறொரு பொருளினைக் கிறவல்லதாயின் கிறப்பட்ட பொருளினுங் கிறிய பொருள் திண்ணிதென ஊகித்தல் வேண்டும். பொன்னினைக் கண்ணாடி கிறவல்லதாதலின் முன்னது நோக்கப் பின்னது திண்பொருளென்க.

14. தகட்டுத்தன்மை:— [3] பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, துத்தநாகம் ஆகிய லோகங்களை மெல்லிய தகடுகளாக அடித்தல் கூடும். பொன்னை மெல்லிய காயிதத்தைப்போல் மிகவும் மெல்லியதாக அடித்திருக்கிறார்கள்.

15. கம்பித்தன்மை:—[4] இக்குணத்தால் மேற்சொன்ன லோகங்களியாவும் நண்ணிய கம்பிகளாக இழுக்கப்படல் கூடும்.

16. ஒட்டுறவு:—[5] எப்பொருளி னணுக்கள் பிளத்தல், அறுத்தல், முதலிய புறச்செய்கைக் காரணங்களை அதிகமாக எதிர்த்து நிற்கின்றனவோ அப்பொருளுக்கு ஒட்டுறவின் குணமதிகமாக வுளதென்று சொல்லப்படும். எப்பொரு ளணுக்கள் தன் னணுக் கவர்ச்சியை அதிகமாகப் பெற்றுளவோ அப்

1 Hardness 2 Soft body 3 Malleability 4 Ductility 5 Tenacity

பொரு ளணுக்கள் இவ்வொட்டுறவினையும் மிகப் பொருந்தியன வாகும். இக்குணத்தினை மிக அதிகமாகவுடையது எஃகு.

17. பிறிதினணுக்கவர்ச்சி:—[1] இஃது இரண்டு வேருகிய பொருள்களி னணுக்களுக் குளது. இவ்விரண்டு பொருள்களும் திடப்பொருள்களாகவாயினும், ஒன்று திடப்பொருள் மற்றொன்று வாயுப்பொருளாகவாயினும், ஒன்று திடப்பொருள் மற்றொன்று திரவப்பொருளாகவாயினும், இரண்டும் திரவப் பொருள்களாகவாயினும் இருத்தல் கூடும். துணியில் அழுக்குப் படிவது இரண்டு திடப்பொரு ளணுக்களின் பிறிதினணுக் கவர்ச்சிக் குதாரணமாகும். முன்னர்க் கூறிய உறழ்ச்சி வலிக்கு முக்கிய காரணமாயுள்ளதும் இத்தன்மையான கவர்ச்சியே யாகும். இனித் திடப்பொரு ளணுக்களுக்கும் திரவப்பொரு ளணுக்களுக்கு முள்ள கவர்ச்சியை விளக்குவாம். கையினை நீரில் தோய்த்தபோது தோய்ந்த பாகத்தெல்லாம் நீரொட்டிக் கொள்ளும். அப்போது கை நனைந்த தென்கிறோம். ஆதலால் நனைந்த விடங்களிலெல்லாம் இக்கவர்ச்சியுள்ளதெனக் கொள்க. ஆனல் இருப்புத் தகட்டினைப் பாதரசத்தில் தோய்த்தாலும் தாமரையிலையில் நீர்த்துளிகள் பெய்தாலும் அவ்வித நனைத லில்லாமைக்குக் காரணம் என்னவெனில் இங்கே பிறிதினணுக் கவர்ச்சியும் தன்னணுக் கவர்ச்சியு மொன்றினேடொன்று மலை கின்றன. கையினை நீரில் தோய்த்துழி நீரணுக்க ளொன்றற் கொன்று உடைய தன்னணுக் கவர்ச்சியினும் நீரணுக்களுக்கும் கையணுக்களுக்கு முள்ள பிறிதினணுக் கவர்ச்சி யதிகமானத ஞற் கையில் நீர் ஒட்டியது. ஆயின் தாமரையிலையில் நீர் பெய்தவிடத்து நீரணுக்களின் தன்னணுக் கவர்ச்சி நீரணுக்க ளுக்கும் தாமரை யணுக்களுக்குமுள்ள பிறிதினணுக் கவர்ச்சி யினும் அதிகமாதலால் தாமரையிலை நனையப்பெருது நின்ற தென்க.

இதன் சம்பந்தமாக 'மயிர்ப்புழைக் கவர்ச்சி'[2] என்பதொன்று உரைக்கற்பாலது. மயிரின் நுண்ணிய புழையுடைய குழலொன்றை நீரிற் பிடிக்க உண்ணீர்மட்டம் வெளிநீர் மட்டத்

1. Adhesion　　2. Capillary attraction

திற்குப் பலவங்குல முயரமாக விருக்கக் காணலாம். புழை அதிகமாக அதிகமாக உள்ளிருக்கும் நீர் மட்டம் வரவரக் குறைந்து வெளிநீர் மட்டத்திற்கு வந்துவிடும். அக்குழலினையே பாதரசத்தில் நிற்கவிட்டால் உள்ளிருக்கும் பாதரச மட்டம் வெளியிலுள்ள இரச மட்டத்திற்குப் பலவங்குலம் தாழ்வாக விருக்கக் காணலாம். ஏனெனில் முன்னைய வுதாரணத்தின் நீரணுக்களின் தன்னணுக் கவர்ச்சி அதிகமாதலாற் குழலால் நீர்த்துளிகள் நான்கு பக்கமு மிழுக்கப்பட அத்துளிகளின் இடை குறைதலால் மேலெழும்புகின்றன. பின்னைய வுதாரணத்தில் இரசவணுக்களின் தன்னணுக் கவர்ச்சி யதிகமாதலாற் குழலினுளிருக்கும் இரசம் நடுவிற் குவியவும் இடையதிகமாதலால் அழுந்துகின்றன இம் மயிர்ப்புழைக் கவர்ச்சியினாற்றான் மரங்கள் பாதத்தால் நீரை யுட்கொள்வதும் வர்த்தியினூடே எண்ணெயேற விளக்குக ளெரிவது மென்க. இரண்டு கண்ணாடிப் பாத்திரங்களெடுத்து ஒன்றை மேலாகவும் அதன் பக்கத்தில் மற்றொன்றைக் கொஞ்சம் கீழாகவும் இருத்தி மேலே யுள்ளதிற் பாதி நீரும் பாதி எண்ணெயும் விட்டு வர்த்தி யொன்றினை நீரில் நனைத்து அதனிரண்டு முனைகள் அவ்விரண்டு பாத்திரங்களினடியுறக் கவிழ்த்த பகரத்தினை யொப்பு [ஈ] விடுக்க ஒன்றிரண்டு மணி நேரத்தில் மேற் பாத்திரத்து நீரெல்லாம் கீழ்ப் பாத்திரத்தில் வர எண்ணெய் மாத்திரம் மேல் பாத்திரத்தில் நிற்கக் காணலாம். வர்த்தி எண்ணெயில் தோய்த்ததாயின் எண்ணெய் கீழ்ப் பாத்திரத்திலும் நீர் மாத்திரம் மேற் பாத்திரத்திலும் நிற்கக் காணலாம்.

இரண்டு திரவப்பொருள்களின் கவர்ச்சியைப்பற்றிக் கவனிப்போம். ஒரு பாத்திரத்தி லடியில் நீரும் மேலே சாராயமும் விட்டால் இரண்டும் சிக்கிரம் கலந்துவிடும். என்னை? பிறிதினணுக் கவர்ச்சி தன்னணுக் கவர்ச்சியினும் இங்கே அதிகமாதலால், நீரு மெண்ணெயு மாயிற் கலவா ; என்னை? இங்கே தன்னணுக் கவர்ச்சி பிறிதினணுக் கவர்ச்சியினும் அதிக மாதலாலென்க. காப்பி அல்லது தேயிலைத் தண்ணீரில் சர்க்கரையைக் கொட்டியவிடத்துக் குமிழிகள் கிளம்புகின்றன; என்னை?

சர்க்கரையாகிய திடப்பொருளி னணுக்கள் பிறிதினணுக் கவர்ச்சி வலியால் வாயுவை இழுக்க நீரினுளிட்டபோது சர்க் கரை தன்னிலை மாறவே விடுபட்ட வாயுவி னணுக்கள் குமிழி களா யெழும்புகின்றன வென்க.

18. கலவைக் கவர்ச்சி:— [1] நீரை யெத்தனைக் கூறுபடுத் தினும் ஒவ்வொரு கூறும் நீராகவே இருக்கும். ஆனல் மின் வலியி னுதவியால் நீரினை ஜலவாயு [2] பிராணவாயு [3] வென விரண்டு வாயுக்களாகப் பிரித்தல் கூடும். இவ்விரண்டு வாயுக் களும் கலவைக் கவர்ச்சியாற் புணர்ந்த விடத்து மீண்டும் நீராய் விடும். இது போலவே ஜலவாயு பிராண வாயு வென்பவைகளை வேறிரண்டு பொருள்களாகப் பிரிக்கப்படக் கூடவில்லை. யாதே னுமொரு பொருளை வேறிரண்டு அல்லது மேற்பட்ட பொருள் களாகப் பிரிக்கக்கூடுமாயின் அத்தன்மையான பொருளுக்குக் கலவைப் பொருள் [4] என்றும் அப்படி வேறு பொருள்களாகப் பிரிக்கப்பட மாட்டாத பொருளினை முதற்பொருள் அல்லது தன்மாத்திரைப் பொருளென்றும் [5] வழங்குவார்கள்.

(ஞானபோதினி)

பெண்மை

[மணி. திருநாவுக்கரசு முதலியார்]

பெண்மை என்னும் சொல்லுக்கு விரும்பப்படுந் தன்மை என்று பொருள். இச் சொல்லினின்றே விருப்பம் என்னும் பொருளைத் தரும் பெட்பு என்பதும், பெண்டு, பெண்டாட்டி, பேண் முதலான மொழிகளும் தோன்றின. விரும்பப்படுந் தன்மையாவது மென்மை. இஃது உற்றறியும் மென்மைமட்டு மன்று. காணும் பொழுதே தோன்றும் அமைதித் தன்மையும் கேட்குங்கால் இனிக்கும் குளிர்ச்சியான மொழியும் அழகும் முதலான எல்லாப் புலன்கட்கும் இன்பத்தை ஊட்டும் ஓர் இனிமைப் பண்பு. பெண் அமைப்பு இயற்கையிலே தணிவும் பணிவும் அழகும் மென்மையும் வாய்ந்ததாக உளது. உலக

---

1. Chemical attraction 2. Hydrogen 3. Oxygen 4. Compound 5. Element.

முயற்சியிலே ஓடி யுழைத்து இளைத்துக் களைத்து வீட்டுக்குள் நுழையும் ஆடவன் உவகையோடு மெத்தென்ற சாயலுடைய மனைவியின் புன்னகைக்கு ஏக்கற்று நிற்கின்றான். நோய் வயப் பட்டு இன்னலுழக்கும் ஒருவன் தன்னை மார்போடு சாய்த்துக் கொண்டு மெல்லிய மொழிகளைச் சொல்லி இன்புறுத்தும் துணைவியை ஆருயிர் மருந்தென அறிந்து மகிழ்கின்றான். உண் மையில் ஆண் மகன் செய்யும் செயலெல்லாம் பெண் மகள் பார்த்து வியந்து மகிழ்வதற்காகவே என்பது ஊன்றிப் பார்ப்ப வர்க்கு உள்ளங்கை நெல்லி யெனத் தெள்ளெனப் புலப்படும். மகளிர் ஒவ்வோர் உறுப்பும் குளிர்ச்சியையும் மென்மையையும் அழகையும் உடையனவாக உள்ளன. வில்லென வளைந்த சிறு நுதலும், நீண்டு அகன்ற கருவிழிகளும், முழு மதி யொத்த வத னமும், மெத்தெனத் திரண்ட தோள்களும், உருண்டு வட்ட மான அழகிய மார்புகளும், செக்கச் சிவந்த இதழும், எல்லாம் ஆடவர் இன்புறத் தக்கனவாகவே அமைந்துள்ளன. இதனு லேயே பெண் மக்களை வெறுத்துரைத்த கடுந்துறவிகளும் தாம் பாடிய பாட்டுக்களிலே அவர் தம் அழகையும் உறுப்பு நலங் களையும் பாராட்டி நின்றனர். மணிவாசகனாரும், 'கிளியனார் கிளவி அஞ்சேன் அவர் கிளி முறுவலஞ்சேன்' என்றும், 'ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம் கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்' என்றும் கூறியருளினர். நம்முடைய செந்தமிழ் நூல்களிலே பெண்களைப்பற்றி வரும் வருணனை களில் சிலவற்றைப் பார்த்தாலும் நம் முன்னோர் பெண்கள் பால் வைத்திருந்த உயர்ந்த காதலன்பும் உண்மைப் பெருமதிப் பும் நன்கு விளங்கும்.

தமிழிலே உள்ள கோவை நூலைப் படித் தின்புறுதார் பிறப் புப் பயனற்றதென்றே நாம் கருதுகிறோம். திருக்கோவையார் கோவைகளிலே தலைசிறந்து விளங்குகின்றது. இரண்டாம் படியிலே இலங்குவது தஞ்சைவாணன் கோவை. இவற்றிலே வரும் செய்யுட்கள் எத்துணை மெல்லிய மொழிகளால் எத்துணை உருக்கத்தை விளைக்கின்றன! தலைமகன் தன் காதற்குரிய தலை மகளை எவ்வளவு சிறந்தவளாகவும் மென்மை யுடையவளாகவும்

பெருமை யுடையவளாகவும் கருதுகின்ருன்! எவ்வளவு கவலை உடையனாக அவள் பால் ஒழுகுகின்ருன்! இவை யெல்லாம் ஆடவர் பெண்டிரிடம் கொண்டுள்ள நன்மதிப்பை அன்றோ காட்டும்?

'தாயிற் சிறந்த தமரில்லை' என்ருர் புலவர் ஒருவர். நாராயண மந்திரத்தின் பெருமையைப் பாராட்ட வந்த பெரியார் ஒருவர், 'பெற்ற தாயினுமாயின செய்யும்' எனத் தாயின் அருமையைப் பாராட்டினர். 'ஈன்ருள் பசி காண்பானாயினும்' என்ருர் வள்ளுவனர். 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே' என்ருர் இன்னெரு புலவர். முற்றத் துறந்த பட்டினத்தார் தாயார் பிரிவுக் காற்ருது புலம்பினர். ஒப்புயர் வில்லா ஒரு செழும் பொருளைப் பாடிய உத்தமத் தொண்டர்கள் 'அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ' என்றும், 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே' என்றும் வாய் நிரம்பப் பாடினர். 'தாயினும் நல்லன் சங்கரன்' என்றனர். துறவியாகிய மகனைத் தந்தை தொழலாமென்றும், ஆனல் தாயை அத் துறவியும் வணங்க வேண்டுமென்றும் நூல்களிலே குறித்தனர். தாயின் பெருமை பெண்மையின் பெருமை யன்ருே! பெண்பாலார்க் குரியன அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்க ளென்றும், ஆண் பாலார்க்கு உரியன அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்குணங்கள் என்றும் ஆராய்ந்து முடிவு கட்டிய செந்தமிழ் முதுமக்கள் இருபாலார்க்கும் உள்ள பெருமையை இனிது விளக்கிக் காட்டினர். பெண்பாலரிடம் அச்சமே ஒழுகைத் தரும்; நாணம் விருப்பத்தை விளக்கும்; மடம் மகிழ்வை ஊட்டும்; பயிர்ப்பு மதிப்பை மிகுக்கும். பெண் மக்கள் மென்மைத் தன்மையாலும் பிள்ளைப்பேறு முதலான செயல்களாலும் ஆடவரால் என்றும் அணைத்துப் பாதுகாக்கப் படும் அருஞ் செல்வங்கள் ஆவர். அவரை இனிய புன்னகை தவழும் முகத்தாலும், காதல் தோய்ந்த சொற்களாலும், பொன்னாலும், பொலிவுள்ள ஆடையாலும் ஆண்மகன் உருகச் செய்ய வேண்டும். ஆணும் பெண்ணும் ஒருவர்க் கொருவர் இன்றியமையாச் சிறப்பினராக இருக்கின்றனர். ஆடவர் நோயை

ஆற்றுவதற்குப் பெண்மக்கள் எத்துணை இன்றியமையாத துணை வரோ அத்துணையே ஆடவர் மகளிர் நோயை ஆற்றத்தக்க துணையாவர். இதனை அறியாத அன்பில்லா ஆடவர் பலர் தம் மனைவி நோய் வயப்பட் டிருக்கையில் கண்ணெடுத்தும் பாராம லும் அவர் துன்பத்தைக் காது கொடுத்துக் கேளாமலும் அருகே சென்று அன்பு காட்டாமலும் உளர். அந்தோ! இத் தகைய கொடியோர்க்கு நல்லறிவு என்று வரும்?

மாதரை மதிக்கின்றவன் தன் தாயை மதிக்கின்றவன் ஆகின்றான். தாய் செய்த நன்றிக்குக் கைம்மாறு இன்றெனக் கருதுவர் யாவரும்.

"அன்னையே அடியேனுக்கா ஆற்றிய வருத்த மெல்லாம், உன்னியே பார்க்கிற் கைம்மாறென்றிலை உனக்கோர் கோயில், மன்னுற வமைத்துப் பொன்னால் வடிவமும் சமைத்து வைத்து, முன்னுற வணங்கிற் செய்யுள் மொழியினும் முற்று றாதே."

"அருவமாய் மறைந்து நின்ற அற்புதக் கடவுள் அன்பின், உருவமே நீயேயானால் உரைப்பதென் உண்மையாகப், பருவமே நோக்கிச் செய்த பாடெல்லாம் நினைத்துப் பார்க்கின், உருகிடும் ஊனும் உள்ளும் உயிருடன் எவையுந்தானே."

தான் பெற்ற மக்களுக்காக இரவெல்லாம் கண் விழித்தும், கைக்கும் மருந்தை உட்கொண்டும், கவலை யுழந்தும், கணவ ருக்கு இனியன கூறி மகிழ்வித்தும், மக்களுக்கு வேண்டுவன செய்தும், அல்லலுழக்கும் தனக்கென வாழாப் பெருந்தகைப் பெண்ணின் பெருமையை என்னென்பேம்! என்னென்பேம்! இவர் பெருமை அன்றோ ஆண் மக்கள் பெருமை! இவர் தம் அருமை அன்றோ ஆடவர் அருமை! இவருடைத் தலையன்பே அன்றோ மைந்தர் பேரின்பம்! 'பெண்ணினுட் கற்புடையாட் பெற்றான் சாவா உடம்பு எய்தினனன்றோ?' இத்தகைய பெண் ணினால் அன்றோ மனைக்கு மங்கலம்! இவரே யன்றோ நம் நாட் டுக் குரிய செல்வ நிலயங்கள்! இவர் வாழ்ந்தாலன்றோ நாம் வாழ்வோம்! இவரைப் போற்றி மகிழ்வித்து அறிவும் ஆற்ற லும் உடையராகச் செய்து தம் பெண்மைக் குணங்கள் மிளி

ரும்படிச் செய்வித்தலே ஆடவர் கைக்கொள்ள வேண்டிய கடமைகளாம்.

பண்டைக் காலத்திலே நமது நாட்டிலே பெண்ணுக்குப் பெருமை இல்லையென்று சிலர் நினைக்கின்றனர். அது தவறு. இடையிலே தொலையாச் சனியாகப் புகுந்த சில ஒழுக்கங்களால் ஒருசார் மக்களிடை இக்கொடுஞ் செயல் காணப்பட்டது. அது பிற்காலத்திலே தப்பான எண்ணத்தால் எல்லாரிடமும் பரவிவிட்டது. முன்னே நம் மக்கள் பெண்பாலரிடம் வைத்திருந்த நன்குமதிப்புக்கு அளவே யில்லை. சிவபெருமான் உமாதேவியாரை ஒரு பாகத்திலே வைத்திருப்பதும், திருமால் திருமகளைத் தம் மார்பிலே வைத்திருப்பதும், நான்முகன் கலைமகளை நாவிலே வைத்திருப்பதும் நம் பண்டைக்கால மக்கள் பெண்டிர் பால் காட்டிய நாகரிகத்தை அன்றி வேறெதனை விளக்கும் கூறுமின் ! அன்றியும் சத்தி பீடங்களும், காளி கோயில்களும் விளக்குவன யாவை? கஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி என்னும் பெருமித மொழிகள் யாருக்கு உரியன ?

ஒவ்வோர் ஊரிலும் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள கிராமதேவதை ஆணா ? பெண்ணா ? இப் பெண் தெய்வம் அவ்வூரிலே இருந்து வாழ்ந்த ஓர் அருமைத் திருமகளாக இருப்பினும் அன்றி அவ்வூர் மக்களால் கடவுளுருவத்திற் சமைக்கப்பட்ட பாவனா சொரூபமாக இருப்பினும் அது புலப்படுத்துவது பெண்ணின் மாட்சியே அன்றோ?

இனி ஒவ்வோர் மனையினும் பூவாடையாக வீற்றிருப்பது யார் ? ஒவ்வோர் வேப்பமரத்தின் குளிர்ந்து செழித்த இனிய நீழலினும் அமர்ந்திருப்பது யார்? இவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்க்கின் மகளிர் பெருமை மலையிலக்காக விளங்கவில்லையா? சில நூல்களிலே பெண்களுக்கு வீடுபே றில்லை யென எழுதிவைத்திருத்தலைக் கெதாறு கெதிகமாகப் பிற்காலத்திலே இலக்கண நூல்களிலேயும் புலவர் சிலர் ஆண்டுவிட்டனர். அவர் தம் அங்கத்தையும் உத்தமம், மத்திமம், அதமம் எனப் பிரித்துக் காட்டினர். இப்பொருத்தமற்ற ஆபாசங்

களை அடியோடு வாரி எறிவதுபோல் தமிழ்நாட்டுச் செய்திகள் விளங்குகின்றன. எங்ஙன மெனின், காரைக்கால் புனிதவதியார் பெறுதற்கரிய பேறு பெற்றதாகவும், மங்கையர்க்கரசியார், திலகவதியார், இசை ஞானியர் முதலானவர்கள் வீடு பெற்றன ரென்றும் பெரியபுராணமும், சூடிக்கொடுத்த நாச்சியார் முத்தி பெற்றனர் என்றும் வைணவபுராணமும் கூறுதலால், பெண்மக்கட்கு விடுபே றில்லை என்று வாய் கூசாது கூறும் கொள்கை தலை சாய்க்குமன்றோ! ஆடவர் தமது ஒழுக்கங்களைச் செவ்வையாக ஆற்றிப் பெருமை பெறுதல் வேண்டும். அங்ஙனமே பெண்கள் தமக்குரிய ஒழுக்கங்களில் வழுவாமல் நின்று பெருமை அடையவேண்டும்; ஆயின், இதில் ஒருவரினும் ஒருவர் உயர்ந்தவராதல் எங்கே உளது?

> 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்'—குறள்.

குயில்

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

இன்னிசைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் குயில் என்னும் பறவையை அறியாதார் இரார் என்றே நம்புகிறோம். குயிலின் நிறம் பொதுவாகக் கறுப்பேயாயினும், ஆண் குயிலின் நிறம் ஒரு சிறிது பைந்நிலம் கலந்த கறுப்பென்றே கூறவேண்டும். அதுபற்றியே குயிலைக் குறித்துப் பாடிய நம் பெரியோர்கள் யாவரும் அதைக் கருங்குயில் என்று கூறுவதைவிட "மணி நிறக் குயில்" என்று கூறுவதையே பெரிதும் விழைந்தனர். சைவ சமய குரவர்களில் ஒருவரான மணிவாசகப் பெருந்தகையார் வெளிப்படையாக "நீல உருவிற் குயிலே" என்று விளித்திருத்தலுங் காண்க.

இக் குயிலினம் இந்தியநாடு, இலங்கை, கடாரம் என்ற பர்மா, மலேயா, பிலிப்பைன் தீவுகள் ஆகிய இடங்க ளெங்கணும் பார்த்து காணப்படும்.

காகம் முதலிய மற்றைப் பறவைகளைப் போன்று இக் குயில் பெரும்பாலும் மக்கள் வாழும் இடங்களில் வந்து பழகுவ தில்லை. மரங்கள் செறிந்த சோலைகளிலும் தோப்புகளிலும் சிறப்பாக மாமரங்களிலுமே இது தங்கியிருக்கும் இயல்பை யுடையது. உணவு கருதி ஓரோவோர் காலத்து ஒரு சிறிது இது தரையிடைப் பறந்துவந்து தங்குவ துண்டாயினும் அப் படித் தங்குவது இமைப்பொழுது என்றுதான் கூறவேண்டும்.

குயிற் குரலுக்கு மிஞ்சிய இன்னிசை இல்லை என்பது யாவரு மொப்ப முடிந்ததோர் உண்மை. காட்டிலே யன்றிக் கூட்டிலே அடைபட்டுக்கிடக்குங் காலத்துங் குயில் கூவும் குரல் இனிமை நிறைந்தே யிருக்கும். வசந்த காலம் என்று கருதப் படும் சித்திரை முதல் ஆடி ஈறுகவுள்ள மாதங்களில் குயில் கூவு வதைச் சோலைகள்தோறுங் கேட்கலாம். அக்காலமே அதன் புணர்ச்சிக் காலமாகும். உற்றுக் கேட்பாருக்கு அது "கு-யீல், கு-யீல்" என்று கூவுவதுபோலவே தோற்றும்.

"குயில் முட்டையிடக் காகங் கண்டு கழிக்கும்" என்ற ஒரு பழமொழி தமிழ் நாட்டில் வழங்குவதைப் பலர் அறிந்தி ருக்கலாம். கூடு கட்டி வாழும் இயற்கை அறிவில்லாததாலோ, அன்றி இட்ட முட்டைகளை யடைகாத்துக் குஞ்சு பொரிக்க வைக்கும் ஆற்றலும் அவகாசமும் இல்லாமையாலோ, குயில் காகத்தின் கூட்டிலேயே கள்ளத்தனமாகச் சென்று முட்டைக ளிட்டு விடுவது வழக்கம். காகம் தன் முட்டைகளோடு அம் முட்டைகளையும் பெருங் கவலையுடன் அடைகாத்துப் பொரிக்க வைத்தபின் இயற்கை மாறாமல் குயிற் குஞ்சுகள் தங் கள் இனிய குரலுடன் கூவு மொலி கேட்டவுடன் அக்குஞ்சு களை வெளியே அகற்றிவிடுமென்று அறிந்தோர் கூறுவர்.

I

"வசந்த காலம் வாய்ப்புடன் துவங்கிற்று; தென்றலும் மென்மை நிறைந்து வீசிற்று; நறுமணம் கனியும் அரும்புகள் அவிழ்ந்தன. இவற்றைக் கண்டு உவகை மலிந்து "கூ, கூ" என்று இடை விடாது கூவியோன் யார்?"

II

“ பெறற்கரிய பருவமும் இளந் தென்றலும் அவனை இன்ப வாரிதியில் அழுத்திற்று போலும்! அதனால் பிணி, துனி, பிணக்கு என்றவற்றை யெல்லாம் மறந்துவிட்டனனோ? இன்றேல் இவ்வளவு இனிமையுடன் “கூ, கூ” எனக் கூவுவானேன்?”

III

“அந்தம் நிறைந்த காட்சிகள் அவன் நெஞ்சத்தை அடியோடு பிணித்துவிட்டன போலும்! அதனால்தான் ஓரிடத்திலும் உட்காராது பறந்து பறந்து திரிகிறான். மாம்பூக்களின் மகரந்தம் கலந்து நிறைந்த இளந்தென்றல் அவனுக்கு அளவற்ற களிப்பை யூட்டிற்று. அதனாலன்றோ குரலெடுத்துக் “கூ”வென அவன் கூவுவது?”

IV

“இறைவன் அவனைக் கரு நிறத்துடன் படைத்ததோடன்றிக் கார்காலத்திலும், பனிக் காலங்களிலும் வாய் திறந்து கூவ முடியாதவாறு பணித்திருக்கிறான். இக்குறைகளோ டிருந்தும் இவ்வுலகத்தையும் இவ்வுலக மக்களையும் அவன் அன்புடன் நேசிப்பதாலன்றோ “கூ, கூ” வெனக் கூவா நின்றான்?”

இந்நான்கும் வங்கநாட்டுச் சிறந்த கவிகளில் ஒருவராகிய திரு. சத்யேந்திர நாத தத்தர் என்பவராற் “குயிற் குரல்” என்ற பெயருடன் பாடப்பெற்ற பாட்டுக்களின் பொருளாகும்.

இயற்கை யழகு ததும்பும் இக் கருத்துக்களோடு மணிவாசகப் பெருந்தகையார் பாடியருளிய குயிற்பத்து என்பதிலுள்ள சிரிய கருத்துக்களை எடுத்து விளக்க இடமின்மையால் இங்கே எழுதாது விடுக்கின்றோம்.

இனி, குயிலைப்பற்றி இந்தியாவின் மேற்புறப் பகுதிகளில் வழங்கும் ஒரு பழங்கதை யுண்டு. அஃதாவது :—

தக்கன் என்னும் மலையரசன் தான் செய்த ஒரு பெரும் வேள்விக்குத் தன் மகள் பார்வதி தேவியாரையும் அவளது கணவன் பரமசிவனாரையும் அழைக்காது விடுத்தான்.

இது கண்டு பார்வதி தேவியார் வெகுண்டு நேரே தன் தந்தையரிடம் சென்று பலவாறு கோபித்துக்கொண்டார். அதற்கு மறுமொழியாகத் தக்கன் தன் மருமகனான பரமசிவன் காளிகள் கூளிகள் பேய்கள் ஓரிகள் இவற்றோடு பழகி வருவ தால் அவனை வரவழைக்க மறுத்ததாகக் கூறினான். இதன்மேல் தந்தைக்கும் மகளுக்கும் வாக்குத் தடித்துப் பூசல் நேர, சின மிகுதியில் தேவியார் வேள்வித் தீயில் விழுந்து இறந்தார்.

இவ்வாறு விழுந்து வேள்வித் தீயின் பரிசுத்தத்தைக் கெடுத்ததற்காக அவள் ஆயிரம் தேவ வருடங்கள் குயிற் பறவையாகப் பிறந்து காலந் தள்ளவேண்டுமென்றும் அதன் பிறகு தன்னுருவடைந்து தன்னைச் சேர வேண்டுமென்றும் பரமசிவன் சபித்தார் என்பதே.

இப் பழங்கதை ஒருபுற மிருக்க, இதனையே அடிப்படை யாகக் கொண்டு எழுந்துள்ள ஒரு மகளிர் வழக்கமும் மேற்குப் பகுதியில் காணப்படுகிறது. அதற்குக் “கோகில விரதம்” என்று பெயர்; அது கொண்டாடப்படுவது பின்வருமாறு:—

ஆடிமாதப் பௌர்ணமி யன்று அதிகாலையில் இந்தியப் பெண்மணிகள் எழுந்து நீராடிக் கோயில் வலம் வந்து வீடு திரும்புவார்கள். அதன்பின் இரத்தினங்கள் இழைத்த கண் களும் வெள்ளியினாற் செய்த கால்களும் உடைய ஒரு பொற் குயிலுருவத்தை வீட்டில் வழிபடுவார்கள். இவ்வுரு அமைத்துக் கொள்ள முடியாதவர்கள் எள்ளுப்பொடியினால் அஃதேபோல் ஒருரு அமைத்துக்கொண்டு வழிபடுவார்கள். உயிர்க் குயிலையே தேடிப் பெற்று வழிபடுவாரும் உளர். அன்று முழுதும் அவர் கள் எவ்வுணவும் உட்கொள்ளாம லிருந்து மாலையில் ஒரு வேளை உண்பார்கள். அவ்வாறு உண்பதும் அன்றைப் பொழுதிற்குள் குயில் கூவும் ஒலி ஒரு முறையாவது அவர்கள் காதுகளில் விழுந்திருந்தால் தான். இன்றேல் அவ்வொரு முறைகூட உணவு கொள்ளல்கூடாது. இவ் விரதம் இவ்வாறு ஒரு மாத காலம் தொடர்ச்சியாகக் கொண்டாடப்படுவதும் உண்டு.

காலஞ்சென்ற ஆசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார்

அவர்கள் சிறுவர்களுக்காகப் பாடிய அருமையும் உருக்கமும் வாய்ந்த குயிற் பாட்டிலே ஒன்றைப் பின் தந்து இக் கட்டுரையை முடிப்பாம்.

"அன்னையவன் அப்பனவன் ஐயனவன் நண்பனவன்
பொன்னினுஞ்சீர் மணியினினும் பொலிவுடைய பொற்குயிலே!
இன்றுயிருக் குயிராக இலங்குமொரு பெருமானை
மன்னவனே வாவென்று மனமுவந்து கூவாயே!"

---

*மேனாட்டு ஆசிரியர்கள் தமிழுக் களித்த ஆதரவு

[தமிழ் இலாகா பேராசிரியர் திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள்]

"இவ்வுலகில் வழங்கும் செம்மை சான்ற தொன்மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றென்று மொழித்திற மறிந்தோர் கூறுவர். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, நெடியோன் மலையை வட எல்லையாகவும், குமரித் துறையைத் தென் எல்லையாகவும் கொண்டு திகழ்ந்த திருநாட்டில் தமிழ்மொழி தோன்றி வளர்ந்த வரலாறு அன்று தொட்டு இதுகாறும் புதை பொருளாகவே அமைந்துள்ளது. ஆயினும் இக்காலத்தில் வெளிவந்துலவும் பழந்தொகை நூல்களைத் துணைக்கொண்டு துருவி ஆராயும்பொழுது, அக்காலத்திய அந்தணரும், அரசரும், வணிகரும், வேளிரும் வளமார்ந்த தமிழ் மொழியை ஆதரித்து வளர்த்த ஆர்வம் பளிங்குபோல் விளங்குவதாகும். இவ்வாறு புலனழுக்கற்ற அந்தணாளரும், புவிச் செல்வம் படைத்த பெருவேந்தரும், பண்டமாற்றுப் பணிசெய்த வணிகரும், பழுதற்ற வேளாண்மையில் பண்புற்ற வேளிரும், இன்னோரன்ன பிறரும் மனமிசைந்து வளர்த்தமையாலேயே தமிழ்மொழி முற்காலத்தில் தழைத்தோங்குவதாயிற்று. இன்னும் பிறவா யாக்கைப் பெரியோனை வழிபட்ட

---

* அண்ணாமலைச் சர்வ கலாசாலையின் ஆதரவில் நடந்த கூட்டம் ஒன்றில் நிகழ்த்திய சொற்பொழிவு.

சைவரும், நீலமேனி நெடியோனை வழிபட்ட வைணவரும், பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த அருகனை வழிபட்ட சமண ரும், போதிமரத்தடியி லமர்ந்த புனிதனை வழிபட்ட புத்தரும், பைந்தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தார்கள். இங்ஙனம் சாதி மதச் சுழி கடந்து, காலமென்ற கடுந்திரை யாற்றில் தமிழ்க்கலம் களித்துலாவிற்று.

தமிழ்மொழி மேனாடு சென்ற விதம்

இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழ் மொழியைச் சென்ற இருநூறாண்டுகளாகப் பிறநாட்டு நல்லறிஞர் போற்றி வளர்க்கத் தலைப்பட்டார்கள். அறநூல்களிற் சிறந்த திருக்குறளை யும், அறச்சுவை நிரம்பிய பெருங் காவியங்களையும் ஆர்வ முறப் பயின்றபொழுது, அந்நூல்களின் தெள்ளிய சுவை அன் னார் உள்ளத்தை அள்ளுவதாயிற்று. இத்தகைய மேனாட் டறிஞ ருள், இத்தாலியா நாட்டினின்றும் தமிழகம் போந்து, தமிழ் மக்களோடு கலந்துறைந்து, விழுமிய புகழ்பெற்ற வீரமா முனி வரே தலைசிறந்தவ ராவர். ஐரோப்பிய நாடுகளில் உயர் தனிச் செம் மொழிகளாகக் கருதப்படும் இலத்தீன், கிரீக் முதலிய மொழி களில் அமைந்த செழுங்கலைகளைச் செவ்வையாய் ஓதி உணர்ந்து, செல்வத்துட் செல்வமாகிய செவிச்செல்வம் பெற்ற இம் முனி வர், அருந்தமிழ் மொழியின் அகலங் காண விரும்பிப் பல் லாண்டு முயன்று பயின்றனர். அறம் மணக்கும் திருக்குறளின் அருஞ்சுவையையும், தமிழ் மணக்கும் சிந்தாமணியின் செழுஞ் சுவையையும், கலை மணக்கும் கம்பன் கவிச்சுவையையும் கலந்து நுகர்ந்த முனிவர் உள்ளம், பள்ளத்துட்பாயும் வெள்ளம்போல், மற்றைய தமிழ்ப் பனுவல்களினும் பரந்து படர்வதாயிற்று.

தமிழ் அகராதியைச் செய்த தந்தை

தைரியநாதர் என்றும் வீரமாமுனிவர் என்றும் தமிழகத் திற் புகழ்பெற்ற இவ்வறிஞரே, தமிழ் அகராதியின் தந்தை யாவர் என்று கூறுதல் மிகையாகாது. தமிழ் மொழியில் அமைந்த சொல்லின் பொருளை அறிந்துகொள்வதற்கு முற் காலத்தில் நிகண்டுகளே சிறந்த கருவிகளா யமைந்தன. இங்

நிகண்டுகள் யாவும் பாக்களால் அமைந்திருந்தமையால், அவை கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்குப் பயன் படாதனவாயின என்பது சொல்லாமலே அமையும். கற்றோரையன்றி, மற்றோரும் தமிழின் நீர்மை யறிந்து தழைத்தோங்க வேண்டுமென்று கருதிய வீரமாமுனிவர் "சதுர் அகராதி" என்னும் பெயரால் ஓர் சிறந்த அகராதி செய்து உதவினர். இவ் வகராதி பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்ததாகும். இஃது, உருவிற் சிறிதேனும் அருமை மிக வாய்ந்த தென்பதில் ஐயமில்லை.

பலவித அகராதிகள் எழுந்த வரலாறு

இச்சதுர் அகராதியை அடிப்படையாகக் கொண்டு தனித் தனி அகராதிகளும், தமிழ் ஆங்கில அகராதிகளும் எழுந்தன. விவிலிய நூலைப் பரப்பும் விழுமிய நோக்கத்துடன் இந்நாட்டில் நிறுவப்பட்ட வேதமடத்தைச் சார்ந்த ராட்லர் என்னும் நல்லறிஞர் பல்லாண்டுகளாகத் தமிழறிந்தோரைத் துணைக்கொண்டு உழைத்து ஓர் தமிழ் ஆங்கில அகராதி தொகுத்தார். இவ்வகராதி நான்கு பகுதிகளாக வேதமடத்தினரால் 1836-ம் ஆண்டு முதல் வெளியிடப் பெற்றது.

தமிழ் ஆங்கில அகராதியின் உண்மை

இவ்வகராதியைத் தழுவி விரிவாக எழுந்த வின்சுலோ அகராதியே இன்றுகாறும் சிறந்த தமிழ் ஆங்கில அகராதியாக நின்று நிலவுகின்றது. இனி, இப் பேரகராதியைப் பின்பற்றிச் சென்னைச் சர்வகலா சங்கத்தின் ஆதரவில் ஓர் புதிய தமிழ் ஆங்கில அகராதி வெளியிடப்பட்டு வருகின்றது. ஐந்தாண்டளவில் முற்றுப் பெறுமென்று அரசாங்கத்தார் கருதிய இப்பேரகராதி 1923-ம் ஆண்டு தொடங்கி இன்றளவும் இடையீடின்றி நடந்து வருகின்றது. ஒன்பதாண்டுகள் இதன் பதிப்பாளராய் அமர்ந்து பணிசெய்த சாண்ட்லர் என்பார் எழுபதாம் வயதில் இளைப்பாறக் கருதி வேலையினின்றும் விலகிக்கொண்டார். இவ் வகராதியின் உரிமையை அரசாங்கத்தார் சென்னைச் சர்வ கலா சாலைக்கு அளித்துள்ளார்கள்.

வீரமா முனிவரின் மற்றைத் தமிழ்க் கிரந்தங்கள்

இனி, தமிழ் அகராதியின் தந்தையாகிய வீரமாமுனிவர் தமிழ் உலகத்தின் அகராதி யொன்றும், போர்ச்சிகீசியத் தமிழ் அகராதியொன்றும் இயற்றிச் சிறப்புற்ற முனிவர். தேம்பாவணி யென்னும் நறுந்தமிழ் மாலை புனைந்து தமிழணங்கைப் போற்றுவாராயினர். சூதேய நாட்டிற் பிறந்து புகழ்பெற்ற சூசையப்பர் என்னும் வளன்பெருமை கூறும் இவ்வளமார்ந்த காவியத்தில் தெய்வத் திருக்குறளின் தெள்ளிய மணமும், சிந்தாமணியின் செவ்விய கற்பனை நலமும், கலைமலிந்த கம்பன் கவிநயமும் ஆங்காங்கு அமைந்து அழகுசெய்யக் காணலாம்.

இலத்தீன் பாஷையில் திருக்குறள்

அரியதோர் அகராதி தொகுத்தும் அருங்காவியம் இயற்றியும் தண்டமிழ் மொழிக்குத் தொண்டு செய்த வீரமாமுனிவர், நன்னூல் முதலிய பன்னூல்களையும் ஐயந்திரிபற ஓதி உணர்ந்து, தொன்னூல் விளக்கம் என்னும் பெயரால் ஓர் செந்தமிழ் இலக்கணம் செய்தருளினர். மற்றும், பழம் பெருமை வாய்ந்த தமிழ் மக்கள் பண்பினை இத்தாலிய நாட்டினரும் இனிதுணருமாறு தெய்வப் புலமைத் திருவள்ளுவனர் இயற்றிய திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் வீரமா முனிவர் இலத்தீன் பாஷையில் மொழிபெயர்த் தமைத்தார்.

மேனுட்டினருக்குத் தமிழில் ஏற்பட்ட சுவை

வீரமா முனிவர் காலத்திற்குப் பின்னர் பல ஐரோப்பிய அறிஞர் தமிழ்மொழியின் பல துறைகளையும் ஆராய்ந்து அறியத் தலைப்பட்டார்கள். மொழிநூல் முறையில் தமிழ்மொழியை ஆராய்ந்து அதன் தனிப் பெருமையை உணர்த்தினர் சிலர். தமிழகத்தில் முற்காலத்தில் வழங்கிய வட்டெழுத்தின் வரலாற்றையும் பிற்காலத் தமிழ் எழுத்தின் வரலாற்றையும் ஆராய்ந்து தமிழின் தொன்மையை வழங்கினர் சிலர். ஆழநெடுந்திரை ஆழிவாய்ப்பட்ட பழந்தமிழ் நாட்டின் சிறப்பையும் பரப்பையும் ஆராய்ந்து அறிவித்தார் சிலர். கல்லிலும் செம்பிலும் அமைந்த சாசனங்களைக் கற்றும், மண்ணுள் மூழ்கி மறைந்த பழம் பொ

ருள்களை ஆழ்ந்தெடுத்தும் தமிழகத்தின் பழைய வரலாற்றை அறிய முயன்றார் சிலர். தமிழ்மொழியில் அமைந்திட்ட விழுமிய அறநூல்களை மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்த்தார் சிலர்.

மிஸ்டர் கால்டுவேல்லின் தமிழ்ப் பயிற்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேல் நாட்டின் ஒளி வீசுவதாயிற்று. காலையில் எழும் கதிரவன்போல், கால்டுவெல் என்னும் மொழிநூற் புலவர் இந்நாட்டில் தோன்றினார். தென்றமிழ் நாடாகிய திருநெல்வேலியி லமைந்த இடையன்குடியென்னும் சிற்றூரைத் தம் இருப்பிடமாகக் கொண்ட இவ்வறிஞர் உலகவழக்கினும் நூல்வழக்கினும் அமைந்த அருந்தமிழ் மொழியை ஆர்வமுறப் பயின்றார்.

தென்னாட்டு மொழிகளைப் பயின்ற மேனாட்டினர்

இவ்வாறு கால்டுவெல் தமிழ்மொழியைக் கற்றுவரும் காலத்தில் மலையாள மொழியை டாக்டர் குண்டர்ட் என்னும் மேலைநாட் டறிஞர் மொழிநூல் முறையில் ஆராயத் தலைப்பட்டார். கருநாடக நாட்டில் வழங்கிய கன்னட மொழியை டாக்டர் கிட்டல் என்னும் கலைவாணர் கற்கத் தொடங்கினார். ஆந்திர மொழியை ஆர்டன் முதலிய மேலைநாட்டறிஞர் ஆராய முற்பட்டார். தமிழ்மொழியின் ஆழத்தையும் அகலத்தையும் ஆராய்ந்தறிந்த கால்டுவெல் ஆசிரியர் நாற்றிசையினும் நல்லொளி வீசக் கண்டு மகிழ்ந்தார். தமிழோடு மிகுந்த தொடர்புடைய மலையாள மொழியை முட்டறுத்துக் கற்ற குண்டர்ட் என்னும் மொழிநூற் புலவர் மலையாள இலக்கணமும் மலையாள ஆங்கில அகராதியும் எழுதிப் போந்தார். கன்னட மொழியை நிலைகண்டுணர்ந்த கிட்டல் என்னும் கலைவாணர் தாம் ஆராய்ந்தறிந்த உண்மைகளை அரிய கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தினார். ஆந்திர மொழியை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த ஆர்டன் என்னும் ஆசிரியர் தெலுங்கு மொழியின் இலக்கணம் தெரிவிப்பாராயினர். இவ்வாராய்ச்சிகளின் பயனாகக் கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் தமிழ்மொழியோடு

நெருங்கிய தொடர்புடைய மொழிகள் என்பது வெள்ளிடை மலை போல் விளங்குவதாயிற்று. இந் நான்கு சிறந்த மொழி களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளேயாயினும், மிகத் தொன்மையும் செம்மையும் வாய்ந்த மொழி தமிழே என்பது ஆசிரியர் கால்டுவெல் உள்ளத்தில் தெள்ளிதின் விளங்கிற்று.

கால்டுவேல்லும் தமிழின் மகிமையும்

தென்னுட்டில் வழங்கிவரும் திருந்திய மொழிகளும் திருந்தா மொழிகளும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளே என்று முதல்முதல் கண்டுணர்த்திய பெருமை கால்டுவெல் ஆசிரியர்க்கே உரியதாகும். தமிழ்மொழியின் செம்மையையும் தொன்மையையும் ஐயந்திரிபற ஆராயக் கருதும் அறிஞர் ஏனைய திராவிட மொழியின் இலக்கண அமைதிகளை அறிதல் இன்றி யமையாததென்று இவ்வாசிரியர் வலியுறுத்திப் போந்தார். தமிழ் இலக்கணத்தைத் திட்டமாகவும் நுட்பமாகவும் பயின்ற தமிழறிஞர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண முணர்வாரா யின் இன்னும் பல நுண்ணிய பொருள்களைத் தெள்ளிதின் உணர்வர் என்று உண்ணின்றெழுந்த உயரிய ஆர்வத்தால் எடுத் துரைத்தார். மேலைநாட்டு மொழிநூல் முறைக் கிணங்க இவ் வாசிரியர் எழுதியமைத்த விழுமிய நூலில் அடிப்படை அன்று போலவே இன்றும் அசைவுறு திருக்கின்றது. ஆயினும், திரா விட மொழிகள் துரானிய மொழிகளோடு தொடர்புடையன வென்று கால்டுவெல் ஆசிரியர் நாட்ட முயன்ற கொள்கை இன்னும் செவ்வையாக நிலைபெறவில்லையென்று தோன்றுகின் றது.

திராவிட மோழிகளின் மீது மேனுட்டுப் புலவர்களின் அபிப்பிராயம்

திராவிட மொழிகளின் தத்துவத்தை நன்கு உணர்ந்த கிரேயர்சன் என்னும் மேலைநாட்டு அறிஞர் இம்மொழிகள் முன் னையோர் வகுத்த மூன்று குடும்பங்களிலும் சேராத ஒரு தனிக் குடும்ப மொழிகளென்று கருதுகின்றார். இன்னும், தென்னுட் டில் வழங்கும் திராவிட தொன்மொழிகளும் கி. மு. 15-ம் நூற்

ருண்டில் அசிரியா முதலிய பழைய நாடுகளில் வழங்கி வந்த மித்துனி என்னும் தொன்மொழியும் தொடர்புடைய மொழி களாம் என்று ப்ரௌன் என்னும் மொழிநூற் புலவர் கூறு கின்றார்.

தமிழின் தனிச்சிறப்பு

இவ்வாறு தமிழின் தொன்மையைப் பிற நாட்டு ஆசிரியர் கள் எழுதிவைத்த புறச் சான்றுகளால் நிறுவிய ஆசிரியர் கால்டு வெல் தமிழ் மொழியின் தனிப் பெருமையையும் விரித்துரைத்து விளங்க வைத்தார். திருந்திய திராவிட மொழிகளாய தெலுங் கும், கன்னடமும், மலையாளமும், துளுவமும் வடசொற்களை மிகுதியாகக் கலந்து வழங்குதலால், அவை வடமொழியின் உத வியின்றித் தனித்தியங்கும் ஆற்றல் இழந்துவிட்டன என்றும், தமிழ்மொழி வடசொற்களை வரம்பினுட்படுத்திச் சிறுபான்மை யே வழங்கி வந்தமையால் அம்மொழியின் உதவியின்றியே தனித் தியங்கவும் செழித்தோங்கவும் வல்லதென்றும் செவ்வையாய் உணர்த்திப் போந்தார். அன்றியும், தமிழ் இலக்கணத்தில் உயர்திணை யென்றும் அஃறிணை என்றும் பெயர்களை வகுத்து வழங்கும் பான்மை தமிழ்மொழிக்கே உள்ள தனிச்சிறப்பென்று தக்கவா றெடுத்துரைத்தார்.

இன்றைக்கு ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் திரா விட மொழிகளின் ஒப்பிலக்கண மென்னும் உயரிய நூலியற்றித் தமிழ்மொழிக்கு ஒப்பற்ற உதவி செய்த கால்டுவெல் ஆசிரியர் கருத்துக்களைச் செவ்வையாக ஆராய்ந்து பழையன கழித்துப் புதியன புகுத்திப் பழந்தமிழ் மொழிக்குப் பணிசெய்தல் கற் றறிந்தோர் கடமையாகும்.

இனி, தமிழ் எழுத்து வகையை ஆராய்ந்த டாக்டர் பர் னல் முதலியோரையும், சாஸனங்களை ஆராய்ந்த டாக்டர் ஹல்ஸ் முதலியோரையும், நிலநூல் ஆராய்ந்த ஸ்காட் எலி யெட் முதலியோரையும், தமிழ் நூல்களைப் பிறமொழிகளில் மொழி பெயர்த்த போப் முதலிய பெரியோரையும், இவர் போன்ற பிறரையும் பின்னர் ஆராய்வோம். (சிவநேசன்.)

கடவுளும் காந்திப் பெரியாரும்

[திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்]

உலகில் எல்லாப் பொருள்களையும் ஊடுருவி மறைந்து நிற்கும் சொல்லொண்ணாத சத்தி ஒன்று உளது. அந்தச் சத்தியை நான் கண்ணாற் பார்க்காவிட்டாலும் நெஞ்சினால் உணருகிறேன். காணக் கூடாததும் உணரக் கூடியதுமான இந்தச் சத்தியானது அளவை யறிவினால் மெய்ப்பிக்கக் கூடாதது; ஏனென்றால் அது ஐம்புலன்களால் அளந்தறியக் கூடிய பொருளன்று; அஃது ஐம்புலன்களைக் கடந்தது. ஆனால் ஒரு அளவுபட்ட எல்லையில் கடவுள் உண்டு என்னும் உண்மையை நாம் அளவை யறிவினால் ஊகித்து அறியக்கூடும்.

சாதாரண காரியங்களிலுங்கூட, மக்கள் தங்களை ஆளுகிறவர் யார் என்றும், எதற்காக ஆளுகிறார் என்றும், எப்படி ஆளுகிறார் என்றும் தெரியாதவர்களா யிருக்கிறார்கள்; அவ்வாறு அவர்கள் தெரியாதிருந்தாலும் தங்களை உறுதியாய் ஆளுகிற சத்தி ஒன்று உளது என்று அவர்களுக்குத் தெரியும். நான் மைசூர் நாட்டில் செய்த சுற்றுப்போக்கில் (சுற்றுப் பிரயாணத்தில்) சிற்றூர் மக்களைச் சந்தித்துக் கேட்டபொழுது மைசூர் நாட்டினை ஆண்டவர் யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை; தங்களை யாரோ ஒருவர் ஆண்டு வந்தார் என்று மாத்திரம் அவர்கள் சொன்னார்கள். இந்த ஏழை மக்களுக்குத் தங்களை ஆண்ட அரசரைத் தெரியாது என்றால் அவர்கள் தங்கள் அரசருக்குக் கீழாயிருப்பதைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு அளவிடக் கூடாத அளவில் கடவுளுக்குக் கீழாயிருக்கிற நான் அரசர்களுக்கெல்லாம் அரசனா யிருக்கிற கடவுளை அறியாதிருப்பது வியப்பன்று.

நான் கடவுளை அறியாதிருந்தபோதிலும், மைசூர் நாட்டிலுள்ள சிற்றூர் ஏழை மக்கள் தங்களை ஆண்ட ஒருவர் உண்டு என்று உணர்ந்திருந்ததுபோல உலகிலிருக்கிற எல்லாப் பொருள்களையும், வாழ்கிற எல்லா உயிர்களையும் ஆண்டு வருகிற

ஒரு மாற்றக் கூடாத சத்தி உண்டு என்று உறுதியாய் உணருகிறேன். அந்தச் சட்டம் ஒரு அறிவில்லாத சட்டம் அன்று; ஏனென்றால் ஒரு அறிவில்லாத சட்டமானது எல்லா உயிர்களையும் ஒரு கட்டுக்கு உட்படுத்தி ஆளுதல் செய்ய முடியாது. சர். ஜே. சி. போஸ் என்ற அறிஞருடைய ஆச்சரியமான ஆராய்ச்சியால் உலகில் உயிரில்லாதனவாகத் தோன்றுகிற இயற்கைப் பொருள்களும் உயிருடையன என்பது மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

உயிருள்ள எல்லாப் பொருள்களையும் ஆண்டு வருகிற சட்டம் எதுவோ அதுவே கடவுளாகும். சட்டமும் சட்டத்தைச் செய்கிறவரும் ஒன்றே. சட்டத்தையாவது சட்டத்தைச் செய்தவரையாவது நான் சிறிதும் அறியாமலிருப்பதனால் சட்டமும் சட்டம் செய்தவரும் உண்டு என்பதை மறுக்காமலிருக்கலாம் உலகில் ஒரு சத்தி உண்டு என்பதை அறியாமையினாலாவது மறுப்பதினாலாவது யாதொரு பயனும் எனக்கு உண்டாகாததுபோலக் கடவுளையும் கடவுளுடைய சட்டத்தையும் இல்லை என்று நான் மறுப்பதினாலே கடவுளுடைய ஆளுகையிலிருந்து அல்லது கடவுளுடைய சட்டத்தினது ஆளுகையிலிருந்து விடுதலை பெறமுடியாது. ஆனால் உலகிலுள்ள ஒரு சத்தியை ஒப்புக்கொண்டு அதற்கு உட்பட்டு நடத்தல் எனது உலக வாழ்க்கையை நடத்துதற்கு எளிதாயிருத்தல் போலக் கடவுளையும் கடவுளுடைய சட்டத்தையும் தாழ்மையாயொப்புக்கொண்டு அச் சட்டத்துக்கு உட்பட்டு நடத்தல் எனது வாழ்க்கைப் போக்கை எளிதாக்கி விடுகிறது.

என்னைச் சுற்றி யிருக்கிற எல்லாப் பொருள்களும் எப்பொழுதும் மாறிக்கொண்டும் அழிந்துகொண்டும் இருக்குங்கால் அந்த மாறுதலுக்கும் அழிதலுக்கும் காரணமாயுள்ள உயிர்ப்பொருள் ஒன்று எல்லாவற்றையும் படைத்துக்கொண்டும், காத்துக்கொண்டும், அழித்துக் கொண்டும், அழிந்த பொருள்களைத் திரும்பப் படைத்துக்கொண்டும் இருத்தலை நான் மங்கலாய் அறிகிறேன். இப்படிச் செய்வது எந்தச்

சத்தியோ அந்தச் சத்தியே கடவுள். நான் எனது புலன் களால் அறியக்கூடிய எந்தப் பொருளும் நிலைத்திருப்பதும் நிலைத்திருக்கக் கூடியது மல்லாததா யிருப்பதால் கடவுள் ஒரு வரே நிலையா யிருப்பவர்.

மேலே சொன்ன இந்தச் சத்தியானது நன்மை செய்யும் சத்தியா அல்லவா? அது நன்மையே செய்யும் சத்தி என்று நான் அறிகிறேன்; ஏனென்றால் சாவினிடையில் உயிரும், பொய்யினிடையில் மெய்யும், இருளினிடையில் ஒளியும் நிலையா யிருத்தலை நான் அறிகிறேன். கடவுளே உயிர் என்றும், உண்மை என்றும், ஒளி என்றும் நான் அறிகிறேன். கடவுளே அன்பு; அவரே ஒப்பற்ற மேலான பொருள்.

உலக அறிவுக்கு மாத்திரம் பொருத்தமா யிருக்கிறவர் கடவுளாக மாட்டார். கடவுளா யிருக்கிறவர் நெஞ்சத்தையு மாண்டு அதனைக் கனியச் செய்கிறவரா யிருத்தல் வேண்டும். அவருடைய அருள் நமது அடியார்களுடைய ஒவ்வொரு சிறிய செயலினும் விளங்குதல் வேண்டும். இந்த அருள் விளக்க மானது ஐம்புலன்களால் உண்டாவதன்று. அது திட்டமான உள்ளுணர் வாட்சியினலேயே உண்டாதல் வேண்டும். புல னுணர்ச்சிகள் மேற்பார்வையில் எவ்வளவு உண்மையாய்த் தோற்றினும் உண்மையில் பொய்யாகவும் ஏமாற்ற முடைய வையாகவும் இருக்கின்றன. புலனுணர்ச்சிகளைக் கடந்து ஒருவர் தன்னுள்ளே உணர்வதாகிய உள்ளுணர்வே நமக்குப் பிழை படாத உண்மையா யிருக்கின்றது. அப்பேர்ப்பட்ட உள்ளுணர் வானது வெளிச் சான்றுகளால் மெய்ப்பிக்கப்படாது அது தம் உள்ளத்தினுள்ளே கடவுளுடைய இருப்பை உணர்கின்ற அடியார்களுடைய அருள் பழுத்த ஒழுக்கத்தாலும் பண்பி னுலும் மெய்ப்பிக்கப்படுகின்றது.

அத்தகைய சான்றுகள் உலகினுள்ள எல்லா நாடுகளில் வாழையடி வாழையாய் வந்துள்ள முன்னறிந் துரைப்பவர் களும் (தீர்க்கதரிசிகள்) மெய்யறிஞர்களும் அடைந்த பழக்க அறிவினுல் (அநுபவத்தால்) பெறப்படுகின்றன. அச்சான்று

களை எல்லாம் பொய்யெனத் தள்ளுதலானது ஒருவர் தாம் இருப்பதையே இல்லை என்று சொல்லுதல் போல்வது.

இந்த நுண்ணுணர்வாட்சி நிலை பெயராத அன்பின் வழித் தாய் உண்டாகும். கடவுள் உண்டு என்பதை ஒருவர் தமக்குள்ளே வைத்த அயரா அன்பினால் அறிந்துகொள்ளலாம். ஒருவர் நெஞ்சில் உணரும் அன்பு வெளிச் சான்றுகளால் மெய்ப்பிக்கப்படக் கூடாமையால் உலகமானது அறநெறி ஆட்சிக்குள் ளிருத்தலையும் அதுபற்றி உண்மையும் அன்பும் அடங்கியுள்ள அறநெறிச் சட்டத்தினது மேன்மையையும் நம்பி ஒழுகுதலே நேர்மையுள்ள வழியா யிருக்கிறது. உண்மைக்கும் அன்புக்கும் மாறுயுள்ளவைகளை யெல்லாம் பொய்யெனத் தெளிந்து விலக்குகின்ற கருத்து உடையவர்களுக்கு அன்பின் வழி நிற்றலே தவறுதலில்லாத வழியாகும்.

கடவுள் உண்டு என்று உலக அறிவு வழியில் காரணம் சொல்லி மெய்ப்பிக்க என்னால் முடியாது என்று நான் ஒப்புக்கொள்கிறேன். அன்பு (பக்தி) உலக அறிவைக் கடந்து நிற்கிறது. மெய்ப்பிக்க முடியாத தொன்றை மெய்ப்பிக்க முயல வேண்டாம் என்றே நான் சொல்லுகின்றேன்.

உலகில் தீமை உளதாவதற்கு நான் உலக அறிவு வழியில் யாதொரு காரணமும் சொல்ல முடியாது. தீமை இருத்தலுக்குக் காரணம் சொல்ல விரும்புவது தாங்கள் கடவுளுக்கு ஒப்பானவர்கள் என்று சொல்லுதல் போல்வது. ஆதலின் நான் உலகில் தீமை உள்ளது என்பதைத் தாழ்மையுடன் ஒப்புக்கொள்கிறேன். கடவுள் உலகில் தீமை நிலவுவதற்கு இடம் கொடுத்தலினாலேயே நான் அவரைத் துன்பத்தை நீக்கும் பொறுப்புடையவர் என்றும் நினைக்கிறேன். கடவுள் தம்மிடத்தில் யாதொரு தீமையும் உடையர் அல்லர் என்பது எனக்குத் தெரியும். கடவுள் தீதொன்று மில்லாதவரா யிருந்தாலும் அவர் தீமைக்குக் காரணராயும், காரணரா யிருந்தும் அதனாற் பற்றப்படாதவராயு மிருக்கிறார்.

எனது உயிருக்குக் கேடு வரினும் அதனைப் பொருட்படுத்

தாது தீமையுடன் இகலி அதனை எதிர்க்காவிட்டால் நான் கடவுளை அறியவே முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என்னுடைய தாழ்மையானதாயும் அளவுபட்டதாயுமுள்ள பழக்க அறிவின் பயனாக நான் இந்த உண்மையை உறுதியாய் நம்பியிருக்கிறேன். நான் எவ்வளவுக்கு எவ்வளவு தூய்மை அடைகிறேனோ அவ்வளவுக்கு அவ்வளவு நான் கடவுளுக்கு அருகி லிருப்பதாக உணர்கின்றேன். கடவுளிடத்தில் எனக்கு உள்ள அன்பு இப்பொழுது இருத்தல்போலப் போலியா யிராமல் இமயமலைகள் போல அசைக்கக் கூடாததாயும், அவைகளுடைய சிகரங்களில் உறைந்திருக்கிற பனிக் கட்டிகளைப் போல அழுக்கில்லாத வெண்மையான தூய்மை உடையதாயு மிருப்பின் நான் இன்னும் எத்துணை கடவுள் அருகில் இருப்பேன்!'.

இறந்த நாட்கள்

[திருக் கபசம் எழுதியது]

கழிந்த நாட்கள் திரும்பி வாரா; அவற்றைப் பற்றிய நினைவோ மாய்வதில்லை. "இறந்ததைப்பற்றி நினைப்பது வீண்; வருவதைக் குறித்துக் கனவு காண்பதும் வீண்; இன்றைப் பொழுதை ஏற்றவாறு வழங்குவதே நன்று" என்று சொல்வாருளர். இது தவறென்று யாம் சொல்லவியலாது. ஆயின், இறந்த நாட்களைப் பற்றி நினைப்பது தவறோ? எனின், அதுவுந் தவறன்று. அளவு கடந்து இறந்ததை நினைந்து ஏங்குவதும், வருவதை எண்ணிக் காலத்தைக் கழிப்பதும் இழுக்காம். அளவுபட இறப்பையும் எதிர்வையுங் குறித்து அவ்வப்போது நினைத்தல் பயனளிக்கக் கூடியது. இறந்ததை முற்றும் விலக்க வேண்டுமென்போமாயின் நினைவென்பதையே ஒழிக்க வேண்டும்.

நினையாத நேரங்களில், ஒரு மணத்தால், காட்சியால், ஒலியால், ஒருவரது சொல்லால், எனது உளம் நிகழ்காலத்திலிருந்து நீங்கி, இறந்த எனது இளமைக்குச் செல்கின்றது. வாழைப்

பூவின் மணமும், இளஞாயிறு புல்வெளிகளிற் காயுங் காட்சியும், மடைகளில் ஓடும் நீரின் ஓசையும் முப்பத்தைந்து ஆண்டுகட் கப்பால் என்னைத் தூக்கிக்கொண்டு செல்கின்றன. இளமை மீதோடிய உளம் எளிதில் அதை விட்டு நீங்குகின்றிலது. என்னை யான் மறந்து ஓர் இளைஞனாகிவிடுகின்றேன். உளத்தில் இத் துணை எளிதாகத் திரும்பி வருகின்ற இளமை அவா, உடலி னுந் தோன்றுமாயின் எவ்வளவு நன்றாயிருக்கும்! மலைச்சாரல் களினுங் குளக்கரைகளினும் உணவையும் மறந்து ஓடித் திரிந்த வாறு, இன்றும் எனது கவலைகளை மறந்து யான் கும்மாளம் போடக் கூடுமாயின், இறைவனே, உன்னை யான் வாழ்த்தேனோ? உயிருடனிருப்பதே ஓர் இன்பமாயிருந்த அவ்விளமையின் மாட்சி என்னே! என்னே!

'மடமகனே, உளத்தில் திரும்பி வருகின்ற இளமை உடலி னுந் தோன்றுமாயின் நன்றாயிருக்குமென்று எங்ஙனந் துணிந்து சொல்வாய்? மறுபடியும் இளமை வருமாயின், முன்னைவிட நேர்மையான முறையி லதை நீ வழங்குவாயென்ற உறுதி என்னை? இளமையுடன் அறியாமையுந் திரும்பி வரவேண்டு மன்றோ? நீ பெற்ற கல்வியையும் நுகர்ச்சியையும் நீக்கி இளமை மட்டும் பெறுவதாற் பெரிய பயனொன்றும் வராது' என்று எனது உளமே சொல்கின்றது. நன்று; ஆயினும், கல்வியும் நுகர்ச்சியும் இளமையின் உணர்ச்சிகளைப் பொன்போற் போற்றாவிடின், அவற்றை நீக்கி இளமை பெறுவதே சிறந்த தென்று தோன்றுகிறது. இதன் காரணத்தைப் பின்னர் மொழிவாம்.

இறந்த நாட்களைப்பற்றி நினைக்குங்கால், அரிய காலத் தைக் கொன்னே கழித்த மடமையும், பொன்னனைய தருணங் களைக் கைநழுவவிட்ட பேதமையும், நெறி தவறி நடந்த வெட்கமும் உளத்தில் தோன்றியே தீரவேண்டும். இளமையிற் சிறுமை இயல்பே. முதுமையில் இளமையைக் குறித்து எண் ணும் பொழுது பெரும்பாலும் நமது நினைவு நமது தவறுகள் மீதும் புன் செயல்கள்மீதும் செல்வதில்லை. காலப் போக்கின்

வியத்தகு தன்மைகளுள் இதுவொன்று. இறந்த காலத்தில் நிகழ்ந்தவற்றுள், எவை நமக்கு இன்பத்தையும் அமைதியையுந் தருகின்றனவோ அவற்றின் மேலேயே நமது நினைவுகள் உறைகின்றன. நாம் செய்த பிழைகளும், நாணுதற்குரிய செயல்களும் நாளாவட்டத்திற் குறைந்து மறைகின்றன. எல்லா உயிர்கள் மேலும் ஓவா விரக்கங் கொண்ட செம்பொருள் மக்கட்கீந்த பேருதவிகளில் ஒன்முக இதை நாம் கருதவேண்டும். ஏனெனின், எள்ளுதற்கும் நகுதற்குமுரிய செய்திகளைப்பற்றிய நினைவு, அச்செய்திகளை நாமியற்றியகாலை எத்துணை ஆற்றலுங் கூர்மையு முடையதா யிருந்ததோ அத்துணை ஆற்றலுடனுங் கூர்மையுடனும் முதுமையில் தோன்றுமாயின், வாழ்க்கை என்பதே ஒரு பாடாக முடியும்; நினைவென்பதே தாங்குதற்கரிய ஒரு தீங்காகும். காலங் கழியக் கழிய வாழ்க்கையின் பள்ளங்கள் நிரப்பப்பட்டு, மேடுகள் முன்னினும் உயர்ந்து விளங்குகின்றன.

அயல் வீட்டிற் கொடுத்த தின்பண்டத்தை உண்டதோடமையாது, அதிலொரு பகுதியைக் கையில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வர, அன்னை கண்டு வெகுண்டு செங்கோல் செலுத்தியதும்; விடுமுறைக்கு வீட்டிற்கு வந்த யான் திரும்பவும் பள்ளி செல்ல மறுத்தபொழுது தந்தை தாண்டவம் புரிந்ததும்; அக்காலை எனது சிற்றுளம் பொறுத்தற்கரிய துன்பத்தி லாழ்ந்ததும்; பதினைந்து, பதினுறுண்டில் பள்ளி நண்பர் சிலரது தூண்டுதலாற் பகர்தற்கரிய தீச் செயல்கள் புரிந்ததும்; அதற்குமேல் நடந்த நாணுதற்குரிய நடக்கையும்; இப்பொழுது முன்போல் உளத்தைப் புண்படுத்தவில்லை. இவைகளைப் பற்றிச் சில வேளைகளில் விளையாட்டாகப் பேசவும் உளம் இசைகின்றது. இன்னுஞ் சில நாட் சென்றபின் இவை கருத்திலிருந்து நீங்கினும் நீங்கும். இவை போன்றவற்றையே வாழ்க்கையின் பள்ளங்கள் என்று முன்கூறியது.

ஆனல், முதன்முதற் கடலைக் கண்டபோது என் உளங் குதித்தெழும்பிக் கரைகாணு வின்பமும், ஆழமறியா அச்சமும்

எய்தியதும்; இலைகளின்றி மலர் இணர்கள் நிறைந்து செவ்வானம்போல் தோன்றிய ஒரு முருக்க மரத்தைக் கண்டு சொல்லொணாத ஓர் உணர்ச்சி மேலிட்டு யான் கூத்தாடியதும்; எனது பள்ளிக்கூடக் காற்பந்து விளையாட்டுக் குழுவின் (Foot ball team) தலைவனாகத் தேர்தெடுக்கப்பட்டுப் பந்தயத்தில் யான் முதன்முதற் பெற்ற வெற்றியின் உவகையும்; அதுகாலை எனது தோழர்கள், சண்டையில் வென்ற சேவல் வீட்டுக் கூரையில் ஏறிநின்று கூவுவதுபோல் தொண்டை சுவறக் கூவி வெறித்தவர்போல் குதித்ததும், இப்பொழுது முன்னைவிட அதிக இன்பத்தைத் தருகின்றன. இவற்றின்மேல் உளம் ஆவலுடன் செல்கின்றது. இவை போன்றவற்றையே வாழ்க்கையின் உயரங்கள் என்று முன் சொன்னது.

இறந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் நடுவே இடைவெளியொன்று மில்லை ஆதலின் முதுமையில் ஒருவர் இளமையிலிருந்து நீங்கி நிற்கவேண்டிய காரணமே கிடையாது. எவர்களுடைய முதுமை இளமையோடு ஒட்டி இருக்கிறதோ அவர்களே ஞாலத்திற்கு நன்மை செய்யக்கூடியவர். எங்ஙனமெனின், மக்க ளெல்லோரும் ஒரு கூட்டத்தவர் என்பது இளமையிற் கல்வியி னுதவியின்றி நம்மா லுணரப்பட்டது. ஒரு பிள்ளை மற்றொரு பிள்ளையையுந் தன்னைப் போலவே நினைக்கிறது. பிள்ளைகள் ஒருவர் அழுவதை ஒருவர் கண்டு அழுகிறார்கள். பிறருடைய நன்மை தீமைகளைத் தங்களுடைய நன்மை தீமைகளாகக் கருதுவது இளமையில் இயற்கையாகவே அமைந்துகிடக்கிறது. இளைஞர்கள் வறுமையாலுஞ் செல்வத்தாலும் வரும் வேற்றுமைகளை அறியார். கனிந்திருக்கும் இளைஞனது உளம் முதுமையிலன்றோ கல்லாகி விடுகிறது? இறந்த நாட்களைப் பற்றி நன்கு நினைந்து பார்மின்.

தமது நாட்டிற் பெருந் தொகையினரான மக்கள் சாலக் கடிதில் முதுமை யடைந்துவிடுகின்றனர். முதுமை யடைவது மன்றி இளமையின் உணர்ச்சிகளை அவர்கள் விரைவில் மறந்துவிடுகின்றனர். இது நமது நாட்டின் வெப்ப தட்ப நிலையா லாவ

தென்று கூறுதல் கூடும். ஆயின், இதுமட்டும் போதிய காரண மாகாது. நமது பயிற்சியும் பழக்கங்களும் இதற்குத் துணை யாகின்றன. இது பற்றி விரித்துக் கூறப் புகின் இக் கட்டுரை யின் நோக்கம் சிதையும்.

இளமையில் வையகம் நமக்கு எவ்வளவு இனிதாய்த் தோன்றியது! புல்லும், பூவும், மரங்களும், மலையுங், குன்றுங், தோப்பும் சொல்லரிய அழகுடையனவாயும் நம்மைத் தம் பால் ஈர்க்குந் தன்மையுடையனவாயு மிருந்தன. இத்தன்மை இப்பொழுது யாண்டுச் சென்றது ? கடலும் வெளியும் விண் ணும் ஞாயிறுந் திங்களும் முன்போலவேதா னிருக்கின் றன. அவற்றைக் கண்டு இன்பம் நுகரும் ஆற்றல் இறந்த நாட்களோடு இறந்தது. சங்க நூல்களிற் பொழிலும் பழன மும் மக்க ளுறைவிடங்களும் பாலையும் நமக்குத் தீட்டப்படும் வகையை உற்று நோக்குவோமாயின், அக்காலத்துப் புலவர் கள் இளமை யுணர்ச்சி நிறைந்தவர்களா யிருந்தார்க ளென்பது நன்கு விளங்கும். சங்கச் செய்யுள்களிற் குறிஞ்சியும் முல்லை யும் நெய்தலும் மருதமும் இன்ப மொழுகுந் தகையவாய் நம் முன் கொணரப்படுகின்றன. ஆக்கியோன் உளத்திற் கிடந்த வின்பம் பாடலில் வெளிப்பட்டுக் கற்போன் உளத்தில் கூட்டப் படுகின்றது. குறிஞ்சியையும் முல்லையையும் புலவன் இன்பத் தோடு பார்த்திராவிடின் அவை அவனது பாட்டில் இன்பந் தரு வனவாய் நமக்குத் தோன்ற. இன்பத்துடன் இயற்கையை நோக்குதல் இளமையின் தன்மை. தன் உளத்தில் தோன்றிய உணர்ச்சியைத்தான் புலவ னொருவன் தன் செய்யுளைப் படிப் போர் உளத்தில் எழுப்புதல் கூடும். உணர்ச்சியின்றி வெறுங் கல்வித் திறத்தாற் பாடல் செய்வது உயிரற்ற உடலை அழகு செய்வதை யொக்கும். இதுபற்றியே, கல்வியும் முதுமை நுகர்ச்சிகளும் இளமையின் உணர்ச்சிகளைப் பொன்போற் போற்றுவிடின் அவற்றை நீக்கி இளமை பெறுவது சிறந்த தென்று முன் கூற நேர்ந்தது. முன்னோர் செய்த நூல்களி லிருந்து சொற்களை மட்டுங் கற்றுக்கொண்டு, இச் சொற்களைப் புணர்த்தித் தம் புலமை காட்டப் புகுந்ததனாலேயே பிற்காலத்

துப் புலவர் பலருடைய பாடல்கள் சுவையற்றுப் போயின. "காரிகை கற்றுக் கவிதை பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பதுமேல்" என்பதைத் தமிழர் பலர் உணர்ந்திலர். இன்பம் பயக்குஞ் செய்யுள் உளத்திலிருந்து வரவேண்டும். உளத்தை யறிவதற்கு இறந்த நாட்களை ஆராய்மின்; இளமையை விடன்மின். நமது நாட்டிற்கோர் அணிகலமாய் விளங்குகின்ற இரவீந்திரநாத டாகூரின் செய்யுளை யுற்றுநோக்குமின்.

உவில்லியம் உவர்ட்ஸ்வர்த் (William Wordsworth) எனும் ஆங்கிலப் புலவர் தாம் இயற்றிய 'சாவாமையின் உணர்ச்சிகள்' (Intimations of Immortality) என்ற பாடலில், "இளமையில் நாம் இறைவனை அணுகி இருக்கிறோம்; ஆண்டுகள் செல்லச் செல்ல நாம் இறைவனை விட்டு அகல்கின்றோம்" என்று சொல்கின்றார். இது உண்மையன்று என்று யார் சொல்லக் கூடும்?

தூத்துக்குடி

சைவ மங்கையர் மகாநாடு

பாகம்பிரியாள் மாதர் சங்க 5-வது ஆண்டு நிறைவு விழாவும்

1107 மார்கழி 14-ம் நாள் (29-12-31) செவ்வாய்க்கிழமை மாலை 3-மணிக்குத் தூத்துக்குடி சி. வ. அவர்கள் பாடசாலை மேடையில் பல்லாவரம், பொதுநிலைக் கழக ஆசிரியர் திரு. சுவாமி வேதாசலம் அவர்கள் புதல்வியார் பாளையங்கோட்டை சைவத் திரு. திருவரங்க நீலாம்பிகை அம்மையார் அவர்கள் தலைமையில் சைவ மங்கையர் பொதுக் கூட்டம் கூடியது. அதுகாலை திருநெல்வேலி, சிந்துபூந்துறை, குலசேகர பட்டினம் முதலிய வெளியூர்ப் பெண்மணிகள் சிலரும் உள்ளூர்ப் பெண்மணிகள் பலருமாகச் சுமார் 300 பெண்மணிகள் கூடியிருந்தார்

மாலை 3-மணிக்கு மா. கி. பெண் பாடசாலை மாணவிகள்

தமிழ்மறை ஓதி அவை தொடங்கப்பெற்றது. பாகம்பிரியாள் மாதர் சங்க அமைச்சர் திருமதி பர்வதத்தம்மாள் அவர்கள் வரவேற்புத் தாள் படித்தார்கள். பின் 3-15 மணி முதல் 4-மணி வரை தலைவி முன்னுரை நடைபெற்றது. பின் 4-4½ மணி வரை குலசை தாயம்மாள் கல்லூரி ஆசிரியை திருமதி. மு. சண்முகசுந்தரத்தம்மாள் அவர்கள் 'மகளிர் அறம்' என்பது பற்றியும், சிந்துபூந்துறை திருமதி. மு. செல்லத்தம்மாள் அவர்கள் 'சைவ மாதர் தற்கால நிலை' என்பது பற்றியும், தூத்துக்குடி திருச்செல்வி சோ. கைலாசம் என்னும் 13 வயதுள்ள மாணவி 'காரைக்கா லம்மையார்' என்பது பற்றியும், தூத்துக்குடி திருச்செல்வி சீதாலட்சுமி என்னும் 11 வயதுள்ள மாணவி 'அப்பூதியடிகள்' என்பது பற்றியும், குலசேகர பட்டினம் திருமதி. வள்ளியம்மை யம்மாள் அவர்கள் 'கௌரி சரித்திரம்' என்னும் பொருள் பற்றியும், தூத்துக்குடி திருமதி. சோ. பிச்சம்மாள் அவர்கள் கடவுள் 'அடியார்க்கெளியர்' என்னும் பொருள் பற்றியும், சங்க அமைச்சர் தூத்துக்குடி திருமதி. சு. பர்வதத்தம்மாள் அவர்கள் 'அன்பும் சிவபக்தியும்' என்னும் பொருள் பற்றியும் மிக அருமையாகவும் விளக்கமாகவும் சொற்பொழிவுகள் நிகழத்தினார்கள்.

அதன் பின்னர் மாலை 7 முதல் 9½ மணி வரை தலைவி முடிவுரையாக 'சைவ மாதர் சைவத்தை வளர்க்கவேண்டும்' என்னும் பொருளைத் தலைப்பாகக் கொண்டு, சைவமாதர் சிறு தெய்வங்களை வணங்கலாகாது, உயிர்ப்பலி விலக்கல், எல்லாம்வல்ல சிவபெருமானை வழிபடல், சமயக்கல்வி கற்றல், மடாலயம், சைவ மாதர்கள் கையாள வேண்டிய சில சீர்திருத்தங்கள், செல்வ மாதர்களின் நிலை, மேனாட்டு மாதர்கள், அறச் செயல்கள் ஆகிய இவைகளை நன்றாக விளக்கிப் பேசினார்கள். அவையோர்களும் ஒருமனப்பட்டு அமைதியாயிருந்து கேட்டார்கள். இதனாலேயே தலைவி முன்னுரை இனிய குரலிலும் கேட்டார்ப் பிணிக்குந் தகையதாயும் அமைந்திருந்ததென்பது சொல்லாமலே விளங்கும். பின்னால் தேவாரம் ஓதிச் சபை கலைந்தது.

திருவிசைப்பா வுடையார் துவாதச மாலை

[ஸ்ரீகாழி. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்]

அவதாரிகை

திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மரும் அருளிச்செய்த திருவிசைப்பாவும், அவருட் சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறையாக, அபய குலசேகர சோழவரசர் வேண்டிடத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி வகுத்தருளினர் (திருமுறை கண்ட புராணம் உசு). திருவிசைப்பா—அழகிய இசை பொருந்திய பாக்களை யுடையது என அன்மொழித் தொகையாய்த் திருமுறைக்குக் காரணக் குறிப்பாயிற்று. திருப்பல்லாண்டு—இஃது இறை முதற் கடவுளான பரமசிவனைப் பல்லாண்டு வாழ்கவென அன்பிற் பாட்டருளிச் செய்தலின், பல்லாண்டென் றாயிற்று; பல ஆண்டு பயத்தலைச் செய்வதியாது அது பல்லாண்டென அன்மொழித் தொகையாய்த் திருமுறைக்குக் காரணக் குறியாயிற்று. இத் திருமுறையை ஆக்கியோரது பெரும்புகழைப் பன்னிரண்டு செய்யுட்களாற் கூறத்தொடங்கி, முதற்கண் நின்ற செய்யுள் இத் திருவிசைப்பா வுடையார் திருநாமங் கூறுவது:—

செம்பொன்மணி யம்பலத்து நிருத்த னார்க்குத்
திருவிசைப்பா வுரைத்தவர்தந் திருப்பேர் சொல்லிற்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த் தேவர்
... நம்பிகா டவர்கோனற் கண்டரா தித்தர்
நன்குயர்வே ணாட்டடிகள் திருவாலி யமுத
ரம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகவிவ ரொன்பதின்மர் தாமுறைகண் டடைவே.

(இதன் பொருள்) நிருத்தனார்க்குத் திருவிசைப்பா உரைத்தவர் திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் (என்றவாறு)

[திருநாமவடைவு முன்னர்க் காண்க. (௩)] (க)

இரண்டாவது செய்யுள் திருப்பதிகத் தொகை கூறுவது :

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு சேந்த
ரன்புறுபல் லாண்டொன்றே டிசைப்பா மூன்று
திடமுடைய கருவூரற் பத்து வீறிற்
சிறந்தகா டவரிரண்டு கண்டர்வே ணாடர்
படிபுகழொவ் வொன்றுதிரு வாலி நான்கு
பன்னுபுரு டோத்தமனு ரிரண்டு சேதிராய
ருடையதிருக் கடைக்காப்பொன் றாகவிரு பத்தொன்
பானேது செய்யுள்மூந்நூற் றறுபதினே டைந்தே.

(இ-ள்.) திருமாளிகைத் தேவர் முதலியோர் இத்துணைப் பதிகங்களாக, இருபத்தொன்பது பதிகங்கள் முந்நூற் றறுபத் தைந்து பாக்களை யுடையனவாகப் பாடியருளினர் (எ-று.)

[இவ்விவரம் முன்னர்க் காண்க (ரு)] (உ)

மூன்றாவது செய்யுள் திருப்பதிகங்களின் பண்ணடைவு கூறுவது:—

ஐந்துடனல் வருமுரைத்த திருக்கடைக்காப் பிற்பண்
ணறையின்மா ளிகைத்தேவர் நான்கினென்று காந்தாரம்
முந்துகரு வூரர்பத்தி னிரண்டுபுற நீர்மை
மொழிந்திடுகாந் தாரமொன்று காடவர்கோ னிரண்டி
னந்தவில்சா ளரபாணி யொன்றவேணாட் டடிக
ணவின்றதொன்று புறநீர்மை திருவாலி யமுதர்
பந்தமறச் சொன்னான்கி னென்றநட்ட ராகம்
பகர்ந்திடினென் றிந்தளமற் றெவையும்பஞ் சமமே.

(இ - ள்.) திருமாளிகைத் தேவராதியோர் திருப்பதிகங் களின் பண் இன்னவை (எ-று.)

க. திருமாளிகைத் தேவர்

பதிகம்.	தலம்.	முதற்குறிப்பு.	பண்.	செய்யுள்
1.	கோயில்	ஒளிவளர் விளக்கே	பஞ்சமம்	கக
2.	,,	உயர் கொடியாடை	,,	கக
3.	,,	உறவாகிய யோகம்	,,	கஉ
4.	,,	இணங்கிலா வீசன்	காந்தாரம்	கக

ஆகப் பதிகம் 4-க்குச் செய்யுள் சரு.

2. சேந்தனூர்

1.	கோயில்—(திருப்பல்லாண்டு) மன்னுக	பஞ்சமம்	கங
2.	திருவீழிமிழலை—ஏகநாயகனை	,,	கஉ
3.	திருவாவடுதுறை—பொய்யாத	,,	கக
4.	திருவிடைக்கழி—மாலுலாமனம்	,,	கக

ஆகப் பதிகம் 4-க்குச் செய்யுள் ௬எ

3. கருவூர்த் தேவர்

1.	கோயில் — கணம்விரி —	புறநீர்மை	கக
2.	திருக்களந்தை யாதித்தேச்சரம்—கலைகள்—	,,	க0
3.	திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்-தளிரொளி-பஞ்சமம்		கக
4.	திருமுகத்தலை—புவனநாயகன் —	,,	க0
5.	திரைலோக்கிய சுந்தரம்—நீரோங்கி —	காந்தாரம்	கக
6.	கங்கைகொண்ட சோளேச்சரம்-அன்னம்-பஞ்சமம்		கக
7.	திருப்பூவணம் — திருவருள் —	,,	க0
8.	திருச்சாட்டியக்குடி — பெரியவா —	,,	க0
9.	தஞ்சையிராசராசேச்சரம்-உலகெலாம் —	,,	கக
10.	திருவிடை மருதூர்— வெய்யசெஞ்சோதி—	,,	க0

ஆகப் பதிகம் 10-க்குச் செய்யுள் ௱ரு

4. பூந்துருத்தி நம்பி காட நம்பி

1.	திருவாரூர் கைக்குவான்	பஞ்சமம்	உ
2.	கோயில் முத்து வயிரமணி	சாளரபாணி	க0

ஆகப் பதிகம் 2-க்குச் செய்யுள் கஉ

5. கண்டராதித்தர்

1.	கோயில் மின்னார்	பஞ்சமம்	க0

ஆகப் பதிகம் 1-க்குச் செய்யுள் க0

6. வேணாட்டடிகள்

1.	கோயில் துச்சான செய்திடினும்	புறநீர்மை	க0

ஆகப் பதிகம் 1-க்குச் செய்யுள் க0

7. திருவாலியமுதனுர்

1.	கோயில்	பாதாதிகேசம்	பஞ்சமம்	கக
2.	,,	பவளமால்வரை	நட்டராகம்	கக
3.	,,	அல்லாய்ப் பகலாய்	இந்தளம்	கக
4.	,,	கோலமலர்	பஞ்சமம்	கயி

ஆகப் பதிகம் 4-க்குச் செய்யுள் சஉ

8. புருடோத்தம நம்பி

1.	கோயில்	வாரணி	பஞ்சமம்	கக
2.	,,	வானவர்கள்	,,	கக

ஆகப் பதிகம் 2-க்குச் செய்யுள் உஉ

9. சேதிராயர்

1.	கோயில்	சேலுலாம்	பஞ்சமம்	கயி

ஆகப் பதிகம் 1-க்குச் செய்யுள் கயி

ஆக மொத்தம் திருவிசைப்பா திருப்பதிகம் 28; திருப் பல்லாண்டு திருப்பதிகம் 1. ஆகப் பதிகம் 29-க்கும் இப்போது உள்ள செய்யுள் 303, காணமற் போனவை 62. ஆக 365 (3)

நான்காவது செய்யுளிற் போற்றப்படுவார்

1. திருமாளிகைத் தேவர்

பஞ்சமம்பூ வைப்பயிலுந் துறைசை வேந்தர்
பயில்மறையோர் மாளிகையார் போக நாதர்
வெஞ்சமந்தீ ராகமங்க ளுணர்த்த ஞான
வேதியராய்ச் சித்தமடந் தாபித் தானை
யெஞ்சலிலா முகனருளா லிறந்தா னுய்ய
விடர்விலகிச் சிவனையருச் சித்து மாதர்க்
கஞ்சுதரு மகவருளி யரசற் சிறி
யமர்தில்லை யரற்பாடி யமர்ந்திட் டாரே.

(இ - ள்.) பஞ்சமம் என்னும் பண்ணை நாகணவாய்ப் பறவை பாடும் திருவாவடுதுறையில் பிராமண குலத்தில் திரு வவதரித்த திருமாளிகைத் தேவர் போகநாதரிடம் சிவாகமப்

பொருளைக் கேட்டுணர்ந்து ஞானசித்தி பெற்று அக்கோகழி நகரத்தில் சித்த மடத்தைத் தாபித்து, விநாயகப் பெருமானது அருளால் இறந்த பிணத்தை உயிர்பெறச் செய்து, சிவபெருமானை உள்ளன்போடு அருச்சித்து, மலடிகளாக விருந்த உத்தமிகளுக்கு அழகிய ஆண்மகவு பிறக்கக் கருணை புரிந்து, தமது ஆற்றலை யறியாது தம்மை ஒறுக்கக் கருதிய அரசனை ஒறுத்துப் பின்னர் அவ் வேந்தனுக்கு அநுக்கிரகஞ் செய்து, திருத்தில்லைக்குச் சென்று ஆனந்தத் தாண்டவ பூஷணரைத் திருப்பதிகங்களாற் றுதித்து, சிவாநந்திய சாக்ஷாத்கார நிஷ்டையடைந்தார் (எ-று).

புராண சாரம்:—

திருமாளிகைத் தேவர் திருவாவடுதுறையிற் பிராமண குலத்தி லுதித்து, போகநாதராற் போதி விருக்ஷத்தினடியிற் சிவதீக்ஷை செய்விக்கப்பெற்று, வேதாகமங்களை யோதியுணர்ந்து உண்மை ஞானம் பெற்றார். பிறகு தமது ஞானசாரியார் கட்டளைப்படி துறைசை யம்பதியில் சித்தர் மடமொன்றும் சித்தர் பீடமொன்றுஞ் சமைத்து ஆங்கே வதிந்து சைவ சமய பாலனம் புரிந்தார். ஒருநாள் இவர் சிவபூசைக்குத் திருப்பள்ளித்தாமம் கொண்டுவரும் வழியில் பிணத்தைச் சுமந்து வருவாரைப் பார்த்துத் தீட்டுப்படுமே யென் றஞ்சியபோது விநாயகப் பெருமான் கருணையால் அச் சவம் உயிர் பெற்றதைக் கண்டு களிப்போடு சென்று சிவபூசை செய்தார். இவ்வாறு இவர் சிவ வழிபாடு செய்து வருங்கால், இவரது சித்தி வல்லபங்களை யுணர்ந்து மலடிகளாகிய சிலர் இவரைப் பூசித்து அழகிய ஆண்மக்களைப் பெற்றார்கள். இதில் ஐயங்கொண்ட சிலர் சோழ அரசனைக் கொண்டு இவரைச் சிறைப்படுத்த முயன்றனர். அரசன் கட்டளைப்படிச் சென்ற ஏவலாளர் தம்மில் ஒருவனையே பிணித்தும் ஒருவனையே கொன்றும் வந்ததனை அரசன் கண்டு தானே இவரைத் தளையிடப் பெருஞ் சேனையோடு சென்றான். தேவர் ஆலய மதிலி லமைக்கப்பட்ட நந்திகளைக் கொண்டு அரசன் படையைக் கலக்கி வேந்தனையும் பிணித்து

வரச் செய்து பின்னர் அம் மன்னனுக்குப் புத்தி புகட்டி அனுப்பிவிட்டார். அதன் பின்னர்ப் பல தலங்களையும் இவர் தரிசித்துத் திருத்தில்லையை யடைந்து நான்கு திருப்பதிகங்களாற் சிவபெருமானைப் பாடி இறைபணியில் நின்று பேரின்பமெய்தினர். (4)

ஐந்தாவது செய்யுளிற் போற்றப்படுவார்

2. சேந்தனர்

இட்டளந்தீ ரிடைக்கழியில் வேளாண் செல்வர்
எழிற்குலத்துச் சேந்தனர் வெண்கா டர்தங்
கட்டளையி னின்றதிற லறியாச் சோழன்
கட்டியவெந் தளைநீங்கித் தில்லை மேவி
யுட்டளையாற் பல்லாண்டு பாடித் தேரை
யுய்த்தருளிக் களியருத்தி மிழலை வாழ்த்திப்
பட்டநிறை யிடைக்கழிகோ முத்தி பாடிப்
பாவலர்வாழ் தில்லைநா வலருற்றரே.

(இ - ள்.) ஆத்தும பந்தங்களை நீக்கும் திருவிடைக்கழியில் வேளாளர் மரபிலே திருவுதயஞ் செய்த சேந்தனர் திருவெண்காடரது ஆணைப்படி அவரது திரவியத்தை அடியார்களுக்குக் கொடுத்துதவ, அவ் வுண்மையை யறியாத அரசனுற் றளையிடப்பட்டு, அத் தளையை விநாயகப் பெருமானருளால் விடுப்பித்துக்கொண்டு, சிதம்பரத்தில் வாசஞ் செய்து திருப்பல்லாண்டு பாடி நடராஜப்பெருமான் திருத்தேரை நடத்தி, கூத்தப் பிரானுக்குத் திருக்களி யமுதம் அருத்தி, வீழிமிழலை கோமுத்திபுரம் இடைக்கழி இவற்றைப்பாடித் திருத்தில்லையில் திவ்விய தேசோமயானந்தத்தைப் பெற்றார். (எ-று.)

புராண சாரம்:—

சேந்தனர் திருவிடைக்கழியில் வேளாளர் மரபில் தோன்றினர். (திருவீழிமிழலையில் அந்தணர் மரபிற் பிறந்தவர் என்றும் பெரியோர் கூறுவர்). இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடருக்கு அமைச்சராக விருந்து, அவர் துறவெய்

திய பின்னர் அவர் திரவியங்களை யெல்லாம் சிவனடியார்களுக்கு அவர் கட்டளைப்படி வழங்கினர். இவ் வுண்மையை யறியாத வேந்தன் இவரை காங்கூரிற் சிறை செய்வித்தான். இதனை யுணர்ந்த பட்டினத்தடிகள் சிவபெருமானை வேண்ட அப் பெருமான் கணபதியைக் கொண்டு சேந்தனாரைச் சிறை வீடு செய்தார். பிறகு சேந்தனர் தமது மனைவி மக்களோடு சிதம்பரஞ் சென்று அங்கே விறகு வெட்டி ஜீவனஞ் செய்து வந்தும் சிவபிரானிடத்திடையறாத பேரன்பு செலுத்தி வந்தார். பின்னர் விழிமிழலை, ஆவடுதுறை, இடைக்கழி என்னுந் தலங்களுக்குச் சென்று திருப்பதிகம் பாடி மீண்டுந் தில்லையை யடைந்து மார்கழி மாதத்துத் திருத்தேர் நிலைபெயரா திருந்தது கண்டு திருப்பல்லாண்டு பாடி அத்தேர் நிலைபெயர்ந்து ஓடி நிலைநிற்கும்படிச் செய்தருளினர். மறுநாள் திருவாதிரை தினத்து மெய்யன்பினை யுடைய சேந்தனர் அன்பால் விரிந்த மனத்தோடு விரிந்த வஸ்திரத்தினின்று பக்குவமாய் மலர்ந்த களியமுதை யவிழ்த்து நிவேதிக்க அது விரிந்த சடையையுடைய சிவபெருமான் உண்டருளுதற்கு இனிய அமிர்தாயிற்று (களிறு 53). இவ்வமுதை யுண்டருளிய நடராஜப் பெருமான் எஞ்சிய வமுதை யவ்வாடையோடு பொன்மன்றத்து வைத்திருந்ததை மறுநாட்காலை காப்பவிழ்த்த அந்தணர் கண்டு ஆச்சரியப்பட ஆகாயவாணியால் இவ்வமுதின் பெருமையை யறிந்தார். இதனை யுணர்ந்த பெரியோர் சேந்தனரைத் தேடிக் கண்டு தரிசித்து வணங்கினர். சேந்தனரும் தமது மனைவி மக்களோடு பரமசிவனது திருவடி நீழலை யடைந்து நித்தியானந்தப் பெருவாழ்வை யுடையவராயினர். (5)

(தொடரும்.)

காலஞ்சென்ற உயர்திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள்

சேலம் செய்த தவப்பயனால் வேளாண் குடி விளங்க, சைவத் துறை சிறக்க, தமிழன்னை மனங் களிக்க, 1871-ம் ஆண்டு பிப்ரவரி



மீ 25வ பிறந்து, இலக்கியம், இலக்கணம், ஆராய்ச்சி, அறிவு விளக்கம் என்ற பல துறைகளிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நனி தேர்ந்து, சென்னை யரசாங்கத்தில் சூப்பெரிண்டெண்டிங் என்ஜினியராகவிருந்து பெரும் புகழ் படைத்துப் பின்னர் உம்பளம் பெற்று மிளிர்ந்து வந்த நமது சிவபுரம் ஜமீன்தார், உண்மை ஞானியார், ஒப்புயர்வற்ற ஆராய்ச்சியாளர், பகையஞ்சா வீரப் புலவர், தமிழன்னையின் தவப்புதல்வர், எந்நாட்டினரும் மணியெனப் போற்றும் பேரறிவாளர், உயர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் தமது 60-வது வயதில் சென்ற டிஸம்பர் மீ 25வ இரவு திருவாதிரை நாளில் எல்லாம் வல்ல இறைவனடி நீழல் நண்ணியது கேட்டு உளந் திடுக்கிட்டுக் கழிபெருந்துய ரெய்துகிறோம். அன்னார் தம் செல்வக் குழந்தைகட்கும், அரும்பெறற்சுற்றத்தார்க்கும் எமது அநுதாபம் உரித்தாகுக. அச் சைவப்பெரியார்

> "இறுமாந் திருப்பர் கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப் பட்டுச்
> சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்சென்று இறுமாந் திருப்பர் கொ
> [லோ"

காலஞ்சென்ற திரு. இ. வை. அனந்த ராமையரவர்கள்

சென்னை யரசாங்கக் கல்லூரித் தமிழாசிரியராக விருந்து பின்னர் திராவிட மொழி யாராய்ச்சிச் சங்கத்தில் தமிழ்த்தொண்டாற்றி வந்தவரும், கலித்தொகை, களவழி நாற்பது முதலிய சங்க இலக்கியங்களுக்கு ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதி அவைகளைத் திருந்திய முறையில் வெளியிட் டுதவியவருமாகிய, பண்டிதர் திரு. இ. வை. அனந்தராமையர் அவர்கள் காலஞ் சென்றது தமிழன்னையின் தவக் குறையே யாகும். அன்னார்தங் குடும்பத்திற்கும் எமது அநுதாபம் உரியதாகுக.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தஞ்சாவூர்

திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் காலஞ்சென்றது பற்றி ஒரு இரங்கற் கூட்டம்

1932-ஜனவரி மீ 3உ (பிரசோற்பத்தி, மார்கழி ௧௯உ) ஞாயிறு மாலை 3-மணிக்குத் திரு. T. P. K. அழகர்சாமி பிள்ளை அவர்கள் தலைமையில் இச்சங்கத்தே ஒரு பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. அப்போது, காலஞ்சென்ற மாணிக்க நாயக்கர் அவர்களது ஒப்புயர்வற்ற பன்மொழிப் புலமையினையும், தமிழாராய்ச்சியினையும், பிற திறமைகளையும், அன்னாரது உள்ளம் நிறைந்துயர்ந்த உண்மைத் தமிழன்பினையும், அன்னார் இச்சங்கத்திற்கு ஆயுள் உறுப்பினராகி இச்சங்கத்தின் கண்ணாடி விளங்கியதையும், இச்சங்கத்திற்குப் புரிந்த பற்பல அருட்செயல்களையும் அவர்களது உரிமை அன்பர்களாகிய சங்க அன்பர்கள் பலரும் எடுத்துக் கூறித் துயர்க்கடலில் ஆழ்ந்தனர். யாவரும் எழுந்து நிற்க, கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

(1) திரு நாயக்கரவர்கள் நல்லுயிர் எல்லாம் வல்ல இறைவன் தண்ணடி நிழலில் அமைதியுற்றிருக்க இச்சங்கம் இறைவனடியை எண்ணி இறைஞ்சுகின்றது.

(2) திரு நாயக்கரவர்கள் குடும்பத்தினருக்கு இச்சங்கம் தன்மனமார்ந்த துயரினைக் கூறி அவர்கள் ஆறுதல் குறித்து இறைவனடியை எண்ணி இறைஞ்சுகின்றது.

(3) திரு நாயக்கரவர்கள் அரும்பெறல் ஆராய்ச்சிகளையெல்லாம் தமிழுலகம் அறிந்து பயனுறுமாறு செய்து நாயக்கரவர்கள் புகழுடம்பினை நிலைநாட்ட இச்சங்கம் எண்ணியிருப்பதால், அவர்தம் ஆராய்ச்சிக் குறிப்புக்களையெல்லாம் இச்சங்கத்திற்கு உதவியருள திரு நாயக்கரவர்கள் குடும்பத்தினரை இச்சங்கம் வேண்டிக்கொள்ளுகின்றது.
